# அண்ணாவின் நாடகங்கள்

டாக்டர் சி. என். அண்ணாதுரை, M.A.

பரிமளம் பதிப்பகம்
9, அவின்யு ரோடு, சென்னை-34

முதல் பதிப்பு ஆகஸ்டு, 1971

எமது அடுத்த வெளியீடு:

அண்ணுவின் அரசியல் கட்டுரைகள்

தம்பிக்கு (பாகம் 3)

14991.

விலை ரூ. 10/-

"தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்தின்
நிதி உதவியுடன் வெளியிடப்பட்டது"

மத்திய கூட்டுறவு அச்சகம், சென்னை-2.



டாக்டர் சி. என். அண்ணுதுரை, M.A.

தோற்றம்
15—9—1909

மறைவு
3—2—1969

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | ஓர் இரவு | ... | 1 |
| 2. | நீதிதேவன் மயக்கம் | ... | 105 |
| 3. | நன்கொடை | ... | 123 |
| 4. | கண்ணீர்த்துளி | ... | 145 |
| 5. | இரக்கம் எங்கே? | ... | 164 |
| 6. | வேலைக்காரி | ... | 184 |
| 7. | கல்சுமந்த கசடர் | ... | 257 |
| 8. | ராகவாயணம் | ... | 287 |
| 9. | புதிய மடாதிபதி | ... | 296 |
| 10. | கண்ணாயிரத்தின் உலகம்! | ... | 314 |


உரிமை: பரிமளம் பதிப்பகம்

# ஓர் இரவு

## காட்சி 1

*[திரை விலகியதும் அந்திவானம். நிலவு உதய மாதல். நிலவு உதயமானதும் தாமரை மூடிக் கொள்வது. அல்லி மலர்வது. தொலைவில் கீதம் கேட்கிறது.]*

## காட்சி 2

இடம் :—ஒரு மாளிகை உட்புறம்.

இருப்போர் :—பெண், ஆடவன்.

[ ஒரு பெண் அலங்காரம் செய்துக்கொள்கிருள். அவள் கணவன், மெல்ல ஓசைப்படாமல் வருகிருன்.

அவள் காணுத சமயமாகப் பார்த்து, தலையில் சூடிக் கொள்ள வைத்திருந்த மல்லிகையை மறைத்து விட்டு, ஏதுமறியாதவன் போலிருந்து விடுகிருன். அவள் மல்லிகையைத் தேடுகிருள். அவனுடைய குறும்புப் பார்வையிலிருந்து விஷயத்தைத் தெரிந்து கொள்கிருள். ]

அவள் : ஏமாற்றுவதிலே, உங்களுக்கு ஈடு, யாரும் கிடையாது.

அவன் : நான் சொன்னபடி வந்துவிட்டேனே, ஏமாற்ற வில்லையே.

அவள் : போதும் விளையாட்டு, கொடுங்கள்.

அவன் : ஆஹா ! கண்ணே ! நானே கொடுக்கவேண்டு மென்றுதான் ஆவலாக இருந்தேன் ; நீயே கேட்கும்போது என் ஆனந்தம் இரட்டிப்பு அல்லவா ஆகும். (முத்தமிடச் செல்கிருன்)

அவள் : நான், இதுவா கேட்டேன் ?

அவன் : வேறு எதைக் கேட்டாய் ?

அவள் : மல்லி.

அவன் : வாங்கி வரவில்லையே.

அவள் : ( அவன் கன்னத்தில் வேடிக்கையாக இடித்து ) கொடுங்கள், எப்போதும் விளையாட்டுதான், குழந்தைபோல.

அவன் : (வானத்தைக் காட்டி) அதோ பார், மல்லிகைத் தோட்டம். வா ! மாடிக்கு ! (இருவரும் செல்கின்றனர்)

## காட்சி 3

இடம் :—மற்ருேர் மாளிகை.

இருப்போர் :—தாய், சிறுமி.

[தாய், சற்று சோகமாகக் காணப்படுகிருள். சிறுமி அவளிடம் வந்து, கைபிடித்து இழுத்து......]

**சிறுமி :** அம்மா! மாடிக்குப் போகலாம் வாம்மா. சந்த மாமாவைப் பார்க்கலாம், வா!

**தாய் :** கோதி! தொல்லை கொடுக்காதே. எனக்கு உடம்பு சரியில்லை.

**சிறுமி :** போம்மா. புளுகு. நேத்து நீயே சொன்னயே, மாடியிலே போயி நிலாவைப் பார்த்துகிட்டே இருந்தா ரொம்பச் சந்தோஷமா இருக்கும்னு. அப்பா கூட சிரிச்சாங்களே. இன்னக்கி மட்டும் நிலா அழகா இல்லையா?

**தாய் :** (குழந்தையை மார்புறத் தழுவிக்கொண்டு) கண்ணல்லவா! எனக்கு இன்று நிலவு பிடிக்கலே, நீ மட்டும் வேண்டுமானு போய் மாடியிலே விளையாடு கண்ணு.

**சிறுமி :** மாட்டேன் போ. நான் கூப்பிட்டா வருவாயா? அப்பா கூப்பிட்டா வருவே. வரட்டும் வரட்டும், அப்பா கிட்டச் சொல்றேன்.

**தாய் :** அப்பா! நல்ல அப்பா! நிலா எவ்வளவு அழகாக இருந்தா அவருக்கு என்ன? அந்தந்தக் குடும்பத்திலே, ஆனந்தமாக இருக்கிருங்க. அவருக்கு ஏதடி கண்ணே அதிலே நினைப்பு. அவர் இன்னேரம் என்ன செய்து கொண்டிருக்கிருரோ!

**சிறுமி :** எங்கேம்மா போனுரு அப்பா. ஏம்மா இன்னம் வரலே.

**தாய் :** (பெருமூச்சுடன்) அவரா? அவருக்குத்தான் அந்தப் பாவி ராஜு, சொக்குப்பொடி போட்டுவிட்டானே. அலைகிருர் அவன்கூடச் சேர்ந்துகொண்டு.

# காட்சி 4

இடம் :—பாதை.

இருப்போர் :—ராஜு, கோபால், புதியவர்.

[கிண்டி ரேஸ் புத்தகத்தைப் பார்த்துக்கொண்டு, ராஜு பேசுகிருன். கோபால் கவலையுடன் இருக்கிருன்.]

ராஜு : கோபால்! நாளைக்குக் கட்டாயம் தக்தீர், வின் அடிக்குது. எவ்வளவு பணம் வேண்டுமானுலும் கட்டு. இந்தத் தடவை, வின் கட்டாயம்.

கோபால் : ராஜு! உன் பேச்சைக் கேட்டுப் போனவாரம் தக்தீர் மேலே ஆறு வின் டிக்கட் எடுத்தேன். (பெருமூச்சு)

ராஜு : (சிகரெட் பற்ற வைத்துக்கொண்டு) அதற்கு என்னடா செய்வது? இந்தத் தடவை கட்டாயம், தக்தீர்தான் அடிக்கும். சந்தேகமே வேண்டாம்.

[இதைக் கேட்டுக்கொண்டே அங்கு வந்து சேர்ந்த புதியவர்]

புதியவர் : யாரப்பா உங்களை ஏமாற்றிவிட்டது. தக்தீர், பிளேசுக்குக்கூட வராதே. இந்தத் தடவை வின் அடிக்கப் போவது நாட்டிமெயிட். யாரிடமும் சொல்லிவிடவேண்டாம். நாட்டிமெயிட் ஜெயிக்கும் என்று நமக்கு, ஜாக்கி ஜான்சன் சொன்ஞன். நமக்கு அவன் ரொம்பச் சிநேகிதம்.

கோ : ஏன் சார்! நாட்டிமெயிட் கட்டாயம் வருமா? நம்பிக் கட்டலாமா சார். சார்! எனக்கு இதுவரையிலே 500 ரூபாய்க்கு மேல் நஷ்டம் சார். ஒயிப் கழுத்துச் செயினைக் கூட மார்வாடியிடம் வைத்துவிட்டேன் சார். இந்த ரேசிலே ஜெயிக்காவிட்டா, என்பாடு ரொம்ப திண்டாட்டமா போயிடும் சார்.

பு : நமக்குந்தான் சார் நஷ்டம். ஆனு, இப்ப நான் சொன்னது இருக்கே, இது நிச்சயம். நாட்டிமெயிட் மேலே தான் நான் பத்து வின் டிக்கட் எடுக்கப்போறேன்.

கோ : என்னமோ சார், நானும் உங்களைத்தான் மலைபோல நம்பி, நாட்டிமெயிட் மேலே கட்டிப் பார்க்கிறேன்.

பு : கட்டுங்க சார், பயப்படாமே.

ரா : கோபால்! எதற்கும் கொஞ்சம் ஜாக்ரதையாக இருக்க வேணும். தக்தீர் ஜெயிக்கும் என்று எனக்குச் சொன்னது யார் தெரியுமா? நம்ம ஜம்பு.

பு: யார் அந்த ஜம்பு?

ரா: என்ன சார்! ஜம்புலிங்கத்தைத் தெரியாதவங்க யார் சார், ரேஸ்கோர்சிலே, இருக்காங்க. பெரிய ஆள் சார் ஜம்பு. ரேஸ் கோர்சிலே, டீ ஷாப் இல்லே, அதுகூட நம்ம ஜம்பு மச்சானுடையதுதான்.

பு: ஓ! அப்படின்னு அந்த ஆசாமி சொல்லறதும் சரியாத் தானே இருக்கும். நமக்குச் சொன்ன ஆசாமியும் சரியான ஆள்; ஜாக்கி ஜான்சன்.

ரா: அதனுலேதான், தக்தீர், நாட்டிமெயிட் இரண்டு குதிரை மேலேயும் கட்டி ஆடணும். அதுதான் சரி.

பு: ஆமாம்! ஜோசியர் குப்பு சாஸ்திரி, ஒரு சூக்ஷமம் சொன்னுர். குதிரைகள் ரவுண்டுக்கு வருகிறபோது, உன்னிப்பாக் கவனிக்கணும். எந்தக் குதிரை வலது பக்கமா அடிக்கடி திரும்பிப் பார்க்குதோ, அதன்மேலே கட்டணும்; கட்டாயம் ஜெயம் கிடைக்கும் என்று சொன்னுர்.

ரா: அப்படியானு, மூணு குதிரை மேலேயா பணம் கட்டணும்?

கோ: மொத்தம் எத்தனை குதிரை ஓடும் சார் அந்த ரவுண்டிலே?

ரா: ஒன்பது.

பு: பேஷ்! ஒன்பதுக்கு மூணு, மும்மூணு ஒன்பது, கணக்குச் சரியா இருக்கு சார். ஆமாம் சார்! மற்ற ரவுண்டுகளுக்கு.

ரா: வேறே ஏதேதோ பார்த்து வைத்திருக்கிறோம்.

பு: டிரபில் இவன்ட்டுக்கு, நாட்டிமெயிட், நோவா, ஜூலா.

ரா: ஜூலாவா? அது இதுவரை பிளேஸ்கூட அடித்த தில்லையே சார்.

பு: நாட்டிமெயிட் கூடத்தான். என்னவோ, அதுதான் நம்ம செலக்ஷன். நான் வர்ரேன் சார். (போகிறுர்)

ராஜு: நாட்டிமெயிட் நல்ல குதிரைதான். அரபி தேசத்தது. ஆகாகான்கூட அதை விலைக்கு வாங்கணும்னு பிரயத்தனப் பட்டாராம். முடியலை.

கோ: என்ன நிறம்?

ரா: கருப்பு.

கோ: அப்படியானு கட்டாயம் ஜெயிக்கும் ராஜு, நாளைக்கு சனிக்கிழமை. சனிபகவான் கருப்பு, அவர் வாகனம் காக்கை, அதுவும் கருப்பு, குதிரையும் அதே நிறம், கட்டாயம் ஜெயிக்கும்.

ரா: நான் காலையிலே சந்திக்கிறேன். வீட்டுக்கு போ. இன்னேரம் உன் சம்சாரம் என்னைத்தான் கண்டபடி பேசி இருப்பாங்க. (ராஜு போகிருன்)

[கோபால் குதிரைகளைப் பற்றியே எண்ணிக் கொண்டு மயங்கினவன் போலச் செல்கிருன். எதிரே ஒரு ஆங்கிலோ இந்தியப் பெண் வருவதைக் கவனியாமல், மோதிக் கொள்கிருன். அப்போதும் ரேஸ் கவனமாகவே இருந்ததால்.........]

கோ: நாட்டிமெயிட் !

ஆங்கிலோ இந்திய மாது: (கோபமாக) பிளடிபூல் (Bloody Fool)

ராஜு: சாரி, எக்ஸ்குயூஸ்மீ லேடி.

[இப்படிக் கூறிவிட்டுச் செல்கிருன், வழியில் ரேஸ் புத்தகத்தைப் பார்க்க, அதிலே நாலாவது ரேசில் பிளடிபூல் என்ற குதிரை ஓடுவது குறிப்பிடப் பட்டிருக்கவே, தக்தீர், நாட்டிமெயிட், பிளடிபூல் என்று கூறிக்கொண்டே வீடு நோக்கி நடக்கிருன்.]

## காட்சி 5

இடம் :—மற்ருேர் வீட்டுக் கூடம்.

இருப்போர்:—வயோதிகன்; அவனுடைய இரண்டாந்தாரம்,

[இரண்டாந்தாரம் நாகரிகமாக உடுத்திக்கொண்டு, கர்நாடக உடையிலே இருக்கும் கணவனைப் பார்த்துக் கூறுகிருள்.]

ம: தா! உனக்கு வேறே எதுவும் அகப்படலையா? மேலுக்குப் போட்டுக்கொள்ள இதுதானு கிடைச்சுது.

க: ஏன்? இதுக்கு என்னுவாம்?

ம: ரொம்ப அழகாகத்தான் இருக்கு. போயி, சரிகை வேஷ்டியை எடுத்துப் போட்டுக்கிட்டுவா. எதுக்குப் பொட்டி யிலே பூட்டி வைச்சிருக்கே. பூஜை போடறயா?

[கணவன் உள்ளே போகிறன், ஜரிகை வேஷ்டி எடுக்க. மனைவி அதற்குள் ஆடையைச் சரிப் படுத்திக்கொள்கிருள். அவன் வருகிறன்.]

க: அம்மா கண்ணு! கண்ணு!

[ஒரு இளம் விதவை வருகிருள்,]

க: என்னும்மா செய்துகொண்டிருந்தே?

பெண்: பக்த விஜயம் படிச்சிகிட்டு இருந்தேம்பா.

க: படிம்மா படி. இப்ப யாரு கதை படிக்கறே...?

பெண்: துளசிதாஸ் கதை.

க: படிம்மா படி, போறகதிக்கு நல்லது. உங்க சின்னம்மா சினிமா பாக்கணும்னு, நான் போயிட்டு வாரேன் கூட. ஜாக்ரதையா கதவைத் தாள் போட்டுக்கிட்டு படுத்துக்கிட்டு இரு, வந்துவிடறேன்.

பெ: செய்யப்பா.

ம: அதுக்கு என்னடி முகத்தை அத்தினி கோணலாக்கிக் கிட்டே.

க: வா, தா, வா, வீணு சண்டைக்கு நிற்கறேயே.

[கணவனும் மனைவியும் போகின்றனர் இளம் விதவை ஏக்கத்துடன் இருந்துவிட்டு......]

பெ: கிளம்பி விட்டாரு மைனர் மாதிரி. அவத்தான் அப்பா வைப் பம்பரமா ஆட்டிவைக்கருளே. ஆவட்டும் ஆவட்டும், ரெண்டு பேருக்கும் புத்தி வருகிறப்போல செய்துகாட்டறேன். நான் இங்கே பக்த விஜயம் படிக்கவேணுமாம். அவங்க ரெண்டு பேரும் சினிமா பார்க்கப் போகணுமாம். எப்படி இருக்குது நியாயம்?

## காட்சி 6

இடம் :—சாவடி.

இருப்போர் : ஊர்வம்பர்கள்.

[பலர், நிலா வெளிச்சத்திலே தமாஷாகப் பாடு கிறார்கள் ; இரண்டு கட்சியாகப் பிரிந்து கொண்டு, சைவ வைணவத்தைப் பற்றிய தர்க்கப் பாட்டை]

அரிநாராயண கோவிந்தா என்றுசொல்லி
நாமம் போட்டுக் கோணும்
திருநாமம் போட்டுக் கோணும்

[பாட்டு முடிந்த பிறகு]

பழனி : அப்பேன் ! சைவம் பெரிசா வைஷ்ணவம் பெரிசா என்பது பற்றி, முன்னாலே ஒரு நாள் எனக்கும் எம்பெருமாள் பிள்ளைக்கும் தர்க்கம் நடந்தது தெரியுமா ?

வெங்கடேசன் : தர்க்கம் நடந்துதா ? என்ன முடிவுக்கு வந்திங்க ?

பழனி : என்ன முடிவா ? முடிவிலே, அவன் ஆஸ்பத்திரிக் குப் போனான் கட்டு கட்டிக்கொள்ள ; நானு மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்குப் போனேன், கேஸ் கட்டைத் தூக்கிக்கிட்டு.

['அடேடே ! அதுபோல இப்பவேண்டாம்' என்று பலரும் கூற, கும்பல் கலைந்துபோகிறது.]

## காட்சி 7

இடம் :—பாதை.

இருப்போர் : கள்ளன், கான்ஸ்டேபிள்கள்.

[ஒரு கள்ளனைப் பிடித்து இழுத்துக்கொண்டு போகிறான் ஒரு கான்ஸ்டேபிள். எதிரே வரும் நண்பன் கான்ஸ்டேபிளைப் பார்க்கிறான்.]

ந : ஏன் சார் ! எங்கே திருடினான் ?

கா: இவனு? பலே பக்கா! கன்னம் வைச்சிக்கிட்டே இருந்தான். கண்டுபிடிச்சு இழுத்துவர்ரேன். நிலவுகூட இருக்குது, பய, யாருமில்லாத வீடா பாத்து தோட்டத்துச் சுவற்றைத் தாண்டி உள்ளே போயி, கன்னம் வைக்கருன்.

ந: யாரு வீட்லே?

கா: அந்த வேடிக்கையை ஏன் கேக்கறே போ. கள்ள பார்ட் குள்ளப்ப ஆச்சாரி இல்லே, அவன் வீட்டிலே கன்னம் வச்சான் பய.

ந: பலே பேர்வழிதான். கள்ளபார்ட் குள்ளப்ப ஆச்சாரி, நூலேணி போட்டு ஏறுவது, கன்னம் வைக்கறது, சுவற்றைத் தாண்டறது இதெல்லாம் நாடகத்திலே செய்து காட்டினு, இவன் கள்ளபார்ட் வீட்டிலேயே கன்னம் வைச்சானு?

கா: இந்த நிலாவிலே, அவங்கவங்க எவ்வளவோ தமாஷாப் பொழுது போக்கருங்க. நம் தலே எழுத்தைப் பாரு. இந்தமாதிரிப் பயலேப் பிடிச்சி இழுத்துக்கிட்டுப் போறதா இருக்கு. வருகிற வழியிலே பூந்தோட்டத்திலே, என்னு அழகாகத்தான் இருக்கு தெரியுமா?

ந: அதுவா! இந்த நிலாக் காலம்னுலே, பூந்தோட்டத்துப் பக்கம் ஜோடி ஜோடியாக உலாவுமே.

கா: ஆமாம்பா! (போகிருர்கள்)

## காட்சி 8

இடம் :—பூந்தோட்டம்.

இருப்போர் :—டாக்டர் சேகர், சுசீலா.

[நிலவு அழகாகப் பிரகாசிக்கிறது. டாக்டரும் சுசீலாவும் களிப்புடன் பாடுகின்றனர். காட்சி துவக்கம் "வானில் உறைமதியே" என்ற பாட்டுடன் பாடல் முடிந்ததும், சில விநாடி மௌனம். பிறகு......]

சே: (சுசீலாவின் கூந்தலேக் கோதியபடி) சந்திரன் உதயமானவுடன், விரிந்த தாமரை குவிந்து விடுகிறதே. அது ஏன் சொல் பார்ப்போம்.

சு: ஏன்?

சே: கதிரவனைக் கண்டதும் கமலம் களிப்படைகிறது அல்லவா?

சு: ஆமாம்.

சே: அதுபோலவே, சந்திரனைக் கண்டதும், பத்மாவதிக்கு வெட்கம் உண்டாகிறது.

சு: யாரவள், பத்மாவதி?

சே: தாமரை! பத்மம் என்றால் தாமரைதானே.

சு: அதுவா? ஆமாம், ஏன் தாமரைக்கு வெட்கம் உண்டாகிறது?

சே: என்ன கேள்விபோ! ஒரு ஆடவனும் அவன் ஆருயிர்க் காதலியும் சரசமாடுவதை வேறோர் பெண் காண நேரிட்டால், வெட்கித் தலைகுனிந்து கண்களை மூடிக்கொள்ள மாட்டாளா?

சு: ஆமாம்!

சே: அதே போலத்தான். சந்திரன் எனும் மணாளன், அல்லிப் பூவாகிய தன் மனையாளுடன் விளையாட ஆரம்பிக்கிறான். சந்திரன் உதித்ததும் அல்லி மலருகிறதல்லவா? காதல் விளையாட்டுதானே அது. அல்லியும் சந்திரனும் இப்படிச் சரசமாடுவதைக் கண்டதும் பத்மாவுக்கு வெட்கம்; கண்களை மூடிக்கொள்கிறாள்.

சு: சேகர்! எவ்வளவு இன்பமயம் இன்று.

சே: சுசீலா! நீலநிற வானத்திலே நீந்தி விளையாடும் அந்த நிலா எவ்வளவு அழகு பார் கண்ணே!

சு: சுந்தரமான சந்திரனைப் பிடித்துக் கொள்ளத் தாவிவரும் அந்தக் கருப்பியைப் பார் கண்ணாளா?

சே: மேகம், என்ன முயற்சித்தாலும், சந்திரன், அதனை விரட்டி அடித்துவிட்டு, வெற்றியுடன் பிரகாசிப்பான் சுசீலா! நமது காதலும் எப்படிப்பட்ட இடையூறு நேரிட்டாலும் அவற்றைத் தாண்டி வெற்றிபெறும் அல்லவா?

சு: நான் பதில் சொல்லவா?

சே: மொழிக்கு முன்பே, விழி பேசிவிட்டதே கண்ணே!

சு: கண்ணாளா! இன்றிரவு நாம் கவலைதரும் பேச்சே பேசக் கூடாது. இந்த நிலவு, காதலுக்கு, கவிதைக்கு ஏற்பட்டது...... (ஓடி விளையாடுகிறாள்.)

சே: (ஓடிச்சென்று அவளைப் பிடித்துத் தன்மேல் சாய்த்துக் கொண்டு) இந்தப் பால்வண்ண நிலவிலே, ஒரு ஆற்றோரத்தில் வெண்மணலிலே, நீயும் நானும்......

சு நான் வீணை வாசிக்கவேண்டுமா?

சே: பேசினால் போதும் கண்ணே! வீணை எதற்கு!

சு: நிலவு, உமக்கு, கவிதா சக்தியைத் தருகிறானே. ஆமாம்! அவன் எதுவும் செய்வான். மகா துஷ்டனல்லவா அவன்.

சே: ஏன்? நமக்கு எவ்வளவு நன்மை செய்கிறான்? எல்லோருக்கும் இன்பரசம் தருகிறானே!

சு. அப்படியும் சொல்லிவிட முடியாது. பிரிந்திருக்கும் காதலருக்கு, நிலவு நெருப்பாக அல்லவா இருக்கும். மேலும், இந்தச் சந்திரன், மகா காமுகன்.

சே: ஓஹோ! நீ அவனுடைய பால லீலையைச் சொல்கிறாயா? அவன்மீது என்ன குற்றம் சுசீலா? அவன் பாடம் படிக்கத்தான் போனான். அவள் அல்லவா அவனைக் கெடுத்தாள்.

சு: யாரைச் சொல்கிறீர்?

சே: ஏன், குருபத்தினி தாரையைத்தான். ஏன்? புராணம் தானே, புளுகுதானே என்று கூறுகிறாயா?

சு: அது மட்டும் இல்லை. அந்தக் கதையை யாரோ ஆடவர் எழுதியதால், தாரைதான் சந்திரனைக் கெடுத்தாள் என்று பழி சுமத்திவிட்டான். ஒரு பெண் எழுதியிருந்தால் தெரிந்திருக்கும், உங்கள் சந்திரனின் யோக்யதை.

சே: ஏது, சுசீலா! மாதர் குலத்தின் விடுதலைக்கே தலைமை வகித்துப் போரிடுவாய் போலிருக்கிறதே.

சு: பொதுவாகவே ஒன்று கேட்கிறேன், உண்மையைக் கூறவேண்டும். ஆண்கள் பெண்களை மயக்குகிறார்களா, பெண்கள் ஆண்களை மயக்குகிறார்களா?

சே: நல்ல கேள்வி கேட்டுவிட்டாய் சுசீலா! வீராதி வீரனும், பெண்ணின் பிரேமைக்குப் பலியாகிறான். இதிலுமா சந்தேகம், மாதரின் இரு விழியும், மதுக்குடங்களல்லவா?

*சு :* ஓஹோ! ஆண்கள் மட்டும் மகா யோக்கியர்களா? பேதைப் பெண்ணிடம் அன்பாகப் பேசி, "மாதே! உன்னை நான் உயிராகக் கருதுகிறேன். நீயே என் இன்பம். என் இருதய கீதம். உனக்காக நான் எதுவும் செய்வேன். வேறோர் மாதைக் கண்ணெடுத்தும் பாரேன். இதை நம்பு. இது சத்யம். (ஆண்கள் பேசும் பாவனையிலேயே கேலியாகப் பேசிக் காட்டிவிட்டு) என்று பேசி, பெண் தன் மனதைப் பறிகொடுத்துவிட்ட பிறகு......

**சே :** கயவன் அல்லவா, கண்ணே! காதலித்தவளைக் கைவிடுவான். போதும், நமக்கு ஏன் அந்தப் பேச்சு. நாம் இப்படிப் பேசிக்கொண்டிருப்பது கண்டு, சந்திரன் கோபிக்கிறான். என்ன இது! இவ்வளவு தாராளமாக நான் ஆனந்தத்தை அள்ளி அள்ளி வீசுகிறேன், வெள்ளியை உருக்கி வார்க்கிறேன், இவ்வளவும் எதற்கு? என்று கேட்பான்.

*சு :* எதற்கு?

**சே :** எதற்கா? இதோ இதற்குத்தான்.

[தழுவிக்கொண்டு முத்தமிடப் போகையில், சிறுவர்கள் ஓடிவருகிறார்கள் நிலாப் பாட்டு பாடிக்கொண்டு.

சேகரும் சுசீலாவும் விலகி நின்றுகொண்டு குழந்தைகளை அழைத்து விளையாடுகிறார்கள்.]

**சே :** யார் தம்பி! நீங்களெல்லாம்?

**சிறு :** பசங்க. ஏன், மாமா, தெரியலையா உனக்கு.

*சு :* அப்படி! அப்படிக் கொடுங்கள் சாட்டை. ஏன் இவர்களைப் பார்த்தாத் தெரியவில்லையா, குழந்தைகள் என்று.

**சே :** குறும்பு சுசீலா! உனக்கு. குழந்தைகளே! நீங்கள் எங்கே இருப்பது?

**சிறு :** நாங்களா? அடுத்த வீதியிலே இருக்கே பெரிய பள்ளிக்கூடம், அங்கே இருப்பது. நிலாவிலே விளையாட வந்தோம். மாமா! ஒரு கதை சொல்லேன்.

*சு :* கேளுங்க கேளுங்க, மாமாவுக்கு நல்ல நல்ல கதை தெரியும்.

**சே :** தம்பி! எனக்குக் கதை தெரியாதே. ஒரே ஒரு கதை தெரியும். ஒரு பெண் ஒரு ஆணை மயக்கிய கதை, சொல்லட்டுமா? (சுசீலாவைப் பார்த்தபடி).

சிறு: போ, மாமா! ராஜா கதை சொல்லு.

சு: மாமாவுக்கு பாட்டுக்கூடத் தெரியும், ஜோராப் பாடுவார்.

சிறு: வேணும். மாமா கதை சொல்லட்டும், அக்கா பாட்டு பாடட்டும்.

சே: ஆ, அது சரியான யோசனை. முதலிலே பாட்டு. பிறகு கதை.

சிறு: அக்கா! பாடு அக்கா, ஒரே ஒரு பாட்டு.

சு: சரி, நான் பாடுகிறேன், நீங்களும் கூடச் சேர்ந்து பாடணும் தெரியுதா?

[குழந்தைகளுடன் விளையாடிக்கொண்டே பாடுகிருள். குழந்தைகளும் பாடுகின்றன. இடையிடையே, பாட்டின் சில பகுதிகளை மாற்றித் தன் காதலைத் தெரிவிக்கும் கருத்துடன், குழந்தைகள் அறிந்து கொள்ளாதபடி பாடுகிருள்.]

சு: ஆமாம்! நாம் இங்கே இப்படியே விளையாடிக்கொண்டிருக்கிறோமே, அப்பா என்ன சொல்வார்?

சிறு: அக்கா, அப்பா பொல்லாதவரா?

சு: இல்லை கண்மணிகளே! அப்பா ரொம்ப நல்லவர்.

## காட்சி 9

இடம்:—கருணகரத்தேவர் வீடு.

இருப்போர்:—தேவர், ஜெமீன்தார், ஜெகவீரர்.

[தேவர் கவலையுடன் உட்கார்ந்திருக்கிருர். ஜெகவீரர் கோபமாக உலாவிக்கொண்டே பேசுகிருர்.]

ஜெக: இரவு நேரம், வீட்டிலே பெண் இல்லை. இப்படி இருக்கிறது குடும்ப இலட்சணம்.

தே: நிலாவிலே, வேடிக்கையாக நண்பர்களுடன் விளையாடப் போனுள் சுசீலா, அதிலே என்ன தவறு?

ஜெ: சுத்தப் பைத்தியக்கார மனுஷர். இந்த நிலவிலே இளம் பெண்ணை வெளியே அனுப்புவதா?

தே: மாரி! மாரி, (வேலைக்கார மாரி வருகிறுள்) மாரி! போய் சுசீலாவை அழைத்துக்கொண்டுவா. பூந்தோட்டத்தில் தான் இருப்பாள். அப்பா கோபமாக இருக்கிருர் என்று சொல்.

ஜெ: ரொம்ப அவசரம் என்று சொல். போ, போ.

[மாரி போகிருள்.]

தே: ஜெகவீரரே! நான் வாலிபப் பருவ முதலே கொஞ்சம் சீர்திருத்தக் கருத்துடையவன் என்பது உங்களுக்கே தெரியும்.

ஜெ: ஆமாம், ஆமாம், அதனுலேதானே விதவை சொர்ணத்தைக் காதலித்தீர்.

தே: (சோகத்துடன்) தயவுசெய்து அவளைப்பற்றிப் பேச வேண்டாம். என் வேதனையை அதிகப்படுத்த வேண்டாம். ஜெகவீரரே! என் மகள் சுசீலாவை நான் அடுப்பூதும் பெண்ணுக்க வில்லை. படிக்க வைத்தேன். சுசீலா கர்நாடகமல்ல; புதுயுகப் பெண்ணுகிவிட்டாள். அவளுக்குப் பெண்கள் முன்னேற்றத்தில் விசேஷ அக்கறை.

ஜெ: இருக்கட்டுமே, அதற்கென்ன, ஒரு லேடீஸ் கிளப் ஆரம்பித்து சுசீலாவை பிரசிடெண்ட் ஆக்கிவிடுகிறேன். டென்னிஸ் ஆடட்டும் கிளப்பில்.

தே: அந்த ஆடம்பரமல்ல அவள் விரும்புவது. ஆடவர் பெண்களைக் கொடுமை செய்வது கண்டால் எப்படிச் சீறுகிருள் தெரியுமா? அப்படிப்பட்டவளை நான், எப்படி வற்புறுத்துவது உம்மைக் கலியாணம் செய்து கொண்டாக வேண்டுமென்று.

ஜெ: இதைச் சொல்லத்தான் இவ்வளவு முன்னுரையா? தேவரே! வாதங்கள் பயன்படாது. சுசீலாவை நான் அடைந்தே ஆகவேண்டும்.

தே: எனக்குத் துளியும் பிரியமில்லை. எப்படியப்பா, நான் சுகமாக வாழ்க்கை நடத்தமுடியும், இஷ்டமில்லாத கலியாணம் செய்துகொண்டு. சிறுகுழந்தைகள் கூடத் தங்களுக்குப் பிடிக்காத பண்டத்தை ஊட்டினுல் துப்பிவிடுமே; என்றெல்லாம் சுசீலா கேட்பாளே! ஜெகவீரரே! உமது கண்களிலே கோபாக்னி கிளம்பி என்னை மிரட்டுகிறது. இதற்குப் பயந்து நான் சுசீலாவை வற்புறுத்தினுல், அவள் கண்களிலே நீர் வழியுமே, அது தீயை விடச் சுடுமே, நான் என்ன செய்வேன்?

ஜெ: நடப்பது நடக்கட்டும் நமக்கென்ன என்று நீர் சும்மா இருந்துவிடும். (மீசையை முறுக்கிக் கொண்டு) நான் கவனித்துக்

கொள்கிறேன். நான் சில பிடிவாதக்காரிகளைப் பார்த்திருக்கிறேன், சுசீலா ஒன்றும் பிரமாதமல்ல.

[ தேவர் தம் காதுகளைப் பொத்திக்கொண்டு. ]

தே : வேண்டாம் ஜெகவீரரே! உமது வீரப்பிரதாபத்தை விவரிக்க வேண்டாம்.

ஜெ : என் கோபத்தையும் நீர் கிளறவேண்டாம். நான் இவ்வளவு பொறுமையாக எப்போதும் இருந்ததில்லை...

## காட்சி 10

இடம் :—மாரி குடிசை.

இருப்போர் :—மாரி, புருஷன் மன்னார்.

[ மன்னார் குடித்துவிட்டு ஆனந்தமாகத் தெம்மாங்கு பாடுகிறான், பானையைத் தட்டிக்கொண்டு.

சுசீலாவை அழைத்து வரக் கிளம்பிய மாரி, புருஷன் வந்து விட்டானா என்று பார்க்க, தன் வீடு வருகிறாள். அங்கு பாடிக் கிடக்கும் புருஷனைக் கண்டு... ]

மா : பாட்டும் கூத்தும் பலமாகத்தான் இருக்குது.

மன் : மாரி! மானத்திலே சந்திரன் பாருடி. எவ்வளவு அழகா இருக்கிறான். நிலாக் காலம்னாலே ஒரு ஜோருதான். நீ கிடக்கறயே சுடுமூஞ்சி. இப்படி உட்கார்ந்து கேளடி பாட்டை, பக்கத்திலே வந்து உட்காரேன். (கையைப் பிடித்திழுக்க).

மா : தா! வாலிபம் திரும்பிப் போச்சோ...போவுது...எனக்கு இப்ப விளையாட நேரமில்லை...நான் போயி சுசீலாம்மாவை அவசரமா அழைச்சிகிட்டு வரணும். அப்பாலே வந்து...

மன் : சனியன்; சந்தோஷமா இருக்கணும்னா என்னென்னமோ சாக்குச் சொல்லி வாயை அடைச்சிவிடறே. இந்த நிலாக் காலத்திலே ஊர்லே உலகத்திலே அவங்க அவங்க எவ்வளவு சந்தோஷமா இருக்கறாங்க...

மா : இருக்கறவங்க இருக்கறாங்க. நம்மாட்டம் ஏழைகளெல்லாம் என்னாச் செய்யறது.

மன் : போடி பைத்தியக்காரி! பணக்காரரை எல்லாம் பார்த்துப் பரிகாசம் பண்ணிக்கிட்டு அல்லவா நிலா இருக்குது. எவ்வளவு பெரிய கோடிஸ்வரனுக்கூட இருக்கட்டும்டி, ஏழையின் குடிசையிலே, நிலா வெளிச்சம் தெரியுது பாருடி. அதுகிட்ட பணக்காரன் வீட்டிலே இருக்கே எலக்ட்ரீ விளக்கு, அது என்னடி செய்யும். நிலாதாண்டி, ஏழை பணக்காரன் என்கிற வித்தியாசம் பார்க்காமல் இருக்குது. பாரு, மாரி! எம்மா அழகா இருக்கு...

மா : அழகாத்தான் இருக்குது. நான் போயிட்டு ஓடியாந்துடறேன். சரி, என்ன பணம் வாங்கி வந்தே, எடு.

[புருஷன் பணத்தைத் தருகிருன்.]

என்ன இது? எழவாப் போச்சி, ஒத்த ரூபாயைக் குடுத்தா எதுக்குன்னு ஆகும்.

மன் : (அதைக் கவனியாமல்) ஒத்த ரூபாயா? ஒங்க அப்பன் நோட்டு நோட்டா நீட்டருனு? போடி! இந்தப் பணத்தை வாங்க அந்தப் பயகிட்ட நான் பல்லைக் காட்டினது உனக்கென்ன தெரியும்?

மா : அப்பாணையாச் சொல்லு, ஒத்த ரூபாதானு கொடுத்தாரு.

மன் : ஆமாண்டின்னு...

மா : தெரியுதே இலட்சணம். சொல்லுவானேன். நீங்க நின்ன நிலையிலே ஆடறது சொல்லுதேன்னேன். ஐஞ்சு ரூபா வாங்கி அணியாயமாக் குடிச்சிப்போட்டு என் அடிவயத்திலே நெருப்பைப் போடறியே;

மன் : சிச்சீ! ஐஞ்சுமில்லே, பத்துமில்லே. ரெண்டரைடி ரெண்டரே.

மா : சாராயக் கணக்கையாக் கேட்டேன்.

மன் : சீ! ரெண்டரை ரூபா கொடுத்தாருடி எசமான்.

மா : மிச்சப் பணம் எங்கே? என்னுங்க அன்யாயம். ஒண்ணரை ரூபாய்க்கா குடிச்சித் தொலைக்கணும். குடித்தனம் உருப்படுமா?

மன் : செ, கழுதே! எவண்டி ஒண்ணரைக்கும் இரண்டரைக்கும் குடிப்பான். ஒங்க அண்ணனு ஈட்டிக்காரன்.

மா : ஈட்டிக்காரன் கடனைக் கொடுத்துவிட்டிங்களா?

மன் : விடுவானு? எட்டணு தட்டிக்கிட்டுப் போயிட்டான்.

மா: போவுது, அப்பிடின்னாலும் இன்னும் ஒரு ரூபா?

மன்: ஒரு ரூபாயா? முழுங்கிட்டேன். போயேன். பசியானு பசி, உயிர் துடிச்சுது, கொஞ்சம் நாஸ்தா பண்ணேன்.

மா: ஒரு ரூபாய்க்கா?—

மன்: ஏண்டி, எனக்கென்ன வயறு சாலா? ரெண்டணாவுக்குத் தின்னேன்.

மா: மிச்சம்?

மன்: மிச்சம் இருக்குது.

மா: எங்கே?

மன்: இருக்குதுன்னு விடுவயா, சும்மா மனஷனைப் பிடுங்கித் தொலைக்கறயே.

மா: எங்கேன்னு சொல்லேன்.

மன்: முடியாது போடி. சொல்ல முடியாது. காட்டவும் முடியாது.

மா: இருந்தாத்தானே காட்ட. அந்த எழவெடுத்த சாராயத்தை ஊத்திக்கிட்டு வந்தாச்சி. அடிவயத்தையே கலக்குதே, அடிக்கிற நாத்தம்.

மன்: நாத்தமா அடிக்குது? இவ உடம்பு சென்டு! நாத்தமாடி அடிக்குது நாயே! ஏண்டி! நான் என்ன 'ஜெமீன்தாரன் வீட்டு மருமவனா நாத்தமில்லாத ஒசத்தி சரக்கு சாப்பிட.

[மாரி சிரித்துவிட்டு வெளியே போகிறாள்.]

## காட்சி 11

இடம்:—பூந்தோட்டம்.

இருப்போர்:—டாக்டர் சுசிலா, சிறுவர்கள்.

[டாக்டர், குழந்தைகளை, தோளிலும் கால்மீதுமாக ஏற்றிக்கொண்டு சர்க்கஸ் வேடிக்கை செய்கிறாள். மாரி வருகிறாள்.]

சு: ஓஹோ! நேரம்போவதே தெரியவில்லை. இதோ அப்பா ஆள் அனுப்பிவிட்டார். நான் போகணும்.

மாரி: வாங்கம்மா அவரு கோவமா இருக்காரு. அந்தக் கொரங்கு வேறே வந்திருக்கு, குத்திவிட.

சு: யாரு!

மா: ஜெமீன்தாருதான்.

சு: சரி, சேகர், வருகிறேன்.

சே: போகிறாயா? நானும்......

சு: நீங்கள் கொஞ்ச நேரம் பிள்ளைகளுடன் விளையாடிக் கொண்டிருங்கள்.

சே: சரி, போய்வா. ஒரு இரவு முழுவதும் விளையாடினால் கூட இந்தப் பிள்ளைகளுக்குச் சலிப்பு ஏது?

மா: நான் வந்து கூப்பிடுகிறவரை, ஐயாவுக்குந்தான் சலிப்பு இல்லை.

[மாரியும் சுசீலாவும் போகின்றனர்.]

## காட்சி 12

இடம்:—தேவர் மாளிகை.

இருப்போர்:—தேவர், ஜெகவீரர்.

[சுசீலா உள்ளே நுழைந்ததும் ஜெகவீரர் பேசுகிறார்.]

ஜெ: (கேலியா) சுசீலா தேவியாரா?

சு: (மரியாதையுடன்) நமஸ்காரம்.

ஜெ: (கேலியாக) ஆசீர்வாதம்! உட்காரேன் இப்படி.

[ஒரு நாற்காலியைக் காட்டுகிறார்.]

சு: தலைவலி. மாடிக்குப் போகிறேன்.

ஜெ: விளையாடியது டாக்டரிடம். வருவது தலைவலியா, வேடிக்கைதான்.

தே: அம்மா சுசீலா! இதோ பார். நான் உனக்கு இனியும் விவரமாகக் கூறிக்கொண்டிருக்கப் போவதில்லை. தெரிகிறதா. ஏதோ நானும் தாயில்லாதவளாயிற்றே என்று பொறுத்துக் கொண்டு வருகிறேன். இனி என்னால் முடியாது. நாளைக்கு உனக்கு நிச்சயதார்த்தம் செய்ய முடிவு செய்து விட்டேன்.

ஜெ: திருமணம் அடுத்த மாதமே முடித்து விடலாம். பிறகு நான் மைசூர் போகவேண்டும், மகாராஜாவைப் பார்க்க.

சு: ராஜ குடும்பத்திலே பெண் கொள்ள வேண்டியரல்லவா தாங்கள். நான் உங்களுக்கு ஏற்றவளல்ல.

ஜெ: ஏன் தேவரே! நமது சுசீலாவுக்குத் தன் அழகு தனக்கே தெரியவில்லையே. இங்கே பெரிய நிலக் கண்ணாடி இல்லையோ?

[சுசீலா மாடிக்குப் போக யத்தனிக்கிறாள்.]

தே: நில்லம்மா, போகாதே. சம்மதம் என்று சொல்லி விட்டுப் போ. அதற்காகவே வந்திருக்கிறார்.

சு: மாமா, பெரிய ரோஷக்காரர் என்று பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

ஜெ: ஆமாம் சந்தேகமென்ன அதற்கு......

சு: ரோஷக்காரர் என்று சொல்கிறார்களே தவிர துளிகூட ரோஷமே இல்லையே அவருக்கு......

ஜெ: துடுக்குத்தனம்.

சு: ஒரு பெண் ஓராயிரம் தடவை நான் ஒன்னைக் கலியாணம் செய்து கொள்ளமுடியாது, முடியாது, முடியாது என்று சொன்ன பிறகும்......

ஜெ: பிடிவாதம் ஒரு நோய் வாலிபப் பருவத்திலே ஏற்படுவது வழக்கம்.

சு: வேறொருவனை மனப்பூர்வமாகக் காதலிக்கிறேன் என்று வெளிப்படையாகச் சொன்ன பிறகும், வீராதி வீரர், மகா ரோஷக்காரர், என்று புகழப்படும் ஜெமீன்தாரருக்குத் துளியாவது ரோஷம் காணோம்.

தே: துஷ்டப் பெண்ணே!

ஜெ: முட்டாள். உன் வாய்க்கொழுப்பை அடக்க முடியும் என்றால். மணம் முடியட்டும், பிறகு......

சு: பிணத்துக்குத் தாலிகட்ட இஷ்டமிருந்தால் உமது பிரதாபத்தைப் பேசிக்கொண்டிரும்.

ஜெ: தேவரே! இதுவரையில் நான் பொறுமையாக இருந்தேன்.

தே: போக்கிரிப் பெண்ணே! என் உயிருக்கு உலை வைக்கிருயே. நான் என்ன செய்வேன்.

ஜெ: பிடித்தால் பொடிப் பொடியாவாள். இந்த அகம் பாவக்காரியை, இவள் அழகுக்காக அல்ல, என் அக்காவிடம் கொடுத்த வாக்கை காப்பாற்ற அல்லவா நான் கலியாணம் செய்துகொள்ள வேண்டி இருக்கிறது. அழகாம் அழகு. ஆயிரம் அழகிகள் என் அடிவருடக் காத்துக்கொண்டிருக்கிருர்கள்.

தே: கோபிக்காதீர். சிறு பெண். மேலும், சொந்த மாமன் தானே என்று பேசிவிட்டாள். திருமணம் நடப்பது உறுதி.

ஜெ: (குரூரமான பார்வையுடன்) விவாக வகைகளிலே, காந்தர்வமும் ஒன்று.

சு: (கோபத்துடன்) ஆனுல், அது இங்கே கிடையாது.

ஜெ: (ஆத்திரத்துடன்) அதைப் பார்த்துவிட்டுப் போகத் தான் வந்தேன்.

தே: (பொறுமை இழந்து) ஏ! சுசீலா! அளவுக்கு மீறிப் போகாதே. நீ என்ன பிடிவாதம் செய்தாலும் சரி. உன்னை ஜெமீன்தாரர் ஜெகவீரருக்குத்தான் கலியாணம் செய்துதீருவேன். இதை யாரும் மாற்ற முடியாது.

[ கோபம் தணிந்து சோகக் குரலில் ]

நாளைக் காலையிலே நீ சம்மதம் தெரிவிக்காவிட்டால், மறுபடியும் என்னை உயிருடன் காணமாட்டாய்.

சு: (திடுக்கிட்டு) அப்பா!

தே: (சோகம் கப்பிய குரலில்) நீ என் மகளா? அல்லது என்னை மாய்க்க வந்த மாபாவியா என்பதை உன் செயலால் காட்டு.

சு: ஏனப்பா, எல்லாம் தெரிந்திருந்தும் இப்படிப் பேசுகிறீர். (தலை குனிந்தபடி) நான் டாக்டர்.........

தே: சேகரனைக் காதலிக்கிருய்; தெரியும்; சேகர் நல்லவன், தெரியும். (ஈனக்குரலில்) ஆனுல் உன் தகப்பனுரின் தற்கொலைக்குப் பிறகுதான் அவனை நீ கலியாணம் செய்து கொள்ள வேண்டி வரும்.

[ அருகே சென்று அபயம் அளிக்கும்படி வேண்டும் பாவனையில் நின்றுகொண்டு ]

கண்ணே! சுசீலா! உன் இஷ்டப்படி எல்லாம் நான் நடந்து வந்தேன். உன் மனம் நோகும்படி இதுவரை நடந்து கொண்டதுண்டா? சுசீலா! தங்கமே! எனக்கு நீ தவிர வேறு யார்?

சு: (திகைப்பும் பரிதாபமும் மேலிட்டு) அப்பா! அவருடைய மிரட்டலுக்கு ஏன் பயப்படுகிறீர். மாமாவைச் சமாதானப் படுத்துவது முடியாத காரியமா? ஏன் அவரிடம் அவ்வளவு பயப்படுகிறீர்? அவர் என்ன செய்துவிடுவாரப்பா. அவர் ஜெமீன்தாரராக இருந்தால் நமக்கென்ன? நாமென்ன அவர் வீட்டுக் காவலாளியா?

ஜெ: கடனாளி! ஆணவம் பிடித்தவளே. இந்த ஜெக வீரரின் பேனா முனை அசைந்தால், இந்த மாளிகை, தோட்டம், வண்டி, வாகனம், உன் ஒய்யார வாழ்வு, யாவும் பஞ்சு பஞ்சாகப் பறந்துவிடும். நிலைமை தெரியாமல் தடுமாறுகிறாய்.

சு: அப்பா, அப்பா! அதற்காகவா அப்பா! பயப்படுகிறீர். கடனுக்காக நமது சொத்து பூராவையும் இந்தக் கிராதகனிடம் கொடுத்துவிடப்பா. உலகம் மிகமிகப் பெரிது அல்லவா? இதிலே எல்லோருமா ஜெமீன், மிட்டா, மிராசுடன் வாழ்கிறார்கள். அப்பா, செல்வத்தை இழக்க நேரிடுகிறதே என்று கலங்கி என்னைப் படுகுழியில் தள்ளாதீர். (வருத்தத்துடன்) எனக்கு ஆறுதல் மொழி கூற என் தாயும் இல்லை. அப்பா! நீரேதானே எனக்குத் தாயும் தகப்பனும்.

தே: ஐய்யோ! நெஞ்சு வெடித்துவிடும் போலிருக்கிறதே. நான் என்ன செய்வேன்? உன் தாய் இருந்திருந்தால் இந்த ஆபத்து வராதே.

சு: (பயந்து) என்ன ஆபத்து? சொத்து போய்விடுவதா ஆபத்து? சிறு குழந்தைபோல அழாதீர் அப்பா?

தே: சுசீலா! பேசுவது உன் தகப்பனல்ல. தள்ளாத வயதிலே புலியால் துரத்தப்பட்டு உயிருக்குப் பயந்து ஓடி வரும் ஒரு துர்ப்பாக்கியன் உன்னைக் கெஞ்சுகிறான். உன் காலில்.........

[மண்டியிட முயற்சிக்கிறார், அவள் துடித்து அவரைத் தூக்கி நிறுத்துகிறாள்.]

சு: ஐயோ! அம்மா! அப்பா! நான் ஏன் பெண்ணாகப் பிறந்தேன்.

தே: (பரிதாபப் பார்வையுடன்) அம்மா! எனக்கு உயிர்ப் பிச்சை தா.

சு: அப்பா! பயங்கரமாக இருக்கிறதே.

தே: சுசீலா கண்ணே! உன்னை நான் உண்மையாகவே சொத்து ஜெமீன்தாரனுக்குப் போய்விடுமே என்ற பயத்தினலே அல்ல அம்மா வற்புறுத்துகிறேன். மகளே! நான் அப்படிப்பட்ட பணப்பித்துப் பிடித்தவனல்ல. உன்னைவிட எனக்குச் செல்வம் பெரிதல்ல.

சு: வேறே என்ன காரணம் அப்பா.

ஜெ: சத்தியம் செய்து கொடுத்துவிட்டார்.

சு: திருமணம் எனக்கு, அதற்கான சத்தியம் அவர் செய்தால் அதிலே அர்த்தமில்லை.

தே: சுசீலா! உனக்கு விளங்கும்படி கூறுவதற்கில்லை. தூக்குமேடைக்கு நான் போகட்டுமா, அல்லது திருமணப் பந்தலுக்கு ஜெமீன்தாரருடன் நீ போகிருயா? இரண்டில் ஒன்று சொல்லு.

சு: (திகிலுடன்) என்னப்பா அது! தூக்கு மேடையா? ஏன்.

தே: அம்மா! சுசீலா! என்னைப் பார்த்தால் தெரியவில்லையா? நான் சித்திரவதை செய்யப்படுகிறேன். என்னல் சகிக்க முடியாது.

[ தலையிலே மோதிக்கொள்கிருர்—அலறி அழுகிருர்-மயங்கி நாற்காலியில் சாய்கிருர். ]

சு: அப்பா, அப்பா!

[ ஓடிச் சென்று கொஞ்சம் தண்ணீர் கொண்டுவந்து முகத்தில் தெளித்து, மயக்கத்தைத் தெளிய வைத்து, ஜெமீன்தாரைப் பார்த்து ]

கொட்டிவிட்ட பிறகு, தேளாவது ஓடி ஒளியும். அவரைத் துடிக்கச் செய்துவிட்டுத் தைரியமாக எதிரே உட்கார்ந்து கொண்டிருக்கிருயே.

[ மயக்கம் தெளிந்த தேவர் ]

பவானி! பவானி! போதும் என்னை நீ பழி தீர்த்துக் கொண்டது. பாவி நான் இந்த க்ஷணம் இறந்தாலும் பரவாயில்லை. இந்த நிலைமையைவிட, அது எவ்வளவோ நிம்மதியாக இருக்கும்.

ஜெ: தூக்கு மேடையிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம் தேவரே! ஆனல் உலகம் உமது பிணத்தின்மீது.........

தே: (கலங்கி) காரித்துப்பும்—கல்லை வீசும்.

ஜெ: குடும்ப சாபம் உண்டாகும் பரம்பரைக்கே பழிச் சொல். தேவரே! நானென்றும் குஷ்டம் பிடித்தவனல்ல, என்னைக் கலியாணம் செய்துகொண்டால், இந்த ரூபவதிக்கு ஒன்றும் பங்கம் வந்துவிடாது. இதற்கு இணங்காவிட்டால் இழிவும் பழியும் உம்து பிணத்துக்கு ஆலவட்டமாக இருக்கும்.

சு: அப்பா! மாமா! ஆண்டவனே! என்ன இது? தூக்கு மேடை! பிணம்! சாபம்! ஒன்றும் புரியவில்லையே.

தே: (தடுமாற்றத்துடன்) என்னை-என்னைமட்டுமல்ல-நமது குடும்பத்தை-பின் சந்ததியைக்கூட, ஒரு கொடிய சாபம் தீண்டு வதற்குத் தயாராகச் சுற்றிக்கொண்டிருக்கிறது.

சு: சாபமா? கட்டுக்கதை பேச இதுவா அப்பா சமயம்?

ஜெ: கட்டுக்கதையுமல்ல, மனப்பிராந்தியுமல்ல. வேண்டு மானல் நான் புரிகிறபடி கூறுகிறேன் கேள்.........

தே: (ஜெமீன்தாரரைப் பார்த்து) வேண்டாம், வேண்டாம். என் தாய் என்னைக் காப்பாற்றுவாள்—கைவிட மாட்டாள்.

[ சுசீலாவைப் பார்த்து ]

மகளே! அந்தச் சாபத்தைப் போக்கிக்கொள்ள ஒரு பலி தந்தாக வேண்டும்.

சு: (ஆழ்ந்த சோகத்துடன்) அந்தப் பலி நானு?

தே: ஆமாம்.

சு: சரி.

ஜெ: சபாஷ்! தேவரே! சபாஷ்!

## காட்சி 13

இடம்:—சுசீலா அறை.

இருப்போர்:—சுசிலா.

[சுசிலா தனிமையாகத் தேம்பித் தேம்பி அழுகிருள்.]

சு: அந்தப் பாதகனிடம் என் தகப்பனரின் உயிரையும் மானத்தையும் அழிக்கக்கூடிய ஏதோ ஓர் இரக்சியம் சிக்கிக்

கொண்டது. அப்பா! அதனுல்தான் அவனைக் கண்டு நடுங்கு கிருர். பதைபதைத்து என்ன மர்மம்? அது என்ன பயங்கர இரகசியம்? தெரியவில்லையே!

[தாயார் பவானியின் படத்தைப் பார்த்து]

அம்மா! அம்மா என்னைப் பலி கேட்கும் அந்தப் பயங்கர இரகசிம் என்ன?

[கண்ணுடியில் தன் உருவம் தெரியக் கண்டு]

என்னை அழிக்கும் அழகே! இம்சைக்கு என்னை ஆளாக்கும் இளமையே! நாசமாகட்டும்! இந்த அழகு.

[புஷ்பத்தை வீசி எறிகிருள்.]

[மறு விநாடி]

ஐயோ! அழகு என்ன செய்யும்? குணசீலரான சேகரை என்னிடம் அந்த அழகல்லவா அழைத்துக்கொண்டு வந்தது? அவருக்கு நான் அர்ப்பணித்துவிட்ட பொருள் அல்லவா இந்த அழகு.

மலர் முகம் என்று கூறுவார்; மந்தியிடம் தரச் சொல்கிருர் தந்தை; தராவிட்டால் தனக்கு மரண தண்டனை தருவார்களாம். அது சாபமாம்! ஐயோ! அது என்ன சாபம்!

ந அந்தச் சண்டாளன் ஏன் அப்பாவின் உயிரைத் தன் கரத்தில் வைத்துக்கொண்டு வதைக்கிருன்.

அவன் ஒழிந்தால்!

[முகத்திலே முதலில் பயம். பிறகு தெளிவு உண்டாகிறது.]

அவன் ஒழிந்தால் அப்பாவுக்கும் ஆபத்து இல்லை. என் வாழ்க்கையும் பாழாகாது.

கொலைதான்! செய்தால் என்ன? அவன் சாகாவிட்டால் மூன்று உயிரல்லவா வதைபடும்.

ஆமாம்! என்னை மண அறைக்கு அழைக்க வந்தவனை பிணமாக்குகிறேன்.

[மேஜை அறையைத் திறந்து, ஒரு பொட்டலம் எடுத்து, விஷ மருந்தைப் பாலிலே கலந்து விடுகிருள்.]

மையல் கொண்டுள்ள அந்த மடையனிடம் இதைத் தந்தால் போதும்......ஆனுல்......அந்தப் பயங்கர இரகசியம்?

[யோசிக்கிருள்]

ஒருவேளை, அவன் இறந்துவிட்டாலும் சாபம் இருக்குமோ? தன் ஆசை நிறைவேறாத முன்பு சாக நேரிட்டால், அப்பாவைத் தூக்குமேடைக்கு அனுப்பக்கூடிய அந்த இரகசியத்தை வேறு யாராவது உபயோகித்துக்கொள்ள ஏற்பாடு இருக்குமோ? அவன் கல்நெஞ்சக்காரன் மட்டுமல்லவே—நயவஞ்சகனுமாயிற்றே.

(கைகளைப் பிசைந்துகொண்டு)

என்ன ஏற்பாடு செய்து வைத்திருக்கிறானோ?

[கொஞ்ச நேரம் யோசனை செய்துவிட்டுக் கீழே செல்கிறாள்.]

## காட்சி 14

இடம் :—தேவர் மாளிகைக் கூடம்.

இருப்போர் :—ஜெகவீரர், தேவர்.

[தேவர், மேஜைமீது தலையைக் கவிழ்த்துக்கொண்டிருக்கிறார். ஜெகவீரன் நாற்காலியில் சாய்ந்து கொண்டு, கால்களை மேஜைமீது போட்டுக் கொண்டு அட்டகாசமாக இருக்கிறான். சுசீலா வருகிறாள்.]

ஜெ : சுசீலா!

[தேவர் திடுக்கிட்டுத் தலையை நிமிர்த்தி சுசீலாவைப் பார்க்கிறார்.]

சு : நான் பலியான பிறகு, தாங்கள் சொன்ன அந்தச் சாபம் கட்டாயம் நீங்கிவிடுமா அப்பா!

தே : (ஒன்றும் புரியாமல்) தங்கமே! என்ன கேட்கிறாய்?

ஜெ : நான் சொல்கிறேன் சுசீலா!

[எழுந்து கெம்பீரமாக உலவிக்கொண்டு பேசுகிறான்.]

உன் தகப்பனாரைத் தூக்குமேடைக்கு அனுப்பக்கூடிய இரகசியம் என்னிடம் இருக்கிறது.

[சுசீலா திகைப்பதுகண்டு]

ஏன் திகைக்கிருய்? ஆபத்தானது வெடிமருந்து. ஆனல் கொஞ்சம் தண்ணீரை அதிலே ஊற்றிவிடு, ஆபத்து வராது.

சு: விஷயத்தைச் சொல்லுங்கள்...

ஜெ: மாமா, என்று சொல்லியிருந்தால் நன்ருக இருந்திருக்கும். பரவாயில்லே. வெட்கம் இருக்கும் என்று எண்ணிக் கொள்கிறேன்.

சு: அந்த இரகசியம்...

ஜெ: என்னிடம் எப்படிக் கிடைத்தது என்று கேட்கிருயா?

[தேவர் ஜெகவீரன் கையைப்பிடித்து இழுக்கிருர்.]

ஜெ: (தேவர் பக்கம் திரும்பி) சொல்லி விடமாட்டேன் பயப்படாதீர்! சுசீலா! என்னிடம் விலேயுயர்ந்த வைரம், பார்த்தால் பிரமிக்கச் செய்யும் பச்சை, வையகமே புகழும் வைடூரியம்...

சு: கோமேதகம், முத்து, நவரத்னங்களும் இருக்கின்றன. நான் கேட்பது என்ன நீர் பதில் சொல்வது என்ன?

ஜெ: பொருத்தமில்லாமல் நான் பேசமாட்டேன் சுசீலா! அந்த நவரத்தினங்கள் எனக்குக் கிடைத்தது போல இந்த இரகசியமும் கிடைத்தது. வைர மாலேயை நான் உனக்குத் தந்து நீ உன் வசீகரமான கழுத்திலே அதை அணிந்து கொண்டால், ஊரார் அந்த வைரம் எப்படி ஜெமீன்தாரருக்குக் கிடைத்தது என்ரு கேட்பர். எவனுவது மடையன் கேட்டாலும், நானு பதில் சொல்வேன்.

சு: இரகசியம் எப்படி உமக்குக் கிடைத்தது என்பதைக் கூறமுடியாது. அதற்குத்தானே இவ்வளவு பேச்சும்.

ஜெ: ஆமாம்! அதையேதான் நாசுக்காகச் சொன்னேன். எப்படியோ கிடைத்தது அந்த இரகசியம். கலியாணமானவுடன் அந்த இரகசியம் உன்னிடம் தரப்படும். நீ என்ன வேண்டு மானுலும் செய்யலாம். கலியாணம் இல்லே—உலகுக்கு அது தரப்படும். நீ பிடிவாதம் செய்துகொண்டே காலம் கடத்திவந்தால், சாகசம் செய்தால், ஜெகவீரனே ஏமாற்ற நினேத்தால், சுசீலா! (குரலே மேலும் மேலும் உயர்த்திக் கொண்டே, அவள் அருகே போய்நின்று, குரூரமான பார்வையுடன்) அந்த இரகசியம் அரசாங்கத்திடம் போய்ச் சேரும். அதற்கான முன்னேற்பாடு என் வக்கீலிடம் இருக்கிறது.

[உரத்த குரலில் சிரித்துவிட்டு]

சுசீலா! நான் முட்டாளல்ல!

[தீப்பொறி பழக்கும் கண்களுடன் பார்க்கிருன். திகைத்த மங்கை தள்ளாடிக்கொண்டு மாடிக்குச் செல்கிருள்.]

## காட்சி 15

இடம்:—சுசீலா அறை.

இருப்போர்:—சுசீலா.

[தள்ளாடி நடந்து வந்து சுசீலா, படுக்கை மீது விழுகிருள்]

சு: சேகர்! சேகர்! என் நிலையைப் பார்!

பலி! பலி! உலகிலே கேட்டிராத பலி!

பெண்ணின் விருப்பத்துக்கு மாருகக் கலியாணத்தை நடத்துபவர்கள், அறிவிலிகள், ஆணவக்காரர்கள், பித்தர்கள், என்று ஆயிரம் தடவை கூறியிருக்கிறேன்.

என் தகப்பனுர் படித்தவர், அறிவாளி, பெயருக்கு ஏற்றபடி கருணை உள்ளவர், அவர் என்னை பலிபீடத்திற்குப் போ என்று கூறுகிருர்.

ஐயோ! அவர் கோபத்தோடு அந்த வார்த்தையைச் சொன்னுல், கோல் கொண்டு தாக்கினுல், நான் பல காலமாகப் பெண்களைக் கொடுமை செய்து பழக்கப்பட்ட ஆண்களிலே இவரும் ஒருவர் என்று வெறுத்துத் தள்ளி விடுவேன்.

அவர் அழுகிருர்! எனக்குக் கட்டளை பிறப்பிக்கவில்லை, என் எதிரே கண்ணீர் விடுகிருர்.

மகளைத் தாயே என்று அழைக்கிருர்.

அவருடைய முழங்காலின்மீது கால் வைத்து ஏறி அவர் மடியில் உட்காருவேன் சிறுமியாக இருந்தபோது, அப்படிபட்ட என்முன், என் தகப்பனுர், ஐயோ! மண்டியிடுகிருரே!

தகப்பனுரின் உயிருக்கும் என் வாழ்வுக்கும் ஒரு பயங்கரமான முடிபோட்டிருக்கிருனே அந்த பாதகன்.

சேகர்! சேகர்! எங்கே இருக்கிருய்? பாவம் உனக்கென்ன தெரியும், உன் வாழ்வு அழிக்கப்படுவது.

[படுக்கையில் புரண்டு அழுகிருள்]

[மீண்டும் எழுந்திருக்கிருள். மேஜைமீது விஷக் கோப்பை இருப்பது தெரிகிறது.]

விஷம் இனி ஏன்?

[அதையே உற்றுப் பார்த்துவிட்டுப் புன்சிரிப்புக் கொள்கிருள்]

விஷம் ஏனு? ஏன் உபயோகமாகாது? நான் பலியாகத் தானே வேண்டும். காதலற்ற அந்தக் கலியாணம், என்னை மெள்ள மெள்ளக் கொல்லும். விஷம்—இது—இப்போதே கொன்றுவிடுமே.

[கோப்பையை எடுத்துப் பார்த்துவிட்டு]

ஆனல் சேகர்! ஐய்யோ! சேகர்! நமது காதல் ராஜ்யம் அழிந்துவிடுகிறதே. உன் இருதயத்துக்கு ஜோதி என்று சொல்வாயே, இதோ உன் ஜோதி, அணைந்துவிடப் போகிறது.

[சேகரின் படத்தைப் பார்த்து]

அன்பா! என்னை மன்னித்து விடு, என்மீது குற்றமில்லை. நான் மாசற்றவள்–என்னை நான் தியாகம் செய்கிறேன் என்னைப் பெற்றவருக்காக.

[கோப்பையை மேஜைமீது வைத்துவிட்டு படத்தை எடுத்து அணைத்துக்கொண்டு]

அந்தோ! இதுதானு எனக்குக் கதி! இன்று நிலவில் அவரும் நானும்...ஐய்யோ! நினைத்தாலே! (படத்தை மாட்டி விட்டுக் கண்களைக் கைகளால் மூடிக்கொள்கிருள் ஒரு கணம். திடுக்கிட்டுக் கையை எடுக்கிருள்.)

சேகர்! சேகர்! கண்ணை மூடிப் பயன் இல்லை. என் கருத்திலே கலந்த கண்ணாளா! உன்னை நான் இழக்கத்தான் வேண்டுமா?

["வானிலுறை மதியே, மதியே
வாழ்வின் நிதியே"

என்ற பாட்டை, சோகமாக மெல்லிய குரலில் இரண்டடி பாடுகிருள், நிலவில் நடைபெற்ற காதல் விளையாட்டை எண்ணிக்கொண்டு.]

வாழ்வின் நிதி! வாழ்வின் நிதி! அந்த வஞ்சகனின் சதிக்கு இரையாகிறேன். இதற்கோ இன்று அவரும் நானும்......

[சில விநாடி மௌனம்; பிறகு ஓர்வித உறுதி பெற்று]

செ! சேகர் என் தியாகத்தைக் கேள்விப்படாமலிருக்க முடியாது. தந்தை ஒரு நாள் சொல்லியே தீருவார். சேகர் என்னை நிந்திக்கமாட்டார், நிச்சயமாக தியாகத்தின் மேன்மையை அவர் எப்போதும் சொல்வாரே எனக்கு.

[கோப்பையை எடுத்துக் குடிக்கப் போகும்போது, ஜன்னல் வழியாக ஒரு கள்ளன் நுழைவது காண்கிருள். திடுக்கிட்டுப்போன சுசீலா, உடனே சமாளித்துக் கொள்கிருள். கள்ளன் அவளைக் கண்டதும், துப்பாக்கியைக் காட்டு கிருன். அவள் அலறவில்லை. புன்னகை புரிகிருள். கள்ளனுக்கு இலேசாகக் கிலி பிடிக்கிறது. அவனையே உற்று நோக்கியபடி என்னமோ யோசிக்கிருள் சுசிலா, அவன் அவளைப் பார்த்தபடியே பின்வாங்குகிருன்.]

சு: நில்! போகாதே!

க: அசையாதே! (துப்பாக்கியைக் காட்டுகிருன்.)

சு: சுத்தப் பயங்கொள்ளி, களவாட வந்தவன் ஒரு பெண்ணைக் கண்டு ஓடுகிருயே! இவ்வளவு கோழை ஏன் இந்த வேலைக்கு வந்தாய்?

க: உம்! சுட்டுவிடுவேன்.

[கள்ளனின் கை நடுங்கிறது.]

சு: ஏன் நடுக்கமெடுக்கிறது? பயமா?

சு: (அசடு சொட்ட) எனக்கா பயம்? உனக்கல்லவா பயம் இருக்கிறது? பயப்படாதே! கூச்சலிடாமல் இரு. நான் உன்னை ஒன்றும் செய்யாமல் போய்விடுறேன்.

சு: (நிதானமாக) எனக்கென்ன பயம்? இங்கே கள்ளன், கீழே காமுகன். உனக்கு என் உடமை வேண்டும். அவனே என்னையே அபகரிக்க வந்திருக்கிருன். நீ கருந்தேள், கீழே கருநாகம்.

[கள்ளன் திகைத்துப் போகிருன்]

சு: பயமாக இருக்கிறதா? உனக்கு உயிர்மீது இன்னம் ஆசை இருக்கிறது. எனக்கு அந்த ஆசை இல்லை. ஆகவே அச்சமும் இல்லை. நீ சுட்டாலும் சாவேன், சுடாவிட்டால்கூடச் சாவேன்.

(கோப்பையைக் காட்டி)

இதோ பார்! இதுவும் ஒரு ஆயுதந்தான்.

க: என்னது இது?

சு: விஷம்!

க: அய்யோ!

சு: அடே, என்ன அச்சம். இன்னம் இரண்டு நிமிஷம் கழித்து வந்திருந்தால் இந்தக் கோப்பை கீழே உருண்டு கிடக்கும்? என் பிணம் இங்கே கிடக்கும், உன் வேலையும் சுலபமாகி இருக்கும்.

க: உனக்கு பைத்யமா?

சு: (தலையை அசைத்து) துளிகூடக் கிடையாது. ஆனால், ஜெமீன்தாரர் ஜெகவீரர் தாசானுதாசனாகிறேன் என்று சொல்கிறார். அவரைக் கலியாணம் செய்துகொள்ள மாட்டேனென்று பிடிவாதம் செய்கிறாயே, சுசீலா! நீ ஒரு பைத்யம்—என்று அப்பா கூறுகிறார். அவர் மட்டுமா? என் ஆருயிர்க் காதலர் அடிக்கடி சொல்வார், "என்ன கண்ணே! பைத்யம் உனக்கு! உலகமே எதிர்த்தாலும் நான் உன்னை விடமாட்டேன்" என்று. அவர் ஒரு பிரபல டாக்டர். ஆனால் வேடிக்கை என்ன தெரியுமோ? எனக்குப் பைத்யம் துளிகூடக் கிடையாது.

க: என்ன தொல்லை இது! இது ஒரு மாதிரி பைத்யமோ?

சு: உனக்குக் காதல் தெரியுமா?

க: தெரியாதே.

சு: கன்னம் வைப்பது, கதவை உடைப்பது, காதை அறுப்பது இதுமட்டும்தான் தெரியுமோ. என்னப்பா இது. களவாடினால் உனக்குப் பொருள் கிடைக்கும். வாழ்க்கைக்குப் பொருள் மட்டும் போதுமா? காதல் தெரியாவிட்டால் நீ என்ன செய்யப்போகிறாய் களவாடிய பொருளை எல்லாம் வைத்துக் கொண்டு?

க: எனக்கு மயக்கம் வருகிறது.

சு: இவ்வளவு அழகான நிலவில், உனக்குக் களவாளப் போகலாம் என்று புத்தி பிறந்ததே தவிர, வேடிக்கையாக உலாவலாம், ஆனந்தமாகப் பாடலாம் என்று தோன்றவில்லை. ஏன்? காதல் என்றால்தான் தெரியாது என்கிறாயே!

க: நான் போகிறேன். நீ ஏதேதோ பேசுகிறாய். உன்னைப் பார்த்தால் எனக்குப் பரிதாபமாக இருக்கிறது, பயமாகவும் இருக்கிறது.

சு: நேற்று நீ வந்திருந்தால் நானும்கூடத்தான் பயந்து போயிருப்பேன். இன்று உண்மையிலேயே பரிதாபப்படு கிறேன். ஏன் தெரியுமோ? நீ உன் முழுத் திறமையைக் காட்டினாலும் என்னை என்ன செய்ய முடியும்? சாகடிக்க முடியும். நான்தான் சாகத் துணிந்துவிட்டேனே! இனிப் பயம் என்ன? சுடு இஷ்டமிருந்தால்.

க: இல்லை! நான் போகிறேன். ஏதோ சதி நாடகமாடு கிறாய். என்னை ஏய்க்கப் பார்க்கிறாய். நான் கீழே இறங்கிப் போகும்போது கூச்சலிட்டு என்னைச் சிக்கவைக்கலாம் என்று பார்க்கிறாய். நான் ஏமாறமாட்டேன். அப்படியே அந்த நாற்காலியில் உட்கார்.

க: உன் வாயில் துணி அடைத்து.........

சு: வழக்கமாக நடப்பதுதான். வாயில் துணி அடைத்து என்னை நாற்காலியோடு சேர்த்துக் கட்டிவிடப் போகிறாய். அது தானே!

க: ஆமாம்......கூச்சலிட்டால்......

சு: பயப்படாதே! இது பெரிய மாளிகை. ஒருதரம் இரண்டு தரம் கூச்சலிட்டால் கீழே கேட்காது. சரி! நான் கூச்சலிட்டால் கொன்றுவிடுவாய். பைத்தியக்காரா! கொலை! தற்கொலை! இரண்டிலே எதுவாக இருந்தால் என்ன? இப்போது நான் சாக வேண்டும். அவ்வளவுதான்.

[சுசிலாவின் கண்களிலே கொஞ்சம் நீர் பெருகுவது கண்டு.]

க: கண்களிலே நீர்......

சு: அப்பா! உனக்கு அக்கா, தங்கை, யாராவது இருக் கிறார்களா?

க: ('இல்லை' என்று தெரிவிக்கத் தலையை அசைக்கிறான்,)

சு : அம்மா ?

க : ('இருக்கிறார்கள்' என்று தெரிவிக்கத் தலையை அசைக்கிறான்.)

சு : எனக்கொரு உபகாரம் செய்கிறாயா? களவாட வந்த வனை ஒரு கன்னி உபகாரம் செய் என்று கேட்பது, படமெடுத் தாடும் நாகத்தைப் பார்த்து மாணிக்கம் கொடு என்று கேட்பது போலிருக்கிறதா? என் நிலைமை அப்படிப்பட்டது. அதனால் தான், யாரைக் கண்டால் பயத்தால் கூக்குரலிடவேண்டுமோ, அவனைக் கண்டு உதவி கேட்கிறேன்.

க : நம்ப முடியாத வேடிக்கையாக இருக்கிறதே. நான் என்ன உதவி செய்யமுடியும்? கள்ளனிடம் ................உதவி கேட்டால்...........எனக்குப் புரியவில்லையே.

சு : எனக்கு உதவி செய்வார் யாரும் இல்லை. இந்த விஷத்தைத்தான் உதவிக்கு அழைத்தேன். நீ விஷத்தைவிடக் கொடியவனா! நீ கட்டாயம் உதவி செய்யமுடியும்.

க : என்ன உதவி ?

சு : கள்ளனாக இருந்தது போதும். நாளைக்கு வேண்டுமானால் கூடக் கள்ளன் வேலைக்குப் போ. வேண்டாம். உன் ஆயுட்பரி யந்தம் திருடவேண்டிய அவசியமின்றி உனக்குப் பொருள் தருகிறேன். வேலை தருகிறேன். எனக்கு மட்டும் இப்போது ஒரு உதவி செய்.

க : (புரியாமல்) நானா ? உதவியா ? என்ன உதவி ?

சு : கொஞ்சநேரம் என் காதலனாக இரு.

க : (பயந்துபோய்) தாயே! கும்பிடுகிறேன். நீ வன தேவதையோ, மோகினியோ, என்னை ஒன்றும் செய்துவிடாதே, நான் தாய்க்கு ஒரே மகன்.................இனி நான் சத்யமாகத் திருடுவதில்லை.

சு : ஐயோ, ஐயோ! முட்டாளே! நான் தேவதையுமல்ல, பிசாசுமல்ல. உன்னிடம் உதவி கேட்கும் ஒரு அபாக்யவதி. கொஞ்சநேரம்—ஒரு மணி நேரம் என்னைத் தாயே, பேயே என்று கூப்பிடாமல், கண்ணே! மணியே! என்று கூப்பிடு. அஞ்சாதே, கொஞ்சிப் பேசு.

க : (திகைப்படைந்து) நானா ? உன்னையா ?

சு : உண்மையாக அல்ல, பாவனையாக.

க: ஏன்?

சு: உட்கார். நான் இந்த வீட்டுக்காரரின் ஒரே மகள்—தாய் இல்லை—நான் அழகாக இருக்கிறேனல்லவா?

க: ஆமாம்......

சு: அதனாலேதான் எனக்கு ஆபத்து. பெண்களுக்கு அழகு, ஆபத்தையும் உண்டாக்கும். அந்த அழகால் மற்றவர்களுக்கும் ஆபத்து உண்டாகும். என்னைக் கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்று என் மாமன், காமுகன், கயவன், பிடிவாதம் செய்கிறான். எப்படியோ என் அப்பாவைச் சரிப்படுத்திக் கொண்டான்.

க: அவனைக் கொன்றுவிடுகிறேன். அது முடியும் என்றால்...

சு: கொலை தெரியும், களவு தெரியும்; காதலிக்கமட்டும் தெரியாதா? இது தெரிந்துகொள்ளாமல் இவ்வளவு பெரிய ஆளாகிவிட்டாயே.

க: காதல் என்பது சூது—சுகபோகிகளின் சதி—கவிகளின் கற்பனை மாளிகையிலே தரப்படும் மது—என்று என் தாயார் எனக்குக் கூறி இருக்கிறார்கள்.

சு: பாவம் உன் அம்மாவை எவனாவது பாதகன் ஏமாற்றி விட்டிருப்பான். மனம் நொந்து சொன்ன வார்த்தை அது. ஆனால் காதல் சதி அல்ல, வலை; சிக்கினவர் தப்புவதில்லை; வானவில்; ஆனால் இருக்கும் வரையில் அழகு அற்புதமாக இருக்கும். கைகூடினால் விருந்து; இல்லையோ அதுவே விஷம். காதல் சந்திரன்போல ஜோதியாகவும் இருக்கும்; சிலசமயம் நெருப்பாகவும் எரிக்கும்.

[சுசீலா இப்படிக் கூறும்போது, கள்ளன் மெள்ள நழுவப் பார்க்கிறான், அதைக்கண்டு விட்ட சுசீலா அவனை நோக்கி]

சு: போகாதே...உட்கார். நீ போக முயற்சித்தால், நான் கூச்சலிடுவேன்—நீ அகப்பட்டுக் கொள்வாய். நான் இதைப் பற்றி உனக்குச் சாவகாசமாகப் பிறகு கூறுகிறேன். ஒரு பித்தனின் பிடியிலே என் தகப்பனார் சிக்கிக்கொண்டார். ஒரே ஒரு வழிதான் இருக்கிறது நான் தப்பித்துக்கொள்ள. ஜெமீன்தாரனைப் பார்த்து, என்னை வேண்டாம் என்று சொல்லிவிட வேண்டும். அதற்குத்தான் இந்த ஏற்பாடு. என்னைப் பார்க்க, பேச, அவன் வரப்போகிறான்.

[சந்தடி ஏதாவது கேட்கிறதா என்று உற்றுக் கேட்கிருள்.]

இரு! இல்லை! சந்தடி காணேம். இன்னம் வரவில்லை. கொஞ்சம் நேரம் ஆகட்டும் என்று இருக்கிருன். அந்தக் கயவன் நான் தூங்கிய பிறகு வரலாம் என்றுகூட இருப்பான். அவன் வருகிற சமயமாகப் பார்த்து, நீ என்னிடம் காதலிப்பது போலப் பேசு, நானும் சரசமாடுபவள்போல் நடிப்பேன். அவன் உள்ளே வந்து அந்தக் காட்சியைக் கண்டால், உடனே என்னை வெறுத்து விட்டுப் போய்விடுவான். நான் கேவலம் நள்ளிரவில் சோர நாயகனிடம் பேசிக் கிடப்பவள் என்று எண்ணி என்னைக் கலியாணம் செய்துகொள்வது என்று கொண்டுள்ள ஆசையை விட்டுவிடுவான். உன் பெயர் என்ன?

க: ரத்தினம்.

சு: ரத்தினம்! இந்த உதவி செய், அல்லது என் உயிரைப் போக்கு.

[சுசீலாவின் சோகநிலையை உணர்ந்து பரிதாபம் கொண்ட கள்ளன் நல்வழிப்பட்டு]

க: என் தங்கை அம்மா இனி நீ. இவ்வளவு இளவயதில் விஷம் சாப்பிட்டு மடியவும் என் கைத் துப்பாக்கியால் சாகவும் துணியும் அளவுக்கு உனக்கு மனவேதனை ஏற்பட்டிருக்கிறது. இப்போதுதான் உணர்ந்தேன் உன் நிலைமையை.

சு: நீ மிக நல்லவனப்பா.

க: இதுதானம்மா முதல் தடவை என்னை நல்லவன் என்று பிறர் கூறக்கேட்டது. ஆனுல் என் தாயின்மேல் ஆணை. இனி நான் களவாடமாட்டேன்.

சு: என்னைக் காப்பாற்ற?

க: தயங்கமாட்டேன்...

சு: என் பெயர் சுசீலா.

க: தயங்கமாட்டேன் சுசீலா?

சு: அந்தக் காமக்குரங்கு ஏதாவது என்னிடம் சேஷ்டை செய்தால் வாலை நறுக்கு.

க: பேஷ்! அது நமக்குப் பழக்கமான வேலை. இந்தக் காதல் விஷயம்தான் புதிது.

சு : நான் அவனைக் கண்டதும் திடுக்கிடுவது போலிருப்பேன்.

க : சரி.

சு : அவன் உன்னை அடிப்பான், கொஞ்சம் முன்கோபி. மேலும், இப்படிப்பட்ட சமயத்திலே கோழைகூடத் தைரியசாலியாவானல்லவா?

க : அடிப்பானு? என் சுபாவம் ஒரு மாதிரி சுசீலா! அடி விழுந்தால் நான் மனுஷனல்ல, மிருகமாகிவிடுவேன்; கண்மண் தெரியாமல் தாக்குவேன்.

சு : நடக்கட்டும். ஆனல், ஒன்று. நான் இடையிடையே வேண்டாம், அடிக்காதே, என்று கெஞ்சுவேன்; சட்டை செய்யாதது போல நடந்துகொள்ளவேண்டும்.

க : சரி, சுசீலா! ஆத்திரத்தில் நான் எதையும் மறந்துவிடுவேன். அந்தச் சமயம் இந்தத் துப்பாக்கி என்னிடம் இருப்பது ஆபத்து. இதை நீ வைத்துக்கொள்.

சு : ரத்தினம்? நீ கள்ளனுகக் காலந்தள்ளுகிருயே தவிர உண்மையிலேயே என்னைப்போல ஒரு தங்கை இருந்திருந்தால் உத்தமனுகி இருக்கலாம். எவ்வளவு நம்பிக்கையுடன் துப்பாக்கியை என்னிடம் கொடுக்கிருய்.

க : நான் மறுபிறவி அல்லவா எடுத்திருக்கிறேன் சுசீலா! சாகசமாகப் பேசி என்னைச் சாகடிக்கவே நீ தந்திரம் செய்து துப்பாக்கியை வாங்கிக்கொண்டதாகவே இருக்கட்டும். சகல சுகமும் இருக்கும்போது, காதலுக்காக உயிரைவிடத் துணியும் ஒரு உத்தமியின் கரத்தால் மாள்வது, ஊராரிடமோ, ஊர் ஆள்வோரிடமோ உதைப்பட்டுச் சாவதைவிட மேலானதல்லவா?

சு : ஒரு கள்ளன் காட்டும் இரக்கம்கூடக் காமுகனிடம் கிடைப்பதில்லை.

க : ஆமாம், உன்னை வதைக்கும் அந்த வஞ்சகன் இப்போது அல்லது இன்னம் கொஞ்ச நேரத்தில் இங்கு வருவான் என்று எப்படித் தெரியும் உனக்கு.

சு : (கேலியாக) அதுவா? தோட்டத்துச் சுவரைத் தாண்டி, கயிறு போட்டு ஜன்னலில் மாட்டி, உள்ளே வரத் தெரிந்ததல்லவா உனக்கு?

க : ஆமாம், அது என் தொழில், பழக்கம்.

சு: கள்ளன் எந்த வீடும் நுழைவான். காமுகன் கதியற்ற கன்னிமாடமாகப் பார்த்து நுழைவான். பெண்களால் அவ்வித மான ஆண்களின் சுபாவத்தைத் தெரிந்துகொள்ளமுடியும்.

க: அப்படியா!

சு: மேலும் நான் சம்மதித்துவிட்டேனல்லவா, அந்தச் சண்டாளன் அதே நினைப்பிலே இருப்பான். தூக்கமும் வராது. மோக மயக்கம் இருக்கும். தனியாகத்தானே இருப்பாள். தகப்பனே நம்மிடம் பயந்து கிடக்கிறன், போய்த்தான் பேசுவோமே என்று தோன்றும். வருவான். மேலும், காந்தர்வ விவாகம் என்று வேறே சொல்லி இருக்கிறன்.

க: மடையன்! வரட்டும்.

[உட்காருகிறன்.]

## காட்சி 16

இடம்' சேகர் வீடு.

இருப்போர்: சேகர்.

[சேகர் படுத்துப் புரள்கிறன், தூக்கமில்லை. படிக்கிறன், முடியவில்லை. பாடுகிறன், திருப்தி இல்லை. உலாவுகிறன்—யோசிக்கிறன்.]

சே: (தனிமொழி) சுசீலாவை ஏன் அவ்வளவு அவசரமாக அழைத்துக்கொண்டு போனர்கள். ஒருவேளை, தேவருக்கு உடம்பு ஏதாவது......செச்சே! உடம்புக்குச் சரியில்லை என்றல் என்னை அல்லவா அழைத்திருப்பார்கள். மாரி அவசரப்படுத்தி அல்லவா அழைத்துக்கொண்டு போனள். எதற்கும் டெலிபோன் செய்து கேட்போமே.

[டெலிபோன் செய்கிறன்.]

"ஹலோ! ஹலோ!"

........................................

"ஆமாம்! நான்தான், டாக்டர் சேகர்தான் பேசுகிறேன்......"

## காட்சி 17

இடம் : தேவர் வீடு.

இருப்போர் : தேவர், ஜெகவீரர்.

[தேவர் மேஜைமீது தலையைக் கவிழ்த்தவண்ணம் கவலையுடன் ஏதேதோ நினைத்துக்கொண்டிருக்கிருர்.

ஜெகவீரர், போதையுடன், அவரை விறைத்துப் பார்ப்பதும், உலவுவதுமாக இருக்கிருர். டெலிபோன் மணி அடித்ததும் தேவர் பேசுகிருர் !]

தே : என்ன சேகர் ? இந்த நேரத்தில்......

..................................

தே : ஓஹோ? சுசீலாவை அவசரமாக அழைத்துக்கொண்டு வரவே, பயந்துவிட்டாயா ?......

..................................

தே : அதெல்லாம் ஒன்றுமில்லை......

[ஜெகவீரர் குறுக்கிட்டு]

ஜெ : யார் பேசுவது ?

தே : சேகரன்.

ஜெ : சேகரனு ? சரி ! இங்கே வரச்சொல்லுங்கள்.

தே : யாரை ?

ஜே : அவனைத்தான். பயல், நாளைக்கு நிச்சயதார்த்தத்தின் போது ஏதாவது தொல்லை தரக்கூடும். வரவழைத்து......

தே : அவன் காலில் வீழ்ந்து......

ஜே : காலில் விழுவதோ, கண்ணீர் பொழிவதோ, எனக்குத் தெரியாது, நான் வெளியே போய்வருகிறேன். அதற்குள்......

தே : (டெலிபோனில்) டாக்டர்? ஆமாம்? கொஞ்சம் வந்து போகிறீரா............இல்லை......சுசீலா தூங்கிவிட்டாள். என்க்குக் கொஞ்சம் மார்வலி............

ஆமாம், சுசீலாவுக்குக்கூடத் தெரியக்கூடாது...........பயந்து விடும்......உடனேதான்......வருகிறீரா......சந்தடி கூடாது........ குழந்தை பயப்படும்.

## காட்சி 18

இடம் : சேகர் வீடு.

இருப்போர் : சேகர்.

[அவசரமாகக் கோட்டு போட்டுக்கொண்டு சில மருந்துகளையும் பெட்டியில் வைத்துக்கொண்டு புறப்படுகிறார்.]

## காட்சி 19

இடம் :—தேவர் வீடு.

இருப்போர் :—தேவர்.

[தேவர் சேகர் வரவுக்காகக் காத்திருக்கிறார். சேகர் அவசரமாக வருகிறார்.]

தே : சந்தடி செய்யாதீர். டாக்டர் உட்காரும்.

[டாக்டர் சேகர், ஸ்டெதாஸ்கோப் எடுக்கிறார்—பரிசோதிக்கிறார்.]

தே : பார் சேகர்? எப்படி அடித்துக் கொள்கிறது பார்த்தாயா?

சே : ஆமாம்? கொஞ்சம் படுத்துக்கொள்கிறீரா? சரியாக பார்க்கவேண்டும்.

தே : பைத்யம்? சேகர், அதையெல்லாம் சுருட்டி வை பெட்டியில். உட்கார் இப்படி.

சே : இதயக் கோளாறு என்றீரே...

தே : ஆமாம். நெடுநாளைய வியாதி. ஆனல்? சுசீலா அதை சொஸ்தப்படுத்திவிட்டாள். உட்கார் சேகர்.

சே : மார்புகூட, படபட என்று அடித்ததே.

தே : நோயால் அல்ல? பேய் அறைந்துவிட்டது என்னை. ஏன் அப்படி விறைத்துப் பார்க்கிறாய்? பேயாவது, பிசாசாவது, இதை எல்லாம் யார் நம்புவது என்கிறாயா? பேய், வேறோர் தனியான ஜாதி அல்ல அப்பா? மனிதர்களிலேயே சிலர் பேய்க் குணம் படைத்தவர்கள்தான்.

சே : தாங்கள் என்ன சொல்கிறீர்கள் ?

தே : சொல்லவேண்டியது, இனிமேல்தான் சேகர். நீ திடுக்கிடாமல் கேட்கவேண்டும். குறுக்கே எதுவும் பேசக்கூடாது. சுசீலா உன்னைக் கலியாணம் செய்துகொள்ள மாட்டாள்.

சே : வேடிக்கை பேச...

தே : வயதுமல்ல, நேரமுமல்ல. நாளைக்கு சுசீலாவை ஜெமீன்தாரர் ஜெகவீரருக்கு மணமுடிக்க நிச்சயம் செய்யப் போகிறோம்.

சே : சுசீலா...?

தே : சம்மதித்து விட்டாள்.

சே : நான் நம்பமுடியாது...

தே : உலகமே நம்பாது. ஆனால் அது உண்மை. சுசீலா சம்மதித்தது, உன்னை மறந்ததால் அல்ல, என் உயிரைக் காப்பாற்ற.

சே : தங்கள் உயிருக்கும் சுசீலா திருமணத்துக்கும் என்ன சம்பந்தம் ?

தே : தம்பி என்னைப் பார். நான் கொலைகாரன் என்று சொன்னால் நம்புவாயா ?

சே : ஒருக்காலும் நம்பமாட்டேன்.

தே : கள்ளமில்லாத வெள்ளை உள்ளம் ; ஆனால் உண்மை என்ன தெரியுமா ? நான் கொலை செய்தவன்.

[சேகர் திடுக்கிடுகிறான்.]

சேகர் பரிதாபத்துக்குரிய என் கதையைக் கேள். நான் வாலிபனாக இருந்தபோது, ஒரு அழகிய இளம் விதவையைக் காதலித்தேன். அவள் என்னைப் பரிபூரணமாக நம்பினாள். காதலில் மூழ்கினோம். கடைசியில் சமூகக் கட்டுப்பாட்டுக்கும் குடும்பக் கௌரவத்துக்கும் பயந்து, நான் அவளைக் கைவிட்டேன்...கர்ப்பவதியாக...

இந்தக் கொடியவனால் கைவிடப்பட்ட அப்பெண் என்னென்ன கஷ்டத்துக்கு ஆளானாளோ தெரியாது. அடிக்கடி என் மனம் மட்டும் சுடும். ஆனால் கற்பழித்த காதகனான நான்,

ஜெமீன்தாரர் ஜெகவீரரின் தங்கை பவானியைக் கலியாணம் செய்துக்கொண்டு, கௌரவம் பெற்றேன். அந்த விதவையின் பெயர் சொர்ணம், ஸ்வர்ணு என்றும் பெயர்.

சே: யார்? மருதூர் மிட்டாதாரரின் வைப்பாட்டியாகச் சில காலம் இருந்தவளா?

தே: ஆமாம். அவளை விபசாரியாக்கியவன், நான்தான்! அவள் விதி அது என்று உலகம் கூறும். இந்தச் சண்டாளன் செய்த சதி, சொர்ணத்தை அந்தக் கதிக்கு ஆளாக்கிற்று.

சேகர்: நான் என் செல்வத்திலும் சுகத்திலும் மூழ்கிச் சொர்ணத்தை மறந்தே போனேன். அவளோ பலவிதக் கஷ்டம் அனுபவித்துப் பிறகு, மருதூர் மிட்டாதாரரின் வைப்பாட்டி யானுள். எனக்கு அது தெரியாது. நான் ஒரு வேலையாக மிட்டாதாரரைப் பார்க்கச் சென்றேன் மருதூருக்கு. அருமையான விருந்து, உபசாரம்—மிட்டாதாரர் எனக்கு அளித்தார். அன்றிரவு, அவர் ஒரு அவசர காரியமாக வெளியே சென்ருர். நான் மிட்டா தாரரின் மாளிகைத் தோட்டத்திலே உலவச் சென்றேன். இன்று போல் அன்றும் நல்ல நிலவு.

## காட்சி 20

இடம்:—மருதூர் மிட்டா தோட்டம்.

இருப்போர்: சொர்ணம், தேவர், மிட்டாதாரர்.

[தோட்டம்—நிலவு—தேவரின் வாலிபப் பருவம்—பாட்டு—சாளரம் திறக்கப்பட்டு ஒரு பெண் பார்க்கிருள். இருவரும் பார்க்கின்றனர் ஆச்சரியத்துடன்.]

தே: (ஆவலுடன்—ஆச்சரியத்துடன்) சொர்ணம்!

சொ: தாங்களா?

[தேவர் கரங்களை நீட்டுகிருர், அவளை அழைக்கும் பாவனையில்.

ஒருகணம், தேவர் தனிமை, சாளரத்திலே சொர்ணம் இல்லை.]

தே : பிரமை! ஆமாம்!

(தனிமொழி) ஆனால்...குரல், அதே குரல்...சொர்ணமா? இருக்க முடியுமா?

[எதிர்புறமிருந்து சொர்ணம் ஓடி வருகிறாள். இருவரும், ஓடித் தழுவிக்கொள்கின்றனர். ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்கின்றனர்.]

தே : (அடிமூச்சுக் குரலில்) சொர்ணம்? நான்......

சொ : இன்பக் கனவல்ல! உண்மைதான்! நீங்கள் இங்கே எப்படி?

தே : மிட்டாதாரரிடம் ஒரு வேலையாக...நீ?

சொ : நானும் அவருடைய வேலையாள்தான்.....(தேவர் சொர்ணத்துடைய ஆடை அலங்காரங்களைப் பார்க்க) வேலை செய்பவளுக்கு, இப்படி அலங்காரம் இராதே என்று பார்க்கிறீரா? நான் மிட்டாதாரரின் அபிமான ஸ்திரி!

தே : அபிமான ஸ்திரி!

சொ : (தலையை ஆட்டி) ஆமாம்! மானம் இழந்த பிறகு அந்தப் பட்டம் தரப்படுகிறது, மாளிகையிலே குடி ஏறினால். பழைய மண் குடிசையாகவே இருந்தால், அபிமான ஸ்திரி என்ற பெயர் இராது. வேறு பலவிதமான பெயர்...(பெருமூச்சு.)

தே : (சொர்ணத்தை மறுபடி ஒரு கணம் ஆச்சரியத்துடன் பார்த்துவிட்டு, ஆவேசம் கொண்டவர் போல)

சொர்ணம்!

சொ : இல்லை! சொர்ணம் செத்துவிட்டாள். உம்முடன் சோலையிலே விளையாடிய சொர்ணம் செத்துவிட்டாள். விதவை மாண்டுபோனாள். நான் ஸ்வர்ணு! மிட்டர்தாரரின் வைப்பாட்டி.

கருணாகரத் தேவரின் மனைவியாக இருக்கவேண்டியவள் இன்று இந்த நிலையில்......

[தேவர் முகத்திலறைந்துகொண்டு]

தே : சொர்ணம்! இந்தப் பாவியை மன்னித்து விடு. மாசற்ற உனக்கு நான் துரோகம் செய்தேன். மகா பாதகன் நான்.

சொ : அதற்குப் பரிசாகப் பகவான் உம்மை ஜெமீன் வீட்டு மருமகனாக்கினார். எனக்கும்தான், (மாளிகையைக் காட்டி) இந்த அந்தஸ்தை (தன் அலங்காரத்தைக் காட்டி) இந்த அலங்காரத்தைத் தந்தார்.

தே: சொர்ணம்! என்னை நீ எவ்வளவு கண்டித்தாலும் குற்றமில்லை. நான் செய்தது துரோகம்......

சொ: மாளிகையிலே, இத்தகைய துரோகங்கள் வெறும் நிலாச் சோறு.

தே: இந்தக் காதகனின் துரோகத்தால் இந்தக் கதிக்கு ஆளானாய். மாதரசி! உன் மலர் முகத்தை மறைத்துக் கொள். உன் அழகும் அலங்காரமும் என்னைக் கொல்கிறது. மறைந்து போ! என்னை மயக்க வந்த மின்னலே, மறைந்து விடு.

சொ: (கேலியாக) என் காதலர் கவியாகிவிட்டார்!

தே: கவியானேன்! பலன்! வாழ்க்கையிலே நான் அடைய வேண்டிய விருந்தை இழந்தேன். சொர்ணம்!

சொ: உயிரும் உடலும், மலரும் மணமும், நரம்பும் நாதமும் என்று, அன்று சொன்னீர். நம்பினேன். மோசம் போனேன். கைவிட்டீர், கவலையில் மூழ்கினேன்; கண்ணீர் பொழிந்தேன்; யார் இரக்கம் காட்டினார்கள், இந்தக் கைம்பெண்ணிடம். சுற்றாத கோயில் இல்லை! பூஜை, விரதம் என்று தவறவில்லை. என் மணாளர் என்னை ஏற்றுக்கொள்வார், மறுபடியும் வருவார், என்னைப் படுகுழியில் தள்ளமாட்டார் என்று நம்பினேன்...... நெடுநாள் வரையிலே.

ஒரே ஒரு நாள், உலகின் முன்பு, பகிரங்கமாக, "ஆமாம்! சொர்ணம் என் மனைவிதான்" என்று சொல்லிவிடட்டும். அது போதும், பிறகு விஷம் கொடுத்துச் சாப்பிடு என்று கூறினாலும் துளிகூடச் சஞ்சலமின்றிச் சாப்பிடலாம், என்றுகூட நினைத்தேன்.

கோயில் சுற்றிச் சுற்றி நான் கண்ட பலன் என்ன? உம்மைப் பெறவில்லை. உமது மனம் மாறவில்லை. கோயிலுக்கு வந்த வேறு பலரின் மனதிலே ஆசையைக் கிளறவே பயன் பட்டது.

உலகமென்ன தர்ம சத்திரமா என்னைக் காப்பாற்ற. நான் வாழ வழியில்லை, என் குடும்பம் தத்தளித்தது, காப்பாற்ற மார்க்கம் இல்லை... நான் விபசாரியானேன்—விபசாரியாக்கப்பட்டேன்.

தே: ஐயோ! பாவி நான்......

சொ: பதற வேண்டாம்! குலமாதாக, குடும்ப விளக்காக, தங்கள் தர்ம பத்தினியாக இருக்க வேண்டுமென்று தவம் கிடந்தேன். இன்று! உமது கண்களை மயக்கும் காமவல்லியாக நிற்கிறேன். மிட்டாதாரரின் போகப் பொருள்.

காதலிக்கத் தெரிந்த உமக்குக் கடமையின் இலட்சணமும் தெரிந்தால் நான் இந்தக் கதிக்கு ஆளாகி இருக்கமாட்டேன். உம் நெஞ்சிலே வஞ்சகம் இருந்தது. கொஞ்சினீர். பிறகு, விதவை நமது அந்தஸ்தை, குலப்பெருமையைக் கொல்லும் நஞ்சு என்று எண்ணிக் கைவிட்டீர்.

தே: சமூகம் என்னை வற்புறுத்திற்று, மிரட்டிற்று.

சொ: சமூகம், சாலை ஓரத்தில் உலாவும் அபலைகளை நம்பிக்கை கொள்ளும்படி செய்து பிறகு நட்டாற்றில் விடும்படியும் சொல்கிறதா? சமூகத்தின் கோபத்துக்குப் பயந்தீர்; உமது மனம், உமக்கு ஒன்றும் கட்டளை பிறப்பிக்கவில்லையா? 'அவள் அபலை! உன்னை நம்பினாள்! உலகமே நீதான் என்று எண்ணினாள். அவளுக்கு நீ ஆயிரம் தடவை சத்தியம் செய்திருப்பாய்; அவளுடைய நெஞ்சு, நடுங்கியபோது, நீ அவளை பயப்படாதே என்று கூறினாய். அவள் அதற்குமுன் கேட்டறியாததெல்லாம் பேசினாய்; கண்ணீரைத் துடைத்தாய். கூந்தலைக் கோதினாய், கோமளமே என்று கொஞ்சினாய். அவளைக் கை விடாதே. நீ கைவிட்டால், அவள் சமூகத்தின் சாபம் என்று அழைக்கப்படும், விபசாரப் படுகுழியில் தள்ளப்படுவாள்!' என்று உம்முடைய மனம் சொல்லவில்லையா? மாளிகை வாசம் இருந்தால் என்ன, மனம் அங்கே மட்டும் இரும்பா!

தே: நான் செய்ததற்காக நான் மனமார வருந்துகிறேன், சொர்ணம் என்னை மன்னித்துவிடு.

சொ: இப்போதும், உமது சுகத்தைத்தான் தேடிக் கொள்கிறீர். மன்னிப்புக் கேட்கிறீர், உம்முடைய மனச்சாந்திக்காக. நான் அதனை உமக்கு அளிக்க முடியும். ஆனால், உலகம் என்னை மன்னிக்குமா? 'பாவம்! அவள்மீது குற்றமில்லை! சமூகக் கட்டுப்பாட்டுக்குப் பயந்த ஒரு ஆடவனால் அவள் கைவிடப்பட்டாள்' என்று கூறுமா? என்னைப் பார்த்ததும் உலகம் என்ன சொல்லும்?

'போகிறாள் பார் விபசாரி!'

'குலுக்கி நடக்கிறாள்.'

'மினுக்கிக் கொண்டு திரிகிறாள்!'

'மிட்டாதாரனை மயக்கினாள்!'

என்று கேலியும் கண்டனமும் கலந்த குரலில் பேசும். சீமான்களோ, கண்ட உடனே, என்ன விலை தரலாம் என்று மதிப்புப் போடுவார்கள். அவசரக்காரர்கள் விலாசம் விசாரிப்பார்கள்; அழுத்தக்காரர்கள் பெருமூச்சுடன் நின்றுவிடுவார்கள்.

நான் இன்று நடமாடும் நாசம்! சரசமாடும் சனியன்! வலை வீசும் வனிதை!

திருப்புகழ் பாடட்டுமா?

[ இரண்டோர் அடி பாடுகிருள் ]

இப்படி எல்லாம், எச்சரிக்கை செய்கிருர்கள, என்போன்றவர் களைப்பற்றி. கண்ணுடி, என்னை ஓர் அழகி என்று கூறுகிறது. உலகமோ, அபாய அறிவிப்பு என்று சொல்கிறது. இவ்வளவும்...

தே: என் மனம் உறுதி கொள்ளாததால்தான்...

சொ: இங்கே நான், மாளிகையிலே பார்க்கிறேன், கூடை கூடையாகப் பழம் வரும். தின்பாரின்றி அழுகும். அழுகிய பிறகு குப்பையிலே வீசுவார்கள். பிறகு அதிலே புழு நெளியும். நான் அழுகிய பழம்! அழுகியது என் குற்றமல்ல.

தே: குற்றவாளி நான்தான்.

சொ: உலகம் விசித்திரமான நீதிமன்றம்: நீரே, கூண்டேறி உமது குற்றத்தை ஒப்புக்கொண்டால்கூட, தண்டனை எனக்குத் தான் தரும்!

தே: சொர்ணம்! என் மனம் படும் பாடு சொல்லி முடியாது.

சொ: என் இளமை, அழகு, அன்பு, ஆவி எல்லாவற்றை யும் அர்ப்பணம் செய்ய முன்வந்தேன்; உமது காலடியில் வைத் தேன், உதைத்துத் தள்ளினீர்—உதறித் தள்ளினீர்—இன்று... துரத்திக்கொண்டு வருகிறீர். ஆனுல் உமது பிடிக்கு அகப்பட முடியாத உயரத்தில் நான் இருக்கிறேன்.

தே: என் இருதயத்திலே நீ இடம் பெற்றுவிட்டாய்.

சொ: ஒரு வகையான திருப்தி! எனக்கும் ஒரு விதமான திருப்தி. ஏழ்மையிலேயே புரண்டு கிடந்தேன், இப்போது மிட்டாதாரர் பணத்தால் அபிஷேகிக்கிருர் என்னை.

தே: பணமா பெரியது?

சொ: சந்தேகம் என்ன? வாழ்க்கையிலே பணம் பிரதான மாக இருக்கும் விதமாகத்தானே உலகம் இருக்கிறது. ஏழை என்றும் பணக்காரரென்றும் இரண்டு ஜாதி இல்லாமல், ஒரே ஜாதியாக இருந்தால், எனக்கும் இந்த எண்ணம் உண்டாகாது. பணமின்றி என் குடும்பம் பதைத்தபோது பணமா பெரிது என்று வேதாந்தம் பேசிக்கொண்டு, எங்களைக் காப்பாற்ற யாரும் முன்வரவில்லையே! பணம் எந்த விதத்திலோ என்னிடம் வந்த

பிறகுதான் நான் பரிமளத்துடன் வாழ முடிந்தது. எனக்குத் துரோகம் செய்த சீமானே கண்டு மலைக்கும் படியான மாளிகையிலே உலாவமுடிந்தது.

[ தேவர் தலையில் கைகளால் மோதிக்கொண்டு கதறுகிறார். சொர்ணத்தின் மனம் இளகிவிடுகிறது. அருகே சென்று அவர் கைகளைப் பிடித்திழுத்து]

சொ: அழாதே! கண்ணே! உன்னை நான் அதிகமாகத்தான் வாட்டிவிட்டேன். பழுக்கக் காய்ச்சிய சொற்களை வீசினேன்! ஆனால் அவை, என் வேதனையின் விளைவு!

இதோ பார்! இல்லை! (முகவாய்க் கட்டையைப் பிடித்துக் கொண்டு) கொஞ்சம் சிரி! அந்தப் பழைய புன்னகை! அந்தக் காலத்துப் பிரேமையில் கொஞ்சநஞ்சம், மிச்ச மீதி, விட்டகுறை தொட்ட குறை!

[ தேவரின் சோகத்தை நீக்க விளையாடுகிறாள் கொஞ்சிப் பேசியபடி. தேவர் ஆனந்தமடைகிறார். ]

சொ: ஆ! முகத்திலே இப்போதுதானே சந்தோஷம் பிறந்தது.

இப்படிக் கொஞ்சிக் குலவ நான் சித்தமாக இருந்தேன். என் தேவன்தான் வரம் தரவில்லை. கண்களைத் துடைத்துக்கொள். இதோ முந்தானையால்......

[ முந்தானையால் துடைக்கிறாள். ]

மிட்டாதாரர், இந்தச் சேலையை நான் கட்டிக்கொண்டதும் வெட்டிவேர் அத்தர் தெளிப்பார் இதிலே! இந்தக் கண்ணீருக்குள்ள மதிப்பு அந்த அத்தருக்கு ஏது? இனி உனக்கு நான், எனக்கு நீ! சரிதானா? மிட்டாதாரருக்கு மட்டும் தெரியக்கூடாது. அவர் கண்களிலே மட்டும் படக்கூடாது.

ஆனால், நீதான் ஆசைநாயகன், என் இன்பக் களஞ்சியம்.

[ இந்தச் சாகசம் நடைபெறும் நேரத்தில் மிட்டாதாரர் தற்செயலாக அங்கே வந்துவிடுகிறார். கோபம் தலைக்கேறுகிறது. கைத் தடியால் ஓங்கி அடிக்கிறார் சொர்ணத்தின் முதுகில். ]

மி: நான் குருடனல்ல! குடிகெடுத்தவளே! உன் ஆசை நாயகனா இந்த நாய்! அடே! கருணாகரா, எவ்வளவு திமிர்! அடி காதககி!

[ அவள்தலைமயிரைப் பிடித்துக் குலுக்கி அடிக்கிறார். தேவர் மயங்கிச் சாய்கிறார். சொர்ணத்தின் நகைகளை அறுக்கிறார்; ஒடிக்கிறார். ]

மி: மாலை! செயின்! வளையல்கள்! தொங்கட்டம்! துரோகி!

[ நகைகளைச் கழற்றிக்கொண்டு, ஆடையைக் கிழிக்கிறார். அலங்கோலமாக்கப்படுகிறாள் சொர்ணம். இடையே எழுந்திருக்க முயலும் தேவரை, உதைக்கிறார் மிட்டாதாரர். ]

மி: கள்ளி! சாக்கடையிலே புரண்டுகொண்டிருந்தவளை, மாளிகையிலே குடிவைத்தேன்! என் வீட்டிலே விருந்துக்கு வந்தவனுடன்...? ஆஹா! எவ்வளவு துணிச்சலடி உனக்கு.

[ ஏதோ பேச முயற்சிக்கிறாள் சொர்ணம். ]

பேசாதே! வாயைத் திறக்காதே!

[ மீண்டும் அடிக்கிறார். சொர்ணம் அலறி அழுகிறாள். ]

மி: அழு! புரண்டு புரண்டு அழு! ஓலமிடு! துரோகி! உனக்கு மாளிகை வாசம் ஒரு கேடா? மிட்டாதாரணியைக் கிராமத்திலே குடியிருக்கச் செய்துவிட்டு, உன் மினுக்கிலே மயங்கி நான் உன்னை மாளிகையிலே கொலு வைத்தேன். குச்சுக்காரியே! எச்சிலைப் பொறுக்கும் நாயே! என்னை வஞ்சித்த பேயே! இதுபோல் என்னென்ன நடந்ததோ?

[ தலைமயிரைப் பிடித்துத் தூக்கி நிறுத்தி ]

அடி, சோற்றுக்கு அலைந்த சொர்ணம்! என்னைப் பார்த்துப் பேசு! உனக்கு நான் என்ன கேடு செய்தேன்! ஏன் எனக்கு இந்தத் துரோகம் செய்தாய்? சொல்லு.

[ காலில் விழுகிறாள் ]

காலைத்தொட்டுப் பயனில்லை! என் மனதைக் கொட்டி விட்டாயே துரோகி! நான் உனக்கு என்ன தரமாட்டேனென்றேன். உனக்கு இங்கே என்ன இல்லை என்று இவனைத் தேடினாய்.

[ சொர்ணம் மறுபடியும் பேச முயற்சிக்கிறாள். ]

வாயைத் திறக்காதே! என் ஆத்திரத்தைக் கிளப்பாதே. என் முன் நில்லாதே! போ! ஓடு!

**சொ:** (அழுதபடி) இந்த நடுநிசியிலா?

மி: நடுநிசி! நடுநிசியாக இருந்தால் என்னடி உனக்கு. இந்த நடுநிசியிலும், வழியிலே எவனுவது கிடைப்பான், போ.

[ சொர்ணத்தைத் துரத்துகிருர். அவள் தள்ளாடித் தோட்டத்தைவிட்டுச் செல்கிருள். தேவர் தெளிவடைகிருர். அவரை மிட்டாதாரர் மறுபடியும் தாக்க, தேவர், மிட்டாதாரர் காலில் வீழ்ந்து ]

தே: துரோகம் செய்துவிட்டேன், நான் துரோகி, துரோகி, மன்னிக்கவேண்டும்.........

மி: மன்னிக்க வேண்டும்! உன்ஜன! விருந்துக்கு வந்த இடத்தில் விபசாரியை விபசாரத்துக்கு இழுத்த உன்ஜன? அடே! கருணுகரா! என்னிடம் பேசாதே! நில்லாதே; எழுந்து நட!

[ தேவரும் தள்ளாடி நடந்து போகிருர் ]

## காட்சி 21

இடம்:—பாதை.

இருப்போர்:—தேவர், சொர்ணம்.

[ தள்ளாடிச் செல்லும் சொர்ணம் பாதையில் ஓர் ஓரத்தில் நின்றுகொண்டிருக்கிருள். தேவரும் வந்து சேருகிருர். ]

சொ: துரையே! அந்தச் சிறையிலிருந்து வெளிவந்து விட்டேன். நான் பட்ட இம்சையைக்கூட மறந்து விடுகிறேன்; என்னுல் தங்களுக்கு இந்தக் கஷ்டம் வந்ததே.

தே: வாழ்க்கையிலே மறக்கமுடியாத அவமானத்தை அடைந்தேன். தீராத பகை மூண்டுவிட்டது எனக்கும் மிட்டாதாரருக்கும்.

சொ: எல்லாம் என்னுல்......இந்தப் பாதகியால்.

தே: ஆமாம். (வெறுப்புடன் கூறுகிருர்)

சொ: (திகைக்கிருள், தேவர் பேச்சுக் கேட்டு) என்ன? என்னுலா? உங்கள் வாயால் அப்படிச் சொல்லாதீர். நான் எவ்வளவோ தடுத்தேன், பொறிபறக்கப் பேசினேன், நீங்கள் தானே அழுது நின்றீர்.

தே: எனக்குச் சபலம் பிறந்தது, மயங்கினேன். அவ்வளவு சம்பத்துடன் அவன் உன்னை வைத்திருக்கும்போது, உனக்கு எப்படியடி துரோக சிந்தனை ஏற்பட்டது?

சொ: (பதைபதைத்து) ஈஸ்வரா! என்னை நீங்களுமா நிந்திக்கவேண்டும்? உங்களால் நான் இந்தக் கதியானேன்! நடுநசியில் மாளிகையிலிருந்து விரட்டப்படுகிறேன். நான் அதைப்பற்றிக் கொஞ்சம்கூடப் பொருட்படுத்தவில்லை.........

தே: ஏன் பொருட்படுத்தப் போகிருய்? அவன் போனல் இவன் என்று தீர்மானித்து விட்டாய். அவ்வளவு தானே உனக்கு.

[ சொர்ணம் தலையில் அடித்துக்கொண்டு ]

சொ: **தெய்வமே! தெய்வமே!**

[ தேவர் வேகமாகப் போகிருர்......சொர்ணம் பின் தொடர்கிருள் ]

சொ: என் கதி என்ன்? ஐயோ! என்னைக் கைவிடாதீர். போகாதீர்.

தே: சொர்ணம் என் கோபத்தை அதிகப்படுத்தாதே. அழகான நிலவு! நீயோ எனக்குப் பால்ய சிநேகம்! மேலும் ஒருவனுடைய வைப்பாக இருப்பவள். அந்த நிலையில் ஏதோ உன்னிடம் சரசமாடும் சபலம் பிறந்தது. போராத வேளை, அவன் பார்த்துவிட்டான். அதற்கு நான் என்ன செய்வது? நானும்தான் அடிபட்டேன். நடக்கக்கூட முடியவில்லை.

சொ: என்னைக் காப்பாற்ற முடியாது! அவ்வளவு தானே.

தே: என் மனைவி யார் தெரியுமா?

சொ: தெரியும். அழகி. பார்த்திருக்கிறேன் பவானியை.

தே: அந்த ஜெமீன் வீட்டுப் பெண்ணை மணந்துகொண்ட நான், உன்னேடு குடித்தனம் செய்தால், உலகம் என்ன சொல்லும்? மேலும் உன்னேடு நான் குடித்தனம் செய்தால் மிட்டாதாரன் என்னைச் சும்மா விடமாட்டான்.

சொ: பயம், போலி கௌரவம்! பழைய வியாதிதான்!

தே: சொர்ணம்! நீ பெரிய வாயாடியாகிவிட்டாய் இப்போது.

சொ: உங்களைப்போன்ற வஞ்சகர்கள் வதைத்ததால்! அன்பரே! என்னைக் கைவிடாதீர்! மயக்கமொழி பேசி என் மனதைக் கெடுத்துவிட்டு, என்னை மண்ணில் புரளும்படி விட்டு

விட்டுப் போகாதீர். உமது மாளிகையிலே வேண்டாம். ஒரு மாட்டுக்கொட்டகையில் இடம்கொடும், என்னை மட்டும் ஏற்றுக் கொள்ளும். மேலும் மேலும் பழி தேடிக்கொள்ளாதீர். நான் நம்பி மோசம் போனேன். என்னை மேலும் நாசம் செய்யாதீர்.

*[ காலில் விழ, தேவர் அவளை உதறித் தள்ளிவிட்டுப் போக, இந்தக் காட்சியைக் கொஞ்ச நேரமாக மறைந்திருந்து பார்த்துக்கொண்டிருந்த ஒரு தோட்ட வேலைக்காரன், பாய்ந்து சென்று தேவரின் கரத்தைப் பலமாகப் பிடித்து இழுத்து ]*

**தோட்:** மகா யோக்யண்டா நீ! ஒரு பெண்ணைக் கெடுத்துக் கீரை வழியாக்கிவிட்டு, குடும்பக் கௌரவம் குலப்பெருமை பேசி விட்டு, நம்பி வந்தவளை நடுராத்திரியிலே நடுத்தெருவிலே விட்டு விட்டுப் போகிறாயே? இதுதான் ஒரு ஆண் பிள்ளைக்கு அழகா?

**தே:** (எதிர்பாராத சம்பவத்தால் கொஞ்சம் அஞ்சி) அப்பா நான் கலியாணமானவன். மேலும் ஜெமீன் குடும்பம்.

**தோட்:** கலியாணமான உனக்கு கண்ட கண்ட பெண்கள் மேல் ஏன் கண் விழுகிறது? பெரிய ஜெமீன் குடும்பமோ! இருந்தால் என்ன? ஜெமீன்தாரன்கூட மனுஷ ஜாதிதானே........

**தே:** நீ யார்? இவள் பொருட்டு என்னிடம் வம்பு செய்ய?

**சொ:** யாரோ பாவம், நெஞ்சிலே கொஞ்சம் ஈரமுள்ளவன்.
**தோட்:** (தேவரைப் பார்த்து) நான் ஒரு அன்னக்காவடி. நீ இலட்சாதிபதியாக இரு. அதனாலே, என்ன வேண்டுமானாலும் செய்துவிடலாமா? சொல்லு நீயே.

**தே:** அப்பா! என் நிலைமை அப்படிப்பட்டது. என்னால் இவள் கஷ்டப்பட்டதால், நான் வேண்டுமானால், ஆயிரம் இரண்டாயிரம் பணம் கொடுத்துவிடுகிறேன்.........

**தோட்:** (கேலியாக சொர்ணத்தை நோக்கி) இன்னம் என்னம்மா குறை! பணம் கொடுக்கிறாராம் பணம்! பணம் ஒன்று தவிர வேறே என்ன இருக்கிறது இவனிடம், கொடுப்பதற்கு?

*[ தேவரைப் பார்த்து ]*

ஏ! நீ யாராகவேனும் இரு. என் கண்ணாலே இந்தப் பெண்ணின் கஷ்டத்தைப் பார்த்தான பிறகு, இதுக்கு ஒரு நல்ல கதி காட்டாத முன்பு, உன்னை நான் விடப்போவதில்லை.

**சொ :** (தோட்டக்காரனைப் பார்த்து) அப்பா! உனக்குக் கோடி புண்யம். இந்தப் பாவியால் நான் விபசாரியானேன்—கொஞ்ச நேரத்துக்கு முன்பு பஞ்சணையில் இருந்தேன்—அங்கு வந்து கெடுத்ததும் இந்தப் பாதகன்தான். நீ யாரோ, பாவம், நீ காட்டும் இரக்கத்திலே ஆயிரத்திலே ஒரு பங்குகூட இவனிடம் இல்லை.

**தோ :** (கேலியும் சோகமும் நிறைந்த குரலில்) எப்படியம்மா இருக்கும்! அதான் நிறையப் பணம் இருக்கு என்கிறனே! இரும்புப் பெட்டிக்கும் இருதயத்துக்கும் ஈஸ்வரன் சம்பந்தம் வைக்கிறது இல்லே அம்மா.

**சொ :** அப்பா! நீ குல தெய்வம்போலக் குறுக்கிட்டாய். நான் இனிக் கூலி வேலே செய்தாவது பிழைக்கிறேன். எனக்காகப் பரிந்துபேச உலகிலே ஒருவராவது முன் வந்தார்களே, அதுவே போதும். இவன் ஒழியட்டும், விட்டுவிடு

**தோட் :** அடடே! அது நடக்கிற காரியமா? பெரிய ஜெமீன் வீடு என்றுரே, அந்த இடத்து யோக்யதை, இலட்சணம், ஊராருக்குக் கொஞ்சம் தெரியணுமில்லே! நம்ம வீட்டுக்கு வாங்க. ஐயாவும் வருவாரு. இருந்து யோசனை செய்து பார்க்கட்டும்.

**தே :** நான் வர முடியாது.

**தோ :** ஏன்! நடக்க முடியலேயோ? ஐயாவைத் தூக்கிகிட்டுப் போகணும் போலிருககு. வாங்கய்யா, வாங்க. ஏழை முதுகிலே ஏறிச் சவாரி செய்து செய்து, பரம்பரைப் பரம்பரையாப் பழக்கப்பட்டுப் போச்சி! ஆனு இப்போ குதிரைகளெல்லாம் கொஞ்சம் இடக்கு செய்யுது. ஜாக்கிரதையா இருக்கணும். நட, நட, வகையாத்தான் வந்து மாட்டிக்கிட்டயே, ஏங்கிட்ட; விடுவேனு சும்மா! அதுவும் ஏழை, நானும் ஏழை ஜாதி, எப்படி அதை நடு ரோடிலே தேம்பத் தேம்ப விட்டு விட்டுப் போக முடியும்.

[ தேவரைப் பிடித்திழுக்க அவர் போகாமல் நின்று திமிருகிறுர். சொர்ணம் தோட்டக்காரன் கையைத் தொட்டு ]

**சொ :** வேண்டாம், விட்டுவிடப்பா! போகட்டும்.

**தோ :** திருடன் பிடிபட்டா, யாரு வீட்டிலே களவாடினுனே அவனே வந்து விட்டுவிடச் சொன்னுக்கூட போலீசார் விட மாட்டாங்க திருடனை. இந்தமாதிரி ஆசாமிகளைக் கண்டா நான் விடற வழக்கமே கிடையாதும்மா. நீ சும்மா இரு, வருவாரு.

[ தேவரைப் பார்த்து ]

வாங்கய்யா! வாங்க! சும்மா வாங்க.

[ இழுக்க இழுக்கத் தேவர் திமிரிக்கொண்டு இருக்கவே கோபம்கொண்டு ]

அடே! வாடா, மகா பெரிய யோக்யன்! நாலு நாழியாக் கூப்படறேன், என்னமோ ராங்கி காட்டறே நம்பகிட்ட.

[ தேவரைப் பற பறவென்று இழுத்துச் செல்லுகிருன் ]

## காட்சி 22

இடம்: தோட்டக்காரன் வீடு,

இருப்போர் :—தோட்டக்காரன், தேவர், சொர்ணம்.

[ மூவரும் வீட்டுக்குள் வந்தபிறகு, ஒரு கை ஒடிந்த நாற்காலியைத் தூக்கிப் போட்டு, தேவரை உட்காரும்படி ஜாடை காட்டிவிட்டு, ஒரு பழைய பாயை விரித்து, சொர்ணத்தை உட்காரச் சொல்லிவிட்டு, தோட்டக்காரன் ஒரு செம்பிலே தண்ணீர் கொண்டுவந்து ]

தோ: (சொர்ணத்தைப் பார்த்து) ஏம்மா! தண்ணி வேணுமா?

(தேவரைப் பார்த்து) ஐயாவுக்குப் பாலுகீலு வேணும். ஏழை வீடு, இங்கே ஏது?

(சொர்ணத்தை பார்த்து) இந்த ஐயாமாருக குணமெல்லாம் நமக்கு ரொம்ப பழக்கம்.

[ தேவர் வலியால் கூச்சலிடுகிருர் ]

தே: ஐயோ! அம்மா!

தோ: ஏன்? என்ன? ஏன் ஐயாவையும் அம்மாவையும் கூப்பிடறே!

தே: (கஷ்டத்துடன்) மாரெல்லாம் வலிக்குது. மயக்கமா இருக்குது! மூச்சு என்னமோ திணறுது.

[ துடிக்கிருர் ]

தோ : நெஜமா? பாசாங்கா?

[ தேவர் துடிக்கக் கண்டு, தோட்டக்காரன் உள்ளே போய் ஒரு கயிற்றுக் கட்டிலைத் தூக்கிவந்து போட்டு அதன்மேல் ஒரு விரிப்பும் போட்டு ]

இதுமேலே படுத்துக்கொள். என்னடா இது தர்மசங்கடமா போச்சு!

(சொர்ணத்தைப் பார்த்து) ஏம்மா! உள்ளே போயிக் கொஞ்சம் வெந்நீர் போட்டு ஒத்தடம் கொடு. நான் போயி, பக்கத்திலே ஒரு வைத்யரு இருக்காரு, அவரை அழைச்சிக்கிட்டு வாரேன்.

உள்ளே போயி அடுப்பு மூட்டும்மா, யாருமில்லை, நானு ஒண்டி கட்டே. போயி வைத்யரே அழைச்சிக்கிட்டு வாரேன். அந்தப் பாவி எங்கே குடிச்சிப்போட்டு ஆடிகிட்டு இருக்கிறானோ.

[ போகிறான் ]

## காட்சி 23

இடம் :—வைத்தியர் வீடு.

இருப்போர் :—வைத்தியர், அவர் மனைவி.

[ வைத்தியர் இருமல் நோயால் கஷ்டப்படுகிறார். அவர் மனைவி பக்கத்தில் இருந்து கொண்டு பேசுகிறாள். ]

ம : இருமி இருமி, அண்டை பக்கத்தைக்கூடத் தூங்க விடாதிங்க. பாழாப்போன சாராயத்தைக் குடிச்சிப்போட்டுத்தான் குடலே வெந்து கிடக்குதே.

வை : சீ! கழுதேமுண்டே.

ம : அட உன் மண்டையிலே ஏதாச்சும் மூளை கீளை இருக்குதா? கல்லாட்டமா பக்கத்திலே புருஷண்ணு உட்கார்ந்துகிட்டு, என்னைப் போயி முண்டேன்னு சொல்லறயே? உன் புத்தியிருக்கிற லட்சணத்தைப் பாரு.

[ உள்ளேவரும் தோட்டக்காரனைப் பார்த்து ]

வை : யாரு ?

தோ : நான்தான், வேலன்.

வை : ஏம்பா ! என்ன சமாசாரம். (இருமுகிறார்)

தோ : ரொம்ப இருமறீங்களே ! காய்ச்சலோ.

வை : அதெல்லாம் இல்லேபோ ! காச்சல் கீச்சல் வந்தா நம்மகிட்ட என்ன, மருந்துக்கா பஞ்சம் ! தண்ணி சாப்பிட்டேன், புறை ஏறிப்போச்சு (இருமுகிறார்) தண்ணி சாப்பிடுகிறபோது இவ என்னமோ பேசிச் சிரிப்புக் காட்டிவிட்டா (இருமுகிறான்) அது கடக்குது கழுதே ! ஒரே பொட்டலத்திலே ஓடிப்போகும். நீ என்ன வேலையா வந்தே.

தோ : நம்ம மச்சான், வீட்டிலே வந்திருக்கிறாரு ; மார் வலின்னு துடிக்கிறாரு.

வை : (எழுந்து தலையிலே பாகையை வைத்துக்கொண்டு, புறப்படுகிறார்)

அது கடக்குது கழுதே ! ஒருவேளை கஷாயத்திலேயே ஓடிப் போகும் வா !

[ இருவரும் கிளம்புகின்றனர் ]

## காட்சி 24

இடம் :— தோட்டக்காரன் வீடு.

இருப்போர் : தேவர், சொர்ணம், வைத்தியர், தோட்டக்காரன்.

[ வைத்தியர் வருகிறபோது தேவருக்கு வெந்நீர் ஒத்தடம் கொடுத்துக் கொண்டிருக்கிறாள் சொர்ணம். வைத்தியர் கைபார்த்துவிட்டு, உடம்பிலே பல இடங்களில் அடிபட்டிருப்பதையும் பார்த்து விட்டு, தோட்டக்காரனைப் பார்த்துக் கூறுகிறார் ]

வை : ஏம்பா ! சமாசாரம் வேறேயா இல்ல இருக்கு. மார்வலி நோவாலே ஏற்பட்டதில்லே. ஆசாமியை எங்கேயோ சரியாக் குமிறிப்பூட்டாங்கப்போல இருக்கே.

தோ : அப்படின்னு ?

வை: அட, எங்கேயோ அடிஅடின்னு அடிச்சிருக்காங்க. மேல் காயத்தைவிட உள் காயம் அதிகம். கவனிக்காமே விட்டு விட்டா உள்காயம் ரொம்ப ஆபத்தாச்சே.

தோ: சரி. அதுக்கு என்ன செய்யணுமோ செய்யுங்க.

வை: கைகால் பிசகி இருக்குமோ?

[தேவரின் கைகாலை நீட்டியும் மடக்கியும் பார்க்கிறான். தேவர் வலி தாளாது கூச்ச லிடுகிறார்]

நினைச்சாப்போலத்தான் இருக்கு. கால்பூட்டு கொஞ்சம் விலகி இருக்கு.

தோ: ஆமாம்! நடக்கக்கூட முடியாதுன்னு சொன்னான்.

சொ: நொண்டி நொண்டித்தான் நடந்தாரு.

வை: அது கடக்குது கழுதே! மூணு நாள் பச்சிலைக் கட்டிலே பறந்து போவுது போ.

சொ: மூணு நாளாவுமா?

வை: அட, இன்னக்கி ஜுரம் வந்திடுச்சேல்லோ?

[சொர்ணம் தேவரைத் தொட்டுப் பார்த்து]

ஆமாம், நெருப்பாட்டம் இருக்கே!

[வைத்தியரும் தொட்டுப் பார்த்து]

ஜுரந்தான்! அலட்டுமேலே வந்த ஜுரம். அது கடக்கு கழுதே! அதுக்கு ஒரு மாத்திரை தரேன், சொல்லாமே ஓடிப் போவும். அப்பாலே மூணு நாலு நாள் பச்சிலை கட்டினா, ஆளு பழையபடி நடக்கலாம். வாப்பேன், மாத்திரையும், கொஞ்சம் தைலமும், தர்ரேன்.

[போக எழுந்திருக்கிறான்]

சொ: மேல் காயத்துக்குக்கூட..........

வை: அனுப்பறேன். உம்! நம்மகிட்ட இருக்கிற பஸ் பத்துக்கும் மாத்திரைக்கும் தைலத்துக்கும், நாம்பளும் கொஞ் சம் வெள்ளைக்காரன் பாஷையைப் படிச்சிக்கிட்டு, கோட்டு கீட்டு மாட்டிக்கிட்டா, பெரிய டாக்டருதான்! இப்ப யாருக்குத் தெரியுது தமிழ் வைத்யருடைய பெருமை? தமிழ் வைத்யம்னா கிள்ளுக்கீரையா நினைக்கிறுங்க. (இருவரும் போகின்றனர்.)

[அவர்கள் போனபிறகு சொர்ணம், தேவ ரைக் குலுக்கி எழுப்பி]

சொ: இதோ பாருங்கோ! ஏன் இப்படி வேஷம் போடறிங்க.

தே: (களைப்புடன்) ஐயோ! வேஷமில்லையே! அப்பா! அம்மா!

சொ: நிஜமோ, பாசாங்கோ தெரியலை; வேணுமானு எழுந்து போய்விடுங்க அவன் வருவதற்குள்ளே! நான் எக்கேடோ கெட்டுப் போகிறேன்.

தே: ஐயோ! என்னாலே முடியாதே...அம்மா!

[மயக்கமடைகிருர்]

சொ: பாவம்! நிஜமாகவே தான் ஜுரம். பொழுது விடியட்டும் பார்ப்போம்.

[தேவரை எழுப்பி உட்காரச்சொல்லி கொஞ்சம் வெந்நீர் சாப்பிடச் சொல்கிருள்]

கொஞ்சம் வெந்நீர் குடியுங்க, நெஞ்சு உலர்ந்து போகுமே.

[தேவரால் உட்கார்ந்திருக்க முடியவில்லை. வெந்நீர் குடிக்கப் பாத்திரத்தை எடுக்கும்போது, கை உதறுகிறது. சொர்ணம், தேவர் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு, வெந்நீரைக் குடிப்பாட்டு கிருள். பாதியிலே பாத்திரம் அவள்மீது வீழ்ந்து, சேலை நனைந்து விடுகிறது. தேவர் அதற்குள் மயக்கமடைகிருர்; அப்படியே சொர்ணத்தின் மேல் சாய்கிருர். மெள்ள அவரைப் படுக்க வைத்துவிட்டு உடம்பின் மேலே ஒரு போர்வையை மூடுகிருள். தலைவலி என்று ஜாடை காட்டுகிருர் தேவர். சொர்ணம் தலைமாட்டுப்பக்கம் அமர்ந்து தலையை அமுக்கு கிருள்.

தோட்டக்காரன் வருகிருன். மருந்தைக் கொடுக் கிருன்]

ஏம்மா! இதோ பாரு. மருந்துகொடு. கதவைத் தாள் போட்டு கிட்டு படுத்துக்கோ. காலையிலே எழுந்ததும், கஞ்சி போட்டுக்கோ. நீயும் சமைச்சிச் சாப்பிடு. சாமானெல்லாம் இருக்கு.

சொ: ஏண்ணு! எங்கே போறிங்க இந்நேரத்திலே.

தோ: நேரம்னு ஒண்ணு இருக்கா நமக்கெல்லாம். நான் இங்கே ஒரு பெரிய வியாபாரி வீட்டிலே வேலைக்கு இருக்கறேன். வீடா அது, அரமனைதான். அங்கே எப்பவும் வேலை இருக்கும்.

என் சம்சாரம் போன வருஷம் அம்மைவந்து போயிடுச்சி. நான் ஒண்டிகட்டே. அதாலே, இங்கே ஒரு வேளை, அரமனையிலே ஒரு வேளை, இப்படிச் சமயம்போலச் சாப்பாடு நடந்துவிடும்.

சொ: பெரிய பணக்காரர் வீட்டிலே வேலையா உனக்கு.

தோ: இல்லாவிட்டா இவங்க கொணுதிசயமெல்லாம் எப்படித் தெரியும் நமக்கு.

சொ: காலையிலே வந்துவிடுவாயா?

தோ: வாரேன். ஆனு நாளைக்கு என்னமோ விசேஷமாம் அரமனையிலே. அதாலே அங்கேயே இருந்துட்டாலும் இருந்துடுவேன். உனக்கென்ன பயமா?

சொ: அதெல்லாம் இல்லே, நீ அங்கேயே இருக்க வேணும்னு, நான் வேணும்னு சாப்பாடு எடுத்துகிட்டு வாரேன், இடத்தைச் சொன்னு.

தோ: பைத்யக்காரப் புள்ளெமா நீ! அரமனையிலேதான் நாளைக்கு விருந்தாச்சே. விசேஷம்னு என்னு, விருந்துதானே! சாப்பாடு அங்கேயே கிடைக்கும். நீ படுத்துக்கோம்மா. நான் போயி வாரேன்.

[ போகிருன் ]

## காட்சி 25

இடம்: பாதை.

பாத்திரம்: தோட்டக்காரன்.

[ தோட்டக்காரன் போகிருன், மெள்ள ஒரு கிராமியப் பாட்டு பாடிக்கொண்டு ]

## காட்சி 26

இடம்: மாளிகைத் தோட்டம்.

பாத்திரம்: தோட்டக்காரன்.

[ பாடிக்கொண்டே உள்ளே நுழைந்து, ஒரு மரத்தடியில் படுக்கிருன்......தூக்கம் ]

# காட்சி 27

இடம்: மாளிகை உட்புறம்.

பாத்திரம்: சீமான் செட்டியார், வேலையாள், நண்பர்கள், (பிறகு) குத்தகைக்கார கோவிந்தன்.

*[சீமான் சிங்காரித்துக்கொண்டிருக்கிறார். நண்பரும் வேலையாளும் ஓடி ஆடி வேலை செய்கிறார்கள்.]*

*சீ:* (நண்பனைப் பார்த்து) ஆமாம்! கச்சேரி, நன்றாக இருக்குமா?

நண்: அருமையாக இருக்கும். விலாசனி பாட்டிலே இருக்கும் விசேஷம் என்ன தெரியுமோ? மற்றவர்கள் பாடுவார்கள், அவ்வளவோடு சரி; இவ பாடும்போது, அந்த முகபாவம் இருக்கு பாருங்கோ,

"முருக னென்றதுமே—எனக்கோர்
மோகம் பிறக்குதம்மா!"

என்று பாடுவா. அப்போ, மோகம்னு சொல்லுகிறபோது, மோகமேதான். அம்மா என்கிறபோது, அம்மா எதிரே வந்து நிற்பது போலத்தான் இருக்கும்.

*[நண்பன் அபிநயத்துடன் பாடிக் காட்டுகிறான்.]*

அதை நான் சொன்னால் புரியாது. நீங்க பார்க்கவேணும், பிறகு......

*சீ:* அப்படியா?

ந: பாட்டுக்கு இடையிடையே ஒரு மோகனப் புன்னகை சிரிப்பு......

*சீ:* புன்சிரிப்பா!

ந: ஆளை அந்தப் புன்சிரிப்பு என்ன செய்துவிடுது என்கிறீங்க. அவ, கல்யாணியில் ஆரம்பித்துக் காம்போதியில் போய்த்தான் முடிக்கட்டுமே, பெரிய வித்வான்கூட, அதைக் குற்றம்னு சொல்லமாட்டான். அவளேகூட, இராகம் தவறி விட்டதுன்னு சொல்லட்டும், அந்த மகா வித்வான், அடடா! இராகமாகவது தவறுவதாவது! நீங்க பாடினது அபூர்வமான முறை அல்லவா! மற்றதுகள், ஏற்கெனவே பாடாந்திரமான இராகங்களைப் பாடுகிறதுகள். ஒரு புது இராகமே அல்லவா நீங்க உற்பத்தி செய்துவிட்டீர்கள்—என்று புகழ்வான்; எல்லாம் அந்த மோகனப் புன்னகைக்குத்தான்.

*சீ :* அதனுலேதான் அந்தப் பயல், அவளுக்கு ஆயிரம் ஆயிரமாகக் கொட்டித் தருகிருன்.

ந : தந்து என்ன கண்டான்? குட்டி இங்கே வரப் போகிருள். பிறகு......ஒரு தடவை தங்களைக் கண்டா போதாதோ? பிறகு அவளை அவன் ஆயிரம் நமஸ்காரம் செய்து அழைத்தாலும் போவாளோ?

[ வேலையாள் அடக்கமாக நின்றுகொண்டு ]

**வே :** கோனுரு வந்திருக்காரு.

*சீ :* யாரு? கோவிந்தனு?

**வே :** ஆமாங்க.

*சீ :* அதைத்தான் கோநாரு, வந்தாரு,ன்னு 'ரு' போடறியா 'ரு'. போய் வரச் சொல்லு.

[ வேலையாள் போய்க் கோவிந்தனை வரச் சொல்கிருன்.]

கோவிந்தன் ஒருபுறமாக வந்து நிற்கிருன்—இடுப்பின்மேல் வேட்டியைக் கட்டிக்கொண்டு. சீமான், அவனைக் கவனிக்காமல் தன் அலங்கார வேலையிலேயே இருக்கிருர்.]

*சீ :* (நண்பனைப் பார்த்து) எப்படி இருக்கு?

[ கோவிந்தன், தன்னிடம்தான் சீமான் பேசுகிருர் என்று எண்ணிக்கொண்டு ]

**கோ :** பயிருங்களா?

*சீ :* (கோபத்துடன் குத்தகைக்காரனைப் பார்த்து) உன்னை யாடா இப்போ பேசச் சொன்னது. பயிரு கதை பேச வந்து விட்டாயோ, மகா யோக்யன்போல்.

[நண்பனைப் பார்த்து, தன் கரத்தைக் காட்டி]

எப்படி இருக்கு இந்த ரிஸ்ட் வாட்ச்!

ந : பேஷா இருக்கு. ஆனு ஆலந்தூர் நாயுடு.................

*சீ :* அவனிடம் இருக்கிற ரிஸ்ட் வாச், ரொம்ப அம்பக்கய்யா. இரண்டும் ஒரே மேக்தான். ஆனு கம்பெனியிலே, கொஞ்சம் கெட்டுப்போனதை அவனிடம் தள்ளிவிட்டு, முதல்தரமானதை நம்மிடம் கொடுத்தார்கள், விலை என்ன சாமான்யமா? 500 ரூபாய்.

[காதிலே வைத்துப் பார்க்கிறர். ஆட்டிவிட்டு மறு படியும் பார்க்கிறர்.]

ந: ஏன் ஓடலியா?

சீ: ஓடுதே! (மறுபடி பார்த்து) சாவி கொடுக்கலேயா? ஓடுதே! டேய்! ஓடிப்போய் அம்மாவைக் கேள், சாவி கொடுத் தாங்களா இல்லேயான்னு.

வே: சின்ன அம்மாவையா, பெரிய அம்மாவையா?

சீ: பெரிய அம்மாதானே சாவி கொடுக்கற வழக்கம். கொடுத்தாங்களான்னு சின்ன அம்மாவைப் போய்க் கேள்.

[கோவிந்தனேப் பார்த்து]

சரி! கோவிந்தா. என்ன சேதி, சொல்லி அழு.

கோ: அதாங்க, வயல் வறண்டு போச்சிங்க. இந்த வருஷம் ஏதாச்சும் தள்ளிக் கொடுத்தாத்தான் நான் தலேதூக்க முடியும்...

சீ: நீ பெரிய அயோக்யன்னு எனக்குத் தெரியுமே! பஞ்சப் பாட்டு பாடவந்துட்டயோ. வயல் காஞ்சா எனக்கென்ன? விளேஞ்சா எனக்கென்ன.

[நண்பனேப் பார்த்து]

கேளய்யா, அவன் சொல்ற கதையே. வயிறு எறியுது! பய எப்பவும் இதே சேதிதான். ஒருநாளாவது நிம்மதியான பேச்சு கிடையாது.

ந: (கோவிந்தனேப் பார்த்து) ஏம்பா, அவரைக் கஷ்டப் படுத்தறே.

கோ: (நண்பனேப் பார்த்து) என்னுங்க, நீங்கதான் சொல்லுங்களேன். மழை அடியோடு ஏறக்கட்டிடுத்தே, நான் என்னச் செய்யறதுங்க.

ந: ஆமாம்! மழைதான் இல்லாமே போச்சு.

சீ: மழை இல்லாவிட்டா என்ன? கிணறு எங்கே போச்சு. காலா காலத்திலே வயலுக்குச் செய்யவேண்டிய வேலேயைச் செய்யவேணும்னு யாரப்பா இவன் கையைப் பிடிச்சிக்கிட்டாங்க.

கோவிந்தா! இதோ பாரு! ஒரு ரூபாகூடத் தள்ளிக்கொடுக்க முடியாது. நமக்கு இந்த வருஷம் செலவுமேலே செலவு. இருக் கறதைக் கொடுத்துவிட்டு, மிச்சத்துக்கு ஒரு அண்டிமாண்டு எழுதிக் கொடுத்துவிட்டுப் போ.

[கோவிந்தன் நிற்கிறுன். சீமான், போகும்படி கைகாட்டு கிறுர் அலட்சியமாக. அவன் போய்விடுகிறுன்.]

ந: நிலம் வைச்சிக்கிட்டு இருக்கறதுன்னுலே இப்படித் தானுங்க தொல்லே.

சீ: ஆமாம்! அதெல்லாம், அவனுங்க, கையைப் பிசை வான்க, கண்ணேக் கசக்குவானுக, கொஞ்சம் சரின்னேம், போச்சு நம்ம அந்தஸ்தே போயிடும். இப்ப பணத்தைச் சேத்து நான் என்ன சாப்பிட்டுவிடவா போகிறேன். எவ்வளவு தான் தருமம் கோயில் காரியம்.

ந: ஆமாம், ஆமாம்!

சீ: போன மாதம் தெரியுமா? புவனேஸ்வரி கோயில் இருக்கு பார். அதுக்கு இதுவரை தாசியே கிடையாது. அவளுக்குக் ஏதாவது கோயில் மானியம் விட்டாத்தானே வருவா. இல்லே? என்னிடம் குருக்கள் நடையா நடந்தாரு, அந்தப் பெண்ணும் வந்திருந்தா. சரின்னு, கோயில் மானியமாக ஒரு வேலி கொடுத்தேன். அவளுக்குப் பொட்டு கட்டியாச்சி. இப்படி எவ்வளவோ செலவு.

இந்த விலாசனி பாட்டு......? அந்த ஜெகவீரன், இவளே யாரும் பார்க்காதபடி, ஒரு மாளிகையிலே வைத்திருக்கிறுன். இப்போ, அவனே அவளே அழைத்துவரப் போகிறுன். ஏன்? சும்மாவா? அவன் தரவேண்டிய கடனேத் தள்ளிவிடுவதாக ஒப்புக்கொண்டு விட்டேன்.

(டே! மோட்டார் சத்தம் கேட்கிறது. ஓடு! ஓடு! சீக்கிரம்! அவர்கள்தான்!)

[வேலேயாள் ஓடுகிறுன். சீமான் ஆடையைச் சரிப்படுத்திக்கொள்கிறுர். நண்பன், ஆசனங் களே அவசரமாகச் சரிப்படுத்துகிறுன்.

ஜெகவீரனும் விலாசனியும் வருகிறுர்கள். விலாசனி நமஸ்கரிக்கிறுள். சீமான் சொக்கி விடுகிறுர். வேலேயாள் காப்பி கொண்டு வந்து வைக்கிறுன். சீமான் காரணமில்லாமல் சிரிக் கிறுர். ஜெகவீரனே, அமோகமாக உபசரிக்கிறுர். வேலேயாளே அதிகாரம் செய்கிறுர். சந்தோஷத் தால் சீமான் தலேகால் தெரியாமல் ஆடுகிறுர். தோட்டக்காரன் அங்கே வருகிறுன்...விலாசனி, பாட ஆரம்பிக்கிறுள். தோட்டக்காரன் வெளியே புறப்படுகிறுன்.]

## காட்சி 28

இடம் :—தோட்டக்காரன் வீடு.

இருப்போர் :—தேவர், சொர்ணம், தோட்டக்காரன்.

[தேவர் கொஞ்சம் தெளிவுடன் இருக்கிருர். சொர்ணம் வீட்டு வேலைகளைக் கவனித்துக் கொண்டிருக்கிருள். தோட்டக்காரன் ஒரு பொட்டலத்துடன் வந்து சேருகிருன். சொர்ணத்திடம் பொட்டலத்தைக் கொடுத்து.]

தோ: சாப்பிடம்மா! சாப்பிடு! அரமனை பலகாரம் அருமையா இருக்கும்.

[சொர்ணம் பொட்டலத்தைப் பிரித்து, பலகாரத்தைத் தோட்டகாரனுக்குத் தர, அவன் வாங்கிச் சாப்பிட்டுக்கொண்டே.]

நான் அங்கேயே சாப்பிட்டுவிட்டுதான் வந்தேன். நீ சாப்பிடு. இதெல்லாம் நமக்கு எப்போதுமா கிடைக்கும்? சாப்பிடு.

சொ: அரமனையிலே, விருந்து பலமா?

தோ: பலத்துக்கு என்ன குறைவு? எங்க எஜமானரு இந்த வருஷம் கலர் வியாபாரத்திலே மட்டும் ஆறு லட்சம் அடிச்சாரு லாபம்.

சொ: அம்மாடி! ஆறு லட்சமா?

தோ: ஆமாம்! ஆனை வாகன உற்சவம், இந்த வருஷம் அவருதானே நடத்திருரு. ஐஞ்சி ருவா வர்ணப்பெட்டி எழுவது ரூபாய்க்கு வித்தாரில்லே, ரொம்ப சாமத்தியக்காரரு.

சொ: அப்படியா?

தோ: இவரு சொல்ருரே.

[தேவரைக் காட்டி.]

யாராரோ ஜெமீன்தாருங்கன்னு. அவங்க எல்லாம், நம்ம எஜமானருகிட்ட ஒண்ணும் செய்திக்க முடியாது. ஆமா! ரொம்பப் பேரு அவருக்கிட்ட கடன் வாங்கினவங்கத்தான். இப்ப, அரமனையிலே ஒரு ஜெமீன்தாரன்தான் கடக்கருன். பாட்டுக் கச்சேரிக்குக்கூட ஒருத்தியைக் கூடவே கூட்டிகிட்டு வந்திருக்கிருன்.

சொ: யாரு அவ?

தோ: ரொம்ப ஒழுங்காத்தான் இருக்கு. ஆனு, எங்க எஜமானரு இருக்காரே, அவர் பக்கா, இந்த மாதிரி விஷயத்திலே. வந்திருக்கிறவளும், ரொம்ப வெட்கப்படுகிற மாதிரியும் காட்டிக்கிரு. ஆனு அவதான் எங்க எஜமானருக்குக் காப்பி ஊத்திக் குடுக்கரு?

சொ: அம்மா! ரொம்பக் கெட்டிக்காரிதான் போலிருக்கு.

தோ: அவரு, அதைக் காப்பின்னு நினேச்சா குடிச்சாரு! என்னமோ கதையிலே சொல்வாங்களே தேவாம்ருதம்னு, அதுன்னு நினேச்சிக்கிட்டுக் குடிச்சாரு.

அது கிடக்குது. (தேவரைக் காட்டி) ஐயா என்ன சொன்னரு?

சொ: ஜுரம் இல்லே இப்போ.

தோ: அட அதெ இல்லேம்மா! உன் விஷயமாக என்ன சொன்னரு?

சொ: நான் அந்த எண்ணத்தையே விட்டுவிட்டேனே! அவரு உடம்பு சொஸ்தமானதும், மகராஜனகப் போகட்டும் வீட்டுக்கு. நான், இங்கேயே இருந்து உனக்கு சமைச்சிப் போட்டுகிட்டு இருக்கிறேன்.

தோ: என்னம்மா இது! உனக்குக் குழந்தை குட்டி......

சொ: (கண்களைத் துடைத்துக்கொண்டு) ஒரே ஒரு மகன். எல்லாம் இவராட்டமேதான் இருப்பான்.

தோ: எங்கே இருக்கிருன்?

சொ: ரெபர்மடரி ஸ்கூலிலே.

[தேவர் திடுக்கிடுகிருர்]

தோ: அப்படின்ன என்ன?

சொ: சிறு பிள்ளேக திருடின, அதுகளைப் பிடிச்சி, மூணு வருஷம் ஐந்து வருஷம்னு தண்டிச்சி ஒரு பள்ளிக்கூடத்திலே மடக்கிப் போட்டு வைப்பாங்க. ரத்னம், அந்தப் பள்ளிக் கூடத்திலேதான் இருக்கிருன்.

[தேவர் முகத்தைக் கைகளால் மூடிக் கொள்கிருர்.]

தோ: அவங்க அப்பன் ஜெமீன் வீடு, அவன் ஜெயிலிலே. ஒழுங்காத்தான் இருக்குது. சரிம்மா நான் போயிட்டு வாரேன். அங்கே பாட்டுக் கச்சேரி நடந்துகொண்டிருக்கும்.

சொ: ஏண்ணு! சமயல் செய்தாச்சி! இவருக்கும் கஞ்சி கொடுத்தாச்சி. எனக்கு பாட்டு கேட்கறதுன்னு ரொம்பப் பிரியம். நானும் வரட்டுமா?

தோ: வாயேன்! தோட்டத்துப் பக்கமா இருந்து பார்க்கலாம். வா.

[இருவரும் போகின்றனர்]

## காட்சி 29

இடம்:—சீமான் மாளிகை.

இருப்போர்:—ஜெகவீரன், விலாசனி, சீமான், நண்பர் இருவர்.

[விலாசனி பாடுகிருள். நண்பர்கள் தாம்பூலம் போட்டுக்கொள்ளுகின்றனர். ஜெகவீரன், சிகரெட் பிடிக்கிருன், சீமான், ஆனந்த பரவசமாகி இருக்கிருர். பாட்டு முடிகிறது. விலாசனி முகத்தில் ஒழுகும் வியர்வையைத் துடைத்துக் கொள்கிருள்.]

## காட்சி 30

இடம்:—சீமான் மாளிகைத் தோட்டம்.

இருப்போர்:—தோட்டக்காரன், சொர்ணம்.

[சொர்ணம், ஒரு ஜன்னல் வழியாகப் பார்க்கிருள், கச்சேரி செய்பவளை திகைத்துப் போய், தோட்டக்காரனை அழைத்து.]

சொ: பாடுகிறவ பேர் என்ன சொன்னுர்கள்?

தோ: என்னமோ விலாசனியாம்.

சொ: கூட இருக்கிறவரு?

தோ: அவர்தான் ஜெமீன்தாரர் ஜெகவீரர்.

சொ: அவருக்கு இவ என்ன வேணும்?

தோ: அவளை அவரு வைச்சிகிட்டு இருக்காராம்.

சொ: அட பாதகா! அப்படியா சொன்னான்? அவள் எப்படிச் சகித்துக் கொண்டாள், அந்த இழிவுக்கு. செ! இதோ வருகிறேன் இரு.

[வீடு நோக்கி ஓடுகிறாள்.]

## காட்சி 31

இடம் :—தோட்டக்காரன் வீடு.

இருப்போர் :—தேவர், சொர்ணம்.

[தூங்கிக்கொண்டிருக்கும் தேவரைத் தட்டி எழுப்புகிறாள் சொர்ணம். அவர் கண் விழித்ததும், ஆத்திரத்துடன்]

சொ: பெரிய குடும்பம்! கௌரவம்! அந்தஸ்து! ஜெமீன் வீடு! ஜெமீன்தாரர் வீட்டு மருமகப்பிள்ளை அல்லவா!

தே: சொர்ணம்! என்ன இப்படிப் படுக்கையிலிருந்து எழுப்பி ஏசுகிறாயே. நான் பட்டதெல்லாம் போதாதா?

சொ: சொர்ணத்தோடு வாழ்வது என்றால் தலை இறக்கம், அவமானமாக இருக்கும், அந்தஸ்து கெட்டுவிடும். உள்ளே புகுந்து பார்த்தால்தானே தெரியும் யோக்யதை.

தே: என்ன சொர்ணம்! வெறிபிடித்தவள் போலக் கூச்ச லிடுகிறாயே!

சொ: (பதைபதைத்து) உன்னாலே, தள்ளாடி நடந்து வர முடிந்தால்கூடப் போதும். உன் கண்ணாலேயே பார்க்கலாம் பெரிய இடத்து இலட்சணத்தை.

தே: (உட்கார்ந்துகொண்டு கவலையுடன்) என்ன அது? எதைப் பார்க்கவேண்டுமென்கிறாய் சொர்ணம்?

சொ: உங்கள் குடும்பத்திலே உள்ள ஊழலை.

தே: சொர்ணம்! அளவுமீறிப் போகிருயே.

சொ: நானல்ல! அளவுமீறிப் போய்விட்டது, உங்கள் குடும்ப ஊழல்.

தே: இது என்ன உளறல், ஊழலா?

சொ: உன் மனைவியின் யோக்யதையை.

[கூறிவிட்டு, மிரள மிரள விழிக்கிருள், ஆத்திரத்துடன். கண்களிலே நீர் கொப்பளிக்கிறது. தேவருக்கும் அந்தச் சொல்லைக் கேட்டதும் ஆத்திரம் பொங்குகிறது.]

தே: பவானி மீதா பழி சுமத்துகிருய்?

சொ: பவானி! பவானியும் ஒரு சொர்ணம்தான்!

[அதிகக் கோபமடைந்த தேவர், அருகே நின்றிருந்த சொர்ணத்தை எட்டி உதைக்கிருர்.]

தே: கழுதே! கொன்றுவிடுவேன், பவானியை! நாயே!

சொ: (தைரியமாக) வேதனைப்படு! ஆனுல் பொய்யல்ல நான் பேசுவது.

[துள்ளி எழுந்திருக்கிருர் தேவர். சொர்ணத்தின் தலை மயிரைப் பிடித்திழுத்துக் குலுக்கி.]

தே: புறப்படு! ருஜூ காட்டு! நாயே! உத்தமி பவானியையா கேவலமாகப் பேசுகிருய்?

சொ: வா!

[இருவரும் ஆவேசம் பிடித்தவர்கள் போலக் கிளம்புகின்றனர்.

தேவரால் சரியாக நடக்கமுடியவில்லை. காலைத் தேய்த்துத் தேய்த்து நடக்கவேண்டி இருக்கிறது. ஆத்திரம் அவருக்குப் புது சக்தி அளித்திருக்கிறது. சொர்ணம், தேவரின் கரத்தைப் பிடித்திழுக்கிருள். இருவரும் செல்கின்றனர்.]

## காட்சி 32

இடம் :—சீமான் மாளிகை.

இருப்போர் :—சீமான், ஜெகவீரன், விலாசனி,
நண்பர்கள்.

[விலாசனி, பாடி முடித்ததும், நண்பர்களும், சீமானும் "சபாஷ்" என்று புகழ்கிறார்கள்.]

ஒரு நண் : அருமை! அருமையான சங்கீதம். சாரீர சம்பத் அபாரம்!

மற்ற நண் : கலைவாணியேதான்!

[நண்பர்கள் விடைபெற்றுக்கொண்டு போகிறார்கள். ஜெகவீரரைப் பார்த்து, சீமான்.]

சீ : ஜெகவீரரே! உள்ளே போய், உம்முடைய கடன் பத்திரத்தில் பைசல் எழுதி எடுத்துக்கொண்டு வருகிறேன்.

[உள்ளே போகிறார்.]

ஜெ : விலாசனி!

விலா : போதும் உயிரை வாங்காதே. மானம் போகிறது!

ஜெ : நான் இருக்கிறேன் கவனித்துக்கொள்ள. முட்டாள் மயங்கியே விட்டான், தேனில் விழுந்த ஈ போல. உண்மையை அவன் கண்டுபிடிக்கிறான் என்றே வைத்துக்கொள், வெளியே சொல்லமுடியுமா? சொன்னால் யார் நம்புவார்கள்?

வி : ஈனத்தனமான காரியம் செய்யத் துணிந்து, அதற்கு என்னையும் உடந்தையாக்கிக் கொண்டாய்.

ஜெ : காட்டி மறைக்கிறேன், வேறென்ன! பத்திரம் கைக்கு வந்ததும், பயல் இளித்துக்கொண்டிருக்க வேண்டியது தான். விலாசனி மாயமாய் மறைவாள்! இந்தத் தந்திரம் செய்யா விட்டால், பயல், நமது சொத்தை ஏலத்துக்குக் கொண்டு வந்திருப்பான். இவன், இப்போது, நேற்று பணக்காரனானவன். பரம்பரை ஜெமீன் நம்முடையது. பகற் கொள்ளைக்காரன் போன்ற இவனிடம் அதை இழப்பதா? நமது கௌரவம் என்ன ஆவது?

வி : உன் வாயால் பேசாதே கௌரவத்தைப்பற்றி. சுயநலமே உனக்கு முக்கியம்.

ஜெ : தியாகவல்லி நீ! அதற்காகத் தலைவணங்குகிறேன்.

[ சீமான் வருகிருர். பத்திரத்தைக் கொடுத்து ]

சீ : திருப்திதானே !

ஜெ : ஆஹா ! விலாசனி, தோட்டத்தைச் சுற்றிப்பார்க்க ஆசைப்படுகிருள்.

[ சீமானைப் பார்த்து கண் ஜாடை காட்டுகிருன், ஜெகவீரன். ]

சீ : ஆஹா! அழைத்துக்கொண்டு போய்க்காட்டு, நமது தோட்டம் நாலு ஏகர் விஸ்தீரணம்.

[ ஜெகவீரன் காமிராவைக் காட்டி ]

நமக்கு இயற்கைக் காட்சிகளைப் படம்பிடிப்பது என்ருல் ரொம்பப் பிரியம்.

[ விலாசனியும் ஜெகவீரனும் போகின்றனர். ]

## காட்சி 33

இடம் :—சீமான் மாளிகைத் தோட்டம்.

இருப்போர் :—ஜெகவீரன், விலாசனி.

[ தோட்டத்தில் ஒரு மரத்தடியில் விலாசனி சோகமாக நிற்கிருள். ]

ஜெ : விலாசனி !

வி : இன்னமுமா விலாசனி ! என்னை விலாசனி என்று கூப்பிடும்போது எனக்கு எவ்வளவு வேதனை உண்டாகிறது தெரியுமா ?

ஜெ : இன்னம் இரண்டு மணிநேரம் ; பிறகு விலாசனி மறைவாள். இரு ! நான் சில காட்சிகளைப் படம் பிடித்துக் கொண்டு வருகிறேன்.

[ ஜெகவீரன் போகிருன்.

வேருேர் பக்கமிருந்து சொர்ணம், தேவரை இழுத்துக்கொண்டு வருகிருள். தொலைவிலே விலாசனியைக் கண்டதும் பதைபதைத்து ]

தே : ஆ! பவானி! நீயா—என்ன இது மூக்குக் கண்ணாடி, மாறு வேஷம்.

[ எதிர்பாராதவிதமாகத் தேவரைக் கண்ட பவானி அலறி ]

ப : ஐயோ மோசம் போனேன்.

[ பவானி, ஓட முயற்சிக்கிறாள். கால் நடுங்குகிறது. தேவர் ஓடிச்சென்று பவானியின் தோளைப் பிடித்துக் குலுக்குகிறார்.

பயத்தால் பவானியின் உடல் நடுங்குகிறது. முகம், வெளுத்துவிடுகிறது. ]

தே : எங்கே வந்தாய்? ஏன் வந்தாய்?

[ ஆவேசம் வந்தவர்போலக் கூச்சலிடுகிறார். ]

சொ : (கேலியும், கோபமும் கலந்த குரலில்) பவானி, இங்கே விலாசனியாக வந்திருக்கிறாள்; இலட்சாதிகாரிக்கு இன்பமூட்ட.

[ தேவர், சொர்ணத்தை அடிக்கக் கை ஓங்குகிறார். சொர்ணம் பயப்படாமல் ]

நான், சொர்ணம், கேவலம் விபசாரி. விலாசனியாக வந்தவள் தங்கள் தர்ம பத்தினி பவானிதேவி! அவளுடன் வந்திருப்பவர், ஜெகவீரர்—அண்ணன்—ஜெமீன்தாரன்—ஆனால் இங்கே, வெட்கம் மானமின்றி, சொந்தத் தங்கையைத் தன் வைப்பு என்று கூச்சமின்றிக் கூறினான். இங்கே உள்ள பண மூட்டைக்கு.

தே : பவானி! பவானி! இது என்ன விபரீதம்? ஏன் வந்தாய் இங்கே? ஏன்? ஏன்?

[பவானி திகைக்கிறாள். அவளுடைய கழுத்தை நெறிக்கிறார் தேவர், அவள் கூவுகிறாள். ஜெகவீரன் ஓடிவருகிறான். காட்சியைக் காண்கிறான். காமிரா ஒரு நிமிஷம் வேலை செய்கிறது. பவானி பிணமாகிறாள், சொர்ணம் ஓடி விடுகிறாள். ஜெகவீரன் பவானியைத் தொட்டுப் பார்த்து.]

ஜெ : விலாசனி மறைவாள் என்று நினைத்தேன், பவானியே இறந்துவிட்டாள்.

தே : இறந்துவிட்டாள்! பவானி இறந்துவிட்டாள்!

ஜெ: (கோபமாக) பவானியைக் கொன்றுவிட்டாய். கொலை செய்திருக்கிறாய்.

தே: ஆ! ஐய்யோ! கொலை! இதென்ன கோலம்! பவானி! பவானி! பிணம்! என் மனைவி! நான் கொன்றேன்.

ஜெகவீரா! ஏன் பவானியை இங்கே அழைத்து வந்தாய்? சொந்த தங்கையை, வேறோர் சீமானிடம்.........சரசமாட......... ஆஹா! சகிக்க முடியவில்லையே!!

ஜெ: முட்டாள்! என் கடனைத் தீர்த்துக்கொள்ள சிறு கபட நாடகமாடினேன். பவானியை, விலாசனி என்ற மாறு பெயருடன் இங்கே அழைத்து வந்தேன், பாட்டுக் கச்சேரிக்காக. நீ, படு கொலை, செய்துவிட்டாய். இதோ (காமிராவைக் காட்டி) படம் பிடித்திருக்கிறேன் பார்! உன்னை என்ன பாடு படுத்துகிறேன்.

தே: படுபாவி! மோசக்காரா!

ஜெ: வாயை மூடடா கொலைகாரா!

[தேவர் மயக்கமடைகிறார்.]

## காட்சி 34

இடம்:—தேவர் வீடு.

இருப்போர்:—தேவர், சேகர்.

[தேவர், பழைய நாள் படுகொலை பற்றிய தகவலைக் கூறி முடிக்கிறார்.]

தே: சேகர்! அத்தகைய கொலைகாரன் நான். பவானியைக் கொன்ற பாதகன். என் மகள் சுசிலாவுக்கு அப்போது பத்து வயது. பள்ளிக்கூடத்தில் இருந்தாள். தாயார் மாரடைப்பால் இறந்துவிட்டதாக அவளுக்குக் கூறப்பட்டது. இன்று வரையில் என் மகள், பவானி மாரடைப்பால் இறந்ததாகவே நம்புகிறாள். உலகமும் அப்படியே நம்புகிறது.

[தேவர் கண்களில் நீர் தளும்புகிறது.]

அண்ணன் பட்ட கடனைப் போக்க, அவன் கூறிய ஈனத்தனமான யோசனையைக் கேட்டு, வியாபாரியை ஏமாற்ற விலாசனி என்ற வேஷம் போட்டுக் கொண்டுபோய், அக்ரமக்கார

அண்ணனை பேராசை பிடித்த வியாபாரியின் பிடியிலிருந்து தப்ப வைத்து, தன் உயிரையே தத்தம் செய்த உத்தமி, தியாகி, பவானியைக் கொலை செய்த பாவி நான். ஆத்திரத்தில், உத்தமி ஏன் வந்தாள், இதில் ஏதோ சூது இருக்கவேண்டும் என்று யோசிக்கவில்லை. வெறி! ஆவேசம்! பித்தம்! தலைகால் தெரியாத கோபம்! சொர்ணத்தின் கேலியால் ஏற்பட்ட வேதனை! நான் மிருகமானேன், பவானியின் உயிரைப் போக்கினேன்.

சொர்ணத்தை வஞ்சித்தேன். அவள் என்னைக் கொலைகாரனுக்கினாள்.

ஜெகவீரன், தன் தங்கை செத்ததற்குக் காரணம் தன் புரட்டு, நான் கொலைகாரனானதற்குக் காரணம் தன் வஞ்சகம் என்று எண்ணவில்லை. என்னை மேலும் கொடுமைக்கு ஆளாக்கினான்.

சேகர்! அந்தப் படம், நான் படுகொலை செய்தவன் என்பதை, சொந்த மனைவியைக் கொன்றவன் என்பதை, சுசீலாவின் தாயைக் கொன்றவன் என்பதை, உலகுக்குக் காட்டக்கூடிய படம், என்னைத் தூக்குமேடைக்கு அனுப்பக் கூடிய படம், எங்கெங்கு நான் மதிக்கப்படுகிறேனோ அங்கெல்லாம் என்னைப்பற்றிக் கேவலப்படுத்தக்கூடிய படம், சுசீலாவையே என்னை வெறுக்கும்படி செய்யக்கூடிய படம், என் மானத்தைப் போக்கக்கூடிய படம், குடும்ப கௌரவத்தைக் குலைக்கக்கூடிய படம், அவனிடம், அக்ரமத்தின் உருவமான அவனிடம் சிக்கிக்கொண்டதால், அவன் என்னைத் தன் இஷ்டப்படி ஆட்டிவைக்கிறான். நான் என்ன செய்வேன்? சுசீலாவிடம், மகளே! என்னை மன்னித்துவிடு! நான் உன் தாயைக் கொன்றுவிட்ட கொடியவன், என்று எப்படிக் கூறுவேன்.

"வீடு வாசலை எழுதிவை என் பேருக்கு—" ஜெகவீரன் கட்டளையிடுவான். "ஏன்?" என்று கேட்டால், "படம்" என்பான். பணிவதன்றி வேறு வழி இல்லை. கடைசியில், சுசீலாவைப் பலி கேட்கிறான். அத்துடன் அவனுடைய பயங்கரப் பசி அடங்கித் தீரும்.

சுசீலா, பவானியின் மகள். அவளும் தியாகம் செய்ய வேண்டியவளே! ஒப்புக்கொண்டாள் என்னைக் காப்பாற்ற, ஜெகவீரனைக் கலியாணம் செய்துகொள்ளச் சம்மதித்து விட்டாள்.

சுசீலாவுக்குப் பூரா விஷயமும் தெரியாது. நான் ஏதோ பயங்கரமான ஆபத்திலே சிக்கிக்கொண்டிருக்கிறேன், என்பது மட்டுமே தெரியும்.

சேகர்!

[அவன் முன் மண்டியிட முயற்சிக்க, சேகர் தடுத்து விடுகிறான்.]

சேகர்! என்னை மன்னித்துவிடு! சுசீலா, தியாகியின் திருக் குமாரி, தன்னையும் தியாகம் செய்கிறாள், என் பொருட்டு.

சேகர்: (உருக்கமாக) தியாக சுபாவம் எனக்கும் உண்டு. பரிதாபம். சித்திரவதைக்கு ஆளானீர். என் சுகம் போனால் கவலை இல்லை. சுசீலா, என் இருதயத்தில் எப்போதும் இருப்பாள். அழாதீர் தேவரே! நான் சுசீலாவைத் தியாகம் செய்யத் தீர்மானித்துவிட்டேன்.

சுசீலா எங்கே? அவளை நான் பார்த்துவிட்டுப் போக வேண்டும். நான் பொழுது விடிவதற்குள், ஊரைவிட்டுச் சென்றுவிடுகிறேன்.

[சேகரின் கைகளை எடுத்துத் தேவர் தம் கண்களில் ஒத்திக்கொண்டு, மாடியைக் காட்ட, சேகர் மாடிக்குச் செல்கிறான்.]

## காட்சி 35

இடம்:—தேவர் வீட்டு மாடி.

இருப்போர்:—சுசீலா, ரத்னம்.

(பிறகு) சேகர், தேவர்.

[கட்டிலின் மீது சுசீலா உட்கார்ந்துகொண்டிருக் கிறாள் கவலையுடன். ரத்னம், அரைத் தூக்கத் துடன் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு இருக்கிறான்.]

சு: தூங்கிவிட்டானா ஒரு சமயம்.

ர: இருக்காதம்மா! நீ கவலையில் கவனிக்கவில்லை. எனக் குப் பேச்சுக் குரல் கேட்டதே.

சு: பாதகன் பேசிப்பேசி என் அப்பாவின் உயிரை வாங்கிக் கொண்டிருக்கிறான்,

[காலடிச் சத்தம் கேட்கிறது.]

சு: (கட்டிலைவிட்டு எழுந்து நின்றுகொண்டு) ரத்னம்! வா, வா! அதோ வருகிறான்; சொன்னது ஞாபகமிருக்கட்டும்—ஆரம்பி............

ர: (கூச்சமடைந்து) சங்கடமாக இருக்கிறதம்மா,

சு: ஐய்யோ! கடைசியில் காரியத்தைக் கெடுத்துவிடுவாய் போலிருக்கிறதே.

[அவன் கையைப் பிடித்து இழுத்துத் தன் தோள் மீது வைத்து, அணைத்துக்கொண்டிருப்பது போல பாவனை செய்கிறாள்.

காலடிச் சத்தம் மேலும் பலமாகிறது. ஏதாவது பேசும்படி ரத்னத்துக்கு ஜாடை காட்டுகிறாள்.]

ர: சுசீலா! கண்மணி!

[காலடிச் சத்தம் நிற்கிறது]

சு: (கொஞ்சும் குரலில்) நாதா! நாம் இருவரும்.........

[காலடிச் சத்தம் மீண்டும்]

சு: அந்தக் காமுகன் ஜெமீன்தாரன் நமது காதலைத் தடுக்க முடியுமா? அவனுக்கு நான் யாரைக் காதலிக்கிறேன் என்பதே தெரியாது. நான் யாரோ ஒரு டாக்டரைக் காதலிப்பதாக நம்புகிறான்.

ஒவ்வோர் இரவும் என் நாதன் இங்கே வந்துபோவது தெரியாது.

[சுசீலா தன் கைகளுக்கு முத்தமிட்டுக் கொள்கிறாள். அறைக்கதவு தடால் என்று உதைக்கப்பட்டு, சேகர் பாய்ந்துவருகிறான் உள்ளே. காட்சியைக் காண்கிறான், தலை சுழலுகிறது.]

சே: மோசக்காரி! வஞ்சகி!

சு: (தன்னெதிரே சேகர் வந்திருப்பது கண்டு மிரண்டு) ஐயோ! தாங்களா......

[ரத்னம், சுசீலாவைப் பிடித்து இழுத்து அணைத்துக் கொள்கிறான். முரட்டுத்தனமாக, அவளை இழுத்துக்கொள்கிறான்.]

ர: பயப்படாதே சுசீலா! பார்த்துவிட்டால் என்ன? தலையா போய்விடும்?

சு: (குளறியபடி) ரத்னம் இதைக் கேள்!

[ரத்னம் தன் பிடியைத் தளர்த்தவில்லை. விலகிக் கொள்ள சுசீலாவால் முடியவில்லை.]

சே: (ஆத்திரத்துடன்) கள்ளி! உத்தமி பவானியின் மகளா நீ?

சு: ஐயோ, நான் சொல்வதை...(ரத்னம் இழுக்க) விடு, ரத்னம்.

ர: சுசீலா! என்றைக்கேனும் ஓர்நாள் நமது ரகசியம் வெளியாகித்தானே தீரும். இன்று வெளிவந்துவிட்டது. அதனுல் என்ன?

[சேகர் திகைப்பும் ஆத்திரமும் அடைந்து]

சே: அடி, நயவஞ்சகி! (ரத்னத்தைப் பார்த்து) யாரடா நீ?

ர: ஏன் தெரியவில்லையா? மடையா!

சு: (பரிதாபத்துடன்) ஐயோ! ரத்னம்! விபரீதம் நடந்து விட்டது. இதைக்கேள். அவரைத் திட்டாதே......ஆண்டவனே!

ர: நள்ளிரவிலே ஒரு பெண்ணைத் தழுவிக்கொண்டு இருக்கிறேன், மடையன், அதைப் பார்த்தபிறகும் கேட்கிருன் யாரடா நீ? என்று. முட்டாள்! சுசீலா! வா இப்படி!

[சேகர் சுசீலாவைப் பிடித்து இழுத்துத் தள்ளி விட்டு, ரத்னத்தை ஓங்கிக் குத்துகிருன். இருவருக்கும் சண்டை மூண்டுவிடுகிறது. இடையே சுசீலா கூச்சலிடுகிருள், அழுகிருள், சண்டையை நிறுத்திவைக்க.]

சு: கிணறுவெட்டப் பூதம் புறப்பட்டதே. சேகர்—ரத்னம்—சண்டை வேண்டாம்—நிறுத்துங்கள். விபரீதம் நேரிட்டுவிட்டது. நான் சொல்வதைக் கேளுங்கள்.

[சேகர், அடிபட்டு மயக்கமுற்றுக் கீழே சாயும் சமயமாகப் பார்த்து, ரத்னம் ஒரு நாற்காலியைத் தூக்கி அவன் மீது வீசக் குறி பார்க்கிருன். இதைக்கண்ட சுசீலா துடிதுடித்து, சேகரைக் காப்பாற்ற ரத்னத்தின் காலைப் பிடித்து இழுத்து விட, ரத்னம் கீழே விழுகிருன். ஒரு தடியைத் தூக்கி அவனைத் தாக்கி]

சு: ஓடிவிடு, போ!

ர: மோசக்காரி! வஞ்சகி! உனக்கு உதவி செய்யவந்த என்னையுமா வஞ்சிக்கிருய்.

[ சண்டை கூச்சல் கேட்டு ஓடிவந்த தேவர் ]

தே: அடி பாதகி! சேகருக்கா, துரோகம் செய்தாய் மோசக்காரி! வஞ்சகி!

[ சுசீலாவுக்கு வேதனை, மயக்கமூட்டுகிறது, ஐயோ என்று அலறுகிருள். ரத்னம் ஜன்னல் வழியாகக் கீழே இறங்குகிருன். மயக்கமுற்று கிடந்த சேகருக்குத் தெளிவு பிறக்கிறது, உடனே ஆத்திரத்துடன் ]

சே: கள்ளி எங்கே உன் கள்ளக் காதலன்.

சு: என்ன அநியாயம்! சேகர்! நான் சொல்வதை...

[ சேகர், சுசீலாவைப் பிடித்துக் கீழே தள்ளிவிட்டு, ஜன்னல் பக்கம் பார்க்க. ரத்னம் தோட்டத்திலே ஓடக்கண்டு ஜன்னல் வழியாகவே கீழே இறங்குகிருன். ரத்னத்தைப் பிடிக்க ]

## காட்சி 36

இடம்:—ரத்னம் வீடு.

இருப்போர்:—ரத்னம், அவன் தாய் சொர்ணம்.

[சொர்ணம் நோயால் வாடி வதைகிருள். படுக்கையில் புரண்டபடி, உதவிக்கு யாரும் இல்லை. ஏழ்மையின் கோலம் நன்ருகத் தெரிகிறது. தாகமேலிட்டுப் படுக்கையிலிருந்து எழுந்திருக்க முயல்கிருள். முடியவில்லை. தள்ளாடி எழுந்திருக்கிருள். நிற்க முடியவில்லை, கீழே விழுகிருள். வேதனை அடைகிருள், மெல்ல நகர்ந்து சென்று, ஒரு சட்டியை எடுத்து, அதிலே இருந்த வெந்நீரைக் குடிக்கிருள். கை உதறுகிறது, சட்டி கீழே விழுந்து உடைகிறது. மெள்ள நகர்ந்து படுக்கையில் வந்து, கயிற்றுக் கட்டிலைப் பிடித்துக்கொண்டு, எழுந்திருக்க

முயல்கிருள். படுக்கை மேலே விழுகிறது. சொர்ணம் கீழேயும், கட்டில் மேலேயுமாக இருக்கிறது. ஈனக்குரலில் கூவுகிருள். ரத்னம் உள்ளே வருகிருன்.]

ர: அடடா! அம்மா விழுந்துவிட்டாயா?

[கட்டிலைத் தூக்கி நிமிர்த்துகிருன். தாயைத் தூக்கி மெல்லப் படுக்கவைத்துவிட்டு.]

கண்ருவி! ஏம்மா! எழுந்தே நீ? உன்னுலே முடியுமா இந்த நிலையிலே.

சொ: அடே! ரத்னம்! எங்கேடாப்பா போனே, இந்தக் கடைசி காலத்திலே, என்னேடு இரு, இப்ப நான் விழுந்து எழுந்து ஒரு முழுங்கு தண்ணி குடிக்கலையானு, உயிர் இழுத்துக் கிட்டே போயிருக்கும்.

ர: என்னும்மா செய்வது? உனக்காகத்தான் வெளியே போனேன். பணம் தேட.

சொ: பணமா? ஏண்டாப்பா பணம்?

ர: டாக்டருக்கு.

சொ: பைத்யண்டா உனக்கு. இன்னைக்கோ நாளைக் கோன்னு இருக்கறேன், இனி மருந்து வேலை செய்யாது. மன வியாதி அல்லவாடா என்னைக் கொல்லுது. அதுக்கு யாரிடமும் மருந்து கிடையாதுடாப்பா.

[ரத்னத்தைப் பின்தொடர்ந்த சேகர், அங்கே நுழைந்து மறைந்துகொண்டு நிலைமையைக் கவனிக்கிருன்.]

ர: பயப்படாதேம்மா! பணம் நிறையக் கொடுத்தா இந்தக் காலத்திலே பிணத்தைக்கூட எழுப்பிவிடுகிற டாக்டருங்க இருக்காங்க. உனக்கு என்னம்மா? பிழைச்சிக்கொள்வே. பணம் தேடிப் போனேன். பலிக்கலை.

சொ: பணத்துக்கு எங்கே போனுயப்பா இந்நேரத்திலே.

ர: எங்கேயம்மா போவேன்? வாடகை பாக்கிப் பணம் கேட்கப் போவேனு. வட்டிப்பணம் கேட்கப் போவேனு? திருடத்தான் போனேன்.

சொ: வேண்டாம்பா இன்னம் அந்தத் தொழில்.

ர: இன்னக்கித்தான் கடைசீ. அம்மா! போன இடத்திலே ஒரு வேடிக்கை.

சொ: என்னடாப்பா வேடிக்கை.

[எழுந்து உட்காருகிருள், கட்டிலின்மீது.]

ர: படுத்துக்கிட்டே கேளம்மா, உன்னலே உட்கார முடியாதே,

சொ: பரவாயில்லேடா ரத்னம், சொல்லு. தண்ணி குடிச்சதும் கொஞ்சம் உசிரு வந்துது.

ர: ஒரு பெண் இருந்த அறைக்குள்ளே நுழைந்துவிட்டேன். அவளுக்கு என்னமோ பெரிய வேதனையாம். யாரோ அவ மாமனும், ஒரு ஜெமீன்தாரன், அவளேக் கலியாணம் செய்துக் கொள்ளணும்னு வற்புறுத்திருங்களாம்.

(இடையே) ஏம்மா! படுத்துக்கொள்ளேன்! காலே அமுக்கறேன்.

சொ: வேண்டாம்பா! நீ சொல்லு, அப்புறம்?

ர: அந்தப் பெண்ணுக்குத் துளிகூட இஷ்டமில்லே, அவனேக் கலியாணம் செய்துகொள்ள. நல்ல அழகும்மா பொண்ணு. பாவம்! உயிர்மேலேயே வெறுப்பாப் போச்சு அந்தப் பெண்ணுக்கு. விஷத்தைக் குடிச்சுச் செத்துப்போறதுன்னு தயாராகிவிட்டா.

சொ: அட பாவமே!

சொ: நான் ஒரு இரண்டு நிமிஷம் கழிச்சி போயிருந்தேன், பெண்ணு மண்ணுதான்.

சொ: பாவம்! இப்படி இஷ்டபடாதவனேத் தலேமேலே கட்டுவதாலே, வேண பெண்ணுக மாண்டு போருங்க.

ர: இந்தப் பெண்ணு புத்திசாலி, தப்பித்துக்கொண்டா.

சொ: ஏண்டா ரத்னம்! விஷம் சாப்பிடாதேன்னு நீ புத்தி சொன்னயா?

ர: வேடிக்கையா இருக்கும்மா, நீ கேக்கற கேள்வி, நான் போனது திருட! உபதேசம் செய்யவா போனேன்? நான் என்ன குருவா? அவளே ஒரு யோசனே சொன்னு!

சொ: உன்னேக் கண்டு அவ பயப்படவில்லேயா?

ர: சாவுக்கே பயப்படலேன்னு! நிஜத்தைச் சொல்லணுமானு, எனக்கு இலேசா பயமா இருந்தது, அவளைப்பார்த்து. அவள் தன் நிலைமையைச் சொல்லி, ஒரு உதவி செய்யச் சொன்னு.

சொ: உன்னையா?

ர: ஆமாம்மா! என்னைத்தான்!

சொ: நீ என்ன உதவி செய்யறதாம்.

ர: கேளு, அந்த கூத்தையும். கொஞ்ச நேரம் காதல் நாடகம் ஆடச் சொன்னு அந்தப் பெண்ணு.

சொ: என்னது? காதல் நாடகமா?

ர: (சிரித்துக்கொண்டு) ஆமாம்மா! அவளை நான் காதலிப்பதுபோல நடிக்கச் சொன்னு.

சொ: இது என்னடா பைத்யக்கார வேலை.

ர: பைத்தியமில்லை. அவ மாமன் அங்கே வருவான், இதைப் பார்ப்பான், உடனே, சே! இவ இப்படிப்பட்ட நடத்தைக்காரியான்னு நினைச்சுக் காரி முழிஞ்சிட்டுப் போவான், கலியாணத்துலே இருந்து தப்பித்துக் கொள்ளலாம்னு, அந்தத் தந்திரம். அதுக்காகத்தான் என்னைக் கொஞ்சநேரம் காதலனுக இருக்கச் சொன்னு.

சொ: பலே சாமர்த்தியக்காரிதான்.

ர: களவாடப்போன இடத்திலே இந்த உத்தியோகம் கிடைச்சுதா, சரின்னு ஒத்துக்கொண்டேன். அவ சொன்னபடியே, அந்தப் பய வந்தான்.

சொ: யாரு?

ர: அவ மாமன், யாரோ ஜெமீன்தாரன்.

சொ: வந்து?

ர: வந்து, ஆசாமி அப்படியே ஆவேசம் வந்தவன் மாதிரி ஆடினுன்; பாவம், யாருக்குத்தான் ஆத்திரமா இருக்காது. தான் கலியாணம் செய்துகொள்ளணும்னு இருக்கற பெண், பாதி ராத்திரியிலே ஒரு கள்ள புருஷனேடே விளையாடறதைப் பார்த்தா மனசு பதருதா? அவன் கண்டானு, இது தந்திரம்னு. புலி மாதிரி சீறினுன், நானும் சும்மா இல்லை, நல்ல சண்டை, நல்ல அடி, நல்ல உதை இரண்டுபேருக்கும்.

சொ: அட பாவமே! அவ என்ன ஆனு?

ர: அம்மா! இந்த அன்யாயத்தைப் பாரு. அவளே தான், எனக்கு இப்படி இப்படி நடக்க வேணும்னு சொன்னு. ஜமீன் தாரன் வருவான், நான் பயப்படுகிறமாதிரி பாசாங்கு செய்வேன், கெஞ்சிக் கூத்தாடுவேன், நீ எதையும் கவனிக்காதே, அவனுக்குச் சரியான உதை கொடுன்னு சொல்லிக்கொடுத்தா. கடைசியிலே, அவ, அவனுடன் சேர்ந்துகொண்டு என்னையே அடிச்சி விரட்டினு.

சொ: ஏன்?

ர: ஏனே? ஆத்திரம் எனக்கு. இவளுக்காக, நான் காதல் வேஷம் போட்டுகிட்டது வீண் வேலே. அவனிடம் அனுவசிய மான சண்டை; கடைசியிலே, அவ, நம்மையே திருப்பிக்கிட்டா; நல்லா திட்டிப்போட்டேன்.

[மறைந்திருந்த சேகர், இந்தச் சம்பாஷணையைக் கேட்டுத் தன்னையும் மறந்து]

சே: ஆஹா! சுசீலா! நீ மாசற்றவள்! உன்மீது வீணுகச் சந்தேகித்தேன்.

[குரல் கேட்டு ரத்னம் அலற, சேகர் அவனருகே வந்து]

சே: அப்பா! ரத்னம்! என் வயற்றிலே பால் வார்த்தாயே சுசீலா, என்னைக் காதலிக்கிருள். அவளை வற்புறுத்துபவன், அவள் மாமன் ஜெமீன்தாரன். அந்தக் காமுகனிடமிருந்து தப்பித்துக்கொள்ளவே, அவள் அந்த ஏற்பாடு செய்தாள். அவன் வரவேண்டிய சமயத்தில் எதிர்பாராதவிதமாக நான் வர நேரிட்டது. அதனுலே விபரீதமாகிவிட்டது,

ர: (ஆச்சரியத்துடன்) அப்படியானு, நீ அல்லவா அவளுடைய மாமன், ஜெமீன்தாரன்.

சே: இல்லே! நான் டாக்டர் சேகர்!

ர: அட இழவே! விஷயம் எப்படியோ போய் எப்படியோ முடிந்துவிட்டது.

சொ: அப்பா! இங்கே வாடாப்பா! பெண்ணுக மேலே, திடீல்திடீல்னு ஆண் பிள்ளைக சந்தேகப்படுவது பெரிய நோயாப் போச்சி. அந்தச் சாபக்கேட்டாலே, பெண்கள் படுகிற கஷ்டம் இருக்கே, சொல்லி முடியாதப்பா. வீணுச் சந்தேப்பட்டு, ஒரு பெரிய மனுஷர். தன் சொந்தப் பெண்ஜாதியைக் கொலே செய்ததை நான் கண்ணுலே பார்த்திருக்கிறேண்டாப்பா.

சே: (திடுக்கிட்டு) அம்மா, உன் பெயர் சொர்ணமா?

சொ: ஆமாம், உனக்கு எப்படித் தெரியும்.

சே: இப்ப நீங்க சொன்னது, கருணுகரத் தேவர் விஷயமாகத்தானே.

சொ: ஆமாம்பா!

சே: அம்மா! இந்தப் பெண், என்னுல் வீணுகச் சந்தேகிக்கப்பட்ட பெண் வேறு யாருமில்லையம்மா, பவானியின் மகள். தேவரின் குமாரிதான்.

சொ: தேவர் மகளா? தெய்வமே, இவளையாவது காப்பாற்றுயே. அப்பா! என் சேதி உனக்கு எப்படித் தெரியும்?

சே: தேவரே சொன்ஞர்.

சொ: ரத்னம்! அந்தப் பெண், உனக்குத் தங்கச்சி முறை தெரியுமா?

ர: எப்படிம்மா?

சொ: விவரம் கேட்காதே. நீ தேவர் மகன். இந்தத் துர்ப்பாக்கியவதி கழுத்திலே அவர் கையாலே ஒரு தாலிக் கயறு கட்டாததாலே, சொந்த அப்பன் வீட்டிலேயே திருடப்போற நிலை வந்தது.

சே: கஷ்டப்படாதீர்களம்மா, என்ன செய்வது? எல்லாம் இனி சுகமாக முடியும்.

ர: அதிசயமா இருக்கு. எனக்கு சுசீலாவிடம், ஒருவித அன்பு உண்டாயிற்று. இனி நீ என் தங்கை என்றுகூட நான் சொன்னேன்.

சே: உன் தங்கையேதான்! சந்தேகமென்ன?

ர: (பயந்து) அடே! ஒரு விஷயத்தை மறந்துவிட்டேனே. அந்தப் பெண், விஷம் குடிக்க இருந்துதே, இந்த விபரீதம் நேரிட்டதாலே ஒருவேளை............

[சேகர் உடனே பதைத்து]

சே: நான் ஒரு முட்டாள், இதோ வருகிறேன்.

[சுசீலா சுசீலா! என்று கூவிக்கொண்டே ஓடுகிருன்.]

## காட்சி 37

இடம் :—பாதை.

இருப்போர் :—சேகர்.

[ஓடுகிறன், சுசீலா! சுசீலா! என்று அலறிக் கொண்டு.]

## காட்சி 38

இடம் :—தேவர் வீட்டுக் கூடம்.

இருப்போர் :—தேவர்.

[தேவர் கண்ணீர் பொழிந்தவண்ணம் உட்கார்ந்திருக்கிறர். ஓடி வருகிறன் சேகர்.]

**சே :** சுசீலா எங்கே ?

**தே :** ..........................

[சுசீலாவைக் கொன்றுவிடுவான் என்று பயந்து, சேகர், காலைப் பிடித்துக்கொண்டு]

சேகர்! சேகர்! வேண்டாமப்பா! ஆத்திரத்திலே நீ வேறு கொலை செய்துவிடாதே. நான் பாடுகிற பாட்டைப் பார்.

[தேவரைத் தூக்கி நிறுத்திவிட்டு]

**சே :** கொலையா ? என் கண்மணியையா ? சுசீலாவையா ? எங்கே சுசீலா! மாசில்லாத மணி அவள்! சுசீலா! சுசீலா!

[என்று கூவிக்கொண்டே மாடிக்குச் செல்கிறன்.]

## காட்சி 39

இடம் :—சுசீலாவின் மாடி அறை.

இருப்போர் :—சுசீலா.

[ சுசீலா, கட்டிலின்மீது கவிழ்ந்தவண்ணம் கதறிக் கொண்டிருக்கிருள். மேஜைமீது, விஷக் கோப்பை இருக்கிறது. சேகர் உள்ளே பாய்ந்து, கோப்பையைக் கண்டு, அதை எடுத்துக் கொள்கிருன். ]

சே : (மூச்சுத்திணற) அப்பா! நல்லவேளை !

[ சுசீலா. சேகர் வந்தது கண்டு, அவன் கையிலே கோப்பை இருக்கக்கண்டு]

சு : சேகர்! எனக்கு எவ்வளவோ உதவி செய்திருக்கிருய். இந்தக் கடைசி உதவியைச் செய்து விடு. அந்த கோப்பையைக் கொடு.

[சேகர், அவள் பேச்சைக் கவனிக்காமல் அறையில், அங்குமிங்கும் தேடி, ஒரு சீசாவைத் தேடி எடுத்து, அதிலே அந்த விஷத்தைக் கொட்டி, சீசாவைப் பத்திரப்படுத்திக் கொண்டு ]

சே : சுசீலா கண்ணே! எனக்கு நேரம் இல்லை, விவரம் சொல்ல. நமது வாழ்வுக்காகப் போரிடப் புறப்படுகிறேன். வெற்றி பெற்ருல் விஷத்துக்கு வேலை இல்லை. தோல்வி அடைந்தால், நீ மட்டுமல்ல, இரண்டு கோப்பைகளிலே விஷம், கடைசீ முத்தம், இருவரும் இறந்துவிடுவோம்.

[ புறப்படுகிருன். ]

சு : (திகைப்புடன்) தாங்கள், என்ன சொல்கிறீர்கள்.

சே : காத்துக்கொண்டிரு. மண ஓலை, அல்லது மரண ஓலை, இரண்டிலே ஒன்று விடிவதற்குள். இதோ வருகிறேன்.

[ ஓடுகிருன். ]

## காட்சி 40

இடம் :—பாதை.

இருப்போர் :—ரத்னம், சேகர்.

[இருவரும், எதிர்எதிர்ப்புறமிருந்து ஓடி வருகிருர்கள்]

ர : ஆபத்து இல்லையே!

சே : இல்லை! விஷம் என்னிடம் இருக்கிறது.

ர : தப்பினுள் என் தங்கை. சரி, சேகர், இனி என்ன செய்ய வேண்டும், சொல்லு. சுசீலாவின் வாழ்க்கையைக் கெடுக்கத் துணியும் அந்த ஜெகவீரனின் தலையைக் கொண்டுவந்து உன் காலடியில் வைக்கட்டுமா? கொலைக் குற்றத்துக்கு மரணதண்டனை தருவார்களே என்று பயம் கொள்ளாதே. பாம்பு கொல்லப் பட்டது என்று திருப்திகொள்.

ஒரு குடும்பத்தை இவ்வளவு கொடுமைக்கு ஆளாக்கும் கொடியவனை விட்டு வைக்கக்கூடாது.

என்னைப்பற்றிக் கவலைப்படாதே. நான் எதற்கும் தயார்!!

சே : (ரத்னத்தைத் தழுவிக்கொண்டு) இவ்வளவு வீர புருஷனுக இருக்கிருய். சமூகக் கொடுமையால், நீ இந்தக் கதிக்கு ஆளாக்கப்பட்டாய்.

ர : அது கிடக்கட்டும் சேகர், நீ என்ன சமூகம் சமூகம் என்று பேசிக்கொண்டிருக்கிருய். சமூகத்தின் பிரமுகர்கள், ஜெகவீரர்களாகவே இருக்கிருர்கள். நாங்கள் சாக்கடைப் புழுக்கள். ஆனுல், அந்தச் சாக்கடை ஏற்பட்டதற்குக் காரணம், கனதனவான்கள் உற்பத்தி செய்யும் காமச்சேறு. அது ஒழிய வீரர்கள் தோன்றவேண்டும். விடிவதற்குள் முடிகிற காரியமா அது. இப்போது நடக்கவேண்டியதைச் சொல்லு,

சே : ஜெகவீரனைக் கண்டுபிடித்து, அவனிடம், ஒரு படம் இருக்கிறது. தேவர் கொலை செய்தவர் என்று ருஜு காட்ட. அதனைக் கைப்பற்றிவிடவேண்டும்.

ர : புறப்படு.

சே : எங்கே கண்டு தேடுவது அவனை.

ர : பெரிய குடிகாரனுயிற்றே............

சே : எங்காவது ஆடிக்கொண்டு கிடப்பான்.

ர : அப்படியானல் வா சேகர்! இங்கே ஒரு சூதாடுமிடம் இருக்கிறது. குடி, கூத்தி சகலமும். போய்ப் பார்ப்போம்.

[போகின்றனர்.]

## காட்சி 41

இடம் :—சூதாடும் இடம்.

இருப்போர் :—பலர்.

[சூதாடும் இடத்தில் குடிவெறியுடன் பலர், சிலர் சீட்டாடுகின்றனர். சில பெண்களும் இருக்கின்றனர். கலகமும் கூச்சலும் இடையிடையே. பெண்கள் சிரிப்பு.]

ஒரு குடியன் : (ஒரு பெண்ணைப் பார்த்து) ஷோக்கா ஒரு பாட்டுப் பாடுடீ! கேட்டுகிட்டே ஆடலாம்.

மற்றோர் குடி : செ! வேண்டாண்டா! அவ பாடினு, சீட்டு ஆட்டத்து மேலே புத்திபோவாது.

முதல் குடி : பாடுடி, பாடுடின்னு பாடணும்.

[பாட ஆரம்பிக்கிருள்.]

மற்ற குடி : ஏ! நிறுத்துடி, பாடக்கூடாது.

முதல் குடி : பாடு.

மற்ற குடி : பாடாதே!

முதல் குடி : நீ யாருடா தடுக்க ?

[என்று கேட்டுக்கொண்டே திரும்பிப் பார்க்க சேகரும் ரத்னமும் வரக்கண்டு.]

டே! யாருடா நீ ?

ர : நாங்களா ? ஏன் சொல்லவேணுமா ?

மற்றக் குடியன்: யாரோ புதிசு! வாங்க பிரதர்! வாங்க! என்ன பிரதர் கோவிக்கறே.

[ரத்தினத்தின் முகவாய்க்கட்டையைத் தொட, அவன், அவனுடைய கைப்பிடித்துத் தள்ளுகிருன்.]

சும்மா, இப்படித் தமாஷா! பொழுது போக்க .................. ..

இன்னேர் குடி: உட்காரு பிரதர், ஒரு கை.

சே: இல்லே! நாங்க இங்கே ஒரு சினேகிதரைத் தேடிக் கொண்டு வந்தோம்...........

முதல் குடி: அப்ப, நாங்களெல்லாம் சிநேகிதரு இல்லேயா, பிரதர்! உட்காரு பிரதர், (கிளாசைக் காட்டி) ஜின் பிரதர்! ஜின்!

வேறு குடி: விஸ்கி வேணுமா பிரதர்.

சே: வேண்டாம்.

[ரத்னம் வாங்கி மளமளவென்று குடித்து விட்டு.]

இங்கே காணும், வாங்க. அவன், இப்படி, ரோந்து போயிருப்பான்.

சே: ரோந்து என்ருல்?

ர: அது உங்களுககுப் புரியாத பாஷை. அவன் பெரிய பொம்பளேப் பைத்யம் பிடிச்சவனல்லவா? அந்தத் தெருவா போயிருப்பான்.

[இருவரும் போகின்றனர்.]

முதல் குடி: வெறும் கையை முழம் போடற பயலுக.

வேறு குடி: டே! ஒரு சமயம் போலீசா இருக்குமோ!

முதல் குடி: அடச் சே! ஏண்டா பயப்படறே! ஆடுடா! (இன்னெருவனேப் பார்த்து கிளாசைக் காட்டி) போடுடா.

## காட்சி 42

இடம் :—வேதம் வீடு.

இருப்போர் :—வேதம், ஆறுமுகம்.

(பிறகு) ஒரு வாலிபன்.

[ வாசற்படியில் நின்றுகொண்டிருக்கிருள். வேதம் விசாரத்துடன் ; கலைந்த பொட்டு, வாடிப்போன பூ, சரிந்த ஆடை, சுழலும் கண்ணுடன், பக்கத்திலே உட்கார்ந்து கொண்டு சிகரெட் பிடிக்கிருன், அவளுடைய 'ஆசை நாயகன்' ஆறுமுகம். ]

ஆ : ஏ! வேதம்! உன் மூஞ்சி இருக்கிற அழகுக்கு முக்கா ரூபா கொடுப்பானுடி எவனுச்சும். முகரக்கட்டையைப் பாரு. போய்ப் படுடி, இன்னக்கி எவனும் சிக்கமாட்டான்.

வே : அட, என் மன்மதக் குரங்கே! நீ கெட்டகேட்டுக்கு கேலி வேறேயா ? நீ போய்ப்படு, பக்கத்திலே நீ தடியனுட்டம் இருந்தா, எவன் நுழைவான் ; உன்னை ஒரு பெரியப் பிரபுன்னு நினைச்சிகிட்டுப் போயிடுவான்க. உனக்கென்ன வந்தது கவலை. வீட்டுக்காரிக்கு வாடகைப் பணம் 9 ரூபா தரணும், வாயிலே வந்தபடி பேசரு, மானம் போவுது.

ஆ : (கேலிச் சிரிப்புடன்) மானம் போகுதா? உனக்கா! ஏ அப்பா! மானம்னு, மணங்கு என்ன விலைன்னு கேட்கறவ நீ. மானம் போவுதா உனக்கு. என்னுடி வேதம். அதெல்லாம் என் கிட்டவே காட்டறே.

வே : காட்டறேன், நீ நோட்டு நோட்டா நீட்டுவேன்னு.

[ வீதியிலே யாரோ வருவதைப் பார்த்து ]

வாயை மூடு! அதோ எவனே வருகிருன், பார்த்துக்கொள்ளு.

[ பாதை ஓரம் செல்கிருன் ஆறுமுகம். எதிரே வரும் வாலிபனைப் பார்த்து ]

ஆ : ஏன் சார், டயம் என்னுங்க ?

வா : தெரியாதுங்களே, கடியாரம் இல்லை.

ஆ : எங்கேயோ உங்களைப் பார்த்த மாதிரியா இருக்கே ?

வா : என்னையா ? ஊஹூம் இருக்காதே.

ஆ: (யோசிப்பதுபோல பாசாங்கு செய்து) என்ன பிரதர்! ஒரே அடியா, என்னை முட்டாளாக்குறீங்க, நீங்க நம்ம பக்கத்து வீட்டு பாக்கியம்...........

வா: எந்தப் பாக்கியம்?

ஆ: அவதான், தனபாக்கியம். அவ வீட்டுக்கு வந்திருக்கறிங்களே, நீங்கத்தான். ஒரேயடியா மறைக்கறிங்களே. நான் பார்த்திருக்கறேன்.

வா: இல்லீங்க. நான் வந்ததில்லீங்களே.

ஆ: சும்மா, வாங்க. கூச்சப்படாமே. யாரு பார்க்கறுங்க இங்கே. வாங்க.

[வேதம் வீட்டு வாசற்படி வருகின்றனர் இருவரும்.
உள்ளே அழைத்துச் செல்கிருள். ஒரு பழைய நாற்காலியிலே உட்கார வைக்கிருர்கள் வாலிபனை.]

வா: இந்த மாதிரி வழக்கமே எனக்குக் கிடையாது. என்னமோ இன்னக்கி மனசு ஒரு மாதிரியா இருந்துது. அதனலே............

வே: (வாலிபன் பக்கத்தில் நின்றுகொண்டு) இது சகஜந்தானுங்களே! என்னமோ கதைக்கூடச் சொல்வாங்க இல்லே, அப்பேர்க்கொத்த விசுவாமித்ரர்கூட ஒரு மேனகையைப் பார்த்து மயங்கினுருன்னு. ஊரிலே நடக்காத விஷயமா? இங்கே நம்ம வீட்டிலே, கண்டவங்க நுழையறது கிடையாதுங்க.

ஆ: தப்பித்தவறி எவனவது வந்தா, இவ எறிஞ்சி விழுவா. இப்ப, உங்ககிட்ட சிரிச்சிப் பேசின பாருங்கோ, இந்தமாதிரி இருக்கவே மாட்டா. அது என்னமோ உங்களைக் கண்டதும்......

வா: அதெல்லாம் நம்ம பேஸ்கட், பர்சனலடி.........

வே: (ஆறுமுகத்தைப் பார்த்து) போங்க! உங்களுக்கு எப்பவும் கேலிதான். (வாலிபனைப் பார்த்து) எனக்கு மனசு பிடிச்சாத்தான், முகங்கொடுத்துப் பேசற வழக்கம்ங்க. அவன் மகாராஜனுக்கூட இருக்கட்டுங்க, நமக்கு என்னுங்க. பணமா பெரிசு! மனசுதானுங்களே.

வா: ஆமாம்! எனக்கு......நானு இப்படிப்பட்ட இடத்திலே வந்து பழக்கமில்லாதவன்.........

[எழுந்திருக்கிருன். வேதம் அவனைத் தொட்டு உட்காரவைத்து]

வே : உட்காருங்க ! (ஆறுமுகத்தைப் பார்த்து) இவரைப் பார்க்கறபோதே பெரிய மனுஷருன்னு தெரியுது இல்லே.

ஆ : அதுக்கென்ன சந்தேகம் ! நான் போயி, சாயா சாப்பிட்டுவிட்டு வர்ரேன்.

வே : (வாலிபன் மீது உராய்ந்தபடி) அண்ணன் வெளியே போகணுமாம், போய்த் தொலேக்கட்டும். அது இங்கே இருந்தா, வளவளன்னு பேசிகிட்டே இருக்கும். போகட்டும் வெளியே. நாம்ப நிம்மதியாப் பேசலாம்.........

வா : (புரியாமல்) ஏன் அவர் இருந்தா என்ன? வேணுமான போயிட்டு வரட்டுமே! கடை இருக்குமா இந்த நேரத்திலே.

ஆ : (கொஞ்சம் உரத்த குரலிலேயே) என்ன வேதம் ! சாயா குடிக்கப் போகணும், காது கேட்கலே! ஏது! சொக்கிவிட்டாயோ!

வே : (உரத்த குரலிலேயே) அட கொஞ்சம் இரு அண்ணே, அவரு காசு எடுக்கறதுக்குள்ளே கூச்சப்போடறே.

[ வாலிபனை நோக்கிக் கொஞ்சுவதுபோல ]

ஏதாச்சும் சில்லறை இருந்தாக் கொடுங்கோ. இந்தச் சனியனைத் தொலேச்சிவிடுவோம்.

வா : சில்லறை இல்லேயே.

[வாலிபன் மடிமீது உட்கார்ந்துகொண்டு]

வே : ரூபாயா இருக்கா ?

வா : இல்லேயே.

வே : (ஜேபியைத் தடவிக்கொண்டு) நோட்டா இருக்கா.

வா : (பரிதாபத்துடன்) இல்லேயே.

[மடியிலிருந்து எழுந்து கொஞ்சம் கோபமாக.]

வே : என்னய்யா இது ? விளேயாட்டா ? எடுங்க. அண்ணனுக்குக் கொடுக்கணும். நமக்கும் ஏதாச்சும் வாங்கணும். பாலேக் காச்சி வைச்சேன், பூனே உருட்டிவிட்டுது. பால் வாங்கணும்.

வா : (மடியிலிருந்து ஒரு செயின் எடுத்துக் காட்டி) இதோ பார்! இதுதான் இருக்கு.

[வேதம் அதைக் கையில் வாங்கிப் பார்த்து ஆச்சரியத்துடன்]

வே: செயினு! ஏது இது?

வா: (போலி தைரியத்துடன்) ஏன் என்னுடையதுதான்!

வே: (கொஞ்சம் அலட்சியமாக) உன்னுடையதா? ஏன், இதை எடுத்துக்கொண்டு வந்தே. பணம் இல்லையா?

வா: (அசடு வழிய) இல்லை! பணத்துக்குப் பதில் இதை வைத்துக்கொள். பத்து நாளைக்கு நான் இங்கேயே தங்கி இருக்கப்போகிறேன். இது 5 சவரன். செலவுக்கு இது போதாதா?

வே: (மிரட்டும் குரலில்) நிஜத்தைச் சொல்லு, இதை எங்கிருந்து திருடினே?

வா: (பயமும் வெட்கமும் அடைந்து) திருடுவதா? என் நகையை நான் ஏன் திருடப்போகிறேன்!

வே: (மிரட்டி) நிஜத்தைச் சொல்லு.

வா: சத்தியமா, இது எங்க வீட்டுதுதான்.

வே: உங்க அம்மாவுதா?

வா: இல்லை.

வே: உன் சம்சாரத்துதா?

வா: ஆமாம், இருந்தா என்ன?

வே: இரு, இதோ வர்ரேன். வெத்திலைப் போட்டுக்கோ.

[வேதம் வாசற்படி சென்று ஆறுமுகத்தைக் கண்டு,]

வே: பார்த்தாயா இந்த வேடிக்கையை. அந்தப் பயல் இதை வீட்டிலே இருந்து அடித்துக்கொண்டு வந்திருக்கான்.

ஆ: அட, செயின்! வேறே எங்கேயாவது களவாடி இருப்பானோ?

வே: இல்லை, சுத்த அசட்டுப் பயலா இருக்கறான். முழி முழின்னு முழிக்கிறான். ஆமா, இப்ப என்ன செய்யறது? பாவம், அவன் சம்சாரத்துதாம் செயின். அவ சபிச்சுக் கொட்டுவா.

ஆ: சரிதான் போடி. சாபம் வந்து உன்னைச் சர்ப்பமாகக் கடிக்கப் போவுதா? பத்து நாளைக்குச் சனீஸ்வரன் கோவிலுக்கு விளக்கு ஏத்தினாப் போவுது, சாபமெல்லாம்.

வே: செச்சே! எவ்வளவோ பாபம் செய்து இந்த ஜென்மம் எடுத்தாச்சி. இன்னம் கொஞ்சம் மூட்டை சேர வேணுமா?

ஆ: பெரிய தொல்லையாப் போச்சி. வேதம்! எனக்குப் பாவம் பிடிச்சுக்கொள்ளும்னு ஒண்ணும் பயமில்லை. ஆனு இந்தப் பயலுடைய வீட்டிலே போலீசுலே தகவல் கொடுத்தா நம்ம பாடு ஆபத்தாயிடுமேன்னு பயமாத்தான் இருக்கு. சப்-இன்ஸ்பெக்டர் இந்தமாதிரி விஷயத்திலே ரொம்பக் கண்டிப்பானவராம்.

வே: (பயந்து) நமக்கு வேணவேவேணும் இந்தச் சங்கடம். எழுந்து போகச்சொல்லு.

ஆ: இதுக்கு நான் என்ன தூது? நீயேதான் போகச் சொல்லேன்.

வே: நான் போயிச் சொன்னு அவன் குழந்தை மாதிரி அழுதுவிடுவான் போலிருக்கு. அவ்வளவு பயித்யக்காரப் பிள்ளேயாயிருக்கு.

[ஆறுமுகம் செயினை எடுத்துக்கொண்டு உள்ளே போகிருன்]

ஆ: ஏ, அப்பேன்! இப்படி வா வெளியே.

வா: யாரை என்னையா?

ஆ: ஆமாம் சார், செயின் மாஸ்டர் உங்களைத்தான்.

வா: (எழுந்து வருகிருன்) ஏன்?

ஆ: (செயினை அவனிடம் கொடுத்து) இந்தா! மரியாதையா வீட்டுக்குப் போயி சங்கிலியைக் கொடுத்துவிடு. இப்படித் தலைகால் தெரியாமெ ஆடறது, வீட்டுச் சொத்தைத் திருடறது, வயத்துக் கொடுமையாலே, யாராவது வாங்கிக்கிட்டா பிறகு போலீசிலே கம்பெளியிண்டு கொடுக்கறது.

தடியனுட்டமா இருக்கறயே உனக்குப் புத்தி இல்லே! வீட்டிலே இருந்து நகைநட்டு திருடிக்கொண்டா வர்ரது. ஆளைப் பார்த்தா ஒழுங்காகத்தான் இருக்க்றே. ஏதாவது அரை காலு இருக்கா பாரு மடியிலே.

வா: (வெட்கமும் பயமும் மேலிட்டு) இல்லிங்க.

ஆ: சுத்த வறட்டுப் பய. போடா, போ. பெரிய பிரபுமாதிரி வந்துவிட்டான், இந்த நேரத்திலே.

[வாலிபன் பயந்துகொண்டு செல்கிறன் வீதியில். அந்தச் சமயம் டாக்டரும், ரத்னமும் வருகிறர்கள். டாக்டர் வாலிபனை அடையாளம் கண்டு பிடித்து.]

சே: தம்பீ! இங்கே என்னடா இந்த நேரத்தில்.

வா: (குளறுகிறன்) இல்லை..... சும்மா......இப்படி............

ர: யாரு இந்தத் தம்பீ?

சே: நம்ம பக்கத்து வீடு. ராமாயணக் காலட்சேபம் செய்யருரே ரங்காச்சாரி, அவர் மகன்.

[வாலிபன் நழுவுகிறன். ரத்னம் சிரித்துவிட்டு.]

அப்பா ராமாயண காலட்சேபம் செய்கிருரு. மகன் இப்படி, பாரத காலட்சேபத்துக்குக் கிளம்பி இருக்கான்!

ர: டாக்டர்! இதுக்குத்தான் ரோந்து வர்ரதுன்னு பேரு, போவட்டும் வாங்க. இந்தமாதிரி இடத்திலே எல்லாம் தெரிஞ்சவங்களா இருந்தாக்கூட கண்டுகொள்ளக்கூடாது, கண்டும் காணுத மாதிரியாத்தான் போயிடுவாங்க. நீங்க ரெண்டுபேரும் புதிசு.

[வேதம் வீட்டருகே போய்ச் சேருகிறர்கள்.]

## காட்சி 43

இடம் :—வேதம் வீடு.

இருப்போர் :—ஆறுமுகம், வேதம், (பிறகு) சேகர் ரத்னம்,

[வாயிற்படி அருகே போய் உரத்த குரலில்.]

ர: டே! ஆறுமுகம்! ஆறுமுகம்.

[வேகமாக ஆறுமுகம் ஓடிவந்து ரத்னத்தின் முன்பு அடக்கமாக நின்றுகொண்டு.]

ஆ: ஏண்ணேன்! இந்த நேரத்திலே இவ்வளவு தூரம்! சொல்லி அனுப்பினு நான் வரமாட்டனு?

ர: டே! ஆறுமுகம்! கொஞ்ச நேரத்துக்கு முன்னுலே எவனுவது ஜமீன்தாரன் வந்தானு, இந்தப் பக்கத்திலே, யாரு வீட்டுக்காவது.

ஆ : (யோசித்து) ஜெமீன்தாரனு? ஆள் எப்படி இருப்பான்? இந்த நேரத்திலே எப்படி அண்ணேன் கண்டுபிடிக்கறது. இங்கே வருகிறவன் அத்தனை பேருந்தான் ஜெமீன்தாரன் மிட்டாதாரன்னு சொல்லிக்கிருன். நாம் கண்டமா, அவனெல்லாம் நிஜமாகவே ஜெமீன்தாரன்தானுன்னு.

சே : இந்த ஜெமீன்தாரன் கொஞ்சம் வயசானவன். மீசைக்குச் சாயம் பூசியிருப்பான். கையிலே தங்கப் பூண் போட்ட தடி இருக்கும். குடிச்சிவிட்டு இருப்பான்.

ஆ : (உள்பக்கம் பார்த்து) வேதம்! தா, வேதம்!

[வேதம் வருகிருள். ரத்னத்தைக் கண்டதும் மரியாதையாக.]

வே : ஏண்ணேன், தெருவிலேயே நிற்கறே. உள்ளே வாண்ணேன்.

ஆ : வேதம்! முணுவது வீட்டிலே ஒரு ஆசாமி வந்தானே இன்னக்கி கொஞ்சம் வயசானவனு; தங்கப் பூண்போட்ட தடி கூட வைச்சிருந்தானே.

வே : ஆமாம்!

ஆ : அவன் ஜெமீன்தாரனு ?

வே : அப்பிடின்னுதான் சொல்லிக்கிரு அவ.

ஆ : சரி, போயி...........

வே : இருக்கானுன்னு பார்க்கச் சொல்றயா? அவன் போயி எவ்வளவு நேரமாச்சு. வெறுங் கையோடு வந்தானும், அவ இலேசுப்பட்டவளா? வெள்ளிக்கிழமை விரதம்னு சொல்லி வெளியே அனுப்பிவிட்டா.

[ஆறுமுகம் யோசிக்கிருன்.]

ர : டே! ஆறுமுகம்! நானும் இவரும் போய்த் தேடிப் பிடிக்கரேம். நீ, நம்ம வீட்டுக்குப் போ. அம்மாவுக்குக் காச்சல்.

ஆ : போறேன், இதோ.

[டாக்டர் சேகரும் ரத்னமும், அந்த இடத்தை விட்டுப் போகின்றனர்.]

## காட்சி 44

இடம் :—பாதை.

இருப்போர் :—சேகர், ரத்னம்.

சே: இரவு நேரத்திலே, என்னென்ன கண்ருவிக் காட்சிகள் ரத்னம்!

ர: நீங்களென்ன கண்டீர்கள். இராத்திரி வேளென்னு, சங்கீதம், சரசம், குடும்பத்தில் சந்தோஷம் இவைகள்தான் இருக்குமென்று நினைக்கிறீர்கள். இவைகளைத்தான் பார்த்திருப்பீர்கள்.

இரண்டு உலகமல்லவா இருக்கிறது. உங்க உலகிலே இரவு பத்துமணி அடித்தா, தீர்ந்தது; சந்தடி கிடையாது.

எங்க உலகமிருக்கே, அதுக்கு, இரவு மணி பத்தானுத்தான் பொழுது விடியுதுன்னு அர்த்தம். தெருக்கோடிச் சண்டை, வீட்டுமேலே கல் வீசுவது, கலகம், கத்திக்குத்து, எல்லாம் அப்போதான் ஆரம்பமாகும். நீங்களெல்லாம் காலையிலே காப்பி சாப்பிட்டுவிட்டதும் சுறுசுறுப்பா வேலே செய்விங்க. எங்க உலகத்திலே சுறுசுறுப்பு ராத்திரி பத்து அடிச்சதும், கள்ளோ, சாராயமோ போட்டுகிட்டா, தீர்ந்தது, கோட்டை எல்லாம் தூளாகும்.

[தொலேவிலே கலகக் கூச்சல் கேட்கிறது.]

கேட்குதா, அதுதான் சங்கீதம்.

[ஒருவன் குடிவெறியாலே ஆடிக்கொண்டு வருகிருன்.]

பார்த்திங்களா! இதுதான் எங்க உலகத்து டான்சு. பாருங்க வேடிக்கையை.

[வந்தவனே வழிமறித்து]

ர: யாருடா அவன்?

வந்: (முறைத்துவிட்டுக் கூச்சலிடுகிருன்) டே! யாருடா நீ! நான் யாரு தெரியுமாடா.

[மடியிலிருந்து ஒரு பேனுக்கத்தியை எடுக்கிருன்.]

ர: (சேகரைப் பார்த்து) கத்தி மடக்கி இருப்பதுகூடத் தெரியலே பயலுக்கு, அவ்வளவு போதை.

[வந்தவனே ஓர் அறை கொடுக்கிருன். வந்தவன் கூச்சல் அழுகுரலாகிறது.]

ர: (சேகரைப் பார்த்து) இவ்வளவுதான் இந்த உலகத்து வீரம்! ஆரம்பத்திலே, வீராவேசமாக இருக்கும். முதல் அடி நம்மதாயிட்டா, பய காலிலே விழுவான்.

வ: அண்ணேன்! நான் யாரோன்னு பார்த்தேன். உங்க தம்பி அண்ணே நானு. உங்க கையாலே அடிபட்டா எனக்குக் கௌரவந்தாண்ணேன். நாம்ம ரெண்டுபேரும் மாமன் மச்சான் மாதிரி பழகனவங்கதானேண்ணேன். நீங்க பெத்த புள்ளெ மாதிரி அண்ணேன். நம்ம குரு நீங்கதானேண்ணேன்.

ர: டாக்டர்! பார்த்திங்களா? நானு அவனுக்கு அண்ணன், மாமன், அப்பன், குரு இவ்வளவு பந்துவுமாயிட்டேன், ஒரே அறை கொடுத்ததிலே.

[வந்தவனைப் பார்த்து]

போடா! டே! போடா!

[அவன் தள்ளாடி நடந்துகொண்டே]

வ: டே! நம்ம குருகிட்ட எவனுச்சம் வாலாட்டினு, தீத்துப்பூடுவேண்டா, தீத்துப்பூடுவேன். அண்ணேன்! நான் போயிட்டு வர்ரேன். தெரியாம அடிச்சிவிட்டேன். கோபிச்சிக்காதேண்ணேன்.

[போகிறுன்.]

ர: ஒரு தடவை டாக்டர், ஒரு டிராமாவிலே, புத்தர் கதை காட்டினுங்க. புத்தரு பெரிய ராஜா பிள்ளெ இல்லவா. சுகபோகத்திலேயே இருந்தவரு. ஒருநாள், ஊரைச் சுத்திப் பார்த்தாராம், நோய் பிடிச்சவன், ஏழை, நொண்டி, குருடன், பிணம் இப்படிக் கண்ருவிக் காட்சியாகப் பார்த்தாரு. உடனே அவரு மனமே குழம்பிப்போச்சி. செ! என்ன உலகம்பா இது! இதிலே இவ்வளவு ஆபத்தும் ஆபாசமும் இருக்கான்னு ஆயாசப் பட்டாராம்.

ஒரு இரவிலே, எங்க உலகிலே நடக்கற கோரத்தைக் கண்டா, உங்களாட்டம் இருக்கறவங்களெல்லாம், புத்தர் மனசு பாடுபட்டுதுன்னு டிராமா காட்டினுங்களே அதுபோலே, ஆய்விடுவிங்க. அவ்வளவு கோரம், கொடுமை, ஆபாசம் தாண்டவமாடும்.

சே: ஆமாம் ரத்னம்! பார்த்தாலே.........

ர: வாந்திவரும்! ஆனு, எல்லாம் எதனுலே வருதுன்னு நினைக்கிறிங்க. ஏழ்மை, படிப்பில்லாமெ இருக்கிறது; நல்லவங்க நமக்கென்னனு போயிடுவது; இதுதான் காரணம். இரண்டு

உலகம் இருக்கு டாக்டர், இரண்டு இருக்கு; ஒண்ணை ஒண்ணு கேலி செய்துகிட்டு, விரோதிச்சிக்கிட்டு. காமம், குடி, களவு, கொலை, கலகம் யாவும் இரண்டு உலகிலேயும் உண்டு. உங்க உலகத்துச் சமாசாரம், வெளியே சுலபத்திலே வராது. எங்க விஷயம் ஊர்பூராவும் பரவிவிடும்.

நாங்க மொந்தையிலே இருக்கற கள்ளுமாதிரி, பொங்கி வழியறது. உங்க உலகத்துக் கெட்ட நடவடிக்கை, கார்க் போட்ட சீசாவிலே ஊத்தி அனுப்பற ஔசத்தி சரக்கு மாதிரி.

[இருவரும் போகின்றனர்.]

## காட்சி 45

இடம் :—இடிந்த சுவரோரம்.

இருப்போர் :—ஒரு நோய்பிடித்த பெண்,
(பிறகு) ஜெகவீரன்,
(பிறகு) டாக்டர், ரத்னம்.

[சுவரோரத்தில், விளக்குக் கம்பத்தருகே முக்காடிட்டுக்கொண்டு, ஓர் உருவம் படுத்துக் கிடக்கிறது.

ஜெகவீரன், குடிவெறியாலே, அங்கு வருகிறான். உருவத்தைக் கண்டு, தடியாலே போர்வையைத் தள்ளிப் பார்க்கிறான். அவள் எழுந்து, வெறியாக இருக்கும் ஜெகவீரனைப் பார்த்து.]

அவள் : யாருய்யா நீ? அன்யாயம் செய்யறே. படுத்துக்கிட்டு இருக்கறவளே தட்டி எழுப்பறே.

ஜெ : (போதையில்) வா! வாடி இங்கே, பணம் தர்ரேன் பணம்.

அவள் : பணம் கொடுக்கறயா பணம் (அலட்சியமாக) எம்மாங் காசு கொடுப்பே?

ஜெ : எம்மாங் காசு வேணும்.

அவள் : ஒரு ருவா கொடுக்கணும்.

ஜெ : சீ, பிச்சைக்காரக் கழுதே! ஒரு ரூபாதானு பிரமாதம்.

[பணம் தருகிறுன்.

முந்தானையில் அதை முடிபோடுகிருள், அதற்குள் ஜெகவீரன் பதைத்து அவள் தோள்மீது கை போட]

அவள் : அட, இரய்யா.

ஜெ : (குளறலும் கொஞ்சலுமாக) ஒன் பேரு என்ன ?

அவள் : (வெறுப்பாக) ஆமாம்! அதை நீ கட்டயமாகத் தெரிஞ்சிக்க வேணுமா.

ஜெ : (அதே குரலில்) சொல்லும்மா, கண்ணில்லே, சந் தோஷமாப் பேசேன். சள்சள்ளுனு விழறயே.

[ஜெகவீரன் அவள் கையைப் பிடித்து இழுக்க, அவள் கூச்சலிட்டு]

ஐய்யய்யோ! யாருய்யா நீ! அக்ரமம் செய்யறே! மரியா தையா போய்விடு! இல்லேன்னு மானத்தை வாங்கிவிடுவேன்.

[சேகரும், ரத்னமும் வருகிறுர்கள்.

அவள் ஓடிவிடுகிருள். ஜெமீன்தார் திகைத்து நிற்கிருர்.

சேகர், ஜெமீன்தாரை அடையாளம் கண்டுபிடித்து விட்டு]

சே : ஜெமீன்தாரரேதான்!

ர : (கேலியாக) ஐயா தெருவிலே படுத்துக்கிடக்கறவளேக் கூட விடமாட்டார் போலிருக்கு.

ஜெ : (தடியை ஓங்கி யாருடா நீ.

[ரத்னம் தடியைப் பிடுங்கிக்கொண்டு]

ர : டாக்டர்! நமக்கு ரொம்ப நாளா ஆசை, இதைப்போல, தங்கப் பூண்போட்ட தடிமேலே.

ஜெ : யாரது ? சேகரா? டாக்டரா ?

சே : ஆமாம்! உங்களே எங்கெங்கே கண்டு தேடறது. வீட்டிலே, சுசீலா வீட்டிலே, கிளப்பிலே, எங்கே எல்லாம் தேடினேம்.

ஜெ : நான் இப்படிப் பொழுது போக்காக......

சே: சரி, வீட்டுக்குப் போவோம் வாங்க. ஒரு முக்கியமான வேலை. அவசரம்.

ஜெ: வீட்டிலே யாரும் இல்லை. இன்னக்கி வேலைக் காரனங்களுக்கெல்லாம் லீவ் கொடுத்து அனுப்பிவிட்டேன்.

ர: ரொம்ப நல்லதாப் போச்சி, விஷயமும் இரகசியமாப் பேச வேண்டியதுதான்.

[மூவரும் போகின்றனர்.]

## காட்சி 46

இடம்:—ஜெமீன்தாரர் வீடு.

இருப்போர்:—ஜெமீன்தாரர், சேகர், ரத்னம்.

[மூவரும் உட்காருகின்றனர்.]

ஜெ: சேகர்! தேவர் சொன்னாரா?

சே: சகலமும்! எனக்கு சுசீலா சௌக்கியமாக, சந்தோஷமாக இருக்கவேணும். அவ்வளவுதான்.

ஜெ: நீ நல்ல புத்திசாலி, டாக்டர், உன்னிடம் நிஜத்தைச் சொல்றேன். எனக்கு சுசீலா மேலே கொள்ளை ஆசை. உயிருதான்......

ர: இருக்கும் இருக்கும்! பாதை ஓரத்திலே கிடந்தவ மேலேயே ஐயாவுக்கு அவ்வளவு ஆசை இருந்தப்போ...

ஜெ: யாரு இந்தப் பயல்? குறும்பு பேசிக்கிட்டே இருக்கறான்.

ர: டாக்டர்! என்ன இது? இந்தப் பயக்கிட்ட என்னென்னமோ பேசிகிட்டு. வந்த வேலை சுருக்கா முடியவேணுமே.

ஜெ: யாரு இவன் முரட்டுப் பயல்.

ர: நம்ம முரட்டுத்தனத்தைப் பேச்சினாலே தெரிந்து கொள்ளமுடியாது.

[ஜெகவீரன் உட்கார்ந்திருக்கும் நாற்காலியை உதைத்து, ஜெகவீரனைக் கீழே உருளவைத்து]

இப்ப புரியும், நம்ம முரட்டுத்தனம்.

[ஜெகவீரர் எழுந்து தள்ளாடி நிற்கிறார்.]

ர: எங்கே அந்தப் படம்?

ஜெ: (திகிலடைந்து) எந்தப் படம்?

ர: உங்க அப்பன் படம்! ராஸ்கல்! ஏதாவது தெரியுமா?

சே: தேவர், பவானியைக் கொலைசெய்தார் என்பதைக் காட்டும் படம்.

ஜெ: என்னிடம் இல்லையே.

[ஜெமீன்தாரன் மேல் ரத்னம் பாய்ந்து தாக்கியபடி]

படம் இல்லையா! இல்லையா! இல்லே!

ஜெ: (திணறி) இருக்கு தரமுடியாது.

[மேலும் தாக்கி]

ர: தர—தர—முடியாது—முடியாதா—என்னிடமா சொல்கிறே. நான் யார் தெரியுமா? டாக்டரில்லே!—தெரியுதா.

[அடிபட்ட ஜெகவீரன் அழுக்குரலில்]

இருக்கு! இருக்குது! கொடுக்கிறேன்!

[ரத்னம் அடிப்பதை நிறுத்தியதும். சேகரைப் பார்த்து.]

ஜெ: டேட! சேகர்! ஒரு கொலைகாரப் பயலோடு வந்து கொள்ளையா அடிக்கறே.

[ரத்னம் ஜெமீன்தாரனைத் தாக்கி]

ர: டாக்டரிடம், என்னடா பேச்சு! உதைக்கிறது நானு, அங்கே பாத்து உறுமறயே என்ன? எடு படத்தை.

[பீரோ அருகே போகிறார். ரத்னம் பீரோவைத் திறக்கிறான்.

ஜெமீன்தாரன் நோட்டுக் கட்டு எடுத்து ரத்னத்திடம் கொடுத்து]

ஜெ: இதோ பார், இரண்டாயிரம் இருக்கு. என்னை விட்டு விடு. இந்த டாக்டரு உனக்கு என்ன கொடுக்க முடியும். இவனைத் துரத்து.

ர: நிஜமா இரண்டாயிரம் இருக்கா?

ஜெ: சத்தியமா? இன்னம் வேணுமானு, நாளைக்கு பாங்கியிலே வாங்கித் தருகிறேன். இந்த டாக்டர் உனக்கு இதற்குமேலேயா பணம் கொடுப்பான்.

[ரத்னம் நோட்டுக் கட்டைப் பத்திரப்படுத்திக் கொள்கிருன்.]

ஜெ: (வெற்றிச் சிரிப்புடன்) டே! சேகர்! பணம் கொடுத்தா, ஆள் அழைச்சிக்கிட்டு வந்தே, என்னைக் கொள்ளை அடிக்க. உன்ருலே எவ்வளவுன்னு செலவு செய்யமுடியும். பார்த்தாயா! இப்போ?

[ரத்னம் பணத்தைப் பத்திரப்படுத்தியானதும்]

ர: (ஜெமீன்தாரனைப் பார்த்து) எடுடா! படத்தை எடு!

ஜெ: (திகிலடைந்து) பணம் கொடுத்தேனே!

ர: அதைத்தான் வாங்கிக்கொண்டேனே! பணம் நீயாக் கொடுத்தது. படம், நான் கேட்கறது இல்ல, எடு படம். (தாக்குகிருன்.)

ஜெ: மோசக்காரா! கொள்ளைக்காரா!

[ஜெகவீரனை, ரத்னம் பிடித்துக்கொள்ள சேகர், பீரோவை ஆராய்கிருன். படம் இல்லை. திகைக்கிருன்.]

ர: (மேலும் தாக்கி) எங்கே படம்?

ஜெ: உயிர் போனுலும் சரி, படத்தைக் காட்டமுடியாது.

ர: அவ்வளவு பெரிய தைரியசாலியா நீ.

[வாயில் துணி அடைத்துக் கட்டிவிட்டு, கை விரல் களில் துணி சுற்றி, எண்ணெய் தோய்த்து நெருப்புக்குச்சி கிழித்து]

எத்தனை குடும்பங்களை நாசம் செய்திருப்பே, இந்தக் கைகளாலே! கொளுத்தறேன்! அப்ப உண்டாகுது பார் வேதனை, அதைவிட அதிகமான வேதனையை அந்தக் குடும்பமெல்லாம் அனுபவித்ததுன்னு தெரிந்துக்கொள்.

[ஜெகவீரன் கண்கள் மிரட்சி அடைகின்றன. தீக்குச்சி அணைகிறது. வேருேர் குச்சி கொளுத்திக்கொண்டு]

ரா: ஏழைகள் வயிறு எறியச் செய்தாயே, இப்ப பார், நெருப்புச் பிடிச்சதும், எவ்வளவு எரிச்சலா இருக்குன்னு தெரியும்.

[வேண்டாம்! வேண்டாம்! என்று ஜாடை காட்டு கிறான் ஜெகவீரன்.]

ர: தேவரை, சித்திரவதை செய்தவனல்லவா நீ!

[இதற்குள் சேகர் படத்தையும் காமிராவையும் கண்டுபிடித்துவிடுகிறான்.

ரத்னம், சேகரிடம் சென்று படத்தைப் பார்க்கிறான்.

ஜெகவீரன் பாய்ந்து சென்று ரத்னத்தின் கைத் துப்பாக்கி மேஜைமேல் இருந்ததை எடுத்து, ரத்னத்தை நோக்கிச் சுடுகிறான். ரத்னம் ஐயோ! என்று கூவிக்கொண்டு கீழே விழுகிறான்.

அந்த அலறலைக் கேட்டுப் பயந்த ஜெகவீரன், துப்பாக்கியைக் கீழே நழுவ விடுகிறான். சேகர், அதைப் பாய்ந்து எடுத்துக்கொள்கிறான். ரத்னத்தைப் பார்த்துவிட்டு, பிறகு துப் பாக்கியைக் காட்டி ஜெமீன்தாரனை மிரட்டு கிறான்.]

சே: கொலை! படுகொலை! செய்துவிட்டாய்! பார் உன்னைப் போலீசிலே! போலீஸ்! போலீஸ்!

[ஜெகவீரன் பேசமுடியவில்லை. வாய்க்கட்டை அவிழ்த்துக்கொண்டு.]

ஜெ: அப்பா! சேகர்! படம் உன் கைக்கு வந்துவிட்டது. சுசீலா உனக்கேதான். என் உயிரைக் காப்பாற்று. இவனை மறைத்துவிடலாம். என் தோட்டத்துக்குப் பக்கத்திலே ஒரு அகழி இருக்கிறது. அதிலே போட்டுவிடலாம்.

சே: என் உத்தம நண்பனைக் கொலை செய்த உன்னையா விடுவேன். முடியாது.

ஜெ: (காலில் வீழ்ந்து) நீ என்ன சொன்னாலும் கேட்கிறேன் சேகர்! என்னைக் காப்பாற்று.

சே: சொல்கிறபடி கேட்கிறாயா?

ஜெ: கேட்கிறேன்.

சே : சரி! காகிதம் எடு, நான் சொல்கிறபடி எழுது.

[ஜெகவீரன் காகிதம் எடுத்து எழுத முயற்சிக்கிருன். கை நடுக்கம். எழுத முடியவில்லை. சேகர் எழுதுகிருன்.]

ஜெ : இதிலே கையெழுத்துப் போடு.

சே : என்னப்பா எழுதியிருக்கிருய்?

சே : படிக்கிறேன் கேள்.

"நான் இன்றிரவு, வியாபார சம்பந்தமாக என்னிடம் பேசவந்த ரத்தினம் என்பவனைக் குடிவெறியால், துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுவிட்டேன்."

போடு கையெழுத்து. நீ, என் விஷயமாகவோ, சுசீலா விஷயமாகவோ, தேவர் விஷயமாகவோ ஏதாவது கேடு செய்ய நினைத்தால், இது சர்க்காரிடம் போய்ச் சேரும். நல்லபடி நடந்து கொண்டால், தப்பித்துக்கொள்ளலாம்.

ஜெ : சேகர்! கையெழுத்தான பிறகு என்னைக்...

சே : காட்டிக்கொடுக்க மாட்டேன். போடு.

ஜெ : (போடுகிருன் கையெழுத்து)

சே : உட்கார் நாற்காலியில்!

[கண்களைக் கட்டி வாயில் துணி அடைத்து, ஜெமீன் தாரரை நாற்காலியோடு சேர்த்துக் கட்டிவிட்டு, ஒருவிநாடி கழித்து ரத்னத்தைத் தொட அவன் சந்தடியின்றி எழுந்திருக்கிருன். இருவரும் வெளியே செல்கின்றனர்.]

## காட்சி 47

இடம் :—பாதை.

இருப்போர் :—சேகர், ரத்னம்.

சே : ரத்னம்! பிணம்போலவே இருந்தாயே இவ்வளவு நேரம்.

ர : நமக்கு இது பழக்கம் டாக்டர். போலீசிலே எப்பவாவது சிக்கிக்கிட்டா, கொன்னு போடுவாங்கோ. ஒரு அடி இரண்டு அடி

விழுந்ததும், கீழே பிணம்போல் விழுந்துவிட்டா அடியிலே இருந்து தப்பிக்கலாம். மூச்சுபேச்சே இல்லாமே கிடப்பேன் கால் மணி நேரம்கூட. அதெல்லாம் சாதகத்தாலே வர்றது.

**சே:** நான் பயந்தே போய்விட்டேன். துப்பாக்கி வெடிச்சுது, நீ கீழே விழுந்தே, என்பாடு அடிவயத்தையே கலக்கிவிட்டுது. துப்பாக்கியைக் கைப்பற்றிக்கொண்ட பிறகு, உன்னைப் பார்க்கிறேன், நீ, கண் அடிக்கறே. அப்புறம் தான், எனக்குத் தைரியம் வந்தது, யோசனையும் பிறந்தது.

**ர:** சரியான வேலை செய்தே போ! இனி அந்தப் பய வாலாட்ட மாட்டான். ஆனு என்னைத்தான் கொன்று போட்டே.

**சே:** ஆமாம்! ரோந்து வருகிற ரத்னம் செத்துவிட்டான். இனிமே, சுசீலாவின் அண்ணன் வாழப்போகிருன். ஆமாம்! ரத்னம்! துப்பாக்கி வெடிச்சுதே, எப்படியப்பா?

**ர:** வெடிக்கும், சாகடிக்காது. சும்மா விளையாட்டுத் துப்பாக்கிதானே. ஆளை மிரட்டத்தானே அது. கொல்ல வேணும்னு, துப்பாக்கி வேணுமா? இரட்டைத் துப்பாக்கி இல்லை இதோ (இரு கரங்களையும் காட்டுகிருன். சேகர், அவன் முதுகில் தட்டிக்கொடுக்கிருன். இருவரும் போகின்றனர்.)

## காட்சி 48

இடம் :—தேவர் வீடு.

இருப்போர் :—தேவர்.

[தேவர் சோகமாக உட்கார்ந்திருக்கிருர். சேகர் உள்ளே நுழைந்து.]

**சே:** ஒழிந்தது, உம்மை வாட்டி வதைத்த சனியன். சாபம் இல்லை! இதோ படம்!

[போட்டோவைப் பெற்றுக்கொண்டு.]

**தே:** ஆஹா! கிடைத்துவிட்டதா? என்னைக் கெடுக்க இருந்த படம் கிடைத்துவிட்டது. என் வாழ்விலே இருந்த பயம் ஒழிந்தது. சேகர் எப்படிக் கிடைத்தது?

**சே:** இதோ, ரத்னம் எல்லாம் சொல்வான்......

**தே:** (கோபத்துடன்) இந்தப் பயல்தானே சுசீலாவுடன்......

சே : சுசீலா, பவானியின் மகள்! மாசற்றவள். முழு விவரம் இவன் சொல்வான். ரத்னம் யார் தெரியுமா? சொர்ணத்தின் மகன்! உங்கள் குமாரன்.

[தேவர் ரத்னம் ஆலிங்கனம்.]

## காட்சி 49

இடம் :—சுசீலா வீட்டு மாடி அறை.

இருப்போர் :—சுசீலா, (பிறகு) சேகர்.

[சுசீலா விம்மிக்கொண்டிருக்கிருள். சேகர் உள்ளே நுழைந்து.]

சே : கண்ணே! சுசீலா? அழாதே. நமது கஷ்டம் தீர்ந்து விட்டது. நமது காதலை இனி யாரும் தடுக்கமுடியாது. (அவளை அணைத்துக்கொண்டு) இனி நாம் சாகவேண்டியதில்லை.

[விஷ சீசாவை எடுத்துக் கீழே போட்டு உடைத்து].

ஜெகவீரன் கட்டிய தூதுக்கோட்டை தூளாயிற்று சுசீலா! உன் தந்தையை மிரட்ட அவன் வைத்திருந்த பயங்கர இரகசியம் ஒழிந்தது. இனி ஜெமீன்தாரன் நாம் சொல்கிறபடி ஆடுவான்.

சு : என்ன? என்ன? ஆபத்து இல்லையா? வாழ்வு இருக்கிறதா? எனக்கா?

சே : நாளைக்கு நமக்கு நிச்சயமாகிறது திருமணம்.

சு : அன்பே! ஆருயிரே? என்மீது கொண்ட சந்தேகம்?

சே : சந்தேகம், சஞ்சலம், சங்கடம், சதி, சோகம் யாவும் பஞ்சு பஞ்சாகப் பறந்தே போய்விட்டது. உத்தம நண்பன் ரத்தினம், உன் தந்தையுடன் பேசிக்கொண்டிருக்கிருன். அவன் உபகாரம் செய்ததாலேதான், ஜெமீன்தாரனை அடக்க முடிந்தது.

சு : கண்ணாளா! நான் கனவு காணவில்லையே!

சே : (அவள் கன்னத்தைக் கிள்ளி) இது கனவா? (அவள் கரங்களை முத்தமிட்டு) இதுவும் கனவா?

சு : (ஆனந்தத்தால் கண்களை மூடிக்கொண்டு) இல்லை! வாழ்வு! இன்பம்: இன்ப வாழ்வு இது!

சே : ஒரு இரவு—ஒப்பற்ற இரவு சுசீலா! இந்த இரவு இன்பத்தோடு தொடங்கிற்று, இடையிலே நமது வாழ்வையே

வதைக்கும் பயங்கரம் நம்மைச் சூழ்ந்தது. அப்பப்பா! நினைத்தாலும் நெஞ்சு நடுங்குகிறது.

சு: ஓர் இரவு என்ருலும் உள்ளத்தை ஓராயிரம் ஈட்டி கொண்டு குத்திவிட்டதே, அன்பே!

சே: ஆனல் துயரம் தொலைந்தது, விடியப்போகிறது, வாழ்விலும் மறுமலர்ச்சி உண்டாகப் போகிறது. சுசீலா! உன் அப்பாவின் வாழ்வை அவதிக்குள்ளாக்கிய இரகசியம் கண்டு பிடிக்கப்பட்டு, அவனுடைய கொட்டம் அடங்கிவிட்டது. ஒரு இரவிலே, எவ்வளவு மர்மங்கள், குடும்ப ரகசியங்கள் வெளி வந்தன. சுசீலா! ரத்னம் யார் தெரியுமா? காதலனுக நடிக்கச் சொன்னுயே அந்தக் கள்ளனை.........

சு: சொன்னுை உண்மையை.

சே: பூராவும். ரத்னம் யார் தெரியுமா? உன் அண்ணன். உன் தகப்பனுரின் பால லீலையின் விளைவு. சொர்ணம் என்ற மாதை தேவர் காதலித்தார், உன் அம்மாவைக் கலியாணம் செய்துகொள்வதற்கு முன்பு. பிறகு கைவிட்டார். சொர்ணத்தின் மகன், ரத்னம்.

சு: என்ன ஆச்சரியம்!

சே: இன்னும் எவ்வளவோ இருக்கிறது. ஆயுட் கால முழுதும் நாம் இந்த ஓர் இரவை மறக்கமுடியாது.

[ஜன்னலருகே போய் நின்றுகொண்டு வானத்தைப் பார்த்துவிட்டு]

சுசீலா! சந்திரன் எப்படி, மேகங்கள சூழ்ந்தாலும், விரட்டி விட்டு, வெற்றியுடன் பிரகாசிக்கிருனே, அதுபோல நமது காதலும், ஆபத்தை எல்லாம் வீழ்த்திவிட்டு வெற்றியுடன் ஜோதியாக விளங்குகிறது. சந்திரன்கூடப் பொறுமைப் படுவான் சுசீலா!

[காதல் களிப்புடன் "வானில் உறைமதியே" என்று பாடுகின்றனர்.]

# நீதிதேவன் மயக்கம்

[பூலோகத்திலே புதுக் கருத்துக்கள் பரவிவிட்டன வாம். பழைய நிகழ்ச்சிகளுக்கு நாம் கூறின முடிவுகள், தீர்ப்புகள் தவறு என்று புகார் கிளம்பிவிட்டது. ஆகவே, இனிப் பழைய தீர்ப்புகள் செல்லுபடியாகா என்று கூறிவிடு வார்கள் போலிருக்கிறது. இதை உத்தேசித்து, புனர் விசாரணைக் கோர்ட் நியமித்திருக்கிறேன், என்று ஆண்டவன் அறிவித்தார். நீதிதேவன், வழக்கு மன்றத்தைக் கூட்டினார். முதல் புனர் விசாரணையாக, இராவணனின் வழக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. கம்பர், பழைய கோர்ட் தீர்ப்பின்படி இராவணன் குற்றவாளிதான், இலங்கை அழிந்தது நியாயமே, இராவணன் இரக்கமற்ற அரக்கன், என்று நீதிதேவனிடம் சமர்ப்பிக்கிறார். இராவணன் தன் வழக்கைத் தானே நடத்த இசைகிறான். கோர்ட்டிலே, நீதி தேவன் தலைமை தாங்குகிறார். கம்பர், ஓலைச் சுவடிகளுடன், தயாராக இருக்கிறார். சாட்சிக ளாகச் சூர்ப்பனகையும், கைகேயியும் ஆஜராகி யுள்ளனர். இராவணன், எப்போதும்போலவே கெம்பீரமாக வருகிறான். வழக்கு ஆரம்ப மாகிறது.]

நீதி: இலங்காதிபனே! உன் கட்சியை எடுத்துக்கூற யாரை நியமித்திருக்கிறீர்?

இரா: என்னையே நம்பி ஏற்றேன் இப்பணியையும்! கம்பரே! உமது கவிதையிலே, கொஞ்சம் எடுத்துக்கொள்ள அனுமதியுங்கள்.

[கம்பர் புன்னகை புரிகிறார்.]

நீதி: உமது கட்சியை நீரே எடுத்துப் பேசப்போகிறீரா?

இரா: ஆமாம்! நான் போதும் அதற்கு என்று நம்புகிறேன்.

நீதி: வணங்காமுடியான் என்றோர் பெயர் உமக்குண்டா?

கம்: பெயர் என்று கூறுவதைவிட, வசைமொழி என்பது பொருந்தும்.

இரா: பொருத்தம் பார்ப்பதானால், வணங்காமுடியான் என்று ஓர் பழிச்சொல் உண்டு என்று கூறலாம்.

நீதி: சொல் விளக்கத்துக்குள் நுழையவேண்டாம். அவ்விதம் அழைக்கப்பட்டதுண்டா?

இரா: ஆமாம்!

நீதி: ஏன்?

இரா: நான் கேட்கவேண்டிய கேள்வி அல்லவா அது!

கம்: எவருக்கும் வணங்கினதில்லை, மதிப்பதில்லை, அவ்வளவு மண்டைக் கர்வம்..........என்று பொருள்படும்.

இரா: பொருள்படும் என்று இழுப்பானேன் கம்பரே! நீரே தான் சொல்லிவிடுமே, எனக்கு மண்டைக்கர்வம் என்று!

நீதி: எவரையும் வணங்காத காரணம்?

இரா: அவசியம் ஏற்படாததால்!

நீதி: தக்க சமாதானமா அது?

இரா: நான்மட்டுமா? எத்தனையோ மண்டலாதிபதிகள் வெற்றி வீரர்களாக இருக்கும்வரையிலே, வணங்காமுடி மன்னர்களாகத்தான் இருந்தனர்.

கம்: அவர்கள் கூடத், தமது இன்பவல்லிகளின் தாளிலே வீழ்ந்ததுண்டு, மஞ்சத்திலே..............

இரா: நமது கம்பருக்கு, அந்த ரச்வர்ணனையிலே அபாரத் திறமை!

நீதி: மாலைநேரப் பேச்சு, காலைவேலைக்கு உதவாது.

இரா: பூலோகத்திலே எத்தனையோ மன்னாதி மன்னர்கள், வீராதிவீரர்கள், மற்றொருவருக்கு வணங்காமல், வாழ்ந்தனர், அதுபோலத்தான், நானும் வணங்காமுடியனாக வாழ்ந்துவந்தேன். அது என் வீரத்தின் இலட்சணம், வீணர்கள் அதையே என்னைப் பழிக்கவும் பயன்படுத்திக் கொண்டனர்.

கம்: அந்த வாசகத்தைப்பற்றிய விவாதத்தை விட்டு விடலாம் என்று எண்ணுகிறேன். ஏனெனில் வணங்காமுடியன் என்ற பெயர் துரியோதனனுக்கும் உண்டு! ஆகவே இந்தச் சில்லறைக்குச் சிந்தனையைச் செலவிட வேண்டாம்: முக்கிய மான விஷயத்தைக் கவனிப்போம். ஐம்புலன்களை அடக்கி ஒடுக்கி, பரமனை வேண்டித் தவம் செய்துவந்த முனிபுங்கவர் களின் யாகயோகாதி காரியங்களை இலங்காதிபன், கெடுத்து நாசமாக்கி வந்தான். இப்பெருங் குற்றத்துக்கு என்ன பதில் கூறுவான்?

இரா: தவம், ஆரியமுறை, அதை என் இனக் கலாசார முறைப்படி நான் ஆதரிக்க முடியாது, யாகம் என்பது ஜீவன்களை வதைத்து, பொருளைப் பாழாக்கி, மக்களை ஏய்க்கும் ஆரிய தந்திரம் என்பது, என் இனத்தின் சித்தாந்தம். ஆகவே என் ஆட்சிக்கு உட்பட்ட இடங்களிலே, ஆரியர் பிரவேசித்து, என் கலாசார விரோதமான காரியத்தைச் செய்து, அதன்மூலம் என் கட்டளையை மீறினதால், நான் யாகங்களை அழித்தேன்.

கம்: அதைத்தான் குற்றம் என்று கூறுகிறோம்.

இரா: அது எப்படிக் குற்றமாகும்? என் ஆட்சிக்குட்பட்ட இடத்திலே, என் மக்களுக்கு எது சரி என்று தீர்மானிக்கவும், அதற்கு மாறாக நடப்பவர்களைத் தண்டிக்கவும் எனக்கு, அரச உரிமை உண்டு. அயோத்தியிலே தசரதன் செய்த அஸ்வமேத யாகத்தையா அழித்தேன்? என் ஆளுகையிலிருந்த தண்ட காரண்யத்திலே தவசி வேடத்திலே புகுந்து என் தடை உத்தரவை மீறினவர்களை, யாக காரியங்கள் செய்யலாகாது என்று தடுத்தேன். மீறிச் செய்தனர், அழித்தேன். உங்கள் இராமன், அதே தவத்தை ஒரு சூத்திரன் செய்ததற்காக, அவனுடைய இராஜ்யத்தில், அவன் அனுஷ்டித்த ஆர்ய தர்மப்படி தவம் செய்தது குல முறைக்குத் தகாது என்று கூறிக் கொல்லவில்லையா? ஆரிய இராமன் ஆரிய பூமியில் ஆரிய

தர்மத்தைக் காப்பாற்ற அநாரியத்தவசியைக் கொன்ருன்! அவன் உரிமை அது என்ருன். என் நாட்டிலே என் உரிமையை நான் நிறைவேற்றுவது, தவருகுமா?

**கம் :** அதுகூடக் கிடக்கட்டும். நீ இரக்கமெனும் ஒரு பொருளிலா அரக்கன்! ஆகவேதான் உன்னை இராமர் கொன்று இலங்கையை அழித்தார். இரக்கம் உயர்ந்த பண்பு! அதை இழந்தவர்களைத் தண்டிப்பது, தேவப் பிரீதியான காரியம், நியாயம், தர்மம்; அவஸ்யம்!

**நீதி :** (கம்பரைப் பார்த்து) இரக்கமின்றி இரவணன் நடந்து கொண்டவைகளை விவரமாகக் கூறும்............

**கம் :** ஆஹா! தடையின்றி இராவணன் மகாபண்டிதன், வல்லமை மிக்கவன், தவசியும்கூட, சாமவேதம் பாடினவன்! சௌர்யத்தில் நிகரற்றவன். எல்லாம் இருந்தது அவனிடம், இரக்கம் என்ற ஒரு பொருள்தான் இல்லை. இரக்கமின்றி இராவணன் செய்த பல கொடுஞ் செயல்களை நான் விவரமாகக் கூறுகிறேன் கேளுங்கள்.

**இரா :** கம்பரே! சிரமம் ஏன் தங்களுக்கு? இரக்கம் என்ற ஒரு பொருள் இல்லாத அரக்கன் என்பது குற்றச்சாட்டு. அதற்கு ஆதாரம் கூறி ஏன் அலுத்துப் போகவேண்டும்? நானே கூறு கிறேன், கேளும். பூங்கொடி துவள்வது போலானுள், அந்தப் பெண் அவிர்மேனியாள், சீதா நான் சிறை எடுத்தபோது! நான் இரக்கங் காட்டவில்லை!

அலறினுள், நான் அரக்கன் என்று அறிந்ததும், நான் இரக்கங்காட்டவில்லை! சபித்துவிடுவேன் என்ருள். புன்னகை புரிந்தேன்! அழுதாள், சிரித்தேன்! பிராணபதே! என்று கூவினுள், எதற்கும் நான் இரக்கங்காட்டவில்லை!

அடே துஷ்டா! அரிபரந்தாமனின் அவதாரமடா இராமன். அவனுடைய தர்மபத்தினியையா இந்தக்கோலம் செய்கிருய் என்று வயோத்திக சடாயு வாய்விட்டு அலறினன். சீதை உயிர் சோர, உடல்சோர, விழியில் நீர்வழிய, கூந்தல்சரிய, ஆடை நெகிழ, அலங்கோலமாக இருக்கக் கண்டு! போடாபோ! என்றேன். போரிடத் துணிந்தான், போக்கினேன் அந்தப் புள்ளின் உயிரை! இரக்கம் காட்டினேனு? இல்லை!

அரசிளங்குமரி சீதையை அசோகவனத்திலே சிறை வைத்தேன். ராஜபோகத்தில் இருக்கவேண்டிய அந்த ரமணி யைக் காவலில் வைத்தேன். சேடியர் புடைசூழ நந்தவனத்திலே

ஆடிப்பாடி இருக்கவேண்டிய அழகியை, அரக்கமாதர் உருட்டி மிரட்ட, அவள் அஞ்சும்படியான நிலையிலே வைத்தேன். அந்த அழகியின் கண்கள் குளமாயின! நான் இரக்கம்காட்டி னேனா? இல்லை! இரக்கம் காட்டவில்லை! தேகம் துரும்பாக இளைத்துவிடுகிறது, தேவ காலனே! என்று என்னிடம் கூறினர். கோதாக் கூந்தல்! பேசா வாய்! வற்றாத ஊற்றெனக் கண்கள்! வைதேஹி, விசாரமே உருவெடுத்தது போலிருக்கிறாள் என்று சொன்னார்கள்.

பழம், பால், மது, மாமிசம், மலர், எதனையும் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டாள் ஜானகி என்று தெரிவித்தார்கள்! சரி! புத்தி கூறு! மிரட்டு! கொன்றுபோடுவேன் என்று சொல்! பிடிவாதம் கூடாது என்று தெரிவி! தேவர்க்கும் மூவர்க்கும் அஞ்சாத இலங்காதிபதி, ஒரு தையலின் கண்ணீருக்கு அஞ்சமாட்டான் என்று சொல்!—என்றுதான் என்னிடம் சேதி சொன்னவர் களுக்குச் சொல்லி அனுப்பினேன் இரக்கம் காட்டவில்லை!

கொலுமண்டபத்திலே, கொட்டி அளந்தான் விபீஷணன்! தம்பீ! உனக்குத் தாசர் புத்தித் தலைக்கேறிவிட்டதடா! என்று கூறி உட்காரவைத்தேன். இரக்கம் காட்டவில்லை!

போதுமா? இன்னம் ஏதாகிலும் கூறட்டுமா, ஈரமற்ற நெஞ்சினன் நான் என்பதற்கான ஆதாரங்கள்! இதேது, அரக்கன் முரடன் மட்டுமில்லை, முட்டாளாகவுமன்றோ இருக் கிறான், எதிர்க்கட்சிக்காரன் கூறுவதைவிட, ஆணித்தரமாகக் குற்றப்பட்டியைத் திட்டமாகக் கூறுகிறானே, என்று யோசிக் கிறீர்களா?

இன்னமும் கொஞ்சம் செந்தேன் ஊற்றுகிறேன் உங்கள் சிந்தனைக்கு!

களத்திலே, என் தம்பி மாண்டான்! கதறினர் மக்கள்! என் மகன் மாண்டான், மண்டோதரி மாரடித்து அழுதாள்! என் மக்களின் பிணம், மலைமலையாகக் குவிந்தன, எங்கும் இரத்தம்! எங்கும் பிணம்! நாசம் நர்த்தனமாடிற்று! அயோத்தியான் ஏவிய அழிவு, ஆழிசூழ் இலங்கையில் இடம் பிடித்துக் கொண்டது. கானமும் கட்டளையும், ஏவலரின் பணிவான பேச்சும் காவலரின் கெம்பீர முழக்கமும், எந்த இலங்கையிலே நித்ய நாதமாக இருந்ததோ, அங்கு குடலறுத்தோர் கூக்குரல், கரமிழந்தோர் கதறல், பெண்டிரின் பெருங்குரல், பிணங்களைக் கொத்தவந்த பெரும் பறவைகளின் சிறகொலி, இவை நிரம்பின! நான் இரக்கம் காட்டினேனா? அதுதான் இல்லை.

[இராவணன், படபடவென்று பேசினவன், கொஞ்சம் களைத்து உட்கார்ந்தான். கோர்ட்டாரின் உத்தரவின் பேரில் அவனுக்கு ஒரு கோப்பையிலே சோம ரசம் தருகிறார்கள்! இராவணன் புன்னகையுடன் மறுத்து விடுகிறான்.]

"என் அரசு உலர்ந்து, அது தெரிந்து என் உற்சாகம் உலர்ந்தபோது, இதுபோல் 'ரசம்' நான் பருகிடவில்லை! பழி வாங்குதல் எனும் பானத்தையே விரும்பினேன்! இரக்கம் என்ற ஒரு பொருள் இலா, அரக்கன்! கம்பரே! அதுதானே, உமது கவிதா நடையிலே உள்ள, வாசகம், என்மீதுள்ள குற்றச்சாட்டு! இராவணன், ஏன் அழிக்கப்பட்டான்? அவன், இரக்கம் என்ற ஒரு பொருள் இல்லா அரக்கனானபடியால்! மிகச் சுருக்கமாக முடித்துவிடுகிறீர், கவியே!

நான், என்மீது குற்றம் சாட்டுபவருக்கு, சிரமம் அதிகம் கூடாது என்பதற்காகத்தான், எந்தெந்த சமயத்திலே, நான் இரக்கமின்றி நயந்துகொண்டேன் என்ற விஷயங்களைக் கூறினேன்.

கம்: எங்களால்கூட முடியாது; அவ்வளவு தெளிவாகக் கூற!

இரா: இதைவிடத் தெளிவாக இருக்கும், இனி என்னுடைய பதில்.

நீதி: பலசமயங்களில், இரக்கமின்றி நடந்துகொண்டதை, விவரமாக எடுத்துக் கூறினபிறகு, பதில் என்ன இருக்கிறது தெரிவிக்க?

இரா: பதில், ஏராளமாக இருக்கிறது. அநீதியுடன் நடந்தாகவேண்டும் என்று தீர்மானிக்கும் வழக்கு மன்றங்களைக்கூட நீதியின் பக்கம் இழுக்ககூடிய அளவு, பதில் உண்டு, கேளுங்கள். இரக்கம் காட்டவில்லை நான்? யாரிடம்? ஒரு பெண்பாலிடம்! அழுத கண்களுடன் அசோக வனத்திலே கிடந்த அபலையிடம்! ஏன்? அரக்கனல்லவா நான்! இரக்கம் என்ற ஒரு பொருள்தானே கிடையாது, கம்பர் கூறியதுபோல, கம்பர் கூறுவதானாலும் சரியே, தாங்கள் கூறினாலும் சரியே, இரக்கம் என்றால் என்ன? இலட்சணம் கூறமுடியுமா? இன்ன விதமான நிலைமைக்குத்தான் இரக்கம் என்று பெயர் என்று திட்டமாகக் கூறமுடியுமா?

கம் : இலங்காதிபதி, வழக்குமன்றத்திலே நிற்கிருர், பள்ளிக் கூடத்திலே அல்ல !

இரா : நீதியின் கூடத்திலே நிறுத்தப்பட்டு இருக்கிறேன், ஆகவேதான் என்மீது சாட்டப்பட்ட குற்றத்தின் தன்மையை, குற்றம் சாட்டுபவர்கள் முதலில் விளக்கவேண்டும் என்று கேட்கிறேன். உங்களுக்குத் தண்டிக்கமட்டுந்தான் தெரியுமா? விளக்கவும் தெரியவேண்டுமே! கூறுங்கள் இரக்கம் என்ருல் என்ன ? எது இரக்கம் ? உங்களைக் கேட்கிறேன் ? உங்களை ! உங்களை ! ஏன் ஊமையாகிவிட்டீர்கள் ? இரக்கம் என்ருல் என்ன பொருள் ?

நீதி : இரக்கம் என்ருல், பிறருடைய நிலைமை கண்டு வேதனையைக் கண்டு, பரிதாபப்படுவது, மனம் இளகுவது, இளகி அவர்களுக்கு இதம் செய்வது............ .....

கம் : இதம் செய்யாவிட்டாலும் போகிறது, இன்னல் செய்யாமலாவது இருப்பது.

இரா : அதாவது தன்னுல் என்ன வேண்டுமானுலும் செய்ய முடியும் என்ற ஆதிக்கம் இருக்கவேண்டும். அந்த ஆதிக்கத்தைக் கண்டு அஞ்சுபவன் ஒருவன் இருக்கிருன், அவனுல் ஆதிக்கக்காரனை எதிர்க்கவோ, தடுக்கவோ முடியாது, அந்த நிலையிலே அவன் இருக்கும் பரிதாபகரமான, உதவியற்ற நிலைமையைக் கண்டு மனம் உருகுவது, அவனுக்குக் கேடு ஏதும் செய்யாதிருப்பது. கூடுமானுல், அவனுக்குள்ள கஷ்டத்தைப் போக்குவது ; இதுதானே இரக்கம்.

கம் : மகாபண்டிதனல்லவா ! அருமையான வியாக்யானம் செய்துவிட்டாய் இரக்கம் என்ற தத்துவத்திற்கு !

இரா : தாகவிடாயால் தவித்துக் கொண்டிருக்கிறது ஒரு புள்ளிமான்! அடவியிலே நீர்தேடி அலைகிறது! அந்த நேரத்திலே சிறுத்தை ஒன்று மானைக் கண்டுவிடுகிறது, மான் மிரள்கிறது, சிறுத்தை அதன் நிலை கண்டு, மனம் இளகி, பாபம், இந்த மானைக் கொல்லலாகாது என்று தீர்மானித்து, இரக்கப்பட்டு, மானை அருகாமையிலுள்ள நீர் நிலையத்துக்கு அழைத்துச் சென்று, அது நீர் பருகும்போது வேறு துஷ்டமிருகத்தால் ஒரு தீங்கும் நேரிடாதபடி காத்துக்கொண்டிருக்கிறது ; அதுதானே இரக்கம் !

கம் : சிலாக்கியமான இரக்கம் ! ஆனுல் சாத்தியமா என்பது வேறு விஷயம்.

இரா: மானை அம்புஎய்திக் கொல்ல வருகிறுன் வேடன். வேடனுக்கு, இரக்கத்தின் மேன்மையை எடுத்துக்கூறி, தவசி தடுக்கப்பார்க்கிறுர். வேடன் என்ன செய்வான்?

கம்: வேடனு? அவன் தவசியின் பேச்சைத்தள்ளி விடுவான். முரடனல்லவா அவன்?

இரா: முரடனுகமட்டுமா இருக்கிறுன். ஞானக்கண்ணில்லாக்குருடன்.

கம்: வாஸ்தவம்! வாஸ்தவம்!

இரா: அந்த முரடன், குருடன், ஊமையல்ல! அவன் என்ன சொல்வான் தெரியுமா, தவசியைப் பார்த்து? முனி புங்கவரே! என்தொழில் காட்டிலே வேட்டை யாடுவது. இந்த மானைநான் கொன்றுல்தான் இன்றைய வாழ்வு எனக்கு. இரக்கமில்லையா என்று கேட்கிறீர், தவசியே! பரமனையே நோககித் தவம் புரியும் உமது கூட்டத்தவர், யாகங்களிலே, ஆடுகளைப் பலியாக்குகிறீர்களே, அந்தச் சமயம், இரக்கம் என்ற ஒரு பொருள் உம்மை விட்டுப் போய்விடும் காரணம் என்ன? என்று கேட்பான். கேட்டான் என்று கருதுவோம், முனிவர் என்ன சொல்வார்!

கம்: முட்டாளே! யாகம்பகவத்ப்ரீதிக்கான காரியம், என்று கூறுவார்.

இரா: இறைவன் வழிப்பாட்டுக்கான காரியத்துக்கும் இரக்கம் என்ற பண்புக்கும் பகையா ஸ்வாமீ! என்று வேடன் கேட்பானே!

நீதி: கற்பனைக்காட்சிகள், ஏன்! உன் கட்சியைக்கூறு. இரக்கம் என்றுல், பிறர் கஷ்டப்படுவது கண்டு மனம் இளகுவது அந்த உயரிய பண்பு உன்னிடம் இல்லை. இருந்ததா?

இரா: இல்லை! நானே கூறினேனே, எந்தெந்தச் சமயங்களிலே இரக்கம் கொள்ள வில்லை என்பதை. நான், இரக்கப்பட்டேன் என்று புளுகுபேசித்தப்பித்துக் கொள்ள விரும்பவில்லை. என்வாதம்வேறு.

நீதி: அது என்னவாதம்? கூறும் கேட்போம்.

இரா: இரக்கம், எனக்கு இல்லை, என்று கூறி, அந்த ஒரு பொருள் இல்லாத நான் அரக்கன் என்று கூறி, அரக்கனுன நான் அழிக்கப்பட்டது; இரக்கம் எனக்கு இல்லாததால்தான் என்று

பேசுகிறுர்களே அது வீண் அபவாதம்! ஏனெனில், ஒருவனுடைய சிந்தனையும் செயலும், அவனவனுடைய தொழில் வாழ்க்கைமுறை, இலட்சியம், என்பனவற்றைப் பொறுத்திருக்கிறது. அந்த நிலையிலே, கருணைகரன் என்று புகழப் படுபவர்களும்கூட. பலசமயங்களில் இரக்கமற்று இருந்திருக்கிறுர்கள். இரக்கம் இல்லாதார் அரக்கர் என்றுல், அனைவரும், ஆண்டவன் உட்பட அனைவரும் அரக்கர்!

நீதி: விசித்தரமான வாதமாக இருக்கிறது.

இரா: வேடன், இரக்கத்தைக் கொள்ள முடியாததற்குக் காரணம் அவனுடைய வாழ்க்கைமுறை, தொழில்! வேதமோதி வேள்வி நடாத்தும் முனிவர்கள் யாகப் பசுக்களைச் சித்திரவதை செய்யும்போது இரக்கம் காட்டாதது. அவர்கள், இரக்கம் என்பதைவிட, பக்தி என்றவேருேர் இலட்சியத்துக்கு அதிகமதிப்புத் தருவதே காரணம். வேடனின் வாழ்வும், வேதமோதியின் உயர்வும். அவரவருக்கு, இரக்கத்தைவிட அதிக அவசியமுள்ளதாகத் தெரிகிறது. ஆஸ்ரமங்களிலே உள்ள மான் தோல் ஆசனங்கள், இரக்கத்தின் அடையாளச் சீட்டுகளா? விதவிதமான யாகங்கள், இரக்க லட்சியவாதிகளின் செயலா? எங்கே இரக்கம்? ஏன் இல்லை!! அவர்கள் அரக்கரல்லவா? நான் மட்டுமா அரக்கன்?

க: தபோதனர்களை, அரக்கராக்கி விட்டார் இலங்கேசன்! இனித்தயாபரனையும் குற்றம் சாட்டுவார்போலும்.

இரா: தாய்பிடிக்கத் தந்தை அறுக்கச் சீராளனைக் கரியாக்கும்படி, தயாபரன் சோதித்தது, இரக்கமென்ற ஒரு பொருள் இல்லாதவர் அரக்கர் என்ற உமது இலக்கணத்தைப் பொய்யாக்கத்தான்! சிறுத்தொண்டன் உமது சிறுமதிக் கோட்பாட்டைப் பெருநெறியெனக் கொண்டிருந்தால், சிவனுரை நோக்கி, 'ஐயனே! பாலகனைக் கொன்று கறிசமைக்கச் சொல்லுகிறீரே? எப்படி மனம்வரும்? இரக்கம் குறுக்கிடுமே" என்று கூறியிருந்திருப்பார், உமது தொண்டர் புராணமும் வேறு உருவாகி இருக்கும், அல்லவா?

க: பேசினுல் மிருகத்தின் கதை, இல்லாவிட்டால் மகேசன் கதை, இவ்வளவுதானு? இவை இரண்டும், வாதத்துக்குத் தக்கவையாகா, ஒன்று பகுத்தறிவு இல்லாத பிராணிக்கதை, மற்ருென்று மனித நீதிக்குக்கட்டுப்பட வேண்டிய அவசியமில்லாத மகேஸ்வரன் விஷயம். பிரஸ்தாப வழக்குக்கு இரண்டும் பொருந்தா.

நீ: கம்பர் கூறினது முற்றிலும் உண்மை! காட்டில் உலாவும் புலியும் கைலையில் உலவும் ஈசனும் கோர்ட்விவகாரத் திலே உனக்கு உதவி செய்ய முடியாது.

இரா: வேள்வி செய்யும் முனிவர்கள், இரக்கம் கொள்ள வில்லை என்பதைக் கூறினேனே.

நீதி: ஆமாம் கம்பரே! குறித்துக்கொள்ளும் சரி, இராவ ணரே! வேறு உண்டோ?

இரா: ஏராளமாக! தாங்கள், எதற்குக் கட்டுப்பட்டவர்?

நீதி: நீதிக்கு!

இரா: மண்டோதரி, இதுசமயம் இங்கு நின்று கதறினால்...

நீதி: நீதிநெறியினின்றும் நான் அப்போதும் தவரமுடியாது.

இரா: அவளுடைய கண்ணீரைக் கண்டும்......

நீதி: கண்ணீருக்காகக் கடமையினின்றும் தவறமாட்டேன்.

இரா: அப்படியானால், கடமை பெரிதா, இரக்கம் பெரிதா?

நீதி: சிக்கல் நிறைந்த கேள்வி............

இரா: சிக்கல் நிறைந்ததுதான், ஆனால் பலருக்கும் இந்தப் பிரச்னை வந்தே தீரும். கடமையின்படிதானே நீர் நடந்தாக வேண்டும்.

நீதி: ஆமாம்!

இரா: கடமையை நிறைவேற்றுகையிலே, அச்சம், தயை, தாட்சணியம், எதுவும் குறுக்கிடக் கூடாது. ஆக, அறமன்றத் திலே நீர் வீற்றிருக்கும்போதெல்லாம் அரக்கர்தானே!

நீதி: கம்பரே! குறித்துக்கொள்ளும்!

க: உயர்ந்த இலட்சியத்துக்காக உழைக்கிறவர்கள், இரக் கம் என்பதை இலட்சியப்படுத்தாதது குற்றமல்ல!

இரா: ஆம்! ஆனால், எது உயர்ந்த இலட்சயம், எது குறைந்தது என்பது, அவரவர்களின், சொந்த அபிப்பிராயம், அந்த அபிப்பிராயத்தை உருவாக்குவது அவரவர்களின் தொழில், வாழ்க்கைமுறை ஜீவியத்திலே அவர்களுக்கென்று ஏற்பட்டு விடும் குறிக்கோள் இவற்றைப் பொறுத்தது.

நீதி: சரி! வேறு உண்டோ?

இரா: ஏன் இல்லை! தபோதனரும் நீதிபதியும் மட்டுந்தானு? என்னைப் போன்றவர்கள், இன்னும் ஏராளம். சாட்சிகளை அழையுங்கள் இனி.

[ சாட்சிகள் பட்டியைப் பார்க்கிருர் நீதிதேவன்.]

[ சூர்ப்பனகை வருகிருள்.]

இரா: தங்கையே! உன் கதையைக் கூறு.

நீதி: எழுதிக் கொடுத்து விடட்டுமே!

இரா: ஆமாம்! ஆயிரமாயிரம் வீரர்களுக்கு அதிகாரியாக வீரமொழி பேசிவந்த என் தங்கை, இப்போது, நாலுபேர் நடுவே நின்று பேசமுடியாதபடி, தான் ஆக்கப் பட்டுவிட்டாள்.

[ சூர்ப்பனகை ஒரு ஓலையைக் கொடுக்கிருள்.

கோர்ட்டிலே ஒருவர் அதை வாசிக்கிருர் ]

"இராம இலட்சுமணரைக் காட்டிலே கண்டேன். மூத்த வரிடம் மோகம் கொண்டேன், எவ்வளவோ, எடுத்துக் கூறினேன், காதல் கனலாகி என்னைத்தகித்தது. மன்ருடினேன்!"

இரா: கொஞ்சம் நிறுத்து! நீதிதேவா! ஒருபெண், அரச குடும்பத்தவள், அதிலும் வணங்காது வாழ்ந்துவந்த என்தங்கை வலியச்சென்று தன்காதலை வாய்விட்டுக் கூறினுள். இராமன் மறுத்தான்! ஏன்?

க: இது தெரியாதா! ஸ்ரீஇராமசந்திரர், ஏகபத்தினி விரதர்!

இரா: ஏகபத்னி விரதம் என்ற இலட்சியத்திலே அவருக்குப் பற்றுதல்.

க: ஆமாம்!

இரா: அந்த இலட்சியத்தை அவர் பெரிதென மதித்தார்.

க: பெரிதென மட்டுமல்ல, உயிரென மதித்தார்.

இரா: தாம் உயிரென மதித்த ஒரு இலட்சியத்தின்படி நடந்து கொள்ள வேண்டுமென்று, ஒருமங்கையின் கண்ணீரைக் கண்டால் இயற்கையாகவரும், இரக்கத்தை இரவிகுலச்சோமன், தள்ளிவிட்டார்.

க: இரக்கம் காட்டுவதா இந்தத்தூர்த்தையிடம்?

இரா: காதலைத் தெரிவிப்பவர் தூர்த்தையா?

க: இஷ்டமில்லை என்று கூறினபிறகு, வலியச் சென்று மேலே விழுவது, உயர்குல மங்கையின் பண்போ?

இரா: கம்பரே! என்தங்கை சூர்ப்பனகை கண்ட ஆடவர் மீது காமுற்றுக் கருத்தழிந்தவளா? இராமனைக் காணு முன்பு, அன்று நடந்து கொண்டதுபோல, என்தங்கை வேறு எந்தச் சமயத்திலேனும் நடந்து கொண்டாளா?

க: இல்லை! ஒருமுறை செய்தால் குற்றம் குறைந்து விடுமா, என்ன?

இரா: அதற்கல்ல நான் கேட்டது. ஒரு நாளும் இன்றி, அன்று இராமனைக்கண்டதும் காதல் கொண்டாள். அவளுடைய குணமே, கெட்டது என்று அதற்குப் பொருள்? அன்றுமட்டும் அவ்விதமான எண்ணம் ஏற்பட்டது! ஏன்?

க: என் இராமனுடைய சௌந்தரியத்தைக் கண்டு!

இரா: குற்றம், அவளுடையதா?

க: ஏன் இல்லை! சீதையிருக்க. இவள் எப்படி.........

இரா: மன்னர்கள், பல மனைவியரை மணம் செய்வது முறைதானே!

க: ஆமாம்! ஆனல் இராமன் ஏக பத்னிவிரதனுயிற்றே.

இரா: அவள் அறியமாட்டாளே! ஆகவேதான், தன் ஆசையைத் தெரிவித்தாள். அன்றுவரை அவள் எந்த ஆடவரிடமும் வலியச்சென்று காதலை வெளியிடும் வழுக்கி விழுந்தவளல்ல. அன்று ஓர் வடிவழகனைக் கண்டாள், மன்ருடி நின்ருள், இரக்கம் இருந்தால், ஏற்றுக் கொண்டிருக்கலாமே, விரதத்துக்குப் பங்கம் வரக் கூடாதென்பதிலே விசேஷ அக்கரை கொண்டு, அவளை நிராகரிப்பதானுலும், இப்படி, அலங்கோலப் படுத்தாது இருந்திருக்கலாமே, அவளுடைய நாசியைத் துண்டித்தபோது, இராம இலட்சுமணர்கள், இரக்கத்தை எத்தனை யோசனை தூரத்திலே விரட்டினுர்கள்? அவர்கள் அரக்கரல்லவா?

கம்: காமப்பித்தம் பிடித்து அலைந்தவளைத், தண்டிக்காமல் விடுவரா?

இரா: கம்பரே! நான் இருக்கிறேன் தண்டனைதர! என் தங்கையின் துர்நடத்தையை எனக்குத் தெரிவித்திருக்கலாமே! ஏதாவது தந்திரம்பேசி, அவளை அனுப்பி விடுவது மறுபடி அவள் வருவதற்குள், எனககுச் செய்தி அனுப்பினுல், நான் இருக்கிறேன், அவளுக்குப் புத்தி புகட்ட! இரக்கமும் இல்லை,

யூகமும் இல்லை, இதோ இங்கே நிற்கிருள், நாசியற்ற நங்கை! இரக்கத்தை மறந்த அரக்கரால் அலங்கோலப் படுத்தப்பட்டவள் !!

தங்காய்! போ! தயையே உருவெடுத்தவர்களின் தீர்ப்பு, நான் இரக்கமென்ற ஒரு பொருள்இலா அரக்கன் என்பது! ஒருநாள் சிக்கின சூர்ப்பனகை, எந்த நாளும் எவர் முன்பும் வர முடியாத நிலைப்பெற்ருள்! என் கைதியாகப் பலநாள் இருந்த சீதை, சௌந்தர்யவதியாய், சகல சௌபாக்யங்களையும், அயோத்திலே பிறகு அனுபவித்தாள். ஆனுல் நான் அரக்கன்!!

[சூர்ப்பனகை போய்விடுகிருள். நீதிதேவன் மறுபடியும் சாட்சிப்பட்டியைப் பார்க்கிருன்.]

இரா: நீதிதேவா! சாட்சிப் பட்டியிலே தாடகை, பாகு, மாரீசன், கரன் முதலிய வதைபட்ட என் மக்களின் பெயர் இருக்கும். அவர்களெல்லாம் துஷ்டர்கள் ஆகவே, தண்டித்தார் என்று கம்பர், பல்லவி பாடுவார். ஆகவே, அவர்களை விட்டு விடும். கூப்பிடும் கைகேயி அம்மையை.

[கைகேயி வருகிருள்.]

இரா: கேகயன்மகளே! மந்தரையின் சொல்லைக் கேட்ட பிறகு, இராமனைப் பட்டத்துக்கு வரவிடாமல் தடுக்க நீதிட்டம் போட்டாயல்லவா?

கை: ஆமாம்!

இரா: பட்டம் கூடாது என்பதுமட்டுமல்ல, இராமன் பதினுன்கு ஆண்டுகள் வனவாசம் செய்ய வேண்டுமென்பதும் உன் திட்டம்?

கை: ஆமாம்.

இரா: சக்கரவர்த்தியின் மூத்தகுமாரன் என்ற முறையிலே, இராமனுக்கு அயோத்திலே, ஆனந்தமாக வாழ்வு இருந்ததல்லவா?

கை: ஆமாம்!

இரா: அதிலும், கண்ணெடு கண்கலந்த காதல் வாழ்க்கை நடாத்தி வந்தகாலம்.

கை: ஆமாம்!

இரா: அப்படிப்பட்ட ஆனந்த வாழ்விலே இருந்த இராமனைக் காடுபோகச் சொன்னபோது, அடவியிலே உள்ள கஷ்டம், ஆபத்து இவைகளுக்கு இராமன் உள்ளாகி, மிகக் கஷ்டப்படுவானே, என்று உமக்குத் தோன்றவில்லையா?

கை: தோன்றிற்று! ஆனால் பரதன் நாடாள்வதாக இருந்தால் இராமன் காடேகத்தான் வேண்டும் என்று தீர்மானித்தேன், வேறுவழியில்லை.

இரா: பஞ்சணையில் துயிலும் இராமன் பசும்புல்தரையிலே படுப்பான். கனகமணி அணிந்தவன், மரஉரி தரிப்பான் ராஜ போஜனம் உண்டவன் காய்கனி தின்பான் வசிஷ்டரைக் கண்டு களித்த கண்களால் துஷ்ட மிருகங்களைக் கண்டு கலங்குவான், அரசு ஆளவேண்டியவன், விசாரத்திலே வேதனையிலே மூழ்குவான், தெரிந்தும்..............

கை: காடு ஏகத்தான் வேண்டும் என்று கூறினேன்.

இரா: இராமன் காடு ஏகுவான் என்ற நிலைவந்ததும், அயோத்தியிலே இருந்தவர்கள் எப்படியானார்கள்.

கை: சொல்லமுடியாத கஷ்டப்பட்டார்கள். (கம்பரைப் பார்க்கிறாள்.)

இரா: கம்பர், அதுபற்றி விவரமாகப் பாடி இருக்கிறாரே, என்கிறீரா? நான், அவருடைய கவிதை சிலவற்றிலே இருந்து குறிப்பு வாசிக்கிறேன், அவை உண்மையா என்றுபாரும், முடியுமானால் கூறும்.

(ஓலையைப் புரட்டிக் கொண்டு) அயோத்தியா காண்டம், நகர்நீங்கு படலத்திலே, ஊரார் துயரைக் கம்பர் உள்ளம் உருக்கும் முறையிலே இருபது பாடல்களுக்குமேல் வர்ணித்திருக்கிறார்.

இராமன் காடுசெல்வான், என்ற சொல் காதில் வீழ்ந்ததோ இல்லையோ, அரசரும் அந்தணரும், மற்ற மாந்தரும், மாதர்களும், தசரதனைப் போலவே துயருற்றுக் கீழே சாய்ந்தார்களாம்.

புண்ணிலே நெருப்புப் பட்டது போலிருந்ததாம் அந்தச் செய்தி!

மாதர்கள், கூந்தலவிழப் புரண்டு அழுதனராம்! அடியற்ற மரமெனக் கீழே வீழ்ந்தனராம்! அம்மே, கைகேயி, கம்பர் பாடுகிறார்.

"கிள்ளையொடு பூவையழுத கிளர்மாடத்
துள்ளுறையும் பூசையழுத வுருவறியாப்
பிள்ளையழுத பெரியோரை யென்சொல்ல
வள்ளல் வனம்புகுவானென்றுரைத்த மாற்றத்தால்"

வள்ளலாம் இராமன் வனம்புகுவான் என்ற வார்த்தையைக் கேட்ட அளவிலே, கிளியும் நாகணவாய்ப் பட்சியும், வீடுகளிலே வசிக்கும் பூனைகளும், உருவத்தை அறியாத சிறு குழந்தைகளும் அழுதன என்றால் பெரியவர்கள் அழுததுபற்றி என்னவென்று சொல்வது, என்று கம்பர் பாடியிருக்கிறார்! கம்பரே! தங்கள் பாட்டுக்கு நான் கூறிய பொருள் சரிதானே?

கம்: உண்மையே! இராகவன் காடு செல்கிறான் என்று கேள்விப்பட்டவுடன் பட்சிகளும் பூனைகளும் குழந்தைகளுங்கூட அழுதன என்று பாடினதுண்டு. ஏன், இன்னோர் பாடலும் உண்டே,

“ஆவுமழுதவன் கன்றழுதவன்றலர்ந்த
பூவுமழுத புனற்புள்ளழுத கள்ளொழுகுங்
காவுமழுத களிறழுத கால்வயப்போர்
மாவுமழுதன வம்மன்னவனை மானவே”

என்றும் பாடினேன்.

நீதி: இராவணன் கூறினதைவிட, இந்தப் பாடல் கொஞ்சம் கடினம்.

இரா: எளிதாக்கிவிடலாம் நீதி தேவனே!

ஆவும் அழுத, அதன் கன்று அழுத, அன்று அலர்ந்த பூவும் அழுத, புனல் புள் அழுத, கள் ஒழுகும் காவும் அழுத, களிறு அழுத, கால்வயப்போர் மாவும் அழுத, அம்மன்னவனை மானவே—இதுதான் கவிதை. ஆவும் காவும், மாவும் களிறும், இப்படிப் பலப்பலவற்றைக் கவி சந்திக்கச் செய்ததாலே கொஞ்சம் சிரமமாக ஆகிவிட்டது கவிதை! அழுத என்பது இடையிடையே அடிக்கடி வருகிறது, ஒரே பொருள் உணர்த்த. கவிதையின் பொருள் இதுதான், அந்தத் தசரத மன்னவனைப் போலவே, பசு, அதன் கன்று, அன்று மலர்ந்த புஷ்பம், நீரிலே வாழும் பறவைகள், தேன் பொழியும் சோலை, தேரில் பூட்டப் படும் வலிவுள்ள குதிரைகள் இவை யாவும் அழுதன, என்கிறார் கவி.

நீதி: ஏது இராவணனே! கம்பரின் கவிதைகளை நுட்பமாக ஆராய்ந்திருக்கிறீரே?

இரா: எதிர்க்கட்சி வக்கீலாயிற்றே கம்பர்! அவருடைய வாய் மொழியிலுள்ளவைகளைக் கவனித்துத்தானே, என் குற்ற மற்ற தன்மையை நிரூபிக்கவேண்டும்.

நீதி: சரி! இராமன் வனம் புகுவது கேட்டு அயோத்தி ஒரே அழுகுரல் மயமாகிவிட்டது. அதனல்...........

இரா: (கைகேயியைப் பார்த்து) ஏனம்மா கைகேயி! இராமன் காடு போகிருன் என்பது கேட்டுப் பூனேயும், யானேயும், குதிரையும், குழந்தையும், பூவும் காவும், கிளியும் நாகணவாய்ப் பட்சியும், மனம் உருகி அழுதனவாமே, அந்த நேரத்திலும் தங்கள் மனம் இளகவில்லேயோ?

கை: இல்லே!

இரா: ஊரார் ஏசினர் நீதிதேவா! ஒரு மன்னரின் மனேவியைச் சொல்லத்தகாத மொழியிலுல்கூட ஏசினர். கொடியவளே! கொலேகாரி! என்று தசரதன் ஏசிஞர். ஊரார், என்ன சொன்ஞர்களாம் தெரியுமோ? கம்பரே கூறலாமோ?

கம்: எந்தப் பாடலேச் சொல்லப்போகிறீர்?

இரா: நீர் பாடியதைத்தான், நான் என்ன கவியா சொந்தம் பாட. கணிகை காண் கைகேசி! என்று ஊரார் பேசினராம்! (கைகேயி கோபமாகப் பார்க்க) அம்மே! அரக்கனும் என்மொழி அல்ல, அயோத்யா காண்டம் நகர் நீங்கு படலம், 109-ம் பாடல்!

கம்: கணிகை காண் கைகேசி என்ருல் விலேமகள் கைகேசி என்று பொருள்! நான் அப்படிப் பாடவில்லே. கொஞ்சம் இடைச்செருகல் புகுந்துவிட்டது நான் பாடினது,

"கணிகைநாண் கைகேசி"

இரா: பாட்டு, பழுதுபார்க்கப்பட்ட பிறகு, பொருள் முன்பு இருந்ததைவிட மோசமாகிவிட்டது கம்பரே! முன்பாவது கைகேயியை வேசி என்று கூறினீர். இப்போது வேசையரும் கண்டு வெட்கப்படுவர், கைகேயியின் கெட்ட குணத்தைக் கண்டால் என்றல்லவோ பொருள்!

கம்: வேறுவிதமாகத்தான் இருக்கவேண்டும், நிதானமாக யோசித்தால்தான் முடியும். கைகேயியை நான் கணிகை என்று கூறமுடியுமா?

இரா: கூறினீர், வேருேர் சமயம் திருத்திக்கொள்ளும். சரி! ஊரார் கண்டபடி ஏசினர், ஆனல் கேகய குமாரியின் மனம் மாறவில்லே.

நீதி: ஆமாம், கொஞ்சமும் இறக்கமில்லே.

இரா: அரக்க மாதல்ல, நீதி தேவா! கைகேயி, அம்மை! தசரதன், சோகமுற்று, மானே மடமயிலே! கேகயன் மகளே கேளடி என்மொழியை! பேயும் இரங்குமே பெண்கட்கரசே நீ இரங்காயோ? என்று எவ்வளவோ கெஞ்சினன்! கைகேயி மன்னனின் புலம்பலைக் கேட்டும் மனம் இளகவில்லை. மன்னன் மூர்ச்சித்துக் கீழே வீழ்ந்தான், அம்மையின் மனதிலே இரக்கம் எழவில்லை. கம்பர் கூறினர், மன்னர் பலர், எந்தத் தசரதனின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினர்களோ, அப்படிப்பட்ட மன்னர் மன்னன், கைகேயியின் காலிலே வீழ்ந்தான்! கைகேகி சூழ்வினை படலம், 25-வது செய்யுள். தன் மணாளன், மன்னர் மன்னன் தன்காலில் வீழ்ந்து அழுது, கெஞ்சி, எனக்கு உயிர்ப்பிச்சை தரவேண்டும், என்மகன் இராமன் நாடாளாவிட்டால் போகிறது, காடுபோகச் செய்யாதே, அவன் போனல் என்உயிர் நில்லாதே! என்று உள்ளம் உருகிக் கதறுகிறன், கேகயகுமாரி, அப்போதாவது இரக்கம் காட்டினதுண்டா? இல்லை! கோசலை அழுதபோது? இல்லை! சீதை, மரஉரி தரித்தபோது? இல்லை! ஊரே புரண்டு அழுதபோது? இல்லை! துளியும் இரக்கம் காட்டியதில்லை. வெற்றி பெற்றோம் என்ற களிப்புடன் அன்றிரவு துயிலில் நிம்மதியாக ஈடுபட்டார்களாம் கம்பர் கூறினர். உண்மைதானே கம்பரே!

க: உண்மைதான்!

இரா: இரக்கம் என்ற ஒருபொருள் இல்லாதார் அரக்கர்! உமது இலக்கணமல்லவா அது? கைகேயி அம்மையிடம் அந்த இரக்கம் ஒரு துளியும் இல்லையே, ஏன் அரக்கர் குலமாக்கவில்லை அம்மையை! இரக்கமென்ற ஒருபொருள் இல்லாத காரணத்தாலேயே நானிருந்த இலங்கை அழிந்தது என்றீரே, இரக்கத்தை எள்ளளவும் கொள்ளாத இந்த அம்மையார் இருந்தும், அயோத்திக்கு அழிவு வராத காரணம் என்ன? என் தங்கைக்குப்பங்கம் செய்தவர்களை, பழிவாங்கவேண்டுமென்ற எண்ணம் என்கண் முன், சீதை கதறியபோதிலும், இரக்கப்படக்கூடாது, இரக்கத்துக்காகவேண்டி, அரக்கர்குல அரசமங்கையின் அங்கத்தைத் துண்டித்த ஆரியர்களை வதைக்காது விட்டோமானல் அரக்கர் குலத்தையே ஆரியகுலத்தின் அடிமையாக்கிவைக்கும் இழிசெயல் புரிந்தவனுவோம் என்று எண்ணினேன். அந்த எண்ணத்தின்முன் இரக்கம் தலைகாட்டவில்லை! இரக்கம் காட்டாததற்காக நான் அழிந்துபடுவது! இரக்கமின்றி என் தங்கையைப் பங்கப்படுத்தி, வாலியை மறைந்திருந்து கொன்ற இராமன், தெய்வமென்று கொண்டாடப்படுவது, தேன்தமிழிலே இந்தக் கம்பனுக்குப் பாட்டுக் கட்டத் தெரிந்ததால், நீதி தேவா!

இது சரியா? சீதையை நான் களவாடி சிறைவைத்தேன்! மூவர்கள் இதுபோல் பலமுறை செய்திருக்கிறார்களே! நான் சீதையின் சம்மதம் கிடைக்கட்டும் என்று, சிந்தையில் மூண்ட காமத்தைக்கூட அடக்கினேன், மூவர்கள், அழகிகளைக் கண்ட நேரத்தில், அடக்கமுடியாத காமத்தால், ஆபாசங்கள் செய்திருக்கின்றனரே! எந்தத் தேவன், கற்பை மதித்தான்? எத்தனை ஆஸ்ரமங்கள் விபசார விடுதிகளாக இருந்ததற்குச் சான்று வேண்டும்? மானைக்காட்டி மயக்கினேன் என்று கூறினர், முருகன் யானையைக் காட்டி மிரட்டினானே வள்ளியை! இங்கே உள்ள தேவரும் மூவரும் செய்யாததை நான் செய்ததாக ருஜுப்படுத்தும் பார்ப்போம்! சீதை போன்ற ஜெகன்மோகினி, என் கரத்திலே சிக்கியும், சீரழிக்காது நான் விட்டதுபோல, எந்தச் சிங்காரியையாவது, தேவரும், மூவரும் விட்டிருப்பாரா? கூறுங்கள். இரக்கம் இல்லை என்று குற்றம் சாற்றினது அக்ரமம்! அதற்காக இலங்கையை அழித்தது அநீதி! என்வேலை தீர்ந்தது. இனி நீதியின் வேலை நடக்கட்டும்.

[நீதிதேவன் திடீரென்று மயங்கிக் கீழே சாய்கிறான். ஜூரிகள் எழுந்து நிற்கிறார்கள். நீதிதேவனுக்கு மயக்கம் தெளிந்தபிறகு தீர்ப்பு என்று கோர்ட் சேவகர் தெரிவிக்கிறார். அது நெடுநாளைக்குப் பிறகு தானே சாத்தியம்! என்று கூறிக் கொண்டே இராவணன் போய்விட கோர்ட் கலைகிறது. கம்பர், அவசரத்திலே கால் இடறிக் கீழே வீழ்கிறார்.]

# நன்கொடை

(அரசியல் நாடகம்)

| | | |
|---|---|---|
| பீரங்கி பீமராவ் நாயுடு | — | காங்கிரஸ் பிரசாரகர் |
| ஜவுளி ஜம்புலிங்கம் | — | காங்கிரஸ் எம்.எல்.ஏ. |
| வனிதா | — | ஜம்புலிங்கத்தின் மகள் |
| தருமலிங்கம் | — | ஜம்புலிங்கத்தின் தம்பி |
| மன்னன் | — | ஜம்புலிங்கத்தின் மகன் |
| சங்கரலிங்க ஐயர் | — | ஜம்புலிங்கத்தின் கடை மானேஜர் |
| இடம் | — | தமிழகத்தில் ஒரு நகரம் |
| காலம் | — | இப்போது |
| கண்டவர் | — | யூகம் |

[விசாலமான அறை—அறைச் சுவர்களில் காந்தி, நேரு, பட்டேல் ஆகியோரின் உருவப்படங்கள் மிகப் பெரிய அளவில் மாட்டப்பட்டிருக்கின்றன. காங்கிரஸ் எம். எல். ஏ. ஜம்புலிங்கம் தூய கதருடையில் தோற்றமளிக்கிருர். சோபாவில் சாய்ந்தபடி யிருக்கிருர். எதிரில் அன்று வந்த தினசரிகள் பிரிப்பவரின்றி வைத்தபடியே உள்ளன. 'வந்தே மாதரம்' என்று கூறிக்கொண்டே உள்ளே வந்த காங்கிரஸ் பிரசாரகர் பீரங்கி பீமராவ் நாயுடுவை வரவேற்கிருர்.]

ஜ :—வா, தம்பீ, வா. ஏது இவ்வளவு நேரத்தோடே, இவ்வளவு தூரம் ?

பீ : எல்லாம் உங்களைப் பார்த்துப் போகத்தான்.

ஜ : நல்லா பாரு, தம்பீ—நிக்கிறியே, உக்காரு.

[பீமராவ் உட்காருகிருர்]

பீ : நாட்டிலே, காங்கிரஸ்காரன் என்று சொல்லிக்கொண்டு வெளியில் வரமுடியவில்லை. அப்படி செய்துவிட்டார்கள், இல்லாததையும், பொல்லாததையும் பேசி, காங்கிரஸ் என்ருலே கசக்கிறமாதிரி பண்ணிவிட்டார்கள். காங்கிரஸ் என்ருலே வெறுக்கும்படி, மக்களை மாற்றிவிட்டார்கள் ! திராவிடத்தான்களுடைய கொட்டம் வளர்ந்துகொண்டே போய்விட்டது. அவன்களை அடக்கலேன்னு, காங்கிரஸ் இனி செத்துப்போய் விட்டதென்றே வைத்துக்கொள்ளவேண்டியதுதான்.

ஜ : சரி, தம்பீ ! இப்ப அதுக்கு என்ன செய்யவேணும் சொல்லு.

[ஜம்புலிங்கத்தின் அலட்சியம் அவனுக்குக் கோபத்தையூட்டுகிறது.]

பீ : இவ்வளவு விளக்கமாக நான் நிலைமையை எடுத்துக் காட்டின பிறகும், எதிர்காலம் எவ்வளவு இடர் உள்ளதாக இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்டிய பிறகும்...........

ஜ : தம்பீ ! பதருமே பேசு. நீ சொன்னது உண்மை—எழுத்துக்கு எழுத்து உண்மை, நான் அதைப் புரிந்துகொள்ளவில்லையா என்ன ! நல்லா புரியுது. நான் இப்ப உன்னை கேட்பது என்னன்னு, இப்ப என்ன செய்யவேணும்ன்னுதான்.

பீ: கேள்வி சரி, ஆனால் நீங்கள் பேசுகிற தோரணை சரியில்லே. நான் வேலே வெட்டி இல்லாமலா வந்திருக்கிறேன்— அல்லது என் சொந்த இலாபத்துக்காகப் பாடுபடுகிறேனா.........

ஜ: இதென்ன தம்பீ, வீணான கோபம்...........

பீ: வீண்தான்........உங்களைப்போன்றவங்களுக்காக நாங்க மாரடித்துக்கொண்டு அழறது வீண் வேலேதான். எக்கேடாவது கெடட்டும் என்று விட்டுத்தொலேக்கவேண்டியதுதான்.........

ஜ: வெடுக்கு வெடுக்குன்னு பேசாதே, தம்பீ. இப்ப உன் பேச்சை நான் மதிக்கவில்லேயா...........

பீ: மதிச்சு............?

ஜ: இவ்வளவு நேரமா நீ சொன்னதை எல்லாம் கேட்டு கிட்டு இருந்தேன்.

பீ: கேட்டு......? நிலேமை புரியுதா உங்களுக்கு. நெருப்பைக் கக்கருனுங்க, திராவிடத்தானுங்க..........புரியுதா..........சன்னம் சன்னமாப் பேத்து எடுக்கருனுங்க, செல்வாக்கை.........

ஜ: என்ன சொல்லு தம்பி, இந்தத் திராவிடத்தானுங்க நெருப்பைக் கக்கட்டும், விஷத்தையே கொட்டட்டும், நம்ம காங்கிரஸ் மகாசபையை அசைக்கக்கூட முடியாது.

பீ: அதுதான் தப்பு என்கிறேன், நிலேமை உங்களுக்குப் புரியவில்லேன்னு சொல்றேன். திராவிடத்தானுங்க கூட்டம், மகாநாடு, நாடகம், பாட்டுக் கச்சேரி, படக்காட்சி, இதிலே எல்லாம் கூட்டம் எப்படிக் கூடுது தெரியுமா உங்களுக்கு.........

ஜ: கூட்டம் கூடிட்டா தீர்ந்துபோச்சா..........

பீ: கூட்டம் கூடினு என்னன்னு சொல்றிங்களா! பேஷ்! ரொம்ப நல்லாயிருக்கு உங்க மூளே...........

ஜ: தம்பீ! நல்ல வார்த்தையா பேசு.........மூளே நல்லா யிருக்கா இல்லேயான்னு எல்லாம் பேசாதே.........சரியில்லே......... என் வயசையாவது கவனிக்க வேணும் பாரு.........நீ பெரிய மேதாவின்னே வைச்சிக்கோ...ஆவேசமாப் பேசறே.........விடாப் பிடியா வேலே செய்யறே.........அதனுலேயே, அனுபவஸ்தர் களோட மனதைப் புண்படுத்தலாமா.........

பீ: ஆத்திரத்திலே பேசிவிட்டேன்... மன்னிக்கணும்...

ஜ: ஆத்திரம் கூடாது தம்பீ! நாமெல்லாம் மகாத்மா சிஷ்யருங்க...பொறுமை வேணும்......ஆத்திரம் கூடவே கூடாது. எதிர்க்கட்சிக்காரனுங்களோட பிரசாரத்தாலே, தீமை வரும்னு சொல்றே. சரி. அதுக்கு என்ன செய்யலாம்...

பீ: நாமும் கூட்டம் மகாநாடு, நடத்த வேணும்.

ஜ: இவ்வளவு தானே! செய்துட்டாப் போவுது......நாடகம் கூட நடத்தலாம்...

பீ: மகாநாடு, நாடகம், இது என்ன வேலெ செய்யுது தெரியுமா...பட்டிக்காட்டானுங்களெல்லாம்கூட இப்ப, பார்லிமெண்ட், பர்மிட், சட்டம். பத்திரிகை சுதந்திரம் இதை எல்லாம் தெரிந்துகொண்டு பேசருங்க...

ஜ: ஆமாம்...பொதுவா, அறிவு வளருது...

பீ: என்ன...என்ன...அறிவு வளருதா! சரிதான் உங்களுக்கே மயக்கமா இருக்கு, அந்த ஆசாமிகள் பேச்சைக் கேட்டு...

ஜ: செச்சே......ஒரு பேச்சு முறைமைக்குச் சொன்னேன்... சரி, தம்பீ! மதுவிலக்கு கமிட்டிக் கூட்டம் போகணும்...இப்ப உன் ஏற்பாடு என்ன அதைச்சொல்லு...மகாநாடு நடத்தணும்...

பீ: ஆமாம்...

ஜ: நடத்தி விடலாம், தம்பீ! மகாநாடு நடத்தி, நாலாயிரம் ஐயாயிரம் பணம் கூட மிச்சப்படுத்தருங்களாமே திராவிடக் கட்சிக்காரனுங்க. நாமும் ஒரு மகாநாடு நடத்தினு, ஆயிரம் இரண்டாயிரம் மிச்சமாகும்......

பீ: யாருக்கு? நமக்கா! உலகம் தெரியாதவரா இருக்கிறே யேய்யா...அவனுங்களுக்கு மிச்சமாகுது—மகாநாடு நாடகம் எதிலேயும்—அதைப்போல நமக்கும் ஆகுமா...

ஜ: ஏன், தம்பீ, நாமும் பெரிய கொட்டா போட்டு, கொடி மரம் நட்டு நம்ப கோடிலிங்கம் நாயனக்கச்சேரி, கோகர்ணம் குப்பாயி பாட்டு, எல்லாம் ஜமாய்த்து விடலாம்—அட, ஒரு இரண்டாயிரம் மிச்சம் பிடிச்சா, நம்ம கமிட்டி ஆபீஸ் செலவுக்காவது ஆகும். ஒரு வருஷமா, வாடகை நான் கையைவிட்டுக் கொடுக்கறேன் தம்பீ!

பீ: தலெதலென்னு அடிச்சிகிட்டு போகலாம்னு தோணுது, உங்கப் பேச்சைக் கேட்டு......ஐயா! ஆர அமர யோசித்துப் பேசுங்க. ஜனங்க, திராவிடத்தானுங்களோட சேர்ந்துவிட்டாங்க

.........அதனுலே, அவங்க மகாநாடுன்னு, ஐம்பதனுயிரம்னு இலட்சம்னு ஜனங்க சேர்ருங்க.........

ஜ: போ, தம்பீ, சும்மா விளையாடறே......ஐம்பதாயிரமும் இலட்சமும்...

பீ: உன்னேடு மாரடிக்க என்னுலே முடியாதய்யா, என்னுலே முடியாது.........ஐம்பதாயிரம்னு சொன்னு நம்பிக்கை வரவில்லே...வரவில்லேயேல்லோ—சரி, இதைப்படியுங்கள்

ஜ: நீயேதான் சொல்லு தம்பி, என்னஇருக்கு—அவனுங்க பேப்பரா...

பீ: இல்லே, நம்ம மித்ரன்...

ஜ: மித்ரன் என்ன சொல்லுது...

பீ: கேளுங்க...திராவிட மகாநாடு நடந்தது. பெரிய அட்டகாசம்—ஊர் சுவர் முழுவதும் ஆபாசமான வசை மொழியை எழுதி பர பரப்பை உண்டாக்கிவிட்டனர்.

ஜ: சரி–ஐம்பதாயிரம்னு எங்கே இருக்கு...

பீ: நம்ம பேப்பர்லேயே ஐம்பதாயிரம்னு வருமா... வரணுமா—சூட்சமமா இருக்கே அட்டகாசம்னு—என்ன அர்த்தம் அதற்கு...பெரிய கூட்டம்! நம்ம மித்ரன் நிருபர் பார்த்துப் பிரமிச்சி போயிருக்கிருர்–ஊர் அமர்க்களப்படறதுன்னுதானே அர்த்தம். ஊர்லே சுவர் பூரா எழுதி இருக்கிருன்னு. என்ன அர்த்தம். அவ்வளவு ஜரூரா வேலே செய்கிருன்னு அர்த்தம்...சுவர்லே எழுதிக் காட்டினது நாம்—முதலிலே...

ஜ: பட்டாளத்திலே சேராதே பணத்தைப் பாங்கியிலே போடாதேன்னு எழுதினேமே......

பீ: அது மட்டுமா......ஜெய்ஹிந்த்! வந்தே மாதரம்...... இதெல்லாம்? ஆமாம், ஆமாம்—ஊர் பூராவும், அதைப் பார்த்துப் பார்த்து அதனுலேதானே நம்ம கட்சிக்கும் செல்வாக்கு! இப்ப, அவனுங்களிடமிருக்கு, அந்த செல்வாக்கு—அதனுலே அவனுங்க மகாநாடு நடத்தினு, கூட்டம் பிரமாதமா வருது—நமக்கு அப்படி வராது...

ஜ: அப்படியா......!

பீ: அதனுலே நம்ம மகாநாட்டுச் செலவு இருக்கே, அதை ஜனங்களிடம வசூல் செய்வது முடியாது.

ஜ: டிக்கட்டு விற்கலாமேல்லோ.

பீ: யார் வாங்குவா......! டிக்கட்டே கூடாது நம்ம மகா நாட்டுக்கு

ஜ: அப்படியானு, செலவு?

பீ: செலவுக்காகத்தான் உங்களிடம் வந்தது......

ஜ: ஏன் தம்பீ, நான் பணம் கொடுக்க இஷ்டமில்லாததாலே இப்படிப் பேசுகிறேன்னு எண்ணிக் கொள்ளாதே. என் மனசிலே பட்டதைச் சொல்லுகிறேன்......

பீ: சொல்லுங்க......

ஜ: இந்த ஜனங்கதான் புத்தி கெட்டுபோயி, திராவிடத் தான்களோட சேர்ந்துகிட்டு இருக்கருங்களே, இப்ப, நாம்ம ஏன் நம்ம பணத்தைப் பாழாக்கிக்கிட்டு, கூட்டம்னும், மகாநாடும்னும் ஏற்பாடு செய்துகிட்டு இருக்கணும்! தானு திருந்தட்டும்னு விட்டு விட்டா நல்லதில்லையா......

பீ: விட்டு விட்டா, நம்ம கட்சி இருந்த இடத்திலே புல் முளைக்கும்...இப்பவே வெளியே தலைகாட்ட முடியலே, இன்னும் கொஞ்சம் வளரவிட்டா, உங்களைப் போல, எப்படியோ ஆகட்டும்னு இருந்துவிட்டா தீர்ந்தது, நம்ம கட்சி குப்பை மேட்டுக் கூளமாயிடும்......

ஜ: சரி...தம்பீ! மகாநாட்டுக்கு, என்னிடம் என்ன எதிர் பார்க்கிறே...

பீ: நீங்கதான் வரவேற்பு கமிட்டித் தலைவர்.

ஜ: நானு! ஜில்லா காங்கிரஸ் தலைவருக்கல்லவா அந்த உரிமை.

பீ: காங்கிரஸ் மகாநாடல்ல இப்ப நான் போடவேணும்னு சொல்றது—இது காங்கிரஸ் எதிர்ப்பு ஒழிப்பு மகாநாடு—காவிய காவிகாப்பு மகாநாடு......

ஜ: என்னது......காவிய காவி......

பீ: அதாவது நமது பழய புராண இதிகாச காவியங்களையும், சாதுசன்யாசி சன்னிதானங்களையும் திராவிடத் தானுங்க ஒழிக்கக் கிளம்பி இருக்காங்க ..நாம் காவிய காவி காப்பு மகாநாடு போட்டு அந்தப் பயல்களை வெளுத்து வாங்க வேணும்......

ஜ: நீ, பேசறது பூரா வேடிக்கையா இருக்கு தம்பீ! நமக்கு ஏன் அந்த வீண் வேலே. காவியக்காரனும் காவி கட்டியும் தங்களைக் காப்பாத்திக் கொள்ள மகாநாடு போட்டுக் கொள்ளட்டும்—நாம்தான முந்திரிக்கொட்டைங்க.

பீ: விவரம் தெரியாததாலே இப்படிப் பேசறிங்க—அந்தப் பயல்களுக்கு எதிரா, ஒரு பெரிய கூட்டத்தைக் கூட்டிக் காட்ட வேணும் அந்தப் பயல்களை நாம்ம மட்டுந்தான் எதிர்க்கிறோம்னு இருக்கப்படாது பெரிய பெரிய புலவர்களெல்லாம் எதிர்க்கிறுங்க, பெரிய பெரிய ஞானிகள் எதிர்க்கிருர்கள் என்கிற எண்ணம் ஜனங்க மனசிலே பரவி, பிறகு ஜனங்க, நம்மோடு, சேரவேணும்.

ஜ: இதென்னமோ, தம்பி எனக்கு, கொக்கு தலேயிலே வெண்ணெவைச்சி பிடிக்கிறமாதிரியாத்தான் படுது......நாம்ம நம்ம காங்கிரஸ் கட்சி மகாநாடு கூட்டி காந்தி பெருமை, கைராட்டினத்தோட அருமை இதுகளைப் பற்றி எடுத்துச் சொன்ன ஜனங்க திருந்தி வருவாங்க......

பீ: இனிமேலே என்னய்யா இருக்கு, நாம்பதான் முப்பது வருஷத்துக்குமேலே மூலே முடுக்குக்கூட பாக்கிவிடாம, காந்தி, கதரு, கைராட்டினம் இவைகளோட பெருமையை எடுத்துப் பேசியாச்சி—கேட்டுக் கேட்டு ஜனங்களுக்குப் புளிச்சும் போச்சே காந்தி, தத்துவத்தை மறந்துவிட்டாங்க. கதரை கள்ளமார்க் கட்டை மறைக்கிறதுணியாக்கிவிட்டாங்க, கைராட்டினம் பரணை மேலே இருக்கு, அப்படின்னுதானே இப்ப ஜனங்க பேசருங்க நம்ம கட்சியைப் பார்த்து. இப்பப்போயி காந்தி கதர் கைராட்டைன்னு பேசின, காதிலே ஏறுமா, கவைக்கு உதவுமா......

ஜ: அப்ப......காவிய மகாநாடும் போடணும்......

பீ: ஆமாம்—இது ஒரு நாள்—அது ஒரு நாள்–பத்து ரூபாய் பிடிக்கும்—இலட்ச ரூபா பலன் கிடைக்கும்—செலவுன்னு எண்ணக்கூடாது சேவைன்னு எண்ணவேணும்......

ஜ: அது சரி......

[பீமராவ் கோபத்தின் உச்சக்கட்டத்திற்குப் போய் விட்டார்]

பீ: என்ன சலிப்பு......ஏன்யா......! காங்கிரஸ் கட்சியினலே தான் உனக்கு இந்தச் செல்வம், செல்வாக்கு, அந்தஸ்து. எம்.எல்.ஏ., அதிகாரம், கிடைச்சுது. அந்தக் கட்சிக்கு ஒரு ஆபத்துன்ன கைகொடுக்க மனசு இல்லே. மனுஷனய்யா நீ...... காங்கிரஸ்காரன......

[ஜம்புலிங்கம் இதுவரை சாந்தமாக பேசி வந்தார். அவரும் கடுகடுப்போடு பேசத் தொடங்கினுர்]

ஜ: ஆமாம், இப்ப உன்கிட்டே, காசு கொட்டிக் கொடுத்தாத் தான் நான் காங்கிரஸ் காரன்னு ஒத்துக்கொள்ளவே போலிருக்கு —ஏண்டா தம்பீ! நீ வந்து அந்த மகாநாடு இந்த மகாநாடுன்னு சொல்லுவே, உடனே நான், பெட்டிச் சாவியை உன்னிடம் எடுத்துக்கொடுத்துவிட்டு வந்தேமாதரம்னு சொல்லவேணும், நீ தொறந்து உனக்கு வேணும்கிற பணத்தை எடுத்துக்கிட்டு ஜெய் ஹிந்த் சொல்லிவிட்டுப் போயிடுவே—இல்லேயா-இதைச்செய்தா நான் நல்லவன்—இல்லேயானு பொல்லாதவன்—அப்படித்தானே —இந்த வேலே நல்லா இருக்கு தம்பீ! திராவிடத்தானுங்க எதிர்க் கிருனுங்க, அதனுலே என்கிட்ட பணத்தைக் கொட்டு, அவனும் நானும், நாயே பேயேன்னு ஏசிக்கிட்டு போருேம், நீ, நோட்டு நோட்டா நீட்டு, இதுதானு, உன் பிளான்......

பீ: மரியாதையாப் பேசு-தெரியுதா-வார்த்தைகளே அளந்து பேசு—உன்னேப் போல சுயநலக்காரனுங்க இருக்கிறதாலேதான், திராவிடத்தானுங்க அந்தப் போடு போடருங்க—அவனுங்க பேசறதிலே என்ன தப்பு இருக்கு—கதர் கட்டிக்கொண்டு கள்ள மார்க்கட் கழுகுகள் இருக்குன்னு சொன்னுங்களே, திராவிடத் தானுங்க அவங்க வாய்க்குச் சர்க்கரை போடவேணும்.

[ஜம்புலிங்கம் எழுந்து நின்றுக்கொண்டு ஆத்திர மாகக் கூவினுர்]

ஜ: ஏலே...ஏய்...! இதோபாரு......போயி, சந்துமுனேயிலே நின்னுகிட்டு கத்து, இங்கே பேசாதே...எழுந்திரு...மரியாதையா.

பீ: யாருக்கு மரியாதை இல்லே.........யாருக்கு மகாத்மா பேரைச் சொல்லிக்கிட்டு ஜனங்களே ஏமாத்திகிட்டு, மாசமாசம் மூவாயிரம் நாலாயிரம்னு அடிக்கறியே கொள்ளே நூல் பர்மிட்டிலே, அதைத்தான் திராவிடத்தானுங்க பேசி, மானத்தை வாங்கருனுங்க வேணும் உங்களுக்கு—இதுவும் வேணும் இதுக்கு மேலேயும்வேணும்......

ஜ: வீணு அவமானம் அடையப் போறே—ஏய்! நான் கள்ளமார்க்கட்காரன். அதானே......பேசாதே.........இதோபார், கதர் போட்டிகிட்டிருக்கறேன்—காங்கிரசிலே இருக்கறேன் பர்மிட் டிலே கொள்ளே அடிக்கிறேன்—அதானே நீ சொல்றது...போடா, போயி, நீயும் அந்தத் திராவிடத்தானுங்களோட கூடிக் கொண்டு,

ஏசு, பேசு, உன்னாலே என்ன செய்ய முடியுமோ அதைச் செய்துகொள்—நட என் வீட்டை விட்டு......

பீ: இப்ப, நட! அப்போ ஓட்டோ ஓட்டுன்னு அலேகிற போது, நான் தேவைப்பட்டுது...

ஐ: நீ இல்லேன்னு, ஓட்டு கிடைக்காது எனக்கு—ஏண்டா, டே! அப்படியா எண்ணிகிட்டு இருக்கே—ஆறு தடவை வந்தார்டா என் வீடு தேடி, உங்க தலேவரு எலக்ஷன்லே நிக்கச் சொல்லி—கெஞ்சிக் கூத்தாடினாரு......

பீ: அதை எல்லாம் சொல்லிச் சொல்லித்தான் திராவிடக் கட்சிக்காரன், கண்டிக்கிறான்—உங்களைப் போன்றவர்களாலே, காங்கிரசின் கதியே அதோகதியாகுது.

ஐ: ஏண்டா சேர்த்தாங்க காங்கிரசிலே.........தெரிஞ்சாச் சொல்லேண்டா, டே! வந்தேமாதரம்...உன்னைத்தாண்டா கேக்கறேன், ஏன் சேத்துக்கிட்டாங்க, காங்கிரசிலே, கொஞ்சம் பசை இருக்கிறதாலேதான்—சும்மா இல்லே—சரி, சரி உன்கிட்ட என்ன வீண்பேச்சு—நான் பிளாக்மார்க்கட்—போய்க் கூவு ஊர் பூராவும் —இந்த ஊர் எம்.எல்.ஏ. இருக்கிறாரே, அவர்கதர் கட்டிகிட்டு பிளாக்மார்க்கட் செய்கிற காங்கிரஸ்காரர்ன்னு பேசு, போ.........

பீ: பேசத்தான் போகிறேன் பாரு.........

ஐ: பேசித்தான் பாரேன்......ஒரு மீடிங் நடத்து, அடுத்த மீடிங்கு போட முடியுதான்னு பாரு. ஜில்லா கமிட்டியைக் கூட்டி உன்மேலே ஒழுங்கு நடவடிக்கை எடுத்து, உன்னை மூணு வருஷத்துக்குக் காங்கிரசிலே இருந்து தள்ளி வைக்கலேன்னு, என் பேரையே மாத்தி வைச்சிக்கிறேண்டா, டேய்! மாரடிச்சான்! போய், உன்னாலானதைப் பார்த்துக்கோ. டேய்! மன்னார்......... மரியாதையா போய்விடு.

[சத்தம் பலமானது கேட்டு சங்கரலிங்க ஐயர், எம்.எல்.ஏ. வின் மண்டி மானேஜர் வெளியே வருகிறார்.

நிலைமையைக் கண்டதும், அவர் கண்களிலே குறும்பு ஒளிவிடுகிறது—புன்னகையும் தவழுகிறது.

எம்.எல்.ஏ. வும் காங்கிரஸ் பிரசாரகர் பீரங்கி பீமராவும் கோபமாகவே இருக்கக் காண்கிறார்.

இதுபோது தலேயிட்டு நிலைமையைச் சீர் செய்தாக வேண்டும் என்று தீர்மானிக்கிறார்.

எனவே குழைவாகப் பேச்சைத் துவக்குகிறார்.]

ச: (பீமராவைப் பார்த்து) என்ன பீமராவ்! பிரமாதமான கோபம்—ரௌத்ராகாரம்.

பீ: கோபமா!......எனக்கா! ஆமாம்......நீ வேறு எப்படிப் பேசுவே...இந்த முப்பது வருஷகாலமாக நான் இந்தத் தேசத்திலே என் சக்திக்கு மீறின அளவு சேவை செய்துவருகிறேன். என்னை......இப்போது, புதுசா முளைத்த களான்கள் கண்டபடி ஏசினுல்கூட நான் பொறுமையாக இருக்க வேண்டும் போலிருக்கு.

ஜ: பார், சாமி! பார்... இப்ப ஏசுவது யார்னு நீயே பாரு...... காளானும் நான், காளான்......கேட்டயா......கர்ணம் போட்டாங்க என் எதிரே முன்னே......இரண்டே இரண்டு கதர்வேட்டி போதும், ஒரே ஒரு கையெழுத்து போதும், காங்கிரசிலே சேரலாம்னு, இப்ப நான், காளான்.........எப்படி இருக்கு நியாயம்! அதுவும் யார் சொல்லறது............இந்த சோளக் கொல்லைப் பொம்மை......!!

பீ: மரியாதையாக பேசணும்னு மறுபடியும் சொல்றேன்... புதுசா மழைக்காலத்திலே முளைக்கிறது காளான்—அதுபோலத் தேர்தல் காலத்திலே கிளம்பும் தலைவர்களைக் காளான் என்று சொல்வது தவறல்ல! ஏசுவதாகாது......கண்களை உருட்டலாம், பற்களை நறநறவெனக் கடிக்கலாம்...உம்ம வீட்டிலே வந்திருக்கிறேன் என்கிறதாலே, ஆளை விட்டு அடித்துக்கூடப் போடலாம். ஆனு அதற்கெல்லாம் அஞ்சுபவனல்ல, இந்த பீரங்கி பீமராவ் நாயுடு............!

ச: சார்! பீரங்கி! அதெல்லாம் கிடக்கட்டும்—காளான் என்ருல் கேவலம் என்கிறீரா?

[பீமராவ் இந்தக் கேள்வியால் சிறிது திகைக்கிருர். இதுதான் தக்க சமயம் என்று சங்கரலிங்க ஐயர், மேலும் தாக்குகிருர்.]

ச: காளான்—என்ருல் எதற்கும் உதவாத, கேவலமான பொருள்—(எம்.எல்.ஏ.வைக் காட்டி) இவரை ஏசுவது முறையா, இல்லையா என்பதுகூடக் கிடக்கிட்டும், இப்ப, எனக்குத் தெரிய வேண்டியது இது, காளான் என்ருல் கேவலமானது, உபயோகமில்லாதது என்கிறீரா.........இது தெரியவேணும் இப்போ......... பிரசாரத்திலே பிரக்யாதி வாய்ந்தவர்.........தெரியும். எதிரிகளை ஏசுவதிலே சமர்த்தர்—தெரியும்—இல்லாமலா பீரங்கி பீமராவ் நாயுடு என்று பட்டம் இருக்கு............

ஜ: (வெறுப்பும் அலட்சியமும் கலந்த குரலில்) பட்டம்! யார் கொடுத்ததாம், பட்டம்..............

ச: (குறும்பு ததும்பும் குரலில்) என் பேச்சை! கவனிக்க வில்லே போலிருக்கு.............. ..... பட்டம் இருக்குன்னுதான் சொன்னேன்—பட்டம் தந்தான்னு சொல்லலே...................... புரியறதோ.........பட்டம் இருக்கு.........அவ்வளவுதான்.........

பீ: அதாவது நானே சூட்டிக்கொண்டேன்.........

ச: செச்சே! யாராவது ஆப்த நண்பர்களாக இருப்பவா சூட்டியிருப்பா.........நீர் அவாளுக்கு ஏதாவது பட்டம், சர்தார், சுபேதார், அப்படி இப்படின்னு சூட்டியிருப்பீர். இது சகஜம், இதனுலே லோகத்துக்கு நஷ்டம் என்ன! அது கிடக்கட்டும், பீமராவ்! காளான், காளான்னு கேவலமாப் பேசிண்டிருக்கிற, அந்தக் காளான், கேவலமானதுதானுன்னு கேட்கறேன்......

பீ: ஏன் கேட்கமாட்டீர்! மாதம் ஒரு பச்சை நோட்டு தருகிருரே, இதுவும் கேட்பீர், இன்னமும் கேட்பீர்...........

ச: கோபம்தான் வர்ரது உமக்கு.........என் கேள்விக்குப் பதில் இல்லே—உம்மை நம்பிண்டு இருக்கு காங்கிரஸ், இந்தப் பக்கத்திலே. காங்கிரசுக்குக் கியாதி போயிண்டிருக்குன்னு, இதிலே, என்ன ஆச்சரியம்! காளான் என்ருல் கேவலமானது என்கிற அளவுதான் அறிவு இருக்கு.........

பீ: (கோபம் அதிகமாகி) ஏ, ஐயர்! போதும் உன் அதிகப் பிரசங்கம்......நிறுத்து........

ஜ: இதேதான் சாமீ! இக்கட்டான கேள்வி கேட்டா, கோபம் கொதிக்குது இந்தக் கோமாளிக்கு.

பீ: யாரய்யா, கோமாளி.........எம்மு எல்லு ஏ!.........யார் கோமாளி! உன் கோமாளித்தனத்தைக் கண்டுதான் ஊரே சிரிப்பாச் சிரிக்குது...........சட்டசபைக்குப் போனயே, அங்கே என்ன செய்தே......தெரியாதா......திராவிடத்தானுங்க அதைச் சொல்லிச் சொல்லித்தானே கண்டிக்கிருனுங்க.........உம்மைப் போல ஒரு எம்.எல்.ஏ. சட்டசபையிலே தூங்கலாமான்னு கேள்வி கேட்டாரேல்லோ......அந்தக் கேள்வியோ, சபாநாயகர் தந்த பதிலோ இன்னது என்று கூட உமக்குத் தெரியாதே—அவ்வளவு சுவாரஸ்யமான தூக்கத்திலே அல்லவா இருந்தீர்......

[எம்.எல்.ஏ. பதற, சங்கரலிங்க ஐயர், அவரைச் சாந்தப் படுத்துகிருர்.]

ச: பீரங்கீ! தூக்கம் வர்ரது சட்டசபையிலேன்னு, என்னய்யா அர்த்தம்! தூங்கறவாளைக் கோபிச்சிண்டு பேசறீர்...சரி... அவா தூங்கினது தவறுன்னே வைத்துக்கொள்வோம்—தூக்கம் வந்ததே சட்டசபையிலே, அதைக் கவனிச் சீரா......என்ன பொருள்? அவ்வளவு அசமந்தமா, சோபை யில்லாமல் இருக்கு உம்ம சட்டசபை...

ஜ: அதைச் சொல்லுங்க சாமி, அதைச் சொல்லுங்க......... என்ன பிரமாதமான காரியம் நடக்குது சட்டசபையிலே...... முதலிலேயே கட்சிக் கூட்டம் நடத்தறுங்க.........அங்கே ஒரு நாலைந்து பெரிய தலைங்க எதை எதையோ எழுதி இதெல்லாம் சட்டம்னு சொல்ல எல்லோரும் வந்தே மாதரம்னு சொல்லி சம்மதம் கொடுத்து விடறுங்க, பிறகு, சட்டசபையிலே கூடி அதையே நிறைவேத்தறுங்க—வெட்டி வேலை—தூக்கம் வராமலா இருக்கும்.........

ச: பீமராவுக்கு இதெல்லாம் புரியாது இல்லே...அவருக்குத் தான் காளான் விஷயமே புரியல்லய்யே! காளான்னு மகாகேவல மானது என்றுதானே எண்ணிண்டிருக்கார்.

பீ: என்னய்யா இது, காளானை எடுத்துக்கிட்டு நாலு நாழியா காலட்சேபம் செய்திண்டே இருக்கீர்...என்ன கண்டு விட்டீர் காளானைப் பத்தி...

ச: நானு...! நன்னு சொன்னே, போ...நான் என்ன மேதா வியா...போறது...பென்சிலின் தெரியுமோ?

பீ: பென்சிலின்—மருந்தா?

ச: ஆமாம்...மருந்துன்னு சாமான்யமானதா...அடடா, சகல ரோக நிவாரண சஞ்சீவி அல்லவா அது...

ஜ: ஆமாம்...எப்படிப்பட்ட ரணமும் ஆறுதாமே...

ச: எந்த வியாதியா இருக்கட்டும்......கட்டுக்கு அடங்காம படிக்கு, மீசுரமாகிவிட்டா, இந்தப் பென்சிலின் தர்ரா...உடனே நோய், பெட்டிப் பாம்பாகிவிடறது...அவ்வளவு அற்புதமான மருந்து பென்சிலின்.

பீ: (சலிப்புடன்) சரி அதனுலே...

ச: அதனுலே என்கிறீரா...அவசரம் உமக்கு......பீரங்கி அல்லவா, அப்படித்தான் இருக்கும் அவசரம்.

பீ: கேலி போதும் ஐயரே! விஷயத்துக்கு வாரும்......... பென்சிலின் அற்புதமான மருந்து...அதனுலே?

ச: ஒத்துக்கொள்கிறீரா...........பென்சிலின் அற்புதமான மருந்து, என்பதை.

பீ: ஆமாம்.........

ச: அந்தப் பென்சிலின் இருக்கே அது, நீர் கேவலமான துன்னு நினைக்கிறீரே, காளான், அந்தக் காளானிலிருந்துதான் செய்யரு.........

ஜ: (ஆச்சரிய மேலிட்டு) அப்படியா, சாமி!

ச: ஆமாம்...காளானிலிருந்து தான் பென்சிலின் செய்யரு... பீமராவுக்கு அது என்ன தெரியும், பாபம், அவர் கவனிக்க வேண்டிய விஷயங்கள் அனந்தம்......காளானோட அருமை எங்கே தெரியப்போது......பீமராவ்! எள்ளும் கொள்ளும் வெடிக் கிறதுபோல முகம் இருக்கு. பிரபஞ்சத்திலே. உம்மைத் தவிர மத்தவாளெல்லாம் ஞான சூன்யான்னு எண்ணிண்டு, பெரிய வாளை ஏசறதும் மிரட்டறதுமா இருக்கக் கூடாது...பீரங்கிதான் நீர்! ஆனா, எதற்குப் பயன்படவேண்டும், பீரங்கி—இவர் பேரிலே குண்டு வீசவா......பைத்யக்காரர்—சுமுகமாக, சாந்தமாப்பேசி, என்ன காரியத்தைச் சாதிக்கவேணுமோ, அதைச் சாதிச்சிண்டு போறதா, சம்வாதம் செய்துண்டு, சச்சரவு செய்துண்டு இருக்கறதா?

ஜ: நல்லா சொல்லுங்க சாமி! மனதிலே ஆழமா அழுத் தமா படற மாதிரியாகச் சொல்லுங்க......

ச: (பீமராவிடம்) மகாநாடு போடவேணும் என்கிறீர்—செய்யவேண்டியதுதான்...ஆனா, பூராவும் இவர் தலையிலேயே போடலாமா......இவர், இப்ப, எம். எல். ஏ. அதனாலே, ஏதோ அவருடைய அளவுக்குக் கொஞ்சம் செய்யத்தான் வேணும்—செய்யத்தான் போறார்......ஆனா, இவரை மட்டும் இழுத்தா போதுமோ......அடுத்த எலக்ஷனிலே, யார் எம். எல். ஏ.-வுக்கு நிற்கப்போறதுன்னு கண்டுபிடியும்—அவரைப் போய்ப் பிடித்து உலுக்கி எடுக்கவேணுமே......

பீ: எலக்ஷனுக்காகத்தானா இவ்வளவும்......

ச: (குறும்பாக) பின்னே எதுக்கு? நமக்குள்ளே பேசிக் கொள்வோம், பீமராவ்! வேறே எதற்கு இந்த மகாநாடு......

பீ: எலக்ஷன் விஷயத்தோடுகூட, நமது புனித காங்கிரஸ் மகாசபையினுடைய செல்வாக்கையும் கவனிக்கவேண்டும்—அதுதான் முக்கியம்.

ச: சரி, அப்படியே இருக்கட்டும்—காங்கிரஸ் மகாசபை யோட செல்வாக்கைப் பலப்படச் செய்யறது எதுக்கு...அதுவும் எலக்ஷனுக்குத்தானே ...இல்லையானு, வெள்ளைக்காரனை ஓட்ட வேணுமோ......இல்லையே, அவா போயிட்டா.....! இப்ப, காங்கிர சுக்கு அந்த வேலை இல்லை ...ஆகவே காங்கிரசோட பலம் எதற்கு பயன்படப்போறது? எலக்ஷனுக்கு.... அதனாலேதான் சொல்றேன், அடுத்த எலக்ஷனிலே, யாரார் எம். எல். ஏ.வுக்கு நிற்கப்போறவான்னு கண்டுபிடிச்சு......

ஜ: பீமராவுக்கு எப்படித் தெரியும்' அந்த இரகசியம். சாமி! போன எலக்ஷனிலே, இந்த பீரங்கியும் மத்தவாளும், யாரோ தேசத் தொண்டராம் தாண்டவராயப்பிள்ளை......

ச: ஆமாம், கொடிப்போர் தாண்டவராயன்னு சொல்லுவா ......அதாவது, ஊரிலே உயரமா இருக்கிற மரம், கோபுரம், ஒண்ணு பாக்கி விடாமல், தேசியக் கொடியைக் கட்டிவைக்கறது அவன் வேலை. பாபம், பல தடவை, அடி உதை......

பீ: மண்டையைக்கூட உடைத்திருக்கா......

ச: யார் தெரியுமா ...? உம்ம சம்மந்தி, ஆப்காரி காண்ட்ராக்டர் ஆறுமுகம் பிள்ளையோட தம்பி......

ஜ: சொன்னுங்க........இவன் அவங்க புதுசா கட்டின பிள்ளையார் கோயில் கோபுரத்திலே கொடி கட்டப் போனும் ......கேள்விப்பட்டிருக்கேன்......அந்தத் தாண்டவராயனைத்தான் எலக்ஷனுக்கு நிற்க வைக்கவேணும்னு ததிங்கிணத்தோம் போட்டாங்க......கடைசியிலே இவங்க தலைவர், இங்கே வந்தார், நான் முடியாதுன்னு சொல்ல வாய் எடுத்தேன்........இப்ப சொல்றேன், சாமி! நிஜத்தை, ஒரு மந்திரி வேலை கூடத் தருவ தாகச் சொன்னுங்க......அதனாலே, அடுத்த எலக்ஷனிலேயும், யாராரை நிற்க வைப்பாங்க என்கிற விஷயம், பீமராவுக்கு என்ன தெரியும்......

பீ: சரி......உங்களுடைய போக்கு எனக்கு நன்ரு புரிந்துப் போச்சி......நான் என்ன செய்யவேணுமோ அதைச் செய்து கொள்கிறேன்......

[போக முயல்கிருர்]

ச: பீமராவ்! உட்காருமய்யா, உட்காரும்........மகாநாடு ஏற்பாடானதும், நன்கொடை புத்தகம் எடுத்து வா, நானே கிட்ட இருந்து, பணம் வாங்கித் தருகிறேன்—இவரிடம் மட்டுமல்ல, இன்னும் எனக்குத் தெரிந்த மத்தவாளிடமெல்லாம்......

பீ: (வெறுப்பாக) பாபம், உங்களுக்கு என் சிரமம்—நான் மகாநாடு கூட்டும் உத்தேசத்தையே விட்டுவிட்டேன்......

ப: விரக்தியா.........இவ்வளவு சீக்கிரமாகவா.........

பீ: (கோபமாக) மகாநாடு எதுக்கு......எதுக்காக மகாநாடு போடவேணும்.........எங்களுக்கு என்ன வந்தது.........திராவிடத் தானுங்க, எங்களையா ஏசுறுங்க..............உண்மைக் காங்கிரஸ் ஊழியர்களுக்கு மரியாதை காட்டுவதுதான் எங்கள் கடமை என்றுதான் சொல்கிறுங்க. உண்மைக் காங்கிரஸ் ஊழியர்களே! உங்கள் தியாகத்தை உலுத்தர்கள் பயன்படுத்திக்கொண்டு ஊரை மிரட்டி வாழ்கிறுர்களே, கொள்ளை அடித்துக் கொழுக்கிருர்களே. அவர்களோடு கூடிக்கொண்டு, ஏன் பாழாகிறீர்கள், என்றுதான் கேட்கிருர்கள், தியாகத் தழும்புகளுக்குத் தலை வணங்கத்தான் செய்கிருர்கள்! தேர்தல் காலத் தில்லுமல்லுகளும், கள்ளமார்க்கட் கழுகுகளும், வைதீக வல்லூறுகளும், பதவி தேடும் பச்சோந்திகளும், காங்கிரசிலே கூடிக்கொண்டு கொட்டமடிப்பதைத்தான் அவர்கள் கண்டிக்கிருர்கள். இதை ஏன் தடுக்கவேண்டும்—இதை ஏன் நாங்கள் எதிர்க்கவேண்டும்! நன்ருகக் கண்டிக்கட்டும்—சூடு சொரணை உங்களுக்கு வருகிற அளவுக்குக் கண்டிக்கட்டும்—காங்கிரசின் செல்வாக்கைக் கபடர்கள் எப்படிப் பயன்படுத்திக்கொண்டார்கள் என்பது உலகுக்குத் தெரிகிற அளவுக்குக் கண்டிக்கட்டும்—எங்களுக்கு என்ன! மகாநாடு போட்டு, உங்கள் சார்பாகப் பேசுவதே அக்கிரமம்—அனியாயக்காரனை அம்பலப்படுத்துகிருர்கள் திராவிடத்தார்—செய்யட்டும். அப்பழுக்கற்ற உழைப்பாளிகள், உண்மைத் தியாகிகள், ஏன் இதற்காகச் சீறவேண்டும். பல காலமாக எந்த காங்கிரசில் சேர்ந்து பாடுபட்டோமோ அந்தக் காங்கிரசின் செல்வாக்கை அழிக்கிருர்களே, என்ற கோபம் எங்களுக்கு. ஆனுல் அதற்காகவேண்டி எதிர்ப்பு மகாநாடுகள் நடத்தினுல், உங்களைப்போன்ற பகற்கொள்ளைக் காரர்களின் ஆதிக்கம்தான் வளருகிறது. உங்களுக்கு இடமளித்த பிறகு, உங்களுடைய ஆளுகையிலே வந்தபிறகு, காங்கிரஸ் வாழவாமுடியும், அதைக் காப்பாற்றக் கிளம்புவதும் வீண்வேலை. விபரீதமாகவும் முடிகிறது வீணர்கள் கொழுக்கிருர்கள்.

ஜ: பீரங்கி அல்லவா.........பிரமாதமான பேச்சாத்தானே இருக்கும். சரி, சந்துமுனைக்குப் போய் சண்டமாருதத்தைக் காட்டு, இங்கே என் பங்களாவிலே வேண்டாம்.........

பீ: நான் பேசுவானேன்—உங்களுடைய யோக்யதையை எடுத்துக் காட்டி விளாசுகிற திராவிடத்தான்கள் செய்யும்

பிரசாரத்துக்கு முட்டுக்கட்டை போடாதிருந்தாலே, போதும், உங்கள் மானம் கப்பலேறும், உங்கள் கொட்டம் தன்னுலே அடங்கும்...........

[எம். எல். ஏ.-வின் திருக்குமாரி, அதுபோது சில ஏடுகளுடன் வருகிருள், உள்ளே இருந்து. முகத்திலே கோபக் குறிகள் உள்ளன. மூவரும் பேச்சை நிறுத்திக்கொள்கிருர்கள். வந்த வனிதா, அங்கு ஒரு நாற்காலியில் உட்கார்ந்து, ஒரு ஏட்டைப் பிரிக்கிருள்.]

வ: யார் வேண்டுமானுலும் சுரண்டுவதற்கு இடமிருக்கிறது. இந்தச் சுரண்டல்களைத் தடுக்கக்கூடிய சுறுசுறுப்பு மந்திரிமார் களுக்கு இல்லை. மந்திரிகளுக்குத் தந்திரிகளாக இருக்கும் எம். எல். ஏ.-க்களோ எப்படி எப்படியோ இருக்கிருர்கள். இவர்களைப் பற்றி எவ்வளவுக்கெவ்வளவு குறைவாக எழுதினுல் நல்லதோ அவ்வளவுக்கவ்வளவு குறைவாகத்தான் எழுதவேண்டும். ஏனென்ருல் சூடு சொரணையற்றுப் போனவர்களை வைத்துக் கொண்டு என்ன செய்வது ?

[வனிதா ஏட்டை மூடியபடி.]

அப்பா ! கேட்டாயா, இந்த கேடு கெட்ட ஏடு எழுதி யிருப்பதை,

ஐ: (அலட்சியமாக) கிடக்கிருன்களம்மா !...........சாமியே கிடையாதுன்னு பேசற கும்பல், சாதாரண மனஷாளைச் குறை சொல்வதிலே என்ன ஆச்சரியமிருக்கு.

ச: ஆயாசமடையறதிலேயும் அர்த்தமில்லே......

ஐ: நாக்கு புழுத்துச் சாகப் போகிருனுங்க......

பீ: (புன்னகையுடன் சங்கரலிங்க ஐயரைப் பார்த்து) சாபம் கொடுக்க உத்தேசமோ......

வ: எல்லோரும் விஷயத்தைப் புரிந்து கொள்ளாமலே பேசுகிறீர்கள்.........எவ்வளவு கேவலமாக எழுதியிருக்கிருன் இந்தப்பத்திரிகையிலே......இப்ப இருக்கும் எம்.எல்.ஏ.க்களுக்குச் சூடு சொரணையே கிடையாதாம்—எவ்வளவு துடுக்குத் தனம்......

ஐ: அதுகளோட துடுக்குத் தனத்தை நீ என்னம்மா கண்டே......?

ச: சாட்சாத் சிவபெருமானுக்கு நெற்றிக்கண்ணே கிடையா துன்னு சாதிக்கிற, சண்டாளக் கூட்டம் எம்.எல்.ஏ.வைச் சூடு சொரணையற்ற ஜென்மம் என்று ஏசி எழுதுவது, என்ன ஆச்சரியம், வனிதா!......

வ: எம்.எல்.ஏ.க்களைச் சூடு சொரணையற்ற ஜென்மங்கள் என்றும், மந்திரிகள் சுறுசுறுப்பு அற்றவர்கள், அதாவது சோம்பேறிகள் என்றும் எழுதியிருப்பது, சூனுமானு என்று எண்ணிக்கொண்டு, பேசுகிறீர்கள்......

பீ: வேறே, யார் எழுதினது?

வ: (ஏட்டை அவர் எதிரே வீசி) யாரா? உங்க, காண்டீபம் காங்கிரசைத் தாங்கிக் கொண்டிருக்கே அதே ஏடு. சோம்பேறி மந்திரிகள், சொரணை கெட்ட எம்.எல்.ஏ.-க்கள் என்று எழுதி யிருக்கு 8—6—'51-ல். இதுவா கட்சியை வளர்க்கிற இலட்சணம்.

ஐ: (பதறி) காங்கிரஸ் பத்திரிகையா இப்படி எழுதுது— எங்களைக் குறித்து......

[பீமராவ் புன்னகையுடன் பத்திரிகையைப் பார்க் கிருர்]

ச: (சோகமாக) சோம்பேறி மந்திரிகள்! சொரணைகெட்ட எம். எல். ஏ.-க்கள்!! அட அடா! எவ்வளவு கேவலமான நிந்தனை......இவ்வளவு கேவலமாக சூனுமானுக்கள் கூடப் பேசுவ தில்லை.........

வ: ஆமாம்—அவர்கள் சில சமயம் இந்த மந்திரி சபையே திராவிடர்களுடையதுதான், மந்திரிகள் மீதும் தவறு கிடையாது, எம். எல். ஏ.-க்கள் மீதும் தவறு கிடையாது—இவர்களுடைய அதிகாரத்தை எல்லாம், டில்லி எடுத்துக்கொண்டுவிட்டதாலே, இவர்களாலே ஏதும் செய்யமுடியவில்லை என்று பேசுகிருர்கள், காங்கிரசை ஆதரிக்கும் 'காண்டீபம்' சோம்பேறி மந்திரிகள்— சொரணைகெட்ட எம்.எல்.ஏ.-க்கள் என்று எழுதுகிறது—இதை ஆதரிக்கவேண்டும் என்று காங்கிரசின் பெயரைக் கூறிக் கொண்டு, பீமராவுகள் பேசுகிருர்கள்...........

ஐ: தெரியுதாய்யா யோக்யதை! என்னமோ, எங்களை, திராவிடத்தானுங்க, திட்டு திட்டுன்னு திட்டருங்க, எங்கிட்ட பணம் கொடு, நான் மகாநாடு கூட்டி, அந்தத் திட்டைத் துடைச்சிப் போடறேன்னு பேசினயே, இதுக்கு என்ன

சொல்றே? காண்டீபம் கண்டபடி ஏசுதே! சூடு இல்லே சொரணை இல்லே, எங்களுக்கு .....காசு இருக்கேல்லோ, அதைக் கொடு!...... எப்படி, சாமி! ஏற்பாடு!!

ச: காண்டீபம் இப்படித் திட்டுகிறபோது, திராவிடா திட்டு வதிலே கோபப்படக் காரணமே இல்லே......

ஜ: அதைப்போயி தடுக்க வேணும், ஆயிரம்கொடு, ஐந்நூறு கொடுன்னு கேட்க வந்துவிட்டாரே இந்த ராவு நாயுடு......

[எம்.எல்.ஏ. தம்பி தர்மலிங்கம் வருகிறார். சிறிதளவு கவலையுடன் வெளியே இருந்து உள்ளே, சிறு மந்திராலோசனைக் கூட்டம்போல இருக்கக் கண்டு யோசிக்கிறார்.]

ஜ: என்ன தம்பீ! ஏன் முடியலேயா, போன காரியம்.........

த: (ஆயாசமாக உட்கார்ந்து) வனிதா! ஐஸ்வாடர் கொடு—என்ன கேட்டிங்க......போன காரியமா? அது ஒரு வகையாக முடிஞ்சுது......(பீமாராவைக் காட்டி) இவர் என்ன வேலேயா......

ஜ: கட்சி சமாசாரம் பேச வந்தாரு—பரவாயில்லே—அவர் நம்ம சினேகிதருதான்.........

த: எல்லாரும் சினேகிதருதான்—சினேகிதராலே, ஆபத்து வருகிற காலமாக அல்லவா இருக்குது இப்ப......

ஜ: என்ன தம்பீ, என்னென்னமோ பேசறே......

த: பீமராவ் ஒண்ணும் சொல்லவே யில்லேயா உங்களிடம்?

ஜ: எதைக் குறித்து?

[வனிதா கொண்டு வந்த ஐஸ் வாடரைச் சாப்பிட்டு விட்டு, கட்கத்திலிருந்த கணக்குப் புத்தகத்தை எடுத்து, அதற்குள் இருந்த ஒரு பழைய பத்திரிகைப் பிரதியை எடுத்துப் பிரிக்கிறார்.]

த: இதைப் பார்க்கவில்லேபோலிருக்கு......

ஜ: எதை?

த: நம்ம தலேக்குத் தீம்பு தேடுது இந்த ஏடு.

[மெல்லிய குரலில் படிக்கிறார்.]

ஒவ்வொரு சட்டசபை அங்கத்தினரும், பார்லிமெண்ட் அங்கத்தினரும், அவர்கள் அங்கத்தினராகும்போது எவ்வளவு சொத்து உடையவர்களாக இருந்தார்கள்! இப்போது எவ்வளவு சொத்து அவர்களுக்கு இருக்கிறது என்று விசாரணை செய்து கண்டு பிடிக்கவேண்டும்.

[இடையில் நிறுத்த எம்.எல்.ஏ. கனைக்கிறார்.]

ச: இவ்வளவுதானா......

த: இன்னும் இருக்கு.

வ: விசாரணை செய்யவேணுமாமா?

த: கேளுங்க, மத்ததையும்........சட்டசபை அங்கத்தினருடைய மாதச் சம்பளம் 150 என்பது தெரிந்த விஷயம். ஐந்து வருஷத்துக்கு முன்பு சொத்து ஒன்றும் இல்லாதவராயிருந்தவர் இப்போது இலட்சக் கணக்கில் சொத்து, சேர்த்திருந்தால் அது சம்பளத்திலிருந்து சேர்ந்திருக்க முடியாதல்லவா? வேறு எந்த வழியில் அவர் அவ்வளவு பணம் சேர்த்தார் எனும் விவரம் சொல்லியாகவேண்டுமல்லவா?

வ: என்ன பேப்பர் அது?

ஜ: வயத்தெரிச்சல் பேப்பர்......வேறென்ன—எம்.எல்.ஏ.க்களெல்லாம் பணக்காரனாயிட்டானுங்க என்கிற வயத்தெரிச்சலைக் கொட்டுகிற பஞ்சை ஏடு.

த: சாமான்யமான பேப்பரல்ல.........ரொம்ப செல்வாக்கானது......டில்லி வரையிலே செல்வாக்குள்ளது......

ஜ: பேப்பர் நிறைய செலவாகுதுன்னு சொல்கிறயா......

த: அது மட்டுமில்லே......டில்லி மந்திரி இருக்கிறாரே, ராஜகோபாலாச்சாரியார், அவருக்கு ரொம்ப வேண்டிய பேப்பர்......

வ: கல்கியா......!

ஜ: கல்கியா இப்படி எழுதுது......

வ: எம். எல். ஏ.க்களெல்லாம் கொள்ளைக்காரனுங்கன்னு துணிச்சலா எழுதுதே......

த: விசாரணை செய்யவேணுமாம்......

ச: சொத்து என்ன இருக்குன்னா......

த: ஆமா, எம்.எல்.ஏ., ஆவதற்கு முன்பு என்ன இருந்தது, இப்ப எவ்வளவு இருக்கு—எப்படி இவ்வளவு சொத்து கிடைச்சுது இதெல்லாம் கண்டு பிடிக்கவேணுமாம்......

வ: காண்டீபமே பரவாயில்லே......சொரணையற்ற ஜென்மம் எம்.எல்.ஏ., என்று எழுதிற்று, கல்கியின் கர்வத்தைப் பாரேம்பா, கொள்ளைக்காரன் என்றே எழுதுது......

ஜ: (பீமாராவைக் கோபமாகப் பார்த்து) கல்கியும், காண்டீபமும் இப்படி, எங்க மானம், போகிறபடி எழுதி இருக்கு, இதோ இவர் இருக்கிருரே, பீரங்கி, இவர் சொல்ருரு, பணம் கொடு, நான் உங்களைத் திட்டுகிற திராவிடத்தானுங்களைத் தீர்த்துக் கட்டிவிடறேன்னு.

வ: திராவிடத்தானுங்க, வேறே கட்சி வேறே இலட்சியம்—இருந்தும், சோம்பேறி மந்திரிகள், சொரணை கெட்ட எம்.எல்.ஏ.க்கள் என்றெல்லாம் சொல்றது இல்லையே......

ஜ: சொந்தக் கட்சிப் பத்திரிகை......இந்த இலட்சணத்திலே இருக்கு......இதை என்ன மகாநாடு போட்டு தடுக்கப் போறே, பீமு.

த: 17—6—'51லே எழுதி இருக்கு......அது சரி...என்னமோ வயத்தெரிச்சலிலே, எழுதியிருக்கு, எதையோ எழுதித் தொலைக் கட்டும், இந்த எழுத்தெல்லாம் நம்மை அசைக்காது, ஆனு இதைப்போல விசாரணை எதாவது நடக்குமா...?

ஜ: விசாரணையாவது மண்ணுவது......

ச: ஏன் வீணு விசாரப்படணும்–கல்கி ஹாஸ்ய பத்திரிகை–வேடிக்கையா ஏதோ எழுதி இருக்கும்......

ஜ: நல்லா இருக்கு சாமி! உங்க நியாயம்! சொரணை கெட்டவன், சூடு இல்லாதவன், அகப்பட்டதைச் சுருட்டறவன், என்றெல்லாம் எழுதுவது, விகடமா......

வ: அவர் வேற எப்படிச் சொல்லுவார் அப்பா! அவர் தானே நம்ம ஊருக்கு, கல்கி ஏஜண்ட்.

ஜ: புரியுது, ஐயரோட போக்கு......

த: இது மட்டுமில்லே......அடுத்த எலக்ஷனிலே, இப்ப இருக்கிற எம்.எல்.ஏ.க்களை தேர்தலுக்கு நிறுத்தக் கூடாதாம்.

ஜ: யார் யோசனை இது ?

த: கல்கிதான்......கேளுங்க......

யாரை அபேட்சகராகப் பொறுக்குவது என்ற கேள்விக்குப் பதில் சொல்வதைக் காட்டிலும் யாரைப் பொறுக்கக் கூடாது என்ற கேள்விக்கு விடை சொல்வது எளிது. பொது மக்களைக் கேட்டால், உங்களுக்குப் புண்யமாய்ப் போகட்டும், இப்போதுள்ள எம். எல். ஏ.-க்களைத் தயவு செய்து திரும்பவும் பொறுக்காதீர்கள் என்பார்கள்.

ஜ: எப்படி இருக்கு, சாமி, இவர் கொட்டுடா பணத்தை மகாநாடு நடத்தன்னு கேட்கருரு—இவர் எழுதருரு பழைய ஆட்களை நிறுத்தாதே புதுசா ஆளைத் தேடுன்னு.

ச: அதனுலேதான் நானும் பீமராவிடம் சொன்னேன், மகாநாடு நடத்த பணம் வேணும்னு, அடுத்த சான்சுக்கு யார் ஆசைபட்டுண்டிருக்காளோ அவாளைப் போய்ப் பாருன்னு.

[எம்.எல்.ஏ.வின் மூத்த மகன் மன்னன் வருகிருன். பீமராவைக் கண்டு கேலியாகப் பார்க்கிருன்.]

ம: பீமராவா! என்ன, காவிய காவி பாதுகாப்பு மகாநாடாமே......அப்பாவிடம் நன்கொடைக்காகவா......?

ச: அந்த மகாநாடு மட்டுமில்லே......காங்கிரஸ் எதிர்ப்பு ஒழிப்பு மகாநாடும்.

ம: ஆமாம், அதற்குத்தானே, காண்டீபம் ஆசிரியர் தலைவர்.

ஜ: யார், யார்?

வ: சொரணையற்ற ஜென்மங்கள் இந்த எம்.எல்.ஏ.க்கள் என்று எழுதினுரே, அதே காண்டீபம் ஆசிரியர்தான்.

பீ: மன்னு! நான் இங்கே வந்தது, மகாநாடுகள் விஷயமாகத்தான்—இப்போதோ, அந்த எண்ணமே இல்லை......நான் புது மனிதனுகிவிட்டேன்—

ம: அப்படியா......பீமராவ், திராவிடத்தான்கள் கடவுளை மறுக்கும் கயவர்கள், என்று கன்னிக் கோயில் மைதானத்திலே பேசினுயே, காரசாரமாக......

ச: ஆமாம், அவர், நாஸ்தீகப் பிரச்சாரம் செய்துதான் நாட்டைக் குட்டிச் சுவராக்கிண்டிருக்கா......

ம: கடவுளைக் கும்பிட வேண்டாம் என்ரு சொல்கிருர்கள்?

ச: இது கடவுளா, அது கடவுளா, ஆறுமுகமா, ஆனை முகமா, பசு கடவுளா, பாம்பு கடவுளா, கண்டதும் அத்தனையும் கடவுள்தான—என்று பேசுறேளே, அது நாஸ்தீகம் தானே......

ம: அது எப்படி நாஸ்திகமாகும்......கடவுளே கூடாது என்றல்தானே நாஸ்தீகம்... .

ஜ: ஆமாம்......அது உண்மைதான்......

ம: கடவுள், கடவுள் என்று கூறிக்கொண்டு கண்டதை பூஜிப்பது கூடாது என்கிறார்கள். இதை நாஸ்தீகம் என்கிறீர். (சட்டைப் பையிலிருந்து ஒரு ஏடு எடுத்து) இதைக் கேளுங்கள்—எடுத்ததை எல்லாம் கடவுளாக்கி வழிபட்டு கோயில்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் விசித்திர வழக்கம், இந்தியாவில் இருக்கிறது. பெயரளவில் பக்தி பண்ணிவிட்டு நடைமுறையில் நேர்மாறான செயல்களைச் செய்வதும் நம்மவர் வழக்கமாகி விட்டது.

ச: இது எந்த மேயோ எழுதினது .....

ம: இது மேயோ சொன்னதுமல்ல, திராவிடத்தார் சொன்னதுமல்ல, பாரதத்தின் முடிசூடா மன்னர், பண்டித ஜவஹர், பெங்களூரில் பேசியது, 3—6—1951-ல் 'அனுமான்' இதழில் வெளிவந்தது. பீமராவ்! இதைத்தான் பத்தாயிரம் துண்டு வெளியீடு போட ஏற்பாடாகி இருக்கிறது, காவிய காவி பாதுகாப்பு மகாநாட்டின்போது பொதுமக்களுக்குத் தர.

பீ: மகாநாடு இல்லே—அந்த எண்ணத்தை விட்டு விட்டேன்—ஆனால், இந்தப் பொன்மொழியைப் பொதுமக்கள் படிக்கட்டும், இன்னும் ஒரு பத்தாயிரம் வெளியிடலாம், (சட்டைப் பையிலிருந்து பணம் எடுத்து) இந்தா ஐந்து ரூபாய், என் நன்கொடை.

[ அனைவருக்கும் வணக்கம் செய்கிறார் ]

வணக்கம். நான் சென்று வருகிறேன்.

[ அனைவரும் பீமராவ் நாயுடுவை ஆச்சரியத்துடன் பார்க்கின்றனர். ]

# கண்ணீர்த் துளி

அரசியல் நாடகம்

## காட்சி 1

இடம் : திரு.வி.க. திடல் பாதை.

இருப்போர் : திராவிடர் கழகத் தோழர்,
திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்,
காங்கிரஸ் ஊழியர் காத்தமுத்து.

நேரம் : வெள்ளிக்கிழமை மாலை 5 மணி.

தி.க : ஏ! கண்ணீர்த் துளி! காமராஜர் மீது பகை கக்கிக் கொண்டிருக்கும் கபோதியே! காமராஜரை நாங்கள் ஆதரிக்கும் காரணத்தை விளக்கி, பெரியார் வெளியிட்ட அறிக்கையைப் பார்த்தாயா ?

தி. மு. க : படித்தேன், நண்பரே, ஆர்வத்துடன் படித்தேன்.

தி. க : அடுக்காதே ; படித்த பிறகு ?

தி. மு. க : சிந்தித்தேன் ; வாதத் திறமையின் நேர்த்தி கண்டு மகிழ்ந்தேன்.

தி. க: ஆனால், திருந்தவில்லை......!

தி. மு. க: அறிக்கை யாரையும் திருத்துவதற்காக எழுதப் பட்டதாகவே எனக்குப் படவில்லை. திருப்திப் படுத்த, எழுதப் பட்டதாகத் தெரிகிறது; திருப்தி பெறவும் எழுதி இருக்கிறார் போல் தோன்றுகிறது.

தி. க: வக்கணை பேசுவாய், வேறென்ன தெரியும் உனக்கு. சரி திருத்தவோ, திருப்திப் படுத்தவோ, எதற்கோ எழுதினார்; கிடக்கட்டும்; அதற்குப் பதில் என்ன சொல்லப் போகிறாய்?

தி. மு. க: யார்? நானா? காமராஜர் அல்லவா, பதில் சொல்ல வேண்டும் போலிருக்கிறது, அறிக்கையைப் பார்த்தால்.

தி. க: உன்னோடு பேசுவதும், வீண் கொஞ்ச நஞ்சம், சந்தேகம் கொண்டோருக்கும், அந்த அறிக்கை, தெளிவு தருகிறது. காமராஜரிடம் நாம் ஆதரவு காட்டுவதால், நமக்குத் தான், திராவிடருக்குத்தான் இலாபம், தெளிவாகத் தெரிகிறது.

தி. மு. க: அறிக்கை அவ்விதம் தான் இருக்கிறது......

தி. க: காமராஜரிடம் பேசின நமது தோழர்களெல்லாம், பெரியார், சொல்கிறபடிதான், பெருமையாக, சந்தோஷத்துடன் சொந்தம் கொண்டாடிக்கொண்டு, புகழ்ச்சியாகச் சொல்கிறார்கள் தெரியுமா?

தி. மு. க: உனக்கு அந்தப் பாக்யம் கிடைத்ததில்லை போலும்......

தி. க: இந்தக் கிண்டல் பேச்சு வேண்டாம்...தெரிகிறதா...

தி. மு. க: சரி, உனக்குக் கோபம் குறையட்டும்—நான் வருகிறேன்—அதோ, காங்கிரஸ் ஊழியர் காத்தமுத்து வருகிறார்.

[காங்கிரஸ் ஊழியர் காத்தமுத்து வருகிறார். புதிய கதர்ச்சட்டை துல்லியமாகத் தெரிகிறது. தி. க., தி. மு. க. இருவரும் ஒன்றாக இருக்கக் கண்டு, இருவருக்கும் வணக்கம் செய்கிறார்.]

தி. க: காத்தமுத்துவா? வா, வா, என்ன நீ இந்தச் சதிகாரக் கும்பலுடன் கூடிக்கொண்டதாகக் கேள்விப்பட்டேன்......

காத்தமுத்து: என்னய்யா, துப்பறியும் இலாகா போல இருக்கிறது பேச்சு......என்ன சொல்கிறீர்

தி. க: காமராஜர் எதிர்ப்புக் கோஷ்டியின் மகாநாட்டுக்குச் சென்றீராம்.

காத்த: ஆமாம்......தவறென்ன? என்ன பேசிக்கொள்கிருர்கள், அவர்கள் வாதம் என்ன? இரு கோஷ்டிகளிலே, காங்கிரசுக்கும், தேசத்துக்கும் நன்மை எதன் மூலம் கிடைக்கும் என்று கண்டறிய வேண்டாமா? அதனுல்......

தி. க: அதாவது, வேடிக்கை பார்க்க என்பது பொருள்......

காத்த: வேவு பார்க்க என்றுதான் சொல்லேன்......

தி. க: எப்படியோ இருக்கட்டும்; காத்தமுத்து! காமராஜர் கவிழ்க்கப்படக்கூடாது—அதுதான் எங்கள் கவலை......

தி. மு. க: ஏன் காத்தமுத்துவுக்கு மட்டும் வேறு எண்ணமா இருக்கும்!

காத்த: காமராஜ் எதிர்ப்பு என்று பெயரிடப்பட்டுவிட்டிருக்கிறதல்லவா ஊழியர் மகாநாட்டுக்கு; அதற்கு நான் சென்றதால், நண்பருக்கு அந்தச் சந்தேகம். ஆனுல், ஒன்று: நண்பருக்குக் காமராஜ் மட்டும்தான் கவிழக்கூடாது; எங்கள் நோக்கம், காங்கிரசும் கவிழ்க்கூடாது என்பது.

தி. க: அதுபற்றி இப்போது பேசுவானேன். காமராஜ் சம்பந்தப்பட்ட மட்டில், நாம் ஒன்று, சரிதானு ....

காத்த: காமராஜ் பற்றி, அவரோடு 'வாழ்விலும் தாழ்விலும்' ஒன்ருக இருந்து வந்துள்ள எங்களுக்குத் தெரிவதைவிட அதிகமாகவே நண்பருககுத் தெரியும் போலிருக்கிறது...

தி. மு. க: ஏன், அவ்விதம் இருக்கக்கூடாது. மேலும், காமராஜர் ஏன், புதிய கருத்துள்ளவராகி இருக்கக்கூடாது......

தி. க: சொல்லு, சொல்லு,

காத்த: நீங்கள், தீனு மூனு கானு தானே.

தி. க: கண்ணீர்த் துளிதான்! என்ருலும், நாங்கள் புட்டுப் புட்டுச் சொன்ன பிறகு, காமராஜர் நல்லவர் நம்மவர் என்பதை உணர்ந்து கொண்டு வருகிருர்......

காத்த: நம்மவர்!.........அதென்னய்யா, நம்மவர்......எந்த அர்த்தத்தில், சொல்கிறீர்.

தி. மு. க: ஏன்! திராவிடர் என்ற பொருளில்தான் சொல்கிருர்.

காத்த: நீங்களாக ஒரு முடிவு செய்து கொள்கிறீர்கள்......

தி. மு. க: இல்லையே! என் நண்பர், பழகிப் பார்த்துத்தான், காமராஜர் 'நம்மவர்' என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்; என்னைக் கூடத் திருத்தப் பிரயாசை எடுத்துக்கொண்டிருக்கிறார்......

தி. க: நிச்சயமாக, விரைவில் திருந்திவிடுவாய்......காமராஜருக்கும் திராவிடர் கழகத்துக்கும் உள்ள 'நேசம்' நியாயமானது என்பதை இப்போதே ஓரளவுக்கு உணர்ந்து கொண்டுதான் இருப்பாய்......

தி. மு. க: அறிக்கையாலே, என்கிறாயா?

காத்த: என்ன அறிக்கை......?

தி. க: இந்தப் பயல்களுக்கு விளக்கம் தருவதற்காகப் பெரியார்.........வெளியிட்டிருக்கிறார்......படிக்கவில்லையா......

காந்த: என்ன எழுதியிருக்கிறார்?

[காத்தமுத்துவிடம் அறிக்கை தரப்படுகிறது.
படிக்கும்போது முகம் சில இடங்களில் சுளிக்கிறது.
காத்தமுத்து முகம் சுளிக்கும்போது தி. மு. க; தி. க. வைக் கவனிக்கிறார்.
தி. க. சிறிது கோபமடைகிறார்; சமாளித்துக் கொள்கிறார்.
காத்தமுத்து, பத்திரிகையை தி. க.விடம் கொடுக்கிறார்.]

தி. க: எப்படி, விளக்கம்......

காத்த: உங்களுக்குத் தந்திருக்கிறார்.

தி. க: இதைப் பார்த்த பிறகுதான் இந்த கண்ணீர்த் துளிக்கு இலேசாக மனம் மாறி வருகிறது...

காத்த: எனக்கே, கொஞ்சம் மனம் மாறி வருகிறது......

தி. க: பலே! பலே! வெற்றி, வெற்றி......

தி. மு. க: காத்தமுத்து இனி கழகம்தான்......ஏன், அப்படித் தானே.

காத்த: ஏனப்பா, வீணாக, துரும்பைத் தூணாக்கிப் பேசுகிறீர்கள்? இந்த அறிக்கை, எனக்குக் குழப்பத்தைத்தான் தருகிறது...... காமராஜர் யார், எப்படிப்பட்டவர் என்பதே இப்போது புரியமாட்டேனென்கிறது......

தி. மு. க: உனக்குக்கூடவா? எனக்கும் அதே சங்கடந் தான்......ஆனுல் என் நண்பர், தி. க.வுக்கு நன்ருகப் புரிகிறது......

காத்த: உங்களுக்கு, அவர் போக்குத் தெரியாது; ஆமாம், தெரிந்து கொள்ளவும் முடியாது......

தி. மு. க: காமராஜர், எங்களை ஏமாற்றுகிருர், என்கிறீரா?

காத்த: இல்லையானுல், எங்களை ஏமாற்றுவாரா?

தி. மு. க: அதுவும் இல்லை, நம் எல்லோரையும் ஒன்ருக்கு கிருர், என்று எண்ணிக்கொள்ளக்கூடாதா?

தி. க: அதேதான்......அதுதான்.

காத்த: அது எப்படிச் சாத்தியம்? நீங்கள், திராவிடநாடு விட்டு விட்டீர்களா .....நேரு ஆட்சியை ஏற்கிறீர்களா...... காங்கிரஸ் மகாசபையை எதிர்க்காமலிருக்கிறீர்களா......

தி. மு. க: சரி, சரி......ஏதேது, கதர் கட்டுவீர்களா, இந்தி படிப்பீர்களா, என்று அடுக்குவார் போலிருக்கிறதே, காத்த முத்து......

தி. க: அவருடைய ஆசை அது; நம்முடைய கொள்கையை நாம் எப்படி விட்டுவிடுவோம்?

காத்த: உங்கள் கொள்கை காமராஜரை ஆதரிப்பது அல்லவா......

தி. க: ஆமாம்

காத்த: அப்படியானுல் காமராஜர் எந்தெந்தக் கொள் கைக்குக் கட்டுப்பட்டவரோ, எந்தெந்தக் கொள்கையால் அவர் வளர்க்கப்பட்டாரோ, உருவாக்கப்பட்டாரோ, அவைகளுக்கு நீங்கள் அழிவு தேடலாமா......

தி. மு. க: நியாயமான வாதம்......

தி. க: வாதமா அது, பிடிவாதம்......

காத்த: காமராஜர் வேண்டும், அவர் கொள்கைகள் வேண் டாம் என்பது என்ன வாதமோ! விசித்திர வாதம்......

தி. மு. க: இதிலென்ன விசித்திரம்? முட்டையை உடைப்பது முட்டை அடை செய்வதற்குத்தானே ...... அதுபோல இது ஒருமுறை......காமராஜருடன் உறவாடுவது, காங்கிரசை அழிக்க; ஏன் நண்பரே! அப்படித்தானே......

காத்த : அதுதான் எங்கள் சந்தேகம்......

தி. க : பார்த்தாயா, உன் வேலையைக் காட்டிவிட்டாயே...... எங்களுக்குள் எரிச்சல் உண்டாக்கி வைக்கிறாயே......

தி. மு. க : ஐயயோ! அப்படிச் சொல்லிவிடாதே நண்பா...... நான் விவரம் தெரியாமல், தவறாக வாதம் செய்து விட்டேன் போலிருக்கிறது......

காத்த : என்னமோ, என் குழப்பம் வளருகிறது; நான் அவரிடமே போய்த் தெளிவு பெறப் போகிறேன்.

தி. மு. க : பெரியாரிடமா......

காத்த : காமராஜிடம்......

(காத்தமுத்து விடை பெற்றுக்கொண்டு சென்றான் பிறகு)

தி. மு. க : ஆமாம், இந்தக் காத்தமுத்துப் போன்றவர்களிடம் எல்லாம், காமராஜர் தாராளமாகவா பேசுவார்? என்ன பேசுவார்கள்?

தி. க : என்ன பேசும், இதுகளெல்லாம்......ஏதாவது உதவி கேட்கும்......இவ்வளவு என்ன......நாளைக்கு வீட்டுக்கு வாயேன். காத்தமுத்து என்னென்ன பேசினான் என்பதை ஒரு எழுத்து விடாமல், நான் சொல்கிறேன்.

தி. மு. க : அது எப்படி? காத்தமுத்து வந்து சொல்வானா?

தி, க : அவனைக் கேட்டால் உண்மையைத் தெரிந்து கொள்ள முடியுமா......காமராஜர் ஆபீஸ் 'ப்யூன்' என் பக்கத்து வீடுதானே.........சேதி பூராவும் சொல்லுவான். பெரியார் என்றால் உயிர் அந்த ஆசாமிக்கு.........ஒரு கூட்டம் தவற மாட்டான்......

## காட்சி 2

இடம்: ஒரு மாளிகை உட்புறம்.

இருப்போர்: காமராஜர், அவர் நண்பர், காங்கிரஸ் ஊழியர் காத்தமுத்து.

நேரம்: வெள்ளிக்கிழமை மாலை 6 மணி.

காமராஜர்: வரச்சொல்லு! வரச்சொல்லு! அடா, அடா! பொழுதுபோனுல் பொழுது விடிந்தால், பெரிய தொல்லையாகி விட்டது, வந்து என்ன பேசவேணுமோ, அதைச் சொல்லிவிட்டுப் போகச் சொல்லு.

நண்பர்: முகத்தை இப்படிச் 'சிடுசிடு' என்று வைத்துக் கொண்டிருந்தால், வருகிறவருக்கு எப்படி இருக்கும்? ஏன், உங்களுக்கு, வரவர, இவ்வளவு கோபம் வருகிறது......

காம: நீ வேறே, தத்துவம் பேச ஆரம்பித்து விடாதே...... வரச் சொல்லு .....முகத்தை என்ன பவுடர் போட்டுப் பளபளப்பு ஆக்கிக்கொள்ளணுமா......போய்யா, போயி.........

நண்: இதோ, அவரே, வந்து விட்டார்.

காம: வாய்யா! வா, வா! என்ன விசேஷம்? போன மாதம்கூட வந்தயாமே......நேரம் இல்லை, பார்க்க......கடிதம் போட்டதாகக் கக்கன் சொன்னுர்......திருச்சியிலே இருந்து வருகிருப் போலே இருக்கு......

காங்கிரஸ் ஊழியர்: ஆமாம்......போயிருந்தேன் - ...சும்மா, பார்க்க, என்ன பேசுகிருங்கன்னு கேட்க......

காம: அதுசரி, அதுசரி......இதுபோல வேடிக்கை பார்க்க, பொழுதுபோக்க நீங்களெல்லாம் போறிங்க......அந்த ஆசாமிக, இதெல்லாம் ஆதரவுன்னு எண்ணிக்கொண்டு தப்புக் கணக்குப் போடுகிருனுங்க...சரி...என்ன ஒரே வீராவேசமான பேச்சுத்தானு

ஊழி: பேசினுங்க......கோபம் மட்டும்தான் என்று சொல்லி விடுவதற்கில்லை, வருத்தமும் இருக்கு...

காம: இருக்கும், யார் இல்லை என்கிரு; எல்லோரையும் சந்தோஷப்படுத்த முடியுமா.........முடியல்லே......கேட்டதைக் கொடுக்காவிட்டா, எள்ளும் கொள்ளும் வெடிக்குது.

ஊழி : தப்பாவே, எடுத்துக்கொள்றீங்களே.........ஏதாவது கேட்டுப் பெறுவதுன்னு, உங்களோடு சிநேகமா இருந்தா கிடைக்காதா? பத்துக்கேட்டா, ஒண்ணுவது கிடைக்குமே......... விரோதித்துக்கொண்டு, என்ன இலாபம்.........?

காம : வேறே என்னய்யா இப்ப இவங்களுக்குக் கவலை வந்துகுத்துது சொல்லு, கேட்போம். நான் படாத பாடுபட்டு பக்குவமாப் பேசி, உள்ளத்துக்கு உள்ளே இருப்பதை வெளியே தெரிய ஒட்டாதபடி சாமார்த்தியம் காட்டி, ஒரு பெரிய தொல்லையை அடக்கி ஒடுக்கி வைத்திருக்கிறேன்...இந்தத் தேர்தல் நேரத்திலே இது எப்படிப்பட்ட இலாபகரமான காரியம்......ஒரு பெரிய பட்டாளமே, இப்ப, நம்மோட வம்புதும்புக்கு வாராமே, வாழ்த்தி வரவேத்துகிட்டு இருக்குது...இலேசான ஆசாமிகளா, நெருஞ்சி முள்ளு மாதிரி, சதா சுருக்குச் சுருக்குன்னு குத்திகிட்டே இருக்கும்...அப்படிப்பட்ட ஆசாமிக, இப்ப, எவ்வளவு அன்பா, நேசமா இருக்கருங்க......இந்தக் காரியத்திலே, இப்படிப்பட்ட 'ஜெயம்' கிடைக்கும்னு நானே, எதிர்பார்க்கவில்லே. எப்படியோ நம்மோட 'ஜாதக பலன்' என்றுதான் சொல்லோணும், வெற்றி கிடைச்சுது...பெரிய தொல்லே விட்டுதுண்ணு நம்ம ஆளுங்க மத்தக் காரியத்தைக் கவனிக்காமபடிக்கு............அவங்களோட சவகாசம் எதுக்கு? என்று கேட்டு, கொட்டிகிட்டே இருந்த, எனக்குச் சங்கடமா இராதா......?

ஊழி : நாங்க சொல்கிறபடிதான் காமராஜர் நடக்கிருர், எங்களோட ஆள் ஆயிட்டார்—நாங்கதான் இப்ப ராஜ்யமே ஆளுகிரேும் என்றெல்லாம், அவங்க பேசறது கேட்டா, நம்ம ஆளுங்களுக்குச் சங்கடமா இராதா...?

காம : புத்தி எங்கேய்யா போச்சுது...நம்ம ஆளுங்க, கவனிச்சுப் பார்க்கவேணுமா...? எந்தக் காரியத்திலே, நான் விட்டுக் கொடுக்கறேன், எந்தக் கொள்கையிலே வளையறேன், சொல்லு கேட்பம் இந்தியான்னு வேண்டாம், திராவிடம் வேணும்னு எதாச்சும் பேசறனு......நேத்துகூட, தனிநாடு கேட்கறது பைத்யக்காரத் தனம்னு நான் பேசி இருக்கறேன்...

ஊழி : ஆமாமாம், நாங்ககூட பேசிக் கொண்டோம். இதைப் படிச்சா அவரு உங்களைத் தாக்குவாருன்னு கூட எண்ணிக் கொண்டோம்...

காம : போய்யா, அதுக்கு அவருக்கு நேரமே கிடையாதபடி நான் செய்து வைத்திருக்கறேன்.........திராவிடநாடு கேட்கறது என்னுடை கடமை—அது கூடாது என்கிறது காமரஜரோட

கடமைன்னு, அவர் பேசுரு, எழுதுரு.........இன்னும் என்னய்யா வேணும்...திராவிட நாடாவது வெங்காய நாடாவதுன்னு கூட அவர் வாயாலேயே வந்திருக்குது தெரியுமேல்லோ...

ஊழி: அதெல்லாம் படிக்கிறபோது சந்தோஷமாகத்தான் இருக்குது...ஆனு, இராமனே கொளுத்தறது...

காம: கொளுத்தறபோது, நானென்ன சிவகாசி வத்தி பெட்டி குரோஸ் குரோசா வாங்கிக் கொடுத்தனு? கொளுத்தவே விடலே ..தெரியுமா.........இராஜகோபாலாச்சாரி இருந்தபோதாவது, பிள்ளையாரை, தெருத் தெருவாப் போட்டு உடைச்சாங்க...இராமர் படம் கெளுத்தினு, ஜெயில்தான்னு சொன்னேன் துணிச்சலா...அது அவரோட கடமை அதுக்காக அவர் பேரிலே கோபம் கொள்ளாதிங்கன்னு அவர், அவரோட ஆளுகளுக்குச் சமாதானம் சொன்னுரு...... அவ்வளவு பக்குவமாக நிலைமை இருக்குது......

ஊழி: உத்யோக விஷயத்திலே எல்லாம்......

காம: என்ன......? என்னய்யா குடி முழுகிப் போச்சி......? எல்லாம் அவங்க கட்சி ஆளுகளுக்குத் தூக்கி கொடுத்து விட்டமா...?

ஊழி: அப்படிச் செய்யல்லேன்னுலும் எங்க ஆளுக! எங்க ஆளுகன்னு அவங்கச் சொல்லிக் கொள்ருங்க......

காம: அது அவங்க இஷ்டம்......உனக்கென்ன நஷ்டம், சொல்லு ..இதோ பாருய்யா ஒரு வேடிக்கை...இவரு இருக்காரே, இராஜரத்தினம்...........

ஊழி: ஆமா, போலீஸ் ஐ.ஜி..........

காம: அவர்தான்......அவர் ஐ.ஜி. ஆன உடனே, என்ன பேசிக் கொண்டாங்க...?

ஊழி: எங்க ஆசாமின்னு அவங்க பேசிக் கொண்டாங்க...

காம: நவாப் ராஜமாணிக்கம் கம்பெனி தெரியுமாய்யா, டிராமா கம்பெனி...

ஊழி: தெரியுமே...சம்பூர்ண இராமாயணம் நடத்தினுங்க...

காம: அந்த டிராமாவிலே, இந்த ஐ.ஜி. தலைமை வகித்தார்—என்ன பேசினுரு தெரியுமா...தெய்வானுகூலம்—தெய்வீக சக்தின்னு எதுவும் கிடையாதுன்னு சில பைத்யக்காரர்கள் பேசுருங்க. அது சுத்த தப்பு. எனக்கு ஐ,ஜி. வேலை கிடைச்சது கூட தெய்வானுகூலத்தாலேதான்னு, பேசினுரு தெரியுமா...

ஊழி : அப்படியா...அடே ..அவரா...?

காம : ஆமா ! பேப்பரிலே பார்க்கலையா ? இப்ப, சொல் லய்யா, அவர் எங்க ‘ஆளு’ன்னு அவங்கப் பேசிக்கொள்றதிலே, அர்த்தம் ஏதாச்சும் இருக்கா...

ஊழி : ஆமா...எப்படிச் சொந்தம் கொண்டாட முடியும் . ?

காம : கல்வி இலாகாவிலே, சுந்தரவடிவேலு இருக் காரேல்லோ...

ஊழி : ஆமாம்...அவரு முழுக்க முழுக்க அவங்க ஆளாம்...

காம : யாரு சொல்றது ? அவங்கதானே......! பைத்யக்காரத் தனமா, நீயும் நம்பறயா ? இதோ பாரய்யா. இராஜகோபாலாச் சாரி ஆட்சியின்போது, இந்த ஆசாமி, கல்வி இலாகாவிலேதான் பெரிய வேலையிலே இருந்தாரு......அப்ப கல்வித் திட்டம் வந்து தேல்லோ......

ஊழி : நாமெல்லாம்கூட எதிர்த்தமே...

காம : ஆமாய்யா...பெரியார் கட்சியும் பலமாகத்தானே எதிர்த்துது...மறியல் நடத்தல்லே...

ஊழி : ஆமாம்...அடே அப்பா, ஊரையே ஒரு கலக்கு கலக்கி விட்டாங்களே...

காம : கலக்கினுங்களேல்லோ......அப்ப. இதே சுந்தர வடிவேலுதான், ஊரூருக்குப் போயி ஆச்சாரியாரோட கல்வித் திட்டம் சிலாக்யமானது, அதை எதிர்க்கிறவங்க விவரம் தெரி யாதவங்கன்னு பேசினவரு...தெரிஞ்சுக்கோ...

ஊழி : இவரா...ஆச்சாரியாரையா ஆதரிச்சாரு...

காம : ஆதரிக்காமே, என்ன பண்ணுவாரு ? ஏன்யா, உத்யோகஸ்தரையெல்லாம், உன் ஆளு என் ஆளுன்னு கட்சி கள் பேசிக் கொள்ளலாமே தவிர, அவங்க எப்பவும் ‘எஜமான் சொல்படி’தானே...

ஊழி : அப்படித்தான் இருக்குது...

காம . இப்படிப்பட்டவங்களுக்கு உத்யோகம் கொடுத்து விட்டதிலே, நமக்கென்னய்யா நஷ்டம்...அதனுலே என்ன முறை, தலைகீழாக மாறிப் போச்சு? என்ன திட்டம் வந்து நம்மைக் குத்துது, குடையுது...பெரியவரு, என்னை தற்குறி, தன்மான மத்தவன், கங்காணி, அப்படி இப்படின்னு ஏசிப்பேசி வந்தாரு...

இப்ப, தமிழ் மகன், தடியாலே அடிச்சாலும், ஜெயிலிலே போட்டாலும், நான் அவர் பேரிலே கோபம் கொள்ளவே மாட்டேன். அது அவரோட கடமை...என்றல்லவா பேசரு...பார்க்கற யேல்லோ அவங்க பேப்பர்லே...

ஊழி : ஆமாமாம் . நம்ம பத்திரிகைகள் போட மறந்துட்டா கூட, இப்ப நம்ம சேதியை அவங்கதான் வெளியிடறுங்க... ஒண்ணுயிடணும்னுகூட யாரோ, அவங்க ஆசாமி பேசிஞருன்னு, பார்த்தேன்...

காம : ஆமாமாம்...இரண்டொரு உத்யோகம்...இதனுலே, நமக்கு, கட்சி என்கிற முறையிலே, எவ்வளவு பெரிய இலாபம்னு கவனிச்சயா...எத்தனை விதமான இலாபம்...

ஊழி : ஓட்டு, நமக்குத்தான் போடணும்னு...

காம : அடிச்சிப் பேசருங்கய்யா...இன்னும், நாம், எலக்‌ஷன் பிரசார கூட்டம் போடவே இல்லே; நம்ம வேலையை அவங்க ஆரம்பச்சி ' ஜரூரா ' செய்துகிட்டு, வாராங்க, ஊரூரா...

ஊழி : காங்கிரசுன்னு, வேப்பங்காயா இருக்கும்...எரிஞ்சு எரிஞ்சு விழுவாங்க, அவங்க...

காம : ஆகுமா...அது முன்னே !...இப்ப, எல்லாம்...சரியாகுது...கசப்பு மருந்து தேனிலே குழைச்சி சாப்பிடுவது இல்லையா...அது போலன்னு வைச்சிக்கய்யே...' ஓட்டு ' வாங்கித் தர, அவங்களோட தயவை, நான் ஒண்ணும் கேட்கல்லே...தானு வருகிற சீதேவியை வேணும்னு சொல்றதா? கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிச்சுகிட்டு வந்து கொடுக்கும் என்பாங்களே, அது போல ! இதைத்தானே, இராஜதந்திரம்னு சொல்லணும்...

ஊழி : ஆமா, பெரியவரோட கட்சி ஆசாமிக, இதை எல்லாம் அலசிப் பார்க்கமாட்டாங்களா...

காம : நேரம் ஏது? ஏன்யா, அவரு என்ன சாமான்யப் பட்டவரா...காமராஜர் சங்கதி கிடக்கட்டும், இராமன் சமாசாரத்தைப் பார்க்கலாம் வாங்கன்னு அழைச்சிகிட்டுப் போயிட்டாரே... இப்ப, அவங்களோட கவனம், மெட்ராசிலேயா இருக்குது... அயோத்தியா பட்டணம் போயாச்சி...

ஊழி : ஒரு விதத்திலே, அது நமக்குச் சௌகரியமாப் போச்சு...

காம: ஒரு விதத்திலேயா......நீங்க இதை எல்லாம், சரியா, அலசி ஆராய்ந்து பார்க்கறது கிடையாது...பெரியவரு, இப்ப இராமர்-சீதைபத்திப் பேசறதும் எழுதறதும், கிளர்ச்சி செய்யறதும், பார்த்தா, அவங்க ரெண்டு பேரும் இப்ப, எதிரே இருந்து கொண்டு இருப்பதுபோல தெரியுதேல்லோ...அவ்வளவு தீவிர மாத்தானே எதிர்க்கிருரு ..

ஊழி: ஆமாம் .....அது தவிர, வேறே பிரச்சினையே கிடையாதுன்னு நினைக்கிற மாதிரித்தான் தோணுது.

காம: அப்பேற்பட்ட எதிர்ப்புச் சக்தியைக் கிளப்பி, ஓயாமெ ஒழிச்சலில்லாமெ பாடுபட்டு, படை திரட்டி கிளர்ச்சி செய்யக் கூடியவர்னு தெரியுதேல்லோ...

ஊழி: ஆமாமாம்...அது எல்லோருக்கும் தெரிஞ்சது தானே...

காம: அப்படிப்பட்ட சக்தியை இப்ப என்னுடை சிநேகிதம் மட்டும் இல்லேன்னு, ஆட்சியின் பேரிலே தானே ஏவி இருப்பாரு...திக்குமுக்காடிப் போயிருக்கணுமே...அந்தத் தொல்லையைச் சமாளிக்கிறது தவிர வேறே ஒரு வேலைக்கும் நேரம் கிடைக்காதே...ஏன்யா மிரட்டறேன்னு நினைக்கறியா...நான் சொல்றது சரியா இல்லையான்னு நீயே, யோசிச்சுப்பாரு, புரியும். தேவிகுளம் பீர்மேடு விஷயமிருக்கே, எப்பேற்பட்ட தலைவலி...

ஊழி: பெரிய தலைவலிதான்... இன்னும் தீரலிங்களே...

காம: மலைமலையா ஆதாரமிருக்குது, தேவிகுளம் இதெல்லாம் தமிழனுடையதுதான் என்பதற்கு......கிடைத்தாகணும், நியாயப்படி பார்த்தா...ஊரே திரண்டுது...எல்லாக் கட்சிக்காரனும் ‘ஒண்ணு’ கூடிகிட்டானுங்க...

ஊழி: ஆமா, பெரியவருகூட காரசாரமாக எழுதினுரு......

காம: எப்படி எழுதாமே இருக்கலாம்? நாமேகூடத்தானே பேசினேம். சட்டசபையிலே தீர்மானம் போட்டோம்......

ஊழி: டில்லியிலே, நம்ம மனுவைத் தள்ளி விட்டாங்க......

காம: ஏன்யா, பூசி மெழுகறே......நம்மோட மூக்கை அறுத்து முகத்திலே கரியைப் பூசி அனுப்பி விட்டாங்க..... பெரியவருமட்டும், என்னுடை சினேகிதமா இல்லாமெ இருந்தா தூள் பறந்திருக்குமே, துரோகி ஒழிக! வடநாட்டுக் கூலி ஒழிக! கங்காணி ஒழிக! மானங்கெட்ட மந்திரிசபை மண்ணாய்ப் போக!......என்று நாள் தவருமல், போடுபோடுன்னு போட்டபடி

அல்லவா இருந்திருப்பாரு, சும்மாவா விட்டுவைப்பாரு, எத்தனை கண்டன நாள்—எவ்வளவு கிளர்ச்சி–மறியலு–ஏ, அப்பா! ஊர் அமளிகுமளியாயிருக்குமே......இராமர் படமா எரிச்சிகிட்டு இருப்பாரு ...போட்டுக் கொளுத்து நேரு படத்தை என்பாரே!

ஊழி : செய்திருப்பாரு.........ஆமா.........

காம : தடியடி, துப்பாக்கி, ஜெயிலு எல்லா ரகளையும், இங்கே, பம்பாய் மாதிரித்தானே நடந்திருக்கும்......?

ஊழி : உண்மைதான்.........ஊரே நாறிப்போயிருக்கும்... ..

காம : இப்போ? கப்சிப்! எவனாவது, மத்தக்கட்சிக்காரனுக, தேவிகுளம் பீர்மேடுன்னு பேசினா, இப்ப, நான்கூடப் பதில் சொல்லத் தேவை கிடையாது. அவரே, சரிதான் வாயை மூடுங்கடா.........தேவியும் குளமும்......மானங்கெட்ட சீதையையும் மரியாதை கெட்ட இராமனையும் கொளுத்திச்சாம்பலாக்காமெ, அந்த ஊரு வேணும் இந்த ஊரு வேணும்னு, வம்பு பேசறிங்களே, ஈனப்பிறவிகளே! இழி ஜாதி மக்களே!—அப்படி இப்படின்னு தாக்குதாக்குன்னு தாக்கருரு......வடக்கெல்லையிலே, நமக்கு நியாயம் கிடைக்கல்லே, வாயைத் திறக்கருரா, பார்த்தயா? தேவிகுளம் பீர்மேடு, எப்படியும் தமிழனுக்குத்தான், கூச்சல் போடாதிங்க, கிளர்ச்சி செய்யாதிங்க, நாங்களே வாங்கிக் கொடுக்கரேம்னு, நாம, காங்கிரஸ் கூட்டத்திலேயும் சொன்னேம், சட்டசபையிலும் பேசினேம்—நேரு நம்மோட மூக்கை அறுத்து விட்டாரு......இப்ப எங்க ரெண்டு பேருக்கும் இருக்கற சினேகிதம் இல்லேன்னா, வெளுத்து வாங்கி இருப்பாரே பெரியவரு, சும்மாவா விட்டு வைப்பாரு! மந்திரிசபை ஒழிப்பு நாள் போட்டிருப்பாரு! இப்ப பார்த்தயா? சூர்ப்பனகையோட மூக்கை இராமன் அறுத்தது பேடிச் செயல், இதை எந்த யோக்யன் கேட்டான் என்று பேசி வாராரு......நாம், தப்பிச்சிக்கிட்டோம்.........

ஊழி : அந்த வகையிலே பார்க்கறபோது, நீங்க அதிர்ஷ்டசாலின்னுதான் சொல்லோணும்.........

காம : 'நாம்'ன்னு சேர்த்துச் செல்லய்யா......நம்ம கட்சிக்கே அதிஷ்டம்னு சொலலு. ஒண்ணு கேட்கறேன், சொல்லு, சென்னை ராஜ்யம்னுதான் பேர் இருக்கோணும் தமிழ்நாடுன்னு பேர் இட முடியாது என்று சொல்லி விட்டு, என்னைத் தவிர வேறு எவனாவது நிம்மதியா இருக்க முடியுமா? சும்மா விட்டுவைப்பாரா பெரியவரு! அட, மானங்கெட்டவனே! உன்னைப்போயி, நான் பச்சைத் தமிழன், தமிழ் மகன், தன்மானத் தமிழன் என்றெல்லாம்

தூக்கி வைச்சி வைச்சிப் பேசினேனே! தமிழ்நாடுன்னு பேர் வைக்கக் கூடவா உனக்கு மனம் இல்லே, தமிழன் தானு நீ! மான ரோஷம் எல்லாம் வித்துப் போட்டு, நீ மந்திரியா இருக்கலாம்...... நான் எப்படி அதைப் பார்த்துகிட்டுச் சும்மா இருக்க முடியும்...... ஆகவே, இரண்டிலே ஒண்ணு பார்த்துவிடறேன்.........என்று 'போர்' ஆரம்பிச்சிவிட்டிருப்பாரெல்லோ......

ஊழி: ஆமாம்.........தமிழ்நாடு என்கிற பெயருக்காக 'போர்' நடத்தப் போவதாகக்கூடச் சொன்னதாகக் கவனம்......

காம: சொன்னுரய்யா, சொன்னுர். பிறகு, பார்த்தார், நான் தமிழ்நாடு கிடையாதுன்னு செல்லி விட்டேனு, என்னடா செய்யறது, இந்த மாதிரி நிலைமை ஆயிப்போச்சேன்னு, யோசனை செய்தாரு. செய்து, பிடி இராமனை! என்று அவரோட ஆசாமி களுக்கு வேறே வேலை கொடுத்து விட்டாரு......

ஊழி: சாமர்த்தியசாலிதாங்க......

காம: யாரு? அவருமட்டுந்தானு? ஏன்யா, அவர் மூலமாகக் காங்கிரசுக்கு வரக்கூடிய ஆபத்தை வரவிடாமப்படிக்குத் தடுத்த என்னேட சாமர்த்தியத்தைக் கொஞ்சங்கூடப் பாராட்டமாட்டே போலிருக்குது......

ஊழி: செச்சே! அப்படி இல்லிங்க..... நீங்க, முன்னே எல்லாம் வெட்டு ஒண்ணு துண்டு ரெண்டுன்னு இருப்பிங்களே, இப்ப, என்னமோ குழைறதும் கொஞ்சறதுமா இருக்கவே........

காம: குழையறதாலே, இலாபம் இருக்கா இல்லையான்னு பாரு. பம்பாயிலே இவ்வளவு ரகளை நடந்தது—பஞ்சாபிலே—குஜராத்திலே—அசாமிலே—ஒரிசாவிலே—எங்கே பார்த்தாலும் ரகளையோ ரகளைன்னு நடந்தது—துப்பாக்கிப் பிரயோகம் நாள் தவருமல் நடந்தது......கொலை! படுகொலை! சித்திரவதை! காங்கிரஸ் கொடுங்கோலாட்சி!—என்று இன்னேரம் இதற்காக, பெரியவரு சூருவளிபோல அல்லவா பிரசாரம் செய்து, காங்கிர சோட மானத்தை வாங்கி விட்டிருப்பாரு—கொலைபாதக ஆட்சித் தலைவர் வருகிருர், அவர் முகத்திலே காரித் துப்புங்கள்—என்று இராஜேந்திர பிரசாத் வந்தபோது இயக்கமே நடத்தி இருப்பாரே! நீயும் பார்க்கறயே, நாள் தவருமல் பேசுகிருரே, ஒரு வார்த்தை, கண்டனம் பேசுகிருரா? பேசமாட்டார்! எனக்குச் சங்கடமாக இருக்குமே என்கிற எண்ணத்திலேதான். இல்லையானுல், 'நேரு ஒழிக' கிளர்ச்சிதான் நடக்கும்.

ஊழி: ஆமாம்......அதைக் குறித்தெல்லாம் பேசுவது என்றல் அவருக்கு இஷ்டமாச்சே......

காம: இஷ்டம்னு மெதுவாச் சொல்றியே......அக்கார வடிசல் சாப்பிடுவது போலன்னு சொல்லு......காங்கிரஸ்காரர் களே காங்கிரஸ் ஆட்சியை வெறுப்பார்கள் அப்படியல்லவா, புட்டுப் புட்டுச் சொல்லி வருவாரு, பார்க்கறயே, அவர் சீதையைப் பத்தி எடுத்துச் சொல்லி வருவதைக் கேட்டா, சீதைக்கே சந்தேகம் வந்து விடுமே, அப்படி இருக்கெல்லோ, அப்படிப் பட்டவரு, காங்கிரஸ் ஆட்சியிலே, இரத்தம் ஆருக ஓடுது, பிணம் மலைமலையாகக் குவியுதுன்னு, எடுத்துச் சொல்லியிருந்தா, அம்மாடி! அல்லோலகல்லோலமாகி இருக்குமே, ஒரு பேச்சு உண்டா! அதுதான் போகட்டும்! சிலோனிலே தமிழர்களைச் சுட்டுத் தள்ளின சேதி வந்ததே—எங்க ரெண்டு பேருக்கும் சினேகம் இல்லாமெ போயிருந்தா—இன்னேரம், காங்கிரஸ் சர்க்காரைப் படாதபாடு படுத்தியிருக்கமாட்டாரா? கப்சிப்! ஒண்ணும் பேசல்லே, பார்த்தயேல்லோ! இந்த 'விசைத் தறி' சமாசாரம் ஒண்ணு போதுமே அவருக்கு காங்கிரஸ் சர்க்காரை கணடதுண்டமாக்காமல் இனி நான் வீட்டுக்குள்ளே காலடி எடுத்து வைக்கமாட்டேன் என்று கடும் சபதமல்லவா, எடுத்துக் கொண்டிருப்பாரு!

ஊழி: ஆமாம்.....அதெல்லாம் ஒரு துளி சங்கடமும் தருவ தில்லே, எதெதற்கு அவர் பெரிய பெரிய கிளர்ச்சி செய்யக் கூடியவானு, நாடு எதிர்பார்க்குமோ, அதிலே அவர் தலையிடவே காணேம்.

காம: அதுமட்டும் இல்லே......அவர் தலையிட்டு, கிளர்ச்சி செய்யாதது மட்டுமல்ல, மத்த கட்சிக்காரனுங்க ஏதாச்சும் மூச்சுப் பேச்சுன்னலும், இவரே அவர்களை எதிர்த்து, மூலையிலே உட்காரச் செய்துவிட்டு, எனக்குச் 'சேதி' சொல்லி அனுப்புவாருன்னு, எண்ணிக்கொள்ளேன், இவ்வளவு 'இலாபம்' இருக்குது

ஊழி: விளங்குதுங்க......விளங்குது

காம: என்னேட சினேகிதம் ஏற்பட்ட பிறகு, அவர், தனிநாடு கேட்கிற விஷயத்தைக்கூட பத்தோட பதினென்னு செய்துகிட்டாரு..... ஐந்தாண்டுத் திட்டத்தை அலங்கோலப் படுத்திப் பேசறது கிடையாது; இப்படி நமக்கு ஏகப்பட்ட இலாபம் இருக்குது.

ஊழி: இதை எல்லாம், விளக்கமாச் சொல்லி விடுங்களேன் நம்ம ஆளுகளுக்கு......

காம : சுத்த ஏமாளியா இருக்கறயே, நம்ம ஆளுகளுக்கு விளக்கமாகச் சொன்னு, பெரியவரோட கட்சி ஆட்கள் விசாரப் படமாட்டாங்களா......என்னடா இது, பெரியவரு காமராஜர்கூட நேசமா இருப்பது, ஆராய்ந்து பார்த்தா, நம்மோட கொள்கைக்கே ஆபத்தாத்தான் இருக்குது, காங்கிரசுக்குத்தான் அந்தச் சினேகிதத்தாலே, இலாபம் பலவிதத்திலேயும் இருக்குதுன்னு தெரிஞ்சி, சங்கடப்படமாட்டாங்களா......?

ஊழி : ஆமாங்க......அதுவும் உண்மைதான்.

காம : அதனுலேதான், இப்படி உன்னைப்போல, தனியா வந்து பார்க்கிறவங்களிடம் நான், விளக்கம் சொல்றேன். தேர்தல் முடிகிற வரையிலே, நாம இந்த ! கறவைப் பசுவை' விடப்படாது ஐயா, விடப்படாது......ஆமா ! நான் காரண மில்லாமலே, சினேகிதம் செய்து கொண்டிருப்பனு ! கெண்டையை வீசினு, விரால் கிடைக்கும்னு, நம்பு. பெரியவரே, எழுதி யிருக்காரு, காமராஜர் எப்பவும் காங்கிரஸ் பக்தர்'னு தெரியுதா......

ஊழி : உங்களோட காங்கிரஸ் 'பக்தி' எங்களுக்குத் தெரி யாததுங்களா......

காம : 'பக்தி' மட்டுமல்லய்யா......'யுக்தி' இருக்குது, அதையும் தெரிஞ்சிக்க வேணும்......தெரியுதா......

ஊழி ; உங்களோட பக்தியும் யுக்தியும், யாருக்கு வரும்...... இனி நான் சும்மா இருக்கப்போறதில்லைங்க......ஆமா, கிராமம் கிராமமாக இதைச் சொல்லி வைப்பேன்......

காம : இரு, இரு......வெளிப்படையாகச் சொல்லிக் காரி யத்தைக் கெடுத்துவிடாதே......ஆமா......இந்த ஐந்தாண்டுத் திட்டத்துக்கு ஒரு நடகக் கோஷ்டி ஏற்படுத்த முடியுமா...... உன்னுலே.........

ஊழி : நீங்க உத்தரவிட்டா செய்து முடிச்சுடறேன்...... இதுக்கு என்னங்க கஷ்டம்......

காம : செய்துபாரு, யோசனை. அடுத்த மாசம், முடிக்கலாம்.

ஊழி : நம்ம பக்கத்திலே, ஒரு மகாநாடு போடணுமுங்க, எலக்ஷனுக்கு முந்தி.

காம : போட்டாப்போச்சி, அதுக்கென்ன.

ஊழி : இந்திராகாந்தி வருவாங்களான்னு, கேட்கறுங்க.

காம : அடெடே! காங்கிரஸ் மகாநாடு போட உத்தேசமா ?

ஊழி: ஆமாங்க...நம்ம கட்சி மகாநாடுதான்.

காம: ஏன்யா! அதைவிட, புத்தர் மகாநாடு, திருக்குறள் மகாநாடு, இப்படி ஏதாவது போட்டா?

ஊழி: புரியுது, புரியுது...போடறது...எல்லோரையும் அழைக்கறது...

காம: இந்த முன்னேற்றத்தானுங்க மட்டும் வேணும்...

ஊழி: சரி...அவனுங்க வந்தா கொஞ்சம் கூட்டம் வருது...

காம: கூட்டம் வரும்...ஆனு, அவரு வரமாட்டாரு.

ஊழி: அதுவும் அப்படியா...நமக்கு எதுக்குங்க சங்கடம்...

காம: 'யுத்தி'தான்யா, இப்ப நமக்கெல்லாம் 'கத்தி'— தெரியுதா...

ஊழி: தெளிவாகத் தெரியுது...ஏங்க, தேசீய கலா சேவா சபான்னு பேர்வைக்கலாமா...

காம: எதுக்குப் பேர்?

ஊழி: அதுதாங்க, நீங்க சொன்னிங்களே...?

காம: மகாநாடு விஷயமாத்தானே சொன்னேன்...

ஊழி: அதுக்கு முந்தி சொன்னிங்களே...ஐந்தாண்டுத் திட்ட பிரசாரம்...

காம: அடே, அதுவா, மறந்து விட்டேன்...

ஊழி: இதுதாங்க, எங்களோட பயமெல்லாம் எங்க விஷயத்தை மறந்து விடுவிங்களோ என்கிற பயம்தான்.

காம: அந்தப் பயமே வேண்டாம்...நான் எப்பவும், உங்களோட சேர்ந்து வளர்ந்தவனுச்சே...இந்தச் சினேகிதமெல்லாம் எனக்கு 'சாஸ்வதமா'...? இருக்கிற வரையிலே, என்னென்ன இலாபம்னுதான், என் குறி இருக்கும்...தெரியுதா...

ஊழி: நேரமாகுதுங்க...டெலிபோன்கூட அடிச்சிகிட்டே இருக்குது...நான் வாரேனுங்க வந்தேமாதரம்.

காம: ஜெய்ஹிந்! நமஸ்காரம்...

## காட்சி 3

இடம்: திராவிட கழகத் தோழர் இல்லம்.

இருப்போர்: திராவிட கழகத் தோழர், திராவிட முன்னேற்ற கழகத் தோழர், ஆபீஸ் ப்யூன், ஆளவந்தார்.

காலம்: சனிக்கிழமை மாலை 7 மணி,

தி. மு. க: இந்தக் காத்தமுத்து, என்ன பேசினாராம், காமராஜர் என்ன சொன்னாராம்......அடடே! என்ன, கண்ணிலே ஏதாவது தூசி விழுந்ததா......

[ஆபீஸ் ப்யூன் ஆளவந்தார் வருகிறார்.]

ஆள: ஏன், தம்பி! இன்னும் அதை எண்ணியா கண்ணைக் கசக்கிக்கிட்டு இருக்கறே

தி. மு. க: கண்ணீர் துளி!

ஆள: நீ, வேறே, தம்பியோட மனம்தான் தணலாக் கிடக்குதே.

தி. மு. க: நண்பா! கவலைப்படாதே, ஆளவந்தார், எனக்கு விவரமாகச் சொன்னார், காமராஜர், காத்தமுத்து சம்பாஷணையை

தி. க: உன்னிடம் சொல்லியாச்சா.

ஆள: என் எரிச்சல் இன்னமும் அடங்கல்லையே, தம்பி, காமராஜரைப் பெரியார் ஆதரிப்பதாலே, நமக்குத்தான் இலாபம்னு நீ சொல்லிச் சொல்லி, நானும் நம்பிக்கொண்டுதான் இருந்தேன்.

தி. மு. க: ரெண்டு பேருமாச் சேர்ந்து, என்னைத் திருத்தக் கிளம்பினது கொஞ்சநஞ்சமில்லையே......

தி. க: தாறுமாறாகக்கூடப் பேசினோம்......

ஆள: காத்தமுத்துவிடம் காமராஜர், விவரம் விவரமாப் பேசப் பேச என் மனம் படாதபாடு பட்டுது, போயேன்......

தி. க: என்னிடம், நீ சொன்னது, என் மனசிலே நெருப்பை வாரிக்கொட்டினது போலாச்சி......

தி. மு. க: எனக்கு, ஆள்வந்தார் சொன்னது கேட்டு ஆச்சரியம் ஏற்படவில்லை—ஏன்......எனக்குத் தெரியும், காமராஜர் எண்ணம் இப்படித்தான் இருக்கும் என்று......

ஆள: எவ்வளவு புட்டுப்புட்டுச் சொன்னுர் தெரியுமா...... இந்த காத்தமுத்து, வெளியேவந்து விழுந்து விழுந்து சிரிக்கிருன்.

தி. க: ஏன் சிரிக்கமாட்டான்......நம்மை எல்லாம் ஏமாற்றி விட்டாரே. தன்னுடை காமராஜர் என்கிற தெம்பு.

தி. மு. க: எல்லாம் நல்லதாகத்தான் முடியும்......வருத்தப் படாதே......

தி. க: வேதனையா இருக்குதப்பா.

ஆள: ஏம்பா......ஐயாவிடம் சொன்னு, என்னு......?

தி. க: நாமா......நம்புவாரா?

தி. மு. க: சொல்லலாம், ஆனு நாமதான், அந்தப் பழக்கத்தையே வைத்துக்கொள்ளவில்லையே.

ஆள: ஆமாம், அதுவும் உண்மைதான்......

தி. க: சொன்னு, ரொம்பக் கோபிப்பாரு......

தி. மு. க: அவரிடம் போய் இதைச் சொன்னு, தீர்ந்தது, நீங்களும் கண்ணீர்த் துளியாக வேண்டியதுதான்.

ஆள: இனிமேலேயா ஆகப்போவுது, தம்பி, இப்பவே கண்ணிலே தண்ணி தளும்புதே......

# இரக்கம் எங்கே?

[இரக்கம் இல்லையா? ஏனய்யா இவ்வளவு கல்மனம்? இரக்கம் கொள்ளாதவனும் மனிதனா? சர்வ சாதாரண மாகக் கேட்கப்படும் கேள்விகள். ஆனால், பலரால், பல சமயங்களில் இரக்கத்தைக்கொள்ள முடிவதில்லை. ஏன்? வாழ்க்கையின் அமைப்பு முறைதான் அதற்கு முக்கியமான காரணம். இச்சிறு நாடகம், இக்கருத்தை விளக்குவது.]

## காட்சி 1

**இடம் :** வேலன் வீடு.

**இருப்போர் :** வேலன், வீராயி, மருதை, பூஜாரி.

[மருதை படுத்துக்கிடக்கிருன். வேலனும் வீராயியும் பூஜாரிக்கு எதிரில் அடக்கமாக உட்கார்ந்திருக்கிருர்கள். பூஜாரி உடுக்கையை அடித்துக்கொண்டு, உரத்த குரலில் பாடி, வேப்பிலையால், அவ்வப்பொழுது அடித்துக்கொண்டிருக்கிருன். ஒரு தட்டிலே விபூதியும், எலுமிச்சம் பழமும் வைக்கப்பட்டிருக்கிறது. பாதி அளவு சாராயம் உள்ள ஒரு பாட்டில், ஒருபுறம் இருக்கிறது. பூஜாரியின் கண்கள் அடிக்கடி அந்தப் பக்கம் பாய்கிறது.]

பூ: வேலப்பா! இது பொன்னியம்மா குத்தந்தான், இருந்தாலும் பாதகமில்லே! நான் அதுக்கு சரியான வேலே செய்துவிடறேன், கொலே நோவு ஓடிப் போவுது பாரு.

வீ: (கும்பிட்டபடி) உங்களுக்குக் கோடிபுண்யமுங்க. எங்களாலே இந்த கோரத்தைப் பார்த்துச் சகிக்க முடியலேங்க.

பூ: வீரம்மா! உன்புள்ளே நோவு போயிடுத்துன்னு வைச்சிக்கோ. வேலப்பா! பொன்னியம்மா கோயிலிலே இண்ணராத்திரி நடுசாமத்திலே, ஒரு கோழி அறுத்து, இரத்தத்தை அபிஷேகம் செய்யணும். குடலுக்குக் குடலு.

வீ: அப்படின்ஞ, என்ஞங்கோ?

பூ: ஆத்தா, கோவத்திலே, உன் மவனுடைய குலேயிலே நோவு உண்டாக்கிட்டா. இப்பொ அவமனசு குளிருகிருப்போலே, கோழியை அறுத்துக் குடலே எடுத்து மாலேயா போட்டு விட்டா, ஆத்தா, உன் மவனுடைய குலேநோயை போக்கிடுவா.

வீ: (கும்பிட்டு, கன்னத்தில் போட்டுக்கொண்டு) பொன்னிம்மா, தாயே! அப்படியே செய்யறேன். ஏழைகமேலே இரக்கம் காட்டு.

[வேலன், துணிமுடிப்பை அவிழ்த்து 3-ரூபாய் கொடுக்கிருன். பூஜாரி அதைப்பெற்றுக் கொண்டு போகிருன்.]

## காட்சி 2

இடம்: பாதை.

இருப்போர்: பூஜாரி, ராஜாக்கண்ணு.

[பூஜாரி, ராஜாக்கண்ணு வருவதைக்கண்டு]

பூ: அடடே! தம்பி! ராஜாக்கண்ணு இல்லே, நீ! நம்ம வேலன் மகன்?

ரா: ஆமாம். நீங்க? தொப்புளான் தோட்டத்திலே காவக்காரராக இருந்திங்களே, மொட்டெ, அவுங்கதானே?

பூ: முன்னே காவக்காரனுக இருந்தேன். இப்ப நான் நம்ம பொன்னியம்மா கோயில் பூஜாரி. ஆமா, கடுதாசி போட்டானு, வேலன்?

ரா: இல்லையே! ஏன்? வீட்டிலே யாருக்கு என்ன?

பூ: அடபாவமே! உனக்கு விஷயமே தெரியாதா? உன் தம்பி மருதை இருக்கானே, பாவம், அவனுக்குக் குலேநோவு கொல்லுது. பொன்னியம்மா குத்தம். இப்பத்தான், மந்திரிச்சி விட்டு வர்ரேன். போய்ப்பாரு தம்பியை.

ரா: (சோகத்துடன்) இங்கே இப்படியா? சரி. நான்தான் படாத பாடுபட்டு, பிழைச்சா போதும்னு இங்கே வந்தேன். வந்த இடத்திலே இப்படி இருக்குது. துரத்தி அடிக்குது தொல்லேயும் துயரும்.

பூ: உனக்கு என்னப்பா உடம்புக்கு? தலேயிலே கட்டு! காயம்!

ராஜா: அதுவா? ஒண்ணுமில்லே, நம்ம மாட்டுக்குச் சூடு போட்டு வைக்கிறமில்லே, அந்த மாதிரி நம்ம சர்க்காரு, அடிக்கடி இப்படித் தொழிலாளருக்கு முத்திரை போட்டு வைக்கிறது. அந்த முத்திரை தான் அது.

பூ: என்னப்பா இது? பட்டணத்து பாஷையிலே சொன்னு எனக்குத் தெரியுமா? புரியருப்போல சொல்லு.

ரா: போலீசார், தடியாலே அடிச்சாங்க, மண்டையிலே. அந்த அடி.

பூ: (திடுக்கிட்டு) என்னப்பா இது? பூமழை பொழிஞ்சுதுன்னு சொல்ருப்போலே, இவ்வளவு சாந்தமாச் சொல்றயே, இந்த அனியாயத்தை. போலீசாரு தடியாலே அடிச்சாங்களா? ஏன்?

ரா: என்னை மட்டுமா? என்னைப் போல ஒரு நூறு பேருக்கு இருக்கும். ஒரு ஐஞ்சாறு பேரு, 'ஒகயா' ஆயிட்டாங்க.

பூ: என்ன ஆயிட்டாங்க?

ரா: செத்துப் போயிட்டாங்க.

பூ: (திகைத்து) செத்துப் போயிட்டாங்களா? அடிச்சதாலேயா?

ரா: அடின்னு அடி, உங்க ஊட்டு அடி, எங்க ஊட்டு அடியா அது.

பூ: அக்ரமமா இருக்கேடா, தம்பி! ஏன் அடிக்கோணும் மனுஷன்களை. நாயா நரியா நாம்ப.

ரா: (கேலிச்சிரிப்புடன்) அடிக்கிறவங்க மாத்திரம் நாயா, நரியா? அவங்களும் மனுஷ்யனுங்கதான்.

பூ: மனுஷனை மனுஷன் இப்படி ஈவு இரக்க மில்லாமெ, அடிக்கறதா! சாகடிக்கிறதா? ஏன்?

ரா: மெட்ருசிலே, நான் மில்லிலே வேலை செய்யறேனேல்லோ, என்னைப்போல ஒரு ஐயாயிரம்பேரு தொழிலாளி வேலை செய்யறுனுங்க. விலைவாசி ஏறிப்போச்சி. மில்லிலே கொடுக்கிற கூலி போதலே. மில்காரருக்கு இந்த வருஷத்திலே அடி அடின்னு இலாபம் சரியா அடிச்சுது. எங்க உழைப்பினலே தானே இவ்வளவு இலாபம் வந்தது, எங்களுக்கோ வயித்துக் கூடச் சரியா இல்லையே, நீங்க கொடுக்கிறகூலி ஒரு எட்டணு அதிகமாத் தரவேணும்னு கேட்டோம்......

பூ: நீயா, கேட்டே?

ரா: எல்லோரும், ஒருவர்மட்டும் கேட்க முடியாதே. கூட்டம் போட்டுக் கேட்டோம்...

பூ: தம்பீ! பீடி இருந்தா ஒண்ணு குடு.

ரா: இல்லையே! கூலி உயர்த்தச் சொன்னமா—முடியாதுன்னு சொன்னுன்.

பூ: கெவர்மெண்டா?

ரா: இல்லே—மில்காரன்.

பூ: சரி. அப்புறம்?

ரா: ஸ்ட்ரைக் பண்ணினோம்.

பூ: என்ன? என்ன பண்ணிங்க?

ரா: ஸ்ட்ரைக், ஸ்ட்ரைக் பண்றதுன்னு, வேலைக்கு வர முடியாதுன்னு சொல்றது.

பூ: வேலை செய்யாவிட்டா, கூலி? கூலிவராமே, குடும்பம் எப்படி நடக்கும்?

ரா: அதெல்லாம், சங்கம் பார்த்துக் கொள்றேன்னு சொல்லிச்சி. ஸ்ட்ரைக் பண்ணிக் கூட்டம் போட்டோம். ஒரு ஐயாயிரம் ஜனம், ஆத்திரத்தோடு கூடினு, கொஞ்சம் ஆர்ப்பாட்ட மாகத் தானே இருக்கும்!

பூ: ஆமாம்—கொஞ்சம் நிதானம் தவறினுலே, ஆர்ப்பாட்டந் தான்.

ரா: நாங்க, குடிக்கக் கஞ்சிக்குக் கூட்டம் போட்டோம். அதுக்குப் பேர் என்னு தெரியுமோ. கலாட்டான்னு பேரு.

பூ: யாரு உங்க மில்காரன் சொன்னுை?

ரா: கெவர்மெண்டு சொல்லிச்சி. சொல்லி, போலீசை அனுப்பினுங்க. அவனுங்க குதிரைமேலே வந்தாங்க. நாங்க, கும்பலா கூச்சல் போட்டோம். குதிரை மிரண்டுட்டுது. ஒரே அமர்க்களம். போலீசாரு, தூக்கினுங்க தடியை. மண்டையைப் பார்த்துக் குடுத்தானுங்க......

பூ: ஈவு இரக்க மில்லாமெ......

ரா: ஈவாவது, இரக்கமாவது? என்கூட, தங்கவேலுன்னு ஒரு தொழிலாளி—அவன் அண்ணனுக்குப் போலீசிலே வேலை. அண்ணைக்குப்பாரு வேடிக்கையை—கும்பலிலே புகுந்து அடிக்கச்சே, தங்கவேலுக்கு அடி கொடுத்தது யாரு தெரியுமா—அவுங்க அண்ணன்! கும்பலிலே கோவிந்தா! கண்டானு அவன், தன் தம்பின்னு? கண்டு அடிக்காமெ விட்டா, அவனுக்கு வேலை தான் நிலைக்குமா? சாயந்திரம் அண்ணன் அடிச்சான்—அந்த அடிக்கு இராத்திரி, அண்ணிதான் 'பத்து' அரைச்சி போட்டா.

பூ: ரொம்ப அக்ரமமா இருக்கேடாப்பா? இரக்கம், கொஞ்சம்கூடக் காணேமே?

[ராஜாக்கண்ணு ஒரு பீடி எடுத்துப் பற்ற வைக்கிருன்.]

பூ: என்ஞ தம்பி, பீடி, குடுன்னு கேட்டா, இல்லேன்னு சொன்னயே?

ரா: ஆமா, ஒண்ணு தான் இருந்தது. உங்களுக்குக் குடுக்கிறதுக்கு இல்லேன்னு சொன்னேன். சரி, நான் வீட்டுக்குப் போய்ப் பார்க்கிறேன்.

[ராஜா போகிருன்]

பூ: திருட்டுப்பய! ஒரு பீடி கேட்டா இல்லேன்னு சொன்ஞன். வேணும் இதுகளுக்கு. இதுகளிடம் ஈவு இரக்கம் காட்டப் படாது.

[போகிருன்]

## காட்சி 3

இடம்: வேலன் வீடு.

இருப்போர்: மருதை, வேலன், வீராயி.

[மருதை படுக்கையில் படுத்துப் புரள்கிருன்—துடிக்கிருன். சாராயப் பாட்டில் முழுவதும் காலியாகிக் கிடக்கிறது. வேலனும் வீராயியும் வேதனைப் படுகிருர்கள்.)

வீ: ஐயோ! புழுவாட்டம் நெளியிருனே! என்மனம் தாளலியே. நான் என்னத்தைச் செய்வேன். பொன்னியம்மா!

மரு: ஐயோ! ஐயயோ—என் உயிர் போவுதே—அம்மா—அம்மாடி—அப்பா—அப்பாடி—

[ராஜாக்கண்ணு ஓடி வருகிருன்.]

வீ: அடே ராஜா! இந்தக் கண்ருவியைப் பாருடா!

மரு: அண்ணென்! வந்துாட்டயா? உன்னைத்தான் பார்க்கோணும், பார்க்கணும்னு ஆசையா இருந்தது. ஐயயோ! அப்பப்பா!

ரா: (பக்கத்திலே உட்கார்ந்து மருதையைத்தூக்கி, மார்மீது, சார்த்திக்கொண்டு விம்மியபடி)

தம்பி! மருதெ! உனக்கு என்னடாப்பா, பண்ணுது? ஐயோ! இது என்ன நோயோ தெரியலே. பார்க்கச் சகிக்கலேயே! தெய்வமே! உனக்குக் கருணை இல்லையா?

மரு: அண்ணேன்! எங்கிட்ட கொஞ்சம் பேசண்ணேன். ஏழைக பேச்சை எண்ணைக்கும் கேட்காத தெய்வத்தைக் கூப்பிட்டு பலன் என்னண்ணேன்.

ரா: (தம்பியை அன்புடன் அணைத்துக்கொண்டு) அடே அப்பா! இந்தக் கோரத்தைப் பார்க்கவாடா, நான் வந்தேன். அப்பா! இங்கே பக்கத்திலெ, டாக்டர் யாரும் இல்லையா?

வீ: இருக்கருரே, ராமய்யர்.

[மருதையைப் படுக்க வைத்துவிட்டு ஓடுகிறுன், ராஜாக்கண்ணு—டாக்டர் வீட்டுக்கு.]

## காட்சி 4

இடம்: டாக்டர் வீடு.

இருப்போர்: டாக்டர் தண்டம் கம்பவுண்டர், ராஜாக்கண்ணு.

[சாய்வு நாற்காலியில் படுத்துக்கொண்டு, டாக்டர் சுவாரஸ்யமாகப் படித்துக் கொண்டிருக்கிருர். கம்பவுண்டர் கண்ணன் காலி பாட்டில்களில் கலர்த் தண்ணீர் நிரப்புகிருர்.

ஐயா! ஐயா! டாக்டர்! டாக்டர்! என்று வெளியே குரல் கேட்கிறது.

டாக்டர் பரபரப்படைகிருர். கம்பவுண்டர் பாட்டில் களை ஒழுங்காக வைத்துவிட்டு வெளியே போய், ராஜாக்கண்ணை அழைத்துக்கொண்டு வருகிருர்.]

க: இப்பத்தான், டாக்டர் ஒரு விசிட் போய்வந்து உட்கார்ந்தார்—இதற்குள் வந்துவிட்டீர்.

ராஜா: ரொம்ப அவசரமான கேஸ் (டாக்டருக்கு நமஸ்காரம் செய்துவிட்டு) ரொம்ப அர்ஜண்டாக என் வீட்டுக்கு வரவேணும்.

டா: (கம்பவுண்டரைப் பார்த்து) டயம் என்ன இப்போ?

க: டுவெல்வுக்கு டென் மினிட்ஸ் இருக்கு.

டா: அப்படின்னு, டோக்கர் கம்பெனி சேட் வருகிற சமயம்?

ரா: டாக்டர் சார்! என் தம்பி, பிராணவஸ்தையிலே இருக்கிறன். இந்நேரத்திற்குள் என்ன ஆகிவிட்டதோண்ணு பயப்படக்கூடிய ஸ்திதி. தடை சொல்லாமல் வரணும். என் தம்பி உயிரைக் காப்பாத்தணும்.

டா: (அலுப்பால் வெறுப்படைந்ததுபோல பாவனை செய்து) என்னய்யா இது ஒரே ரகளை! நமது வாடிக்கைக்காரன்—ஒரு இலட்சாதிபதி—டோக்கர் கம்பெனி சேட்—அவன் வருகிற நேரம் அதைக் கெடுத்துக்கொண்டு, உன் பின்னேடு வரமுடியுமா?

ரா: (டாக்டரின் காலைப் பிடித்துக்கொண்டு) அப்படிச் சொல்லப் படாதுங்க. கொஞ்சம் இரக்கம் காட்டுங்க.

டா: எழுந்திரு, எழுந்திரு. என் வேலையிலே அலுப்பு பார்த்தா முடிகிறதா? சரி! கார் வந்திருக்கா?

ரா: மோட்டாரா? இல்லிங்க.

டா: யார்ரா இவன்—சுத்தப்பட்டிக்காட்டுப் பயபோலிருக்கு. போய் குதிரை வண்டியாவது கொண்டுவாடா.

ரா: ரிக்ஷா கொண்டு வரட்டுங்களா?

டா: சரி. ஓடு. அழைத்துக்கொண்டு வா.

[வெளியே செல்கிறன். டாக்டர் உடை போட்டுக் கொள்கிறர்.]

## காட்சி 5

இடம்: வேலன் வீடு.

இருப்போர்: வேலன், வீராயி, மருதை.

[டாக்டர் உள்ளே வருகிறர். வீராயி கும்பிடுகிறள். வேலன் காலிலே விழுகிறன்.]

டா: என்னை அழைக்கவந்த ஆசாமி எங்கே?

வே: டே! அப்பா! ராஜாக்கண்ணு! டே!

[ராஜாக்கண்ணு, ஒரு பழைய நாற்காலியைத் தூக்கிக்கொண்டு ஓடி வருகிறான். அதைப் போட்டு, டாக்டரை அதிலே உட்காரச் சொல்லி விட்டு நிற்கிறான்.]

[டாக்டர் பரிசோதனை நடக்கிறது.]

டா: இது, அபண்டிசிடிஸ். மேஜர் ஆபரேஷன் செய்யணும். ரொம்ப ஜாக்ரதையாத்தான் கவனிச்சிக்க வேணும்.

ரா: (பயந்து) ஆபரேஷனா? ஆபத்து இராதுங்களே!

டா: ஏம்பா! நான் என்ன ஜோசியரா? டாக்டர்தானே! அபண்டிசிடிஸ் ஆபரேஷன் சிரமமானதுதான். நூறு ரூபாயாகும், பீஸ்.

ரா: (மேலும் பயந்து) நூறு ரூபாய்ங்களா? உயிருக்கு ஆபத்து இராதே.

டா: நூறு ரூபாய்னா அதிகம்னு நினைக்கறயா? வியாதி, அப்படிப்பட்டது. உயிர் விஷயத்தைப்பத்திப் பயப்படாதே, பகவான் இருக்கார்.

ரா: (வேலனைப் பார்த்து) ஐயா, ஆபரேஷன் செய்கிறாராம், பிறகு ஆண்டவன் இருக்காருன்னு சொல்றாரு.

வே: (வேதனையுடன்) ரூபா நூறு வேணுமாமே.

[ராஜாக்கண்ணு கைகளைப் பிசைந்து கொள்கிறான். வீராயி முந்தானையால் கண்ணைத் துடைத்துக் கொள்கிறாள்.)

டா: சரி! உங்க யோசனை முடிந்தபிறகு வந்து சொல்லுங்கோ. இப்ப, விசிடிங் பீஸ் ஐஞ்சு ரூபா எடுங்கோ.

ராஜா: இருங்க, டாக்டர்.

[ராஜா, தகப்பனிடம் இரகசியமாக எதுவோ பேசுகிறான்.]

[மடியிலிருந்து ஒரு மணிபர்சை எடுத்துச் சில நோட்டுகளை டாக்டரிடம் கொடுத்து]

ரா: தற்சமயத்துக்கு இதை வைச்சிக்கங்க—ஏழைக மேலே இரக்கம் காட்டுங்க.

டா: நீ, என்ன காய்கறிக் கடைக்காரனா? இது என்னப்பா இருபத்தைந்து ரூபா?

ரா: கையிலே இருந்தது அவ்வளவுதானுங்க. பெரிய மனசு செய்யவேணும்.

[டாக்டர் ஒரு ஐந்து ரூபா நோட்டை எடுத்துக் கொண்டு, மற்றதைத் திருப்பிக் கொடுத்து விட்டு]

டா: வேறே ஆசாமியைப் பாரு. இல்லையானா தர்ம ஆஸ்பத்ரிக்குப் போ.

ரா: ஐயா! இந்த ஆபத்தான நிலைமையிலே, கைவிட்டு விடுவது தர்மமா, நியாயமா? கொஞ்ச ஈவு இரக்கம் காட்டக் கூடாதா? இந்தப் பையனைக் கொஞ்சம் கண்ணாலே பாருங்க. உயிர் துடிக்குதே! மரணாவஸ்தையிலே இருக்கிறானே! பணமா பெரிசு! டாக்டர்! ஒரு பிராணனைக் காப்பாத்துங்க—கொஞ்சம் இரக்கம் காட்டுங்க.

டா: சுத்தப் பைத்யக்காரத் தனம்! இரக்கம், இரக்கம்னு சொல்லிக்கொண்டா, எனக்குப் படிப்பு சொல்லித் தந்தார்கள்? பணம் கொடுக்க, வக்கு இல்லாதவன், டாக்டர் வீடு வருவானேன்? வேலை இல்லாமலா இருக்கிறோம், கண்ட இடத்துக்கு வந்துபோக! இடியட்!

[கோபமாகப் போய்விடுகிறார். டாக்டர் போன பிறகு]

ராஜா: அப்பா! இந்தப் பாவிகள் எவருக்கும் இரக்கம் என்பது கடுகளவுகூட இல்லை. ஏழைகளின் துயரத்தைப் பற்றி கவலைப்படுகிற ஆளையே காணோம்.

வே: எந்தப் புண்யவானும் கிடைக்கலையே.

மருதை: (படுக்கையில் புரண்டபடி) புண்யவான்களுக்கு என்னப்பா குறைவு? வண்டி வண்டியாக இருக்கிறார்கள். கோயிலைக் கட்டுவாங்க, குளத்தை வெட்டுவாங்க, தேரு திருவிழா செய்வாங்க, ஏழைக்குக் குலைநோவு வந்தா, அவுங்களுக்கு என்ன, குடும்பமே நாசமானாத்தான் என்ன!

ரா: தம்பி! நீ பேசிகிட்டு இராதேப்பா. வலி அதிகமாப் போகும்.

மரு: இருக்கப்போறது கொஞ்ச நேரம், பேசிகிட்டாவது சாகிறேன்.

வீ: ஐயோ, மகனே! அப்படி எல்லாம் பேசாதேடா கண்ணு!

ரா: அப்பா! என்னுலே தாங்கமுடியாது. இந்த க்ஷணம் போய், நீங்க வேலே செய்ற இடத்திலே எப்படியாவது கொஞ்சம் பணம் கடன் வாங்கிகிட்டு வாங்க......

வே: அந்தப் பாவி கிட்டவா போகச் சொல்றே. அவன் ஈவு இரக்கமில்லாதவனுச்சே, எரிஞ்சி விழுவானே.

வீ: போய், கைகாலேப் பிடிச்சிக்கங்க. இந்த ஆபத்தான வேளேயிலே கூடவா, அவரு, கர்மியா இருப்பாரு போய்வாங்க. எழுந்திருங்க. நான் நல்ல சகுணம் வருதான்னு பார்க்கிறேன்.

[வேலன் போகிருன்.]

## காட்சி 6

இடம்: மிராசுதார் மாணிக்கம் மாளிகை.

இருப்போர்: மிராசுதார், கணக்கெழுதும் கந்தையா, கடன் பட்டவர்.]

[மிராசுதார் கோபமாக உலவுகிருர். கடன்தர வேண்டியவர் கைகட்டிக்கொண்டு நிற்கிருர். கணக்கெழுதுபவர் தலேயைச் சொறிந்து கொண்டு நின்றபடி, கடன் தர வேண்டியவரைக் குறும்பாகப் பார்க்கிருர்.]

மிரா: தலே தலேன்னு அடிச்சிகிட்டு, எங்காவது தேசாந்திரம் போகலாம்போலே இருக்கு. மூணு வருஷமாகுது; வாங்கின கடனேப் பைசல் செய்யலே. கேட்டு அனுப்பினு லாபாயின்ட் பேசறே லாபாயின்ட்.

கட: நான் தவருக ஒண்ணும் சொல்லலிங்களே. கணக்கப் பிள்ளே, மென்னியைப் பிடிச்சாரு. அந்தச் சமயம், என் மருமவன், குடித்துவிட்டு வந்து என் மகளேப் போட்டு அடி அடின்னு அடிச்சிப்போட்டான். நான் வேதனேயோடு இருந் தேனுங்க. அந்தச் சமயத்திலே, கடனேப் பைசல் செய் தாகணும்னு, உயிரை வாங்கனுரு. கோவத்திலே, வாங்கிக்கிற விதமா வாங்கிக்கோன்னு சொன்னேன்.

*மிரா :* (ஆத்திரம் பொங்கியவராய்) எவ்வளவு திமிர் இருந்தா அப்படிப் பேசத்தோணும்? கடன்பட்ட கழுதே, அடக்க ஒடுக்கமாப் பதில் பேசாமே, ராங்கிப் பேசறியா ராங்கி. உன்னே, வீடு வாசலே ஏலத்திலே எடுத்து ஊரைவிட்டுத் துரத்தாவிட்டா, என் பேரை மாத்தி வைச்சிக்கிறேண்டா. ஆமா......

*கட :* மன்னிச்சிடுங்க .....

*மிரா :* உன்னையா? ஊரான் சொத்துக்குப் பேயாப் பறக்கற உன்னையா? மரியாதையா இந்த இடத்தை விட்டுப் போயிடு...... ஆமா......எனக்கு இருக்கற கோவத்துக்கு, நான் உன்னே......

*கண :* (கடன்காரனைப் பார்த்து) போய்வாய்யா! நாளை மறுநாள் வந்து கடனைப் பைசல் செய்துடு. போ! கடனை வாங்கறப்போ, பூமேலே வைத்துக் குடுத்துடறேன், கெடுவு தவருதுன்னு குழையறது—கொஞ்சம் கண்டிஷனு இருந்தா, சட்டம் பேசறது......போ! போ.

[கடன்பட்ட பூஜாரி போகிறான்.]

[வேலன் வருகிறான்.]

*மிரா :* இவர் எங்கே வந்தாரு தொரெ! இந்த நேரத்திலே?

*வே :* (சோகம் கப்பிய குரலில்) எஜமான்! இந்தச் சமயத்திலே நீங்கதான் காப்பாத்தவேணும்.

*மிரா :* (கேலியும் கோபமும் கலந்த குரலில்) கற்பூரம் கொண்டு வந்தாயாடா?

*வே :* (புரியாமல்) எதுக்குங்க?

*மி :* என் எதிரிலே கொளுத்த! ஒருத்தன் மாத்தி ஒருத்தன் நம்மைப் பிராணனை வாங்குகிறவனாகவே வந்து சேருகிறான். காப்பாத்தவேணுமாம் இவரை! ஏண்டா, உலகம் பூராவையும் காப்பாத்த அவன் இருக்கான்.

*வே :* என் சின்ன மகன் சாகக் கிடக்கிறானுங்க. கொலை நோவு. ரொம்ப ஆபத்தா இருக்குது......

*மி :* ஓஹோ! இதைச் சொல்லிவிட்டு, நாளைக்கு வேலைக்கு வராம இருக்க......

*வே :* எஜமான், லீவு கேக்க வரலிங்க......என் மகன் உயிரைக் காப்பாத்தணும். டாக்டர் ஆபரேஷன் செய்தாத்தான் பையன் பிழைப்பானுன்னு சொல்றாரு. (விழுந்து கும்பிட்டு) இந்தச் சமயம் ஒரு நூறு ரூபா கடனா கொடுங்க, என் பிள்ளையை காப்பாத்துங்க......

மி: சரி. சரியான் 'பிளான்' போட்டுகிட்டுத்தான், வந்தூட்டான். ஆபரேஷன் செய்யணுமா! டாக்டர் பீசு 100 ரூபா!! பெரிய சீமானில்லே இவரு. பட்டத்து இளைய ராஜாவுக்கு, இல்லவா, வைத்யம் செய்யப் போறுரு .....

வே: எஜமான், இந்தச் சமயம் என் மனம் நொந்து போயிருக்கிற சமயத்திலே இப்படி எல்லாம் பேசாதிங்க. எப்படியாவது, நீங்கத்தான் காப்பாத்தணும். கொஞ்சம் இரக்கம் காட்டுங்க. நான் நாயா, உழைக்கிறவனுச்சிங்களே, உங்களைத் தவிர உலகத்திலே எனக்கு யாருங்க துணை?—கொஞ்சம் மனசு வையுங்க.

மி: (கோபத்துடன்) ஏண்டா! நீ என்னுண்ணு எண்ணிக்கிட்டே, பணம் என்ன செடியிலா முளைக்குது. வாய் கூசாமே, ஐஞ்சா, பத்தா? நூறு ரூபா கேக்கறே. முட்டாப் பயலே! போடா. போயி ஏதாச்சும் கஷாயம் போட்டுக் கொடு நோய் போயிடும். ஆபரேஷனும்—நூறு ரூபாயாம்......பெரிய சமஸ்தானம்—திருவாங்கூர்......!

வே: தெரிந்த வைத்யமெல்லாம் செய்தாச்சிங்க. குணமாகலேங்க. துடியாத் துடிக்கிறுன்.

மி: ஏண்டா, அந்தப் பய பெரிய அலகிரி! கூச்சல் போடுவான். நோவு இருந்தா கொஞ்சம் பல்லைக் கடிச்சிகிட்டுப் பொறுத்துக்கவேணும். மூணுநாளா எனக்கு முதுகுவலி உயிரை வாட்டுது—அவ வேறே அடி வயித்திலே என்னமோ பண்ணுது என்னமோ வேதனைன்னு அழுதுகிட்டு இருக்கா. நோவு நொடி சகசமாக வரும் போகும். அதைச் சாக்குக் காட்டி இங்கே பணம் கிணம்னு வராதே. செப்பாலடிச்ச காசு கிடையாது—ஆமா—போ, போ.

வே: எஜமான், எஜமான்......

மி: போடா போ! நான் இனிமே உனக்குப் புத்தி சொல்லிகிட்டு இருக்க முடியாது—சிவன் கோயில் போயாகணும்—டேமுனியா! தடியைக் கொண்டா—அம்மா! அன்னம்! சரிகை வேஷ்டியை எடுத்துவாம்மா—போ போ!—இங்கே சனியன் போல என் எதிரே இராதே—அன்னம்! வாம்மா நேரமாவுது—ஏய், கணக்குப்பிள்ளெ. நெத்தியிலே, சந்தனப் பொட்டு சரியா இருக்கா பாரய்யா...(உரத்த குரலில்) டேய்! தடியா! **வண்டியைப் பூட்டியாச்சா?**

[அன்னம், வேஷ்டிகொண்டு வந்து கொடுக்க, அதை வாங்கிப் பார்த்துவிட்டுக் கோபத்துடன், கீழே வீசிவிட்டு]

ஏம்மா! இதான் கிடைச்சுதா உனக்கு? வேறே இல்லே......

## காட்சி 7

இடம்: பாதை

இருப்போர்: வேலன், சுடலே, ராஜாக்கண்ணு

[விசாரத்தோடு வேலன் தள்ளாடி நடந்து வருகிறுன். அவனுக்குப் பின்புறமிருந்து ஒரு முரடன் ஓடி வந்து, கீழே தள்ளி, வேலனேத் கத்தியால் குத்த முயற்சிக்கிறுன். வேலன் கூச்சலிடுகிறுன்.]

வே: சுடலே! சுடலே! உன்னேக் கும்பிடுகிறேன். என்மவன் அங்கே குத்துயிராக இருக்கிறுன், என்னே இப்போ ஒண்ணும் செய்யாதே......

சு: டே, வேலா! போன வெள்ளிக்கிழமை புளியமரத்திலே கட்டி வைச்சி அடித்தவனில்லே நீ. மறுதினமே தயார் பண்ண கத்திடா இது.

வே: (திணறி) எஜமான் சொன்ஞரு உன்னே நான் அடிச் சேண்டா சுடலே—எனக்கும் உனக்குமா விரோதம்?

[சுடலே அடிக்கிறுன்—வேலன் கத்தியைக் கீழே தட்டிவிடுகிறுன்—கூவுகிறுன்—அதே சமயம் ராஜாக்கண்ணு ஓடி வருகிறுன்.]

[சுடலேமீது பாய்ந்து, தாக்குகிறுன். சுடலே பலத்த அடிபட்டுக் கீழே வீழ்கிறுன்.]

வே: ஐயோ, பாவம்! பலமான அடி விழுந்துடுத்தோ.

[சுடலே அருகே சென்று இரத்தத்தைத் துடைக்கிறுன். ராஜா! அவன் மேலே தப்பு இல்லெடா. போன வெள்ளிக்கிழமை, அவனே நான் புளிய மரத்திலே கட்டி வைச்சி, அடிச்சேன்—இன்னக்கி அவனுக்குச் சமயம் கிடைச்சது.

ரா: இவன் என்ன செய்தான்.

வே: பாவம்! என்னை ஒண்ணும் செய்யலே இவன். என் எஜமான் தோட்டத்திலே வேலை செய்கிறவன். தாறுமாறுப் பேசினனும் எஜமானனை. அவர் என்கிட்ட சொல்லி, அடிக்கச் சொன்னர்.

ரா: ஏழையைக் கொண்டே ஏழையை அடிக்கச் சொன்னு ? சரி, பணம் கிடைத்ததா ?

வே: கிடைக்குமா? நான் முன்னமேயே சொன்னேனே. கெஞ்சிக் கூத்தாடினேன்—ஒரு சல்லிக்கூடத் தரமுடியாதுன்னு சொல்லிவிட்டுப் போயிட்டாரு—ஜமுனு வீட்டுக்கு.

[ராஜாக்கண்ணு ஒரு நிமிஷம் யோசித்துவிட்டு]

ரா: அப்பா! நீ வீட்டுக்குப்போ! தம்பிக்குக் கொஞ்சம் சாராயம் கொடுத்தேன். தூங்கருன். எனக்கு ஒரு சினேகிதர் இருக்காரு, அவரையாவது போய்க் கேட்டுப் பார்க்கிறேன்.

வே: சுருக்கா வந்தூடு.

ரா: ஆகட்டும்பா! அடிபட்டதுக்கு ஏதாச்சும் 'பத்து' அரைச்சி போடப்பா.

[வேலன் போகிருன். ராஜா, கீழே கிடந்த கத்தியை எடுத்துக்கொண்டு கிளம்புகிருன்.]

## காட்சி 8

இடம்: ஜமுனு வீடு—கூடம்

இருப்போர்: ஜமுனு, மிராசுதார்

[ஜமினு, மிராசுதாரருக்குப் பானம் தருகிருள். அவர், சரசமாடிக் கொண்டே அதைப் பருகுகிருர். வெளியே குரல் கேட்கிறது. அவள் எழுந்து உள்ளே போய்விடுகிருள்.

[மிராசுதார், உள்ளே வா, என்று உத்தரவிடுகிருர். ராஜா, கூடத்துக்கு வருகிருன், மிராசுதார் குடி வெறியில் உளறுகிருர்.]

மி: யார் நீ? தெரியலையே!

ரா: (பானத்தை எடுத்துப் பருகிவிட்டு) தெரியலே!...... நான்தான் ஜமுனாவுக்குத் தம்பி!

மி: (குடிவெறியால் ராஜாவைத் தழுவிக்கொண்டு) அடெ, நம்ம மச்சானா! மச்சான்—சும்மா சாப்பிடு...சாப்பிடு மச்சான்...... எனக்குத் தெரியவே தெரியாதே...ஜமுனா சொல்லவேயில்லையே. ஜமுனா! ஜமுனா!! ஜமுனா!!—!

[ஜமுனா வருகிறாள்]

ரா: அக்கா! கொஞ்சம் அத்தானிடம் இரகசியம் பேசணும், உள்ளே போய் இரு.

ஜ: யார் இவரு? அக்காவுக்கு ஒரு தம்பி வந்து முளைச்சாரு?

ரா: (மிரட்டுகிற பாவனையில்) ஜம்னாக்கா! உள்ளே போ!

ஜ: (கோபத்துடன்) அடயாரடா இவன், அறிவு கெட்டவன் —என் வீட்டிலே வந்து. என்னை உள்ளே போகச் சொல்ல.

மி: என்ன ஜமுனா இது? அக்காவுக்கும் தம்பிக்கும் சண்டையா?

ஜ: கர்மந்தான்! குடித்துவிட்டு வெறியிலே உளறுதிங்க.

ரா: உள்ளே போகிறயா, இல்லையா?
ஜ: அடடே! இவரு பெரிய சூரப்புலி!

ரா: (கோப்பையை வீசி எறிந்து) போடி உள்ளே! போடின்னா போ - (கத்தியைக் காட்டுகிறான்—ஜமுனா உள்ளே ஓடிவிடுகிறாள் பயந்து—திகைக்கும் மிராசுதாரன் வாயைக் கட்டி விட்டு, பணத்தை எடுத்துக்கொண்டு, ராஜா ஓடிவிடுகிறான்.)

## காட்சி 9

இடம்: வேலன் வீடு.

இருப்போர்: வேலன், வீராயி, மருதை.

[ராஜாக்கண்ணு, வீட்டுக்குள் நுழைகிறான். அழு குரல் கேட்கிறது. ஐயோ! என்று அலறிக் கொண்டு ஓடுகிறான். தம்பி மருதை இறந்து

கிடக்கிறான். வேலனும் வீராயியும் புரண்டு அழுகிறார்கள். ராஜாக்கண்ணு, தம்பிமேல் புரண்டு கதறுகிறான்.

ரா: தம்பி! கடைசியில் நீ செத்துவிட்டாய்! ஆமாம்! தடி தடியாக நாங்கள் இருந்து என்ன பிரயோசனப்பட்டது—பழிகார உலகமே! ஏழையைப்பார்! குடிக்கவும் கூத்தி வீட்டுக்குப் போக வும், ஏழையின் வயிறு எரியப் பணத்தைப் பிடுங்கும் பணக்கார சமூகமே! உன் மனம், கல்லா, இரும்பா? இரக்கம்இல்லாதநெஞ்சு! ஈரமில்லாத நெஞ்சு! உன் வஞ்சகம் எப்போது ஒழியும். (தம்பி மேல் விழுந்து) எப்போதடா தம்பி! இந்த உலகத்திலே ஏழையின் குலை நோய், எப்போதடா தீரும். நமக்கு விடுதலை, விமோசனம், வாழ வழி, எப்போதடா தம்பி கிடைக்கும்? உன்னைப்போல, பிண மான பிறகுதானா? ஏழைகளுக்கு இந்த உலகத்திலே இடம் இல்லையா? காலமெல்லாம் என் தகப்பனாரை வேலை வாங்கிய காத கன் கடுகளவுகூட இரக்கம் காட்டவில்லையே! பாழும் பணத்தை (நோட்டுக்களைக் கசக்கிக் கீழே வீசியபடி) ஊரை மோசம் செய்து, பலகுடும்பங்களை நாசம் செய்து, சேர்த்த பணத்தை, ஜமுனாவுக் குத் தர மனம் இருந்தது, என் தம்பியின் உயிரைக் காப்பாற்ற மனம் இல்லையே! பணமே! பணமே! பாபிகள் கையில் கொஞ்சி விளையாடும் பணமே! இதோ என் தம்பியின் பிணம்! நீ இங்கே முன்பு இருந்திருந்தால், என் தம்பி பிழைத்திருப்பான். தூ! இனி என் கால்தூசுக்குச் சமானம் நீ (நோட்டுக்களைக் காலால் துவைக் கிறான்.)

[இரண்டு போலீசார் உள்ளே வருகிறார்கள்.]

போ: யார்டா இங்கே, ராஜாக்கண்ணு!

ரா: நான்தான்......

போ: இதென்ன இங்கே?

ரா: என் தம்பி.

போ: செத்து போயிட்டானா? பாவம்: கர்மம்! சரி, நீதானே ஜம்னா வீட்டிலே புகுந்து கலாட்டா செய்து மிராசுதார் பொருளைத் திருடிக்கிட்டு ஓடிவந்தது.

ரா: ஆமாம்.

போ: எவ்வளவு நெஞ்சழுத்தம்! பயல், பட்டணமோ, பிடித்துத் தள்ளிகிட்டுவா......

வீ: (அவர்கள் காலைத் தொட்டு) ஐயா! தருமப் பிரபுக்களே! இங்கே பிணம் கீழே கிடக்குதே—அவன்

தம்பிங்க...தகனம் செய்தூட்ட பிறகு, இழுத்துக்கிட்டுப்போங்க... உங்கக் காலேக் கும்பிடறேன்...ஐயா! நீங்க பிள்ளே குட்டியைப் பெத்தவங்கதானே.

வே: ஐயாவுங்களே நானும் கும்படறேன்.

போ: அதெல்லாம் ஸ்டேஷன் போனபிறகு, ஐயாகிட்டச் சொல்லணும். டே! ராஜாக்கண்ணு! புறப்படு.

வீ: ஐயா! கொஞ்சம் ஈவு இரக்கம் காட்டுங்களய்யா! தம்பி பிணத்தைப் போட்டுட்டு எப்படிய்யா, அண்ணன்காரன் வருவான்.

ரா: அம்மா, அழாதே! இரக்கம் இரக்கம் என்று ஏனம்மா இல்லாத ஒன்றைக் கேட்கிருய். டாக்டரைக் கேட்டாயே இருந்ததா? எஜமானரை அப்பா கேட்டாரே, இருந்ததா? பைத்தியம் உனக்கு.

[போலீசுடன் போகிருன்.]

## காட்சி 10

இடம்: பாதை.

இருப்போர்: போலீசார், ராஜாக்கண்ணு.

[ராஜாக்கண்ணு, கையில் விலங்கிடப்பட்டு அழைத்துச் செல்லப்படுகிருன்.]

போ 34: என்னமோ போண்ணேன்! எனக்கென்னமோ வர வர இந்த வேலேயே பிடிக்கலே. அதிலேயும் இந்தமாதிரி சமயத்திலே ரொம்பக் கண்ருவியா இருக்கு.

போ 48: அதைப் பாத்தா முடியுமா 34? டியூடின்னு டியூட்டி தானே! கண்ணேக் கசக்கிளுகூட நாம்ப என்ன செய்யறது—இவன் வீட்லே தம்பி செத்துப் போயிட்டானே, தகனம் செய்ற வரை, சும்மா இருக்கட்டும்னு சொல்லத்தான் வேணும்னு தோணுது. நமக்கு மட்டும் இரக்கம் இல்லாமலா போகும்? ஆனு, விட்டா, பய, ஓடிடுவானே, பிறகு நாம்ப சஸ்பெண்டு தானே, ஏம்பா! நம்ம பெண்டு பிள்ளேக் கதி என்ன ஆகும்?

34: நீ சொல்லறதும் நியாயமாத்தான் இருக்கு. இவங்கிட்டவும் இரக்கமாகத்தான் வருது.

[ஒரு ஆசாமி ஓடோடி வந்து, 48-ம் நம்பர் கான்ஸ்டபிளைப் பார்த்து ]

வந்: மாமா! அக்காவை, பாம்பு கடிச்சிடிச்சி, ஓடிவா...

48: ஐயோ! என்ன! பாம்பா! அடிபொன்னி! ஐயயோ! 34, என் சம்சாரத்தைப் பாம்பு கடிச்சிடிச்சாமே.

போ 34: பதருதே 48, வீட்டுக்கு ஓடிப்போயி, ஏதாச்சும் மந்தரம் மருந்துபாரு. அட தெய்வமே! எவ்வளவு நல்ல மனுஷரு, இவருக்கு இப்படி ஆபத்து வந்ததே.

போ 48: 34! எனக்கு ஒரு இடமும் தெரியாதே.

34: அழாதே 48! அழாதே. பாம்புன்னு, வெறும் தண்ணிப் பாம்பாகூட இருக்கும், பயப்படாதே!

48: எந்தப் பாம்போ—என்ன ஆகுதோ—அவ ரொம்பப் பயங்காளிப்பா—பாம்புன்னுலே உயிர் போயிடுமே—எங்கே யாவது மந்திரக்காரன்......

34: இருக்கு, ஒருவில்லிகிட்ட............

48: அந்த வில்லி...........

34: ஏம்பா! அந்த இருளன், ஊர்க்கோடியிலே இல்லவா இருக்கருன்.

48: (பதறி) உலகத்துக் கோடியா இருந்தாக்கூட போகத் தானே வேண்டும். இரக்கம் துளிகூட இல்லையா உனக்கு. வாப்பா!

34: இந்தப் பயலே......

48: இவனு? கிடக்கட்டும், பிறகு பார்த்துக்கொள்வோம்பா.

34: ஓடிப் போயிட்டா?

48: அங்கே உசிரு போயிட்டா என்னப்பா செய்யறது! ஐயோ! பொன்னி!

34: (ராஜா, கைவிலங்கைக் கழற்றிவிட்டு) டேட! நீயும் ஓடிப் போயி, உன் தம்பி தகன காரியத்தைக் கவனிச்சிட்டு, ரெடியா இரு, வீட்லே.

ரா: ஆகட்டுங்க.

34: என்ன? ஐயோ, பாவமனு இரக்கத்தாலே உன்னே வீட்டுக்கு அனுப்பறேன்—ஏமாத்தின......?

48: வாப்பா, ஏமாத்தமாட்டான். நான் எம்மாந் துடியாத் துடிக்கறேன்—ஈவு இரக்கமில்லாமே இப்பத்தான் அந்தப் பயகிட்ட பேசிகிட்டு இருக்கறே.

34: பாவம்! அவனும் போய், தம்பி காரியத்தைக் கவனிக் கட்டும்—வா! வா! பாம்பு கடிச்சா ஒரு பச்சிலே கொடுப்பான். அந்த வில்லி. போயிடும்......

48: என்னப்பா?

34: விஷம் போயிடும்பா.

[போகின்றனர்]

[ராஜாக்கண்ணு தனிமையில்]

ராஜா: மனிதர் கைவிட்டனர்—பாம்பு காப்பாற்றுகிறது என்னே!

இரக்கம் காட்டமுடியாது! டாக்டர்—மிராசுதாரன்—சுடலே—34—48—சகலரும் கூறினர்! உலகமே கூறுகிறது—ஒருவர் இருவர் இரக்கம் காட்டவேண்டும் என்று பேசுவர், முடிவதில்லே காட்ட.

பாம்பு கடித்தது என்ற உடனே, பாவம் போய் உன் தம்பியைத் தகனம் செய்துவிட்டுவா! என்று இரக்கம் பேசினர்கள்!

இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்து விடுவார்கள்.

அதற்குள் ஓடிவிட வேண்டும் —ஆமாம்! திருட்டு ரயில்தான் பிறகு? கப்பல்! கண்காணச் சீமை!.........என்னேப்போல் எத்தனேயோ பேர்! இரக்கத்தைத் தேடி அலேந்து,......உரு மாறினவர்கள்.

# வேலைக்காரி

| | | |
|---|---|---|
| வேதாசல முதலியார் | — | வட்டியூர் ஜமீன்தார் |
| சரசா | — | வேதாசல முதலியாரின் மகள் |
| மூர்த்தி | — | வேதாசல முதலியாரின் மகன் |
| அமிர்தம் | — | வேலைக்காரி |
| சொக்கன் | — | வேலைக்காரன் |
| முருகேசன் | — | அமிர்தத்தின் தந்தை |
| சுந்தரம் பிள்ளை | — | அவ்வூரில் வாழ்பவர் |
| ஆனந்தன் | — | சுந்தரம் பிள்ளையின் மகன் |
| மணி | — | ஆனந்தனின் நண்பன் |

## காட்சி 1

இடம் : வேதாசல முதலியார் வீடு.

இருப்போர் : வேதாசல முதலியார், சொக்கன்.

வேதாசல முதலியார் : காளி, மகமாயி, லோக மாதா, டேய் சொக்கா கொண்டு வாடா தாயுமானவரை. இது என்னடா பார்சல்?

சொக்கன் : இதுங்களா, நம்ம சரசாம்மா மாதர் சங்கத்திலே டான்ஸ் ஆடப்போகிருங்களில்ல......

வே : கதையை வளர்க்காதேடா விஷயத்தை சொல்லு.

சொ : அதுதானுங்க அந்த டான்ஸுக்கு வேண்டிய உடைகள் எல்லாம் தச்சு வந்திருக்குதுங்க.

வே : இவ்வளவுமா?

சொ : இன்னும் ஒரு பார்சல் வரவேண்டியதிருக்குங்க.

வே : இவ்வளவுக்கும் பணம்.

சொ : அதெல்லாம் நேத்திக்கே கொடுத்தாச்சுங்க.

வே : அடபாவி......அமிர்தம், சரசா இருக்கிருளா, அவளைக் கூப்பிடு, காபி சாப்பிட்டாச்சுதா அவள்.

அமிர்தம் : அவரையும் கூப்பிடட்டுங்களா?

வே : சீ, அதிகப் பிரசங்கி ஒன்று சொன்னு ஒன்பது கேள்வியா? போ போய் சரசாவைக் கூப்பிட்டு வா.

## காட்சி 2

**இடம் :** வேதாசல முதலியார் வீடு.

**இருப்போர் :** சரசா, அமிர்தம், மூர்த்தி.

[அமிர்தம் போகிறபோது, சரசா எதிரே வருகிருள்.]

சரசா : என்னடி ஓட்டமும் ஒய்யாரமும்.

அமிர்தம் : ஒன்றுமில்லேம்மா எஜமான்......

சரசா : இப்படி புள்ளிமான் போல் துள்ளிக்கிட்டு வரச் சொன்ஞரா ?......

அமிர்தம் : இல்லே. உங்களே கூப்பிட்டு வரச் சொன்ஞரு.

சரசா : இதுக்குத்தாஞ இவ்வளவு கும்மலாட்டம். அமிர்தம் நானுந்தான் பார்த்துக்கிட்டே வர்ரேன். ஒரு வேலேக்காரிக்கு வேண்டிய அடக்கம், ஒடுக்கம், மட்டு மரியாதை ஒன்றுமே உன்கிட்டே கிடையாது.

[சரசா சகோதரன் மூர்த்தி வருகிருன்.]

மூர்த்தி : சரசா, எப்போ பார்த்தாலும் எரிஞ்சி எரிஞ்சி விழுகிறேயே. கொஞ்சம் சாந்தமாகத்தான் பேசேன்.

சரசா : ஆமா, நான் எரிஞ்சி விழுறேன். அதை அணேக்கிற துக்கு இவர் வந்துட்டார் பயர் இன்சின் Fire Engine) மூர்த்தி சம்பந்தம் இல்லாத விஷயத்தில் நீ தலேயிடாதே.

[சரசா போகிருள்.]

மூர்த்தி : அமிர்தம் இதையெல்லாம் மனசிலே போட்டுக் கொள்ளாதே. போய் வேலேயைக் கவனி. உம்......

## காட்சி 3

**இடம் :** வேதாசல முதலியார் வீடு.

**இருப்போர் :** சரசா, வேதாசல முதலியார், சொக்கன்.

சரசா : அப்பா கூப்பிட்டிங்களாமே!

வே : ஆமாம் அம்மா, நீ, தர்மத்துக்கும் பண்டுக்கும் ஆடறது சரி. நம்ப பணம் பாழாகாமல் பார்த்துக்கோ. நீ, ஏதோ மாதர் சங்கத்திலே என்னமோ டான்ஸாமே.

*சரசா:* ஆமாப்பா.

வே: இந்த டிரஸ்க்கெல்லாம் வேண்டிய பணம்?

*சரசா:* சங்கத்திலே வாங்கிப் போடுறேனப்பா!

வே: ஆமம்மா, சொக்கா, எவ்வளவு பில் ஆவுது பணம்.

சொ: அது இருக்குங்க, 300 ரூபாய்க்கு மேலே.

வே: அதென்னடா மேலேயும், கீழேயும், கரைக்டா சொல்லுடா கழுதை!

சொ: 300 ரூபாயும், 3¾ அணுவும் ஆகுதுங்க.

வே: அதை வாங்கி கொடுத்து விடம்மா சங்கத்திலே.

*சரசா:* ஆகட்டுமப்பா.

வே: சரசா, காப்பிச் செலவு, வண்டிச் சிலவு அது இது யென்றுகூட ஆகியிருக்கும் எல்லாம் சேர்த்து, 400 ரூபாயாக வாங்கி கொடுத்து விடு.

*சரசா:* சரியப்பா. அப்படியே வாங்கிப்பெடரம்பா!

சொ: அம்மா இன்றைக்கு கிடைக்கிறது சந்தேகம் என்று அந்த தையற்காரன் இழுத்தாற்போல சொன்னுன். அதனுலே அவனுக்கு ஒரு பத்து ரூபாயைக் கொடுத்து தனியாக கவனிச்சேன். அதையும்......

*சர:* பதினைந்தாக வாங்கிக்கொள் சொக்கா.

*[சரசா போகிருள்.]*

வே: சொக்கா, வந்துதாடா புத்தி?

சொ: என்னங்க?

வே: வந்ததாடா புத்தி என்று கேட்டேன். இவ்வளவு கஷ்டப்பட்டு பணம் சேர்க்கிறேனே, அதைப் பற்றி உனக்கு கொஞ்சமாவது அக்கரை இருக்குதாடா.

சொ: பண விஷயமுன்னு நான் லேசிலே விடறதில்லீங்க.

வே: பேச்சுக்கு குறைச்சலில்லடா உன் கிட்டே, பணம் கொடுத்து பத்து மாசம் ஆகுதே. அந்த சுந்தரம் பிள்ளை தர வேண்டிய பாக்கி என்னுச்சு?

சொ: பணம் வர வழியைக் காணுமுங்க, அதனுலே அரஸ்ட்டுக்கு ஏற்பாடு பண்ணிவிட்டேனுங்க.

வே: அதைப் பற்றி அவனுக்கென்னடா! அங்கே போய் சொஸ்தமாக உட்கார்ந்து தின்பான். சாப்பாட்டுக்கு படி நானில்லடா கட்டணுங்க.

சொ: அப்படி யில்லீங்க, அவன் ரொம்பவும் மானஸ்தன் அரஸ்டு என்று சொன்ன......

வே: சரி போதும்டா. அதற்கு வேண்டிய ஏற்பாடு யெல்லாம் செய். ஓட்டத்தில் ஓடு. முதல்ல அதைக் கவனி......

வே: (தனக்குள்) திருட்டுப் பசங்க. நம்ம பணத்தையும் வாங்கிட்டு பிராணனையும் வாங்குகிருனுங்க. டேய் சொக்கா இருடா நானும் வாரேன். இந்த பயலே பிடித்து ஜெயிலிலே தள்ளினுத்தான் மற்ற கடன்காரப் பயல்களுக்குப் புத்தி வரும்.

## காட்சி 4

இடம்: சுந்தரம் பிள்ளையின் வீடு.

இருப்போர்: சுந்தரம் பிள்ளை, வேதாசல முதலியார், சொக்கன்.

சுந்தரம் பிள்ளை: வேண்டாமுங்க. ஜெயிலிலே மட்டும் தள்ளாதீங்க. எவ்வளவோ வேதனையை அனுபவிச்சியிருக்கிறேன். இழிவான பெயர் மட்டும் ஏற்பட்டதில்லீங்க. ஜெயிலுக்குப்போன ஆயுள் பூராவும் பழிப்பாங்க, ஐயா ஏழை மீது கொஞ்சம் இரக்கம் காட்டுங்க.

வே: டேய்! சொக்கா, இழுத்துப் பூட்டுடா கதவை. இந்த நாயை தெரு வழியாக இழுத்துக்கொண்டு போகச் சொல்லு ஜெயிலுக்கு.

சுந்: ஐயா வேண்டாமுங்க. இதை என்னலே தாங்க முடியாதுங்க, நினைத்தாலே மனம் பதறுதுங்க.

வே: பதறுதடா உன் மனசு. உன்னைப்போல திருட்டுப் பசங்க என் பணத்தை எடுத்து மோசம் செய்யும் போதுமட்டும் என் மனசு குளிருதோ, போடா போக்கத்தவனே, வாங்கின கடனைக் கொடுக்க வழியில்லையின, குளத்திலே குட்டையிலே விழுந்து சாகிறது தானே.

சுந் : ஐயா கொஞ்சம் பொறுங்க. உங்க கடனை இன்னும் கொஞ்ச நேரத்தில் பைசல் செய்து விடுகிறேன்.

[சுந்தரம் பிள்ளை உள்ளே போய் மரக் கிளையில் பிணமாகத் தொங்குகிறார்.]

## காட்சி 5

இடம் : காளி கோயிலின் பாதை.

இருப்போர் : சுந்தரம் பிள்ளையின் மகன் ஆனந்தன், ஆனந்தனின் நண்பன் மணி.

[சுந்தரம் பிள்ளை மகன் ஆனந்தன் அயலூரி லிருந்து வருகிறான்; வழியில் பழைய நண்பன் மணியைச் சந்திக்கிறான்.]

மணி : இடியட்! யாரப்பா நீ? கண்ணு தெரியலே? அடே நீ சுந்தரம் பிள்ளை மகன் ஆனந்தனில்லே.

ஆனந் : ஆமா......

மணி : நான்தாம்பா மணி.

ஆனந் : அடடா, மணி சௌக்கியமா?

மணி : சௌக்கியமாய் இருக்கிறேன்.

ஆனந் : மணி என்னை யாருமே அடையாளம் கண்டு கொள்ள முடியாதென்றில்லே நினைச்சேன்.

மணி : ஆமப்பா நான்கூட முதல்லே உன்னைப் பார்த்ததும் எவனோ ஒருத்தன் சாமிக்கு பிரார்த்தனை பண்ணப் போகிறவன் போல் இருக்கு என்று நினைத்தேன், பார்த்தால் நீ.

ஆனந் : ஆமாம். மணி ஒரு வகையில் பிரார்த்தனை செலுத்துபவன் போலத்தான் வந்திருக்கிறேன். எங்காப்பாவைப் பார்த்து...மணி எங்கப்பா சௌக்கியமா இருக்கிறாரா?

மணி : சௌக்கியமா இருக்கிறார். வா போகலாம். ஆமாம் எவ்வளவு பணம் கொண்டு வந்திருக்கிறே.

ஆனந் : மணி, 200 ரூபாய் கொண்டு வந்திருக்கிறேன்.

மணி: அடப்பாவி! அயலூருக்குப் போய் 200 ரூபாய்தான் கொண்டு வந்தாயா?

ஆனந்: உனக்கு கேலியாக இருக்கு மணி. தேயிலைத் தோட்டத்திலே இரவும், பகலும் கஷ்டப்பட்டு ஒருவேளைச் சாப்பிட்டு மீத்தின பணமப்பா இது. இதைக் கொண்டு அப்பாவுக்கு ஒரு கடை கண்ணி வைத்துக் கொடுக்கவேண்டு மென்று ஆசையோடு வந்தேன். மணி உனக்குத் தெரியுமே அப்பாவுக்கு தள்ளாத வயசு, அவர் எனக்காக எவ்வளவு கஷ்டப் பட்டவர்.

மணி: எப்படியாவது வந்து சேர்ந்தாயே அதுவே போதும். உங்கப்பாவுக்கு உன்னைப் பார்த்தாலே போதும்; இந்த 200 ரூபாயும் இரண்டு லட்சம் என்று எண்ணி சந்தோஷப்படுவார்.

ஆனந்: தடையென்ன மணி? தெருக்கோடியிலே எங்கப்பா என்னை பார்த்ததும், வாடா ஆனந்தா என்பார். அழைப்பதைக் கேட்டதும் நான் இந்த பத்து வருஷ காலம் கஷடப்பட்ட தெல்லாம் பஞ்சாப் பறந்து விடும் மணி. சரி போகலாமா?

மணி: போகலாம்.

ஆனந்: (வரும் வழியில்) உனக்கென்னப்பா வேலை.

மணி: எங்கேயாவது வேலை கிடைக்கிறதா, இல்லையா என்று சுற்றிப் பார்ப்பதுதான் என் வேலை?

ஆனந்: எங்கேயோ படிக்கணுமென்று சொன்னியே.

மணி: ஓ படித்தாச்சே, படித்து டிகிரியும் வாங்கியாச்சே.

ஆனந்: எந்த காலேஜில்?

மணி: நான் படித்தது, இந்த பரந்த உலகத்திலே வாங்கின டிகிரி போலீஸில் கேடி.

ஆனந்: ரெம்ப நல்லவனுச்சே நீ.

மணி: நல்லவந்தான். யார் இல்லையென்று சொன்னுங்க. நல்லவனுக்குத்தான் இந்த பொல்லாத உலகில் நாணயமாக பிழைக்க வழியில்லையே வா.

[வழியில் காளிகோவிலைக் கண்டு வணங்குகிறுன்.]

ஆனந்: காளி மகமாயி, மகேஸ்வரி இத்தனை வருஷத்துக் குப் பிறகு அப்பாவை பார்க்க முடிஞ்சுதே அது உன் கிருபை.

பக்கத்தில் இருந்த ஒருவர்: மகா சக்தி வாய்ந்தவளப்பா, இந்த மகாளி. இந்த மகாளியை மனதிலே பக்தியோடு பூஜை செய்து நம்பிக்கையாக கும்பிட்டு வந்தால் இந்த உலகத்தில் நடக்காதது ஒன்றுமில்லே.

மற்றவர்: அவள் கண்கண்ட தெய்வமாச்சேயப்பா. எந்த காரியமா இருந்தாலும் சரி கைமேல் பலன் கிடைக்கும்.

மணி: ஆனந்தனைப் பார்த்து இந்தப்பா அப்பாவை பார்க்க வேண்டுமென்று பறந்தாய். இந்த பைத்தியக்காரன் பேச்சைக் கேட்டு அப்படியே நின்று விட்டாயே! வாப்பா போகலாம்.

[இருவரும் போகிறார்கள்.]

## காட்சி 6

இடம்: சுந்தரம் பிள்ளையின் வீடு.

இருப்போர்: சொக்கன், அமீனா, வேதாசலம்.

சொ: எங்கே உள்ளே போன ஆளைக் காணோம். என்ன செய்து கொண்டிருக்கிறான்.

அமீனா: ஓய் சுந்தரம் பிள்ளை......சுந்தரம் பிள்ளை.

சொ: எங்கே காணோம் போய்த்தான் பார்ப்போம். ஹா எஜமான்......

[தூக்கு போட்டு கிடப்பதைப் பார்க்கிறார் வேதாசலம்.]

வேதா: அடப் பாவி........

[எல்லோரும் போய் விடுகிறார்கள்.]

## காட்சி 7

**இடம் : சுந்தரம் பிள்ளையின் வீடு.**

**இருப்போர் : மணி, ஆனந்தன்.**

[மணியும் ஆனந்தனும் வருகிறுர்கள். தந்தை மரக் கிளையில் பிணமாகத் தொங்குவதைக் காண் கிருன் ஆனந்தன்.]

ஆனந் : அப்பா, அய்யோ அப்பா, அப்பா அய்யோ மணி என் கதியைப் பார்த்தாயா? வாயைத் திறந்து ஒரு வார்த்தை பேச மாட்டியா? அப்பா ஒரு தரம் ஆனந்தா வாடா, மகனே வாடா என்று அழைக்கமாட்டியா? அப்பா நீ ஏன் தூக்குப் போட்டு சாகவேண்டும்? நான் எதுக்கும் உதவாதவன், அவன் முகத்திலே முழிக்கக் கூடாதென்று நினைத்தாயா? அப்பா நாலு வீடு பிச்சை எடுத்தாகிலும் உன்னைக் காப்பாற்ற மாட்டேனு, கடவுளே சண்டாளத் தெய்வமே உனக்கு கண்ணில்லையா? எனக்கிருந்த ஒரே ஆஸ்தி, ஒரே துணை, ஆதாரம் அவரை இக்கதிக்கு ஆளாக்கி விட்டாயே?

[சுந்தரம் பிள்ளை மடியிலிருந்த லெட்டரை எடுத்து படித்துப் பார்த்துவிட்டு ஆனந்தனிடம் கொடுக் கிருன் மணி. அதை வாங்கி பார்க்கிருன் ஆனந்தன்.]

ஆனந் : யாரையா இங்கு வேதாசல முதலியார்?

மணி : அவர்தான் இப்பொழுது இந்த ஊருக்கே முதலாளி.

பக்கத்திலிருந்தவர் : அவரு ரொம்ப நல்லவராச்சுங்களே.

ஆனந் : அவரு நல்லவன்? என் குடும்பத்தைக் கெடுத்தவன். என் தந்தையை சாகடித்தவன். அவரு நல்லவர்? அய்யா, இவர் ஏன் பிணமானுர் தெரியுமா? வேதாசலத்தினுடைய பணத்தாசையினுல்தான். கடன் கொடுத்தாராம், கஷ்டப்படுத்தினு ராம், வீடு வாசல்களை ஏலத்தில் எடுத்தாராம். பத்தாக் குறைக்கு வாங்கின கடனுக்காக ஏசினுராம். மானத்துக்குப் பயந்து மரக் கிளையில் பிணமானுர், அடப்பாவி ஒரு வயோதிகன் பிணம் வழியில் கிடந்தாலும் சரி, உன் பெட்டியில் பணம் குவிந்தால் போதுமென்று தானே இருந்தாய். அடா! பாதகா! இந்தப் பாவம் உன்னை சும்மா விடுமா? நீ நல்லா யிருப்பாயா? உன் குடும்பம் நல்லா யிருக்குமா? உன் பிள்ளை குட்டிகள் நல்லா இருப்பார்களா?

## காட்சி 8

**இடம் :** மாதர் சங்கம்.

**இருப்போர் :** சரசா, மற்றும் பெண்கள்.

[மாதர் சங்கம். சரசா தேவி டான்ஸ் நடக்கிறது. முடிந்ததும் மேடையில் ஒரு பெண் பேசுகிருள்.]

ஒரு பெண் : தோழியர்களே! தோழர்களே! எங்கள் மாதர் சங்கத்திற்கு தேவையாய் இருந்த நிதிக்காக ஸ்ரீமதி சரசா தேவி நடத்திய நாடக மூலமாக கிடைத்த ரூபாய் 4400-யும் அவர்கள் எங்களுக்கு தந்தார்கள். இந்த பேருதவிக்காக சரசா அம்மையாரை வாழ்த்துகிறது இச்சங்கம். (கரகோஷம்)

சரசா : தாய்மார்களே, சகோதரிகளே பெண்களின் விடுதலைக்காக நான் எப்பொழுதும் பாடுபடுவேன். நாம் எல்லோரும் சமம். எல்லோரும் ஒன்று, என்ற முறைப்படி தாழ்ந்த நிலையில் உள்ளவர்களை தகுந்த நிலையில் உயர்த்துவதற்கு நான் எப்பொழுதும் தொண்டு செய்வேன்; வந்தனம். (போகிருள்)

## காட்சி 9

**இடம் :** வேதாசலம் வீடு.

**இருப்போர் :** சரசா, அமிர்தம், மூர்த்தி.

[வீட்டில் அமிர்தம் சரசாவின் சேலையை உடுத்தி அழகு பார்த்துக் கொண்டிருக்கிருள். சரசா வருகிருள்.]

சரசா : வேண்டியதானடி. இதுக்குத்தான் சேலையை மடித்து வைக்க இவ்வளவு நேரமா? அம்மாளுக்கு பேஷனில்லே கேட்குது. ஏண்டி உன் உடம்பில் இருக்கிற அழுக்கு பட்டால் என்னத்துக்கடி ஆகும்—சேலை.

[மூர்த்தி வருகிருன்.]

மூர்த்தி : சரசா, எப்போது பார்த்தாலும் அமிர்த்தத்தை மிரட்டுவதே உனக்கு வேலையாய்ப் போய்விட்டது.

சரசா : இந்த வீட்டில் ஒரு வேலைக்காரியை மிரட்டுவதற்கு கூட அதிகாரம் இல்லையா?

மூர்த்தி: அம்மா பராசக்தி! நீ மிரட்டு, அதிகாரம் பண்ணு, வாய் வலிக்கத் திட்டு. நீ எஜமானியம்மா. பாவம் அவள் வேலைக்காரி தானே. அதிகாரம் பண்ணலின்னு உன் அந்தஸ்து குறைந்து விடுமே. ஊம் ஆரம்பி கூச்சலை.

சரசா: மூர்த்தி நீ ஒரு வேலைக்காரிக்குப் பரிந்து பேசுவதைக் கேட்டால் ஊர் சிரிப்பா சிரிக்கும்.

மூர்த்தி: சரசா போதும், நிறுத்து.

அமிர்: அய்யய்யோ என்னாலே உங்க இரண்டு பேருக் குள்ளே சண்டையா?

சரசா: இந்தாடி அமிர்தம், இதைக் கண்ணாடி போல் பாலிஷ் செய்யணும். (செருப்பைத் தூக்கி எறிகிறாள்.)

மூர்த்தி: எப்படிப்பட்டவன் வந்து சரசாவை அடக்கப் போகிறானோ தெரியலை. திமிர், பணத் திமிர்.

## காட்சி 10

இடம்: ஆனந்தன் வீடு, காளி கோயில்.

இருப்போர்: ஆனந்தன், மணி.

[ஆனந்தன் கத்தியை தீட்டிக் கொண்டிருக்கிறான். அப்போது மணி வருகிறான்.]

ஆனந்: ஒரே வெட்டு. வேதாசலத்தினுடைய தலை கீழே உருளவேண்டும்.

மணி: ஆனந்தா நீ சுத்தப் பைத்தியக்காரன். கோபம் கண்ணை மறைக்கும். ஆத்திரத்தில் எதையாவது செய்துவிடப் போகிறாய்.

ஆனந்: நீ யார்?......என்னை தடுக்க?

மணி: நானும் உன்னைப் போல் ஒரு நாடோடி. உன் இனம் நீ உலக மறியாதவன். சூதும், சூழ்ச்சியும் நிறைந்த இந்த உலகத்திலே சிக்கி சிதைந்து, நான் கற்ற பாடங்களை நீயும் கற்றிருந்தால் இந்த மாதிரி கத்தியும் கையுமாகத் திரியமாட்டாய்,

ஆனந்: போதும், மூட்டை சுமப்பவனுக்கல்லவா தெரியும் கழுத்து வலி.

மணி: வலி இருக்கிறதென்று கருங்கல்லில் முட்டினல் வலி தீராது. மண்டைதான் உடையும்.

ஆனந்: போதும் உன் போதனே. எந்த வேதாசலத்தின் சதியால் என் தந்தை பிணமானுரோ அந்த வேதாசலத்தின் தலே கீழே உருளவேண்டும். இரத்தம் தரையில் ஆருக ஓடினுலன்றி என் ஆத்திரம் தீராது. கொண்டுவந்த பணத்தை வக்கீலுக்கு இறைத்தேன். கேஸே போடமுடியாதென்று சொல்லிவிட்டான். இந்த வாளே வழக்கு மன்றம். இனி இந்தக் கையே சட்டம்.

மணி: அட நில்லப்பா? நீ வேதாசலத்தை வஞ்சம் தீர்க்க நினேக்கிருய். ஆனுல் அது கத்தியால் சாதிக்க முடியாது.

ஆனந்: முடியாதா? பார். ஒரு மணி நேரம் தீட்டினேன்; கூர்முனே எப்படி இருக்கிறது பார்.

மணி: கத்தியைத்தான் தீட்டினுயே ஒழிய உன் புத்தியைத் தீட்ட வில்லே நீ. வேதாசலத்தை கொன்று விடுகிருய் என்று வைத்துக்கொள். ஆனுல் இறந்துபோன உன் தந்தை பிழைத்து விடுவாரா? ஊரார் உன்னே சும்மா விடுவார்களா? அல்லது நீ ஒரு நல்ல காரியத்தை செய்து விட்டாய் என்று போலீஸ்காரர்கள் உனக்கு மெடல் கொடுப்பார்களா? ஆனந்தா வேண்டாம் இந்த விபரீத புத்தி.

ஆனந்: மணி, தர்ம உபதேசம் செய்கிருயா?

மணி: தர்மம், கர்மம் என்று தலே முழுகி நெடு நாளாகி விட்டது. நான் சொல்வது யூகம். ஆனந்தா உன் தகப்பனுரை அவன் எப்படிக் கொன்முன். தடியால் அடித்தானு! கத்தியால் குத்தினுை? தற்கொலேயைத் தவிர வேறு வழியில்லாமல் செய்தான்.

ஆனந்: மணி நீ என்னதான் சொல்கிருய்?

மணி: என்ன சொல்கிறேனு? பழி வாங்கும் திட்டத்தை விட்டுவிடு. இதைக் கொண்டு அவனேக் கொஞ்சம், கொஞ்சமாக வாட்டி, வாட்டி வதைக்கவேண்டும். ஊரார் இப்பொழுது அவனேப் பற்றி எவ்வளவு மதிப்பாக பேசுகிருர்களோ இதே ஊரார்கள் அவன் யோக்கியதை வெளிப்பட்டு அவனே ஏசவேண்டும். அதற்கான வழிகள் நாம் செய்யவேண்டும்.

ஆனந்: மணி, நீ சொல்வது அவ்வளவும் உண்மை. வேதா சலத்தைப் பழி தீர்ப்பதற்கு இந்த கத்தி தீட்டிப் பயனில்லை.

[கத்தியை தூக்கி எறிகிருன்.]

மணி: சந்தோஷம், குழியில் விழ இருந்தாய்; தப்பித்துக் கொண்டாய். நான் வருகிறேன்.

ஆனந்: மணி, வேதாசலத்தின் வேஷத்தை கலைக்கவேண்டு மென்று சொன்ருய். அதற்காக வழி சொல்ல வில்லையே,

மணி: பாடுபடாமல் பலன் கிடைக்குமா? பார் யோசித்து.

[போகிருன். ஆனந்தன் கோவில் சென்று காளியை வேண்டுகிருன்.]

பக்தர் சொன்ன ஞாபகம்: மகா சக்தி வாய்ந்தவளப்பா இந்த மாகாளி. இந்த மாகாளியை மனதிலே பக்தியோடு பூஜை செய்து நம்பிக்கையாக கும்பிட்டு வந்தால் இந்த உலகத்தில் நடக்காதது ஒன்றுமில்லை.

மற்றவர்: கண்கண்ட தெய்வமாச்சே யப்பா இது. எந்தக் காரியமா யிருந்தாலும் சரி கை மேலே பலன் கிடைக்கும்.

## காட்சி 11

இடம்: காளி கோயில்.

இருப்போர்: மணி, ஆனந்தன்.

[ஆனந்தன் பரவசத்தால் பாடுகிருன். மணி வருகிருன்.]

மணி: என்ன ஆனந்தா ஒரே பக்தி பரவசம்.

ஆனந்: மணி, காளியை கும்பிட்டுப் போகலாமென்று வந்தேன். இந்தா பிரசாதம்.

மணி: பணம் கிணம் ரொம்ப தாராளமாக கிடைக்கிறதோ?

[பிச்சைக்காரன் வருகிருன்.]

பிச்சைக்காரன்: ஐயா, இந்த ஏழைக்கு ஒரு பிச்சை போடுங்க சாமி.

மணி: இந்தாப்பா. (போடுதல்)

பிச்: சாமி இது ஒரு ரூபாயிங்க.

மணி: தெரியுமப்பா இதை வச்சுக்க-இன்னும் நூறுபேர் கிட்டேபோய் பிச்சையினு கேட்காமே இன்னிக்கு பொழுதை நிம்மதியாக கழிச்சுக்கோ.

ஆனந்: மணி, உனக்கு தங்கமான மனசு.

மணி: சரி, வா கூல்ட்டிரிங் சாப்பிட்டு போகலாம்.

ஆனந்: ஐயோ நான் இன்றைக்கு விரதமாச்சேயப்பா.

[போகிருன்]

மணி: பைத்தியக்காரன். உழைக்கிருன் மாடுபோல. சம்பாதிக்கிற காசையெல்லாம் கற்பூரமாக வாங்கி கொளுத்துகிருன். (சிகரெட் பிடித்தல்) தூப தீப நைவேத்திய சமர்ப்பியாமி.

## காட்சி 12

இடம்: வேதாசல முதலியார் வீடு.

இருப்போர்: வேதாசலம், முருகன், சொக்கன்.

வேதா: என்னப்பா விசேஷம் இன்றைக்கு கோவிலிலே.

முருகன்: ஒன்றுமில்லீங்க அந்த குளத்தங்கரை பாசானம் இருக்குதில்லீங்க......

வேதா: எது; சுார்மேகம் தரவேண்டிய கடனுக்கு விட்டுப் போனதுதானே.

முரு: ஆமாங்க. அது நம்ப கையிலே வந்ததும், விளைச்சல் அதிகமாகயிருந்ததுங்க இந்த வருஷம் அதனுலேதான், காளிக்கு ஒரு அபிஷேகம் செய்து வைச்சேனுங்க,

வே: அவசியம் செய்யவேண்டியதுதான். முருகா முனியாண்டி தரவேண்டிய பாக்கிக்கு என்ன சொன்னுன்?

முரு: அவன் பெண்ஜாதி மலேரியாவில் படுத்து மூன்று மாசம் ரொம்ப கஷ்டப்படுகிருளுங்க பாவம்.

வே: யாருக்குத்தான் கஷ்டமில்லே; எனக்குந்தான் கஷ்டம் இருக்குது. இன்கம் டாக்ஸுக்கு பணம் கட்ட படியேறி இறங்கு கிறேனே அது ஒன்றே போதும் இந்தப் பயல் அங்கே காட்ட வேண்டிய கணக்கை இங்கே வைத்துவிட்டு வந்துவிடுவான்; இங்கே வைக்க வேண்டிய கணக்கை அங்கே கொண்டுவந்து விடுவான்; இவனைக் கட்டிக்கொண்டு நான் படுகிற கஷ்டம் காளியாயிதான் கேட்கணும். சொக்கா! முனியாண்டி கடன் எவ்வளவுடா ஆகும்?

சொ: அது ஆகுதுங்க 50 ரூபாயிம் சொச்சம்.

வே: பெரிய கோடீஸ்வரரு இவரு. சரியா பார்த்து சொல்லுடா கழுதை.........

சொ: 50 ரூபாயும், ஐந்தே முக்காலணாவும் ஆகுதுங்க.

வே: முருகா! அவனாலே கடன் கொடுக்க முடியலையின்னா, அவன் குடியிருக்கும் வீட்டையாவது என்மேலே எழுதி வச்சிடச் சொல்லு.

முரு: சரிங்க, நான் வர்ரேனுங்க.

வே: முருகா! உன் மகள் கல்யாண விஷயத்தை பற்றி என்ன முடிவு செய்தே? வேறெங்கேயோ—மாப்பிள்ளை பார்த் திருப்பதாக சொக்கன் சொன்னானே.

முரு: எனக்கு கொடுக்கிறதுக்கு இஷடம் தானுங்க. ஆனா, பொண்ணுதான் மாப்பிள்ளைக்கு வயசாயிடுத்து என்று சொல் கிறாள்.

வே: இதென்னடா ஊரிலே இல்லாத வழக்கம். வயசானா என்னவாம். என்ன தெரியும் அதுக்கு? மாட்டேன்னுதான் சொல்லும். நீயல்லவா சரிப்படுத்தனும?

முரு: மாப்பிள்ளைக்கு வயசு ஆயிட்டுதுன்னு கொழந்தை யோசிக்குதுங்க.

வேதா: வயசு ஆயிட்டாமா? யாருக்குத்தான் வயசு ஆகாம இருக்காம்? ஏன் இவமட்டும் என்னிக்கும் இப்படியே இருக்கப் போறாளாமா? முருகா செங்கோட்டா மகளுக்கு கல்யாணம் ஆனதே! மாப்பிள்ளைக்கு என்ன வயதிருக்கும். 60-க்கு மேலிருக்கு மில்லே?

முரு: அந்தக் கிழவன் அடுத்த வருஷமே செத்துபோயிட்டா னுங்களே.

வே: அவன்தானே செத்தான். அவன் எழுதிவச்ச மூணு காணி நிலம் அப்படியே இருக்குதில்லே. அதுவுமா போயிடுச்சு. (அமிர்தத்தைப் பார்த்து) அமிர்தம்! என்ன நீ, தகப்பனுக்கு மிஞ்சின பிள்ளையா கிட்டையாமே.

அமிர்தம்: அப்படி ஒன்றுமில்லிங்களே.

வே: நாலு பெரிய மனிதர்கள் பார்த்து, நல்ல காரியத்தை முடிக்கும்போது நீ யார்? அதை தடுக்கிறதுக்கு, இந்தா அமிர்தம் கல்யாணங் காட்சியை முடித்துவைப்பது பெரியவங்க காரியம். வயசாயிடுத்து, அது இது என்று என்னென்னமோ சொல்லுறியாமே.

வே: சரி போ; போய் வேலையைப் பார். முருகா, இதுகளெல்லாம் இப்படியேதான் சொல்லிகிட்டே இருப்பாங்க. நாமும் சரி, சரியென்று மேளத்தை வச்சி கழுத்தில் தாலியை கட்டியாச்சுன்னு; எல்லாம் சரியாப் போயிடும்; இதுக்கென்னமோ, எனக்கு இஷ்டம்தான், பெண்ணுக்குத்தான் இஷ்டமில்லே என்று ராகம் பாடறே. சரி, சரி; எல்லாம் ஒழுங்கா நடக்கட்டும் நீ போ.

முரு: வாரேனுங்க.

## காட்சி 13

இடம்: வேதாசலம் வீடு.

இருப்போர்: சரசா, அமிர்தம், மூர்த்தி.

சரசா: என்னடி இது? காலா காலத்தில் வருவதில்லே. ஏண்டி இப்படி கண்ணை கசக்கிட்டு வந்து நிற்கிறே?

அமிர்தம்: நான் என்னத்தை அம்மா சொல்றது? எஜமான் நீதியும் நியாயமாக பேசுவார் என்று பார்த்தேன். அவர் எங்கப்பாவுக்கு பக்கமேளம் அடிக்கிருர்.

சரசா: என்னடி சொன்ஞர் அப்பா?

அமிர்தம்: நான் கிழவனைத்தான் கட்டிக்கினமாம்.

சரசா: ஹூம், அப்புறம்.

அமிர்தம்: வயசாஞ என்னடி நீ மட்டும் இப்படியே இருக்கப் போகிருயா என்று கேட்கிருர்.

சரசா: (ஏளனமாக) அப்புறம்.

அமிர்தம்: இன்றைக்கு வருகிருர்களாம் பெண் பார்க்க. தலே சீவிக்கிடணுமாம், புதுச் சேலேயாம் கூத்தாம் வயிறு எரியுதம்மா.

சரசா: வயிறு எறியுதாம்மா; ஐயோ! இவ பெரிய ராஜகுமாரி; போடி, போய் வேலேயைப் பார். பெரிய ராணி இவள். இவளேக் கட்டிக்கிடறதுக்கு ராஜா வரப்போகிருன். அந்தஸ்துக்கு தகுந்த மாதிரிதானடி இடம் அமையும். உங்க அப்பன், எங்க அப்பாகிட்டே விவசாயம் பார்த்து உன்னே வளர்க்கிருன்; நீ எங்க வீட்டு வேலேக்காரி; இந்த பவுசுக்கு தலே நரைச்சுப் போச்சே என்று பார்த்தா முடியுமாடி. தலே நரைச்சா என்னடி? காசு பணம் இருந்தா போதாது.

அமிர்தம்: இஷ்டமில்லாத இடத்திலே வாழ்க்கைப்பட்டா வேதனேயாக இருக்காதாம்மா?

சரசா: ஏண்டி இஷ்டமில்லே? எவஞவது பெரிய இடத்து பயல் அப்படி வலே கிலே வீசிஞஞ?

[மூர்த்தி வருகிருன்]

மூர்த்தி: சரசா, அந்தப் பொண்ணு என்னமோ தன் வயிற்றெரிச்சலேச் சொன்ஞ, எரிகிற நெருப்பிலே எண்ணே வார்க்கிற மாதிரி பேசுகிருயே; உனக்கு நியாயமா?

சரசா: எல்லா நியாயமும் எனக்குத் தெரியும். இதில் நீ தலேயிடாதே!

[சரசா போகிருள்]

மூர்த்தி: அமிர்தம், இந்தக் கல்யாணத்தில் துளி கூட உனக்கு இஷ்டமில்லேயே?

அமிர்தம்: துளிகூட இஷ்டமில்லீங்க.

மூர்த்தி: அப்படியின்ஞ நான் சொல்லுகிறபடி செய்கிருயா?

[மாறுவேட சாமான்களே கையில் கொடுக்கிருன்]

## காட்சி 14

இடம்: முருகன் வீடு.

இருப்போர்: முருகேசன், அவன் மனைவி முத்தாயி, மாப்பிள்ளை மற்றும் பெண் பார்க்க வந்த வர்கள் ஆகியோர்.

தலைமை குடியானவன்: முருகேசா இந்தாப்பா இரத்தின ஜமுக்காளம்.

முரு: எதுக்குங்க.

த. குடி: வர்ர மனுசாளை மரியாதை செய்து அனுப்பணும் பாரு. முருகேசா, வர்ரவுங்க யாரு?

முரு: மாப்பிள்ளையோட தம்பியும், தங்கச்சியும் வர்ராங்க.

த. குடி: இன்னும் வேரேதாவது வேணுமா?

முரு: வேண்டாமுங்க.

த. குடி: சிலவுக்கு ஏதாவது வேணுமா?

முரு: இருக்குதுங்க. பத்து ரூபாய் இருக்குது.

த. குடி: அப்போ நான் வரட்டுமா?

முரு: சரிங்க. ஏ பிள்ளை முத்தாயி, குழந்தையை கூப்பிடு. தலை கிலை சீவி, பொட்டு கிட்டு வச்சு.........அடடே, அவுங்களே வந்துட்டாங்க பிள்ளை நம்ப வீட்டிலே எல்லோரும் சௌக்கியம் தானுங்களே?

மாப்பிள்ளை தம்பி: சௌக்கியம் தானுங்க.

முத்தாயி: விருந்தாளிகள் வந்துட்டாலே கால் ஓடமாட் டேங்குது கை ஓடமாட்டேங்குது.

முரு: உட்காருங்க, பரவாயில்லை. உட்காருங்க இது உங்க வீடுமாதிரி நினைச்சுக்கங்க.

மா. தம்பி: நம்ப வீட்டிலேயும் எல்லோரும் சௌக்கியம் தானுங்க.

முரு: சௌக்கியந்தான்...........வெத்திலை போடுங்க.

மா. தம்பி: அதுக்கென்ன போட்டாப் போகுது, தட்டை காணேமுங்களே.

முரு: ஏ பிள்ளே, முத்தாயி அந்த வெத்திலேத் தட்டை கொண்டு வாடி.

மா. தம்பி: உங்க எஜமான் கல்யாண விஷயத்தை பத்தி என்ன சொன்னுரு?

முரு: அவர் சொன்னுரு, சரி, வெத்திலே போடுங்க.

மா. தம்பி: பாக்கு இல்லீங்களே.

முரு: இல்லீங்களா. ஏ பிள்ளே முத்தாயி.

முத்தாயி: என்னங்க.

முரு: பாக்கு கொண்டுவாடி.

முத்தாயி: பாக்கா. விருந்தாளி என்ருலே, தலே கிர்ருனு சுத்துதப்பா.

முரு: ஏ பிள்ளே முத்தாயி.

முத்தாயி: என்னங்க.

முரு: அந்த காப்பித் தண்ணியை கொண்டுவாடி.

மா. தம்பி: எஜமான் என்ன சொன்னுரு?

முரு: அவரு சொன்னுரு மாப்பிள்ளேக்கு கொஞ்சம் வயசாயிடுச்சி என்ருர்,

மா. தம்பி: அப்படி ஒன்றும் வயசாயிடலீங்க.

மா. தங்கை: சும்மா, ஐம்பதுக்கு மேலே ஐந்தோ, பத்தோ தான் அதிகம் இருக்கும் அத்தான்.

முரு: சரிதான் போகிற வயசு.

முத்தாயி: இந்தாங்க காப்பி.

முரு: சாப்பிடுங்க.

மா. தம்பி: அதுக்கென்ன சாப்பிட்டாப் போகுது. (காப்பி கொட்டி விடுது.)

முரு: ஏ பிள்ளே இப்படித்தான் காப்பியை கொதிக்க, கொண்டு வாரதோ? (கோபமாக)

மா. தம்பி: பரவாயில்லே; விடுங்க. கொஞ்சம் பெண்ணேக் கூப்பிடுங்க பார்க்கலாம்.

முரு: அமிர்தம்—அமிர்தம்.

முத்தாயி: அது ரொம்ப கூச்சப்படுதுங்க. மூலையை விட்டு கிளம்ப மாட்டேங்குது.

முரு: சிருசுதானே; எல்லாம் போகப் போக சரியாப் போய் விடும். முத்தாயி, நீ சாப்பாட்டுக்கு வேண்டியதெல்லாம் கவனி. நான் கொஞ்சம் வெளியே போயிட்டு வர்ரேன்.

மா. தம்பி: பாக்கியம், நானும் வெளியே போயிட்டு வர்ராப்போல வர்ரேன்; நீயும் பெண்ணை கூப்பிட்டு பார்க்கிறுப் போல பாரு. அது நல்ல லட்சணமா? குணமா? மணமா?

மா. தங்கை: ஆகட்டும் அண்ணேன். அமிர்தம்......... கண்ணு அமிர்தம் வாம்மா. அவுங்க வேறு யாருமில்லே; கூச்சப் படாதே வாம்மா வா. அடேயப்பா இவ்வளவு கூச்சமா? என்னிக்கு இருந்தாலும் நீ நம்ப வீட்டிலே வாழப் போகிறவள் தானே வாம்மா (முகத்தில் மூடியிருந்த துணியை எடுத்துக் கொண்டு) அடப்பாவி, இதைக் காட்டத்தானு இந்த மனுசன் பறந்து வந்தான் கண்ணைப்பாரு, கோழி முட்டைக் கண்ணு; கோடாலி பல்லு; இதைக் காட்டத்தானு இவ்வளவு பசப்பு.

முத்தாயி: என்னம்மா இங்கே சத்தம்? எங்கே புறப் பட்டுட்டே.

மா. தங்கை: வந்த வேலை ஒரு வகையாய் முடிஞ்சிருச்சு போரேன். பொண்ணு காட்ட வந்துட்டாங்களாம் பொண்ணு உன் விடியா மூஞ்சு பொண்ணை நீயே வைத்துக்கொள்.

முத்தாயி: என்னடி உளர்ரே உன் பாட்டுக்கு.

மா. தங்கை: நானடி உளர்ரேன்; நீ தாண்டி உளர்ரே.

முத்தாயி: போகுது, போகுது என்று விட்டா மேலே மேலே போறியே நாக்கை உள்ளே வச்சு பேசு.

மா. தங்கை: நாக்கு உள்ளேதான் இருக்கு; உன் மகள் மாதிரி நீண்டுக்கிட்டா இருக்கு?

முத்தாயி: என்னடி சொன்ன என் மகளுக்கு பல் நீண்டுக் கிட்டு இருக்கா? உனக்குத்தாண்டி நீண்டுக்கிட்டு இருக்குது. இவ பவுசுக்கொரு கொண்டை; காலுக்கு வேறே தண்டை; பெண் பார்க்க வந்துட்டாளாம் பெண்ணை...போடி.

[மாப்பிள்ளை தம்பி வருகிறர்.]

மா. தம்பி: என்னடி இது அவளை என்னவென்று நினைச்சுக் கிட்டே. இல்லை, என்னைத்தான் என்னவென்று நினைச்சுக்கிட்டே.

முத்தாயி: ஆ, அறிவு கெட்டவனே. அவளைப்போலத் தான் இவனும் பேசுறான். வீட்டிலே என்ன நடந்தது ஏது நடந்தது என்று கேட்டா, இவள் என்ன சொல்லுறது?

மா. தம்பி: இந்தா, மரியாதையாகப் பேசு.

மா. தங்கை: நீ சும்மா இரு அண்ணே; இந்த வீட்டிலே பெண் பார்க்க வந்ததுக்கு நம்ம புத்தியை செருப்பாலே அடிச்சிக் கிறணும்.

[முத்தாயி செருப்பைத் தூக்கி எறிகிறாள்.]

முத்தாயி: இந்தாடி அடிச்சுக்கோ.

மா. தம்பி: இன்னும் ஏதாவது தூக்கிபோட்டே (போகிறார் கள்.)

[முருகேசன் வருகிறான்.]

முத்தாயி: இது கெட்ட கேட்டுக்கு இரவல் ஜமுக்காளம் வேறு.

முரு: ஏ பிள்ளை முத்தாயி என்னடி இது.

முத்தாயி: கேட்டிங்களா சமாசாரத்தை அந்த குச்சுக்காரி வந்தாளே அவ......

முரு: விருந்தாளிகள் எங்கேடி பிள்ளை.

முத்தாயி: அவங்க எழவெடுத்து நாசமாப் போக.

முரு: என்னடி பிள்ளை சபிக்க ஆரம்பிச்சுட்டே.

முத்தாயி: அந்த கொண்டைக்காரி வந்தாளே அவ உன் விடியா மூஞ்சி பிள்ளை எனக்கு வேண்டாம் அப்படி என்று சொல்லி என்னை வாயில் வந்தபடி பேசி என் பவுசை வாங்கிட்டா.

[முத்தாயி அழுக ஆரம்பித்து விட்டாள்.]

முரு: அமிர்தம், என்னம்மா இது உங்கம்மா கதற்ற கதறல் என் காதைக் குடையிது. என்னம்மா நடந்தது?

அமிர்தம்: ஒன்றுமில்லேப்பா அந்தம்மா என்னைக் கூப்பிட்டாங்க. போனேன்; உடனே அடி ஏண்டி உன் கண்ணு இப்படி போயிருக்குது, பல்லு ஏண்டி இப்படி நீண்டுக்கிட்டு இருக்கு என்று என்னென்னமோ சொன்னளப்பா.

மூரு: அப்படியா சொன்ன அடப்பாவி, கண்ணு இருக்கு அரிக்கன் லைட் மாதிரி; பல் இருக்குது பச்சரிசி மாதிரி; விட்டேனு பார் அவளை.

முத்தாயி: ஏ எங்கே போறே?

## காட்சி 15

இடம்: நந்தவனம்.

இருப்போர்: மூர்த்தி, அமிர்தம், சரசா.

[நந்தவனத்தில் மூர்த்தியும் அமுர்தமும் சந்திப்பு.]

மூர்த்தி: அமிர்தம் பலித்ததோ நான் சொன்ன யோசனை?

அமிர்தம்: ஓ! ஒரே நிமிஷத்தில் ஏச்சிப்பிப்டேன் அவர்களை.

மூர்த்தி: அமிர்தம், நான் உனக்கு இவ்வளவு உதவி செய்தேனே; நீ எனக்கென்ன தரப்போறே?

அமிர்தம்: நீங்க பெரிய இடத்துப் பிள்ளை; நான் உங்க வீட்டு வேலைக்காரி; என்னாலே உங்களுக்கு என்ன தரமுடியும்?

மூர்த்தி: அமிதம் நான் ஒன்று கேட்கிறேன். கோபிச்சுக் கிருமே பதில் சொல்லுறயா? உனக்கு இங்கே யாருமேலாவது ஆசை இருக்கா?

அமிர்தம்: எல்லோர் மேலேயுந்தான் ஆசையிருக்கு.

மூர்த்தி: அதைக் கேட்கல்லே அமிர்தம். உன் மனதிலே யார் மேலாவது ஆசையிருக்கா என்று கேட்டேன்.

அமிர்தம்: மனதிலே கூத்தாடும் பதினாயிரம் எண்ணங்கள்.

மூர்த்தி: அமிர்தம், நீ குடத்தை தூக்கிக்கிட்டு வளைந்து வளைந்து நடப்பாயே அதுமாதிரி வளைந்து வளைந்து பேசுறே.

அமிர்தம்: பாரத்தை சுமக்க முடியாமல்தான் அப்படி நடக்கிறேன். அதே போலே, நெஞ்சிலேயும் பாரம் இருந்தா நாக்கு வளையத்தானே செய்யும்.

மூர்த்தி: என்னை ஒரு சுமைதாங்கியென்று நினைச்சுக்கிட்டாவது, உன் மனதிலே இருக்கிற பாரத்தை என்னிடம் சொல்லப்படாதோ?

[சரசா வருகிறாள்.]

சரசா: ஏண்டி அமிர்தம்! இன்னிக்கு காலையிலிருந்து என்ன வேலையைத்தான் செய்திருக்கிறாய் நீ? மூர்த்தி, வேலைக்காரி கிட்டே கொஞ்சுவதும், குலாவுவதும் வேலையாய் போய்விட்டது உனக்கு. (அமிர்தம் குடத்தைக் கீழே போட்டு விடுகிறாள்) ஏண்டி குடத்தை இப்படி கீழே போட்டிருக்கியே; யார் வீட்டு சொத்தடி இது?

அமிர்தம்: ஏன் அக்கா இப்படியெல்லாம் பேசுறீங்க.

சரசா: அக்காவாம், அக்கா; இந்தாடி இனிமே என்னை இந்த மாதிரி கூப்பிடாதே; இதே பழக்கந்தானே நாளைக்கு நாலு பெரிய மனுசங்க வந்திருக்கும்போது கூடவரும். போடி, போய் வேலையை பார்.

மூர்த்தி: பஞ்சவர்ண கிளியை பிடித்து கொஞ்சி விடலாம் என்று பனைமரம் ஏறும்போது பறந்தோடி விட்டது ஜாதிபேதமென்கிற கூண்டுக்கு; தரித்திரக் கம்பிகள் வேறு; என்ன உலகம் இது.

## காட்சி 16

**இடம்:** கோவில்,

**இருப்போர்:** ஆனந்தன், மணி, காளி மற்றும் மணிக்கு கடன் கொடுத்தவர்.

கடன் கொடுத்தவர்: டேய்! நீ என்கிட்டே பணம் வாங்கலையின்னு காளி முன்னாலே கற்பூரத்தை அணைத்திடு பார்க்கலாம்.

மணி: இப்ப சொன்னுபாரு; அது சரி வா போகலாம்.

க. கொ: (சூடத்தை பொருத்தி) டேய் எங்கே அணை பார்க்கலாம்; லேசிலே உன்னை விடமாட்டேன் ஆமா.

மணி: இந்த காளி அறிய சொல்லுகிறேன்; உன்கிட்டேயிருந்து கால் காசு வாங்கலே (சூடத்தை அணைக்கிறான்) போதுமா?

க. கொ: அடப்பாவி! அணைச்சுட்டியா? காளி எதிரிலே பொய் சத்தியம் பண்ணிறியே; நீ உருப்படுவியா?

மணி: இந்தாப்பா அதிகமாய் பேசாதே கற்பூரத்தை அணைக்க சொன்னே அணைச்சுட்டேன். தீர்ந்து போச்சு; போ.

க. கொ: காளியாயி இதை நீ தான் கேட்கணும்.

ஆனந்: மணி......!

மணி: ஆனந்தா நீயா

ஆனந்: மணி, காளி முன்னுலே கற்பூரத்தை அணைச்சியே, உண்மையை சொல்லு நீ, அவன்கிட்டேயிருந்து பணம் வாங்கலையா?

மணி: அவன் ஒரு முட்டாள், அவன் தம்பி நீ. நான் என்ன சொல்லி கற்பூரத்தை அணைச்சேன். கால் காசு வாங்கலே என்று சொன்னேன். ஆனுல் வாங்கினது எவ்வளவு; முள்ளங்கி பட்டை மாதிரி ஐந்து ரூபாய் வாங்கினேன். அதை இப்போதே கேட்டான்; இப்போதில்லே பிறகு ஆகட்டும் என்று சொன்னேன்; கேட்கலே மென்னிப்பிடி பிடிச்சான் இப்போ பார், வாயை மூடிக்கொண்டு போகிருன்.

ஆனந்: மணி! இது பாவம்; காளி உன்னே சும்மா விடுவாளா?

மணி: சும்மா விடாம பின்னுலயா சுத்திக்கிட்டேயிருப்பா.

ஆனந்: மணி; அப்படியெல்லாம் சொல்லாதே; நான் வாரேன்.

மணி: பைத்தியக்காரன்.

## காட்சி 17

இடம்: வேதாசல முதலியார் வீடு.

இருப்போர்: சொக்கன், வேதாசலம், ஊரார் கூட்டம்.

வே: காளி! மாயாயி!! லோகமாதா!!!

சொக்கன்: நீங்க ஜமீன்தார் ஆனதுக்கு மரியாதை செய்ய வந்திருக்காங்க.

வே: தெரியுது. உங்க ஜமீன் என்மேலே விழுமென்று நினைக்கவே இல்லை. அந்த பாவி, உங்க பழைய எஜமான் வாங்கின கடனை திருப்பிக் கொடுக்க முடியாம இதைக் கட்டி விட்டு போனுன் என் தலையிலே.

கும்பலில் ஒருவன்: இந்த ஜமீன் அவர் கைவிட்டு போனது காளியாத்தா புண்ணியம் என்று ஊரல்லாம் ஒரே சந்தோஷப் படுறுங்க.

வே: நானும் அதற்காகத்தான் கோவிலுக்கு அபிஷேகம் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறேன். ஆனல் ஒன்று நீங்க அவன் தலையில் மிளகாய் அரைச்ச மாதிரி என்கிட்டே நடந்துக் கிடாதீங்க.

சொ: ஆமா அப்படி ஏதாவது நடந்தீங்க அப்புறம் எஜமான் ஆளே மாறிப் போய்விடுவார் ஜாக்கிரதை.

வே: சீ, கழுதை, வாயை மூடு. நான் கொஞ்சம் கண்டிப் பான பேர்வழிதான். ஏன்ஞ, கஷ்டப்பட்டு சம்பாதிச்ச பணம்.

ஒருவன்: நாங்க அப்படி தப்பு தண்டாக்களுக்குப் போக மாட்டோமுங்க. எஜமான் அப்படி கொஞ்சம் ஜமீன் பக்கம் வரணும் என்று எங்களுக்கெல்லாம் ஒரே ஆசையா இருக்குங்க.

வே: அதுக்கென்ன, போகாம இருக்க முடியுமா? எல்லோ ருமா சேர்ந்து கோவிலுக்குப் போய் அபிஷேகத்தை முடிச்சிகிட்டு அப்புறம் ஜமீனுக்குப் போகலாம்.

ஜனங்கள்: சரிங்க.

## காட்சி 18

இடம்: பாதை.

இருப்போர்: ஆனந்தன், ஆனந்தனுக்கு கடன் கொடுத்தவன்.

ஆனந்: இன்றைக்கு காலையில் தானுங்க வச்சிருந்த காசை யெல்லாம் காளிக்கு சுண்டல் செய்யக் கொடுத்துட்டேனுங்க,

க. கொ: என்னடா நான் தந்த கடனை கேட்டுக்கிட்டே இருக்கேன். நீ, என்ன கிண்டலா பண்றே. நடடா நீ வேலை செய்கிற இடத்துக்கு. உன் முதலாளிகிட்டே சொல்லி உன் சம்பளத்திலேயிருந்து கொடுக்கிறதாக இதிலே கையெழுத்துப் போடச் சொல்லுடா.

ஆனந்: இன்னிக்கு காலையில்தானுங்க என்னை வேலைக்கு வேண்டாம்னு துறத்திட்டாங்க.

க. கொ: அடப்பாவி! என் தலைமேலே வேறே கல்லைத் தூக்கி போட்டிட்டையடா. ஏண்டா நீ கடையிலே இருக்கிறே என்று நம்பித்தானடா உனக்குக் கடன் கொடுத்தேன்.

ஆனந்: நானும் என்னமோ கடையிலே வேலை பார்க்கிறோம்! கொடுத்திடலாம் என்று தானுங்க தைரியமா வாங்கினேன்.

க. கொ: நீ, பேச்சு மட்டுமாடா பேசுவே காளி வேசி என்று வேசம் போடறே, மனுஷனுடா நீ, மானமில்லை; வாங்கின கடனைக் கொடுக்க வழியில்லேன்னு எங்கேயாவது திருடப்போகிறது தானேடா. அடே அதுதான் இல்லேன்னு எங்கேயாவது தூக்குப் போட்டு உங்க அப்பனை மாதிரி சாகிறதுதானேடா. (அடிக்கிறார் ஆனந்தனை)

## காட்சி 19

இடம்: ஆனந்தன் ஒரு மரத்தின் அருகில் போகிறான்.

இருப்போர்: ஆனந்தன், மணி.

[ஆனந்தன் விரைவாக தூக்குப்போட்டுக் கொள்வதற்காக ஒரு மரத்தினடியில் போகிறான்]

மனச்சாட்சி: மரக்கிளையில் பிணம். உன் தந்தையின் பிணம். அவர் செத்தார், அக்கிரமக்காரர்களின் பணத்தாசையினால். அவன் வாழ்கிறான், நீ சாவதா? இல்லை. நீ வாழ வேண்டும்; உன் தந்தைக்காக நீ வாழத்தான் வேண்டும். நயவஞ்சகர்களுக்கு நல்ல பாடம் கற்பிக்க நீ வாழத்தான் வேண்டும்.

[மணி சைக்கிளில் வருகிறான் மரம் கிடக்கிறது]

மணி: நான்சன்ஸ், போகிற பாதையில் மரமும் மண்ணுங் கட்டியும். ஆனந்தா, ஏய் ஆனந்தா என்ன இது.

ஆனந்: மணி, இந்த உலகத்தில் ஏழைக்கு வாழ இடமில்லையா? உழைப்பவனுக்கு இங்கு வாழ உரிமையில்லையா?

மணி: என்னப்பா நடந்தது? எழுந்திரு.

ஆனந்: எல்லாம் நடந்து விட்டது. வேலை போயிற்று: மானம் போய்விட்டது. கடன் கொடுத்தவன் நாயைப்போல ஏசினன். திருடச் சொன்னன்; உனக்கு மானமில்லையா என்று கேட்டான்.

மணி: பாவம். அனுபவமில்லாதவன். உன்னை யாரோ கோட்டா பண்ணிவிட்டிருக்கிருர்கள்.

ஆனந்: மணி, அவன் சொன்னது அவ்வளவும் உண்மை. இனி நான் எங்கேயாவது திருட வேண்டும். அல்லது பிச்சை எடுக்க வேண்டும் அல்லது எங்கேயாவது விழுந்து சாக வேண்டும். மாகாளி உன் மகனை இக் கோலத்தில் வைக்கலாமா? மார்கழி மாத பூஜைக்காக மார்பு உடைய சம்பாதிச்சேனே? என்னை இக்கதிக்கு ஆளாக்கலாமா?

மணி: காளியின் வரப்பிரசாதம் கிடைக்குமென்று தவம் கிடந்தாய். ஆனல் உனக்குத் தெரியுமா ஆனந்த்? காளியின் அருள் யாருக்குக் கிடைத்ததென்று.

ஆனந்: எந்த புண்ணியவானுக்கு கிடைத்ததோ அந்த பாக்கியம்.

மணி: சாதாரண மானதல்ல அந்த பாக்கியம். ஒரு ஜமீன் பெரிய கிராமம். காளியை அவன் கும்பிடுவதில் அர்த்தமிருக்கிறது. அன்னக்காவடி நீ அவனை விழுந்து விழுந்து கும்பிட்டாய். கால் வலிக்குமே தவிர வழி ஒன்றும் கிடைக்காது.

ஆனந்: யாருக்கு மணி, கிடைத்தது? காளியின் அருள்.

மணி: உயர்திரு வட்டியூர் ஜமீன்தார் வேதாசல முதலியாருக்கு.

ஆனந்: ஹா...! அந்த பாதகனுக்கா கிடைத்தது? அவன் செய்த பாவங்களுக்கு அவன் கண்களைக் குருடாக்கி இருக்க வேண்டும். அவன் கால்களை நொண்டியாக்கி இருக்கவேண்டுமே, அவனுக்கா காளியின் அருள் கிடைத்தது?

மணி: ஆமாப்பா ஆமா. காளியின் அருள் கிடைத்த சந்தோஷத்திஞல்தான் இன்று காளி கோவிலில் அமர்க்களமாய் பூஜை நடக்கிறது. இன்று மாலை தேவிக்கு பணியாரம் பாயாசத் தோடு விருந்து பக்தர்களுக்கு. போய்ப் பாரப்பா, அந்த வைப வத்தைப் போய்ப்பார்.

[மணி போகிருன்]

ஆனந்: காளியின் அருள்? மோசக்காரனுக்கா அருள்? அதற்கு பூஜை? பாவி நடத்தும் பூஜை? பஞ்சமா பாதகன் நடத்தும் பூஜை. வஞ்சகன் நடத்தும் பூஜை?

[கோபமாக போகிருன் கோவிலுக்கு]

## காட்சி 20

இடம்: காளி கோவில்

இருப்போர்: வேதாசலம், சொக்கன்,

[காளிகோவிலில் பூஜை நடக்கிறது]

வே: டேய் சொக்கா, பார்த்தியாடா?

சொ: பஸ்டுங்க.

வே: சீ, கழுதை! அதையாடா கேட்டேன்; வாசிப்பதை கேட்டு மெய் மறந்து நிற்கிருஞே பக்கிரிசாமி, அவன் கொடுக்க வேண்டிய போன மாதத்து வட்டிப்பணம் இன்னும் வந்து சேரல்லையடா?

சொ: ஆமாங்க கேட்கலைங்க. சமயம் கிடைக்கிற போது கேட்டு வாங்கிடணுங்க.

வே: இந்த மாதிரியெல்லாம் இருந்தா உருப்படாதுடா. பணம் பல வழியிலும் பாழாய்ப் போகிறது. இன்னிக்கு மட்டும் ஆயிரம் ரூபாய்க்கு மேலே சிலவழிந்து போச்சுடா கழுதை.

[பூஜை முடிந்து வேதாசல முதலியார் உள்பட எல்லோரும் போகிருர்கள். போனவுடன் ஆனந்தன் வருகிருன்.)

## காட்சி 21

இடம் : காளிகோயில்

இருப்போர் : ஆனந்தன், மணி.

ஆனந்தன் : பக்தன் வந்திருக்கிறேனே, பூஜை வேளை தவறி, ஏன் என்று பார்க்கிறாயா? ஏ, காளி, உன்னையே நம்பித் தவம் கிடந்த என்னை, நீ கைவிடலாமா? மனிதர் கைவிட்டாலும் மாதா காப்பாற்றுவாள் என்று நம்பி இருந்த என்னை இக்கதிக்கு ஆளாக்க லாமா நீ? எவனுடைய சதியால், வஞ்சனையால் என் குடும்பம் நாசமாயிற்றோ அவனுக்காம்மா நீ அருள் புரிவது? இது முறையா? வேதாசல முதலி செய்துள்ள பாவங்களை நீ அறிய மாட்டாயா? எத்தனை குடும்பங்களை கெடுத்தான். ஒரு பாவமும் அறியாத என் தகப்பனை கொன்றான் பாவி. அனுக்கு நீ எப்படி அருள் புரிந்தாய்! அதற்கு எப்படி உன் மனம் இடம் கொடுத்தது?

தாயே! இதோ, பார் என்னை! ஏழையைப் பார்!! உழைத்து, உழைத்து உருக்குலைந்து போன என்னைப் பார்!!! உன்னையன்றி வேறு கதியில்லை என்று நம்பி மோசம் போன என்னைப் பார்!!! நான் என்ன செய்தேன் உனக்கு கேடு? ஆயிரம் கண்ணுடையாள் என்று அர்ச்சிக்கிறார்களே உன்னை, அதில் ஒரு கண்ணால் பார்க்கக் கூடாதா இந்த ஏழை படும் அவதியை. உன்னை பக்தியோடு பூஜித்தால் பலன் உண்டு என்று சொன்னார் களே. நான் பூஜித்து கண்ட பலன் என்ன? எவன் என் குடும் பத்தை கெடுத்தானோ அவனை ரக்ஷித்தாய் நீ, என் கால் வலிக்க உன் கோயிலைச் சுற்றினேன். என் வாய் வலிக்க உன் நாமத்தை பூஜித்தேன். மாதாவே, மாகாளி, மகேஸ்வரி, லோகநாயகி என்று உன்னை பக்தியோடு வேண்டினேன், வாழ வகையின்றி திகைத்தேன். கடன் பட்டேன், கல்லுடைத்தேன், மூட்டை சுமந்தேன், வண்டி இழுத்தேன். நான் பாடுபட்ட பணத்தை என் சுக வாழ்விற்கா செலவிட்டேன்? இல்லை! தூடம் வாங்கி னேன், மாலையிட்டேன், மாகாளிக்கு படையல் படைத்தேன். என் பக்தியில் என்ன தவறு கண்டாய் சொல்? சகலருக்கும் நீ தாய்தானே, ஏன் உனக்கு இந்த ஓர வஞ்சனை? என்னைப் போன்ற ஏழைகளை ஏன் இப்படி துடிக்கச் செய்கிறாய்? ஏன் பலகோடி மக்களை பதைபதைக்கச் செய்து சிலரை மட்டு சீராக்கி வைக்கிறாய்? கள்ளங்கபடமற்றவர்களை அனலில் புழுபோல் துடிக்க வைத்து சூது, வஞ்சனை, சதி செய்யும் சண்டாளர்களை ஏன் விட்டு வைக்கிறாய்? (காஸ் தடுமாற்றம்)

மாலை, உனக்கு மலர்மாலை! பாதகன் அளித்த பலவகையான பழங்கள்!! அக்கிரமக்காரன் அளித்த பரிசு!! வகைவகையான படைப்பு, வஞ்சகன் கொடுத்த நெருப்பு, என்னைப் போன்ற ஏழைகள் உன் பக்கத்தில் வருவதைத் தடுக்கும் பரம சத்துருக்கள், இதோ பார்! ஏழை அழுத கண்ணீர்! எளியோர்களின் துயர்வு!! ஏமாந்தவர்களின் ரத்தம்!!! பக்தா. நீயா இப்படிப் பேசுகிறாய் என்று கேட்கிறாயா நீ? கேள் தைரியமிருந்தால்? ஹிருதய சுத்தியோடு பதில் கூறுகிறேன். கேள்! ஊரைக் கெடுப்பவன் உன்னை பூஜித்தால் அவனை ரக்ஷிப்பதா? உனக்கு நீதியின் லக்ஷணமே தெரியாதா? நீதிக்கும் நேர்மைக்கும் உனக்கும் நெடு நாள் பகையா? உனக்கு தர்ம தேவதை என்ற பெயர் தகுமா? என் பூஜையை ஏன் ஏற்றுக்கொண்டாய்? ஏற்ற பின் திக்கற்ற என்னை ஏன் தவிக்கச் செய்தாய்? ஏன் உழப்பை உண்டு கொழுத்தவன் என்னை வஞ்சித்தால், உனக்கு அடிமையாக இருந்து உழைத்ததற்கு பலன்தான் என்ன? என் உழப்பை உண்டு கொழுத்தாயே உனக்கு கருணை இல்லையா? நெஞ்சிலே ஈரமில்லையா என்று கேட்பேன் அல்லவா? அதுபோலவே உன்னை கேட்கிறேன். நீ செய்தது நியாயமா? ஏன் பேசாமல் இருக்கிறாய்? எங்கே என் கேள்விக்குப் பதில்? ஏழையை பணக்காரன் அடிக்கும்போது எப்படி ஏழை வாய் திறவாமல் இருக்கிறானோ அப்படித்தான் இருக்கிறாயே நீயும், ஏ, காளி, ஏழையின் மனம் ஓர் எரிமலை! அதிலிருந்து கிளம்பும் ஜுவாலை யைப் பார்! ஹ...ஹ...ஹ...ஹ......பார் ஜுவாலையை! ஹ...ஹ... ஹ...ஹ......! (சிரிப்பு)

பாவம்! நீ என்ன செய்வாய். நான்தான் பித்தன், உன்னையே நம்பிக் கிடந்தேன். அது என் பைத்தியக்காரத் தனம், நயவஞ்சகத்தால் வேதாசல முதலி கொழுத்தான். அது உன் அருளால் வந்தது என்று எண்ணினேன், அதுவும் என் பைத்தியக்காரத்தனம். உன்னிடம் முறையிட்டால் என் குறை தீரும் என்று நம்பினேன். அதுவும் பைத்தியக்காரத்தனம். ஆனால் எனக்கு இருந்த போதை தெளிந்தது.

[ஆட்கள் வந்து ஆனந்தனை விரட்டுகிறார்கள். ஆனந்தன் ஓடுகிறான். அங்கு மணி சைக்கிளில் வருகிறான். ஆனந்தன் மணிமீது மோதுகிறான்.]

மணி: யாரடா நீ? நில்லுடா, அடே நீயா? ஆனந்தன் என்ன இது?

ஆனந்: மணி, மணி, என்னைக் காப்பாற்று. ஆட்கள் துரத்திக் கொண்டு வருகிறார்கள். நான் எங்கேயாவது போய் ஒழியனும்.

மணி: என்ன? என்ன

ஆனந்: அவசரத்தில் என்ன என்னமோ செஞ்சிட்டேன்.

மணி: ஏன்? யாரையாவது கொலை செய்து விட்டாயா?

ஆனந்: இல்லை. அவமானப்படுத்தி விட்டேன்.

மணி: யாரை, வேதாசல முதலியாரையா?

ஆனந்: இல்லை, காளியை.

மணி: பூ, இவ்வளவுதானா?

ஆனந்: மணி, அதோ ஆட்கள் வருகிறதுபோல் சத்தம் கேட்குது. நான் எங்கேயாவது சீக்கிரம் ஒளியணும்.

மணி: பயப்படாதே. அதோ தெரியும் கொல்லையைத் தாண்டி போனால் அதற்குப் பக்கத்தில் ஒரு பாழுங்கிணறு இருக்கிறது. அதிலே போய் பதுங்கிக்கொள். வார ஆட்களை நான் பார்த்துக் கொள்கிறேன்; நீ போப்பா.

ஜனங்கள்: ஏம்பா! இந்தப் பக்கம் யாராவது ஒரு ஆள் வந்தானா?

மணி: ஓ, நில்லுங்கள். சைக்கிளைத் தூக்கிக் கொள்கிறேன். ஆளா? கட்டையும் நெட்டையும் இல்லாம நடுத்தரமாக.

ஜனங்கள்: ஆமா, ஆமா, கருப்பும் சிகப்பும் இல்லாமே சாம்ப நிறமாய் ஒரு ஆளு...

மணி: (வழியை மாற்றிக் கூறி) அடடே, இப்பத்தான் இந்தப் பக்கம்தான் போறான். ஓடுங்க, ஓடுங்க நானும் வாரேன்...

[மணி ஆனந்தன் மறைவிடத்திற்கு வருகிறான்]

ஆனந்: மணி, சீக்கிரமாக வா, ஒரு மூட்டை இருக்குது.

மணி: புதையலா?

இருவரும்: பிடி, தூக்கு, தூக்கு, (அவிழ்த்தால் பிணம்)

மணி: அடடே எங்கப்பா ஓடறே? நில்லு. ஆனந்தா உன் அதிர்ஷ்டம் இருக்கிறதே, வேறே யாருக்கும் வராது. மூட்டையை தூக்கினால் பிணம். அசல் உன் மாதிரியே இருக்குது. எவன் இவனை இப்படி செய்திருப்பான்?

ஆனந்: எந்த வேதாசலம் இவனை பழி தீர்த்தானோ?

[அவன் பையிலிருந்ததை எடுக்கிறார்கள்]

மணி: கத்தை கத்தையா காகிதம், டைரி செம்பால் அடிச்ச காசுகூட இல்லே! ஆனந்தா, டைரியில் என்ன எழுதியிருக்கு என்று பார்.

ஆனந்: மணி, இவன் சரித்திரம் எழுதியிருக்கு.

மணி: சரித்திரமா? எந்த ஊர் ராஜா? எத்தனை ராணிமார்? பாரப்பா பார்.

ஆனந்: கேலி இருக்கட்டும் மணி, இவன் பெரிய சீமான் வீட்டுப் பிள்ளை! பெயர் பரமானந்தன்; மேவார் விலாசம்; இந்தப் பக்கம்தான்.

மணி: மேவார் விலாசமா? அப்படி ஒன்னும் இல்லையே! அங்கே ஒரு கிழம் அல்லவோ நடமாடிக் கொண்டிருக்கிறது.

ஆனந்: அது இவன் தாயார்; படித்துப் பார்.

மணி: ஆனந்தா, ஒரு பிணம் உன்னை நடைப்பிணமாக்கி விட்டது. இந்தப் பிணம் உன்னை லட்சாதிபதி ஆக்கப்போகிறது.

ஆனந்: ஆ...உனக்கென்ன மூளை.

மணி: சுறு சுறுப்பாக வேலை செய்கிறது. கிணற்றுக்கு உள்ளே போனது பராரி ஆனந்தன்; வெளியே வந்தது பணக்கார பரமானந்தன்.

ஆனந்: என்ன? மணி, உனக்கென்ன பைத்தியமா? நான் பரமானந்தனா?

மணி: ஆம். பரமானந்தன் கொலை செய்யப்பட்டது. நமக்குத்தானே தெரியும்.

ஆனந்: அதனாலே......?

மணி: நீ பரமானந்தனாக ஊரில் உலவ வேண்டும். இனி அவனுக்குப் பதிலாக நீ நேராக மேவார் விலாசத்தில் நுழைய வேண்டும் பரமானந்தனாக. நான் உனக்கு பிரைவேட் செக்ரட்டரி.

ஆனந்: மணி உனக்கென்ன உடம்பு ஊறுகிறதா?

மணி: இல்லை. உன் வாழ்க்கை மாறுகிறது; பொருள் இல்லாமல் புலம்பினாய். இனி யோகபோகத்தில் புரளப் போகிறாய். வேதாசலத்தால் வேதனை அடைந்தாய். இனி அவனை நீ வெல்லலாம்.

ஆனந்: எப்படி மணி?

மணி: என் அப்பன் பிணநாதன் அருளால்!

ஆனந்: மணி உனக்குப் பைத்தியம். வேஷம் ஊரை ஏமாற்றும். அவன் தாயார்.........

மணி: நமக்கு அந்தக் கஷ்டத்தை வைக்கவில்லை. அந்த அம்மாளுக்கு இரண்டு கண்களும் குருடு.

ஆனந்: உனக்கு எப்படி தெரியும்?

மணி: மற்றதெல்லாம் தெரிந்தது போல, அந்த அம்மாளுக்கு கண் சௌக்கியமில்லாமலிருந்து ஆப்ரேஷன் செய்து கண் குருடானது எல்லாம் டைரியில் இருக்கிறது.

ஆனந்: மணி, அப்படியானல் நான் பரமானந்தனுக நடித்தால் நம் சூது வெளியாகாதே?

மணி: ஆகாது, ஆகாது. பக்கத் துணை நான் இருக்கிறேன். நீ, எதற்கும் கவலைப்படாதே! நான் போய் உடைகளெல்லாம் வாங்கி வருகிறேன். அதுவரைக்கும் யார் கண்ணிலேயும் தென்படாதே. இதைப்பற்றி மூச்சுக்கூட விடாதே. அதிர்ஷ்டம் வந்து அணைத்துக்கொள்ளும்போது அடி முட்டாளாக இருக்காதே. நான் சொன்னது ஞாபகமிருக்கட்டும். போகுமுன்பு இதற்கு போடப்பா (பிணத்திற்கு) நாலு கும்பிடு.

## காட்சி 22

இடம்: பாழுங் கிணறு அருகில்.

இருப்போர்: மணி, ஆனந்தன்.

[ஆனந்தன், மணி புதிய உடைகள் வாங்கி போட்டுக்கொண்டு வருகிருர்கள்]

மணி: இடியட். ஓ நீயா? ஆனந்தா கவனி, டைரியில் உள்ள விஷயங்கள் நன்ருக ஞாபகமிருக்கட்டும்! கிழவியின் ஒரே மகன் நீ! 10 வருஷகாலமாக சொந்த வீட்டை விட்டு புறப்பட்டு லண்டன், பாரீஸ் முதலிய இடங்களைச் சுற்றி இருக்கிருய். தாயாருக்கு கண் ஆப்ரேஷன் என்று தெரிந்ததும், சொந்த ஊருக்கு திரும்பி இருக்கிருய். ஹும் ஞாபகத்தில் வைத்துக் கொள்.

ஆனந் : மணி, பரமானந்தன் கொலையின் காரணம் என்ன என்று பார்த்தோம் டைரியிலே?

[மணி பார்க்கிறன்]

மணி: விலை உயர்ந்த வைரங்கள் அவனிடம் இருந்தன. அதை உளவு தெரிந்தவன் எவனே அவனை குளோஸ் பண்ணியிருக்கவேண்டும். அதைப்பற்றி உனக்கென்ன கவலை. மனுசன் உனக்காகத்தான் அவுட் (Out) ஆகியிருக்கிறன்; வா போகலாம்.

[ஆனந்தன், மணி இருவரும் மேவார் விலாசத்தில்.]

## காட்சி 23

இடம்: பரமானந்தன் இல்லம்.

இருப்போர்: பரமானந்தன் தாயார், ஆனந்தன், மணி.

பரமானந்தன் தாயார்: பரமானந்தா இத்தனை வருஷம் கழித்தாகிலும் வந்து சேர்ந்தாயே. அதுவே போதும். பரமானந்தா இந்த 10 வருஷம் நான் கஷ்டப்பட்டது போதும். இனிமே இந்த பாரத்தை என்னலே தாங்க முடியாது.

மணி: அம்மா இனிமேலுமா உங்களுக்கு அந்த கஷ்டத்தை வைப்போம்? இனிமே வீட்டை விட்டு போறதில்லை என்று உங்க பிள்ளைகிட்டே சத்தியம் வாங்கிக்கிட்டேன்.

ப. தயார்: தம்பி, நீ யாரப்பா? நல்ல பிள்ளையாண்டானக இருக்கிருயே. உன் பெயரென்ன தம்பி?

பர: அம்மா அவன் என் நண்பன். பெயர் மணி.

மணி: ஆமம்மா. சிநேகிதனுக்கு சிநேகிதன். செக்ரட்டரிக்கு செக்ரட்டரி.

ப. தாயார்: என்னமோப்பா, உங்களை யெல்லாம் பார்க்கிறதுக்கு எனக்கு கொடுத்து வைக்கவில்லை. பரமு நீ நல்லபடியாக வந்து சேர்ந்ததுக்கு, காளி கோவிலுக்கு ஒரு அபிஷேகம் செய்யலாம்னு இருக்கேன்.

பர: (கோபமாக) காளி கோவிலுக்கு அபிஷேகமா?

மணி: அம்மா அபிஷேகம் எதற்கு? ஒரு பஸ்ட் கிளாஸ் டீ பார்ட்டி வைப்போம். நாலு பெரிய மனுசங்க வந்து நம்ப பரமானந்தனை பார்க்கட்டுமே.

ப. தாயார்: மணி அதுவும் நல்ல யோசனைதான்; அப்படியே செய்துடுங்க. அப்பா மணி, எனக்கு ஒரு ஆசை.

மணி: என்னம்மா அது......?

ப. தாயார்: என் காலத்திலேயே பரமானந்தனுக்கு ஒரு கல்யாணம் செய்துவிடுவோம்.

மணி: அப்படியே செய்துபுடுவோம்.

ப. தாயார்: பரமானந்தனுக்கு பொருத்தமான இடத்தையும் மனசிலே நினைச்சுக்கிட்டு இருக்கேன்.

பர: யாரம்மா அது?

ப. தாயார்: அவள்தான் நம்ம சரசா.

பர: சரஸாவா? எந்த சரசா?

ப. தாயார்: வட்டியூர் வேதாசலத்தின் மகள்.

பர: (கோபமாக) என்ன வேதாசலத்தின் மகளா?

மணி: அட ஏம்பா கோபப்படுறே; அம்மா பரமானந்தன் சில சமயங்களில் சந்தோஷப்படுகிறதும் கோபப்படறதும் ஒன்று மாதிரியே இருக்குது. பல ஊர் சுற்றினதே கோளாறு. அவன் கிடக்கிறன், கல்யாணத்தை நாம் நடத்திடுவோம்.

ப. தாயார்: ஆமப்பா மணி. பரமானந்தா வா போகலாம்.

மணி: அம்மா டீ பார்ட்டீ.

ப. தாயார்: பேஷா நடத்துங்கோப்பா.

மணி: பரமு, இன்விட்டேஷன் (Invitaion).

பர: செக்ரட்டரி ஸார் எல்லாம் நீங்க பார்த்துக்குங்க.

[மணி அழைப்பிதழ் எழுதுகிறன். வேலைக்காரி பாக்கியம் வருகிறள்.]

பாக்கியம்: ஸார்!.........

மணி: ஓ, நீயா?

பாக்கியம்: இந்தாங்க காப்பி.

மணி: ரொம்ப தாங்ஸ். நீ யாரம்மா?

பாக்: இந்த வீட்டிலேதான் மூணு வருஷமாக வேலே பார்த்துக்கிட்டு வர்ரேனுங்க.

மணி: ஓ.ஐ.சி. உன் பெயரென்ன?

பாக்: பாக்கியம்.

மணி: பியூட்டிபுல் நேம் (Beautiful Name).

பாக்: என்னங்க, டீ பார்ட்டியிலே ஒரு டான்ஸ்......

மணி: பேஷா வைப்போம்.

பாக்: அதிலே ஜமீன்தாரின் மகள் சரசாவே வந்து ஆடினுல் ரெம்ப நல்லாயிருக்கும்.

மணி: அதுக்கென்ன பிரமாதம் அப்படியே செய்துவிடுவோம்.

பாக்: அப்ப நான் போயிட்டு வரட்டுங்களா,

மணி: போறியா?......... ..ஹ்ம்............போறையா?

## காட்சி 24

இடம்: வேதாசல முதலியார் வீடு.

இருப்போர்: வேதாசலம், சொக்கன்.

[வேதாசல முதலியார் அழைப்பிதழைப் படிக்கிருர்.]

வே: ஐயா, நான் அயல்நாடு சென்று, சுகமே திரும்பியதை முன்னிட்டு நிகழும் கார்த்திகை மாதம் 2-ம் தேதி சனிக்கிழமையன்று என் இல்லத்தில் நடக்கும் தேநீர் விருந்துக்கு தாங்கள் தங்கள் குடும்ப சகிதமாய் வந்து என்னை ஆசீர்வதிக்க வேணுமாய் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, பரமானந்தன், மேவார் விலாசம்.

சொ: போகவேண்டியதானுங்களே, டீ பார்ட்டிக்கு.

வே: சீ, கழுதை உன்னை ஆருடமா கேட்டேன்?

சொ: என்னமோங்க ஊரு பூரா பேசிக்கிறுங்க; ஒரு சந்தோஷகரமான செய்தின்னு?

வே: அது என்னடா சந்தோஷமான செய்தி?

சொ: சூட்சியமாய் சொன்னு கோபிச்சுக்கிறீங்களே.

வே: பெரிய அரசியல்வாதி இவரு. சூட்சமாக சொல்ராரும் விளக்கமாக சொல்லுடா கழுதை.

சொ: பரமானந்த முதலியாரு இந்த ஊருக்கே பெரிய பணக்காரருங்க?

வே: ஆமா, பணக்காரங்கதான்; யார் இல்லையென்று சொன்னுங்க, நல்ல சொத்து, பூர்வீக குடும்பம்; ஒரே மகன், நல்ல கீர்த்தி.

சொ: அவர்தான் உங்களுக்கு மருமகப்பிள்ளை ஆகப் போருருன்னு ஊரெல்லாம் ஒரே பேச்சா இருக்குது.

வே: சொக்கா, நீ சொன்னபடி நடந்துட்டா, இந்தப் பக்கத் திற்கே......பக்கம் என்ன இந்த ஜில்லாவிற்கே நம் குடும்பத்திற்கு ஒரு தனி கீர்த்தி. அது நடக்கனுமே.

சொ: நடத்திடலாமுங்க, என்ன பிரமாதம்.

வே: இதென்னடா இப்பவே, நீ மாப்பிள்ளை வீட்டுக்காரன் மாதிரி பேசுகிருய்?

சொ: பின்னே என்னுங்க புரிந்துகொள்ளாமலே பேசுரீங் களே. நம்ம சரசா அம்மாவை டீ பார்ட்டியிலே நாட்டியம் ஆடனும்னு கேட்டிருக்கிறுங்களே. அதிலே தெரிலீங்களா.

வே: டேய் சொக்கா! இருக்குதடா உனக்கும் கொஞ்சம் மூளை.

## காட்சி 25

இடம்: பரமானந்தன் வீடு.

இருப்போர்: மணி, பரமானந்தன், வேதாசலம், சரசா மற்றும் விருந்துக்கு வந்திருப்பவர்.

மணி: பரமானந்தா! ஆடம்பரமாய் இரு டீ பார்ட்டிக்கு வருகிற ஆட்கள் உன்னைக் கண்டு அப்படியே சொக்கிவிட வேண்டும்.

பர: பார்ப்போம். எவனெவன் வருவானே! என்னென்ன கேட்பானே?

மணி: சட். கோழையைப்போல் பேசாதே! இப்பொழுது நீ ஏழையல்ல. 'க்கமான்', கூப்பிட்டவுடனே ஓடிவர பணி ஆட்கள். இரும்புப் பெட்டியில் இருக்கிறது இரண்டு லட்சம் ரூபாய்; பூமி இருக்கிறது; கார்; பங்களா இருக்கிறது; நகை; வேலை செய்ய, வேண்டிய ஆட்கள் இருக்கின்றனர்.

பர: மணி இதையெல்லாம் பிறர் சொத்தென்று நினைக்கும் போது திகலாக இல்லையா?

மணி: கோழைபோல் பேசாதே. எந்தப் பொருளும் ஒருவனிடம் இருக்கும்போது அது அவனுடையது. அதற்கு முன்பு அது வேறொருவனுடையது. ஆதலால் நீ எதை எதையோ எண்ணி ஏமாளியாகாதே! ஆடம்பரமாக இரு. யாராவது வந்து ஏதாவது கேட்பார்கள். (உதாரணமாக) ஒருவன் வந்து, மிஸ்டர் பரமானந்தம், நீங்கள் எத்தனை நாட்கள் பாரீஸிலே வாசம் செய்தீர்கள் என்று கேட்பான். நீ, புருவத்தை நெறித்துக்கொள்; சுருள் சுருளாக புகைவிடு. அலட்சியமாக அவனைப் பார். பாரீஸ் மிஸ்டர் அதுதானே எங்களுக்கு "ரெஸ்டிங் பிளேஸ்" என்று நீ சொல்லவேண்டும். உடனே, நான் ஆரம்பித்து விடுகிறேன். பாரீஸ்—பியூட்டிபுல் சிட்டி, பாரீஸ்ஸெண்ட்—அது இது. அப்படி இப்படி என்று திணர அடித்துவிடுவேன். பிறகு தண்ணீர் தெளித்தல்லவா எழுப்பவேண்டும்.

பர: பதில் கூற முடியாத சில கேள்விகள் வருமே. எவனாவது பாரிஸுக்கும் லண்டனுக்கும் கப்பல் கட்டணம் எவ்வளவு என்று கேட்டால்.

மணி: ஹும். பயப்படாதே, அலட்சியமாக "வீ டிராவல் ஒன்லி பை பிளேன்" தெட் இஸ் இனுவ் (We travel by plane. That is enough).

பர: மணி, இவ்வளவு கூத்து ஆடவேண்டியதிருக்கிறதே.

மணி: அது, இந்த இடத்துக்கு தேவை ஆனந்த். நீ இப்பொழுது குடியேறி இருக்கிற உலகம் இருக்கிறதே அது பணக்கார உலகம்; மிகவும் விசித்திரமானது.

பர: ஆம். முட்டாள் புத்திசாலியாகப் போற்றப்படுவான். வீரன் கோழைப்பட்டம் பெறுவான். கோழை வீரன் பட்டம் பெறுவான். அவலட்சணமாக இருந்தாலும் அழகனாக கருதப்படுவான். ஆனல் இது முறையா? சரியா? நாமும் இதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டுமா?

மணி: ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை ஆனந்த். இந்த உலகத்திலிருந்து நம்மை அடிமை கொண்டுள்ளவர்களை நாம் ஆட்டி வைக்க வேண்டுமென்றல்லவா சொல்லுகிறேன். ஆனந்தா! அகில உலகத்தை ஆட்டி வைக்கும் பணம் இருக்கிறதே, அதை நீ இப்பொழுது ஏராளமாய் பெற்றிருக்கிறாய். ஆகையால் நீ எதைச் செய்தாலும் தகும். என்ன சொன்னாலும் நடக்கும்; வா போகலாம்.

[தேநீர் விருந்துக்கு இருவரும் வருகின்றனர்.]

மணி: இவர்தான் வட்டியூர் ஜமீன்தார் உயர் திரு வேதாசல முதலியார், பெரிய மனிதர்.

பர: (முதலியாரைப் பார்த்து) நிறைய தெரியும், உங்களைப் பற்றி. ஆனால் பார்க்கத்தான் இல்லை.

பர: சீமாட்டிகளே, சீமான்களே! நான் பல வருஷ காலமாய் ஐரோப்பா தேசத்திலே சுற்றிக்கொண்டிருந்து விட்டேன். அதனால் உங்களில் பலரைக்காணும் பாக்கியம் இல்லாமல் போய்விட்டது. எங்கள் பூர்வீக ஜமீனை விட்டுவிட்டு இந்தப் பக்கம் வந்தவுடனே அதே சோகத்தால் மெலிந்து போனேன். டாக்டர்கள் நான் ஐரோப்பா செல்ல வேண்டும் என்று சொன்னார்கள். தாயாரை அப்போது விட்டு விட்டுச் சென்றவன் இப்போதுதான் திரும்பியிருக்கின்றேன், ஆதலால், இனி என் தாயாரையும், வீட்டையும் விட்டுப் போகிறதில்லை யென்று தீர்மானித்து விட்டேன். உங்களையெல்லாம் சந்திப்பதற்காகவே இந்த டீ பார்ட்டி ஏற்பாடு செய்தேன். அழைப்பை ஏற்று என்னை கௌரவப்படுத்தியதற்காக — வந்தனம். (கைதட்டல்)

மணி: (லேடீஸ் ஓ எக்ஸ்யூஸ் மி) தோழர்களே, ஸ்ரீமதி சரசாதேவியின் நடனத்தை நீங்கள் கண்டு களித்தீர்கள்; பார்த்து ரஸித்தீர்கள். அவர்களே இந்த டீ பார்ட்டியிலே நடன விருந்து அளிக்கவேண்டுமென்று நான் ஆசித்தேன். என் நண்பர் மிஸ்டர் பரமானந்தன் அவர்களும் அதை ஆமோதித்தார்கள். 'அழைப்பை ஏற்றுக்கொண்டு அம்மையாரும் தன்னுடைய பொறுப்பைச் செய்து முடித்தார். ஏற்றுக்கொண்டது மட்டுமல்ல, இங்கு உள்ள அனைவரும் கண்டு மகிழும்படி நடத்தியும் தந்தார். அதற்காக, அவருக்கும் அவரது தோழியருக்கும் உங்கள் சார்பாகவும், மிஸ்டர் பரமானந்தன் சார்பாகவும், என் நன்றி' வந்தனம். (கைதட்டல்)

வே : அன்பு மிக்க நண்பர்களே, பரமானந்தன் நமக்கு அளித்துள்ள டீ பார்ட்டி உண்மையிலே நமக்கு பரமானந்த மாக இருந்தது. அது அவருக்கு தெரியுமோ, தெரியாதோ, நான் அவருக்கு ஒரு விதத்தில் உறவினன் சில வருஷங் களுக்கு முன் அவர் இங்கு வந்து குடியேறினர்களே தவிர, அப்பொழுது அவர் யார்கிட்டேயும் நெருங்கிப் பழகியதில்லை. திடீரென்று ஒருநாள் கப்பலேறி விட்டார். அதற்கு பிறகு நான் அவருடைய தாயாரை அடிக்கடி போய் பார்த்ததுண்டு. அந்த அம்மா ஒருநாள் வேடிக்கையாக என்னிடம் உங்கள் மகள் சரசாவை என் மகனுக்கு கல்யாணம் செய்துவிட வேண்டும் என்று சொன்னர்கள். நானும், எல்லாம் நம்ம கையிலா இருக்கிறது ; கடவுள் செயல் என்று சொன்னேன். பரமானந்த னுடைய தயாள குணமும், அடக்கமும், நன்னடத்தையும், ஒழுக்கமும் நம் குலத்திற்கே பெருமைதரக் கூடியது. ஆதலால் நான் பரமானந்தனுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன். (கைதட்டல்)

வே : தம்பி பரமானந்தம் நான் வரட்டுமா ?

பர : சரி, செய்யுங்கள் மா...........மா...

மணி : அடே, மாமா என்றுதான் சொல்லேன்.

வே : அதற்கென்ன. தம்பி இஷ்டப்பட்டால்.

மணி : இஷடம் என்னுங்க கலியாணத்தை நடத்திடுவோம்.

வே : சரி.

[பரமானந்தனுக்கும் சரசாவுக்கும் கல்யாணம் நடக்கிறது. கல்யாணம் நடந்த பிறகு பரமா னந்தன்.]

## காட்சி 26

இடம் : வேதாசலம் வீடு.

இருப்போர் : பரமானந்தம், மணி.

பர : ஆடம்பரம் ஆடல் பாடல் விருந்து வேடிக்கை இவை களுக்கு நான் ஒரு பதுமை. என் லட்சியம், சபதம் எல்லாம் எங்கே ? எனக்கு இது ஒன்றுமே பிடிக்கவில்லை மணி. நான்

பஞ்சை சுந்தரம் பிள்ளை மகன். அவர் ஏழை ஆனால் யோக்கியர்; மானத்திற்காக மரக்கிளையில் பிணமானார். அவருடைய மகனா நான்; சே, சே இதை என்னால் சகிக்கவே முடியாது.

மணி: என்னப்பா அது? என்ன செய்யவேண்டு மென்கிறாய்?

பர: என் தகப்பனைக் கொன்ற பாதகனை ஒரே வெட்டில் கொலை செய்து வஞ்சம் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று நினைத்தபொழுது,

மணி: அடாது. அவனை ஒரே அடியாக வெட்டிப்போட்டால் பயனில்லை. அவனை கொஞ்சம் கொஞ்சமாக வாட்டி வதைக்க வேண்டுமென்று சொன்னேன். நன்றாக ஞாபகமிருக்கிறது.

பர: இந்த ஞாபகம் உள்ளவன் இப்பொழுது அவன் மருமகனாக்கி விட்டாயே. இது என்ன நியாயம்?

மணி: ஆம். பரமானந்தன் அவனுடைய மருமகன் ஆனந்தன் அவனுடைய பரம விரோதி.

பர: போதும் இந்த புதிர்கள்.

மணி: அவசரக்காரன் ஆனந்தா, கோட்டைக்குள் புகுந்து விட்டோம். இனி எதிரிகளின் மார்புக்கு நேரே செல்லும் நம்முடைய வாள். இதோ படித்துப் பார்; பழி தீர்க்கும் வழி. நான் வகுத்துள்ள திட்டம். படி முதல் பக்கத்தை!

பர: அடுத்துக் கெடுக்கும் படலம்.

மணி: அதுதான் இப்பொழுது நடந்தது. வெறும் ஆனந்தன் வேதாசல முதலியாரை நெருங்க முடியாது, ஆனால் பரம விரோதியான பரமானந்தனை, மேளதாளங்களோடு, விருந்து வைபவத்தோடு நாள் நட்சத்திரம் பார்த்து தன் ஒரே மகளான சரசாவை காணிக்கையாக கொடுத்து தன் மாளிகைக்கு அழைத்துக் கொண்டார். இதற்குப் பெயர்தான் அடுத்துக் கெடுக்கும் படலம்.

பர: அருமையான ஏற்பாடு! எங்கே பணத்தின் மீது பாசங் கொண்டு நம் திட்டங்களையெல்லாம் மறந்து விடுவாயோ என்று எண்ணினேன்.

மணி: பைத்தியம், அடுத்ததைப் படி.

பர: பணம் பாழாகும் படலம்.

மணி: அது என்ன தெரியுமா? வேதாசல முதலியாருடைய அந்தஸ்து, புகழ் செல்வாக்கு எதனுல் வந்தது? பணத்திஞல் அல்லவா? பல ஏழைகளை கசக்கி பிழிந்து அக்கிரமங்கள் பல புரிந்து அநியாயமாக உன் தகப்பனை மரக்கிளையில் தொங்க வைத்து, அவன் குவித்துள்ள பணம் இருக்கிறதே, அது பாழாக வேண்டும். அதைப் பார்த்து, ஏ, வேதாசலமே எங்கே உன் பணத்திமிர் என்று நாம் கேட்கவேண்டும்.

பர: மணி, அவன் பணத்தை பூதம்போல் காப்பவனுச்சே.

மணி: அதற்கு வழி இருக்கிறது. 'மானம் பறிக்கும் படலம்' இது என்ன தெரியுமா? ஜெகம் புகழ் மேவார் விலாச மைனரைத் தன் மருமகனுக அடைந்திருக்கிருர். அதனுல் இப்பொழுது அவர் புதுத்தனிக் கௌரவம் பெற்றிருக்கிருர் அல்லவா?

பர: ஆம். ஊர் மக்கள் அப்படித்தான் பேசிக் கொள் கிருர்கள்.

மணி அதே ஊர்மக்கள் அந்த மருமகனை குடிகாரன், சூதன், கூத்திக்கள்ளன் என்று உன்னை ஏசவேண்டும்.

பர: என்னையா?.........

மணி: ஆம். அதற்கான நடிப்புகள் நாம் செய்யவேண்டும். உன்னை நிந்தித்துப் பேசும் எதிரொலியால் அவன் மானம் போகும்; மனே வேதனை அதிகமாகும். துடிதுடித்துப் போவான்.

பர: "கண் குத்தும் படலாம்" இதென்ன மணி?

மணி: அதுவா கேள்! என் அருமை மகளே, கண்ணே அருமை கண்மணியே, உன் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். பணக் கார இடத்தில் சம்பந்தம் கிடைத்தது என்றெல்லாம் பெருமை பேசிக்கொள்கிருரே ஸ்ரீமான் ஸ்ரீமதி சரசாவைப் பார்த்து, அதே சரசாவை, நீ சதா கொடுமைப் படுத்த வேண்டும். அவள் கண் கலங்கி நிற்பதைப் பார்த்து, கண்ணைப்போல வளர்த்தேன் இன்று கண் கலங்கி நிற்கிருளே என்று அவன் கதற வேண்டும்.

பர: மணி! இப்பொழுது தானப்பா என் மனம் நிம்மதி அடைந்தது.

மணி: "பணம் பாழாகும் படலம்" இதை ஆரம்பிக்க வேண்டும் இப்பொழுது. அதற்கு சரசா ஒரு கருவி. அவளை ஒரு தடவை முறைத்தால் ஓராயிரம்; ஒரு அடி அடித்தால் ஐயாயிரம்; ஐயோ என்று அலறிஞல் பத்தாயிரம்; இப்படி பறக்கவேண்டும் பணம்.

பர: பாவம்! பெண்ணுயிற்றே; நயமாகக் கேட்டால் கூட வாங்கி கொடுத்துவிடுவாளே சரசா!

மணி: இரக்கம் காட்டுகிருயா? ஆனந்த் அன்று உன் தந்தை மரக்கிளையில் தொங்கும்போது அவன் இரக்கம் காட்டினுனு கருணை? அந்த அரக்கனின் மகள் இவள். ஆதலால் ஒரே கல்லில் இரண்டு பழம் விழவேண்டும். அவன் கண்ணீரும் கீழே விழவேண்டும்; அதே சமயத்தில் பணமும் கறந்தாக வேண்டும். என்ன சொல்கிருய்?

பர: நான் தயார்! இப்பொழுதே ஆரம்பிக்கலாமா?

மணி: கொஞ்சம் பொறு, இனிமேல்தான் முக்கியமான கட்டங்கள் இருக்கின்றன. அதனுல்......

பர: அதனுல்......?

மணி: இது இப்பொழுது தேவை. நீயே படித்துப் பார்.

பர: இடைவேளை.

## காட்சி 27

இடம்: பாதை.

இருப்போர்: மணி, பரமானந்தன்.

[மணியும், பரமானந்தமும் காரில் வருகின்றனர்.]

மணி: எப்படி நம்ம ட்ரைவிங் (Driving).

பர: ரொம்ப ஸ்டடி (Study).

மணி: ஆம்! இந்த ஸ்டடி வேணும் உனக்கு. இன்று சகலவித அலங்காரத்துடன் வரவேற்கப் போகிருள் உன் சரசா. சொக்கிவிடக்கூடாது. நமது திட்டங்கள் எல்லாம் தவிடு பொடியாகிவிடும்.

பர: கவலைப்படாதே, இந்த உள்ளம் அனல் போன்றது.

மணி: அவளுடைய கனிமொழிகளில் மயங்கி குளிர்ந்து விடாதே.

பர: பயப்படாதே! பாதையினின்று தவறமாட்டேன்.

மணி: கலக்கம் ஏற்பட்டால் உன் தகப்பனுர் மரக் கிளையில் தொங்கியதை நினை!

## காட்சி 28

இடம் : வேதாசலம் வீடு.

இருப்போர் : அமிர்தம், சரசா.

அமிர்தம் : இந்தாங்க அம்மா பூவு கேட்டீங்களே கொண்டு வந்திருக்கிறேன்.

சரசா : ஏண்டி இதற்குத்தான் இவ்வளவு நேரமா? யாரோடே வாயாடிக்கிட்டு இருந்தே. பெரிய இடத்துப் பிள்ளை. பேரீஸ் லண்டன் போனவரு. அவருக்கு இதுதான் பூவோ?

அமிர்தம் : இதுதாம்மா நம்ம தோட்டத்திலே இது தானுங்களே இருக்குது.

சரசா : சீ. கழுதை! வாயை மூடு! வர வர பேச்சு அதிகமா யில்ல வருது. இந்தா இதை சாப்பிடு (தின்று மிச்ச ஆப்பிள் பழத்தை எறிகிருள், அமிர்தம் முழிக்கிருள்) ஏண்டி முழிக்கிறே எச்சிலா இருக்கிறது என்று பார்க்கிருயா? ஒன்றுமில்லேடி நான் சாப்பிட்ட மிச்சம் அது இந்த சமயத்தில் இதாவது கிடைத்தது என்று சந்தோஷப்படாமே!

[மணியும், பரமானந்தனும் வரும் காரின் ஹார்ன் சத்தம் கேட்கிறது]

வே : வாங்க மாப்பிள்ளை...செக்ரட்டரி ஸார் நீங்க.

மணி : பரவாயில்லே. பரவாயில்லே.

சரசா : இதோ பார்த்தீங்களா! எங்க நாடகத்துக்காக வாங்கினது.

பர : சகிக்கலே ஒன்ருவது. கர்மம்.

சரசா : இதை பாருங்க! நாடகத்திலே எனக்குக் கிடைத்த பரிசுகள்!

பர : பார்க்கச் சொல்லடி உங்க அப்பனை.

அமிர்தம் : அம்மா பழங்கள், கொண்டுவரச் சொன்னீங்களே.

சரசா : ஏண்டி நிற்கிறே சிலைமாதிரி. வைச்சுட்டுப் போ வெளியே.

பர : சரசா, யார் இந்த பொண்ணு?

சரசா: அவ நம்ம வீட்டு வேலைக்காரி.

பர: ரொம்ப நல்லா யிருக்குது. ரொம்ப நல்லா யிருக்குது லட்டு.

சரசா: அப்படியா சந்தோஷம்.

பர: பெய ரென்ன?

சரசா: ரவா லட்டு.

பர: அந்தப் பொண்ணோட பெயரு.

சரசா: குப்பி, (அலட்சியமாக) (அப்பொழுது உள்ளே இருந்து ஒரு குரல் அமிர்தம்.)

பர: குப்பி. அமிர்தம் என்கிற பெயர் நல்லா யிருக்கிறது என்றுதானே, குப்பி என்று சொன்னே. வேதாசல முதலியார் மகள்தானே, வேறே எப்படி யிருக்கும் புத்தி.

சரசா: ஆருயிரே, என் மேல் உங்களுக்கு என்ன கோபம். ஏன் இந்த கடுகடுப்பு? நான் செய்த பிழை என்ன? நான் தாயிழந்தவள்; எங்கப்பா என்னை, அவர் கண்களைப் போல பாதுகாத்து உங்களிடம் ஒப்படைத்தார். இனிமேல் உங்களிடம் தான் இருக்கிறது எந்தன் வாழ்வு.

[சரசா அவன் கால்களைப் பிடித்துக் கொள்கிருள். ஆனந்தனுக்கு இரக்கம் வரும் சமயம், தன் தகப்பனரின் ஞாபகம் வரவே காலால் உதைத்து தள்ளுகிருன்.]

பர: என் சிநேகிதர்களுக்கு டீ பார்ட்டி வைக்கவேண்டும். அதற்காக ஐயாயிரம் ரூபாய் செலவாகும். உங்க அப்பா கிட்ட சொல்லி வாங்கிக் கொடு.

சரசா: நாளை வாங்கித் தருகின்றேன். கண்ணளா இன்று......

பர: இன்று நான் சொல்வதைப் போல் நீ செய். பணம் வாங்கிக் கொடுத்ததும் நாளை இருவரும் சந்திக்கலாம்.

[பரமானந்தம் போகிருன்; அமிர்தம் வருகிருள்.]

அமிர்தம்: அம்மா, பால்.

சரசா: (கோபத்தோடு) போடி.

## காட்சி 29

இடம்: பரமானந்தம் வீடு.

இருப்போர்: மணி, வேதாசல முதலியார்.

[வேதாசல முதலியார் மணியைச் சந்திக்கிறார்.]

மணி: நேற்று ராத்திரி உங்ககிட்டேயிருந்து வந்தாரில்லே, அப்போ படுத்தவர்தான்.

வே: ஏன் ரொம்ப ஜுரமோ?

மணி: பின்ன கோபம் இல்ல வந்திருக்கு.

வேதா: கோபம் வந்தாலே.

மணி: ஜுரமும் சேர்ந்துதான் வரும். ஆனால் இப்பொழுது வந்திருக்கிற ஜுரமும், கோபமும் இருக்கிறதே அப்பாட!

வேதா: அப்படி என்னாங்க ஸார் நடந்தது?

மணி: பின்னே என்னங்க முதலியார்வாள். அவர் லண்டன் பாரீஸ் போய் வந்தவராச்சே. காலேஜில் படித்த சிநேகிதர்களுக் கெல்லாம் டீ பார்ட்டி வைக்க வேண்டியவராச்சே, அதற் கெல்லாம் பணம் நிறையத் தேவையா இருக்குதே; இதை யெல்லாம் மாமனார் கொஞ்சமாவது கவனிக்கிறாரா என்று ஒரே கோபம் போங்க.

வேதா: ஆமா ஸார். சரசாகூட சொன்னாள், மாப்பிள்ளை ஏதோ ஐயாயிரம் ரூபாய் கேட்டார் என்று. இப்போ எந்த அளவிலே கோபம் இருக்கு?

மணி: ஒழுங்கா மரியாதையாகப் பணம் வரலையின்னா, இனி உங்க வீட்டுப் பக்கமே காலையெடுத்து வைக்கிறதில்லை என்று சொல்லி விட்டாரு.

வேதா: அய்யய்யோ, இந்தாங்க சார் ரூபாய். அப்படி யெல்லாம் இருந்துவிட வேண்டாமென்று நீங்கதான் அவருக்கு சொல்லணும்.

மணி: என்னாங்க சார்! இது கூடவா உங்களுக்குச் செய்யக்கூடாது. உங்களைப் பற்றித்தானே என் மனசிலே சதா வேலை செய்து கிட்டே இருக்கிறேன். நான் வாரேன்.

## காட்சி 30

இடம் : பாதை.

இருப்போர் : மணி, பரமானந்தன்.

[பரமானந்தனும், மணியும் குடிகாரர்களைப் போல் நடிக்கிறார்கள்.]

பரமா : எப்படி நம்ம வேலை. ஒரே நாளில் ஐயாயிரம் ரூபாய்.

மணி : ஒரே நாளில் பறக்குது பார்.

[பணங்களைப் பல வழிகளில் நாசம் செய்கின்றனர்.]

ஒருவர் : (மற்றொருவரிடம்) பார்த்தாயா ! பரமானந்த முதலியார் போகிற போக்கை.

மற்றொருவர் : வேதாசலத்தின் மருமகனா ? வெறிபிடித்தல்ல திரிகிறான் ?

இன்னொருவர் : பெரிய இடத்துப் பிள்ளை என்று பேர் ; இந்த பரமானந்தனுடைய யோக்கியதை கொஞ்சங்கூட நல்லாயில்லை. சதா குடி, கண்ட கூத்திக்காரிகளுடன் சுற்றுவதே வேலையாய்ப் போய்விட்டது ; கருமம், கருமம்.

பரமா : மணி, இன்று எப்படி நம்ம நடிப்பு ?

மணி : சபாஷ். (கிராண்ட் சக்ஸஸ்) குடிகாரன், சூதாடி, கூத்தி கள்ளன், வேதாசல முதலியார் மருமகனுக்கு வெற்றிகர மான பட்டமளிப்பு !

## காட்சி 31

இடம் : வேதாசலம் வீடு,

இருப்போர் : பரமானந்தன், சரசா, வேதாசல முதலியார்.

[ "ஆட வருவாயோ கண்ணா" என்று சரசா பாடிக் கொண்டிருக்கிறாள். பரமானந்தன் வருகின்றான்]

பர : என்னடி இங்கே சளசளன்னு சத்தம் ?

சரசா: ஒன்றுமில்லே, பாட்டு பாடறேன்.

பர: பாட்டுப் பாடுறாளாம் பாட்டு. இவ பாட்டை நான் கேட்கணுமாம்?

சரசா: உங்களை ஒன்றும் கேட்கச் சொல்லவில்லையே.

பர: பின்னே யாருக்காகடி நீ பாடறே?

சரசா: சிவ, சிவா!

பர: அதென்னடி, அத்தின அவசரமா சிவனை அழைக்கிறே. சிவ, சிவா என்று அகோர தவம் செய்தாலும், அவன் வர்ரது கஷ்டம் என்று சொல்லுவாங்க. நீ, என்னடான்னு, டெலிபோன் பண்ற கைலாசத்துக்கு. சனியனே.

சரசா: ஆமா. இப்போ நான் சனியனாகிவிட்டேன். அப்போது அப்ஸரசா இருந்தேன்.

பர: அப்போது கழுதை கூடத்தாண்டி அழகாயிருக்கும் குட்டியாயிருக்கும்போது.

சரசா: பூங்கொடியே என்று புகழ்ந்தீர்கள் ஒருமுறை.

பர: புது மோகத்தில்.

சரசா: கொஞ்சினீர்கள்..........! என்னிடத்தில்!

பர: உன் அழகைக் கண்டல்ல. உன் அந்தஸ்தைக் கண்டு.

சரசா: சத்தியங்கள் செய்தீரே!

பர: சரச நேரங்களில்.

சரசா: ஒருதரம் உயிரே என்றீர்கள்.

பர: ஆம். உயிரே. கண்ணே, கண்மணியே, கட்டிக் கரும்பே, கற்பகமே, கனிரசமே என்று கூடத்தான் சொன்னேன். சிருங்கார சாஸ்திரத்தில் நான் கற்ற பாடங்களடி அவைகள்.

சரசா: அப்படி நான் செய்த குற்றம்தான் என்ன?

பரமா: முட்டாளே, உலகத்தில் குற்றம் செய்தவர்கள் மட்டும்தானா தண்டிக்கப் படுகிறார்கள். அப்படியென்ன நீ ஒரு குற்றமும் செய்யாதவளா? இப்பொழுது பாடிக்கொண்டிருந்தாயே, ஓட வருவாயா, ஆடவருவாயா என்று அது எவனைப் பற்றியடி? யாரடி அவன்!

சரசா: பெரிய குற்றத்தைக் கண்டு பிடித்து விட்டீர்கள். சாமிமேல் பாட்டு படிச்சேன்.

பர: சாமிமேல் பாடும் பாட்டா இது? இப்படித்தான் ஆசை நாயகனை கூப்பிடுவதுபோல்தான் ஆண்டவனைக் கூப்பிடு கிறதோ? பேஷ், அதெல்லாம் ஒன்றுமில்லே; நீ யாரையோ மனதிலே நினைச்சுக்கிட்டு அதை சாமி மேலே சாக்காகப் போட்டு பாடியிருக்கிறே. உண்மையைச் சொல்லி விடு.

சரசா: கடவுளே! ஒரு புருஷன் தன் மனைவியிடம் பேசும் பேச்சா இது? என்னை ஏன் இப்படி சித்திரவதை செய்ய வேண்டும்? கல்யாணம் செய்து கொண்டு நான் கண்ட பலன் என்ன?

பர: என்னடி மயான காண்டம் நடத்திக் காண்பிக்கறே, எவனைப் பற்றி பாடிக்கிட்டு இருந்தே?...........

[பரமானந்தன் சரசாவை அடிக்கிறுன். சரசா அழுறுகிருள். வேதாசல முதலியார் வருகிருர்]

சரசா: ஐயோ! அப்பா, அப்பா.........

பர: அங்கே ஏண்டி போறே. இங்கே வாடி.

வே: என்ன அக்கிரமம் மாப்பிள்ளை இது?

பர: என்ன மாமா சொல்றீங்க?

வே: டேய் பரமானந்தா! உத்தமிகள் வயிறெரிஞ்சா வாழமாட்டான் எவனும். ஐயோ, பொண்ணு திரௌபதி மாதிரி கதறுதப்பா.

பர: திரௌபதியா இவ. ஏம்மா திரௌபதை!

வே: அடபாவி!

பர: இடியட்.........இவங்களோடு மாரடிச்சி நமக்கு போகுது உயிர்.

## காட்சி 32

இடம்: தோட்டம்

இருப்போர்: மூர்த்தி, அமிர்தம், பரமானந்தன், சரசா

மூர்த்தி: அமிர்தம்! நான் உனக்கு, நீ எனக்கு, இதை சயிக்கவேண்டும் இப்பொழுது.

அமிர்தம்: வேளாளர் வீட்டுப் பிள்ளைக்கும் வேலைக்காரிக்கும் ்யாணம் நடக்க முடியுமா? பெற்றோர்கள் சம்மதிப்பார்களா?

மூர்த்தி: உன் அன்பைப் பெறுவிட்டால்.........

அமிர்தம்: நீங்கள் என்னைக் கல்யாணம் செய்து கொள்ள ரும்புவது, வெள்ளாடு ஓநாயை விரும்புவது போலத்தான். லும் பழமும், தேனும் தினைமாவும் என்பதுபோல் ராஜா ான்ற உங்களுக்கு ராணிபோல் அல்லவா ஒருவள் மனைவியாக ண்டும்.

மூர்த்தி: அமிர்தம் உன்னை அடையவில்லை என்றால் என் வி நிலைத்திருக்காதடி கண்ணே!

அமிர்: எனக்கு மட்டும் உங்க மேலே ஆசையில்லேன்னு ான்னேன். உங்க துணிகளைத் துவைக்கும் போது ஒரு னந்தம். உங்களுக்காக கடைக்குச் செல்லும் போது ஒரு தோஷம். உங்களைக் கூப்பிடச் சொன்னால், கூத்தாடுவேன். ங்களுக்காக நான் எவ்வளவு வேலை செய்தாலும், அலுப்பே ான்றுது. ஆனால் நீங்க என்னைக் கல்யாணம் செய்து ாள்வது இந்த பூமி ஏற்குமா? பெற்றோர்கள் சம்மதிப்பார் ா?......

மூர்த்தி: இதெல்லாம் என்ன பேச்சு அமிர்தம்?

அமிர்தம்: எனக்கிஷ்டம் இல்லேன்னு சொன்னேன்!

மூர்த்தி: பூமி ஏற்றால், பெற்றோர்கள் சம்மதித்தால், மாளி கயில் வாழலாம். அல்லது எங்கேயாவது மண் குடிசையில் ழலாம்.

அமிர்: இனி ஒன்றும் சொல்லப் போவதில்லை. ஏதாவது டைகள் ஏற்பட்டால், உங்கள் பாடு அவர்கள் பாடு இனி ன் உங்கள் அடிமை.

மூர்த்தி: சரி, நான் வருகிறேன் அமிர்தம்.

[மூர்த்தி போகிறான். பரமானந்தன் அமிர்தத்தின் தோளைப் பிடிக்கிறான்.]

பரமா : கண்ணே அமிர்தம்!

அமிர் : ஐயா, இதென்ன அக்கிரமம்.

பரமா : அக்கிரமம் இல்லையடி கண்ணே, இது ஆசையின் விளைவு.

அமிர் : கேவலம் நானொரு வேலைக்காரி, என்னிடம்

பரமா : வேலைக்காரியா நீ? பூ விற்ருல் பூக்காரி, பிச்சையெடுத்தால், பிச்சைக்காரி. சிங்காரித்துக் கொண்டால் சிங்காரி. நீ வேலை செய்கிருய். அதனுல் வேலைக்காரி.

அமிர் : என்னையா இது பைத்தியக்காரப் பேச்சு.

பரமா : அமிர்தம் இந்த பைத்தியம் தேவர் மூவர்களுக்கும் இருந்ததாம். நான் எம்மாத்திரம்......அமிர்தம்!

அமிர் : போதுமையா பேச்சு. இந்த வீட்டில் வேலை செய்ய வந்தேன்; விபசாரத்துக்கு வரவில்லை.

பரமா : அட பைத்தியமே! உன்னை இப்பொழுது விபசாரத்துக்கு யார் அழைத்தார்கள்? என் தர்ம பத்தினியாகவல்லவா இருக்கச் சொல்லுகிறேன்.

அமிர் : அமாவாசையில் நிலவேது? காமவெறி பிடித்தவனுக்கு தர்மம் ஏது?

பரமா : என்றெல்லாம் எவனே எழுதி வைத்திருந்த கதையில் படித்திருப்பாய்.

அமிர் : ஐயா, அதிகம் பேசவேண்டாம். (சரசா வருகிருள்.)

சரசா : வீட்டு எஜமானனேடு உனக்கென்னடி பேச்சு.

பரமா : அதை நீ யார் கேட்கிறது? அமிர்தம் என்ன செய்யலாம்? கிரஹச்சாரம்! நான் போய் வரட்டுமா?

சரசா : இங்கே என்னடி நடந்தது சொல்லு?

அமிர் : ஏம்மா என் வயிற்றெரிச்சலை கிளப்புறீங்க. அந்தப் பாவி, என் மானத்தை வாங்கப் பார்த்தான். நீங்க என் பிராணனை வாங்குறீங்க.

சரசா : எந்தப் பாவிடீ, என்னடி செய்தான்? சொல்லேண்டி.

அமிர்: உங்க புருஷன்தான். இங்கே வந்தார் ஏழைதானே, எது வேண்டுமானாலும் செய்யலாம், கேட்கறதுக்கு யார் இருக்கா, அப்படி என்ன தைரியம்.

சரசா: அடிப் பாவி......? அப்படியா?

அமிர்: அவர் செய்த அக்கிரமங்களுக்கு, பாவிப் பட்டம் எனக்கா?

சரசா: மூடு டி வாயை. தடியாட்டமா இருந்துக்கிட்டு தளுக்கும், மினுக்கும் செய்தா ஆம்பளைக்கு கெட்ட எண்ணம் வராதாடி? சனியனே இந்த வீடு உருப்படனும்னு நீ தொலையணும் மொதல்லே. போடி போ. போய் வேலையைப் பாரு.

பரமா: சரசா! ஒரு மரக் கட்டை அவள். மனச் சாந்தியைக் கலைப்பதற்காக அமிர்தத்துடன் ஒரு மாதிரியாக நடந்து கொண்டேன். வேதனைப் பட்டதில் வெறி பிடித்துவிட்டது அவளுக்கு. நல்ல பிள்ளைகள் வேதாசலத்திற்கு. மகள் ஒரு அகம்பாவி. மகன் ஒரு அப்பாவி.

## காட்சி 33

இடம்: நந்தவனம்.

இருப்போர்: மூர்த்தி, பரமானந்தன், மணி.

பரமா: மூர்த்தி! உனக்கு ஏன் திடீரென்று என்மீது இவ்வளவு ஆசை. என்றுமில்லாதபடி என்னையும் அழைத்தாய் உலவ. ஆனால் பேசாமலிருக்கின்றாயே!

மூர்த்தி: பரமு, பெண்களிடம் இளித்துக் கிடப்பவனே, பெருமை பேசுபவனே, மிரட்டுபவனே! நான் உன்னை ஒரு பேயனென்று மதிக்கின்றேன்.

பர: குடியன், வெறியன், தடியன், பித்தன், பேடி, காமுகன், கபோதி என்று பல பதங்களுண்டு அகராதியிலே. ஓய்வு நேரத்தில் பார்த்து வைக்கவும்.

மூர்த்தி: நேரடியாகவே கேட்கிறேன். அமிர்தத்தை நீ என்னவென்று நினைக்கிறாய்?

பர: என்னடா இது வேடிக்கையான கேள்வி. அவளைப் பற்றி என்ன நினைப்பது? அவள் ஒரு வேலைக்காரி.

மூர்த்தி: வேலைக்காரியா யிருப்பதால் என்ன வேண்டுமானாலும் செய்யலா மென்பது உன் எண்ணமா?

பர: மூர்த்தி! அமிர்தம் ஒரு வேலைக்காரிதான். ஆனால் அற்புதமான ஜாலக்காரி. சிரித்து சித்திரவதை செய்யும் சொகுசுக்காரி. வெறும் அலங்காரி மட்டுமல்ல, பலே கைக்காரி.

மூர்த்தி: பரமு! கேலி செய்ய வேண்டாம். கேள் இதை! அவள் உன்னை ஒரு துரும்பென மதிக்கிருள்.

பர: சிறு துரும்பும் பல் குத்த உதவும் என்று நீ அவளுக்குச் சொல்வதுதானே.

மூர்த்தி: அமிர்தம் உண்மையில் உத்தமி.

பர: மூர்த்தி! நீ சுத்தப் பைத்தியக்காரனாக இருக்கின்றாயே! வீட்டு வேலைக்காரிகள் மூன்று விதம். சிலது தானாகவே மேலே வந்து விழும். சிலது தொட்டால் துவண்டு விடும். சிலதுகள் பத்தினி வேஷம் போடும் கொஞ்ச நாளைக்கு. இதில் உன் அமிர்தம் மூன்றாவது ரகம்.

மூர்த்தி: உனக்குக் கிடைக்க மாட்டாள் 'அவள்'. "கிட்டா தாயின் வெட்டென மற" என்ற பழமொழி தெரியுமா உனக்கு?

பர: "அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்" என்று மற்றொரு பழமொழி யிருக்கின்றதே அது தெரியுமா உனக்கு?

மூர்த்தி: இனி அந்த பழமொழிப்படிதான் நடக்க உத்தேசம்.

பர: கொஞ்சம் விளக்கமாக சொல்லப்பா.

மூர்த்தி: நீ அமிர்தத்திடம் வாலாட்டினால் இனி இக் கரங்கள் சும்மா இருக்கப் போவதில்லை. வீட்டில் வளர்க்கும் நாய் தானாகவே மேலே வந்து விழுந்தால் தடியால் அடிக்க தயங்க மாட்டார்கள்.

பர: சீ! நாயே!!

மூர்த்தி: யாரடா நாய்?

[இருவரும் சண்டை போடுகின்றனர். மூர்த்தி பரமானந்தனை உருட்டி விட்டுப் போய் விடுகிறான்.]

பர : உருட்டி தள்ளிவிட்டானப்பா.

மணி : மீசையில் மண் ஒட்டவில்லையே!

பர : திருப்பி யடிக்க முடியாதென்று நினைத்திருப்பான். உழைத்து உழைத்து மெருகேறிய கரங்கள் அவனை பொடியாக்கி யிருக்கக்கூடும். ஆனால் சூட்சுமம் கிடைத்த்ருக்கும்போது ஏன் கை வலிக்க அடிக்க வேண்டும்?

மணி : அது என்னப்பா சூட்சுமம்?

பர : மூர்த்தி அமிர்தத்திடம் காதல் கொண்டிருக்கும் விஷயம் தெரிந்து விட்டது. இனி மூர்த்திக்கு வெறி கிளப்பி அந்தக் கிழவனையும் தூண்டி விடவேண்டும். மரத்திலிருந்து ஒரு கிளை ஒடியும். மகன் தந்தைக்கு விரோதியாவான்.

மணி : அவ்வளவு தூரம் புத்திசாலியாயிட்டியா? பரம சந்தோஷம்.

## காட்சி 34

இடம் : வேதாசலம் இல்லம்.

இருப்போர் : வேதாசலம், மூர்த்தி, அமிர்தம், பரமானந்தன்.

[சிலர் பரமானந்தனுடைய நடத்தையைப் பற்றி வேதாசலத்தினிடம் குறை சொல்லிக் கொண்டிருக்கின்றனர். அப்போது பரமானந்தன் அங்கு வருகிறன்.]

ஒருவர் : என்னங்க உங்க மருமகப்பிள்ளை போடற ஆட்டம் சகிக்கத்தான் முடியவில்லை. அவரைப் பற்றி ஊர் பூரா பேசிக்கிறத கேட்டா.........

வேதா : நாக்கைப் பிடுங்கிக்கினு சாகலாம்னு தோணும்.

இன்னொருவர் : இதை உங்க காதிலே போட்டு வெச்சிட்டுப் போகலாம்னுதான் வந்தோம்.

மற்றொருவர் : பயப்படாதீங்க. உங்களை காளியாத்தா கை விடமாட்டா. நாங்க வரோம்.

வே: சொக்கா! நல்ல மருமகன் வந்து சேர்ந்தான். பணமும் போகுது. மானமும் போகுது. நம்ம வாழ்ந்த வாழ்வும் போகுது.

பர: சொக்கா! மாமாவுக்கு இப்படியெல்லாம் மனசு புண்ணுகும்படி பேசக்கூடாதுன்னு சொல்லிவைப்பா சொல்லி வை!

வேதா: என்ன! உன் மனசா புண்ணுகுது? குடியன், வெறியன், சூதாடி, கூத்திக் கள்ளன் அப்படின்னு ஊரார் பேசிக் கிறதைக் கேட்டு என் மனசிலாப்பா புண்ணுகுது.

பர: என்ன மாமா சொல்றீங்க.

வே: பணத்தைப் பாழாக்கு.

பர: உம்.

வேதா: குடிச்சி கூத்தாடி.

பர: உம்...உம்.

வே: கண்ட காவாலி பசங்களோட கூடி.

பர: உம்...உம்...உம்.

வே: என் மானத்தை வாங்கற. உன்னைப் பார்த்து ஊரு சிரிப்பா சிரிக்குது.

பர: ஏன் மாமா. ஊர் என்னைப் பார்த்து சிரிக்குதா? அல்லது உங்க மகனைப் பார்த்து சிரிக்குதா?

வே: அதென்னடா! புதுசா அவனை இழுத்து நடுவ போடற அப்பாவியாச்சே அவன். நீ நிக்கிர நிழலில்கூட நிற்கமாட்டானே அவன்.

பர: நிக்கிறதுக்கு யோக்கியதை வேணுமே மாமா.

வே: ஏன்?

பர: அது இருந்தா ஜாதி குலம் பாக்காமே ஒரு வேலைக்காரப் பொண்ணைக் கையைப் பிடிச்சி இழுப்பானு?

வே: என்ன? என் மகன் வேலைக்காரி பொண்ணை கைப் பிடிச்சு இழுத்தானு! ஏம்பா அவன் மேலே அபாண்டமா சொல்றே. அந்த ஜோலிக்கெல்லாம் போகமாட்டானே அவன்!

பர: ஏன் மாமா. நேர்லே காமிச்சா நம்புவீங்கல்ல. காண் பிக்கிறேன், அந்தக் காட்சியை ஒரு நாளைக்கு.

## காட்சி 35

இடம் : நந்தவனம்

இருப்போர் : வேதாசலம், மூர்த்தி, அமிர்தம், பரமானந்தன்.

[அமிர்தம்—மூர்த்தி நந்தவனத்தில் காதல் கீதம் பாடிக்கொண்டிருக்கிறார்கள்.]

அமிர் : நம் காதல் வெறும் விளையாட்டாகி விடும் என்று எனக்கு எப்போதும் ஒரு பயம்.

மூர்த்தி : இதெல்லாம் வீண் பயம் அமிர்தம். உன்னை இழக்க நான் என்ன அவ்வளவு முட்டாளா? அமிர்தம், அப்பாவிடம் சொல்லி கூடிய சீக்கிரமே கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்கிறேன். அப்புறம் பாரேன், நம்முடைய மாளிகையில் ஒரு வஸந்த மண்டபமும் ஒன்று கட்டி, ஜலக்கிரீடைகளுக்கு ஒரு தடாகம் கட்டி, அதைச் சுற்றிலும் வெற்றி வேராலே வேலி போட்டு, அதைச் சுற்றிலும் மல்லிகை மலர்களால் அலங்கரித்து, அந்த மணம் கம்மென்று வீச, உன்னை என் மடிமேல் சாய வைத்து, இல்லேல்ல உன் மடிமேலே நான் சாய்ந்துகொண்டு...

[வேதாசலமும் பரமானந்தனும் வருகிறார்கள்.]

வே : பாடுவாடா பாடுவா! டேய் மூர்த்தி நீ பாட்டுதானா பாடுவ.

பர : மாமா! பாட்டு எங்கே? அதைக் கவனிச்சீங்களா? வசந்த மண்டபத்திலே......

வே : ஹூம். வசந்த மண்டபந்தானா இருக்கும். இவரு கட்ற மாளிகையிலே!

பர : அங்கே ஜலக் கிரீடைக்கு ஒரு தடாகம் கூட இருக்கும்.

வே : இருக்கும்! இருக்கும்!! இந்தாடீ அமிர்தம், என்ன துணிச்சலடி உனக்கு? போய் வரச்சொல்லடி ஒங்கப்பனை அவன் கிட்டே பேசுகிறேன் நான். டேய் மூர்த்தி! வேலைக்கு ஆள் வச்சா அவ சேலையையாடா பிடிச்சு இழுக்கிறது?

பர : அட, சேலையை பிடிச்சு இழுத்தாக்கூட என்னமோ விளையாட்டுத்தனமா செஞ்சிட்டான்னு விட்டுடலாமே மாமா! அவளுக்கு மாலையில்ல போடப் போராராம் மாலை?

வே: போடுவாரு, போடுவாரு, 'போடா போக்கத்தவனே! நடடா! வீட்டுக்கு மடையா.

[வேதசலம் வீட்டில்]

மூர்த்தி: நான் எதையும் மறைக்க வில்லேயே அப்பா. காம சேஷ்டை யில்லேயே நீங்க கண்டது.

பர: இல்லே. சகுந்தலே துஷ்யந்தன் நாடகம். வேதாசல முதலியார் தலைமையிலே. ஏம்பா அப்படித்தானே? மூர்த்தி! நீ இவ்வளவு சீக்கிரம் கெட்டுடுவேன்னு நான் நினைக்கவே யில்லே. நம்ப ஜாதி......குலம்......ஆசாரம்......

மூர்த்தி: ஜாதி குலத்திலே எனக்கு நம்பிக்கை யில்லே.

பர: உனக்கில்லே. எனக்கிருக்கிது. எங்க மாமாவுக் கிருக்குது. ஏன் மாமா.

வே: ஆமாம் மாப்பிள்ளே. டேய் அந்தப் பெண்ணே டச்சி கிச்சி பண்ணியிருந்தா சொல்லடா. காசு பணம் கொடுத்து கழுதைகளே ஊரை விட்டு ஓட்டிவிடலாம்.

மூர்த்தி: பணத்தை பாபக்கடை என்று எண்ணுபவள் அமிர்தம்.

வே: அட நிறுத்தடா! ஒரே வார்த்தை சொல்றேன். ஜாதி ஆசாரத்தைக் கெடுக்காதே.

மூர்த்தி: நான் அமிர்தத்துக்கு துரோகம் செய்ய முடியா தப்பா. இதோ நான் போகிறேன். அமிர்தத்தோடு கூலி வேலே செய்தாவது பிழைப்பேன். உங்கள் குலப் பெருமை குன்ரு மலிருக்கட்டும்.

வே: டேய் மூர்த்தி! உன் மனசு என்ன இரும்பா?

பர: ஹூம். இரும்புமில்லே பித்தளேயு மில்லே. சும்மா பையன் மிரட்டுகிருன். வீட்டை விட்டு வெளியே போனு காரியம் பலிக்குங்கற தந்திரம்.

வே: அதுதான் நடக்காது மாப்பிள்ளே. அதுதான் இவரு கிட்டே நடக்காதுன்றேன்.

பர: ஏம்பா! மூர்த்தி! நீ போயிட்டா என்னுப்பா? போயிட்டான் பிள்ளேன்னு மாமா தலே முழுகிட்டு போருரு. என்ன பிரமாதம். ஏன் மாமா.

வே: பின்ன என்ன மாப்பிள்ளே. டேய் ஒரே வார்த்தை. அமிர்தம் என்ற பேரை மறந்துடருயா? வீட்டை விட்டு வெளியே போயிடறயா? என்ன சொல்லுகிறே?

மூர்த்தி: அப்பா நான் வெளியே போயிட்டா உங்களுக்குத் தானே தலே யிறக்கம்.

வே: நீ என் பிள்ளேன்னு நெனேச்சாதானேடா தலே யிறக்கம்!

பரமா: அப்படிச் சொல்லுங்க மாமா!

மூர்த்தி: அப்பா! அமிர்தத்திற்கு நான் எந்த விதத்திலும் துரோகம் செய்யமாட்டேன்.

வே: அப்படியா! இன்னேயிலிருந்து நீ என் மகனல்ல; நடடா வெளியே:

பர: ஆமா வேதாசல முதலியார் மூர்த்தியோட அப்பனு மில்லே.

மூர்த்தி: அப்பா இதோ நான் போகிறேன்.

[மூர்த்தி வீட்டைவிட்டு வெளியேறுகிருன்.]

பர: ஆரம்பித்துவிட்டது சுந்தர காண்டம்.

வே: நீ வேற வெந்த புண்ணிலே வேல் கொண்டு குத்து.

பர: வெந்த புண்ணிலே வேல். மரக்கிளேயிலே பிணம்.

## காட்சி 36

இடம்: அமிர்தத்தின் வீடு.

இருப்போர்: மூர்த்தி, அமிர்தம்.

[மூர்த்தி நேராக அமிர்தத்தின் வீட்டிற்குப் போகிருன்]

மூர்த்தி: அமிர்தம்!

அமிர்: நீங்களா!

மூர்த்தி : ஏன் அமிர்தம் ஒரு மாதிரி இருக்கிறே ?

அமிர் : வீட்டிலே என்னமோ பேசிஞங்க. பயம் இன்னும் அடங்கலீங்க.

மூர்த்தி : வா போகலாம் அமிர்தம், ஒரு நல்ல சேதி. நம்ப கலியாணத்திற்கு அப்பாவின் சம்மதமே இல்லாமல் போய் விட்டது.

அமிர் : அப்படீன்ஞ ?

மூர்த்தி : அவருக்கு மகனைவிட ஜாதிதான் உயர்வாக இருக்கிறது. நீ என் பிள்ளை இல்லை, வீட்டைவிட்டு போடா வெளியே என்று துரத்திவிட்டார் கண்ணே.

அமிர்தம் : அய்யய்யோ !

மூர்த்தி : ஜாதி பேத அடிமையிலிருந்து விடுதலை பெற்று விட்டேன். இனி நாம் சந்தோஷமாக வாழலாம்.

அமிர் : என் பொருட்டு தாங்கள் சொத்து சுகங்களை யிழப்பதா ?

மூர்த்தி : சுகத்தை இழந்ததாக எந்த மூட்டாள் சொன்ஞன். அமிர்தம், சுகம் எங்கிருக்கிறது என்று தேடித்தானே இங்கு வந்து சேர்ந்தேன்.

அமிர் : இங்கிருப்பது மண் குடிசை.

மூர்த்தி : ஆம், அதுவே நமக்கு மாளிகை அமிர்தம் ! மண்ணிலே மாணிக்கம் கண்ணே. பெற்ருேர் சம்மதித்தால் மாட மாளிகையில் வாழலாம். இல்லையேல் இந்த மண் குடிசையே மாளிகை. அமிர்தம், அழாதே. உலகத்தைப் பார்த்து சிரிக்க வேண்டிய நேரத்தில் ஏழை நினைத்து அழுகிருய் ? குயிலே ! இனி என் உழைப்பே செல்வம், உன் முகமே இன்ப ஒளி !

## காட்சி 37

இடம் : வேதாசல முதலியார் வீடு

இருப்போர் : வேதாசல முதலியார், முருகேசன்.

வே : கோவம் வருதே பிரமாதமாய். இந்த கோவத்தை உன் வீட்டிலே காட்டி உன் பெண்ணை அடக்க ஒடுக்கமா வச்சிருந்தா இந்த தீம்பு வருமா என் தலைக்கு? ஒரே பொண்ணுன்னு செல்லங் கொடுத்தே. நானும் ஒரே மகன்னு பார்த்தேன். இப்போ மானம் போகுது.

முருகேசு : ஏங்க, என் மகளா தப்பு தண்டவா செய்தது. பத்தரை மாத்து தங்கமாச்சிங்களே அது. ஏங்க ஏழை மேலே அபாண்டமா பழி சொல்றீங்க. விலையாகிற பண்டங்க அது.

வே : நல்ல விலைக்கு வித்துப் பூட்டேன்னுதான் நானும் சொல்லுறேன். அந்த தடிக்கழுதை மூர்த்தி வீடு வாணும், வாசலும் வாணும், அந்த பொண்ணுதான் வேணும்னு போயிட்டான், அவ்வளவு தூரம் ஏறிப்போயிடுச்சி. உன் மக போட்ட சொக்குப் பொடி.

முரு : என்னுங்க! சின்ன எசமானு? உங்க மகனு?

வே : எனக்கு ஏண்டா அவன் மகனுகிறுன்? உன் மரு மகன்டா அவன்.

முரு : நல்லாயிருக்குங்க சேதி! என்ன தைரியங்க சின்ன எசமானுக்கு?

வே : அவன் கிடக்கிறுண்டா மடையன். உன்மகளுக் கெங்கடா அறிவு போச்சு; உன் மக சம்மதிச்சாளாமே அதுக்குச் சொல்லு. எங்கிருந்து வந்தது அந்த நெஞ்சழுத்தம். எங்க வீட்டு சோறுடா எங்க வீட்டு சோறு. தின்று கொழுத்துப் போயி என் மகனை வேற கையைப் பிடிச்சு இழுக்க வந்துட்டா.

முரு : எசமான் வார்த்தையை அளந்து பேசுங்க. நாங்க தலைமுறை தலைமுறையா வாழ்ந்த மானமே போகுது. இப்பவே போறேன். ஒரே வெட்டா வெட்டிப் போட்டுட்டு வர்றேன்.

வே : யாரைடா?

முரு : என் குலத்தைக் கெடுக்க வந்த குட்டிச் சாத்தானை!

## காட்சி 38

இடம்: நந்தவனம்.

இருப்போர்: அமிர்தம், மூர்த்தி,

அமிர்தம்: குடும்பத்தை கெடுத்தவளென்று சொல்லுவாங்களே.

மூர்த்தி: உண்மையை கூற முடியாத ஊமைகள்.

அமிர்தம்: தந்தைக்கும் தநயனுக்கும் சண்டை மூட்டினவளென்று தூற்றுவார்களே.........

மூர்த்தி: இதய ஜோதியைக் காணாத குருடர்கள்,

அமிர்தம்: தகப்பனையும் மகனையும் வேறுபடுத்தினவள் என்று ஏசுவார்களே!

மூர்த்தி: காதல் கீதம் கேட்டறியாத செவிடர்கள்.

அமிர்தம்: என்னதான் காதலென்றாலும் கட்டுப்பாட்டையும் காவலையும் மீறலாம்ன்னு கேப்பாங்களே.........

மூர்த்தி: அமிர்தம்! சொல்வேறு, செயல் வேறாக உள்ள சோம்பேறிகளிடம் உலகம் சிக்கிச் சீரழிகிறது. நாம் அந்த கொடிய சிறையிலிருந்து வெளியேறுகிறோம் சிரித்துக்கொண்டு. அமிர்தம் நான் இன்றே சென்னை போகிறேன்; அங்கு என் நண்பர்களின் உதவியைப் பெற்று உடனே கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்கிறேன். அதுவரையும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

அமிர்தம்: என் பொருட்டு உங்களுக்கு இவ்வளவு கஷ்டம்?

மூர்த்தி: ரோஜாவைப் பறிக்கும்போது கூடத்தான் முள் தைக்கிறது கையிலே. இதெல்லாம் ஒரு கஷ்டமா?

# காட்சி 39

இடம்: அமிர்தம் வீடு.

இருப்போர்: முருகேசன், முத்தாயி, நண்பர்.

[அமிர்தம் வீட்டுக்கு வருகிருள். அப்போது அவள் தகப்பனுர் கோபத்துடன் நண்பர்களிடம் பேசிக் கொண்டிருக்கிருர்]

முரு: ஜாதி குலம் பார்க்காமே இப்படிப் போற பெண்ணுய் களை வெட்டி வெட்டி வீச வேண்டாமா?

நண்பன்: இந்தாப்பா முருகேசா! வெள்ளரிக்காயா வெட்டி வெட்டி வீசறதுக்கு?

முரு: பின்னே என்னுங்க மனுசனுக்கு மானந்தானங்களே பெரிசு. அதைப் போக்க எப்போ இந்தப் பொண்ணு துணிஞ்சு டிச்சோ அப்புரம் எதுக்குங்க இருக்குது இந்த மீசை.

முத்தாயி: என்னுங்க வந்த மனுஷன் கையைகூட நனைக் காமே, சும்மா வள, வளன்னு பேசிக்கிட்டே இருக்கிருயே!

முரு: போடி உள்ளே, இந்த விஷயத்தில் நீ தலையிடாதே. இரண்டிலே ஒண்ணு தீத்துக்குட்ட பிறகுதாண்டி இந்த வீட்டிலே கையை நனைப்பேன்.

நண்பன்: இந்தாப்பா முருகேசா வா வெளியிலே போயி சாவதானமா பேசலாம். நான் சொல்லறபடி கேளு, விடியரதுக் குள்ள பொண்ணைக் கூட்டிக்கிட்டு புதுப்பாளையத்துக்கு போயிடு அங்க நம்ப ஜாதியாளு பார்த்து ஒருத்தனைக் கட்டிப்போட்டுட்டா தன்னுலே அடங்கிடும் அமிர்தம்.

முரு: இதுவும் நல்ல யோசனை தானுங்க; நீங்க சொல்ற படியே வெடியிரதுக்குள்ளே பொண்ணை கூட்டிக்கிட்டு புதுப் பாளயத்துக்குப் போயிடுறேன்.

நண்பன்: அப்படித்தான் செய். நான் வரட்டுமா. கோவத் திலே ஏதாச்சும் அது இதுன்னு செய்துடப்போற.

முரு: ஹும் பெத்த பொண்ணு சீரில்லாததினுலே இந்த மாதிரி எல்லாம் வந்திருக்கு.

[முருகேசன் பற்றவைத்த சுருட்டை வீசி எறிகிருன். வீடு தீப்பற்றி எரிகிறது.]

## காட்சி 40

இடம்: மதராஸ் நண்பர்களின் அறையில் மூர்த்தி.

இருப்போர்: மூர்த்தி, மற்றும் அவர் நண்பர்கள்.

*1-வது நண்பன்:* மூர்த்தி, ஜாதிவிட்டு ஜாதி கல்யாணம் பண்ணிக்கனும் பாதரை (Father) வேறே கோவிச்சிக்கிட்டு வந்திருக்கிற இதெல்லாம் என்கிரேஜ் (Encourage) பண்ண முடியாது.

*நண்பன் 2:* மூர்த்தி, என்னமோ விபரீத காரியம் செய்யுறே. முடியாதுன்னு முடியாதுதான்.

*நண்பன் 3:* என்னைத் தொந்தரவு படுத்தாதே மூர்த்தி, இல்லேன்னு இல்லேதான்.

இல்லே. இல்லே. இல்லே. இல்லே.

[இல்லேயென்ற பதிலுடன் திரும்பிய மூர்த்தி அவன் கழுத்திலிருக்கும் பொன் ஜெயின் ஞாபகத்திற்கு வரவே அதை மார்வாடிக் கடையில் விற்று ரூபாய் 30 பெற்றுக்கொண்டு எங்கேயாவது அமிர்தத்துடன் காதல் வாழ்க்கை நடத்தலாம் என்ற எண்ணத்துடன் சொந்த ஊருக்குத் திரும்புகிறன்.]

*மூர்த்தி:* ஐயா! இங்கிருந்த முருகேச நாயக்கர் வீடு என்னவாயிற்று?

*ஒருவன்:* அதெல்லாம் எரிஞ்சி சாம்பலா போயிடுச்சிங்க?

*மூர்த்தி:* அவர் மகள் அமிர்தம்?

*ஒருவர்:* அந்த அம்மாளும் எரிஞ்சி சாம்பலா போயிட்டாங்க.

## காட்சி 41

இடம் : ஹரிஹரதாஸ் ஆஸ்ரமம்.

இருப்போர் : மூர்த்தி, ஹரிஹரதாஸ், சுந்தரகோஷ்.

[அமிர்தத்தின் முடிவை யறிந்த மூர்த்திக்கு ஆவி துடிப்பை அடக்க முடியாதவனுய் சாந்தி வேண்டி ஒரு ஆஸ்ரமத்தில் சேர்கிருன். அந்த ஆஸ்ரமத்துக் குரு ஹரிஹரதாஸ்.]

ஹரிஹரதாஸ் : குழந்தாய்! வா, என் அருகில்.

மூர்த்தி : சுவாமி நமஸ்கரிக்கிறேன்.

ஹரிகர : ஓ தொடாதே யப்பா! தொடாதே!! பாழும் பணத்தைத் தொட்டுத் தொட்டு பாபக்கரை ஏறியுள்ள உன் கரங்களால் பரமனின் கோயில் படிக்கட்டுகளில் ஏறி இறங்கும் இப்புனித பாதங்களை தொடாதே குழந்தாய்! ஆஸ்ரமத்தின் விதிகளை அறிவாயா?

மூர்த்தி : அறிவிக்கப்பட்டேன் தேவா!

ஹரிகர : உன் சொத்துக்கள் யாவும் ஆஸ்ரமத்துக்கு சேர வேண்டுமென்று பத்திரத்தில் கையெப்பமிட சித்தமா?

மூர்த்தி : உத்தரவை எதிர்பார்க்கின்றேன் தேவா!

ஹரிகர : அழைத்துப் போய் அனுமதி சடங்குகளைச் செய்யுங்கள். சுந்தரகோஷ், இனி நாம் செல்வோமா மந்திராலோசனை சபைக்கு?

சுந்தரகோஷ் : உம்.

## காட்சி 42

இடம் : வேதாசல முதலியார் வீடு.

இருப்போர் : பரமானந்தன், மணி, வேதாசல முதலியார், சரசா.

பர : கேட்டாயா மணி? குடியன், வெறியன், கூத்திக் கள்ளனென்று ஊரார் பேசிக்கிறதைக் கேட்டு மானம் போகுதாம் மாமாவுக்கு

மணி: நல்ல மாமனுருண்ணு கோவம்மில்லே வந்திருக்கணும்?

வே: கோவம் வராமலா இருக்கு.

மணி: எங்கேய்யா வந்தது கோபம்? இல்ல—தெரியாமத் தான் கேக்கிறேன். எங்க வந்தது கோவம்? கோவம் வந்திருந்தா அப்பவே கன்னத்திலே இரண்டு அறை கொடுத்து கேட்டிருக்க மாட்டேளா?

வே: இவ்வளவு பெரிய பிள்ளையை நான் அடிச்சித் திருத்தணுமா?

மணி: என்னது, பரமுவையா அடிக்கச் சொன்னேன்? ஆளப்பாரு! குடியன், வெறியன் அப்படி இப்படிண்ணு திட்றுனே அவனையல்ல கன்னத்திலே ஒரு அறை கொடுத்து கேட்டிருக்கணும் ஏண்டாப்பா, டேய் ஊரிலே உலகத்திலே நடக்காதது என்னடா நடந்து போச்சுது புதுசா. குடிக்கிறுன், குடிக்கிறுன்னு சொல்றுயே. யார் வீட்டுக் காசு, உம். அறைஞ்சன்னு.

வே: டேய்........டேய்.........யாரைடா.........?

மணி: ஹாம்...உ ங் க ளை ய ல் ல . அந்த மாதிரி நீங்க கேட்டிருந்தீங்கன்னு சரியான மாமனுருதான்.........

பர: அப்படிக்கேள் மணி, அந்த மரமண்டையில் ஏர்ற வரைக்கும் கேள்!

வே: உங்க ஞாயம் இருக்கே...! நான் ஒரு மடையன்.

மணி: இப்ப சொன்னீங்களே அது சரியான........... வார்த்தை!

பர: மணி, அங்கேன்னப்பா பேச்சு. நான் குடிக்காரன், சூதாடி, கூத்திக்கள்ளன் இவ்வளவுதானே. இதைப் பற்றி இந்த ஆசாமி இன்னும் பேசினு நான் கொலைகாரனுக வேண்டியதுதான்! தீர்மானமாய் சொல்லிப்புடு அதை.

வே: அடபாவி! இவ்வளவு தூரத்துக்கு வந்துட்டதா? குடியைக் கெடுத்து, சொத்தை பாழாக்கி, என் மானத்தையும் வாங்கிட்டே. இனிமே அது ஒன்றுதானே பாக்கி? அதையும் நடத்திடு...? நாயைக் குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்தா......

மணி: அது லொள் லொள்ன்னு கொலைக்கும்.

வே: அப்பா பரமு, உனக்கு கோடி நமஸ்காரம். நீ என் வீட்டில் குடித்தனம் பண்ணது போதும். உன் பெண்டாட்டியை அழைச்சிக்கிட்டு போயிடப்பா, வீட்டைவிட்டு. உன் முகத்திலே விழிக்க இஷ்டமில்லே.

பர: எனக்கும் அதே தீர்மானம் தான்!

மணி: அப்போ புறப்படு.

பர: இரு மணி, என் பெண்டாட்டியை இவன் விட்டிலே விட்டிட்டுப் போறதுக்கு நான் என்ன அவ்வளவு மானங் கெட்டவனா? ஏய் சரசா என்னடி இளிக்கிறே! பார்த்தியா மணி பத்தினி ஆக்ட் (Act) தத்ரூபமாய் இல்லே. இந்தாடி சரசா உன் நகையெல்லாம் கழட்டி உங்கப்பன் முகறையிலே எறிஞ்சிட்டு என் பின்னாலே புறப்படு.

*சரசா:* எங்கே?

பர: வா என் பின்னாலே. அப்புறம் தெரியும்,

*சரசா:* அப்பா! என்ன இது! என்னை எங்கே போகச் சொல்கிறீங்க?

வே: போம்மா உன் புருஷனோடு! ஒருவேளை புருஷன் பெண்டாட்டித் தனிக் குடித்தனம் பண்ணினா புத்தி வருமின்னு சொல்லுவாங்க.

*சரசா:* அப்பா என்னை இப்படி நிற்கதியாய் விடலாமா?

வே: நான் என்னம்மா செய்றது? எல்லாம் விதிப்படி நடக்கட்டும். என்னால் ஆனவரைக்கும் சொல்லிப் பார்த்தேன். துளிக்கூட கேக்கிறானா என் பேச்சை? ஒரே மகன் ஒரு சொல் தாங்காமல் வீட்டையே விட்டுப் போயிட்டான்.

மணி: அடாடா! என்ன கருணை மகன் மேலே; இவரு தாம்பா அந்த காலத்திலே தசரத ராசாவாக இருந்தாரு.

வே: அடா, சும்மா இர்ரா அனுமாரே. அம்மா இனிமேல் இவன் இந்த வீட்டிலே இருந்தா நான் தூக்குப் போட்டுக் கொண்டுதான் சாகணும்.

பர: பார்த்தியா மணி. மகா கனம் பொருந்திய மாமனார் அவர்கள் மரக்கிளையில் தொங்கப் போகிறார்களாம்!

மணி: மங்களகரமான ஆரம்ப தேதியை எதிர்பாருங்கள்!

வே: டேய், இனிமே, ஏதாவது பேசினீங்க உதைதான் விழும். வீட்டை விட்டுப் போங்கடா கழுதைகளா.

பர: மணி......பயித்தியம்......கழுதையாம்.

மணி: யாரையா கழுதை? (வேதாசலத்தை அடிக்கிருன்)

வே: டேய்......டேய்......

சரசா: அப்பா......! அப்பா......!!

பர: என்னடி வேஷம் போடறே. மானம் போகுதோ? நடடி வெளியே!

## காட்சி 43

இடம்: ஹரிகரதாஸ் ஆஸ்ரமம்.

இருப்போர்: ஹரிகரதாஸ், சுந்தரகோஷ், மூர்த்தி.

ஹரிகரதாஸ்: இன்று மந்திராலோசனே சபைக்கு வர ஏன் இவ்வளவு தாமதம்?

சுந்தரகோஷ்: உமது சீட கோடிகள் நித்ரா தேவியுடன் விளேயாட இவ்வளவு நேரமாயிற்று. இந்த தொல்லேக்காக வேறே எங்கேயாவது போய்விடலாமென்ருல் கேட்டால் தானே.

ஹரிகர: கரும்புத் தோட்டத்தைவிட்டு காடுமேடு சுற்றுவதா பேதமை. சுந்தரி பேதமை நமக்கு இங்கு என்ன குறை? பரலோக உபதேசம் செய்ய நீ; தர்ப்பணத்துக்கு பக்தர்கள்; சிருங்கார கனிரசம் தர நீ. ஆஸ்ரமம் அமைத்துக் கொள்ளா விட்டால் இந்த ஆனந்தம் ஏதடி, இந்த ஆனந்தம்? கிளியே! மோகனுங்கியே!, துள்ளும் மதவேள் கணேயாலே, தொல்லே மிக அடைந்தேன் பகலாலே. வா, நாம் இன்ப மாளிகைக்குச் செல்வோம்.

[இக்காட்சியை மூர்த்தி கண்டுவிடுகிருன்.]

மூர்த்தி: ஹ......! கபட வேஷதாரியே, காமுகா, பகலிலே யோகியாகவும், பாதி ராத்திரியிலே போகியாகவும் காட்சி யளிக்கும் பேடிப்பயலே! ஆசிரமமா இது? மோட்ச சாம் ராஜ்யத்திற்கு பயிற்சி கூடமா? பரமனின் பாதார விந்தைக்கு

பார்தை காட்டும் சன்மார்க்க ஸ்தாபனமா? அடே ஊரை ஏய்க்கும் உன்மத்தா! உனக்கு கையிலே ஜெபமாலை, வெள்ளியிலே யோகத்தண்டு, புலித்தோல் ஆசனம், பொற்பாதக்குறடு, நாட்டின் நன்மதிப்பை கெடுக்கும் நயவஞ்சகப் பதறே! ஏன் நடுங்குகிருய்? கொலைக்குத் துணிந்த துஷ்டனு நீ? பஞ்சமா பாதகத்தை பயமின்றி செய்யத்தானிந்த பண்டார வேஷமா? பாவி பகல் வேஷக்காரா! பாமரரை ஏய்த்துப் பிழைக்கும் பரம சண்டாளா!! நீ இருந்தால் என்ன? இறந்தால் என்ன?

[மூர்த்தி ஹரிஹரதாசை கொலை செய்து விடுகிருன்.]

சுந்தர: கொலை......! கொலை......!! கொலை......!!!

[மூர்த்தி பிடிபடுகிருன்.]

## காட்சி 44

இடம்: பழக்கடை.

இருப்போர்: டிரைவர், அமிர்தம், பழக்கடைக்காரர்.

[எரியும் வீட்டிலிருந்து தப்பி வந்த அமிர்தம். ஒரு லாரியில் யாவருக்கும் தெரியாமல் ஏறிக் கொண்டு வரும்போது லாரி டிரைவர் பார்த்து விடுகிருன்.]

டிரைவர்: ஏய், யாரடி? திருட்டுக் கழுதை! இறங்கடி கழுதை.

அமிர்தம்: ஐயா நான் ஒரு அனுதை. எங்க வீடு எரிஞ்சி என் தாய், தகப்பனுர் எரிஞ்சி போயிட்டாங்க.

பழக் கடைக்காரர்: (ஐயோ பாவம்!) ஏம்மா எங்க கடைப் பழங்களை எடுத்துக்கிட்டு போய் தெருவிலே வித்துக்கிட்டு வர்றியா? ஏதாவது சம்பளம் போட்டு தர்ரேன்.

அமிர்தம்: ஆகட்டும் ஐயா.........

## காட்சி 45

இடம்: குடிசை.

இருப்போர்: சரசா, பரமானந்தன், மணி.

[பரமானந்தனும், சரசாவும், மணியும் ஒரு குடிசைக்குச் செல்கின்றனர்.]

பர: சரசா இனிமே இதுதான் நம்ப வீடு. பங்களா இல்லே, மாடி இல்லே, வராண்டா இல்லே, தோட்டமில்லே.

மணி: அட தோட்டமிருக்கப்பா. அதிலே புஷ்பச் செடிகள் கிடையாது. பாம்பு புற்று இருக்கும்.

பர: சரசா, இந்த தோண்டியில் ஒண்ணு எடுத்துக்க. ஹும் இந்த கொளத்திலிருந்து மட மடவென்று தண்ணீர் இறைச்சி கொட்டு.

மணி: பரமானந்தா ஹும்.

பர: இந்தா இந்த பூட்சை கண்ணுடிபோல பாலீஷ் பண்ணு. வேலே எல்லாம் முடிந்த பிறகு இதை சாப்பிடு. நடக்கட்டும் நான் சொன்ன வேலேகள். (சரசா போகிருள்)

பர: மணி, தகப்பன் செய்த குற்றத்திற்கு இவள்...

மணி: தந்தை செய்த தவறுக்காக இவளே ஏன் வதைக்க வேண்டும் என்கிருய். ஆனந்தா நமது திட்டத்தை மறந்து விட்டாயா. தடுமாற்றம் ஏற்பட்டால் மரக்கிளேயில் தொங்கிய உன் தந்தையை நினே.

(சரசா மண் பானேயைத் தவறிக் கீழே போட்டு விடுகிருள்.)

பர: இதே குற்றத்தை அமிர்தம் செய்திருந்தால்......

மணி: சாக்ஷாத் பத்ரகாளியாகிவிடுவாள் உன் தர்மபத்தினி சரசா தேவி.

பர: சரசா, இந்தா மார்க்கட்டுக்குப்போய் சமையலுக்கு வேண்டிய காய்கறிகளே வாங்கி வா.

சரசா: நானு.........?

பர: ஏன், உன் தாதியை அனுப்புகிருயோ? நீ அன்னக்காவடி ஆனந்தனின் மனேவி. அல்லி ராணியல்ல.

மணி: உனக்கு வேலை கிடைக்கும்வரை உன் மனைவி பக்கத்து மார்க்கட்டில் காய் கறிகள் விற்று வரவேண்டும்.

சரசா: என்னை ஏன் இவ்விதம் சித்ரவதை செய்கிறீர்கள்; என்னை இக்கிணற்றிலே பிடித்து தள்ளிவிடுங்களேன்.

மணி: ஆனந்தா—இந்தா.

பர: என்ன அது?

மணி: காய்கறி.

பர: சரசாவை நோக்கி இந்தா தூக்கு கூடையை. ஹூம்! நட!

(சரசா காய்கறிக் கூடையைத் தூக்கிக்கொண்டு செல்கிறாள்.)

## காட்சி 46

**இடம்: வீதி**

**இருப்போர்:** அமிர்தம், பாலு முதலியார், தண்ட.

[அமிர்தம் பழக் கடையிலிருந்து ஒரு கூடையில் பழம் எடுத்துக்கொண்டு வீதி வழியே வருகிறாள்]

அமிர்: பழம்.........மாம்பழம்.........மாம்பழம்.

தண்ட: எஜமான், போதும் தெரிசனம்; வாங்க போகலாம்.

பாலு: போதுமா! தண்டச்சோறு. (பாட்டு) ஆற்றுவார் இல்லையே, இந்தக் கட்டையைத் தேற்றுவார் இல்லையே.

தண்ட: அட கர்மமே, நல்ல உத்தியோகம் நமக்கு கிடைத்தது. எஜமான் போதும் வாங்க போகலாம்.

பாலு: போவோமா? போகிறேன், போகிறேன் இதோ போதுமா?

தண்ட: போதும், வாங்க.

அமிர்: பழம் மாம்பழம்......

தண்ட: எஜமான் கொஞ்சம் இருங்க. ஏய் மாம்பழம்!

அமிர்: ஏய்யா, பழம் வேணுமா? எடுத்துக்குங்க; நாரு இருக்காது; நல்லா யிருக்கும்.

தண்ட: நாட்டுச் சரக்குதான், நல்லாதான் இருக்கும்; பார்க்கும்போதே தெரியுதே!

பாலு: தண்டச் சோறு, அங்கே என்ன பேச்சு? அடே இவதான். (பாட்டு) கண்டு கொண்டேனே, என் மகளை கண்டு கொண்டேனே! வா கண்ணு வீட்டுக்கு.

அமிர்: என்னய்யா அக்கிரமம்!

பாலு: அதை உன் வாயால் சொல்லாதேம்மா; வாம்மா வீட்டுக்கு. டேய் தூக்குடா கூடையை.

[அமிர்தத்தைப் பாலு முதலியார் அழைத்துச் செல்கிறார்.]

## காட்சி 47

இடம்: ஆஸ்பத்திரி.

இருப்போர்: அமிர்தம், பாலு, டாக்டர்.

[ஆஸ்பத்திரியில் பாலு முதலியாரும் அமிர்தமும்.]

பாலு: டாக்டர்! நான் இந்த ஊருக்கு புதுசு. என்னை பர்மா பாலு முதலி என்று சொல்வார்கள். பர்மாவிலிருந்து கஷ்டப்பட்டு மணிப்பூர் வழியாக இங்கு வந்து சேர்ந்தேன். வர வழியிலே என் மகள் சுகிர்தம் காணாமல் போயிட்டா டாக்டர். திடீர்னு அகப்பட்டுட்டா டாக்டர். அவள் இருக்கிற கோலத்தை பாருங்கள் டாக்டர்; நல்லா பாருங்கள் டாக்டர். (டாக்டர் கையைப் பிடித்துப் பார்க்கிறார்.)

பாலு: என்னையா கையைப் பிடிச்சு பார்க்கிறே, ஓய் என் மகள் சுகிர்தம் கொஞ்ச நாளா என்னைப் பார்க்காததினாலே புத்தி கொஞ்சம் மாறிப் போச்சு அவ்வளவுதான்.

அமிர்: டாக்டர் எனக்கு புத்தியும் மாறல்ல, மறதியுமல்ல. தெரு வழியா போய்கிட்டு இருந்தேன்; என்னை கூப்பிட்டுக் கிட்டு வந்து என் மகளென்று சொல்றாரு.

பாலு : பின்னே என்னவாம்ன்னே.

அமிர் : டாக்டர் அவருக்குத்தான் ஏதாவது பைத்தியமா இருக்கும்.

பாலு : உம், கிடையாது.

அமிர் : ஐயா என்னை தயவு செய்து வெளியே அனுப்பி விட்டால் போதும்.

பாலு : பார்த்தீங்களா. வெளியே போகணும், வெளியே போகணும். சதா இதே பொலம்பல்தான் டாக்டர். இதனால் ஆயிரம் வந்தாலும் சரி போனாலும் சரி, என் மகள் பைத்தியத்தை.

டாக் : தீர்த்துடுறேன்.

பாலு : தீத்துடுங்கோ.

டாக் : இதென்னடா வம்பா யிருக்கு. பெண்ணுக்கு பைத்தியம்னு அவர் சொல்றுரு. அவருக்கு பைத்தியமென்று அவர் பொண்ணு சொல்லுது உம்.

தண்ட : டாக்டர் அப்ப உங்களுக்குத்தான் பைத்தியம்.

டாக் : என்ன, எனக்கா ?

தண்ட : பின்னே என்னங்க ? நீங்க டாக்டரா இருந்துக் கிட்டே இவங்க ரெண்டு பேரிலே யாருக்குதான் பைத்தியம் என்று உங்களுக்கே தெரியலை தென்கிறீங்க......

டாக் : சீ பைத்தியம். வாயை மூடு.

தண்ட : என்னங்க பைத்தியமா ! அப்ப இங்க இருக்கிற நாலு பேருக்கும் பைத்தியம்.

பாலு : பைத்தியம் போடா உள்ளே. டாக்டர் என் மகள் பைத்தியத்தை எப்படியாவது தீர்த்துப்பிடுங்க. ஆயிரம் போனாலும் சரி ; ஆயிரம் வந்தாலும் சரி ; அதை தீர்த்துப்பிடுங்க.

டாக் : முதலியார்வாள் உங்க மக பைத்தியத்தை தீர்த்துப் பிடுகிறேன் ; நீங்க கொஞ்சம் உள்ளே போய் இருங்க.

பாலு : அதுக்கு வேறே ஆளைப் பாருமய்யா.

டாக் : முதலியார்வாள் நீங்க உள்ளே போய் இருங்க. நான் கூப்பிடுகிறேன்.

பாலு: கூப்பிடுவீங்கல்ல சரி. ஹலோ டாக்டர்! (திரும்பி வருகிறார்.)

டாக்: நீங்க ஒன்றும் கவலைப் படாதீங்க, உங்க மகளை நான் கவனிச்சிக்கிறேன்.

பாலு: ஆமா, கவனிச்சிக்கிறீங்களா? நல்லா கவனிச்சிக்கிருங்க.

டாக்: அம்மா நீ ஒரு உத்தமமான பெண். உன்மத்தம் பிடித்த அவர் கண்ணுக்கு, அவர் மகள்போல் தோன்றுகிறாய் நீ.

அமிர்: டாக்டர்! எனக்கிருந்த பெரிய பயம் தீர்ந்துபோச்சு. எங்கே நீங்களும் என்னைப் பைத்தியம் என்று நினைச்சிக்கிடுவீங்களோ என்று பயந்தேன்.

டாக்: இல்ல. பாலு முதலியாருக்குத்தான் பைத்தியம். உன்னாலே பைத்தியத்தை தெளிய வைக்கலாம்.

அமிர்: அவர் பைத்தியத்தை நான் தெளியவைக்க முடியுமா?

டாக்: முடியும் ஆனால், அதிலே ஒரு ஆபத்தும் இருக்கு.

அமிர்: அவர் பைத்தியத்தை தெளிய வைக்க எனக்கு ஆசை தான், ஆபத்து என்று என்னென்னமோ சொல்றீங்களே!

டாக்: உன்னாலே அவர் பைத்தியம் நீங்கும். நீங்கின உடனே, நீ அவர் மகளல்ல என்பதை அறிஞ்சுக்கிடுவார். மறுபடியும் நீ ஏழையாக வேண்டும் என்ன சொல்கிறே?

அமிர்: சொல்கிறது என்ன! அவரைப் பார்த்தாலே பரிதாபமாக இருக்கிறது; அவர் பைத்தியத்தை தெளிய வைக்க முயற்சி செய்கிறேன் டாக்டர்.

டாக்: அம்மா நான் நினைத்த மாதிரி, நீ உண்மையில் ஒரு உத்தமி. கவனி, நீ அவர் மகள் பைத்தியம்போல் நடிக்கணும். நான் உனக்கு கொடுக்கிற மருந்தெல்லாம் அவர் சாப்பிட்டாத் தான் நான் சாப்பிடுவேன் என்று அவரையும் சாப்பிடச் செய்ய வேண்டும் என்ன சொல்கிறாய்?

அமிர்: ஆகட்டும் டாக்டர்.

டாக்: மிஸ்டர் முதலியார்வாள்.

பாலு: என்னடா டாக்டர்........என்னையா கூப்பிட்டுவிட்டு பேசாமே இருக்கிறீங்களே?

டாக்: முதலியார்வாள் உங்க மகள் பைத்தியத்தை நான் தீர்த்துவிடுகிறேன்.

பாலு: ஆமா தீர்த்துப்பிடுங்க.

டாக்: ஆனல் ஒன்று உங்க மக மனசிலே கவலேயோ, வருத்தமோ ஏற்படக்கூடாது.

பாலு: ஏற்படாது.

டாக்: அப்படி ஏதாவது ஏற்பட்டதோ, அப்புறம் பைத்தியம் முத்திடும்.

பாலு: டாக்டர் பைத்தியம் முத்த வேண்டாம்.

டாக்: அப்போ, உங்க மகள் சொல்கிறபடி நடக்க வேண்டும்.

பாலு: என்னங்க டாக்டர்; குழந்தை ஆடச் சொன்ஞ ஆடுறேன்; பாடச் சொன்ஞ பாடியே தீர்த்து விடுகிறேன்.

[பாலு முதலியார் பைத்தியம் தெளிகிறது]

பாலு: டேய், இங்கே வாடா எல்லாம் தெளிஞ்சு போச்சுடா, எங்கேடா என் மகள் சுகிர்தம் ?

அமிர்: இங்கேதான் இருக்கேனப்பா !

பாலு: அட விளேயாட்டு இருக்கட்டும் அம்மா. என் மகள் சுகிர்தம் எங்கே என்று கேட்கிறேன்.

அமிர்: ஐயா ! விபரமாகச் சொல்கிறேன் கேளுங்க. நீங்க ஒரு நாள் சிங்கப்பூர் வழியாக வரும்போது உங்க மகள் சுகிர்தம் வழியிலே, செத்துப் போச்சுதுங்களே.

பாலு: ஆமா ஞாபகம் இருக்கிறது.

அமிர்: அதிலிருந்து நீங்க கொஞ்சம் பைத்தியமாய் இருந்தீங்க.

பாலு: அதுவும் ஞாபகமிருக்கிறது. உட்காரம்மா !

அமிர்: அப்புறம் ஒருநாள் தெருவோட போய்க் கொண்டிருந்த என்னே இழுத்துக்கொண்டுவந்து நீ தான் என் மகளென்று பிடிவாதம் செய்தீங்க; நானும் டாக்டருமாகக் கலந்து பேசி, பைத்தியம் தெளிய வைக்க நான் உங்க மகள் போல நடிச்சேன்.

பாலு: அம்மா உன்னேப் போலுள்ள குணவதியை நான் இதுவரையிலும் பார்த்ததேயில்லே. என் மகள் சுகிர்தம் இறந்து போய்விட்டாள்; இனிமே நீ தான் என் மகள் சுகிர்தம்.

## காட்சி 48

இடம்: பரமானந்தன் வீடு.

இருப்போர்: பரமானந்தன், மணி.

[மணியும் பரமானந்தனும் சம்பாஷிக்கின்றனர்]

பர: மதுராபுரி ஆச்சிரமத்துக்கு போகணுமென்று சொன்னுயே. போய் வந்தாச்சா?

மணி: ஓ போய் வந்தாச்சே. நம்ம பாக்கியத்தின் அப்பா யில்லே, அங்கே ஒரு காரியமாய் போயிருந்தேன்.

பர: என்ன விசேஷம்?

மணி: அது நம்ம சொந்த விஷயம்; அதை நீ கேட்காதே.

பர: சரி, போன காரியம் முடிந்ததா?

மணி: போய் வந்துட்டேன்; அதோட அங்கே ஒரு விஷயத்தையும் கவனிச்சேன். அங்கே நம்ம பழைய சிநேகிதி ஒருத்தி சுந்தரி என்று பெயர். அவள் வேதாசலத்தின் கொடுமை தாங்க முடியாமே ஊரைவிட்டு போய் விட்டாள். இப்போ அங்கே, சுந்தரகோஷாக இருக்கிருள். அவளுடைய ஸ்டையிலும், வாழ்க்கையும் அடடடா...

பர: மணி, நானும் சும்மா இருக்கவில்லை.

மணி: என்ன செய்தே?

பர: மெட்ருசுக்குப் போயிருந்தேன். அங்கே நம்ம வேலைக்காரி அமிர்தம் இல்லே.........

மணி: இல்லையா?...இருக்கா.

பர: அங்கே அவள் பணக்காரியா இருக்காள்.

மணி: எப்படி.........

பர: பரமா பாலு முதலியார் என்று ஒரு பைத்தியம் வீதியிலே போய்க் கொண்டிருந்தவனைப் பிடித்துக்கொண்டு நீ என் மகளென்று வைத்துக் கொண்டிருக்கிருர்.

மணி: பாரு அதிர்ஷ்டத்தை.

[இச்சமயம் பத்திரிகை விற்கும் பையன்]

பேப்பர் விற்பவன்: பேப்பே, பேப்பர். ஹரிஹரதாஸ் கொலை வழக்கு பேப்பர்.

மணி: டேய் பேப்பே, இங்கே வா! ஏண்டா எழுத்தை போட்டு கொலை பண்ணுறே? பேப்பர் என்று சொல்லு. (மணி பத்திரிகைச் செய்தியைப் படிக்கிருன்) ஹரிஹரதாஸ் கொலை! மூர்த்தி கைது. ஆனந்தா பழிவாங்கும் படலத்துக்கு பஸ்டு கிளாஸ் சான்ஸ். பார் நம்முடைய வேலையை.

## காட்சி 49

இடம்: வேதாசலம் வீடு.

இருப்போர்: வேதாசலம் முதலியார், மணி.

[மணி வேதாசலத்தின் வீட்டிற்கு வருகிருன்]

மணி: என்னங்க முதலியார்வாள், நடந்ததை நினைத்து என்னங்க பிரயோஜனம். இனி நடக்க வேண்டியதைப் பாருங்க.

வே: செக்ரட்டரி ஸார், இன்னும் என்ன நடக்கணும்? ஒரே மருமகன். குடிகாரன் என்று ஊரெல்லாம் ஏசுகிருர்கள்; ஒரே மகள் கண்ணைப்போல் வளர்த்தேன்! ஆனுல் இன்று கண் கலங்கி நிற்கிருள். ஒரே மகன் வீடு வேண்டாம், வாசல் வேண்டாம் என்று வெளியே போய் விட்டான். இன்று அவன்மேல் கொலைக் குற்றம்.

மணி: என்னங்க போங்க, நீங்க இவ்வளவு சீக்கிரமா மனசை விடப்படாது. இன்னும் ஆகவேண்டியதிருக்கிறது உங்களாலே எவ்வளவோ காரியம். நீங்க நான் சொன்ன வக்கீலையே ஏற்பாடு செய்யுங்கள்; அப்புறம் பாருங்கள்.

வே: என்னமோ செக்ரட்டரி ஸார்! உங்களைத்தான் மலை போல நம்பிக்கிட்டு இருக்கேன்.

மணி: நம்புங்கள். தாராளமாக நம்புங்க முதலியார்வாள்.

## காட்சி 50

இடம்: நீதி மன்றம்.

இருப்போர்: பப்ளிக் பிராஸிகியூட்டர், சேவகன், சுந்தரகோஷ், வடநாட்டு வக்கீல், ஜட்ஜ்.

[பழைய ஆனந்தனுகிய பரமானந்தன் வடநாட்டு வக்கீலாகவும் மணி அவன் வேலைக்காரனுகவும் மாறுகிருர்கள்.]

மணி: ஆனந்தா நான் சொன்னதையெல்லாம் உண்மையிலே நம்பிவிட்டார் வேதாசல முதலியார். ஆனுல் அவருடைய பரம விரோதியே வடநாட்டு வக்கீலாக வருவது அவருக்குத் தெரியாது. பாவம்! பழி வாங்கும் படலத்தின் கடைசிக் கட்டம்! பஸ்ட்கிளாஸ் சான்ஸ்!! விளம்பரப்படுத்தி பழி வாங்குவதற்கு அருமையான சந்தர்ப்பம். ஆன்ந்தா நினைவிருக்கட்டும். மூர்த்தியின்மேல் சுமத்தப் பட்டிருக்கும் குற்றம் கொலை.

[கோர்ட் விசாரணை]

பப்ளிக் பிராஸிகியூட்டர்: கொலை! பகிரங்கமாகச் செய்யப் பட்ட கொலை!! துணிவோடு சட்டத்தை துட்சமாக மதித்து செய்யப்பட்ட படுகொலை!!! பக்திமான் வேடம் பூண்டு பாதகச் செயல் புரிந்தவன் இதோ இந்த மூர்த்தி. மூர்த்திதான் கொலை செய்தான் என்பதற்கு ருஜு சாக்ஷி இருக்கிறது. கொலை செய்ததை அவனே ஒப்புக்கொண்டிருக்கிருன். அதற்கும் சாக்ஷி இருக்கிறது. கொலை செய்த இடத்திலேயே மூர்த்தியை பிடித்துக் கொண்டார்கள். சாக்ஷி உண்டு இதற்கும்.

சேவகன்: சுந்தரகோஷ், சுந்தரகோஷ், சுந்தரகோஷ்.

பப்ளிக் பிராஸிகியூட்டர்: மூர்த்தி, ஹரிஹரதாசை கொலை செய்யும்போது கொலை கொலை என்று கூவினது நீர்தானே?

சுந்தரகோஷ்: ஆம், நான் தான்.

பப்ளிக் பிராஸிகியூட்டர்: தோட்டத்துப் பக்கம் இருந்து நீர் பயப்படும்படியாக சப்தம் கேட்டது. யாரோ யாரையோ மிரட்டுவது போலே?

சுந்தர: ஆம், அய்யோ ஏனடா இந்த அக்ரமம், பாவி, என்று குருதேவர் கூறினுர்.

பப்ளிக் பிராஸிகியூட்டர்: உடனே தோட்டத்துப் பக்கம் ஓடினீர்?

சுந்தரகோஷ்: ஆம், அப்போது மூர்த்தி குருதேவரின் கழுத்தைப் பிடித்து நெரித்துக் கொண்டிருப்பதைக் கண்டேன்; கொலை, கொலை என்று கூவினேன், ஆஸ்ரம வாசிகள் ஓடிவந்து பிடித்துக்கொண்டார்கள்.

பப்ளிக் பிராஸிகியூட்டர்: யாரை?

சுந்தரகோஷ்: மூர்த்தியை.

பப்ளிக் பிராஸிகியூட்டர்: அப்போது குரு மாண்டுபோய் விட்டார்?

சுந்தரகோஷ்: ஆம். மூர்த்தி அப்போது பக்கத்திலேயே இருந்தான்.

பப்ளிக் பிராஸிகியூட்டர்: குருவின் கழுத்தை மூர்த்தி நெரித்ததை நீர் பார்த்தீர்?

சுந்தரகோஷ்: ஆம், பார்த்தேன்.

பப்ளிக் பிராஸிகியூட்டர்: தேட்சால் மி லார்டு.

வடநாட்டு வக்கீல்: உமது பெயர்?

சுந்தரகோஷ்: சுந்தரகோஷ்.

வடநாட்டு வக்கீல்: ஆஸ்ரமத்தின், பூர்வாசிரமப் பெயர்?

சுந்தரகோஷ்: சுந்தர்......சுந்தரம்.

வடநாட்டு வக்கீல்: சரி, சுந்தரகோஷ், குருதேவர் கொலை செய்யப்படுவதை நீர் பார்த்தீர்?

சுந்தரகோஷ்: ஆம்.

வடநாட்டு வக்கீல்: கொலை செய்து கொண்டிருக்கும்போதே பார்த்தீர்?

சுந்தரகோஷ்: ஆம், பார்த்தேன்.

வடநாட்டு வக்கீல்: ஆனால் அதைத் தடுக்க எந்தவித முயற்சியும் செய்யவில்லை. ஏன்? மூர்த்தி குருதேவரை தாக்குகிறான்; அதை நீர் பார்க்கிறீர், அவன்மீது பாய்ந்து அவனைக் கீழே தள்ளி குருதேவரைக் காப்பாற்ற வேணுமென்று உமக்குத் தோன்றவில்லை, ஏன்? குருதேவர் கொலை செய்யப்படும்போது,

பிரதம சீடர் ஏன் பெண்போல் பதுங்கிக்கொள்ள வேண்டும்? சுந்தரகோஷ் குருவை காப்பாற்ற முயற்சிக்காமல் ஏன் அங்கிருந்து ஓடவேண்டும்? பிரதம சீடரே மீண்டும் கேட்கிறேன். கொலையைக் கண்டு பயந்தீரா? அப்போ நீர் இருந்த நிலையைக் கண்டு பயந்தீரா? (மெம்பர்ஸ் ஆப்தி ஜூரி) பிரதம சீடர் பதில்கூற மறுக்கிறார். பரிதாபமாக இருக்கிறது அவர் நிலையைப் பார்க்க. அந்த நள்ளிரவிலேகூட அவர் நிலை பரிதாபகரமாய்த்தான் இருந்திருக்க வேண்டும். பாதி ராத்திரி வேளையிலே சத்தியத்தின் ஜுவாலை வீசுவதைக் கண்டு பதை பதைத்துத்தான் போயிருப்பார். சுந்தரகோஷ், ஆஸ்ரமத்து ஆட்களை அழைத்து வரத்தானே அலறிக்கொண்டு அவசரமாக உள்ளே ஓடினீர்?

சுந்தரகோஷ்: ஆம்......

வடநாட்டு வக்கீல்: ஆட்கள் ஓடி வந்தார்களா?

சுந்தரகோஷ்: ஆம்.

வடநாட்டு வக்கீல்: நீரும் அவர்களோடு ஓடி வந்தீரா?

சுந்தரகோஷ்: இல்லை, சற்றுப் பொறுத்து வந்தேன்.

வடநாட்டு வக்கீல்: ஆட்களை அழைத்து வரச் சென்ற நீர், ஏன் அவர்களுடன் திரும்பி வரவில்லை? சுந்தரகோஷ், என் கேள்விகளை நன்றாக கவனிக்க வேண்டும். ஆட்களை கூவி அழைத்துவிட்டு, அவர்கள் வரும்போது நீர் அங்கில்லை. கொஞ்ச நேரம் கழித்து வந்தீர். இதுதானே உண்மை?

சுந்தரகோஷ்: ஆம்.

வடநாட்டு வக்கீல்: அந்த கொஞ்சநேரம் எங்கே போய் இருந்தீர்? என்ன செய்து கொண்டிருந்தீர் சொல்லும்? நேரடியான கேள்வி. பிரதம சீடரே ஏன் நெற்றியைச் சுளிக்கிறீர்? சொல்லும் பதில்? அந்த கொஞ்ச நேரம் எங்கே போய் இருந்தீர்? என்ன அவ்வளவு அவசரமான வேலை? கொலை செய்யப்பட்டு கிடக்கிறார் குருதேவர். கொலை செய்தவன் பிடிபட்டான், ஆட்கள் அவனை சூழ்ந்து நிற்கிறார்கள், நீர் மட்டும் இல்லை, நீர் பிரதம சீடர். அந்த கொஞ்ச நேரம் எங்கே சென்றிருந்தீர்? சொல்லும் சுந்தரகோஷ் எங்கே சென்றிருந்தீர் அந்த சமயம்? சொல்லும் பதில்? சொல்ல மாட்டீர். சொல்ல முடியாது. சுந்தரகோஷ் உன் சூது கோர்ட்டாருக்குத் தெரியாது. உன் கள்ளக் காதல் கோர்ட்டாருக்குத் தெரியாது. உன் ஏமாற்று வித்தைகள் கோர்ட்டாருக்குத் தெரியாது. நீ நடித்த நாடகம் கோர்ட்டாருக்குத்

தெரியாது. இவர்கள் காணட்டும். குருவுடன் நீ இருக்கும்போது மூர்த்தி உன்னைக் கண்ட கோலத்தை அவர்களும் காணட்டும். (தலைப்பாகை யவிழ்க்கிறான். சுந்தரகோஷ் பெண்ணாகக் காட்சி யளிக்கிறாள். கோர்ட்டிலே சத்தம்.)

ஜட்ஜ்: சைலன்ஸ், சைலன்ஸ்.

வடநாட்டு வக்கீல்: பாடன் மி மை லார்டு. கோர்ட்டிலே வழக்கத்திற்கும், ஒழுக்கத்திற்கும் விரோதமாக நடந்துகொண்டதற்கு மன்னிக்கக் கோருகிறேன்.

இதோ இந்த பரம பத்தினிதான் பாதி ராத்திரி வேளையிலே வேஷமிட்டு ஊரை ஏய்த்த ஹரிஹரதாஸருடன் குலாவிக் கொண்டிருப்பதைக் கண்டுவிட்டான் மூர்த்தி; குருவும் சீடனும், காமுகனும் கள்ளியும் என்பதைக் கண்டான். அதன் விளைவே இக் கொலை.

ஜட்ஜ்: ஆச்சரியமாக இருக்கிறது. வக்கீல் வேலையுடன் துப்பறியும் வேலையும் செய்திருக்கிறீர்.

வடநாட்டு வக்கீல்: இந்த வழக்கிலே மேலும் பல மர்மங்கள் உள்ளன விளக்குவதற்கு. ஆஸ்ரமத்துக்குச் சென்று அங்கு சில உண்மைகளைக் காண விரும்புகிறோம். கொஞ்சம் அவகாசம் வேண்டுகிறேன்.

ஜட்ஜ்: எஸ்.

வடநாட்டு வக்கீல்: தேங் யூ மை லார்டு.

## காட்சி 51

இடம்: நீதிமன்றம்.

இருப்போர்: வடநாட்டு வக்கீல், பப்ளிக் பிராஸிகியூட்டர், ஜட்ஜ்.

[கோர்ட் விசாரணை பிற்பகுதி.]

வடநாட்டு வக்கீல்: ஆஸ்ரமத்தைக் கண்டோம். கடவுள் அருளுக்கு வழி காட்டப்படும் இடம் என்று பாமரர் நம்பும் அந்த இடம் காமவேள் நடனசாலையாக இருக்கக் கண்டோம். இளித்த வாயர்களுக்கு பகலிலே உபதேசம், இன்பவல்லிகளுக்கு

இரவிலே சரஸமாம். குருடனுக்கு கோல் தேவையாக இருப்பது போல் ஊரை ஏமாற்றி குடி கெடுப்பவனுக்கு வேஷம் தேவைப் படுகிறது. வேஷமணியாத வேதாந்தி! மோடி செய்யாத மாது!! ஜோடி இல்லாத மாடப் புரு!! சேடி இல்லாத ராஜகுமாரி இருக்க முடியாதாம். ஹரிஹரதாஸ் இத்தகைய ஓர் வேஷதாரி! இந்த ஆஸ்ரமத்திலே காதினிலே குண்டலம் ஆட, கனத்த சாரீரம் பாட, காய்ச்சிய பால் தொண்டையில் ஓட, கண்கள் கதியற்று கன்னியரை நாட, கடவுள் அருளுக்கு வழி காட்டப்பட்டதாம். சிரித்திடும் நரி சிவ சொருபத்தில் இருந்தது இந்த ஆஸ்ரமத்தில். ஓம்! சாந்தி என்று உரத்த குரலில் கூவிவந்த இந்தக் குருவைக் காண ஒழுக்கம் கூசிற்று. தருமம் இவன் இருக்கும் திக்கைக் காண மறுத்தது.

பப்ளிக் பிராஸிகியூட்டர்: மை லார்டு, நண்பர் கடிகாரம் இல்லாத இடத்திலே செய்ய வேண்டிய பிரசங்கத்தை, நண்பர் இடத்தை மறந்து இங்கே நடத்துகிறார். ஹரிஹரதாஸ் கொல்லப் பட்டது பற்றியே இப்போது வழக்கு.

வடநாட்டு வக்கீல்: ஆம். கொலை வழக்குதான். ஹரீஹர தாஸ் கொல்லப்பட்டது உண்மை; அவனைக் கொன்றது மூர்த்தி என்பது மறுக்க முடியாத உண்மை. படுமோசக்காரனைக் கொல்வது பரோபகாரம் என்று ஏன் நாம் மதிக்கக் கூடாது? பாம்பைக் கொல்வது பாபமா?

பப்ளிக் பிராஸிகியூட்டர்: தர்ம சாஸ்திர விதிப்படி இங்கே நாம் விசாரணை நடத்த வரவில்லை. சட்டத்தின்படி கொண்டுவரப் பட்ட ஒரு கொலை வழக்கை விசாரணை நடத்துகிறோம்,

வடநாட்டு வக்கீல்: சட்டம் தர்மத்துக்குக் கட்டுப்பட வேண்டாம் என்பது என் நண்பரின் வாதமோ? சட்டம் ஓர் இருட்டறை. அதிலே வக்கீலின் வாதம் ஓர் விளக்கு, ஏழையால் அந்தப் பிரகாசமான விளக்கைப் பெற முடியாது. இதோ கோர்ட்டார் இதை பார்வை யிடும்படி கேட்டுக் கொள்கிறேன். இது ஹரிஹரதாஸின் பிணத்தை பரிசோதித்த டாக்டரின் குறிப்பு. இறந்தவனின் இரு கரங்களிலும் உள்ளங் கையில் குண்டு பாய்ந்த வடுக்கள் இருப்பதாக குறிப்பிட்டிருக்கிறார். மெம்பர்ஸ் ஆப் தி ஜூரி, 15 ஆண்டுகளுக்கு முன்பு பண்டாரக் பக்கிரி என்ற பயங்கரக் கொள்ளைக்காரன் இருந்தான். பெண்களிடம்கூட இரக்கம் காட்டாமல் அடித்துப் பிடுங்கி வாழ்ந்த பேயன் அவன். ஆனால் பலநாள் கள்ளன் ஒரு நாள் அகப்படுவான் என்பது போல், போலீஸாரிடம் கடைசியாக சிக்கிக்கொண்டான். ஜெயிலிலே தள்ளப்பட்ட பண்டாரப் பக்கிரி கம்பிகளை அறுத்து,

அங்கிருந்து தப்பி, சுவர் ஏறிக் குதித்து ஓடினுன். போலீஸாரும் அவனை விடவில்லை. விரட்டினுர்கள். தப்பி விடுவான் என்று தெரியவே சுட்டனர். கைகளினுல் தடுத்தான். இரு கரங்களிலும் குண்டு பாய்ந்தன. ஆனுலும் தப்பிவிட்டான். பிறகு சர்க்காரையும், சட்டத்தையும் மக்களையும் ஏமாற்ற பண்டாரப் பக்கிரி ஹரிஹர தாஸ் ஆனுன். அவனுடைய கள்ளக் காதலி சுந்தரி சுந்தரகோஷ் ஆனுள். ஹரிஹரதாஸ் உபதேசம் செய்யும்போது ஹரியும், ஹரனும் ஒன்று என்பதை விளக்க ஒரு கையிலே திருநீறும், மற்ருெரு கையிலே திருநாமமும் பொறித்துக் கொள்வது வழக்கம். அதை மகா பெரிய தத்துவம் என்று மக்கள் நம்பினுர்கள் ஆனுல் உண்மையில் உள்ளங்கையிலுள்ள வடுக்களை மறைக்கவே, அந்த வேலை செய்தான் அவன். இதோ போலீஸாரின் விளம்பரம் பண்டாரப் பக்கிரியை உயிருடன் பிடித்துத் தருவோருக்கு ரூபாய் பத்தாயிரமும், அவன் பிணத்தையாவது கொண்டு வருவோருக்கு ரூபாய் ஐயாயிரமும் பரிசு தருவதாக வெளிவந்த அறிக்கை. இதன்படி மூர்த்தி ஆஸ்ரமத்திலே சேர்ந்து உண்மையைக் கண்டு பிடித்து ஹரிஹரதாஸ் என்ற பண்டாரப் பக்கிரியைப் பிடிக்கப் போகும்போது அவன் முரட்டுத் தனமாக நடந்து கொண்டு மூர்த்தியைக் கொல்ல முயற்சித்தான். தற்பாதுகாப்புக்காக மூர்த்தி அவனைக் கொல்ல நேர்ந்தது. ஆகவே மூர்த்தி சர்க்காரிடமிருந்து பரிசுத்தொகை பெறவேண்டியவன், குற்றவாளி அல்ல.

ஜட்ஜ்: வாட்டீஸ் தி பொசிஷன் ஆப் தி பிராசிக்யூஷன் ?

ப. பி: ஐ வித்ரோ தி கேஸ் மை லார்ட்.

ஜட்ஜ்: ஐ அக்யூட்டட் தி கேஸ்.

பப்ளிக் பிராஸிகியூட்டர் வழக்கை வாபஸ் வாங்குகிருர்.

ஜட்ஜ் அனுமதிக்கிருர்.

## காட்சி 52

இடம்: வடநாட்டு வக்கீல் வீடு.

இருப்போர்: மூர்த்தி, வக்கீல், பாலு, வேதாசல முதலியார்.

[மூர்த்தி தன் நன்றியைத் தெரிவிப்பதற்காக வடநாட்டு வக்கீலை சந்திக்கிருன்]

மூர்த்தி: ஐயா! என்னைத் தூக்கு மேடையிலிருந்து காப்பாற்றினீர்கள். நீங்கள் என் கண்கண்ட தெய்வம். உங்களுக்கு நான் என்ன கைம்மாறு......

வக்: பிரதி உபகாரம் செய்யலாம். தடை எதுவுமின்றி பேசாமல் போய் பர்மா பாலு முதலியாரின் மகளை நீர் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும்......

மூர்த்தி: ஐயா என் கல்யாணத்தைப் பற்றி என் பிரதிக்ஞை

வக்: அதுவும் எனக்கு தெரியும். நீர் சுகிர்தத்தைக் கலியாணம் செய்து கொள்வதால் அமிர்தத்துக்கு எந்த விதத்திலும் துரோகம் செய்தவர் ஆகமாட்டீர். நான் வருகிறேன். கல்யாணத்தில் சந்திப்போம்!

மூர்த்தி: ஐயா......ஐயா......

வே: வக்கீல் சொன்னது சரியான யோசனை. பையன் என்னமோ தயங்குகிருன் போலிருக்கே.

பாலு: இப்போ அப்படித்தான் இருக்கும்; பெண்ணை வந்து பார்க்கட்டும். அப்புறம் எல்லாம் சரியாய் போய்விடும்.

## காட்சி 53

இடம்: பாலு முதலியார் வீடு.

இருப்போர்: வேதாசல முதலியார், பாலு முதலியார், சுகிர்தம்.

வே: குழந்தை பாடுமென்று கேள்விப் பட்டேன்?

பாலு: ஆம். குழந்தைக்கு கொஞ்சம் கல்வி ஞானம் உண்டு.

வே: அதனாலே பரவாயில்லே. பாடச் சொல்லுங்க.

பாலு: கூச்சப்படாதே அம்மா, சும்மா பாடு.

[சுகிர்தம் பாடுகிருள்]

வே: குழந்தைக்கு கல்வி ஞானம் மட்டுமல்ல; உலக் ஞானமும் இருக்கு.

பாலு: சுகிர்தம் புத்தகங்களெல்லாம் நிறைய படிச்சிருக்கு.

சுகிர்: அனுபவப் பள்ளியிலே இரண்டு வருஷம் படிச்சேன் என்று சொல்லுங்க மாமா கிட்டே.

வே: அப்போ சரி. இதோ சோசியரும் இருக்கிருர். நாள் பார்த்து வைத்து விடுவோம்.

தண்ட: என்னங்க நம்ம தோட்டத்துப் பக்கம் காத்தாட வர்றீங்களா?

(யாவரும் எழுந்து போய்விடுகின்றனர், மூர்த்தியும், சுகிர்தமும் தனித்திருக்கின்றனர்.)

வே: ஒரு அதிசயமுங்க! நம்ம வீட்டிலே ஒரு வேலைக்காரி ஒருத்தி இருந்தாள்...என்ன உங்க மகளை ஒரு வேலைக்காரிக்குச் சமமாக சொல்லுகிறேன் என்று வருத்தமா?

பாலு: அப்படி ஒன்று மில்லே.........

வே: இல்லை. இது நிஜந்தான். அமிர்தத்துக்கு ஒரு படா டோப ஆடையும், சுகிர்தத்துக்கு ஒரு பட்டிக்காட்டு ஆடையும் அணிந்திருந்தால் எப்படி இருக்குமோ அப்படி இருந்தாள். ஒரு வேளை பையனுக்கு இஷ்டம் இருந்தாலும் இருக்கும்.

பாலு: சந்தேகம் என்ன அதோ பாருங்க.........

(மூர்த்தியும், சுகிர்தமும் தனித்துப் பேசுவதைச் சுட்டிக் காண்பிக்கிருர்.)

மூர்த்தி: பேதைப் பெண்ணே, வண்டு மனம் கொண்டவன் அல்ல நான். என் உயிரைக் காத்த உத்தமரின் ஆலோசனை புத்திமதி, கட்டுப்பாடே இதற்குக் காரணம்.

சுகிர்: ஓ அப்படியா? உங்கள் உள்ளத்தில் ஒரு அமிர்தம் குடிகொண்டிருந்த இடம்; அங்கே எனக்கும் இடம் அளித்தால் நெருக்கடி தானே ஏற்படும்?

மூர்த்தி: சுகிர்தம், நீ அறியமாட்டாய், என் ஆவி துடிப்பை. அது ஏனோ தெரியவில்லை. அது உன்னைக் கண்டதுமே என் உள்ளத்தில் உனக்குத் தானுகவே இடம் ஏற்பட்டு விட்டது,

சுகிர்தம்: அப்படியானுல் என்னைக் கண்டதுமே அமிர் தத்தின் நினைவு மறந்து விட்டது, அப்படித்தானே!

மூர்த்தி: இல்லை, இல்லை; உன்னைப் பார்க்கும்போதெல்லாம் என் அமிர்தத்தைப் பார்ப்பது போலவே இருக்கிறது.

சுகிர்: எப்படி இருப்பாள் அந்த அமிர்தம்?

மூர்த்தி: சுருக்கமாகச் சொல்கிறேன்; நீ பாலு முதலியாரின் மகளாகி, பட்டுப் பட்டாடை உடுத்தி, படாடோபம் இல்லாமல், பட்டிக்காட்டுப் பார்வையில் ஏழ்மையின் தோழமை கொண்டிருந்தால் எப்படி இருப்பாயோ, அப்படி இருப்பாள் என் அமிர்தம்.

## காட்சி 54

இடம்: வேதாசலம் வீடு.

இருப்போர்: ஆனந்தன், வேதாசல முதலியார், மூர்த்தி, மணி, பாலு, அமிர்தம், சரசா.

[மூர்த்திக்கும், சுகிர்தத்திற்கும் திருமணம் நடக்கிறது. பரமானந்தன் ஆனந்தனாக மாறுகிறான்.]

ஆனந்: மணி, கலியாணம் என்றால் இப்படியல்லவா இருக்கவேண்டும்? ஊரிலே ஆயிரம் நடக்கிறது. என்ன பிரயோஜனம்.

வேதா: ஹும், ஆரம்பமாயிற்றுதுங்க. ஆனந்தனுடைய அர்ச்சனை. என் மனதை புண்படுத்துவதற்காகவே இவன் பூமியிலே பிறந்திருக்கிறான் போலிருக்கு.

ஆனந்: உமது புண் ஆறாமல் இருக்கவேண்டும் என்பது தானே என் ஒரே ஆசை.

பாலு: இந்தாப்பா ஆனந்தா, உன் மாமனார் உனக்கு என்ன கெடுதல் செய்தார். அதை என்கிட்ட சொல், நான் கேட்கிறேன்.

ஆனந்: மாமா! உன்னை மாமா என்று அழைக்க என் வாய் கூசுகிறது.

மூர்த்தி: ஆனந்தா, போதும் அதிகமாய்ப் பேசாதே. உனக்குப் பெண் கொடுத்துவிட்டதாலே நீ செய்கிற அக்கிரமங்களை எல்லாம் பொறுத்துக்கொண்டிருக்க வேண்டும் என்கிற விதி இல்லை. இனி பொறுக்க முடியாது. தெரிகிறதா?

ஆனந் : துள்ளாதே மூர்த்தி. உன் கள்ளக் காதல் கைகூடி விட்ட சந்தோஷத்தில் துள்ளுகிறாய். மூர்த்தி, என்னைப்போல் துன்பத்தைக் கண்டிருந்தால் தெரியும். சீமானின் மகன். சொகுசாக வாழ்ந்தாய் என் சஞ்சலத்தை நீ அறிவாயா? பசி உனக்குத் தெரியுமா? பட்டினி கிடந்தது உண்டா? பகலெல்லாம் வேலை செய்து அலுத்து இரவிலே தூக்கம் பிடிக்காமல் புரண்டதுண்டா? மூர்த்தி நீ புத்தி உள்ளவன். கேள் என் கதையை, கேட்டபின் யோசித்து பதில் சொல். நான் யார்? மேவார் விலாச மைனர் சரசாவின் புருஷன், ஜமீன் வேதாசலத்தின் மருமகன் என்று தானே நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள். மணி, ஊருக்குள்ளே எனக்கு என்ன பெயர்?

மணி : என் சிநேகிதன் என்றால் அதிலே சகலமும் அடக்கம். ஊருக்குள்ளே உனக்கு என்னப்பா பெயர். குடிகாரன், சூதாடி, கூத்திக்கள்ளன்.

ஆனந் : ஆம், குடியன், வெறியன், கூத்திக்கள்ளன், மனைவியை கொடுமை செய்தவன், மாமனாரின் மனதை நோகச் செய்த மகா பாதகன் ; இவ்வளவும் ஏன் செய்தேன் தெரியுமா? வேதாசலத்திற்கு வேதனை தருவதற்குத்தான். ஏன் திகைக்கிறீர்கள். உண்மையின் உருவம் பார்ப்பதற்குப் பயமாயிருக்கிறதோ? அன்று கோர்ட்டிலேயும் எப்படித்தான் சகித்துக் கொண்டிருந்தீர்களோ?

பாலு : ஆனந்த், என்ன, நீ அன்று கோர்ட்டில் இல்லையே.

ஆனந் : ஆம், கோர்ட்டிலே நான் இல்லைதான். மூர்த்திக்காக வாதாடிய வக்கீல் இருந்தாரல்லவா? பாருங்கள் அவரை. (திரையைத் தள்ளுகிறான்) நான்தான் மூர்த்திக்காக வாதாடிய வக்கீல். என் நண்பர் மணிதான் ஆஸ்ரமத்து உண்மைகளை அறிந்து சொன்னவர்.

மூர்த்தி : ஆனந்த், நீயா என்னைத் தூக்கு மேடையிலிருந்து காப்பாற்றினாய், நீயா வடநாட்டு வக்கீல், உனக்கா என் மீது இரக்கம் பிறந்தது?

ஆனந் : படித்த முட்டாளே! கேள். இலங்கை தோட்டத்திலே இரவு, பகலாக வேலை செய்து 200 ரூபாய் சேர்த்து அதைத் தன் வயோதிகத் தந்தைக்குத் தந்து அவர் மகிழ்வதைக் கண்டு மகிழவேண்டும் என்று எண்ணியே, ஈனம், பச்சாதாபம், அன்பு ததும்பிக்கொண்டிருந்த மனந்தாண்டா இது. பாடுபட்ட கைகளடா. காடு மேடு சுற்றிய கால்கள். உழைத்து, உழைத்து உருக்குலைந்தவன் நான். உன்னைப்போல் உல்லாசபுரியில்

உலாவியவனல்ல. படித்து, பட்டம் பெற்று, வேலை கிடைக்காததினால் சிலோன் காட்டிலே கணக்கெழுதப் போன ஆனந்தன் நான். என்னை மேவார் விலாச மைனர் என்று எண்ணிக் கொண்டு சரசாவை எனக்கு கலியாணம் செய்து தந்தார் சீமான் வேதாசலம். உன் சகோதரி சரசாவை ஏன் கலியாணம் செய்து கொண்டேன்? உன்னைப்போல் காதலுக்காகவா? இல்லை. சீமானின் பணத்திற்காகவா? கடுகளவும் இல்லை. சரசாவை நான் கலியாணம் செய்துகொண்டது துரோகமரின் விஷத்தைக் கக்குவதற்கு. உன் தகப்பனார் பணத்தாசை பிடித்து பல ஏழைகளைக் கசக்கிப் பிழிந்தார். அப்படி அவதிப் பட்டவர்களிலே என் தந்தையும் ஒருவர். பக்கத்து ஊர், சுந்தரம் பிள்ளை என்று பெயர். பட்ட கடனுக்காக வீடும், தோட்டமும், உன் தகப்பனாருக்குக் கொடுத்தார். பராரியானார். வீடு இழந்த என் தந்தையை ஜெயிலிலே தள்ள இந்த தயாளமூர்த்தி ஏற்பாடு செய்தார். பாவம்! ஏழை என்ன செய்ய முடியும். மரக் கிளையிலே'பிணமாகத் தொங்கினார். என் தந்தை பிணமாகினார். என் தந்தையைக் கொன்ற பாதகனை நான் கொடுமைப் படுத்தியது குற்றமா? சரசா நீ சொல். உன் தந்தையை நான் கொடுமைப் படுத்தியது குற்றமா? மூர்த்தி நீ பேசு. உன் தந்தையைக் கொடுமைப் படுத்தியது குற்றமா? பாலு முதலியாரே, நியாயம் தெரியுமே உமக்கு, நீர் சொல்லும். வேதாசல முதலியாரை நான் கொடுமைப் படுத்தியது குற்றமா? வேதாசல முதலியாரே! என்னைப் பார்க்க கூசுகிறதோ! நீரே சொல்லும், உம்மை நான் கொடுமைப் படுத்தியது குற்றமா?

வே: ஐயோ, என்னால் இதைத் தாங்க முடியவில்லையே.

ஆன: இப்படி நான் எத்தனை ஆயிரம் தடவைகள் சொன்னேன் தெரியுமா? மரக் கிளையிலே பிணம் தொங்கும்போது, அப்போதே உம்மைக் கொன்று இரத்தத்தைக் குடித்திருப்பேன்.

மணி: நான்தான் அதைத் தடுத்தேன். நான்தான்.

பாலு: அப்பா மணி, நல்ல சமயத்திலே நீ நல்ல புத்திதான் சொல்லி யிருக்கிறே.

மணி: பாருங்க, பாம்பு கடிச்சா பட்டுண்ணு உயிர் போயிடும். அதனால் ஒரு பயனுமில்லை. தினமும் படுக்கையிலே போய் படுக்கணும். பாம்பு வரணும், கடிக்கணும், உயிர் துடிக்கணும். ஆனால் பிராணன் மட்டும் போகக் கூடாது. அதைப் போலே உன் தகப்பனைக் கொன்ற சண்டாளனை வாட்டி, வாட்டி, வதச்சி, வதச்சி சித்ரவதை செய்யணும்னு நான்தான் யோசனை சொல்லிக் கொடுத்தேன்.

ஆன : ஆம், அந்த யோசனைப்படிதான் மருமகனை உடனே, அட்டகாசத்தை ஆரம்பித்தேன். குடித்தவனைப்போல் நடித்தேன். சரசாவை அடித்தேன், வேதாசல முதலியாரை வாட்டினேன். வேதனையால் அவர் கஷ்டப்படும்போது என் கண் குளிரப் பார்த்தேன். அது மட்டுமா, மூர்த்திக்கும் இவருக்கும் சண்டை மூட்டினேன். சீமான் வீட்டுப் பெண்ணை இவர்கள் கண்ணெதிரிலே காய் கனி விற்கச் செய்தேன். இவ்வளவும் ஏன் செய்தேன்? பணத் திமிரை ஒடுக்க, செல்வம் இருந்தாலும் சுகம் பெருமல் தடுக்க, கேட்டுப் பாருங்கள் அவரை? செல்வம் இருந்து அவர் கண்டதென்ன! வேதனை! வேதனை!! வேதனை!!! ஏன்? ஆச்சரியப் படுகிறீர்கள். என் மனம் சாந்தி அடைய வஞ்சம் தீர்த்துக்கொள்ள எண்ணினேன். வெற்றிபெற்றேன்.

வே : ஆனந்தா போதும், போதும் எனக்கு இந்த தண்டனை. என்னை மன்னித்து விடு. என்னுல் உன்னைப்போல் எத்தனை பேர் கஷ்டப்பட்டார்களோ! எனக்கு தெரியாது. பாழும் பணத் தாசையால், பணத் திமிறினுல் நான் பல ஏழைகளைக் கொடுமைப் படுத்தி வந்தேன். உண்மைதான். ஆனுல் உன்னை இதுவரை பெரிய துஷ்டன் என்றே எண்ணி இருந்தேன். உண்மை இப் போதுதான் தெரிகிறது. நீ இவ்வளவு நல்ல பிள்ளை என்று.

மணி : என்னங்க போங்க முதலியார்வாள்! இப்பவெல்லாம் எவ்வளவோ நல்லாத்தான் பேசுறீங்க. முன்னெல்லாம் என்ன முறுக்கு; ஏழைகளைக் கண்டால், என்ன கடுப்பு? பச்சென்று யாராவது வாழ்ந்தால் அடா டா டா, வட்டிப் பணத்தை கணக்குத் தீர்த்து வாங்குகிறதிலே என்ன கண்டிப்பையா. இப்படி ஊரை ஏமாற்றி பணத்தை மிச்சப் படுத்தி என்னையா சுகத்தைக் கண்டீர்? தங்கத்திலுலே அரிசி செய்து சமைத்து, கோமேதக கூட்டும், வைர வருவலும், முத்துப் பச்சடியும், மோர் குழம்புலே கெம்புமா கலந்து சாப்பிட்டு வந்தீர்?

வே : ஆமாப்பா மணி! நீ சொல்வது அத்தனையும் உண்மை தான். பணத்தாசையால் பல கொடுமைகள் புரிந்த வேதாசலம் மாண்டே போனுன். நான் புத்தி வந்த புது வேதாச்சலம். தவறை உணர்ந்து கொண்டவன்.

ஆன : வேதாசல முதலியாரே! மற்ருென்றும் நீர் உணர வேண்டும். பணத் திமிர் மட்டும் அல்ல உமக்கு. ஜாதித் திமிரும் அமோகம். ஆனுல் நடந்ததென்ன? பஞ்சசுந்தரம் பிள்ளையின் மகன் ஆனந்தன், வேதாசல முதலியாருக்கு மருமகன். அது மட்டுமா? இதோ வீற்றிருக்கும் மணமகள் பேங்கர் பர்மா பாலு முதலியாரின் மகள் என்பது உமது எண்ணம் அல்லவா? இதோ

பாருங்கள், அவரது பெற்ருேரை. (திரையைத் தள்ளி காண்பிக்கிருன்.)

மூர்த்தி: என் அமிர்தமா சுகிர்தம்?

பாலு: ஒன்று சொல்ல மறந்துட்டேன். அமிர்தம் தான் சுகிர்தம்! என் வளர்ப்பு பொண்ணு.

ஆன: ஆம், உமது மருமகள் யார்? வேலைக்காரி அமிர்தம், வேற்று ஜாதிப் பெண். எங்கே உன் ஜாதித்திமிர்? பணம் பத்து நாளில் ஜாதியை பட்சணமாக்கி விட்டது பார்த்தீரா? பணத்திமிர் ஒழிந்தது ஜாதித் திமிரும் ஒழிந்தது. என் வேலையும் முடிந்தது. நான் வருகிறேன்.

சரசா: நில்லுங்கள், நீங்கள் இல்லாத இந்த வீட்டில் எனக்கு என்ன வேலை? நானும் தங்களுடன் வரவேண்டியது தான்.

மூர்த்தி: ஆம், ஆனந்தன் இல்லாத இடத்தில் இனி யாருக்கும் இடமில்லை. அவர் போகும் உலகம்தான் எனக்கும்.

அமிர்: நீங்கள் போய் விட்டால் எனக்கு மட்டும் இந்த வீட்டில் என்ன வேலை? நானும் உங்களுடன் வர வேண்டியவள் தான்.

வே: நில்லுங்கள்! யாரும் எங்கேயும் போக வேண்டாம். உங்களுக்கு வேறு உலகம், எனக்கு வேறு உலகமில்லை. ஆனந்தா வா!, சரசா இந்தப் பாதகனை நல்வழிப் படுத்திய உன் புருஷன் ஆனந்தனேடு ஆனந்தமாக வாழ்ந்திரு! அமிர்தம் பலே! நீ பெரிய வேலைக்காரி தான். காதலால் ஜாதியை வென்ற உத்தமி. உன் புருஷன் மூர்த்தியோடு சுகமாக வாழ்ந்திரு! பாலு முதலியாரே, வாரும், புறப்படுவோம்!

பாலு: எங்கே?

வே: பணத் திமிரும் ஜாதித் திமிரும் ஒழிய வேண்டும் என்றும், ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்றும் நாட்டு மக்களுக்கு உரைப்போம்.

**"ஒன்றே குலம்! ஒருவனே தேவன்"**

# கல் சுமந்த கசடர்

## காட்சி 1

இடம் : வீரர் கூடாரம்.

காலம் : காலை

உறுப்பினர் : வீரர்.

நிலைமை : ஒரு வீரன் பாடுகிறான் மற்றவர் இரசிக்கின்றனர். மற்றோர் வீரன் ஓடிவருகிறான். பாட்டைக் கேட்கிறான். கேட்டுவிட்டு......

வீரன் : எதன்மேல் ஆணை ? எதன்மேல் ஆணை ?

பாடிய வீரன் : ஏன் ? தாயின்மேல் ஆணை. தந்தைமேல் ஆணை. தமிழகமேல் ஆணை.

வீ : தமிழகமீது ஆணையா ! உண்மையாகவா ?

பா. வீ : என்ன நண்பா உனக்குத் திடீரென்று சந்தேகம் வந்துவிட்டது.

வீ: நண்பா! தாயின்மேல் ஆணையிட்டு, தமிழகத்தின் மானத்தைக் காக்கப்போரிடும் வீரர்கள் நாம். ஆனால் இதனை வெறும் வீண் பேச்சு என்று கருதுகிறார்கள்.

பா. வீ: யார் அத்தகைய அறிவாளிகள்!

வீ: நாம் வாயாடிகளாம். நமது மன்னனும் அப்படித்தானும். நாம் ஏதும் செய்யமாட்டாதவர்களாம்.

பா. வீ: சொன்னவன் யார்? அதைக் கேட்கும்போது நீ மரமாகவா நின்றாய்?

வீ: இல்லை. காற்றென ஓடிவந்தேனிங்கு. பங்கப்படுத்தும் அந்த மாபாவிகளின் மண்டைக் கர்வத்தை மன்னனிடம் கூற ஓடோடி வந்தேன்.

பா. வீ: என்ன துணிவு! எவனுக்குப் பிறந்ததந்த ஆணவம்! எங்கே இருக்கிறான் அந்த மரமண்டைக்காரன்? அங்கத்திலா? கலிங்கத்திலா? எங்கேயிருக்கிறான்? யாரவன்?

வீ: தமிழனை, தமிழகத்தை, தமிழ் மன்னனை, நமது சேரன் செங்குட்டுவனை இழிவாகப் பேசியவர்கள் அங்கத்திலே இல்லை, கலிங்கத்திலேயில்லை, கங்கைக் கரையிலே உள்ளனர் அக்கயவர்கள், கனகன் விஜயன் என்பது அக்கசடரின் பெயர்.

பா. வீ: ஆரிய மன்னர்களா?

வீ: ஆம்! அந்தப் பதர்கள்தான். அடங்கிக் கிடந்த கூட்டம் ஆர்ப்பரிக்கிறது. கைகட்டி வாய்பொத்தி நின்ற கூட்டம் கொக்கரிக்கிறது. நமது தமிழரைக் கேவலமாகப் பேசுகிறது.

பா. வீ: ஆகா! வீரரை வீணர் கேலி செய்தனரா? போருக்கஞ்சாத நம்மை புரட்டர் கூட்டம் இகழ்ந்து பேசிற்று? என்ன காலம்! என்ன கோலம்! கனக விஜயருக்கு காலம் முடிந்து விட்டதோ இந்தக் கர்வங்கொள்ள! புலியைப் பூனை போருக்கழைக்கிறதா? புறப்படுங்கள் போவோம் நமது பூபதியிடம், அந்தப் புல்லரின் விஷயத்தைக் கூறுவோம். போருக்குக் கிளம்புவோம்.

வீ: அந்த ஆரியமுடி தாங்கிகளை அடித்து நொருக்குவோம்.

## காட்சி 2

இடம் : சேரன் மாளிகை

காலம் : காலை

நிலைமை : சேரனும் ஒரு புராணீகனும் தனியாகப் பேசிக் கொண்டிருக்கின்றனர்: புராணீகன் இராமாயணக் கதையைக் கூறுகிறுன்.

புரா : ஆரண்யத்திலே ஸ்ரீராமச்சந்திரர் சீதாபிராட்டியாரைத் தேடித்தேடியலைந்து அழுதுகொண்டிருக்கிறுர். தம்பி லக்ஷ்மணன் அண்ணு! இது நம்முடைய போருத காலம், தாங்கள் இதற்காக இப்படிப் புலம்புவதா? என்று கூறிட......

சேரன் : மறையவரே! என்ன சொன்னுன் அந்த இலக்ஷ்மணன்? சீதையை எவனே களவாடிக்கொண்டு போனுனென்று தெரிந்துமா அண்ணனுக்குப் போருதவேளை, போனுல் என்ன என்று கூறினுன்?

புரா : ஆமாம். இராமருடைய சோகத்தைத் தணிக்க......

சேரன் : சரி. பிறகு கூறும் கேட்போம்.

புரா : ஆரண்யத்திலே அலைந்து திரிந்து வருகையிலே, ஸ்ரீராமச்சந்திரருக்கு, வானர குலத் தலைவரான சுக்ரீவனுடைய சிநேகிதம் கிடைத்தது. சுக்ரீவனுக்கும் அவன் அண்ணன் வாலிக்கும் பகை. இராமர் வாலியைக் கொன்று சுக்ரீவனுக்குப் பட்டம் தருவதாக வாக்களித்தார்.

சேரன் : யார் வாக்களித்தது? மனைவியை இழந்து எப்படிக் கண்டுபிடிப்பது என்று மார்க்கம் தெரியாது மருண்டு போயிருந்த இராமன், வாலியைக் கொல்வதாக வாக்களித்தானு? என்ன மறையவரே! வேடிக்கையாக இருக்கிறதே. வாலியின் வீரதீர பராக்கிரமத்தைப் பற்றிப் பலர் கூறுவர்...........

புரா : ஆமாம், ஆனுல் ஸ்ரீராமச்சந்திரர் சாமான்யரோ, ஸ்ரீமன் நாராயண மூர்த்தியின் அவதாரமல்லவோ!

சேரன் : அவதார புருஷருக்குத்தான் மனைவி பறிபோகும் ஆபத்து நேரிட்டது போலும்! சரி அந்த வேடிக்கை கிடக்கட்டும், வாலிக்கும் சுக்ரீவனுக்கும் பகை இருந்தது. அது கேட்ட இராமர்...........?

புரா : வாலியைக் கொன்று சுக்ரீவனுக்குப் பட்டமளிக்க வாக்களித்தான்.

சேரன் : பேஷ்! உன் இராமன் பெரிய வஞ்சகனுக வல்லவோ காணப்படுகிருன்.

[புராணீகன் காதுகளைப் பொத்திக்கொள்கிருன்.]

சேரன் : ஆம் மறையவரே! அந்த வஞ்சகத்தைக் காதால் கேட்பதுகூடத் தகாதுதான். அண்ணன் தம்பிக்குச் சண்டை! இந்த ஆரிய இராமனிடம் அந்த வானரன் முறையிட்டான். நீதிமானுக, தர்மவானுக இருப்பின், இருவருக்குள் நேரிட்ட விரோதத்தைப் போக்கிச், சமரசம் உண்டாக்கியிருக்கவேண்டும். அப்பா வாலி! வா இப்படி, ஒரு தாய் வயிற்றிலுதித்த நீங்கள் இப்படி விரோதித்துக்கொள்வதா? இதேபார் என்னை என் பக்கத்தில் இருப்பது இலட்சுமணன். என் தம்பி. என்னைத்தான் என் சிற்றன்னை பதினுலு ஆண்டு காடு செல்லவேண்டுமென்ருள். நான் விரைவாகக் கிளம்பினேன். என் தம்பி இலட்சுமணன் என்னைவிட்டுப் பிரிய மனமின்றி, தானும் வனவாசம் ஏற்ருன். இப்படி இருக்கவேண்டும் அண்ணன் தம்பி ஒற்றுமை என்று கூறியிருக்க வேண்டாமா? அதை விட்டான். அண்ணன தம்பிக்குள் கிளம்பின சண்டைக்குள் புகுந்தான்.

[இதைக் கேட்டுக்கொண்டே வந்து நின்ற வில்லவன்]

வில் : மறைந்திருந்து அம்பெய்தி வாலியைக் கொன்ருன்.

சேர : (திரும்பி) மறைந்திருந்தா?

வில் : (புராணிகரை நோக்கி) கூறுவதுதானே மறையவரே! மறைந்திருந்து, மரத்தின் பின்புறமிருந்துதானே, இராமன் வீர வாலியின்மீது அம்பெய்திக் கொன்ருன்.

புரா : அப்படித்தான் கதை............

வில்ல : இப்படி நெருக்கடியான கேள்வி கேட்டால் இது கதை. கேள்வி கிளம்பாத வரையிலே அது கடவுள் புராணம். மன்ன! இதுபோல நயவஞ்சகம், துரோகம், சதி முதலியவை நிரம்பிய பல கதைகள்தான் ஆரியருக்குள்ள புராணக் கதைகள்.

சேர : சேச்சே! என்ன இருந்தாலும் ஒரு வீரன், மன்னன், வாலியை மறைந்திருந்து கொல்வது மிக மோசம், கேவலம்......

புரா : (வில்லவனை நோக்கி) பேடித்தனம், கூறுமே வில்லவரே!

வில்ல: எனக்கு அந்தச் சிரமமின்றி தாங்களேதான் கூறி விட்டீர்களே, அந்தக் கோழைத்தனமும் சுயநலத்தோடு கூடியது.

புரா: என்னப்பா நயநலம்? கிஷ்கிந்தையை இராமர் ஸ்வீகரித்துக் கொண்டாரோ? சுக்ரீவனுக்கல்லவோ பட்டாபி ஷேகம் செய்துவைத்தார்.

வில்ல: பட்டங்கட்டினூர்? எதற்கு? வானரப்பட்டாளத்தை அரக்கர் படைமீது ஏவ.

சேர: உண்மைதான், சுக்ரீவனுக்கும் இராவணனுக்கும் ஒரு விரோதமும் கிடையாது. ஆனுல் சுக்ரீவனுடைய படைதான் இராவணப் படையைத் தாக்கிற்று.

வில்ல: இருதரப்பிலும் நஷ்டம், ஆரியப்படையோ அயோத்தியிலே நிம்மதியாக இருந்தது,

[இரு வீரர் ஓடிவந்து வணங்குகிருர்கள்.]

வில்ல: ஏன்? என்ன! ஏன் இப்படி அவசரம்?

வீரன்: மன்னு! வணக்கம். தமிழ் நாட்டை இழிவாகப் பேசுகின்றனர்.

வில்: எந்தப் பித்தர் பட்டியிலே கண்டாய் அந்தச் சத்தற்ற ஜன்மங்களை? தமிழரைத் தாழ்வாகப் பேசும் அளவு தலைக்கு வெறியேறிய தருக்கர் யார்?

வீரன்: கங்கைக் கரையிலே கனகன், விஜயன், என்று இரு ஆரிய மன்னர்கள் உள்ளனர்.

சேர: ஆரிய மன்னர்! ஆரியரிலே மன்னர்களும் உள்ளனர்!!

வில்: மன்னராக இருப்பதுடன், மமதையாளராகவும் உள்ளனர், அந்தப் பதர்கள். நமது தமிழ் மரபினைக் குறித்துக் கேவலமாகப் பேசினராம். கேலி செய்தனராம் தமிழ்க் குடியினரை. கேட்டீர்களா இந்தக் கெடுமதியாளர்களின் போக்கை! சிங்கத்தைக் கேலி செய்யும் செந்நாயைக் கண்டதில்லை. விழி பழுதானவன் வழி காட்டுவோனை கேலி செய்ததில்லை, வீணர்கள் வீரர்களைப் பழிக்கின்றனர்.

சேரன்: ஆகா! அவ்வளவுக்குத் துணிந்துவிட்டனரா? இடம் கிடைக்காது திண்டாடி இங்கே வந்த சடங்கள் இப்போது படமெடுத்தாடும் பாம்பாகிவிட்டனவா? சேரம் நாட்டு வீரரும்,

யவண நாட்டுத் தீரரும், தமிழரின் வீரத்தைப் பாராட்ட, கலிங்கமும், காந்தாரமும் வங்கமும் அங்கமும் மூவேந்தரின் திறத்தைப் பாராட்டியிருக்க, பிழைக்க வந்த கூட்டம் நம்மை இழிவாகப் பேசுவதா? தமிழகம் அவ்வளவு தாழ்ந்துவிட்டதா?

வில் : திக்கெட்டும் புகழ் பரப்பிய தீரனே!

சேர : போதும் நிறுத்து, எட்டுத்திக்கும், என் புகழ் பரவிற்றென்று, இங்கே நின்று புகழ்ந்து பேசுகிருய், அங்கே அந்த ஆரியமன்னர் என்னையும், உன்னையும், நம்மைத் தாங்கி நிற்கும் தமிழகத்தையும் தாழ்வாகப் பேசினர்.

வில் : கட்டளை யிடுங்கள் காவலரே! அந்தக் கருத்தறியாக் கயவரின் குருதி கங்கையிலே கலக்கச் செய்கிறேன். வீங்கிக் கிடக்கும் தோள் எதற்கு? தூங்கிக் கிடக்கும் இந்த வாள் எதற்கு? தங்கள் தாளிலே அந்தத் தருக்கரின் முடியினைக் கொண்டுவந்து வைக்கிறேன். அவர்கள் நாடுகள் காடாகும். மாளிகைகள் மண்மேடாகும். வயல் வெளியாகும். பிணக் குவியலைக் காட்டுகிறேன்.

சேர : வில்லவா! உன்வீரப் பேச்சு என் மனப்புண்ணைக் கொஞ்சம் ஆற்றுகிறது. ஆனுலும் அறிவும் ஆற்றலும் அற்ற கூட்டம் ஆண்மையாளராம் தமிழரைக் கேலி செய்தது பற்றி எண்ணினல் என் உள்ளம் பதறுகிறது. எங்கிருந்து பிறந்தது அந்தத் துணிவு? வடநாடு இப்போது எந்த வகையிலே உயர்ந்துவிட்டது. ஏன் இந்த மமதை பிறந்தது?

வில் : வடநாடு ஆரியக்காடாகி விட்டது. மன்னர் மன்னவா! அங்கு இப்போது போர் என்ருல் மன்னரும், வீரரும். எதிரியை முறியடிக்க எவ்விதம் தாக்குவது? வட்டவடிவிலே படையை அமைப்பதா? விலாப்புறத்தில் தாக்குவதா? வில் வீரரை முதலிலே நிறுத்துவதா? வேழப் படையை அனுப்புவதா? என்று போர் முறை பேசிடுவர். புரோகிதக் கூட்டம் குறுக்கிட்டு, இன்ன யாகத்தை இவ்விதம் இன்றிருந்தே செய்தால் இந்திரன் வஜ்ராயுதத்தைத் தருவான். இத்தனை வேளை இத்தனை ஆயிரம் ஆரியருக்குச் சமாராதனை நடத்தினல் அக்கினி பகவான் அருள் புரிவான். எவன் எதிர்த்தாலும் வெற்றி நமக்கே கிடைக்கும் என்று புளுகுவர். மன்னன் மந்திரியைப் பார்ப்பான். மந்திரி பொக்கிஷக்காரனைப் பார்ப்பான். பூசுரன் செலவுக் கணக்கைக் கூறுவான். பொருளைப் பெறுவான். களத்திலே வீரர்களின் விழியிலே வேல்பாயும். பர்ணசாலைகளிலே அந்தணன் வயிற்றிலே வகைவகையான உண்டி பாயும். போரிலே வீரர்

பல்லாயிரவர் ஆர்ப்பரிப்பர். ஆலயங்களிலே அந்தணர், அந்தி பூஜை அர்த்த ராத்திரி சேவை என்று காரியங்களிலே ஈடுபடுவர். வீரனின் இரத்தம் அங்கே சிந்தும். இங்கே வேதியக் கூட்டம் விலாப்புடைக்கத் தின்று, தின்றது செரிக்கச் சந்தனம் பூச, பூசிய சந்தனம் கீழே சிந்தும். அமளியிலே அங்கங்கள் அறுபடும்; இங்கு அரசாங்கப் பொக்கிஷம் அந்தணர் ஏற்பட்டால் குறைவுபடும். இந்த முறையில் ஆரியம் அங்கு வேலை செய்கிறது. அரசுகளை அழிக்கிறது அவனிகாவலா!

சேர: ஆற்றோரத்திலே ஆடு மேய்த்து, மலைச்சாரிலே மாடு மேய்த்து மானையும் பன்றியையும் வெட்டித் தின்று, நெருப்பையும் நீரையும் கும்பிட்டு, சோமரசமும் சுரபானமும் பருகி, பௌண்டரீக யாகமும் பிறவும் செய்துகிடந்த கூட்டம், கோட்டைகளைத் தகர்த்து, கொத்தளங்களைத் தூளாக்கி படைபல வென்று தடைபல கொன்று தன்மானத்தையே தரணிவாழ் மக்கள் போற்றவேண்டும் எனப் பரணி பாடி வாழும் தமிழரை, நம்மை நிந்திப்பதா? பச்சை கண்டு இச்சை கொண்ட நச்சு நினைப்பினர் செங்குருதி பாய்ச்சி செந்தமிழர் வீரத்தை நிலைநாட்டி தங்கக் கோட்டைகளிலே வைரமணிகளென ஒளிவிட்டு விளங்கு வீரராம் தமிழரை, கேலிமொழி பேசுவதா? ஆஹா! அவ்வளவு துணிந்து விட்டதா அந்த ஆற்றலற்ற கூட்டம்! எவனுடைய தயவு கிடைத்துவிட்டதாம் அந்தப் பவதிபிக்ஷாந் தேகிகளுக்கு! யார் அவர்களுக்குத் துணை? தேவனா! மூவனா? தேய்ந்து வாழும் சந்திரனா? தெருப் புழுதியுடன் விளையாடும் வாயுவா? சாக்கடையிலும் சரசமாடும் வருணனா? எந்தக் கற்பனைக் கடவுளை நம்பி இந்தக் காரியம் செய்யத் துணிந்தனர்?

வில்: யார் முன்னின்று, ஆரிய மன்னருக்கு இந்தத் தைரியமளித்திருந்தாலும் சரி, மன்னர் மன்னவா! மண்ணிலே என் உடல் வீழ்வதாயினும் சரியே அந்த மாற்றார்களை மண்டியிடச் செய்வேன். இது உறுதி, சத்தியம். தமிழகத்தின் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். போர் தொடுக்க உத்தரவு அளியுங்கள்.

சேர: ஆம்! போர்தான்.

## காட்சி 3

**இடம் :** பாசறை...

**நிலைமை :** படை அணிவகுப்பு. மன்னர் பார்வையிட வருகிறார். படையினர் மன்னரை உற்சாகமாக வரவேற்கின்றனர்.

படையினர் : மன்னர் மன்னவன் வாழ்க! தமிழ் மாநிலம் வாழ்க! சேரன் செங்குட்டுவன் வாழ்க!

மன்னன் : தமிழ் மாநிலம் வாழ்க! வீரர்காள்; உண்மை உரை அது. தமிழ் மாநிலம் வாழ அதன் கீர்த்தி பரவ உங்கள் குருதியைக் கொட்ட வேண்டுமென்று, கேட்டுக்கொள்ளவே இன்று இங்கே உம்மை அழைத்தேன். ஆரிய நாட்டின்மீது படையெடுக்க நாம் தீர்மானித்து விட்டோம். மண் பெண் பொன் என்ற மூன்றுக்காக மாநிலத்திலே போர் மூளுவது உண்டு. நாம் மண் வேண்டியோ, பெண் தேடியோ, பொன் கோரியோ போருக்குக் கிளம்பவில்லை. மாநிலத்தின் பூந்தோட்டம் தமிழகம். மறக்குடித் தமிழரின் மதிமுகவதிகள் மயக்கமொழி பேசி மஞ்சமிழுப்போனை தயக்கமின்றித் தழுவிடும் வழுக்கிவிழுந்த வனிதையரல்ல. வீரப்பெண்மணிகள்! பொன் நமது காலடியிலே! நமது மணி மாடங்களிலே தேனிடையூறிய செம்பவள இதழ்ச் சேயிழையார் தத்தமது காதலருடன் தென்றலையும் திங்களையும் வென்று வாழ்கின்றனர். மண் பெண் பொன் எனும் மூன்றிற்குமல்ல நாம் போரிடுவது. மானத்துக்கு பல்லைக்காட்டி வாழ்ந்த கூட்டம் தமிழகத்தின் எல்லையைத் தாண்டி ஓர் கொல்லையை ஆண்டு வருகிறது. அது புன்னகைப் பூந்தோட்டமல்ல. செந்தமிழ் செழிக்கும் சோலையுமல்ல; கங்கைக்கரையோரத்திலே கசடர் இருவர் கனகன், விஜயன் எனும் பெயரினர், அரசர்களாக உள்ளனராம், சீறிப்போரிடும் வேங்கைகள் உலாவும் காட்டிலே சிறுநரிகள் உள்ளதுபோல்! அங்கு அவர்கள் வாழ்வதை நாம் தடுத்தோமில்லை, பொருட்படுத்தவுமில்லை. மல்லிகைத் தோட்டத்தின் வேலி ஓரத்தில் உள்ள கள்ளி என்று அதனை மதித்தோம். அந்தக் கொல்லைக்காவலர் நாமெல்லாம் கல்லாகாதிருக்கும் இந்த நாளில், உமது கரத்திலே கட்கமும் கருத்திலே வீரமும், உடலிலே தமிழ் இரத்தமும், உயிரிலே தன்மானமும், விளங்கும் இந்த நாளிலே, நான் நெடுமரமென நின்றிருக்கும்போது, என் முன்னோர்களின் வீரதீர வெற்றிகளையறிந்து மறவாதிருக்கும் நான் மண்டலத்தை ஆளும் நாளில், அந்த மமதையாளர்கள், மனுசந்ததியார் தமிழரை, தமிழகத்தை, தமிழ் வீரத்தை தன்

மானத்தைப் பழித்துப் பேசினர், இழித்துரைத்தனராம். என் ஆட்சியிலே நேரிட்டது இந்த அவமானம். நான் வெட்கப்படுகிறேன் வீரர்காள். போர்ப் புலிகளாகிய உங்களை ஆளும் பாக்கியம் பெற்ற நான் தமிழரின் வெற்றிச் செய்திகளை விருந்தாக அளித்திடுவது முறை. கோலளித்தமைக்கு நான் செய்ய வேண்டிய கடமை, கைம்மாறு. ஆனால் நான், உங்கள் முன்னால் மூவேந்தரில் முதல்வன் என்று பேசப்படும் நான், உங்கள் முன் இதோ நிற்கிறேன் ஆரியர் தமிழரை இழிவுபடுத்தினர் என்ற செய்தியைக் கூறிக்கொண்டு. வாள் ஏன் எனக்கு! முடி ஏன் எனக்கு? தமிழ் மண்ணிலே நான் வாழ்வானேன்? தோழரே! நான் ஓர் ஒதியமரம் என்பது போலும் அவர்தம் நினைப்பு: சேர மண்டலத்திலே வீரர் இல்லையா, இந்தச் செருக்கரின் சிரம் அறுக்க. போர் வீரர் கூட்டம் கூனி விட்டதா? போர்த்திறம் இழந்தோமா! தோள்வலியும் மனவலியும் போயினவா? முன்னோரின் புகழுக்கு நாம் மாசுகளா? முதுமொழிகளுக்கு கரையான்களா? ஆண்மையற்ற கூட்டமா? அஞ்சிவாழும் ஆமைகளா? நயவஞ்சக நரிகளா? நாமா? திரு இடத்தவரா? ஒருபோதும் இல்லை. நாம் ஏறுகள். நாம் தமிழர். கொலைவாளைத் தூக்குவோம் கொடுமை களைவோம். மாற்றானின் ஆயுதங்களை நமது மார்பு எனும் மதிலில் வீசச்செய்வோம், மகிழ்வோம். உமது குருதியைக் கொட்ட களத்திலே பிணமாவதானாலும் அதற்கும் அச்சாரம் வாங்கி விட்டேன். உங்கள் வீரத்தின்மேல் ஆணையிட்டேன்: ஆரிய மன்னருக்கு இறுதிச்சீட்டு அனுப்பி விட்டேன்; என்னாளிலே என் தமிழர் இழிமொழி கேட்டும், வாளாயிருந்தனர் என்ற வசை மொழியை என் இரத்தத்தைக் கொண்டு கழுவிடத் தீர்மானித்து விட்டேன். அதைக் காண வாரீர் என்று உம்மை அழைக்கிறேன். தமிழகம் காணிக்கை கேட்கிறது; வீரத்தை, தியாகத்தைக் கேட்கிறது: இங்கே வீரர்கள் இல்லையா? ஆண்மையாளரே! கிளம்புங்கள். சிங்காரத் தமிழகத்தைச் சின்னாட்கள் மறந்திருங்கள். காதலை, கவிதையை, காட்சியை, மறந்திடுங்கள். வானமே கூடாரம், தரையே பஞ்சணை ஆயுதங்களே தோழர்கள். இதற்கழைக்கிறேன் உம்மை. உயிரைக் கரும்பெனக் கருதுவோன் விலகட்டும். மானத்தைப் பெரிதென மதிப்போர் வாளை முத்தமிட வரலாம். வாகை சூடிடத் தமிழகம் நம்மை அழைக்கிறது. பெற்று வளர்த்து பெருமைப்படுத்திய தமிழகம் அழைக்கிறது. உங்கள் தந்தையர் நாடு அழைக்கிறது! வர இசைபவர் யார்?

படையினர்: எல்லோரும்! எல்லோரும்.

## காட்சி 4

(வீரர்கள் கீதம்)

இடம்: பாதை.

[அடிப்போம், மடல் கெடுப்போம், முகத்திடிப் போம், குடல் எடுப்போம், இடுப்பொடிப்போம், சிரம் உடைப்போம், வசை துடைப்போம், உயிர் குடிப்போம், வழி தடுப்போம், பழி முடிப்போம், இனி நடப்போம்.]

கோஷம்: தூக்குவீர் கத்தியை, தாக்குவீர் எதிரியை

## காட்சி 5

இடம்: களம்,

உறுப்பினர்: வீரன், வில்லவன்.

வீரன்: தலைவரே! மாற்றுர்கள் மனம் மருண்டு விட்டனர். அவர்களின் படை வரிசை கலைகிறது. போர் வீரர்களின் முகத்திலே் பயந்தோன்றிவிட்டது. நாம் முன்னேறித் தாக்கத் தாக்க எதிரியின் படை வரிசை பிண வரிசையாகி வருகிறது. எதிரிப் படைத் தலைவன், இறுமாப்பால் தமிழரைத் தாழ்வாகப் பேசிய கனகன் மிரண்டு ஓடுகிருன், விஜயன் பின்தொடர; நமது குதிரை வீரர்களை அனுப்பி அவனைப் பிடித்து விடுகிறேன். களத்திலே அவன் தலை உருளட்டும். அவன் பிணமாவதைக் கண்டு எஞ்சியுள்ள அவனது சேனையின் நெஞ்சு பஞ்சாகட்டும். தஞ்சம் தஞ்சமென்று அந்தப் பஞ்சைகள், நமது மன்னன் திருவடி பணிந்து கெஞ்சட்டும். கட்டளையிடுங்கள்! கண்கலங்கி நிற்கும் அந்தக் கதியற்றவரை, களத்திலே பிணமாக்கிக் கழுகுக்கு விருந்திடுகிறேன்.

வில்லவன்: வேண்டாம், வீரத் தோழனே! விரண்டோடும் விஜயனும், கதி கலங்கிய கனகனும் புறமுதுகிட்டு மிஞ்சியுள்ள சேனையுடன் ஓடட்டும்.

வீர: அங்ஙனமாயின் அவர்கள் தம் நகர் சென்று விடுவரே, பிழைத்துக் கொள்வரே!

வில்: நண்பா! அவர்கள் ஓடித் தம் நகர் செல்லட்டும். அவர்களைத் துரத்திக்கொண்டு நாம் அந்த நகருக்குள் நுழைவோம். அவர் தம் அரண்மனை மாடியிலே அரசக் குடும்பக் குமரிகள் ஓடிவரும் மன்னரைக் கண்டு ஈதென்ன கோலம், நமது கொற்றவன் இவ்வளவு கோழையா என்று கூறட்டும். வளையணிந்த மாதரின் விழியும் மொழியும், கேலியை ஏவட்டும். வெட்கம் அந்த வேந்தரின் விலாவைக் குத்தட்டும். வெட்கி வியர்த்து வெட வெடத்துக் கிடக்கும் அந்த வேளையிலே நாம் சென்று அவர்களைப் பிடிப்போம். அரண்மனையிலோ அழுகுரல் கிளம்பட்டும். ஆற்றல் மறவரோடு போரிட்டால் அழிவு கிடைக்குமென்பதை ஆரியச்சேரி அறியட்டும். ஓடவிடு அந்த ஓடெடுத்து வாழ்ந்த வேந்தர்களை.

## காட்சி 6

இடம்: களத்தில் ஓர் பகுதி.

உறுப்பினர்: தமிழ் வீரன்—ஆரிய வீரன்.

நிலைமை: தமிழ் வீரன், பயந்தோடும் ஆரியனைப் பிடித்திழுத்து முதுகில் ஒரு அறை கொடுத்து.

தமிழ் வீரன்: ஏ ஆரியப்பதரே எங்கே உங்கள் வீரம், யோகம், யாகம்! அக்கினியாஸ்திரமெங்கே! (மறுபடி அடிக்க.)

ஆரிய வீரன்: (முதுகைத் துடைத்துக்கொண்டு அலறி) ஐயோ! இதுதான் அக்கினியாஸ்திரம்.

த. வீ: எது?

ஆரி. வீ: இதோ என் முதுகிலே சுரீரென்று கொடுத்தீர்களே நெருப்புப் போல......

த. வீ: முண்டமே! ஓடிப் போ, பாமரமக்களிடம் பச்சைப் புளுகு பேசுவது, எம்மிடம் அக்கினியாஸ்திரம், வருணாஸ்திரம் உள்ளன என்று,

(அழுகிறான் ஆரியன்.)

இதோ கண்களிலே நீர் பெருகுவதைப் பார்! வருணாஸ்திரம்! சீ......போரிட லாயக்கோ, பழக்கமோ, பயிற்சியோ அற்ற கூட்டம், வாலாட்டத்திலே மட்டும் குறைவில்லை,

## காட்சி 7

இடம்: களம்.

உறுப்பினர்: கனக விஜயன், வில்லவன், வீரர்.

நிலைமை: நாலு பக்கமும் தமிழ் வீரர்கள் கனக விஜயரை சுற்றி வளைத்துக் கொள்கின்றனர். கனக விசயர் ஓடப்பார்த்து முயன்று முடியாததால் பணிகின்றனர். அதுசமயம் வில்லவன் கோதை வந்து சேருகிறான்.

வில்லவன்: விடாதீர்கள்! விடாதீர்கள்!! அந்த விப்பிரரை (அருகே வந்து கனக விசயரை ஏற இறங்கப் பார்த்துவிட்டு) சீறிப் போரிட்ட சிங்கங்களே! செருக்கைக் கக்கிய சழக்கரே! நெருப்புடன் விளையாடத் துணிந்த ஏமாளிகளே நில்லுங்கள்! தலையைக் கொஞ்சம் நிமிர்த்துங்கள்! உங்கள் முகத்தை நான் கொஞ்சம் பார்க்கிறேன். (முகத்தைப் பார்த்துப் புன்னகை புரிந்து விட்டு) ஆகா! வீரம் வழிந்தோடுகிறது! அந்தக் கண்களிலே தீரத் தீப்பொறி பறக்கிறது! சீச்சீ வெட்கமில்லை உங்களுக்கு! வீரதீர கெம்பீரனும், எமது மன்னன்மீது, போரிட எப்படியடா துணிவு கொண்டீர்கள். எதை நம்பி இறங்கினீர்கள், இந்த ஆபத்தான விளையாட்டில்! நீங்கள் செய்த குற்றத்திற்காக, இங்கேயே, இப்போதே, உங்கள் உடலைக் கூறு கூறுக்கி, நாய்க்கும், நரிக்கும் விருந்திடுவேன். ஆனால் நயவஞ்சகராகிய உங்களின், இந்த நிலையைக் காணவேண்டும் என் தமிழர், என்ற ஆசையால் நீங்கள் இன்னமும் பிணமாகாதிருக்கிறீர்கள். வஞ்சனையைக் கக்கும் உமது கண்கள், எமது தமிழரின் கண்கள் உமிழும் வீரக் கனலால் குருடாகட்டும்! மலையெனத் திரண்டுள்ள எம் தமிழ் வீரரின் தோளைக் கண்டதும், அவர் தம் தாளிலே வீழ்ந்து, பணிய வாருங்கள். தமிழகத்தைத் தாழ்வாகப் பேசியவன் கதி என்னாயிற்று என்பதை உலகு உணரட்டும். கர்வம் பிடித்துத் தமிழரை ஏசிய நீங்கள் கல் சுமந்து வாரீர் தமிழகத்திற்கு. உங்கள் தலையிலே ஏற்றிவைக்கும் கல்கொண்டு,

வீரப் பெண்மணி கண்ணகிக்குக் கோவில் கட்டுவோம். வீரர்காள் தமிழகத்தின் மானத்தைக் காத்த தோழரே, ஏற்றுங்கள் கல்லை, இந்த கயவர் சிரமீது. சுமக்கட்டும்! இந்தச் சூது தவிர வேற்றியாக் கூட்டம்! தமிழகத்தின் புகழின் பாரம் தெரியட்டும். புறப்படுக.

## காட்சி 8

இடம் : பாதை.

உறுப்பினர் : கனகன்–விசயன்–வீரர்.

நிலைமை : கல் சுமந்து கொண்டு கனக–விசயர். தமிழ் வீரர் உருவிய வாளுடன் வருகின்றனர்,

வீரர் : நட–நட! நட–நடடா நயவஞ்சக நரியே! வாயால் கெட்ட வகைகெட்ட மூடரே ! நடவுங்கள் !

[எதிர்ப்புறமிருந்து வருபவருக்கு]

வீரர் : புதியபொதி மாடு ! சேரன் செங்குட்டுவன், கங்கைக் கரை ஓரத்திலே மேய்ந்து கொண்டிருந்த இந்தப் பொதிமாடுகளை, தமிழகத்துக்குக் கல் சுமக்கச் செய்தான்.

## காட்சி 9

இடம் : சேரன் கொலு மண்டபம்.

நிலைமை : வீரர்கள் வருகை

வீரர் : மன்னர் மன்னவா வெற்றி ! வெற்றி !!

வில்லவன் : வெற்றி வீரரின் தலைவனே, வணக்கம். தமிழரை இழித்துப் பேசிய கனக-விசயரைக் கைது செய்து வந்துள்ளேன். இதோ அந்தக் கசடர்.

சேரன் : கனகன் ! விசயன் ! காவலராம் இவர்கள் ! கடும் போரிடத் தெரியுமாம் !! ஏடா மூடர்கள் ! கங்கைக் கரையிலே காலந்தள்ளுவதை விட்டு, ஏன் வம்பை விலைக்கு வாங்கிக்

கொண்டீர்? என்ன காரியம் செய்கிறோம் என்பது தெரியாது, சிறு செயல் புரிந்தீர். வேங்கையின் வாலை மிதித்தால், அதன் பற்களால் கொல்லப்படுவோம், என்று தெரியாதவன் ஏமாளி யல்லவா? ஆரியரே! உயிரைக் காப்பாற்றிக்கொள்ள உங்கள் இனத்தவர் எதையும் விட்டுக் கொடுக்கத் தயாராவீர்கள். போர் என்றால் புகை கிளம்பும் யாகம் செய்வீர்கள்! ஆண்டவனிடம் அஸ்திரம் கேட்பீர்கள்! வாள் வீசத்தெரியாத உங்களுக்கு ஏன் இந்த வம்பு? தமிழரைப் பொன் கேட்டீர் கொடுத்தோம். வாழ இடம் கேட்டீர், தந்தோம்! அந்த வாழ்வு பெற்ற பின்னர் தமிழ ரையா இகழ்ந்து பேசினீர்?

கனகன்: மன்னவா? உம் அடி பணிகிறோம்.

சேரன்: இதிலென்ன ஆச்சரியம்! உமது பரம்பரை, தலை முறையாக வீரரின் காலடியிலே, வீழ்ந்ததன்றி வேறு வரலாறு ஏது எடா மூடர்களே! உமது வீரத்திற்கு ஒருசான்று கூறமுடி யுமா? ஒரே ஒரு சான்று!! வீரரென்று வாயாரப் புகழ்வீர் சிலரை, அவர்கள் யாவரும் இறைவனின் அருளால் அந்த வெற்றிகள் யாவும் கிடைத்தன என்றுதானே கதை. வீரத்திற்குச் சான்று எங்கே? வில்லவா இந்த வீணரை, நமது மக்கள் காண ஊரெங் கும் அழைத்துச் சென்று, பிறகு, சிறையிலே தள்ளு, தமிழ் வீரர்களே! உங்களுக்கு, என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகம் உங்களைக் கண்டு பூரிக்கிறது. வில் லவா! உன்வீரம் தமிழகத்துக்கு அழியாப் புகழ் அளித்து விட்டது. உன்வெற்றி, தமிழர்மீது வீசப்பட்ட மாசினைத் துடைத்து விட்டது. இதோ பரம்பரையாகச் சேரக் குடியின ருக்குச் சொந்தமாக இருந்து வந்த வீரவாள், உன்கையில் இனி இருக்கட்டும்.

[வில்லவன் வாளை ஏந்தி முத்தமிட்டு]

வில்ல: இந்த வாள் தமிழகத்தின் உயர்வைக் காக்கப் பயன் படட்டும். வீரக்குடியின் வெற்றிவாளை ஏந்தும் யோக்யதையை நான் பெறுவேன் மன்னர் மன்னவா.

[பணிந்து செல்லல்]

# ராகவாயணம்

## அபஜெய காண்டம்

ராகவாச்சாரியார்: முதலியாரவாள்! என்ன இருக்கிறது இதிலே எல்லாம்; க்ஷணப்பொழுது நடைபெறும் பொம்மலாட்டம்; வேறே என்ன!

ரங்கநாதர்: ஆமாம் சாமி! சந்தேகமென்ன. ஆனால் எங்கே இந்த ஜனங்களுக்கு இந்த ஞானம் வரப்போகுது. என்னமோ எல்லாவற்றையும் தங்கள் தலைமேலே மூட்டை கட்டிவைத்து தூக்கிக் கொண்டு போகப்போவது போலத்தான் அலைகிறதுகள்.

ராக: ஞானம் இல்லை, முதலியாரவாள்! ஞானம் ஏற்படவில்லை. ஏன் என்கிறீர்? சத்சங்கம் இல்லை. சத்விஷயங்களைப் பத்தின கேள்வி ஞானம், இல்லை!

ரங்: நீங்க ஒரு பைத்யம் சாமி! அவனுங்கதான், நம்மை எல்லாம் ஞான சூன்யங்கள்னு ஏசுறானுங்க..........நம்ம பேச்சை யாவது அவனுங்க கேட்பதாவது............

ராக: ஒரு யோசனை சொல்லட்டுமா?

ரங்: எதுக்கு ?

ராக: ஜனங்களோட க்ஷேமத்துக்குத்தான்.

ரங்: என்னது அது...........

ராக: ஸ்ரீமத் ராமாயண காலட்சேபம் ஏற்பாடு செய்துடுவோம்—ஆறு மாதம்—சித்ரகூடப் பாகவதர்னு கேள்வியுண்டோ, மகா சிலாக்யமான உபன்யாசம்...........

ரங்: யாரு? யாரோ, உங்க பந்துன்னு சொல்வாங்களே......

ராக: ஆமாம்......கலெக்டராகப் போயிருக்கவேண்டியவர், எம்.ஏ.பி.எல்...........

ரங்: கேள்விதான்......ரிவின்யூ இலாக்காவிலே இருக்கச்சே என்னமோ இரண்டு மூணுயிரம் கையாண்டதாக.........

ராக: பழி சுமத்தினு, மகாபாவிகள்! கேஸ் நடத்தியிருந்தாரானு, ஜெயம்தான், ஆனு, என்ன செய்தார் தெரியுமோ? ராமா! இது உன்னுடைய சோதனைடாப்பா! இதோ வந்துட்டேன் உன் சேவைக்குன்னு சபதம் செய்துண்டு வாயைத் திறவாமப் படிக்கு மூவாயிரத்தையும் கட்டிவிட்டார். கட்டிவிட்டா விட்டு விடுவாளோ, ஜெயிலுக்குத்தான் அனுப்புவான்னு கண்டவா கண்டபடி பேசினு. ஆனு ராமானுக்ரஹம்னு என்ன சாமான்யமா! மேலதிகாரிகள் வழக்கை வாபஸ் வாங்கிண்டா. பார்த்தீரோ ராம நாம மகிமையை............

ரங்: அவருடைய கதா காலட்சேபம் வைத்தா நல்லது என்கிறீரா...........

ராக: ஏற்பாடு செய்துவிட்டேன் முதலியாரவாள்! அடுத்த புதன் இங்கே வர்ரார்.........

ரங்: அப்படியா......... . சரி............

ராக: மொத்தமா ஆயிரத்தொண்ணு...........

ரங்: ரூபாயா ?

ராக: பவுன்கூடத்தான் தரலாம்......ஆனு முடியுமோ......

ரங்: எங்கே முடியுது......நான் பாருங்க நம்ம கிராமத்திலே துரோபதை அம்மன் திருவிழாவிலே பாரதம் படிக்கறதுக்கு, நம்ம படவேட்டராயர் இருக்காரே, அவரை ஏற்பாடு செய்து

விட்டு, இப்ப படாதபாடு படறேன். ஒரு பயலும் காசு தர மாட்டேன்கிறுன். பூராச் செலவும் நம்ம தலேலேயே விழுந்தது, ரொம்பச் சிரமமாயிட்டது..........

ராக: பாரதம் புண்ய கதைதான்...ஆனுலும்...

ரங்: இராமாயணம்மாதிரி ஆகாது என்கிறீர். ஆமாம், சந்தேகமென்ன, எதோ என் சக்த்தியானுசாரம் நான் பாரதம் ஏற்பாடு செய்தாச்சி, நீங்க உங்க சக்திக்குத் தகுந்தபடி, ராமாயணம் நடத்தி வையுங்கோ. இப்படி நாம், ஆளுக்கு ஒரு காரியமா ஏத்து நடத்திஞத்தான், கட்டிவரும். நான் புறப்பட்டுங்களா, நாளே மறுநாள் தீ மிதிக்கிறது—விறகுக் கடை பக்கம் போகணும்...

ராக: சரி......

## அமளிக் காண்டம்

காமாட்சி: காயா, பழமா?

ராகவாச்சார்: அவனண்டை போனு பழம்கூட அழுகின்னு போயிடும். கொடாகண்டனுச்சே...........

கா: விடியாமுஞ்சி வேலேக்குப் போனு, எப்படி ஜெயம் கிடைக்கும்னேன். உமக்கு எங்கே வரப்போறது, சாமர்த்யம்.

ராக: சும்மா கிடடி! நான் நாலு நாழியாப் பேசி, அதைச் சொல்லி இதைச் சொல்லி, ராமாயணம் வைக்கலாம்னு சொன்னு, அவன், நான் ஏற்கனவே கிராமத்திலே பாரதம் நடத்தறனேன்னு, சொல்லி விரட்டறுன்.

கா: இருந்தா என்னடாப்பா! உன்னுடை செல்வத்துக்கும் வருமானத்துக்கும் இதெல்லாம் ஒரு பெரிய காரியமா, உன்னேப் போன்ற லட்சுமி புத்ரா இப்படிப்பட்ட காரியத்தைச் செய்யாமப் போனு, வேறு யார் முன்வருவா, அப்படி இப்படின்னு, மனசு இளகறமாதிரியாப் பேசணும்......உமக்கு எங்கிருந்து வரப் போறது...முஞ்சியையும் முகரக் கட்டையையும் பார்க்கிறபோதே, கதவை இழுத்துத் தாள்போட்டுடரு........

ராக: போதும் போடி வாயாடினது. டால் அடுக்குதோ உன் முகம்–போய்க் காட்டேன் அவனிடம்...நேக்குச் சாமர்த்யமாகப் பேசத் தெரியல்லே...நோக்குத் தெரியுமேன்னே, போ, போய்ப் பேசி ஜெயித்துண்டு வாயேன் பார்ப்போம்.........

கா: இப்படி வம்பு தும்பும், அடா துடியும் பேசத் தெரியும் உமக்கு, வேறென்ன தெரியும். போன காரியத்தை முடிச்சுண்டு வரச் சாமர்த்தியமில்லேன்னாலும், கோபம் மட்டும் வந்துடறது பொத்துண்டு...........

ராக: ராமா! ராமா! ராமா! தலே தலேன்னு அடிச்சிண்டு எங்காவது தேசாந்திரம் போகலாம்டாப்பா, இவளிடம் சிக்கிண்டு பிராணனே விடறதைவிட. எவண்டி உன்னோட அண்ணனே அழைச்சி, ராமாயணம் நடத்தச் சொல்லுவன். ஊர் பூரா தெரிஞ் சிருக்கு, இலஞ்சக் கேசிலே அவன் சிக்கிண்டதும், வேலேயிலே இருந்து டிஸ்மிஸ் ஆனதும்.

கா: தெரிஞ்சா என்னவாம்! ஏதோ போறுத வேளே— சோதனைக் காலம்...அவர் என்ன ஜெயிலுக்கா போயிட்டு வந்தார்.........

## உபதேச காண்டம்

கமலா: ஏண்டி அம்மா! ஏன் அப்பா உம்னு இருக்கார்......

காமாட்சி: உம்னு இருப்பார், உர்னு பாய்வார், வேறே என்ன தெரியும் அவருக்கு.........

க: ஏண்டி சண்டைபோட்டே அப்பாவோட.........

கா: சண்டை போடாமே, உங்க அப்பாவோட இலட்சணத் துக்கு சரசமாடுவாளோ......துப்புக்கெட்ட ஜென்மம்.........என் தலே எழுத்து.........

க: அடுக்கிண்டே போறயே..............என்ன விஷயம்னு சொல்லேன்............

கா: ரொம்ப அவசியமா, தெரிஞ்சுக்கணுமோ...........

க: சொல்லுடின்னு.........அம்மா......சொல்லேன்......

கா : நேத்துப்பூராச் சொன்னேனேல்லோ ராமாயண காலட்சேபம் நடத்தச் சொல்லி அந்த முதலியைப் போயிப் பாருன்னு...

க : ஆமாம் போகலையா......?

கா : போனரே! போயி, வெறும் கையோடு வீடு திரும்பி வந்தாச்சி. அவன் சம்மதிக்கல்லையாம். நாம்தானே சம்மதிக்க வைக்கணும், அதுக்குச் சாமர்த்யம் இருந்தாத்தானே. எங்க அண்ணன் பேரிலே கேஸ் வந்தப்போ இந்த மாதிரி பித்துக்குளியா நான் இருந்திருந்தேனு, அண்ணன் இன்னேரம் ஜெயிலிலேதான் இருந்திருப்பார்.........

க : ஆமாம், அடுத்தாத்து பாட்டிகூடச் சொல்ரு......நீதான், கலெக்டரிடம் பேசி, கேசை ஜெயிச்சிண்டு வந்தாயாமே......

கா : ஜெயிச்சிண்டு வந்தயாமேன்னு, இவ்வளவு சுலபமாச் சொல்விடறயே.........அந்த கலெக்டர் கொஞ்சத்திலே மனசு இளகி வழிக்கு வந்தானு. முதல்லே, பொம்மனுட்டிகளைப் பார்க்கற வழக்கமில்லேன்னு; ப்யூனிடம் சொல்லி அனுப்பினுன்— நான் வாசற்படியிலே காத்திண்டிருக்கேன்......அம்பா சன்னதிக்குப் போயி, அர்ச்சனை செய்துண்டு பிற்பாடு, போனேன் அவன் பங்களாவுக்கு; ப்யூன் வந்து சொல்ருன், தொரை பார்க்க மாட்டாராம், பொம்மனுட்டிகளைப் பார்க்கற வழக்கம் இல்லையாம்னு. அடே அப்பா! நீ போயி தொரையிடம் சொல்லு, எங்களுக்கும் ஆம்பிளைகளைப் பார்க்கற பழக்கம் கிடையாது. ஆனு, இது ஒரு ஆபத்தான விஷயம் அதனுலேதான் வந்திருக்கா ஐயர் வீட்டம்மான்னு சொல்லுடான்னேன், பிற்பாடுதான் உள்ளே போகவே முடிந்தது. நெருப்புப் பொறி போலப் பேசுருன். இலஞ்சம் ருஜூ ஆகிவிட்டது. சும்மா விடுவதற்கில்லை, அழுது பிரயோஜனமில்லை, அப்படி இப்படின்னு, தாட்பூட்னு குதித்தான்......பிற்பாடு அவனோடு இதமாப் பேசி......

க : தமிழ் தெரியுமோ அவனுக்கு............

க : தட்டுத் தடுமாறிப் பேசுவன். ஆசாமிக்கு நல்ல மனசு. முதலிலேதான் கர்ஜித்தான், பிறகு, நான் அவனோடு பக்குவமாப் பேசி, கோபத்தைப் போக்கி, மனசு இளகும்படிச் செய்ததாலே, சரி! உனக்காகச் செய்றேன், என்ருன். கேஸ் தள்ளுபடியாச்சு. ஒரு பொம்மனுட்டிக்கு இருக்கற சாமர்த்தியத்திலே நூத்திலே ஒண்ணு இல்லை, உன் தோப்பனுருக்கு.........

க : உன் சாமர்த்தியம் யாருக்கும் வராதுன்னு தான், சகலரும் சொல்ருளே!

## பாடாபிஷேக காண்டம்

ரங்கநாதர் : என்னமோ பொழுதுபோக்காப் பேசிகிட்டு இருக்கருனேன்னு பார்த்தா, அந்த ஐயன், தன் வேலையை நம்மிடமே காட்ட ஆரம்பிச்சிவிட்டான்.........

சங்கரசிவம் : அப்படிங்களா? என்ன கேட்டான், எதாச்சும் கடன், கிடன்............

ரங்க : அட அது அல்லய்யா. ஊர் ஜனங்க ஞானமில்லாமே கெட்டுப் போருங்களாம், அதனுலே ஒரு ஆறுமாசம் ராமாயணம் நடத்தணுமாம், செலவுக்கு நான் பணம் தரணும்னு அடிபோட்டான்.

சங்கர : கெட்டிக்காரனுச்சே அந்தப் பாப்பான்.........

ரங்க : ஆமாம், நாம என்ன கொக்கா! சரி, சரின்னு கேட்டுகிட்டு, ஆமாம் சாமி! நடத்தவேண்டியதுதான்; ராமாயணம், புண்யம்தான்—நான்கூட எங்க கிராமத்திலே பாரதம் நடத்திகிட்டு வர்ரேன், எல்லாச் செலவும் நானேதான் செய்யறேன்னு ஒரு போடுபோட்டேன்.........

சங்கர : பாரதம் நடக்குதுங்களா......

ரங்க : பாகவதம் நடக்குது......ஆளேப் பாரு! அதான் நமக்கு வேலையா.........சும்மா சொல்லி வைச்சேன்யா......... சொல்லவேதான், வாயை மூடிக்கிட்டுப் போனுன்; அடே அப்பா! சர்வ ஜாக்ரதையா இல்லேயாஞ நம்ம தலேயிலே, மிளகா அரைச்சிட்டுப் போயிடுவானுகளே. தெரியாமலா பெரியவங்க சொன்னுங்க பிராமணு எமகாதகான் னு......

## பஞ்சபஞ்சரண காண்டம்

கமலா : இவர்தான் ரங்கநாத முதலியார்—எங்க ஊருக்கே பெரிய சீமான்—பூமான்—தர்மவான்......

ரங்கநாதர் : ஐயயோ, ரொம்ப அடுக்கிக்கிட்டே போறிங்களே......உட்காருங்கோ ரெண்டுபேரும்......ஐயா! கணக்கப்பிள்ளே சங்கரசிவம், ஓடிப்போயி, கலரு வாங்கிட்டு சுருக்கா வா......நீங்க யாரு......

கம: இவ, என் ஸ்நேகிதி, சமூக சேவகி சாருபாலான்னு......

ரங்: தெரியாதுங்களே......சினிமா கினிமா பாக்கற பழக்கம் கிடையாது ....

கம: என்ன முதலியாரவாள்! அவசரப்பட்டுப் பேசலாமா... சாருபாலா, யார் தெரியுமோ........இன்கம்டாக்ஸ் ஆபீசர் கோதண்டராம ஐயரோட பொண்ணு......

ரங்: அப்படிங்களா... ..மன்னிச்சுடுங்க......

சாரு: பரவாயில்லடி கமலா! என் டிரசைப் பார்த்து, சினிமா ஸ்டார்னு எண்ணிண்ட்டார்போல இருக்கு......

ரங்: ஆமாங்க... ..இல்லிங்க......தப்பு தாங்க...தோப்பனூரு சௌக்யந்தானுங்களே......இந்த ஊரிலே ரொம்ப நல்ல பேருங்க உங்க அப்பாவுக்கு......

சாரு: இங்கே என்ன! எந்த ஊரிலே அவர் வேலே பார்த்தாலும் அப்படித்தான்......

ரங்: நெருப்புங்க, தப்புதண்டா செய்கிறவங்களைக் கண்டா... ஆமா......சில பேர்களுக்கு, அவர் பேரேச் சொன்னலே, சிம்ம சொப்பனந்தான்......

கம: அப்படித்தான் இருப்பார்......ஆனு அவரோட மனசு தங்கம்......அது பழகினுத் தெரியும்......இப்ப, நம்ம சாரு, ஒரு காரியம் ஆரம்பிச்சிருக்கா, சம்பூர்ண ராமாயண காலட்சேபம் நடத்த ஏற்பாடு செய்திருக்கா......

ரங்: ரொம்ப சந்தோஷம்ங்க......எந்த இடத்திலே, எப்போ, என்னுலே ஆகவேண்டிய காரியம் என்ன, சொல்லுங்க, சங்கோசப்படாம......

கம: சத் காரியத்துக்குச் சங்கோசப் படுவாளோ! பாருங்கோ, இதிலே நான், என் தோப்பனுருக்கே விரோதமாக் கிளம்பிட்டேன். சாருபாலா சொன்னு இந்தக் காலட்சேபம் சிலாக்கியமானதா இருக்கவேணும்னு, சித்ரகூட பாகவதர்தான் வரணும்னு... எங்க தோப்பனுர், இதுக்கு முன்னுலேயே, அவரை இங்கே வரவழைக்க ஏற்பாடு செய்துவிட்டாராம்; பார்த்தேன், சரி அவர் தருகிறதைவிட ஒரு ஐநூறு அதிகம் நாங்க தர்ரோம்னு தந்தி கொடுத்து அவரோட சம்மதத்தை வாங்கியாச்சி......அப்பாவுக்கு முகத்திலே எள்ளும் கொள்ளும் வெடிக்கறது......

ரங் : ரொம்ப சாமர்த்தியமாத்தான் வேலே செய்திருக்கறிங்க... ஆமாம், ஐயாவுக்கு அதாவது நம்ம இன்கம்டாக்ஸ் ஆபீசருக்கு ராமாயணம் ரொம்ப பிடிக்கும்ங்களா......

கம : சொல்லேண்டி சாரு! இவ தோப்பஞருக்கு, உயிர், ராமாயணம்னு சொன்ஞ......வனவாசம் போகிற கட்டத்திலே, கண்ணீர் தாரை தாரையாப் பொழியும்......

ரங் : எனக்குக் கூடங்க, அந்தக் கட்டத்திலே, கைகேயி மேலே வர்ர கோபம், இவ்வளவு அவ்வளவுன்னு சொல்லி முடியாதுங்க......ஆபீசரய்யா அடிக்கடி காலட்சேபம் கேட்க வருவாருன்னு சொல்லுங்க......

கம : வருவாராவா! நீங்க ஒரு பைத்தியம் முதலியாரவாள்! ஆரம்ப விழா வைபவமே, அவர்தான் செய்துவைக்கப் போருர்...

ரங் : பேஷாப் போச்சு போங்க......

கம : சீதா கலியாணத்துக்கு யார் வர்ரா சொல்லுங்க பார்ப்போம்......

ரங் : யாருங்க......?

கம : நம்ம ராஜாஜீ!

ரங் : ஆஹாஹா! சிலாக்கியமான ஏற்பாடு! ராமா! ராமா! உன் பெருமையே பெருமை.

கம : பட்டாபிஷேகத்துக்குத்தான் நாங்க போட்டிருக்கிற பிளான் பலிக்குமோ பலிக்கதோன்னு தெரியல்லே......உம்மோட சொல்றதிலே என்ன தப்பு, நம்ம கவர்னர் இருக்காரே......

ரங் : நம்ம கவர்னருங்களா, என்னங்க அவருக்கு......

கம : அடடா! அவருக்கு ஒண்ணுமில்லே முதலியாரவாள்! அவரைத்தான் பட்டாபிஷேகத்துக்கு அழைக்கிருேம்......

ரங் : அடா அடா! இதைச் செய்துட்டாப் போதுங்க, நம்ம ஊரே பூரிச்சிப்போகும்......

கம : செலவுதான் நிறைய ஆகும்......பாருங்க, கன்னேய்யா செட்டியாரிடம் கதை கதையா இதைச் சொன்னேம், அந்தக் கர்மி நூறு ரூபா கொடுத்துவிட்டு, இன்னும் தொந்தரவு கொடுக்காதிங்கன்னு சொல்லிவிட்டான்.

சாரு : ஏண்டி ! கமலா ! சில பேர் கர்மிகளாத்தான் இருப்பா! ராம காரியத்துக்குத் தர மனசு வராது, இன்கம் டாக்சுக்குக் கொட்டிக் கொடுப்பா......

ரங் : என்னுடை மனசு, பெரிசு......இப்ப காலம் கொஞ்சம் கஷ்டமானது......

கம : எல்லோருடைய கஷ்டமும் போறதுக்குத்தானே ராமாயணமே......

ரங் : ஆமாமாம் !

கம : பகவானுடை காரியத்துக்கு தயக்கமே இருக்கப் படாது......

ரங் : சந்தேகமென்னங்க.........ஒரு இரநூறு எழுதிடட்டுங் களா......

கம : உங்க இஷ்டம்......

ரங் : அதிகம் செய்கிறவன்தான்.........இப்ப கொஞ்சம் தொந்தரவு......எல்லாம் ஆபீசரய்யாவிடம்தான் இருக்கு நம்ம கணக்குப் புத்தகம் ஜாடாவும்......

கம : ராமனிருக்கார் போங்க உங்க பங்கிலே......ஆபீசர் சத்யசந்தர்......பக்திமான்களிடம் பொகுப் பிரீதி......முன்னூறு எழுதுங்க......

ரங் : சரிங்க......தடை சொல்வேனுங்களா.........கணக்கப் பிள்ளே ! மூணு.........ஆமாமாம்.........உள் அலமாரியிலே......... கொண்டு வா......கலர் சாப்பிடுங்க......

# புதிய மடாதிபதி

இடம் பெறுவோர்: மடாதிபதி அருளாளர், முருகதாசர், கந்தபூபதி, மாசிலாமணி, சித்ரா, பக்தர், பணியாட்கள், போலி மடாதிபதி.

நிகழ்ச்சி இடம் : மடாலயமும், அதைச் சுற்றி உள்ள இடமும்.

[சாலை ஓரத்தில் உள்ள சற்று கலனான சாவடியில் அழுக்கேறிய உடையணிந்த ஒருவன் படுத்துப் புரண்டு கொண்டிருக்கிறான்...தூக்கம்வரவில்லை. மடத்து, பண்டாரங்கள் இருவர், ஏதோ பேசிக் கொண்டு அவ்வழியே வருகிறார்கள்.]

ஒருவன்: திட்டம் நன்றாகத்தான் இருக்கு...வெற்றி கிட்டினால் தானே......

மற்றொருவன்: வேலை செய்தால்தானே வெற்றி கிடைக்கும்...

ஒரு: வேலையும் சீக்கிரம் நடந்தாகவேண்டும்......

[சாவடிப்படியில் உட்காருகிறார்கள்]

மற்: கண்மூடி மக்கள்—கொட்டித் தருகிறார்களே, கேட்கும் போதெல்லாம்......

ஒரு: நாம்தான் மிரட்டுகிறோமே......நரகம் என்று......

மற்: எல்லோரும் அல்ல......தொகை குறைந்துகொண்டே வருகிறது......

ஒரு: பக்தர்கள் தொகை குறைந்துவிட்டால் பிறகு அது நமக்குத்தானே நஷ்டம்......

மற்: (ஆயாசத்துடன்) நமச்சிவாயம்......நமச்சிவாயம்!... மடமும் இருக்கவேண்டும் .....அவனும் தொலைய வேண்டும்...... அதற்கு உன் திட்டம்தான் சிலாக்யமானது......(சுற்று முற்றும் பார்க்க, படுத்துப் புரண்டபடி இருப்பவன் தெரிகிறான்—உற்றுப் பார்க்கிறான்—மீண்டும் மீண்டும் பார்க்கிறான்—கூட இருப்பவனை அழைத்துக் காட்டுகிறான்—இருவரும் படுத்திருப்பவன் அருகே சென்று உற்றுப் பார்க்கிறார்கள்......ஆச்சரியத்துடன்.)

ஒரு: சரியான பாத்திரம்......!

மற்: (படுத்திருப்பவனைப் பார்த்தபடி) திட்டம் பலித்தது...... வெற்றி......நிச்சயம்.

[தட்டி எழுப்புகிறார்கள். கண் விழித்து அவர்களைப் பார்த்துவிட்டு]

படுத் : காவி உடை கண்டதும் கன்னத்தில் அடித்துக் கொள்ளும் கபோதி நானல்ல......போங்கள்......போங்கள்......

ஒரு : (மற்றவனைப் பார்த்து) இவனே சரியான ஆயுதம் மடத்தானை ஒழிக்க......

படுத் : என்ன உளறல் இது......ஆயுதமாம் ஒழிப்பதாம்......

மற் : அப்பா......அச்சம் வேண்டாம்........அரனடியார்கள் நாங்கள் அருளாளர் சீடர்கள் !

படுத் : ஓஹோ ! ஜடாமுடிதாரியின் சீடர்களா ! வாட்ட வருத்தமின்றி வாழ்வதால் ஓங்கி வளர்ந்திருக்கிறார்கள்......ஊரார் உழைப்பை உறுஞ்சும் உலுத்தர்களே ! நான் ஓர் பாட்டாளி...... ஆனால் ஏமாளியல்ல ! உழைப்பாளி......ஊர் சொத்தைத் தின்று விட்டு ஓம் நமச்சிவாயா என்று கூவிக் கிடப்பவனல்ல ; என் முன் என்ன வேலை ? வேறு இடம் பாருங்கள்......

ஒரு : கந்தபூபதி ! காரியம் பலித்தேவிட்டது. நம்மவர்களிடம் இவ்வளவு துவேஷம் கொண்டுள்ள இவனே சரியான ஆயுதம்......

கந்தபூபதி : முருகதாசரே ! முடித்துவிடலாம்.

[படுத்திருந்தவன் எழுந்து உட்கார்ந்து கோபத்துடன்]

படு : யாரய்யா நீங்கள்......சாவடியிலே உறங்குபவனைத் தொல்லை தருகிறீர்கள்......

கந் : கோபியாதே அப்பா ! நாங்கள் பண்டாரங்கள்...... ஆண்டிகளிடமா ஆத்திரம் காட்டுவது......

படு : ஆண்டிகளாம், ஆண்டிகள் ! மோசாண்டிகளே ! ஊரிலே எவ்வளவோ மக்கள் உழைத்து அலுத்துக் கிடக்க, உண்டு கொழுத்து ஊன் சுமந்து திரிகிறீர்களே, உங்களுக்கு வெட்கம், மானம் இல்லை !

[இருவரும் கோபம் கொள்ளாமல் களிப்புடன் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்கிறார்கள்.]

கந் : கோபியாதே நண்பா ! எமது காவியைக் கண்டு கலங்காதே—! (அருகே உட்கார்ந்து) பொருள் தருகிறோம், வறுமையை ஓட்டிவிடுகிறோம், ஒரு இலட்சம் தருகிறோம்.

படு: (கேலியாக) ஒரு இலட்சமா! ஓட்டாண்டியாகிய எனக்கா? என்னய்யா கேலியா செய்கிறீர்கள்......பதிகம்பாடி ஓட்டாஞ்சல்லிகளைத் தங்கமாக்கப் போகிறீர்களா......!

முரு: (சிறிது சலிப்புடன்) மாயமும் அல்ல, மந்திரமும் அல்ல......உண்மையாகவே பணம் அப்பா......பணம்.

கந்: இதோ பாரப்பா! பண்டாரக் கூட்டம் என்றாலே உனக்குப் பிடிக்கவில்லையல்லவா?

படு: பண்டாரக் கூட்டத்திடமா பகை! இல்லை! எவனொருவன் ஊராரை ஏய்க்க மதவேடம் புனைந்து திரிந்து மதோன்மத்தனாக வாழ்கிறானோ அவனை நான் மனிதனென்றுகூட மதிப்பதில்லை..... ஏனெனில்......

கந்: விளக்கம் வேண்டாம்......உன் அபிப்பிராயத்தை மறுக்கவில்லை.........சரி, அப்படிப்பட்ட மதோன்மத்தர்களின் மன்னனை வீழ்த்த உனக்கு ஓர் சந்தர்ப்பம் கிடைத்தால்......... (குறும்பாகப் பார்க்கிறான்)

படு: (ஆர்வத்துடன்) மகிழ்ச்சியுடன் வரவேற்பேன்!

கந்: மெத்தச் சந்தோஷம்......இனி கேள் சேதியை......

முரு: கந்த பூபதி! தனி இடம் சென்று பேசுவது......

படு: சரி, கிளம்புங்கள்......

[மூவரும் புறப்படுகின்றனர்.]

## மடாலயம்

[மடாலயக் கூடத்தில் மடாதிபதி அழகிய அலங்காரப் பீடத்தில் அமர்ந்துகொண்டு, எதிரே பக்திப் பரவசத்திலே உள்ள ஒரு சீமானுக்கு உபதேசம் செய்து கொண்டிருக்கிறார். மடாதிபதியின் கையாள் உடன் இருக்கிறான்.]

அருளாளர்: (கெம்பீரமும் உருக்கமும் கலந்தக் குரலில்) ஆகவே, எவனொருவன் இந்திரியங்கள் எனும் துஷ்டக் குதிரைகளுக்கு அறிவெனும் கடிவாள மிட்டு அடக்கி, நன்னெறி எனும்

பாதையிலே செலுத்துகிருனே, அவனே அரண்டி என்னும் திருத்தலத்தை அடைவான்.

[கையாள், பக்திச் சீமானை, பார்க்கிருன் சீமான், அருளாளர் காதணி விரலணி இவைகளைக் கண்டு ரசிக்கிருர்.]

இடையே இச்சை எனும் நச்சுக் கொடி கிடக்கும்.

[அருளாளர் எதிரே உள்ள பழத்தட்டுகளைப் பார்க்கிருர், பக்தர்.]

பச்சென்றிருக்கிறதே என்று எண்ணிச்சிக்கினல் சீரழிவர். அதனைக் கடக்கவேண்டும். அதற்கு நிராசை எனும் சாட்டை கொண்டு குதிரையைத் தட்டவேண்டும். மெய்யன்பனே! பரமனருள் பெற்றவர்கள் எல்லோரும் இங்கனம் செய்தே முக்தி பெற்றனர்.

சீமா: (கண்களை மூடியபடி) ஆஹா! தன்யனுனேன், குருநாதா! உணர்ந்தேன்......

[மடாலயத்தின் வேருேர் பகுதியில், கந்தபூபதி முருகதாசர், படுத்திருந்தோன் மூவரும் இரகசியமாகப் பேசிக்கொண்டிருக்கிருர்கள். சலிப்புடன் படுத்திருந்தோன் பேசுகிருன்.]

படு: புரிகிறதய்யா, புரிகிறது......பன்னிப் பன்னிப் பேசிப் பாதிப் பிராணனை வாங்கிவிட வேண்டாம்.

முரு: நண்பா! சாமான்யமான காரியமல்லவே.

படு: சரி, சரி..... மதயானையின் மண்டையைப் பிளக்க வேண்டும்.

கந்: அதற்கு ஏற்ற ஆண் சிங்கம், நீ......

படு: இரத்தம் குடிக்கும் நரிகள்—?

படு: (அசட்டுச் சிரிப்புடன்) நாங்கள் என்றுதான் வைத்துக் கொள்ளுமய்யா... ..

படு: (உறுதியாக) இதோ பாரய்யா, பண்டாரம்! நான் இந்தச் சதிக்குச் சம்மதிப்பது என் சொந்த இலாபத்துக்கல்ல...... அவன் போனல் நீயோ......நீயோ......பட்டம் பெறுவது நிச்சயம்.. ...எனக்கு இலாபம் இல்லே.

கந் : கேள், கொடுக்கப்படும்......

படு : கேட்கத்தானே போகிறேன்......மடத்தை உங்கள் கையிலே ஒப்படைக்கிறேன்..... ஆனால், அங்கு விழா அன்று கிடைக்கும் பணம் அவ்வளவும் எனக்கு......என் விருப்பப்படி நடப்பேன்—குறுக்கிட்டால் ...தொலைத்து விடுவேன்.

கந் : ஒரு நாள் உன் இராஜ்யம்! அவ்வளவுதானே......

படு : அவ்வளவேதான்......என் திட்டப்படி நடந்தால் வெற்றி—தெரிகிறதா......

முரு : சந்தேகமே வேண்டாம்......சர்வேஸ்வரன் மீது ஆணை......

படு : (வெறுப்புடன்) சர்வேஸ்வரனை ஏனய்யா அழைக்கிறீர்கள், சண்டாளத் திட்டம் போட்டுவிட்டு......

கந்த : பழக்கத்திலே வந்துவிட்டது, சம்போ, சர்வேஸ்வரா, என்று சொல்லிச் சொல்லி......

[மடாலயக் கூடத்தில் பக்தன் அருளாளர் எதிரே வீழ்ந்து வணங்கியபடி]

பக் : சம்போ! சர்வேஸ்வரா! குருநாதா! .....

[அமர்ந்ததும்.]

மடா : மெய்யன்பனே! பொன்னூர் மேனியனைப் போற்று! போக போகாதிகளில் இலயிக்கும் சுபாவத்தை மாற்று. பார், பிறகு—பாரிலே இன்பம், பரமபதத்திலே எல்லையில்லா ஆனந்தம் தோன்றும்.

கை : மடாலயத்திடம் ...விசேஷமான அக்கரை...... ஏதேதோ செய்யவேண்டும் என்று அவருக்கு நெடுநாட்களாக அவா......

மடா : அம்பலவாணு! அவனருள் பெற்றவர்க்கே அவ்வெண்ணம் உதயமாகும். மலட்டு மாடு, மதுரமான பால் தருமா?

[கந்தபூபதி அங்கு வருகிறான். அவனைக் கண்டதும் கையாள் குறும்பாகச் சிரிக்கிறான். மடாதிபதி கண்களை மூடிக்கொள்கிறார்.]

கை : ஸ்வாமி நிஷ்டையில் இறங்கி விட்டது......வாரும், போவோம்......

[வணங்கி விட்டுச் செல்கிறார்கள்.]

மடா : (அவர்கள் சென்ற பிறகு, கண்களைத் திறந்து) காயா—பழமா ?

கந்த : காயும் கனியுமே இந்தக் கந்தன் கைபட்டால்.

மடா : (மலர்ந்து) பழம் எவ்விடத்தது ?

கந்த : தோட்டம் அருகாமையில்தான்......ஆனால் வேலியும் காவலும் உண்டு......

மடா : (கோபப் பார்வையுடன்) வேலியும் காவலும் ! எவருக்குமா......

கந்த : (புன்னகையுடன்) அதிபருக்குக் கிடையாது......கனி கிடைக்க ஏற்பாடு செய்துவிட்டேன்—கட்டளையைத்தான் எதிர் பார்த்து நிற்கிறேன்......கனி, தங்க நிறம் !

மடா : (பூரித்து) அம்மையப்பன் அருள் கலந்ததோ......?

கந்த : மருள் கிளம்பிற்று......முதலில்—கனி, வைணவம்......

மடா : திருப்பாவை திருவெம்பாவை மாநாடு நடத்துவோம் !

கந்த : லாவண்யவதி.

மடா : உனக்கா தெரியாது......

கந்த : வஞ்சிக்கொடி !

மடா : நஞ்சிராதே......

கந்த : பஞ்சவூர் அல்ல......பக்குவமாகப் பயிரான பாரி ஜாதம்,

மட : பெயர்......

கந்த : சித்ரா......

மடா : என்ன அருமையான நாமதேயம்......என்னதான் அலங்காரம் செய்துகொண்ட போதிலும், இந்தச் சடையும் முடியும் சனியனாகவன்றோ இருக்கும், கன்னியின் கண்ணும் கருத்தும் கலங்குமோ ! கச்சி ஏகம்பா !

## மடாலயத்தை அடுத்த ஒரு விடுதி

[நெற்றியில் பொட்டிட்டுக் கொண்டிருக்கிறாள், எழில் உள்ளமாது. கட்டிலின் மீது கந்தபூபதி உட்கார்ந்திருக்கிறான்.]

கந்த: சொக்கிவிடுவான், சித்ரா!......சொர்ணாபிஷேகம் உனக்கு......

சி: சகிக்காது அவன் நடை உடை பாவனை......

கந்த: சித்ரா! உன் சாமர்த்யத்தைத்தான் நாங்கள் சகலரும் நம்பிக் கொண்டிருக்கிறோம்.

சி: எனக்கு அதிகம் சொல்ல வேண்டுமா......

[மோகப் பார்வை காட்டி.]

சி: எப்படி......!

கந்த: (பரவசமாகி) சித்ரா......

சி: குருநாதருக்குத் துரோகம் எண்ணலாமா......(குறும்பாக)

கந்த: (தாவிச் சென்று சித்ராவின் கரத்தைப் பிடித்திழுத்து அருகே நெருங்கியபடி) சித்ரா......!

சி: (அவன் முதுகைத் தட்டி) பைத்யமே! சித்ரா சித்ரா என்று ஜெபம் செய்து கொண்டிருந்தால் போதுமா......நேரமாகிறதே......

## வசந்த மண்டபம்

[மடாலயத் தோட்ட வசந்த மண்டபத்தில் உலாவிக் கொண்டே.]

மடா: சித்ரா...

[தோட்டப் பாதையில் கந்த பூபதியும் சித்ராவும்]

கந்த: (மெல்லிய குரலில்) சித்ரா... ..இரண்டு பகல் இரண்டு இரவு...ஆசாமி, தேனில் வீழ்ந்த ஈயாக வேண்டும்...

[சித்ரா தலை அசைக்கிறாள்]

கந்த: மடம் மகோற்சவம் என்று ஏதேனும் பேசினல்...

சி: முத்தமிட்டு வாயை மூடிவிட வேண்டும்—பாடம், கவனமிருக்கிறது...

[மடாதிபதி இருக்குமிடத்தருகே வந்ததும், கந்தபூபதி பின் தங்கிவிட, சித்ரா மட்டும் ஒயிலாகச் செல்கிருள். அவளைக் கண்டதும் மடாதிபதி பூரித்துப் போகிருர்.]

மடா: வர்ணனையைவிட வஸ்து விசேஷமாகத்தான் இருக்கிறது—சொர்ணபிம்பமே! உட்கார் இப்படி. நெடு நேரம் நின்ருல் உன் மலரடி கசங்கிவிடும்.

சி: (பாசமாக பார்த்து) இந்தக் கண்களை விடவா?

மடா: கண்களுக்கென்ன......

சி: தங்கள் தரிசனத்துக்காகக் காத்துக் காத்துக் கிடந்து கண்கள் பூத்துப்போய் விட்டன.

மடா: பார்த்தபின்......என் வேடம்.........?

சி: சிவலோகநாதனைக் காண்பது போலிருக்கிறது

மடா: (அவள் கரத்தைப் பற்றியபடி) சிங்காரி! உன்னைக் கான நான் காலை முதல் தவம் கிடந்தேன். மடத்திலேயோ மன்ஞர்சாமிகள் வருவதும் போவதும் ஓயவில்லை. என்மனமோ அங்கில்லை மோகனங்கி!

சி: சுந்தரரூபா!

மடா: ஆஹா ஹா......(அணைத்தபடி) என் கண்ணே......... கனியே.........

(அணைப்பிலிருந்து விடுவித்துக் கொண்டு]

சி: இதோ தங்கக் கோப்பையிலே கனிரசம்—தங்களுக்கென்று.

[கனிரசக் கோப்பையைக் காட்ட]

மடா: உன் பவளவாயைவிடவா அந்தக் கோப்பை வசீகரமானது......உன் பாகுமொழி போதுமே—

சித்ரா: பழரசம் வேறு வேண்டுமா........

[அவளை அணைத்துக்கொள்ள ஆவலாகச் செல்கிறார். அவள் இலாவகமாக அவரை விட்டு விலகிய படி, கோப்பையைத் தருகிறாள். பழரசத்தைப் பருகுகிறார், சித்ராவைப் பார்த்தவண்ணம்

சைவ வேடச் சின்னங்களான உருத்திராட்சமாலை முதலியனவற்றை மடாதிபதி கழற்றி ஒரு புறத்தில் தட்டிலே வைக்கிறார்]

## மடாலய உள் கூடம்

[மடாலயத்தின் வேறோர் பக்கம், பல தட்டுகளிலே பழவகைகளைப் பணியாட்கள் ஒழுங்காக அடுக்கி வைக்கிறார்கள். பெரிய மாலைகள் —உதிரிமலர்கள் கூடைகளிலே வைக்கப் படுகின்றன. விபூதி மடலில் விபூதியைக் கொட்டி அதிலே பன்னீர் தெளிக்கிறார்கள். மணிகளைத் துடைத்து வைக்கிறார்கள். மயில் விசிறிகளை எடுத்து வைக்கிறார்கள்.

பணியாட்கள் வேலை செய்து கொண்டே பேசிக் கொண்டிருக்கிறார்கள்.]

ஒரு. பணியாள் : பாழாப்போன பவனி உற்சவம் நம்ம உயிரிலே பாதியைப் போக்கி விடும்—எவ்வளவு வேலை, எவ்வளவு வேலை.........

மற். பணி : நரம்பு முறிய நாம்ப பாடுபட்டானதும் மாப் பிள்ளை மாதிரியா அவர் பல்லக்கிலே ஏறிகிட்டு பவனி வருவாரு............

ஒரு பணி : விவரம் தெரியாத கும்பல், அவர் நேரே கைலாயத்திலிருந்து வந்தார்னு பேசிகிட்டுக் கீழே விழுந்து விழுந்து கும்பிட்டுவிட்டுக் கூத்தாடப் போவுதுங்க ........

[விபூதி மடல் கை தவறிச் சாய்கிறது விபூதி கீழ கொட்டிவிட, அதை ஒரு புறம் கூட்டித் தள்ளிக்கொண்டே...... .....]

மற். பணி : இதுக்கு என்ன தவியாத்தவிக்கிறுங்க

தெரியுமா—பக்தனுங்க.........

ஒரு. பணி : இங்கே நீ கூட்டிக் குவிக்கிறே......ஆமாம், குருநாதர் அறைப்பக்கம் ஒரே இருள் மயமாக இருக்கே, என்ன விஷயம்......

மற். பணி : எனக்கும் சந்தேகந்தான்—பவனி உற்சவத்துக் காக பத்து புது பதிகமாவது தயாரிப்பாரு...

[சாம்பிராணித் தூபம் போடும் கலசத்தைச் சுத்த மாகத் துடைக்கிருன் ஒரு பணியாள். மற்றவன் ரிஷப உருவம் கொண்ட பிடிபோட்ட மணி யைத் துடைக்கிருன்.]

## மடாலயக் கொலு மண்டபம்

[சாம்பிராணித் தூபம் குபு குபுவென வருகிறது. மணி ஓசையும் பக்தர்களின் வாழ்த்தொலியும் கிளம்புகின்றன. பக்தர்கள் பலர்—கூடி யுள்ளனர். மடாதிபர், விழாக் கோலத்துடன் பீடத்தில் அமர்ந்திருக்கிருர். கையாள், மயில் விசிறிக்கொண்டு வீசிக்கொண்டிருக்கிருன். கந்த பூபதியும் முருகதாசரும் பணிவுடன் மடாதி பதியின் பக்கம் நின்று கொண்டுள்ளனர். மடாதிபர் கண்களை மூடிக்கொண்டிருக்கிருர், முகத்திலே மலர்ச்சி காணப்படுகிறது. மணி ஓசை நின்றதும், கண்திறக்கிருர் கையாளும் கந்தபூபதியும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள் கின்றனர் மடாதிபர், கையைக் காட்டுகிருர் அமைதியாக இருக்கும்படி. சந்தடி நின்று விடுகிறது]

மடாதிபதி : மெய்யன்பர்களே ! இந்த வருஷம் பவனியை நிறுத்திவிட்டோம்.........

[பக்தர்களிடையே ஆச்சரியம்]

நமச்சிவாயத்தின் கட்டளை வேறு விதமாகி விட்டது.

[மடாதிபர் எதிரே சிறு சிறு முடிப்புகளாக காணிக்கைப் பணம் வரிசையாக வைக்கப்பட்டிருக்கிறது. கந்தபூபதியை மடாதிபர் நோக்க, கந்த பூபதி கையாளைப் பார்க்க, கையாள், ஒரு சுவடி எடுத்துப் பிரித்துப் படித்தபடி]

கை : மூன்று இலட்சத்து முப்பதாயிரம்—பழைய இருப்புடன் சேர்த்து இருபத்தெட்டு இலட்சத்து அறுபதாயிரம்......

மடா : அதிலே ஒரு இலட்சம், வேலையற்றோர் உதவிக்காக ஊர்ப்பெரியவர் மன்றத்துக்குக் கொடுக்கிறோம் !

[ஊர்ப் பெரியவர் மன்றத் தலைவர் மகிழ்ச்சி மேலிட்டு அருளாளர் வாழ்க ! அறம் வாழ்க ! அருளாளர் வாழ்க ! என்று மன எழுச்சியுடன் கூறி, மடாதிபர் அருகே சென்று வணங்கி, பண முடிப்பு பெறுகிறார்]

[பலரும் ஆச்சரியப்படுகிறார்கள். கந்தபூபதியைக் கையாள் முறைத்துப் பார்க்கிறான்.]

மடா: கந்தபூபதி ! இரண்டு லட்சம் ரூபாயை நமது ஊர் நாட்டாண்மைக்காரரிடம் கொடுத்து ஏரி, குளம், குட்டைகளைச் சீர் செய்து பாதைகளைச் செப்பனிடச் சொல்லு. (கணக்கெழுதுவோனைப் பார்த்தபடி) அப்பனே ! ஏட்டிலே குறித்துக் கொள்.

அனாதை விடுதிக்கு அறுபதாயிரம், முதியோர் பள்ளிக்கு நாற்பதாயிரம், தமிழ் ஆராய்ச்சிக்கு ஒரு இலட்சம், இசைமன்றத்துக்கு ஐம்பதாயிம் ஏழைகளின் இலவசப் படிப்புக்கு இரண்டு லட்சம்.

[மடாதிபதியின் ‘நன்கொடை’ கேட்டு மக்கள் ஆனந்த ஆரவாரம் செய்கிறார்கள். கந்தபூபதி கடுகடுத்த முகத்துடன் மடாதிபதியை பார்க்கிறான்,]

மடா: (குறும்பாக) ஆயாசப்படாதே அப்பனே ! நமச்சிவாயத்தின் திரு உள்ளப்படி நாம் நடக்கிறோம்.

[அருளாளர் வாழ்க ! அறம் வாழ்க ! என்று மக்கள் ஆரவாரம் செய்கின்றனர்.]

மெய்யன்பர்களே! இன்று நாம் நடந்து கொள்ளும் முறை உமக்கு வியப்பாக இருக்கும்—கந்தபூபதிக்கு கசப்பு—முருக தாசருக்கு கோபம்—நாம் இன்று மாயாபந்தம் விடுபட்டோம்—மறு பிறவி கொண்டோம் மகேஸ்வரன் அருளால், என் அப்பன், இமயம் வாழும் சொக்கன் நேற்றிரவு என் முன் தோன்றி எனக்குப் புதிய கட்டளைகள் பிறப்பித்தார்,

[பக்தர்கள் ஆச்சரியப்படுகிருர்கள். ஊர்ப் பெரிய வர்கள் உள்ளன்புடன் பேசுகிருர்கள், வணங் கியபடி...]

பெரி: பூலோக கைலாயமன்ருே இது. இங்கு அரன் வருவது முறைதானே—அரனைக் கண்ட அண்ணலே! வாழ்க! சிவனுடன் பேசிய செம்மலே வாழ்க!

மடா: அன்பர்களே! (சிவனுர் பேசுவது போன்ற குரலில்) வெண்பட்டு உடுத்துகிருயே நீ—நீ காணும் மக்கள் கந்தல் ஆடை யுமின்றி உள்ளனரே, காண்கிலேயோ (சொந்தக் குரலில்) என்று என்னை என்னப்பன் கேட்டார். உனக்கு மேனியிலே சந்தன மணம்—மக்களின் உடலிலே உழைப்பால் உண்டாகும் வியர் வையின் நாற்றம்! உன் நாசிக்கு எட்டவில்லையா என்று கேட் டார்.

[பக்தர்களின் மனம் உருகுகிறது]

மடா: (சிவனுர் பேசும் பாவனையிலேயே) உனக்கு அறுசுவை உண்டி—உழைப்பாளிக்கு அரைவயிற்றுக் கஞ்சி. உனக்குப் பாலும் பழமும் பட்சணமும்! அவர்களுக்குப் பழம் சோறும் பருக்கையும் கம்பங்கூழும். உனக்கு பஞ்சணை! அவர் களுக்குக் கட்டாந்தரை! உனக்கு அபிஷேகம், ஆராதனை, அலங் காரம்! அவர்களுக்குக் குன்மம், காசம், கொடுநோய். உனக்குக் கோட்டைபோலக் கோயில், கொலு மண்டபம்! அவர்களுக்கு நண்டுவளைபோல் வீடு. ஏ! மட அதிபனே! இதைக் கண்டாயே, உன் கண்களிலே நீர் சுரக்கவில்லையா? இதயம் துடிக்க வில்லையா—இரத்தம் கொதிக்கவில்லையா? (சொந்தக் குரலில்) என்று கேட்டு கடுங்கோபத்துடன் என் எதிரே நின்ருர்.

பெரி: (மனம் உருகிய நிலையில்) என்ன அற்புதம்! இறை வனின் திருவிளையாடலை என்னென்பது!

மடா: நான் மௌனமாக இருந்தது கண்டு இமயவன் என்னை ஏறிட்டுப் பார்த்துக் கூறினர்.............. (சிவனுர் பேசும் பாவனையில்) உன்னிடம் பக்தகோடிகள் காணிக்கை தருவதும் வேலிகள் விடுவதும் எதற்கும்! உன் சுகபோகத்துக்கா? நீ.

ஏழைகளுக்கு இதம் செய்யவேண்டும் என்பதற்காக அல்லவா! (சொந்தக் குரலில்) என்று சிவனார் சீற்றத்துடன் கேட்டார். நான் அஞ்சவில்லை.

[பக்தர்கள் முகத்தில் கவலை.]

மடா: காரணம் என்ன? என் மனதிலே இருந்துவந்த கறை—அஞ்ஞானம், என்னைவிட்டு அகலவில்லை. பந்தம், பாசம், பற்று, சுயநலம் இவை என் மனதிலே இருந்துகொண்டு, அஞ்சாதே! அரன் மிரட்டினால் என்ன! உன் உரிமையை இழக்காதே—என்று கூறி என்னை உசுப்பின!

பெரி: சிவனாரிடம் சண்டையா! சிவ சிவா!

மடா: நான், கர்ம பலன்படி காரியம் நடக்கிறது, கடம்பா, கச்சியேகம்பா, காமாட்சி மணாளா, காலனைக் கொன்றவா!—என்று துதித்தேன். சிவனார், (சிவன் பேசும் பாவனையில்) ஏ! அஞ்ஞான சொருபமே! என் அடியவனை விட்டு வெளியே, வா!—(சொந்தக் குரலில்) என்று முழக்கமிட்டார்—முக்கண்ணுடையார்.

பக்தர்கள்: ஆஹா......பிறகு......

மடா: என் தலை சுழன்றது!

பக்: ஐயோ.........பிறகு.........

மடா: மார்பு வெடித்துவிடும் போலாகிவிட்டது!

பக்: அடடா!.........பிறகு.........

மடா: என்னென்பேன் இறைவனின் திருக்கூத்தை! என் எதிரில் நான் நின்றேன்.

[அனைவரும் திடுக்கிடுகின்றனர்.]

மடா: என்னைப் போன்றே ஓர் உருவம் என் எதிரே நின்றது. பெரிய சுமையைக் கீழே இறக்கிவிட்டவனுக்கு உண்டாகும் ஆனந்தம், எனக்கு! என் எதிரே இருந்த உருவம் உறுமிற்று......நான், பிரபோ! இதென்ன என்று கேட்டேன்......

பக்: சிவனார் என்ன சொன்னார்.........

மடா: (சிவனார் பேசும் பாவனையில்) பாலகா! ஒவ்வொருவர் உள்ளத்திலும் பற்றும், பாசமும், தன்னலமும் உண்டல்லவா? மனிதனின் மனதிலே அஞ்ஞானமும் உண்டு மெய்ஞ்ஞானமும் உண்டு. இரு சக்திகளுக்கும் கடும்போர்—மனம்எனும் களத்திலே! எவனொருவன் அஞ்ஞானத்தை விரட்டி அடிக்கிறானோ

அவனே அரனடியான்—இதோ உன்னைப் போன்றே காணப் படும் உருவம், உன் எதிரே நிற்கும் உருவம், உன் உள்ளத்திலே இருந்துவந்த அஞ்ஞானம்! அந்த அஞ்ஞான சொரூபத்தை நான் வெளியேற்றிவிட்டேன். ஆனால், நான் மறைந்ததும், அஞ்ஞான சொரூபம் மிரட்டும்—அஞ்ஞாதே! தங்க இடம் கேட்கும்—இசையாதே! விரட்டு—விரட்டு—உன் அடியார்களிடம் கூறிடு—அழித்துவிடு. அஞ்ஞான சொரூபத்தை மீண்டும் உன் உள்ளத்திலே குடிபுகவிட்டால்! பிறகு நான் வாரேன் உன்னைக் காப்பாற்ற, (சொந்தக் குரலில்) என்று கூறிவிட்டு, அஞ்ஞானத்தை விரட்டினார்—அது அகோரக் கூச்சலிட்டுவிட்டு ஓடிவிட்டது-நான் தான் தன்யனானேன்! தயாபரனின் தொண்டனானேன்! மக்களின் தோழனானேன்! உண்மைக்கு ஊழியனானேன்! ஊராருக்கு உழைப்பாளியானேன்! ......ஆனால் மெய்யன்பர்களே! மீண்டும் அந்த அஞ்ஞான சொரூபம் வருமோ—வந்தால் என்ன செய்வது என்று அச்சம் எனக்கு. அரன் விட்ட வழிப்படி நடக்கட்டும்.

[கூட்டத்திலே பரபரப்பு—அமளி. உண்மை மடாதிபதி ஓடிவருகிறார்—அலங்கோலமாக, ஒரு பணியாளுடன்—கூவியபடி.]

[உண்மை மடாதிபதியைத் தொலைவிலே கண்டதும், போலி மடாதிபதி]

போ. மடா: மெய்யன்பர்களே!......அதோ......அதோ......

[என்று அச்சம்மேலிட்டு அலறும் பாவனையில் கூவ, பக்தர்கள் திடுக்கிடுகிறார்கள், மற்றோர் மடாதிபதியின் திடீர்ப்பிரவேசம் கண்டு.]

உ. மடா: (ஆத்திரமாகி) யாரடா அவன்—அயோக்கியா! அக்ரமக்காரா! வேஷக்காரா! நான் வசந்தமண்டபத்திலே இருந்த சமயம் இங்கே புகுந்து என் பீடத்தில் அமர்ந்துகொண்டு பிதற்றுகிறாய்......பேயர்களே! எப்படி இதை அனுமதித்தீர்கள்! பித்தர்களே! இதென்ன பாதகம்!

[இரு மடாதிபதிகளைக் கண்ட மக்கள் திகைத்து]

மக்: இங்கேயும் மடாதிபதி—அங்கேயும் மடாதிபதி—என்ன அதிசயம்......

போ. மடா: மெய்யன்பர்களே! வந்துவிட்டது அஞ்ஞான சொரூபம்......

[மக்கள் திடுக்கிடுகிறார்கள்]

உ. மடா: யாரடா அஞ்ஞான சொரூபம் அக்ரமக்காரா!

[பீடத்தருகே பாய்கிறன். நன்கொடை பெற்றுக் கொண்டவர்கள் தாவிச் சென்று அவனைத் தடுத்து நிறுத்துகிறார்கள்.]

போ. மடா; அரன் ஆணை! என்னை அணுகாதே.

உ. மடா: அரனும் கரனும்! என்னடா உளறல் இது ...

போ. மடா: அபசார நிந்தைப்பட்டுழலாதே—

உ. மடா: (கதறும் நிலையில்) ஐயோ! கந்தா—முருகா— உங்களுக்குக் கண்ணில்லையா.........நான் சித்ரபூஜையில் இருந்த சமயம் விபரீதம் வந்துவிட்டதே......

போ. மடா: பக்தகோடிகளே! விஷயம் விளங்கிவிட்டதா? விண்ணவன் கூறியபடி என்னை விடாமல் பிடித்தாட்ட அஞ்ஞான சொரூபம் வந்துவிட்டது......

[பலரும் அஞ்ஞான சொரூபம்! அஞ்ஞான சொரூபம்! என்று கூவுகிறார்கள்.]

[உண்மை மடாதிபதி பிடித்திருப்போரைத் தாக்கித் தள்ளிக்கொண்டு முன்னால் செல்ல முயற்சிக்கிறன். விபூதி மடலில் இருந்து விபூதியைப் பிடி பிடியாக எடுத்து போலி மடாதிபதி, உண்மை மடாதிபதியின் கண்ணில் விழும்படி தூவிக்கொண்டிருக்கிறன்.]

போ. மடா: ஐயோ! அஞ்ஞான சொரூபம்—அடித்து விரட்டுங்கள்...........

உ. மடா: (அழுகுரலில்) அடித்து விரட்டுவதா! என்னையா...

[கந்தபூபதி, முருகதாசர், கையாள் மூவரும் குசுகுசுவெனப் பேசிக்கொண்டு ஒரு முடிவுக்கு வந்தவர்களாகி]

மூவரும்: அடித்து விரட்டுங்கள்—அடித்து விரட்டுங்கள்...

உ. மடா: பாவிகளே!......என்னையா......

போ. மடா: பக்தர்களே! அஞ்ஞான சொரூபத்தை......

[பலரும் சேர்ந்து அழித்துவிடுகிறோம் என்று கூச்சலிடுகிறார்கள். உண்மை மடாதிபதி பெரும் பாடுபடுகிறார்.]

போ. மடா: நமச்சிவாயத்தின் மீது ஆணை! அஞ்ஞான சொரூபத்தை அடித்து விரட்டுங்கள்.

[பலரும் சேர்ந்து மடாதிபதியைக் கீழே சாயுமளவு அடித்துவிடுகிறார்கள். அமளி அதிகமாகிறது. போலி மடாதிபதி, குறிப்பாக ஒரு பண முடிப்பை எடுத்துக்கொள்கிறான் கந்தபூபதி அவன் கரத்தைப் பிடித்திழுத்துக்கொண்டு ஒடு கிறான். அமளியிலே இதை யாரும் கவனிக்க வில்லை. முருகதாசன் கற்பூரக் குவியலைக் கொளுத்துகிறான். கீழே வீழ்ந்த பிறகும் மடாதி பதியை அடிப்பது ஓயவில்லை. அஞ்ஞான சொரூபம் ஒழிக! அருளாளர் வாழ்க! அஞ் ஞான சொரூபம் ஒழிக—என்ற முழக்கம் பல மாகிறது. மடாதிபதி மாண்டுபோகிறார்,]

பெரி: ஒழிந்தது அஞ்ஞான சொரூபம்! மெய்ஞ்ஞானம் எங்கே!—(என்று ஆர்வத்துடன் கேட்க).

[பலரும் எங்கே? மடாதிபதி அருளாளர் எங்கே? அரனைக் கண்ட அண்ணல் எங்கே?—என்று கேட்கின்றனர்.]

கந்த: (உருக்கமாக) அப்பனே! ஒப்பிலாமணியே! உன் திருவிளையாடலை என்னென்பேன்! மெய்யன்பர்களே! நீறு பூசுங்கள்! நாதன் நாமத்தைப் பஜியுங்கள், அருளாளரின் மெய்ஞ்ஞான உருவம் அரனடி சேர்ந்துவிட்டது—அஞ்ஞானத்தை அடித்து வீழ்த்தியதும், இங்கோர் ஜோதி தோன்றிற்று—மெய்ஞ் ஞானி அதிலே கலந்துவிட்டார்—பொன்னார் மேனியனைப் போற்றுங்கள்....................அருளாளரின் சடலத்தை அடக்கம் செய்வோம் வாரீர்...........

[கண்களைத் துடைத்துக்கொள்கிறார், பலரும்]

பெரி: பட்டம் யாருக்கு...........?

[கந்தபூபதியும், முருகதாசரும் கையாளின் காலில் வீழ்ந்து வணங்கி, மடாதிபதி மாசிலாமணியார் வாழ்க! என்று கூறுகிறார்கள்.]

[கையாள் கண் துடைத்துக்கொள்கிறான்.]

**கந்த:** **வாழ்த்துங்கள்! பக்தர்களே! மாசிலாமணியார்......**

*[மக்கள், வாழ்க! வாழ்க! என்று கூவுகிறார்கள்]*

[அதேபோது காட்டுப் பாதையிலே போலி மடாதிபதி தன், வேடத்தைக் கலைத்தபடி]

போ. மடா: ஒழிந்தான் உலுத்தன்—யார் அவன் அடி பணிந்து கிடந்தனரோ அவர்களே அடித்துக் கொன்றனர்......... அக்ரமக்காரன்—சரியான தண்டனை.

[வேகமாகச் செல்கிறான்.]

# கண்ணாயிரத்தின் உலகம்!

'ஒரே உலகம்' என்பது நேர்த்தியான ஒரு குறிக்கோள்.

பற்பல நாடுகள் கொண்ட பூபாகம் ஒரே அமைப்பாக இருக்கிறது என்பதல்ல 'ஒரே உலகம்' என்ற குறிக்கோளின் பொருள். பற்பல நாடுகள் உள்ளன என்பதாலேயே, பல்வேறு முரண்பாடுகள், வேறுபாடுகள், அவை காரணமாக மாச்சரியங்கள், மோதுதல்கள், ஆதிக்கங்கள், அவதிகள், அழிவுகள் நெளிகின்றன. இதனுல் ஒரே அமைப்பாக உள்ள உலகம், 'ஒரே உலகம்' என்ற நேர்த்தியான நிலை அடையவில்லை.

வெள்ளை உலகம்; கருப்பு உலகம்; மாநிற உலகம்; மஞ்சள் நிற உலகம் என்று நிறம் காரணமாக, ஒரே அமைப்பாக உள்ள பூபாகம், பல்வேறு உலகங்களாக இருந்திடக் காண்கிறோம்.

இஸ்லாமிய உலகம்; கிருத்தவ உலகம்; பௌத்த உலகம்; இந்து உலகம்; ஆதிமத உலகம் என்று மத அடிப்படையில் பல உலகங்கள் உள்ளன என்று உணருகிறோம்,

மேற்குப் பகுதி, கிழக்குப் பகுதி என்று இருபெரும் பிரிவுகளாக உலகம் இருப்பதாகவும், இந்தப் பிரிவு ஒவ்வொன்றும் தனித்தனி உலகம் என்றும் கூறுகின்றனர்; காரணமும் காட்டுகின்றனர்.

படித்தோர் உலகு என்றும், பாமரர் உலகு என்றும் இந்த ஒரே உலகில், இருவேறு உலகம் உள்ளன என்கிருர்கள்; மறுப்பதற்கில்லை.

நாகரீக உலகம், கர்ஞடக உலகம் என்ற இரு உலகு கொண்டது இந்த ஒரே உலகம் என்கிருர்கள்; அதிலும் உண்மை இருந்திடக் காண்கின்ருேம்.

இவற்றினைப்பற்றி எண்ணிடும்போது, உலகம் என்று நாம் நிலப்பரப்பை மட்டுமே கருதிக்கொள்வதிலே முழுப் பொருத்தம் இல்லை என்பதும், நிலைமைகளும் நினைப்புகளும் எவ்வகையிலே உள்ளன என்பதனைக் கொண்டு இந்தப் பெரிய நிலப்பரப்பிலே பலவிதமான உலகம் உள்ளன என்பதைக் கண்டறிவதே பொருத்தமானது என்பதும் விளக்கமாகிறது.

நிலைமைகளையும் நினைப்புகளையும் கண்டறிந்து பல்வேறு வகையான உலகங்கள் இந்த ஒரே உலகில் இருப்பதனை அறிந்திட முடிகிறது என்பதனை உணரும்போது, ஒவ்வொருவரும் தத்தமது நினைப்பு நிலைமை ஆகியவற்றினுக்கு ஏற்ற விதத்தில், தமக்கு உரிய ' உலகை ' உருவாக்கிக் கொள்ள முடியும் என்பதும் தெளிவாகிறது.

அதஞல்தான் வள்ளுவர், 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு' என்று கூறி நல்ல உலகை நல்லவர்கள் உருவாக்கிக் கொள்ளலாம் என்ற கருத்தினை வழங்கிச் சென்ருர்.

ஒவ்வொருவரும் தமது உயர்ந்த எண்ணத்தாலும், சீரிய முயற்சியாலும் ஒரு நல்லுலகம் அமைத்துக் கொள்ளலாம் என்பது போலவே, சிலரோ பலரோ உருவாக்கிடும் உலகம் வேறு சிலருக்கோ பலருக்கோ ' இடம் ' ஆகிவிடுகிறது.

ஆதிக்க வெறிகொண்ட வெள்ளையர்கள், ஆப்பிரிக்க நாட்டினையே அடிமைகளைப் பிடித்திடும் வேட்டைக் காடு ஆக்கினர்; அதிலே கிடைத்த செல்வத்தைக் கொண்டு தமக்கு பளபளப்பான ஒரு பகட்டு உலகம் அமைத்துக்கொண்டனர்.

வெள்ளையருக்கு ஒரு ' பகட்டு உலகம் ' அமைந்ததன் காரணமாகவே, ஆப்பிரிக்கரின் உலகம் ' இருட்டு உலகம் ' என்ற நிலையினைப் பெற்றது. பெற்ற பிறகு அதனையே சுட்டிக்காட்டி, பகட்டு உலகினர் இருட்டு உலகினரைக் கேலிசெய்திடலாயினர்.

இதுபோல, ' உலகுகளை ' உருவாக்கியுள்ளனர்; இருள் உலகினை மட்டுமல்ல, ஒளி உலகினையும்.

இத்தனை விதமான உலகுகள் இருந்திடின், பகைப்புயல் அவ்வப்போது கிளம்பிப் பாழ்படுத்தும், இந்த நிலை மாற்றப்பட்டு 'ஒரே உலகம்' அமைந்திடவேண்டும் என்றார் வெண்டல் விஸ்க்கி எனும் ஒரு அமெரிக்கத் தலைவர்.

'ஒரே உலகம்' அமையவில்லை; அமைந்திடும் என்பதற்கான அறிகுறிகளும் பளிச்செனத் தெரிந்திடக் காணோம். எனினும் 'ஒரே உலகம்' என்பது நேர்த்தியான ஒரு குறிக்கோள் என்பதனை எவரும் மறுத்திட முனையக் காணோம்; அந்த அளவு நல்லுணர்வு வெற்றி பெற்றிருக்கிறது.

சிலர், தமது உலகினைத் தாமாக அமைத்துக்கொள்கின்றனர்; வேறு சிலர், அமைக்கப்படும் உலகிலே இடம் பெற்றவராகி விடுகின்றனர்; அந்த உலகின் இயல்புகளுக்கேற்ப அவர்தம் வாழ்க்கை அமைந்து விடுகிறது.

அதிலிருந்து விடுபடவோ, அல்லது அந்த இயல்பினை மாற்றிடவோ முயற்சி மேற்கொள்பவர்களும் உண்டு, அந்த இயல்போடு தம்மை இணைத்துக் கொண்டு விடுபவர்களும் உண்டு.

கண்ணாயிரம், தன் உலகிலே தன்னை வேறுபடுத்த முடியாத அளவு பிணைத்துக்கொண்டவனும் அல்ல; அந்த உலகின் இயல்பு பிடிக்காமல், எதிர்த்திடக் கிளம்பினவனுமல்ல; அந்த உலகிலே, சுவை கண்டவன், ஆனால் சுவைபோதும் என்ற நிலையில் தன்னை இறுக்கிக் கொண்டவனல்ல. விவரிக்க முடியாத ஒரு குமுறல் அவன் உள்ளத்தில் அவ்வப்போது எழும்பிற்று; வளரவில்லை; ஆற்றல் பெற்றிடவில்லை.

கண்ணாயிரம் தனக்கென ஏற்பட்டிருந்த உலக இயல்புடன் தன்னை இணைத்துக்கொண்டிருந்தால், மனதிலே சிக்கல், சங்கடம் ஏற்பட்டிருக்காது. வாழ்க்கை ஒரு சுவைமிகு விருந்தாகியிருக்கும். அல்லது அவன், தன் உலகின் போக்கிலே வெறுப்படைந்து, அதனை விட்டு விடுபடவோ, அல்லது அதனை உடைத்திடவோ முயற்சி எடுத்துக் கொண்டிருப்பின், முள்ளும், கல்லும் நிரம்பிய பாதையில் நடந்திட வேண்டிவந்திருக்கும்; முள் தைத்திடும், குருதி கசிந்திடும், ஆனால் உள்ளத்தில் ஒரு மகிழ்ச்சி மலர்ந்திருக்கும். கண்ணாயிரமோ, இந்த இருமுறைகளில், எந்த ஒன்றிலேயும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளவில்லை; இருமுறைகளுக்கு ஏற்ற இருவேறு துறைகளிலும் அவன் இடம் பெற்றிருந்தான்; எதை விடுவது, எதைக் கொள்வது என்பதிலே உறுதி

பிறந்திடவில்லை. செல்லுமிடம் எதுவென்ற தெளிவின்றி வட்ட மிட்க்கொண்டிருந்தான், கரும்பையும் கண்டான்; கசப்பையும் கண்டான். ஆடிப்பாடிடவும் செய்தான் ஆயாசமடைந்திடவும் செய்தான்.

கண்ணாயிரம் தனக்கென ஒரு உலகினை உருவாக்கிக் கொள்ளவில்லை; தந்தை உருவாக்கி வைத்திருந்த உலகில். 'சுகபோக உலகில்' இடம் பெற்றான்; ஆனால் அதிலே இருந்து கொண்டே அவன் வேறு உலகம் பற்றிய நாட்டம் கொண்டிட லானான். இக்கட்டான நிலை என்பது மட்டுமல்ல கண்ணாயிரம் 'இரு உலக வாசியானான்'. அது பற்றிய விளக்கக் கதையே நாடக வடிவில் தரப்படுகிறது.

கண்ணாயிரம் இருவேறு உலகில் உந்தப்பட்டும் உறைவிடம் பெற்றும் அலைந்தது மட்டுமே, இங்கு காணக் கிடைக்கும். கடைசியாக அவன் எந்த உலகுக்குத் தன்னை உரியவனாக்கிக் கொண்டான் என்பது கூறப்படவில்லை.

கண்ணாயிரத்தின் உலகம், ஒரு திட்டவட்டமான நடவடிக் கையை மேற்கொள்ளத் தக்க இயல்பினைப் பெற்றிடத் துணை செய்யவில்லை என்பதும், இதிலிருந்து பெறத்தக்க பாடங்களில் ஒன்று என்று கூறலாம்.

கரத்தில் சிக்கிய யாழின் நரம்புகளை, இசைமுறையும் பயிற்சியும் பெறாதவன், தடவிடும்போது, இன்னொலியும் கிடைத் திடும். வெற்றொலியும் எழும்பிடும், தேவனை தரத்தக்க ஒலியும் பிறந்திடுமல்லவா

கண்ணாயிரத்தின் உலகிலே அதுபோலத்தான்.

இனி, கண்ணாயிரத்தின் உலகினைக் காணச் செல்வோம்.

## காட்சி 1.

இடம்: சீமானின் மாளிகை மாடி அறை

நிலைமை: அறைக்கதவு மூடப்பட்டிருக்கிறது ; தாளிடப் படவில்லை, ஏதோ சினிமாப் பாடலொலி வெளியே உலவுகிறது. இடையே 'சீட்டி' அடிக்கும் சத்தமும் கேட்கிறது. அறையின் வெளிப் பக்கம் உட்கார்ந்து கொண்டு ஒரு வேலையாள் பூட்சுகளுக்குப் 'பாலிஷ்' போட்டுக் கொண்டிருக்கிறான். 'பூட்ஸ்' வாலிபர் களுக்கேற்ற நவநாகரீகமானதாகவும் ஏற்கனவே மெருகுள்ளதாகவும் இருக்கிறது.

அறைக் கதவைப் பாதி அளவு திறந்துகொண்டு வெளியே எட்டிப் பார்க்கிறான், ஒரு இளைஞன். இருபத்தி இரண்டு அல்லது இருபத்தி மூன்று வயதிருக்கலாம் என்று எண்ணத்தக்க தோற்றம். பொலிவுள்ள முகம்; வாழ்க்கைச் சுவையைப் பருகிடுபவன் என்பதை விளக்கிடும் பார்வை.

இளைஞன்: (வேலையாளைப் பார்த்து அகம்பாவமற்ற, ஆனால் மேல் நிலையில் உள்ளவன் என்பதை நினைவுபடுத்தும் விதமான குரலில்) டே! இடியட்! வேலை முடிந்ததா......

வேலையாள்: (பழக்கப்பட்டுப் போயுள்ள பணிவுடன்) ஆமாங்க......

இ: (சிகரட் பற்றவைத்துக்கொண்டே) நல்லா துடைச்சியா

வே: ஆமாங்க......

இ: எதை?

வே: பூட்சை......

இ: மடயா! முதலிலே உன் அழுக்குக் கையைத் துடைத்துக்கிட்டயா......

வே: (இளைஞன் வேடிக்கையாகப் பேசுவதை உணர்ந்து ஒரு அசட்டுச் சிரிப்புடன்) ஓ! கைகளைச் சுத்தமாக்கிக்கிட்டு, பிறகுதாங்க இந்த வேலைக்கு வந்தேன்.

[இளைஞன் புன்னகை காட்டிவிட்டு, அறைக்கு உள்ளே செல்கிறான்; கதவை மூடிக்கொண்டு. அறைக் கதவு சரியாக மூடப்படாததால், உள்ளே இளைஞன், மேனாட்டு உடை அணிந்து கொள்வதும் நிலக்கண்ணாடி முன்பு நின்று சரிசெய்து கொள்வதும், வேலையாளுக்குத் தெரிகிறது. பலமுறை கண்டிருப்பதாலும், அந்தஸ்த்துக்கு ஏற்ற அலங்காரம் இருக்கும், இருக்கவேண்டியது தான் என்ற இயல்புள்ளவன் என்பதாலும், வேலையாளின் பார்வையில் வெறுப்போ, அலட்சியமோ தென்படவில்லை. 'கண்ணாயிரம்! கண்ணு!' என்று கூப்பிட்டுக் கொண்டே, நடுத்தர வயதைக் கடந்து மூதாட்டி என்ற கட்டம் நோக்கிச் சென்று கொண்டிருக்கும் தோற்றமுள்ள மாது அறைய நோக்கி வரக் காண்கிறான். ஓரளவு மூடப்பட்டிருக்கும் கதவைத் தள்ளித் திறந்துகொண்டு மாது உள்ளே நுழைந்தபடி.]

மாது: கண்ணாயிரம்! டே! கண்ணு!

[இளைஞன், அவசர அவசரமாக, வாயில் இருந்த சிகரட்டை ஒருபுறம் வீசிவிட்டு வெளியே வருகிறான். வேலையாள், 'பாலிஷ்' போட்ட' பூட்சை' காலருகே கொண்டு செல்கிறான் அதைக்கண்டு......]

புறப்பட்டாச்சா......வீடு வந்து அரைமணி நேரம்கூட ஆகல்லே மறுபடியும் வெளியே! ஏண்டா கண்ணாயிரம்! உனக்கு எதுக்காகடப்பா இந்த வீண் அலேச்சல். வீடு இருக்கு அரமனைபோல; தோட்டமிருக்கு நந்தவனம் போல; சொத்து இருக்கு சுகம்தர; நிம்மதியா வீட்டிலே இருக்கக்கூடாதா......

[கண்ணாயிரம் 'பூட்சு' போட்டுக்கொண்டே.]

க: நாம, நம்ம நிம்மதியை மட்டும் கவனித்துக்கொண்டா போதுமா......ஊருக்கு உபகாரம் செய்ய உழைக்கறதுதான் உத்தமர்கள் கடமைன்னு நீயே சொல்லி இருக்கறியே அத்தே! இப்ப நான் என்ன, உல்லாசத்துக்காகவா ஊர்சுத்தப் போறேன்......

மாது: என்ன வேலையோ, என்ன கடமையோ! பலபேர் என்னைக் கேட்கறாங்க, ஏன் அன்னபூரணி கண்ணாயிரம் இப்படி அலையறதுன்னு. ஒவ்வொரு நாளுமா வேலை இருக்கும் உனக்கு...

க: இன்னும் ஒரு பத்துநாள், இப்படி அப்படித் திரும்பக் கூட நேரம் கிடையாது நடனவிழா ஏற்பாடு. விழா எதுக்காக? ஏழைப் பிள்ளைகளைப் படிக்கவைக்க.....

அன்னபூரணி: நல்ல காரியந்தான்......உங்க அப்பாவிடம் சொல்லி, ஒரு ஆயிரம் ஐநூறு வாங்கிக் கொடுத்துவிடு......தர்ம காரியம்......வேண்டாம்னு சொல்வேன்......நீ எதுக்காக அலைய வேணும்......

க: (சிறிதளவு குறும்புத்தனத்துடன்) யாரிடம்? அப்பாவைக் கேட்டா? நல்லா கொடுப்பாரே.....பணம்னு கேட்ட உடனே தான் அப்பா முகத்திலே எள்ளும் கொள்ளும் வெடிக்குமே......

அ: நீ, வீண்செலவு செய்துவிடுவே என்கிற பயந்தான். நல்ல காரியத்துக்குன்னு கேட்டா, தராமலா போவான். நீ, நாட்டியக்காரக் கூட்டத்திலே சேர்ந்து, ஆடிப்பாடிக் கெட்டு, அந்தஸ்த்தைக் கெடுத்துக் கொள்வயோ என்கிற பயந்தான்.

க: அப்பா பக்கமாத்தானே நீங்க பேசுவிங்க. நான் இப்படி ஊருக்காக உழைக்கறதாலேதான் ஒரு நூறு பேராவது நம்ம குடும்பத்தைப்பத்தி நல்லபடியாப் பேசுறாங்க. ஏழைப் பிள்ளை களுக்கு நிதி ஒரு ஐம்பதாயிரமாவது சேர்த்தாகணும்னு நான் படாதபாடுபடறேன்..... நீ ஒரே வார்த்தையில் சொல்லிவிட்டயே, நான் ஊரைச் சுத்தறேன்னு......

[இந்தப் பேச்சைக் கேட்டுக்கொண்டே வருகிறார் சீமான் சிங்காரவேலர், கண்ணாயிரத்தின் தந்தை ஐம்பது வயதைக் கடந்தவர் என்றபோதிலும் மூடுக்குடன் காணப்படுகிறார். உலகம் தன் காலடியில் இருக்கிறது என்ற நினைப்பைத் தெரிவிக்கும் விதமான பார்வை, நடை, மத விஷயத்தில் அக்கறை கொண்டவர் என் பதைக் காட்டும் குறிகள்.]

சிங்காரவேலர்: ஏன் ஊர் சுற்றித் திரியமாட்டான். ஏதாவது வித்துவிசனம், கவலை கஷ்டம் இருந்தாத்தானே. காளைமாடு போலச் சுத்தறான், கட்டறுந்த காளைபோல. இருப்பது பாழாகாமப் பார்த்துக் கொள்ளத்தான் நான் ஒருத்தன் இருக்கறனே, அவனுக்கென்ன! அவன் உண்டு, நண்பர்கள் உண்டு. செலவுக்குக் கொட்டிக்கொடுக்க நான்தான் இருக்கறனே ஒரு மடயன்......

[கண்ணாயிரம் சிறிது கலங்குகிறான்.]

அ: (சாந்தப்படுத்தும் முறையில்) ஏண்டா தம்பி. இப்படிப் பேசறே. அவன் நல்ல காரியத்துக்காகத்தான் வேலை செய்கிறான், சொன்னான்......

சி: தெரியுமே எனக்கு, இவன் ஈடுபட்டிருக்கிற நல்ல காரியம்......அக்கா! நாட்டியக்காரி வீட்டிலே இவனுக்கு என்ன வேலை? என்ன வேலைன்னு கேளேன்......

க: (தைரியத்தைத் தருவித்துக்கொண்டு) அடே அப்பா, பெரிய தப்பு கண்டுபிடித்துவிட்டாரு... நாட்டியக்காரி வீட்டிலே போனது வேலையத்து அல்ல. ஏழைப் பிள்ளைகள் உதவிக்காக விழா நடத்தறமே, அதிலே நாட்டியமாட ஏற்பாடு செயப் போயிருந்தேன்.

அ: (அன்பாக) நீ ஏண்டா போகணும்......ஒரு ஆளை அனுப்பி கேட்டனுப்பறது......

க: (விளக்கம் அளிக்கும் முறையில்) வேறே ஆளை அனுப்பி இருந்தா ரூபா ஆயிரமல்லவா கேட்டிருப்பாங்க. நானே போனதாலேதான், தம்பி! தம்பி! நீ வீடேறி வந்த பிறகு பணத்தைப் பத்தின பேச்சே கிடையாது......என்ன விருப்பமோ, கொடுன்னு சொல்லி இருக்காங்க......

அன்: பார்த்தயடா தம்பி! அதனுலேதான் போயிருக்கான் கண்ணுயிரம்......

சி: (குத்தலாக) இவன் மூகத்தைப் பார்த்ததும் பணமே வாண்டாம்னு சொல்லிவிட்டாங்க......ஏன்டாப்பா அப்படித் தானே.

க: (விளக்கம் தருகிற முறையில்) எனக்காகன்னு சொன்னனு எல்லாம் அப்பா பேரைச் சொன்னதும், சரி சரின்னு ஒத்துக்கொண்டாங்க (குத்தலாக) நாட்டியமாடற பொண்ணேட அம்மா, நான் அப்பாபேரைச் சொன்னதும் அவர் மகனு நீ! அவரோட மகனு! என்று கேட்டுப் பூரித்துப் போனுங்க......

[சிங்காரவேலர் கூச்சமடைகிருர். முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொள்கிருர்.]

அ: அவளுக்கென்ன, அவ்வளவு உருக்கம் உங்க அப்பன் பேரைக் கேட்டதும்......

க: (குத்தலாக) என்னைக் கேட்டா? அப்பாவை அல்லவா கேட்கவேணும். அப்பா முன்னே எல்லாம் வருஷா வருஷம் நவராத்திரி உற்சவம் நடத்துவாராமே, அந்த அம்மாவோட கச்சேரிதான் ஏற்பாடு செய்வாராம்......

சி: (சலிப்படைவது போலாகி) சரிடா போதும் உன்னேட விளக்கம், விவரம், வியாக்யானம்......

க: அந்த அம்மாக்கூடச் சொன்னுங்க......உங்க அப்பா உற்சவம்தான் நடத்தி வந்தாரு, பலபேர் செய்ததுபோல. நீ பரவாயில்லே ஊருக்கு உபகாரம் செய்கிறேன்னு சொல்லி சந்தோஷப்பட்டாங்க......

சி: படுவா, படுவா......பேராசைக்காரக் கழுதே......

அ: யாருடா தம்பி! அவ.

சி: அட, என்னத்துக்காக அக்கா! நீவேறே விஷயம் தெரியாமக் கிளறிக் கிளறிக் கேட்கறே......

[கண்ணுயிரத்தைக் கோபமாகப் பார்த்தபடி.]

சரி, இந்தத் தடவையோட நிறுத்திக்கொள்ளு உன்னேட நாட்டிய ஏற்பாட்டை எல்லாம்......தெரியும் எனக்கு......நானும் நவராத்திரி உற்சவத்துக்குக் கச்சேரிகள் ஏற்பாடு செய்தவன் தான்......எனக்கும் தெரியும்......எல்லாம்......ஆமாம் இதோடு விட்டுத்தொலே......போதும்.

[கண்ணுயிரம் வேகமாக வெளியே செல்கிருன், முகத்திலே கோபக்குறியும், பழய குப்பையைக் கிளறி, தகப்பனுரை மடக்கி விட்டோம் என்ற மகிழ்ச்சிக் குறியும் கலந்து தெரிகிறது. வேலேயாளை வரச் சொல்லி ஜாடை காட்டியபடி அன்னபூரணி அம்மாள் வேறு பக்கம் போகிருள். சிங்கார வேலர், அறைக் கதவை இழுத்துச் சாத்திவிட்டு, முணுமுணுத்தபடி. கீழ்க்கூடம் செல்கிருர், கூடத்தில் ஏற்கனவே காத்துக்கொண்டிருக்கும் கனவான் ஆகிக்கொண்டிருக்கும் நிலேயில்உள்ள ஒருவர், வணக்கம் கூறிவிட்டு, உட்காருகிருர். அலட்சியமாகவே சிங்கார வேலர் பதில் வணக்கம் கூறிவிட்டு, சுழல் நாற்காலியில் அமருகிருர்.]

வந்தவர்: நம்ம தம்பி, வியாபாரத்தைக் கவனிக்கிறதில்லே போலிருக்குதுங்களே...

சி: இல்லிங்க...அவனேட போக்கே ஒரு தனி விதமா...

வ: அதைத்தான் சொல்றேன்...பாட்டு, கூத்து, நாட்டியம் நாடகம் இப்படி....

[வேலேயாள் வந்து நிற்கிருன் பணிவாக]

சி: (கோபம் காட்டியபடி)...ஆடிக் கெட்டுப்போகிருன் என் மகன்னு பேசும் விவரம் தெரியாததுங்க...

[வந்தவர் திகைப்படைகிருர்]

அவன் நல்ல காரியத்துக்காக, ஏழைப் பிள்ளைகளுக்காக, விழா நடத்தறான்...நாமதான் பணமோ பணம்னு அலையறோம்... அவன் அப்படி அல்லய்யா...ஊருக்கு உபகாரம் செய்யணும் என்கிற நோக்கம் இருக்குது...நல்லதுதானே அது...

[வந்தவர் தலை அசைக்கிறார், மகனைச் சிறிது நேரத்திற்கு முன்பு கண்டித்தவர் இப்போது பாராட்டுகிறாரே; இது என்ன விந்தை என்று எண்ணி ஆச்சரியப்படுகிறான் வேலையாள்.]

பணமா பெரிசு......கூடவேவா கொண்டுகிட்டுப் போயிடப் போறோம் மூட்டைகட்டி . ...பத்துப் பேருக்கு உபகாரம் செய்து நல்ல பேர் எடுக்கணுமய்யா.........ஏதோ நமக்கெல்லாம் அந்த நினைப்பும் இல்லே......நேரமும் இல்லே மகனாவது ஊருக்கு உபகாரம் செய்கிறானேன்னு எனக்கு மகிழ்ச்சி...

வ : அது சரிங்க...ஆமாங்க...

சி : அதனாலேதான் நானும் அவன் நாலு காசு செலவழித்தாலும் பரவாயில்லேன்னு இருக்கறேன்...கேட்டதைத் தட்டாத கொடுக்கிறேன்.........இதோ பாருங்க, பணம் சேரச்சேர குணம் வளரணும்...ஊருக்கு உபகாரம் செய்யணும்......உமக்கெங்கே அதெல்லாம் பிடிக்கப்போவுது...

வ : அப்படிச் சொல்லிவிடலாமுங்களா...ஏதோ என் சக்தியானுசாரம் நானும் செய்து கிட்டுத்தான் வர்ரேன்..... ......இந்த வருஷம் செல்லியம்மன் கோயில் சேவற்காவடி உற்சவச் செலவு பூரா நான்தானுங்க...

சி : அதைச் செய்வே; தாயே! என்னை மன்னித்துவிடு, பாவத்தைக் கழுவிவிடுன்னு...அதுவும் ஒருவிதமான வியாபாரந்தான்யா...இதோ பாரய்யா, அதிலே எல்லாம் பலன் இல்லே .. இதோ நம்ம மகன் ஈடுபட்டு இருக்கற காரியம் இருக்கு பாரு, அது சிலாக்கியமானது...

வ : உண்மை தானுங்க, ஏழை எளியவங்களோட கண்ணைத் திறந்து வைக்கறது புண்ய காரியந்தானுங்க...

சி : அப்படிப்பட்ட காரியத்துக்குக் கொடுங்களேன் ஒரு ஆயிரம்...

வ : (திடுக்கிட்டு) ஒரு ஆயிரமுங்களா...

சி: (கேலிச் சிரிப்புடன்) சொன்ன உடனே முகமே மாறி விட்டதே...சரிய்யா இந்தா, இதோ பாரு...

[ஒரு குறிப்பேட்டை அவர் எதிரில் வீசி]

உமக்கு இஷ்டமானதைக் கொடும்.

[வந்தவர் தயக்க மடைகிருர் சமாளித்துக் கொண்டு 500 ரூபாய் என்று கை எழுத்துப் போடுகிருர். குறிப் பேட்டை மரியாதையாக சிங்கார வேலரிடம் தருகிருர்.]

சி: சபிச்சிக் கொட்டாதய்யா...........இது சிங்காரவேலு வீட்டுக்கு அல்ல......ஏழைகளுக்கு...சரி......வந்த விஷயத்தைக் கவனிக்காமலே என்னன்னு கேட்காமலே இருந்து விட்டேனே .. என்ன விஷயமா வந்திங்க.

வ: ஒண்ணுமில்லிங்க ஒரு புது வியாபாரத்தைப் பத்தி உங்களோட யோசனையைக் கேட்கலாம்னு...

சி: இருக்கிற வியாபாரம் போதல்லே, புதுசா வேறே வேணுமா...சரி ஆசை யாரை விடுது...சொல்லுங்க என்ன வியாபாரம் அது.

வ: சிலோனுக்கு வெங்காய ஏற்றுமதி செய்தா எதோ கொஞ்சம் கிடைக்கும்னு தெரியுது...

சி: கொஞ்சம் என்னய்யா நல்லாவே கிடைக்குது, அதனுலேதானே பேயா அலையருனுங்க பலபேர். பர்மிட்டுக்கு...

வந்: நமக்கு அந்தக் கஷ்டம் இல்லிங்க...ஆறுகொடுத்து 'பர்மிட்' நம்ம பேருக்கு வருகிறபடி செய்துகிட்டேன். நம்ம சத்தார் சாயபுவோட பர்மிட்...

சிங்: (ஒரு கணம் தீவிரமாகச் சிந்தித்து முடிவுக்கு வந்தவ ராகி ஒரு வெடிச்சிரிப்பை உதிர்க்கிருர்.) பைத்யக்கார மனுஷன் யாநீர். ஆசை கண்ணை மறைக்குது. சத்தார் சாயபு பர்மிட் டையா வாங்கி விட்டீர், ஆறும்.........ரொக்கமாகவே கொடுத் தாச்சா......போருத வேலை...

வ: என்னதுங்க...என்ன சொல்றிங்க......ஆறு அதிகம்னு சொல்றிங்களா ஆதாயம் கிடைக்கும்னு கணக்கு சொல்லுதே...

சி: கூட்டல் கழித்தல் கணக்கு இலாபத்தைக் குவிச்சிக் காட்டும் யா.....யார் இல்லேன்னு சொல்றது...

வ: சிரிச்சிங்களே...போருதவேலை என்று சொன்னிங்களே

சி: போருத வேளேதான்...ஐயா! பர்மிட் இப்படித் தாறுமாரு கைமாறுவது தவறுன்னு சட்டம் சொல்லுது, தெரியுதா......உன் விஷயமாகத்தான் மோப்பம் பிடிக்கருங்கன்னு எனக்குத் தெரியாது, நேத்துத்தான் பெரிய அதிகாரி ஒருத்தர் வந்து தகவல் கேட்டாரு இதுவிஷயமா......நான் சத்தார் சாயபுவிடம் பர்மிட்டு இருக்குது, ஆனு வியாபாரம் செய்யப் போதுமான பணம் இல்லே, யாருக்காவது விற்றுவிடுவான்னு சொன்னேன். முன் கூட்டி என்னிடம் ஒருபேச்சு, இப்படி ஒரு பர்மிட்டு இருக்குது வாங்கட்டுமான்னு கேட்டிருந்தா நான் அதிகாரிக்கு வேறே போக்குக் காட்டி இருப்பேன். நான் என்னத்தைக் கண்டேன். தெரிந்ததை, உண்மையைச் சொல்லிவிட்டேன். அவரு அப்பவே தந்தி கொடுத்துட்டாரே டில்லிக்கு. பர்மிட்டு பறிமுதலாயிடுமே...

வ: (பதறி) பாதிப் பணம் அட்வான்சு கொடுத்துவிட்டனே......

சி: பணம்கிடக்கட்டும்...ஏதாவது ரசீது, ஒப்பந்தம் இதிலே கை எழுத்து உண்டா?

வ: இல்லிங்க...

சி: தப்பிச்சிகிட்டே போ! பணம் போனு போகுதய்யா, கம்பி எண்ணும இருந்தாப் போதும்...இப்பவே, சத்தாருகிட்டச் சொல்லிவிடு நமக்கு வேண்டாம்யா பர்மிட்டுன்னு...

வ: ஆகட்டுங்க......பர்மிட்டுக்காக நான் முயற்சி செய்தது குற்றமில்லிங்களே...

சி: மூச்சு விடாதேய்யா யாரிடமும்.........அய்யோவ்! ஒரு வேலே செய்...அந்த அதிகாரி ஊரை விட்டுப் போறவரைக்கும், நீ இங்கே இல்லாமலிருந்தா நல்லது. ஏன்னு, ஏதாவது அவன் கேட்டு, நீ எதையாவது உளறி வைத்தா, ஆபத்தாயிடும். பேசாம ஒரு நாலு நாளேக்கு வெளியூர் போய் இரு...

வ: காரைக்காலிலே சொந்தக்காரர் வீட்டிலே கலியாணம் அங்கு போய்...

சி: நல்ல யோசனே, புறப்படு புறப்படு...

[வந்தவர் வணக்கம் கூறி விட்டுச் செல்கிருர். சிங்காரவேலர் வெற்றிப் புன்னகையுடன் வேலேயாளேப் பார்த்து.]

டேய்! ஓடிப்போயி, சத்தார் சாயபுவை கையோட அழைச்சிக்கிட்டு வா! அவசரம், முக்கியம்னு சொல்லு...

[வேலேயாள் விரைந்து செல்கிருன்.]

## காட்சி 2

இடம் : கடற்கரைச் சாலை.

நிலைமை : நள்ளிரவு வளரும் நேரம் போதை மிகுந்த நிலையில் கண்ணாயிரம் தன் நண்பர்களுடன் காரில் கடற்கரைச் சாலையில் சென்று கொண்டிருக்கிறான். கைகளைத் தட்டிக் கொண்டும், பாடிக்கொண்டும், காருக்குள் நாட்டியமாடுகிறான் கண்ணாயிரம். உடனிருக்கும் நண்பர்கள் அடக்கப் பார்க்கிறார்கள்; முடியவில்லை. கண்ணாயிரம் மோட்டார் ஓட்டுபவனின் முதுகில் தட்டி குளறியபடி......

கண்ணாயிரம் : டிரைவர்! காரை பீச்ரோடுக்குவிடு...

டிரைவர் : (திகைத்து) பீச்ரோடிலே தானுங்க போய்க்கிட்டு இருக்குது வண்டி...

க : (மீண்டும் டிரைவர் முதுகில் அடித்தபடி) இடியட்! யாரை ஏமாத்தப் பார்க்கறே இதுதான் பீச் ரோடா!

[உடனிருக்கும் நண்பன் முதுகைத் தட்டிக் கொடுத்தபடி] பிரதர்! நம்மை மடயன் என்றே எண்ணிக் கொண்டான் போல இருக்குது இந்த டிரைவர்.

[டிரைவரை அடித்து] ஓட்டு பீச்சுக்கு, நாடியா காத்துக்கிட்டு இருப்பா.

நண்பர் : நாடியாவை வீட்டிலே விட்டுவிட்டுத் தானே பிரதர் நாம புறப்பட்டோம்...

க : ஆமாம் . நாடியா ஓடியா! ஓடியா நாடியா! எப்படி நம்ம பாட்டு, புது ட்யூன்......டிரைவர்; ஓட்டமாட்டே பீச்சு பக்கம்......

டி : புதுசா நான் ஒரு பீச்சு போட வேண்டியதுதான்......

[கண்ணாயிரம் கண்களைமூடிக் கொள்கிறான். மோடார், சிங்காரவேலர் மாளிகை வாயற்படியில் வந்து நிற்கிறது. கண்ணாயிரத்தை எழுப்பி விடுகிறான் நண்பன். கண்ணாயிரம் தள்ளாடுகிறான். நண்பன், என்ன செய்வது என்று தெரியாமல் விழிக்கிறான். கண்ணாயிரம் தன் கையில் இருக்கும் அலங்காரப் பையை ஆட்டிக் கொண்டு, இடுப்பை வளைத்துக் கொண்டு நடக்கிறான், ஓடியா! நாடியா! நாடியா! ஓடியா! என்று பாடியபடி

கண்ணாயிரம் கூச்சலிட்டு வீட்டுக்குள்ளே உள்ளவர்களை எங்கே எழுப்பிவிட்டு விடுகிருனே என்ற பயம் நண்பனுக்கு. அங்கு அப்போது மாளிகைப் பணியாட்களில் ஒருவனுன கருப்பன் வருகிருன்.]

ந: நல்லவேளை, கருப்பா! கண்ணாயிரத்தை ஜாக்ரதையாக அழைத்துக்கொண்டுபோய் படுக்கவை......ஐயா கண்லே படாத படி......

[கருப்பன், கண்ணாயிரத்தைத் தாங்கிப் பிடித்துக் கொண்டு மெள்ள மாளிகையின் தோட்டப் பக்கமாக அழைத்துச் செல்கிருன். தோட்டப் பக்கம் உள்ள படிக்கட்டு வழியாக, யாருக்கும் தெரியாமல் கண்ணாயிரத்தை அவன் அறைக்கு அழைத்துச் சென்று, படுக்கையில் சாயச் செய்கிருன். மின்விளக்கைப் போடுகிருன், கருப்பன். போதையில், ஆள் அடையாளம் தெரியவில்லை, கண்ணாயிரத்துக்கு. எழுந்து நிற்கிருன், தள்ளாடியபடி. கருப்பனைப் பார்த்து மரியாதையாகக் கும்பிடுகிருன்.]

க: (குளறியபடி) வரணும்! வரணும்! ஏது இந்தப் பக்கம்......இந்த நேரத்திலே......சௌக்கியந்தானு......குழந்தை குட்டிகளெல்லாம் சுகந்தானே......எப்படி உங்களோட யோக க்ஷேமம்... —கலியாணமெல்லாம் ஆயிட்டுதா......

[கருப்பன் திகைக்கிருன். கண்ணாயிரத்தை படுக்க வைக்க முயற்சிக்கிருன். கண்ணாயிரம், கருப்பனைக் கும்பிடுவதும், உட்காருவதும், குளறுவதுமாகவே இருக்கிருன்.]

கரு: எஜமான்! நான்......நான் கருப்பனுங்க......

[கருப்பனுக்குத் திகைப்பு மேலிட்டு நாவுலர்ந்து விடுகிறது. மேஜை மீதிருந்த கூஜாவிலிருந்து டம்ளரில் தண்ணீர் ஊற்றிக் குடிக்க முயற்சிக்கிருன். கண்ணாயிரம் அதைத் தடுத்துவிட்டு, குழைவாக.]

க: என்ன பிரதர்! நம்மை இப்படியா அவமானப் படுத்துவது, இரு, பிரதர்! என்று கூறி, அலமாரியைத் திறந்து ஒரு பாட்டிலை எடுத்துத் திறந்து டம்ளரில் ஊற்றி கருப்பனிடம் கொடுத்து.

சாப்பிடுங்க பிரதர்! ஏ. ஒன்! சாப்பிடுங்க......

[கருப்பன் தயக்கமடையக் கண்டு.]

இதிலே என்ன பிரதர் கூச்சம்! சும்மா சாப்பிடுங்க... ..

[பாட்டிலில் இருப்பதைக் குடித்துக்கொண்டே.]

நானும் இப்படித்தான் கூச்சப்பட்டேன், முதல் நாள். என்ன செய்தா தெரியுமா, மைலேடி......மைலேடி தெரியுமேல்லோ பிரதர் நாடியா! நாடியா! ஓடியா! ஓடியா! நாடியா!...... (பாடுகிறான்.)

[கருப்பன், பின்புறம் திரும்பியபடி குடிக்கிறான். அவனை இழுத்துத் தன் பக்கம் திருப்பி மேலும் தருகிறான், போதை ஏற ஏற கருப்பனுக்கும் கூச்சம் போய்விடுகிறது. தாராளமாகக் குடிக்கிறான். குடிவெறியில், கண்ணாயிரம், அலங்காரப் பையைக் கருப்பன் கையில் மாட்டிவிட்டு நாடியா போல நடக்கச் செய்கிறான். தங்கச் செயின் போட்ட கைகடிகாரத்தை எடுத்து, கருப்பன் கையில் கட்டிவிடுகிறான். மேலும் குடிக்கிறான். மயங்கிப் படுக்கையில் விழுகிறான், மயக்கம் மேலிட்டு. கருப்பன், சிறிது சிறிதாக நிதானமடைகிறான். மெள்ளத் தள்ளாடியபடி வீடு நோக்கிச் செல்கிறான்.]

## காட்சி 3

இடம்: கண்ணாயிரத்தின் அறை.

நிலைமை: சூரிய வெளிச்சம் அடிக்க ஆரம்பிக்கிறது.

[கதவு திறந்தே கிடக்கிறது. கண்ணாயிரம் அலங்கோலமாகப் படுத்து உறங்கிக் கொண்டிருக்கிறான். பாட்டில் கீழே உருண்டு கிடக்கிறது. வீடு கூட்டும் வீராயி வருகிறாள். விளக்கை அணைத்துவிட்டு, உருண்டுகிடந்த பாட்டிலைக் கட்டிலுக்கு அடியில் வைத்துவிட்டு, கதவை மூடிவிட்டுச் செல்கிறாள், வேறு வேலைகளைக் கவனிக்க.]

## காட்சி 4

**இடம் :** மாளிகை மாடிக் கூடம்.

**இருப்போர் :** சிங்காரவேலர், கணக்கெழுதுவோர்.

**நிலைமை :** சிங்காரவேலர், காலைக் கடனை முடித்துவிட்டு, பேப்பர் படித்துக்கொண்டிருக்கிறார். வேலையாள், தயங்கித் தயங்கிவந்து நிற்கிறான். என்னடா என்று கேட்பதுபோல அவனைப் பார்க்கிறார்.

வேலையாள் : ஐயாவைப் பார்க்க வேணும்னு ஒரு பொண்ணு......

சிங்காரவேலர் : (வியப்படைந்து) என்னைப் பார்க்கவா...... பொண்ணு......யார்டா அது.

[கீழே இறங்கிப் போகிறார்.]

கூடத்தில் இருபத்தைந்து வயதுள்ள பெண், நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருக்கிறாள்.

முகத்தில் பவுடரும், உதட்டில் சாயமும், காலில் பூட்சும் இருக்கிறது.

சிங்காரவேலரைப் பார்த்ததும், பயந்து எழுந்து நின்று கும்பிடுகிறாள்.

[சோபாவில் உட்காருகிறார்.]

சி : யார் நீ? யாரைப் பார்க்கணும்......

பெண் : இந்த வீட்டுக்கார ஐயாவைத்தான்......

சி : அது நான்தான்......என்ன விஷயமா......என்னைப் பார்க்க......

பெ : உங்களைப் பார்க்க இல்லிங்க. இந்த வீட்டுக்கார ஐயா......வேறே ஒருவர் வாலிபமா......

சி : (புன்சிரிப்புடன்) நம்ம மகன்தான்......கண்ணாயிரம்......

பெ : அவரைத்தானுங்க......அவசரமாப் பார்க்கணும்......

சி : நீ யாரு? அவனை எப்படித் தெரியும்? அவனிடம் என்ன பேச்சு?

பெ : (வெட்கத்துடன்) அவரோட அப்பான்னு சொல்லி விட்டிங்க......நான் எப்படிங்க விவரமெல்லாம் சொல்றது...... நான் அவரிடமே பேசிக்கொள்றேன்......

சி: (கண்டிப்புடன்) இப்படிப்பட்ட சினேகமெல்லாம் அவனுக்கு இருக்காதே......இருக்கக்கூடாதே......

பெ: (தலை குனிந்தபடி) இரண்டு மூன்று வருஷமாகவே தெரியும்ங்க, பழக்கம் உண்டுங்க......

சி: நீ, நாட்டியமாடுவயா......

பெ: (சிறிது குதூகலத்துடன்) ஆமாங்க! பார்த்திருக்கிறிங்களா......

சி: (குத்தலாக) இல்லே இல்லே! இப்பப் பார்த்துத்தான் தெரிஞ்சிக்கிட்டேன். சரி, அவன் உன்னைப் பார்க்கமாட்டான்... விஷயம் என்னுன்னு என்னிடம் சொல்லு.

பெ: (பதைப்புடன்) பார்த்தாகணும்ங்க. நேற்று இராத்திரி அவரு என் பையை எடுத்துகிட்டு வந்துவிட்டாரு. பணம் இருக்குது பையிலே, ஐம்பது ரூபா.

சி: (கோபமாக) ஏய்! என்ன கதை அளக்கறே. உன்னிடமிருந்து ஐம்பது ரூபாயும் பையும் எடுத்துக்கொண்டானு......நீ எந்தக் காவாலிப் பயலிடமோ பணத்தைப் பறிகொடுத்துவிட்டு, பழியைக் கண்ணயிரத்தின் பேர்லே போட்றே......

பெ: (படபடத்து) உங்களுக்கு ஒரு விவரமும் தெரியாதுங்க. நீங்க ஒரு நிமிஷம் அவரை இங்கே வரச் சொல்லுங்களேன்......நான் பேசிக் கொள்கிறேன். பணம் இப்ப அவசரமா வேணும்......

சி: (ஆத்திரத்துடன்) தா! செச்சே! போ, வெளியே. பழி போட்டுப் பணம் பறிக்கிறவளா நீ. போ வெளியே.

பெ: (கோபம் பொங்கும் நிலையில்) பெரிய மனிதராச் சேன்னு மட்டுமரியாதையோடப் பேசறேன், ஒரே அடியா விரட்டறியே என்னய்யா! குடிவெறி ராத்திரி உன் மகனுக்கு. பணப் பையைத் தூக்கிக்கிட்டு வந்துவிட்டான். அதைத் திருப்பி வாங்காம இந்த இடத்தைவிட்டு ஒரு அடிகூட நகரமாட்டேன். தெரியுதா......

[நாற்காலியில் உட்கார்ந்து கொள்கிருள்.]

என்னமோ வீட்டுக்குள்ளே வந்துட்டாளே என்ன வேணுமானு செய்யலாம்னு விரட்டறியா......இப்பக் கூச்சல் போட்டுக் கும்பலைச் சேர்த்து .....பார். உன்னே......

சி: (சிறிது பயந்து) தா! சும்மா இரு. ஆர்ப்பாட்டத்தைக் குறைச்சிக்க......அவனையே கூப்பிட்டுக் கேட்கறேன்...... கண்ணாயிரம்! கண்ணாயிரம்......

[கண்ணாயிரம் மாடிப்படியில் இறங்கி வருகிறான். கீழே பெண் இருக்கக்கண்டு பயந்து போ! போ! என்று அவளுக்கு ஜாடை காட்டுகிறான். சிங்காரவேலர் திரும்பிப் பார்த்து விடுகிறார். வேறு வழியின்றிக் கீழே வருகிறான்.]

சி: (கோபமாக) என்னடா இது? இந்தப் பெண்ணு என்னென்னமோ சொல்லுதே......

க: (தடுமாற்றத்துடன்) என்ன......என்ன... ..இங்கே ஏன் வந்தே......

பெ: (கோபம் குறையாத நிலையில்) நீ செய்துவிட்டு வந்த காரியத்துக்கு நான் வேறே எங்கே போவேன்......

சி: பணப் பையை எடுத்துகிட்டு வந்தயாமே......

க: (திணறியபடி) நானா! பணப்பையா... ..இந்தப் பெண்ணே எனக்குத் தெரியாதே......

பெ: (பதறி) இவர் மகன்தானே, நீ. நீ வேறே எப்படி இருப்பே? என்னைத் தெரியாதா உனக்கு?

சி: அவன்தான் சொல்றானே உன்னைத் தெரியாதுன்னு......

பெ: இவரோட அப்பன்தானே நீ. நீ வேறே எப்படிப் பேசுவே. மரியாதையா பணத்தைக் கொடுத்து அனுப்பிவையுங்க. உங்களோட உருட்டல் மிரட்டல்களுக்கெல்லாம் நான் பயந்து போயிடுவேன்னு மட்டும் எண்ணிக்கொள்ளாதிங்க. ஊர் சிரிப்பா சிரிக்கும், அவமானத்தைத் தாங்க மாட்டிங்க......பெரிய இடம்... பெரிய இடம்......தெரியுதே இலட்சணம்......என்னை வம்புக்கு இழுத்து வீணா அவமானப்படாதிங்க.

[கண்ணாயிரம் தலை கவிழ்ந்து கொண்டு நிற்கிறான். சிங்காரவேலர் பொறி பறக்கும் கண்களுடன் அவனைப் பார்க்கிறார்.]

சி: கண்டபடி சுத்துவதாலே வருகிற வினைடா இது வினை...

[கண்ணாயிரம் மாடிக்குச் செல்ல முனைகிறான். பெண் அவனைத் தடுத்தி நிறுத்தி.]

பெ: உன் யோக்யதை தெரியுது இப்ப. அப்ப கொஞ்சினே, கெஞ்சினே, கூத்தாடினே......பாட்டு வேறே (கேலிக் குரலில்)

நாடியா! ஓடியா! ஓடியா! நாடியா! பாட்டு அப்ப! இப்ப நான் அவளைப் பார்த்ததே கிடையாதே......

சி: (கோபத்துடன்) போதும் உன் பேச்சை நிறுத்திக் கொள்ளு. ஐம்பது ரூபாயா வேணும்......

பெ: தரனுமல்ல, இனுமல்ல......என் பையிலே இருந்த பணம்......

. சி: (சலிப்புடன்) போடா, போய் ஐம்பது கொண்டா, அலமாரியிலே இருக்குது.

பெ: (கண்டிப்புடன்) மேலே ஒரு அஞ்சு கொண்டுவாங்க சார்! பை வாங்க......பெரிய மனிதர்களாம், பெரிய மனிதர்கள்! எதிலேன்னுதான் தெரியல்லே. நாங்க வயத்துச் சோத்துக்கு வேறே வழி இல்லாததாலே கெட்டு அலையறோம். கொட்டிக் கிடக்குதே பணம், குணம் பாரு எப்படி இருக்குதுன்னு......

சி: வாயை மூடிக்கிட்டுக் கிட......

பெ: (குத்தலாக) கொஞ்சம் பேசேன், கொஞ்சம் பேசேன்னு கூத்தாடினுன் உன் மகன் ராத்திரி......

[கண்ணுயிரம் பணம் கொண்டு வந்து தருகிறுன். கண் கலக்கத்துடன், வந்தவள் அவனை ஏறெடுத்துக் கூடப் பார்க்காமல் போகிருள், சிங்காரவேலர் சோகமாக நாற்காலியில் அமருகிருர். சில விநாடிகள் இருவரும் மௌன மாக இருக்கிருர்கள். பிறகு பெருமூச்செறிந்தபடி,]

சி; கண்ணுயிரம்! நல்லா இருக்குதா நீ செய்த காரியம். ஊர் மெச்ச வாழற குடும்பம்டா இது......நம்மைப் பார்த்து மற்ற வங்க, நீதி, நியாயம், அன்பு பண்பு இதையெல்லாம் தெரிந்து கொள்ளணும். அந்த அர்த்தத்திலேதான் நம்ம இடத்தைப் பெரிய இடம்னு ஊரார் சொல்ருங்க. நீ செய்த இந்தக் காரியம், நினைத்தாலே நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகலாம்......அப்படி பட்ட காரியம். யாரு செய்கிற காரியம் இதெல்லாம். வக்கு வழியத்ததுக கண்டபடி திரியும், கண்டவளோடு சேர்ந்து கூத்தாடும். அதுகளுக்கு நல்லது கெட்டது தெரியாது. மான அவமானத்தைப்பத்தின அக்கறை இருக்காது. எப்படி நடந் தாலும் யாரும் எதுவும் கேட்கமாட்டாங்க. நாம அப்படியா? நமக்கு அடுக்குமடா கண்ணுயிரம், இப்படிப்பட்ட காரியம்......

[கண்ணுயிரத்தின் மனம் நெகிழுகிறது. மறுகணம் கல்லாக்கிக் கொள்கிருன்.]

க: நான்தான் சொல்றனே எனக்கு அந்தப் பெண்ணையே தெரியாதுன்னு......

சி: (ஆத்திரத்துடன்) என்னிடமே சொல்றயா அந்த அண்டப் புளுகை. ஏண்டா! என்னை என்ன ஏமாளின்னே தீர்மானித்து விட்டாயா......

க: அண்டப்புளுகு. ஆகாசப் புளுகுன்னு என்ன வேணு மானாலும் சொல்லிக் கொள்ளுங்க. எனக்குத் தெரியாதுன்னு சொன்ன, மூச்சுவிடாமே பேசிக்கொண்டே இருக்கறிங்களே.. ...

சி: (உருக்கமாக) ஏண்டா உனக்கு இப்படிப் புத்திக் கெட்டுப் போச்சு? சிங்காரவேலன்ன, நாலு பேருக்கு உபகாரி, நம்பினவர்களைக் கெடுக்காதவன், உண்மைக்குப் பாடுபடு கிறவன் என்கிற நல்ல பேர் இருக்குதடா! ஊரார் மெச்ச வாழ்க்கை நடத்திக்கொண்டு இருக்கறேன்......நீ பொறந்தே, அதைக் கொடுக்க......கூசாமே பயப்படாமே பொய் பேசறே என்னிடமே.

[கண்ணயிரம் சோகமாக மாடி செல்கிருன். சிங்காரவேலரும் செல்கிருர். கண்ணயிரம் அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொள்கிருன். கவலையுடன் சிங்காரவேலர், அங்குள்ள சோபாவில் உட்காருகிருர். அன்னபூரணி வருகிருர்கள்.]

அ: யார் வந்திருந்தது கீழே......

சி: யாரோ பள்ளிக்கூடத்து வாத்தியாரம்மா......தர்மம் கேட்க......

[அறைக்குள்ளே இருந்து கண்ணயிரம் வெளியே வந்து...]

க: என் ரிஸ்ட்வாட்சை யார் எடுத்தது?

சி: ரிஸ்ட்வாட்ச் காணேமா......

அ: தங்கச் செயினச்சே எங்கே தொலேத்துவிட்டே......

க: (சலிப்புடன்) உம்! நான் அஞ்சு வயசு அறியாப் பாலகன், தொலேத்துவிட, உள்ளே மேஜையின் பேரிலேதான் வைத்திருந்தேன்......

அ: மேஜையின் பேர்லே வைத்தா எங்கே போயிருக்கும்...

[உள்ளே செல்கிருர்கள்.]

அ: அறை முழுவதும் தேடிப் பார்த்தாச்சு......

சி: என்னடா இது நிஜமாத்தான் சொல்றயா...

அ: கொழந்தை எதுக்காகப் பொய் சொல்லப் போகுது... நல்லா கவனமிருக்குதேல்லோ......

சி: அறைக்குள்ளே யாரார் போனது......காலையிலே......

அ: யாரும் இல்லையே......வீராயி போயிருந்தா......கூட்ட

சி: வீராயி போனுளா......

அ: (பதறி) அவரொம்ப நல்லவடா தம்பி! திருட்டு புரட்டு கிடையாது.

சி: அட சும்மா இரு. அவன்தான் சொல்றுனே மேஜை மேலே வைத்ததா. இறக்க முளைச்சிப் பறந்தா போயிடும், கைகடியாரம். வீராயிதான் செய்திருக்கணும் அந்த வேலையை...எங்கே அந்தக் கழுதே......

க: வீட்டுக்குப் போயிருப்பா......

சி: (பதறி) அய்யய்யோ! ஊரை விட்டே ஓடிடப்போகுது வீராயி புருஷன் வேலை வெட்டி இல்லாம கிடக்கிறுன். என்ன செய்வா, குடும்பச் செலவுக்கு......திருட்டுக் கை வந்துவிட்டது...

அ: (சாந்தமாக) இருக்காதுடா தம்பி! ஏழையா இருந்தாலும், அவ, சத்தியத்துக்கு கட்டுப்பட்டு நடக்கறவ .....

சி: (தீர்மானமாக) ஏழையாக இருந்தாலே கெட்ட புத்தி, கேடு கெட்ட நினைப்பு தன்னுலே வந்துவிடும். தரித்திரம் அதுகளைப் பிடுங்கித் திங்கறது எதனுலே ...இந்தக் கேடுகெட்ட புத்தி இருக்கிறதாலேதான்......அய்யோவ் கணக்கப்பிள்ளே......

[கணக்கப்பிள்ளை வருகிறுன்.]

போயி, இன்ஸ்பெக்டரைப் பார்த்து, வீராயி வீட்டிலே போய் சோதனைப் போடச் சொல்லு உடனே......

[கணக்கப்பிள்ளை விரைந்து செல்கிறுன்.]

அ: தம்பி! தம்பி! நாமே கூப்பிட்டுக் கேட்கலாம்டா...... போலீசிலே பாவம், அடி அடிச்சுடப் போருங்க .....நம்ம வீட்லே மாடா உழைக்கறவ வீராயி......

[கண்ணுயிரம் கலங்குகிறுன். அறைக்குள் சென்று விடுகிறுன். மனதிலே ஏதோ ஒரு குமுறல், போராட்டம் இருப்பது தெரிகிறது. கண்ணுயிரம் உள்ளே செல்வது கண்டு.]

சி: துளியாவது கவலே இருக்குதா பாரேன் இவனுக்கு..... நானூறு ரூபா இருக்கும்......காணுமப் போயிட்டுது......கவலே யத்து இருக்கிருன்.

## காட்சி 5

இடம்: வீராயி வீடு.

இருப்போர்: வீராயி, கருப்பன்.

நிலேமை: கருப்பன் அயர்ந்து தூங்கிக் கொண்டிருக் கிருன். அவனேத் தட்டி எழுப்புகிருள் வீராயி.

வீராயி: துளியாவது கவலே இருந்தா இப்படியா தூக்கம் வரும். காலங்காத்தாலே எழுந்து போயி நாலு இடம் சுத்தி பிழைப்புக்கு வழி தேடுவோம் என்கிற எண்ணம் இருக்குதா. நாய் படாத பாடுபடறேன், ஈவு இரக்கம் இருக்குதா துளியாவது.

[தட்டி எழுப்பியபடி.]

எழுந்திரு, எழுந்திரு; விடிஞ்சி வேணநேரமாகுது.

[கருப்பன் புரண்டு புரண்டு படுக்கிருன். மீண்டும் வீராயி தட்டி எழுப்புகிருள். கோபத்துடன் எழுந்து படுக் கையில் உட்கார்ந்துகொண்டு.]

கரு: வீடா இது? அடா, அடா! அடா! ஏண்டி இப்படி உயிரை வாங்கறே......இப்ப எந்த ரயிலுக்கு நேரமாகுதுன்னு எழுப்பித் தொலேக்கறே. என்னமோ கடியாரத்தைப் பார்த்து வேலேக்குப் போயி காலண்டரைப் பார்த்துச் சம்பளம் வாங்கற உத்யோகம் கெட்டுவிடப் போகுதா......

வீராயி: (ஆத்திரமும் கேலியும் கலந்த குரலில்) உங்களுக்கு ஏங்க வேலே வெட்டி......நான் இல்லே உழைக்க! நீங்க படுத்துத் தூங்குங்க......வித்துவிசாரம் துளியாவது இருந்தா இப்படியா இருப்பிங்க......ராத்திரிக்கெல்லாம் சுத்தறது, பகலெல்லாம் படுத்துத் தூங்கறது. குடும்பம் உருப்பட்டு விடுமேல்லோ......

கரு: ஏண்டி இப்படிச் சபிச்சிக் கொட்டறே...உன் இழவுக் காகத்தான் ஆலாப்பறந்து பார்க்கறேன்......வேலே கிடைச்சாத் தானே...போயி எங்காவது திருடவா சொல்லு...அதையாவது.

வீ: (அழுகுரலில்) என் மனசை வேகவைக்காதே .....

[தலையணை அடியில் இருந்த அலங்காரப் பையைப் பார்த்து விட்டு.]

இது என்னது?

[கருப்பன் பையைப் பிரித்துப் பார்க்கிறான். பணம் இருக்கக் கண்டு மகிழ்ச்சி அடைகிறான். அந்த நேரத்தில் கருப்பன் குடி இருக்கும் வீட்டுச் சொந்தக்காரன் வந்து சேருகிறான்.]

வீட்டுக்காரன்: வீராயி! எப்பவந்து கேட்டாலும் அவரு வரட்டும்னு சொல்லி நாளை ஓட்டினயே......இப்ப அவனும் இருக்கிறான்.. ...எடு வாடகைப் பணத்தை. நானும் பொறுத்துப் பார்த்தாச்சி......இனி பணம் வாங்காமெ இந்த இடத்தைவிட்டு நகர மாட்டேன். ஆமாம்.

கரு: (அலட்சியமாக) எவ்வளவய்யா வாடகை பாக்கி?

வீட்: பதினெட்டு ரூபா......

[கருப்பன் அலங்காரப் பையை ஒருபுறம் வைத்துவிட்டு, எழுந்திருக்கிறான்; மடியிலிருந்து கடிகாரம் கீழே விழுகிறது. வீராயி ஆச்சரியமடைகிறாள். மறுகணம் திகிலடைகிறாள்.]

வீ: (திகிலுடன்) அடப்பாவி மனுஷா...இந்த வேலையும் ஆரம்பித்துவிட்டயா......கடியாரம் சின்ன எஜமானருடைய தாச்சே......

[வாயைப் பொத்திக் கொள்கிறாள், பயத்தால். அவள் பேசி வாய்மூடு முன்பு போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் உள்ளே நுழைகிறார். கருப்பனிடமிருந்த கைகடியாரத்தை பறித்து கொள்கிறார். உடன் வந்திருந்த 'கான்ஸ்டபிளிடம்'.]

சப்: 'கரெக்டா' சொன்னார் வீராயிதான் திருடி இருப்பான்னு. சரியான சமயத்திலேதான் வந்தோம்.

வீ: (கலக்கத்துடன்) ஐயய்யோ! சாமி! நான் திருடலிங்க ....சத்யமாச் சொல்றேன்......

[வீட்டுக்காரர் மெள்ள நழுவி விடுகிறார்.]

சப்: (மிரட்டும் குரலில்) கையும் மெய்யுமாகப் பிடிபட்ட பிறகுமா பொய் பேசறே......நட ஸ்டேஷனுக்கு......

[வீராயி பதறுகிறாள். கருப்பன் கலங்குகிறான்.]

க: சாமி! அவ அப்படிப்பட்ட நடத்தைக்காரி இல்லிங்க... எத்தனையோ வருஷமா வேலே பார்க்கரு .....தப்பு தண்டா கிடையாதுங்க .....நடந்ததே வேறேங்க......

சப்: ஏண்டா முழுப் பூசணிக்காயை சோத்திலே மறைக்கப் பார்க்கறே... ..கண்ணுயிரம் ரூமிலே காலையிலே கூட்டப்போனவ வீராயிதானே......

கரு: (கண் கலக்கத்துடன்) அவ ஒரு பாவமும் அறியாதவ. இது, கடியாரம், நேத்து நடுராத்திரிலே இருந்து என்னிடம் இருக்குதுங்க......

[பையை எடுத்துக்காட்டி.]

இதையும் கைக்கடியாரத்தையும் கண்ணுயிரத்தய்யாவே தானுங்க எனக்குக் கொடுத்தாரு......

[சப்-இன்ஸ்பெக்டர் கருப்பன் கழுத்தில் ஒரு அடி கொடுத்து.]

சப்: சன்மானம் கொடுத்தாரா உனக்கு...ராஸ்கல்! தங்கச் செயின் போட்ட கடியாரத்தை...நீ பெரிய சீமான்...உனக்கு அவர் பரிசா கொடுத்தாரா......

[கான்ஸ்டபிளைப் பார்த்து.]

இழுத்துக்கொண்டு போ, வீராயியை......

கரு: தொடாதே! தொடாதே! கையை ஒடித்துவிடுவேன்... அவ உத்தமி. படாத பாடுபட்டு குடும்பத்தை நடத்திச் செல்கிற குணவதி. தான் பட்டினி கிடந்தாவது இந்தப் பாவியை காப்பாத்திய புண்யவதி. பிறர் சொத்துக்கு ஒருநாளும் அவ ஆசைப்படமாட்டா உழைப்பு, உழைப்பு, உழைப்பு......என்னைக் கணவனுகக் கட்டிக்கொண்ட நாளா ஓயாத உழைப்புதான். ஒரு சுகமும் கண்டதில்லே! ஐயா! என்பேச்சிலே உங்களுக்கு நம்பிக்கையில்லே......சரிய்யா......நம்பவேண்டாம்.......சொத்துக் கிடைச்சுப்போச்சி திருட்டுப் பட்டத்தை ஏத்துக்கொள்ளவும் ஒரு ஆள்தானே தேவை. நான் இருக்கறேன், எடுத்துக்கிட்டுப் போயி, அடியுங்க உதையுங்க ஆறுமாசம் ஜெயிலிலே தள்ளுங்க ஆனு அந்த உத்தமியை மட்டும் ஒண்ணும் செய்யாதிங்கய்யா... என்னுலே அவ பட்ட கஷ்டம் போதும்யா...இந்த அவமானம் வேண்டாம்... ..அவளுக்கு வேண்டாமய்யா, அவளுக்கு வேண்டாம்......

[வீராயி கசிந்துருகி கணவன் காலேத் தொட்டுக் கும்பிடு கிருள். தன்னை உத்தமி என்றும் புண்யவதி என்றும் கொண்டாடும் அளவு தன்னிடம் பாசம் கொண்டவராக

இருப்பது அவளுக்கு ஒரு பெருமிதம் தருகிறது. ஒரு அதிகாரி எதிரில், எத்தனை உருக்கத்துடன் தன்னைப் பற்றித் தன் கணவர் பேசினார் என்பதை எண்ணி எண்ணி வீராயி பெருமிதம் கொண்டாள். சொத்து தேடிக் கொடுக்கவேண்டாம், சுகவாழ்வு அமைத்துத் தரவேண்டாம், இதயத்தில் ஏற்றமான ஒரு இடம் கொடுத்திருக்கிறாரே அதுபோதும்; ஒரு மாதுக்கு இதை விட மதிப்பும் மகிழ்ச்சியும் தரத்தக்கது வேறு என்ன இருக்கமுடியும் என்று எண்ணினாள். கேட்டீர்களா! கேட்டீர்களா! என் புருஷன் என்னைப்பற்றி என்னென்ன புகழ்ந்து பேசுகிறார் என்று கேட்டீர்களா. என்னை உத்தமி என்றார்! குணவதி என்றார்! புண்யவதி என்றார். என்னைத் தொடுபவன் கையை ஒடித்து விடுவேன் என்றார். என்னிடம் அவருக்கு அவ்வளவு அன்பு, பாசம்...நான் பாக்யசாலி! என்று ஊராரை அழைத்துக் கூறிடலாம் போல தோன்றிற்று. ஒருகணம், போலீஸ் வந்திருக்கிறதே, ஆபத்து தந்திருக்கிறதே என்பதைக்கூட மறந்து விட்டாள்...

வீ: போதுமுங்க...உங்களோட மனசு தெரிஞ்சி எம் மனம் பூரிச்சுப்போச்சிங்க...

[இன்ஸ்பெக்டரிடம்.]

ஐயா! அவர் என்பேரிலே இருக்கற அன்பினாலே அப்படிப் பேசினார்...நான்தான்யா திருடினேன்.

கரு: (பதறி) வீராயி! வீராயி! வேண்டாம்! எனக்காக நீ செய்ததெல்லாம் போதும்...இது வேண்டாம்...

வீ: நீங்க சும்மா இருங்க......நான்தான் திருடினேன்...... நான்தான்...

[கருப்பன் தலையில் அடித்துக்கொள்கிறான். ஐயோ! ஐயோ! வீராயி! என்று கதறுகிறான், போலீஸ்காரர் வீராயியை நட! நட! என்று விரட்டக், கண்டு கருப்பன் ஆத்திரமடைந்து அவன்மீது பாய்ந்து.]

கரு: உயிரின் பேரிலே ஆசை இல்லேன்னாவா, கிட்டே... என் உயிர் போனாலும் சரி...இவளை நீங்க இழுத்துக்கொண்டு போக விடமாட்டேன்.

[வீராயி, கருப்பன் இருவரையும் போலீஸ் அழைத்துச் செல்கிறது. சிறு கும்பல் கூடுகிறது. சிலர் பின்தொடரு கிறார்கள். இருக்கும்! இருக்கும்! உண்ட வீட்டுக்கு

இரண்டகமா! இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்பது போல இருந்தாளே! எந்தப் புத்திலே எந்தப் பாம்போ யார் கண்டது? இல்லாமெ பொறக்காது அள்ளாம குறையாது. போருத வேளே! பொல்லாத புத்திக் கொடுத்தது. என்னென்ன இனி அம்பலமாகப் போகுதோ. பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவான் என்கிற பழமொழி பொய்யா...தடிக்கழுதே, உழைச்சிப் பிழைக்கறதை விட்டுவிட்டு திருட்டுத் தொழிலேயா நடத்தத் துணிஞ்சா...தீட்டிடுவாங்க பாரு, நாலு, அஞ்சு வருஷம்...ஆமாமாம், இந்த மாதிரி ஆசாமிகளுக்கு ஈவு இரக்கம் காட்டவே கூடாது......ஆயிரத்துக்குக் குறை யாதாம்; கடியாரத்தோட விலே......]

இவ்விதம் ஆளுக்கொருவிதமாகப் பேசிக்கொள்கின்றனர்; கருப்பன், வீராயி நிலேயிலே உள்ள எளியோர்சள்! கருப்பன் மீதோ வீராயிமீதோ குற்றம் இருக்காது என்று கூறத் துணிவும் வரவில்லே, மனமும் எழவில்லே. இல்லாதவன், அகப்பட்டதை எடுத்துக்கொள்வான்! ஏழை திருடுவான்!!—இது ஒப்புக் கொள்ளப்பட்டுவிட்ட உண்மை என்று ஏழையர் உலகினரே நம்பிக்கிடந்திடுவது கொடுமையினும் கொடுமை. அவர்களே அவ்விதம் நம்பும்படிச் செய்வதிலே செல்வர் உலகு வெற்றி பெற்றுவிட்டது.

இப்படித்தான் செகப்பன் கால்காப்பைத் திருடிவிட்டான்; போடு போடுன்னு போட்டபிறகுதான் உண்மையை ஒப்புக்கொண்டான். காதோட சேத்துப் பறித்துக் கொண்டானே கம்மலே, காத்தான், போன வருஷம்... கண்டுபிடிக்க வெகு நாளேச்சே...பாவம் கொழந்தை, அதன் கழுத்திலே இருந்த செயினே அறுத்துகிட்டா னேல்லோ......

இப்படிப் பல 'கதை'களேப் பேசிப் பேசி, ஆதாரம் தேடிக் கொண்டனர். கருப்பனும் வீராயியும் ஒரு சூழ்நிலே காரணமாக இந்தக் கதிக்கு ஆளாகிவிட்டனர் என்று எண்ணக்கூடப் பலருக்கு முடியவில்லே. கருப்பன் பதறுவதையும் வீராயி கதறுவதையும் பாசாங்கு, பசப்பு, நடிப்பு, வேஷம் என்று இப்படித்தான் கருதிக் கொண்டனர். சிலர், போலீஸ் இன்ஸ்பெக்டருடைய தைரியம் சுறுசுறுப்பு, கண்டிப்பு ஆகியவற்றைப் பற்றியும் பாராட்டினர்.

[நெருப்பு என்ருன் ஒருவன். நியாயவான் என்ருன் இன்னெருவன். மேல் உத்தியோகம் நிச்சயம் என்ருன் மற்ருெருவன்.]

## காட்சி 6

இடம் : சிங்காரவேலர் மாளிகை—கூடம்.

இருப்போர் : சிங்காரவேலர் கணக்காளர்.

நிலைமை : சப்-இன்ஸ்பெக்டர் வெற்றி புன்னகையுடன் வருகிறார். சிங்காரவேலர், சோபாவிலிருந்து எழுந்திருக்காமலேயே, வாங்க! என்று மரியாதையாக அழைக்கிறார். சிங்காரவேலரிடம் கடியாரத்தைக் காட்டி, இதுதானே? என்று கேட்கிறார். மகிழ்ச்சியுடன் அதைக் கையிலே வாங்கிப் பார்த்தபடி, கண்ணாயிரத்தைக் கூப்பிடுகிறார். கண்ணாயிரம் அங்கு வருகிறான் ; கடியாரத்தைத் தருகிறார்கள்.

க : என்னுடையது தான்......எங்கிருந்தது... ?

சப் : ஐயா சொன்னபடிதான்...வீராயி விட்டிலேதான்...

சி : அவதான் திருடி இருக்கணும்னு எனக்குத் தெரியுமே .. வேறே எப்படிப் போய்விடும்...

சப் : ஒரே அடியா, நான் திருடலேன்னு சொன்னா. சத்தியம் கூடச் செய்தா...

சி : (அலட்சியமாக) இந்த மாதிரிச் சத்தியமெல்லாம் அதுகளுக்குச் சக்கரைப் பொங்கலாச்சே...செம்மையாக கொடுத்தாலொழிய அதுகள் நிஜம் பேசாதே...

சப் : கருப்பன், கடியாரத்தை கண்ணாயிரமே தனக்குக் கொடுத்ததாகச் சொன்னான்...

[கண்ணாயிரம் திடுக்கிடுகிறான். நடைபெற்ற சம்பவம் நினைவிற்கு வருகிறது. உண்மையைக் கூறினாலொழிய கருப்பனுக்கும் வீராயிக்கும் கடுமையான தண்டனை கிடைக்குமே என்ற எண்ணம் தோன்றுகிறது. பாவம் நம்மாலே அவர்கள் இம்சைப் படுவதா! நியாயமா! என்று ஒரு கணம் எண்ணுகிறான்.]

சி : (ஒரு சிரிப்புச் சிரித்தபடி) பாருங்களேன் அண்டப் புளுகை.

சப் : (அலங்காரப் பையைக் காட்டி) இந்தப் பையைக்கூட கண்ணாயிரம் கொடுத்தாராம்...

[கண்ணுயிரம் மேலும் திடுக்கிடுகிருன். உண்மையைக் கூறிஞல், நாடியாவுக்கும் தனக்கும் உள்ள தொடர்புகூட அம்பலமாகிவிடும். கேவலம் என்ற எண்ணம் தோன்று கிறது. இரக்க உணர்ச்சியையும் நேர்மையையும் துரத்தி அடிக்கிறது.]

சப்: இது ஒரு நாட்டியக்காரியுடையது.

சி: (வக்கீல் போல விளக்கமாக) நாட்டியக்காரியுடைய பைக்கும் என் மகனுக்கும் என்ன சம்பந்தம்! வரவர, நானும் பார்க்கறேனுங்க, வயத்துச் சோத்துக்கு வழியத்ததுகளெல்லாம் பழி பாவத்துக்கு அஞ்சாமத்தான் பொய் பேசுதுங்க...

சப்: கருப்பன் கோர்ட்டிலேயே சொல்லப் போகிறேன் இந்தப் பை விஷயம் என்று மிரட்டுகிருன்......எதை வேணு மாஞலும் சொல்லு...காணுமல் போன பொருள் உன் வீட்டிலே இருந்தது......உன் மனேவி அந்த வீட்டிலே வேலே செய்கிற...... இந்த இரண்டும் போதும் எங்களுக்கு என்று சொன்னேன்...

சி: பய பெட்டிப் பாம்பாகி விட்டிருப்பான் ..

சப்: இல்லிங்க, நான் பை விஷயமாச் சொல்லத்தான் போகிறேன் என்கிருன்.

சி: (ஏதும் அறியாதவர் போல) நம்ம வீட்டு கடியாரம் களவு போனதற்கும் இந்தப் பைக்கும் என்ன சம்பந்தம். நீங்க இதை ஒரு அயிட்டமாகவே சேர்த்துக் கொள்ளத் தேவையில்லேயே...

சப்: இதுவும் கருப்பன் வீட்டிலேதானே கிடைச்சது. அதனுலே, இதைப்பத்தின பேச்சும் வரத்தானே செய்யும்...

சி: (கவலேயை மறைத்தபடி) வராமலிருந்தா நல்லதுன்னு பார்க்கறேன்...

சப்: கோர்ட்டோட விருப்பம் அதெல்லாம்...

சி: (சிறிது குழைவாக) நீங்க நிஜனச்சா இது விஷயமா கோர்ட்டிலே எந்தப் பேச்சும் கிளம்பாதபடி செய்ய முடியாதா என்ன! அது கிடக்கட்டங்க......நீங்க பசுமாடு வேணும்னு கேட்டிங்களாமே...

சப்: ஒரு நூறு நூற்றைம்பது ரூபா விலேயிலே வேணும்...

சி: நான் நாளேக்கு அனுப்பி வைக்கறேன்.

சப்: (குத்தலாக) புரியதுங்க......அதுக்கு வேறே ஆளேப் பாருங்க, நானும் வேறே பசு பார்த்துக் கொள்றேன்...

[கண்ணுயிரம் சிங்காரவேலரைக் குறும்புத் தனமாகப் பார்த்துச் சிறிக்கிருன். சப்-இன்ஸ்பெக்டர் வணக்கம் கூறிவிட்டுச் செல்கிருர். கண்ணுயிரம் மாடிக்குச் செல் கிருன். கவலேயும் கோபமும் மாறி மாறி வருகிறது சிங்காரவேலருக்கு. கணக்கப்பிள்ளேயை அருகே அழைத்து எதையோ இரகசியமாகக் கூறி அனுப்பு கிருர். அன்னபூரணி அம்மாள் வருகிருர்கள்.]

அ: என்னடா தம்பி! கிடைச்சுவிட்டதாமே...

சி: கிடைக்காமெ...

அ: போகட்டும்......நமக்குப் பொருள் கிடைச்சுட்டுது...... போலீசுக்குச் சொல்லி வீராயியை விட்டுவிடச் சொல்லு..... ஏழை......பாவம்...அவ உழைச்சித்தான் குடும்பம் நடக்கணும்...

சி: (கண்டிப்பான குரலில்) உனக்கு ஒண்ணும் தெரியா துக்கா! சும்மா இரு, ஏழையாச்சே, பாவமாச்சேன்னு பார்த்தா திருட்டும் புரட்டும், கொள்ளேயும் கொலேயுந்தான் வளரும்...... அடக்கி வைக்காவிட்டா அதோகதியா போகும். நம்ம சொத்து போகுது, வருது. அதுக்காகக்கூட இல்லக்கா! ஊரிலே அக்ரமும் அநியாயமும் நடக்கவிடலாமா...தர்மம் நிலேக்குமா...ஆட்டுக்கும் அளவறிந்துதான் வால் வைத்திருக்காரு ஆண்டவன்...ஆனுலும், அடே அப்பா! இந்த மாதிரி ஆசாமிகளுக்கு வரவர எவ்வளவு வாய்த்துடுக்கு, நெஞ்சழுத்தம், எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசுகிற முரட்டுத்தனம் வளர்ந்திருக்குது தெரியுமோ, போருன் பார்டா பொதிமாடு மாதிரின்று நம்மைப்போல ஆளுகளேக்கண்டா பேசருனுங்க...ஊரை அடிச்சு உலேயிலே போட்டுத்தாண்டா சீமான் ஆனுன் என்று நம்ம காதிலே விழறமாதிரியாவே பேசு துங்க...திருட்டுப் பயல்களே விட்டு வைக்கலாமா...

அ: ஐயோபாவம்னு இருக்குது தம்பி!

சி: நீதி நியாயம் இதெல்லாம் நிலேக்கணும்னு சில வேளே யிலே மனசைக் கல்லாக்கிக்க வேணும். உனக்குத் தெரியாது உலகம் போற போக்கு...

[அன்னபூரணி அம்மாள் சோகமாக சென்று விடுகிருர்கள். கோட்டும் தலேப்பாகையும் அணிந்த ஒருவர் வருகிருர். சிங்காரவேலர் சிரித்த முகத்துடன் வரவேற்கிருர். இரு வரும் ஒரு அறைக்குள் சென்று பேசிக்கொண்டிருந்து விட்டு வெளியே வருகின்றனர்.]

வந்தவர்: கோர்ட்டிலே நான் பார்த்துக்கொள்கிறேன், அந்த நாட்டியக்காரி விஷயம்...?

சி: நான் பார்த்துக் கொள்கிறேன்.

வ: தம்பியைக் கூப்பிடுங்க......சில 'பாயிண்ட்' சொல்லி விட்டுப் போகிறேன்.

[சிங்காரவேலர் ஜாடைகாட்ட பணியாள் ஓடிச்சென்று கண்ணுயிரத்தை அழைத்து வருகிருன்.]

வ: உட்கார் தம்பி...

[கண்ணுயிரம் நின்றுகொண்டிருக்கக் கண்டு.]

சி: சரி......சரி......உட்கார்......

[கண்ணுயிரம் உட்காருகிருன்.]

வ: தம்பி! அந்தப் பை விஷயம் இருக்கிறதே அதை அந்தப் பயல் பெரிசு படுத்தப் பார்க்கிருன். நாமும் கொஞ்சம் முன்ஜாக்ரதையாக இருக்கவேண்டும்.

வ: இந்தப் பை யாருடையது?

க: எனக்குத் தெரியாது.

வ: இதை இதற்குமுன் எப்போதாவது பார்த்ததுண்டா?

க: இல்லை.

வ: நாட்டியக்காரி நாடியாவை உனக்குத் தெரியுமா?

க: தெரியாது.

வ: பார்த்ததுண்டா?

க: இல்லை!

வ: இதை நாட்டியக்காரி நாடியாவிடமிருந்து நீ பறித்துக் கொண்டதாகக் கருப்பன் கூறுகிருனே அதற்கு என்ன சொல்லுகிருய்?

க: பச்சைப் புளுகு!

வ: இந்தப் பையையும் கடியாரத்தையும் நீயே கொடுத்த தாகக் கருப்பன் கூறுகிருனே அதற்கு என்ன சொல்லுகிருய்?

க: அண்டப் புளுகு!

வ: இவ்வளவுதான்! அழுத்தந்திருத்தமாக, தயங்காமல், இப்படி கேள்விகளுக்குப் பதில் சொல்லவேண்டும். பயம் துளியும் வேண்டாம். நான் அங்குதானே இருப்பேன், என்ன?

[கண்ணாயிரம் வெறுப்புடன் கூடிய புன்சிரிப்புடன்.]

க: கருப்பன் கூறும் உண்மை அவ்வளவும் அண்டப் புளுகு என்று நான் சொல்லவேண்டும்......

வ: (சிரித்தபடி) தம்பி வேடிக்கையாகப் பேசுதே......

சி: டேய்......வேடிக்கை இருக்கட்டும். அங்கே போயும் ஏதாவது குளறித் தொலைத்துவிடாதே......தெளிவாக......

க: அழுத்தந்திருத்தமாகச் சொல்லவேண்டும்......

சி: ஆமாம்......ஆமாம்......

க: அண்டப் புளுகுகளை...அப்பா! நாமெல்லாமா அண்டப் புளுகு பேசுவது......வயிற்றுச் சோற்றுக்கு வகையற்றவர்கள் செயல் அல்லவா அது. நீங்கள்தானே சொன்னீர்கள். (குத்தலாக) நான் பயந்தேபோனேன். நமது அப்பா இவ்வளவு அருமையாக உபதேசம் செய்கிறாரே பொய் பேசுவது தகாது என்று கூறுகிறாரே, இனி அவர் வியாபாரம் என்ன ஆகும் என்று பயந்து போனேன். இப்போது அந்தப் பயம் போய்விட்டது...

சி: போதும், போதும் உன் குறும்புத்தனம்.

க: பொய் பேசச் சொல்லி நீங்களே பள்ளிக்கூடம் நடத்துகிறீர்கள்; அழுத்தந்திருத்தமாகப் பொய் பேசுவது எப்படி என்று இவர் கற்றுக்கொடுக்கிறார். நல்ல உலகமப்பா இது......நல்ல உலகம்......

[வந்தவர் அசடு வழியும் முகத்துடன் விடைபெற்றுச் செல்கிறார். கண்ணாயிரமும் மாடி செல்கிறான். சிங்காரவேலர் ஏதோ எண்ணிக்கொண்டு உலவுகிறார். சில்க் சட்டையும் 'கர்ல்' கிராப்பும் உள்ள தோற்றமுள்ள ஒருவன் வருகிறான். அவனை அழைத்துக்கொண்டு தனி அறை சென்று பேசுகிறார்.]

சி: நாட்டியமாடும் நாடியா பழக்கந்தானே...?

அவன்: அது ஏனுங்க. வேறே புதுமுகம்? சிட்டுப்போல பலது இருக்கு...

சி: இதோ பாரய்யா, நான் என்ன கேட்கறேன், எதுக்கு என்பதைத் தெரிந்துக் கொள்ளாமே...

அ: நல்லா தெரியுதுங்க, நாடியா கொஞ்சம் படபடன்னு பேசும்...

சி: கொஞ்சமென்ன! நல்லாவே (குத்தலாக) பேசுறு...

அ: அது சிலருக்குப் பிடிக்கும்...பேச்சு...ஆனு நாட்டியமும் தெரியாது, நல்ல சுபாவமும் கிடையாது...நான் சொன்னேன் பாருங்க, சிட்டு அது இந்த மாதிரி இடத்துக்குப் பொருத்தம். பார்த்தா நீங்களே 'சபாஷ்' போடுவிங்க...

சி: கர்மம்! கர்மம்! நாட்டியத்துக்கு அல்ல அய்யா. இது ஒரு கோர்ட் விவகாரம். அந்தப் பொண்ணு இருக்காளே நாடியா, அவ சாட்சி சொல்லணும் நம்ம பக்கம்...முடியுமா உன்னுலே, சரிப்படுத்த.

அ: (யோசித்தபடி) கொஞ்சம் கஷ்டம்தானுங்க, பிடிவாதக் காரி.

சி: செலவு பற்றிய கவலே வேண்டாம்...

அவ: பார்ப்போம்ங்க.........இங்கே அழைத்துக்கொண்டு வரட்டுமா...அல்லது நீங்களே அங்கே வாரிங்களா?

சி: இரண்டும் வேண்டாம். நீயே பேசி, அதாவது நீயே அவளுக்கு புத்தி சொல்வது போலப் பேசி, நம்ம பக்கம் சாட்சி சொல்ல சம்மதிக்கவைக்கணும். அதெல்லாம் பெரிய இடம். அந்த இடத்துப் பகையெல்லாம் கூடாது, பல மாதிரி தொல்லே யெல்லாம் வரும்...அதனுலே அவர்களுக்கு விரோதமாக சாட்சி சொல்லி ஆபத்திலே மாட்டிக்கொள்ளாதே...அவர்கள் பக்கம் சாட்சி சொன்னு பணமும் கிடைக்கும், ஆதரவும் தருவாங்க, அப்படி இப்படின்னு சொல்லணும். ஏன்யா, இதையெல்லாமா விளக்கவேணும். நீ என்ன அனுபவமில்லாத ஆளா...

அவ: கோர்ட் விவகாரமான அனுபவம் ஏதுங்க, பார்க்கிறே னுங்க. என்னுலே முடிந்ததை...

[சிங்காரவேலர் பணம் தருகிறுர். பெற்றுக் கொண்டு போகிறுன்.]

## காட்சி 7

இடம்: நாடியா வீடு.

இருப்போர்: நாடியா, மூதாட்டி.

நிலைமை: மூதாட்டி இழுத்துப் போர்த்துக்கொண்டு படுத்துக்கொண்டிருக்கிறுள். நாடியா, ஒரு பழய ஆர்மோனியத்தை வாசித்துக் கொண்டிருக்கிறுள்.

'மேக்கப்' அதிகம் இல்லாததால் முகத்திலே சோர்வு படந்திருப்பது நன்ருகத் தெரிகிறது. பளபளப்பு போய்விட்ட புடவை. கலைந்து போயுள்ள தலை சிறிது கிழிந்து கிடக்கும் விரிப்பின்மீது உட்கார்ந்து கொண்டிருக்கிருள். சுவற்றிலே, சினிமா நட்சத்திரங்களின் படங்கள் ஒட்டப்பட்டுள்ளன. நாடியாவின் நடனக்கோலத்தைக் காட்டும் படம் மாட்டப்பட்டிருக்கிறது. சிங்காரவேலரால் அனுப்பப்பட்ட ஆசாமி உள்ளே நுழையக் கண்டு ஆர்மோனியம் வாசிப்பதை நிறுத்தி விட்டு, எழுந்திருக்காமலே...?

நாடியா : வாங்கண்ணேன் ! ஏது அத்தி பூத்தது போல......

அவ : வரணும் வரணும்னு. ஆனு வெறுங்கையோட வரப்படாது பாரு, அதனுலே வரவில்லே.........

நாடி : அப்படின்னு இப்ப ஏதோ கச்சேரி கிராக்கியோட வந்திருக்கிறீங்கன்னு அர்த்தம் ; இல்லையா ?......

அவ : ஒரு வேலையாத்தான் வந்திருக்கறேன்.........அதை முடித்துக் கொடுத்தயானு, ஒரு கச்சேரி என்ன, பல கச்சேரிகளை ஏற்பாடு செய்ய முடியும்.........

நாடி : என்னண்ணேன், பீடிகை பலமாப் போடறிங்க...... என்ன வேலை அது......

அவ : ஒரு ஐந்து நிமிஷ வேலை...........கோர்ட்டிலே சாட்சி சொல்லனும்.........

நாடி : எந்த டிராமா 'காண்ராக்ட்'டரோடே தகருறு......

அவ : அடடே ! இது அந்தவிதமான விஷயமல்ல......... பெரிய இடத்து விவகாரம்...சிங்காரவேலர்னு ஒரு சீமான்...

நாடி : ஆமாம், தெரியும் அந்த ஆசாமி, சீமான்தான். ஆனு பெரிய மனுஷன்னு சொல்லாதே.........நான் ஒத்துக்கொள்ள மாட்டேன் எனக்குத் தெரியும்.

அவ : உனக்குத் தெரியுமா......எப்படி......

நாடி : அது பெரிய கதை அண்ணேன். இப்ப அவரு சொல்லித்தான் வந்திருக்கறியா......

அவ : நீயாகப் போகிற மாதிரி போய்வான்னு சொல்லி என்னை அனுப்பினரு......நாடியா ! காப்பி பலகாரம் வாங்கிவரச் சொல்லேன்.........

[பணத்தை எடுக்கிருன்]

நாடி: வேண்டாமண்ணேன்! காபி வேலையெல்லாம் முடிந்தது. வந்த விவரம் சொல்லு......

அவ: விவரம் என்னிடம் சொல்லவில்லை. எதோ கோர்ட்டிலே கேசாம்......நீ அவருக்காக சாட்சி சொல்ல வேணுமாம்......

நாடி: என்ன கேசுன்னு உனக்குத் தெரியாது அண்ணேன். தெரிந்திருந்தா வந்திருக்க மாட்டே. நம்மைப் போல ஒரு ஏழையைக் கெடுக்கறதுக்கு என்னை உடந்தையாக இருக்கச் சொல்ருரு. காலையிலே பூக்கடைக்காரர் விவரம் சொன்னரு அண்ணேன்! நான் கோர்ட்டுக்குப் போகத்தான் போறேன், சாட்சி சொல்லத்தான் போறேன், ஆனு உண்மையைச் சொல்லப் போறேன்......இந்த ஆள் விழுங்கிப் பக்கம் பேசமாட்டேன்......

அவ: நாடியா! அப்படிப்பட்டவர்களை விரோதிச்சிக்கக் கூடாதம்மா......நான் சொல்லறதைக் கேளு......

நாடி: வேறே வேலையைப் பாரு வகையா வந்து மாட்டிக் கொண்டாங்க. பெரிய மனுஷனுங்க. சாயம் வெளுக்க வேணு மேல்லோ......விடுவனு!

அவ: எல்லா நம்ம சாயமுந்தான் வெளுத்துப் போகும்......

நா: விட்டுத்தள்ளு அண்ணேன்! நம்ம சாயம் இனிமேலா வெளுக்கப் போவுது......

அவ: என்ன வேண்டுமானுலும் தருவாரு......

நா: ஏன் தரமாட்டாரு எங்க மாமனுரு......

அவ: என்னது; என்னது......

நா: அப்படித்தான் கோர்ட் பதறப் போகுது...கொல்லுன்னு சிரிக்கப் போகுது...அப்பொ அந்தப் பெரிய மனுஷன் தலையைத் தொங்கப் போட்டுக்கொள்றதைப் பார்க்கணும்......

அவ: பெரிய கதையே நடந்திருக்குதுபோல இருக்குதே......

நா: ஆமா......கோர்ட்டிலேதான் சம்பூர்ண பட்டாபிஷேகம் .....(சிரிக்கிருள்)

[ஆர்மோனியத்தை வாசித்தபடி பாடுகிருள். அவன் காரியம் நடக்காது என்பதைத் தெரிந்துகொண்டு வெளியே செல்கிருன்.]

## காட்சி 8

இடம் : மாளிகைக் கூடம்.

இருப்போர் : சிங்காரவேலர்.

நிலைமை : சிங்காரவேலர் கணக்குப் புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருக்கிறார். அவர் அனுப்பிவைத்த ஆசாமி வருகிறான். தலையைச் சொரிந்தபடி நிற்கிறான். அவனைக் கண்டதும் போன காரியம் முடியவில்லை என்பதைப் புரிந்துகொள்கிறார். வெறுப்பும் அலட்சியமும் கலந்த குரலில்]

சி : சரி......சரி......போ! போ! கையாலாகாதவன்......

[வேலையாளைப் பார்த்து]

காரை எடுக்கச் சொல்லு—பழசு—போர்டு......

[ஆசாமியைப் போகச் சொல்லி கையை அசைக்கிறார். அவன் கவலையுடன் செல்லுகிறான்.]

## காட்சி 9

இடம் : நாடியா வீடு.

இருப்போர் : நாடியா, சிங்காரவேலர்.

நிலைமை : சிங்காரவேலர், ஒரு பழய நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். எதிர்புறம் நின்று கொண்டிருக்கிறாள் நாடியா. அவள் பார்வையில் வெறுப்பும் அலட்சியமும் கலந்திருக்கிறது. நாடியா நின்றுகொண்டிருக்கும் போக்கு, சிங்காரவேலரை எழுந்து போகலாம் என்று எடுத்துக் கூறுவதுபோலிருக்கிறது. அவள் போக்கைக் கண்டு சிங்காரவேலர் கோபமோ வெறுப்போ கொண்டதாகக் காட்டிக்கொள்ளவில்லை. அங்கு தெரிந்த ஏழ்மைக் கோலத்தைக் கண்டு பரிதாப உணர்ச்சிக் கொண்டவர் போலாகிறார். நின்றுகொண்டிருக்கும் நாடியாவைப் பரிவுடன் பார்த்தபடி......

சிங்: உட்கார்.......

[நாடியா வெறுப்புடன் கீழே உட்காருகிருள், சிங்கார வேலரை ஏறெடுத்தும் பார்க்காமல்]

நா: பெரிய மனிதர்கள் இப்படிப்பட்ட இடமெல்லாம் வரக் கூடாதே......

சி: (துளியும் பதருமல்) அப்படி ஒரு சட்டமா என்ன ?

நா: (சலிப்புடன்) சரி—சரி......என்ன பேசவேண்டுமோ அதைப் பேசிவிட்டுப் போங்கள்......

சி: நாடியா! உனக்கு அன்று மூண்ட கோபம் இன்னும் தணியவில்லை......

நா: இன்றும் உம்முடைய ஆள் வந்து நெருப்பைக் கிளறி விட்டுத்தான் போனுன்.

சி: (பொய்க் கோபம் காட்டி) முட்டாள் நாடியா அவன். என்ன சொன்ஞன் உன்னிடம்.

நா: உங்கள் குடும்ப கௌரவத்தைக் காப்பாற்றச் சொன் ஞன்......பொய்ச் சாட்சி சொல்லி......

சி: நினைத்தேன்......அப்படித்தான் வகையில்லாமல் பேசி யிருப்பான் என்று......

நா: (ஆத்திரத்துடன்) பொய்சாட்சி சொல்லச் சொல்ல வில்லையா......

சி: (அமைதியாக) சொன்னேன் நாடியா...சொன்னேன்... நானே அதைச் சொல்லத்தான் நேரில் வந்திருக்கிறேன்.

நா: (மேலும் ஆத்திரம் கொண்டு) முடியாது! முடியவே முடியாது! பொய்ச் சாட்சி சொல்லி ஒரு ஏழைக் குடும்பத்துக்குக் கேடு செய்யமாட்டேன்... ......நான் இழிவான நிலையில்தான் இருக்கிறேன்.........

சி: (உருக்கம் காட்டி) இழிவான நிலையில் நீ இருப்பதற்கு, உன் குற்றமல்ல, சமூகம் செய்யும் குற்றம்தான் காரணம். உன்னைக் காப்பாற்றி நல்வழிப்படுத்த என்னைப்போல ஒருவன் இருந்தால் நீ ஏன் பாவம் இந்தக் கதிக்கு ஆளாகப்போகிருய்......

நா: (கேலிக் குரலில்) உருக்கமாகக் கூடப் பேசத் தெரி கிறதே......அன்று உருட்டல் மிரட்டல் அபாரமாக இருந்தது......

சி: அப்போதும் குடும்பக் கௌரவத்தைக் காப்பாற்றத் தான்......

நா : (வெறுப்படைந்து) குடும்ப கௌரவம்! நாசமாகட்டுமே எனக்கென்ன.........

சி : உனக்கு ஒன்றும் இல்லை......எனக்குக்கூட அதனாலே கஷ்டமோ நஷ்டமோ இல்லை......கருப்பன் குடும்பம் கெடக் கூடாது என்று நினைக்கிறாயே, அது சிலாக்கியமான குணம். பலருக்கு இருப்பதில்லை அந்த இளகிய மனம் உனக்கு இருக் கிறது. ஆனால் நாடியா! கோர்ட்டிலே உன் சாட்சியத்தால் எங்கள் குடும்ப கௌரவம் பாழானால்......ஆயிரக்கணக்கான ஏழைகளின் குடும்பம் நாசமாகிவிடும்......

நா : என்னய்யா, மிரட்டிப் பார்க்கிறீர்?......

சி : குடும்ப கௌரவம் கெட்டால் தொழில் கெடும், தொழில் கெட்டால் அதை நம்பிப் பிழைக்கும் ஆயிரம் குடும்பம் வேலை யின்றி அலையும், அழியும்......வா, என்னோடு...... நேரிலேயே பார்க்கலாம்......பயப்படாமல்வா..... என் மகள் போல......நீ......

[நாடியா அவருடைய பேச்சு வெறும் நடிப்பு என்பதை எப்படி உணரமுடியும்; அவ்வளவு இயற்கையான உயர் தரமான நடிப்பை அவள் கண்டதே இல்லை. நாடியா படபடப்பாகப் பேசுவாள். அதிலே சுவையிருப்பதாகப் பலர் கூறியதால் அவ்விதமான பேச்சினைப் பழகிக் கொண்டாள். பிறகு அது பாதிச் சுபாவமாகிவிட்டது. ஆத்திரம் பீறிட்டுக்கொண்டு வரும், உள்ளத்தில் எழுவதை அடக்கிக்கொள்ளத் தெரியாததால், அந்த ஆத்திரம் பொறி பறக்கும் சொற்களாகவோ, பொல பொலவென உதிரும் கண்ணீராகவோ மாறும். சிரிப்பாள் கலகலப்பாக; மிகச் சாதாரண வெற்றியிலேகூட மிகப் பெரிய சுவை காண்பாள். இவ்வளவுதான் அவளுக்குத் தெரியும். சிங்காரவேலர் போன்ற 'பிறவி நடிகர்களை' அவள் எங்கே கண்டிருக்கிறாள். அந்த நடிப்பு அவள் மனதைத் தொட்டுவிட்டது. அதிலும் அவர், தன்னைப் பார்த்து, 'நீ என் மகள் போல!' என்று சொன்னது நடியாவைத் திக்குமுக்காடச் செய்துவிட்டது. தழதழத்த குரலில்......]

நா : ஆ! என்ன...என்ன...மகள்போல...மகள்போல...

சி : ஓஹோ! மருமகள் என்று சொல்லியிருக்க வேண்டுமா... குடும்ப கௌரவத்துக்காகத்தான் உன்னை மருமகளாக்கிக் கொள்ள முடியவில்லை......வா, நாடியா.

[சிங்காரவேலர் நாடியாவைத் தன் மோட்டாரிலேயே அழைத்துக்கொண்டு செல்கிறார்; ஊருக்கு ஒதுக்குப் புறமான இடத்தைக் கடக்கிறார்கள். அங்கு 'சிங்காரபுரி' என்ற பெயர்ப் பலகை அமைந்த நுழைவு வாயில் தெரிகிறது. உட்பக்கத்தில் சில நூற்றுக் கணக்கான குடிசைகள் உள்ளன. எங்கும் குப்பையும் கூளமும் நிரம்பி இருக்கிறது. நாய்களும் பன்றிகளும் தாராளமாக நடமாடுகின்றன. சிறுவர்கள் அலங்கோலமான நிலையில் இருக்கிறார்கள். பல இடங்களில் சேறு நிரம்பிய பள்ளங்கள். வண்டி இழுப்பவர்களும், விறகு பிளப்பவர் களுமான பாட்டாளிகள் அங்கு காணப் படுகிறார்கள். குடிசைகளுக்கு வெளியே வயோதிகர்கள் சிலர் இருமிக் கொண்டும் சிலர் முடக்கிப் படுத்துக்கொண்டும் இருக் கின்றனர். வாலிபர்கள் சிலர் காட்டுக் கூச்சல் போடுவதும் கலகச் சண்டையிடுவதுமாக உள்ளனர். ஒரு புறத்தில் நாலைந்து பெரிய கற்கள் நடப்பட்டு வீபூதி குங்குமம் பூசப்பட்டு வேல் கம்புகள் செருகி வைக்கப்பட்டுள்ளன. பலர் பலவிதமான பேச்சுக்களை ஒரே சமயத்தில் கிளப்பு வதால், விளக்கமற்ற ஒரு பேரொலி பரவி நிற்கிறது. ஒருபுறம் பலகாரக் கடை இருக்கிறது. அதற்குப் பக்கத் திலேயே சாணி பிசைந்து வரட்டி தட்டிக்கொண் டிருக்கிறார்கள். ஈ மொய்த்துக் கிடக்கும் 'மிட்டாய்' விற்கிறான் ஒருவன். சிலர் காலி ரிக்ஷாவை இழுத்துக் கொண்டு இருக்கிறார்கள். இந்தக் காட்சியைக் கண்டதால் நாடியாவுக்கு மன வேதனைதான் அதிகமாகிறது. இது போன்ற ஒரு குப்பத்திலேதான் அவள் பிறந்தது; வளர்ந்தது. குட்டி தளுக்குக்காரி! நடையே நாட்டிய மாக இருக்கு, பாரு ஆளை மயக்கிச் சுருட்டி விரலிலே போட்டுக் கொள்வா மோதிரமாக! என்று பலர் பல விதமான பரிகாசப் பேச்சு பேசுவார்கள், சிறுமியாக இருந்தபோது. அங்கிருந்து, எங்கெங்கோ சென்று, கடைசியில் நாடியா ஆகி இருக்கிறாள். வாழ்க்கையின் பல நிகழ்ச்சிகள் அவள் மனத்திரையிலே வேகமாக, மாறி மாறி ஓடிக்கொண்டிருந்தன. ஒரு பெரிய வியப்பு நாடியாவுக்கு! உலகம் எவ்வளவோ மாறிவிட்டிருக் கிறது. ஆனால் இந்த 'குப்பங்கள்' மட்டும், அன்று இருந்தது போலவேதான் இன்றும் இருந்து வருகின்றன. ஆட்கள் மாறுகிறார்கள், ஆனால் 'குப்பம்' என்ற அமைப்பு—அமைப்பா அது? அலங்கோலம் அப்படியே இருந்து வருகிறது. இங்கிருந்து எத்தனை நாடியாக்கள்

கிளம்புகிறார்களோ—யார் கண்டார்கள். செ! கிளம்பும் போது என்னென்ன இன்பக் கனவுகள்! பாதையிலே செல்லச் செல்ல என்னென்ன இடர்கள், இழிவுகள்! நாடியா, ஏதும் பேசவில்லையே தவிர அவள் மனதிலே ஓராயிரம் எண்ணங்கள் குமுறியபடி இருந்தன. சிங்கார வேலர், அவளைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார்: கணக்குப் போட்டுக் கொண்டிருந்தார். வறுமைப் பிணியிலே சிக்கித் தவிப்பவர்கக் கண்டால் அவளுக்குக் கண்ணீர் தளும்புகிறது. மனம் அப்படி!!—இது புரிந்தது அவளுக்கு. குப்பம்! அதைக் காண மோடார் சவாரி!—விசித்திரம் என்று எண்ணினாள் நாடியா. அவளையும் அறியாமல் சிரிப்பு பொங்கிக்கொண்டு வந்தது.]

நாலைந்து கல் தொலைவில், சிறு காடடர்ந்த இடத்தை நோக்கி மோடார் செல்கிறது. 'நாடியா'வுக்கு இலேசாகத் திகில் பிறக்கிறது. காட்டிலே அடித்துப் போட்டுவிட்டு விடுவார்களோ என்ற பயம்.

தொலைவிலிருந்து ஓசை கேட்கிறது; கல்லைப் பிளப்பது போன்ற ஓசை.

சிறிது நேரத்தில், மோடார் ஒரு வெளியில் சென்று நிற்கிறது கீழே இறங்குகிறார்கள் இருவரும். ஒரு புதிய கோயில் எழும்பிக் கொண்டிருக்கிறது. சிங்காரவேலர் உருக்கமாகப் பேசுகிறார்; "இந்தத் திருப்பணியிலேதானம்மா நான் ஈடுபட்டிருக்கிறேன். நெடுங்காலத்துக்கு முன்பு இது ஒரு கீர்த்திமிக்க ஸ்தலம். காலக் கொடுமையால், இடிபாடாகி விட்டது இந்த ஆலயம். இதனைப் புதுப்பித்துக் கட்டி முடிக்க வேண்டும். ஆண்டவன் கருணையும் தயவும் இருந்தால்தான் முடியும். நாடியா! இங்குள்ள மூர்த்தியின் பெயர் அனாதரட்சகர் என்பது. பகவான் எடுத்த அவதாரங்கள் பத்து அல்லவா? அந்த பத்து அவதாரங்களிலும் செய்து முடிக்காத காரியம், ஏழைகள் படும் துயரைப் போக்காமலிருந்து விட்டது.

அதற்காகவே பகவான் இங்கு அனாதரட்சகர் என்ற திருநாமத்துடன் அவதரித்தார் என்பது ஐதீகம். பழய செப்பேடு, ஓலைச் சுவடி மூலம் இது தெரிகிறது. ஒரு புலவர்குழு தலபுராணம் தயாரித்துக் கொண்டிருக்கிறது. வெளியீட்டு விழாவும் விமரிசையாக நடந்திடும்.

நாடியா! இந்த ஆலயம் புதுப்பிக்கப்பட்டுவிட்டால், இங்கு சாஸ்திர முறைப்பட்ட பூஜைகள் நடக்கத் தொடங்கி விட்டால், ஏழைகளுக்கு இன்பமான வாழ்வு கிடைத்திடும்.

நோய் நொடியால் அவதிப்படுபவர்கள் இந்தத் திருக்குளத்தில் ஒன்பது வேளை மூழ்கினுல் போதும்.

கண் பார்வை இழந்தவர்கள் இங்கு அழைத்து வரப்பட்டு, அதோ அந்த மரத்தடியில்—ஒரு மேடை அமைக்கப் போகிருேம்; அங்கு படுத்துக்கொள்ள வேண்டும். நடு இரவில், நாகசர்ப்பம் வரும்! கண் இருக்கும் இடத்தைத் தன் நாவால் தீண்டி விட்டுப் போகும்; காலையில் குருடன் விழி பெறுவான். இது பற்றிய கல் வெட்டே கிடைத்திருக்கிறது.

இந்த ஆலயம் சம்பந்தப்பட்ட அற்புதம் ஆயிரம் என்று சொல்லலாம்.

இந்தக் காடு ஒரு பெரிய ஜெமீன்தாருடையது. மான் வேட்டை ஆடுவதற்காக இதை வைத்துக் கொண்டிருந்தார். இரண்டு இலட்ச ரூபாய் விலைக்குக் கொடுத்திருக்கிருர்; பாதிப் பணம் தந்திருக்கிறேன். எட்டு இலட்சம் விலைக்கு மற்ருெரு ஜெமீன்தார் கேட்டார், கொடுக்கவில்லை. கோயில் திருப்பணிக்கு என்றதும், கொடுத்ததைக் கொடு என்ருர், புண்ணிய காரியம் என்பதால்.

இது வெறும் கோயில் மட்டுமல்ல, நாடியா! இது ஏழை களின் சுவர்க்கம்—இங்கு அனுதை விடுதலை பள்ளிக்கூடம், தர்ம சத்திரம், மருத்துவ மனை..........என்னன்னமோ திட்டம் என் மனதில் ஆண்டவன் அருளால் உன் உதவி கிடைத்துவிட்டால், என் எண்ணம் ஈடேறிவிடும்.

மொத்தத்தில் பத்து இலட்சம் செலவிடத் திட்டம். ஆமாம், நாடியா! அவ்வளவும் என் ஒருவனுலே ஆகுமா? அதனுல் இதற்குப் பல புண்ணியவான்களின் பணமும் தேவை: கிடைத் துக் கொண்டிருக்கிறது. அரசாங்க உதவியும் கிடைக்கிறது.

அதோ பார்! ஒரு சிற்பி, நந்தி சிலையைச் செதுக்கிக் கொண் டிருக்கிருனே, அவனுக்கு மட்டும், மாதம் முன்னூறு ரூபாய். அவனுக்குத் துணையாகப் பதினெட்டு பேர்கள்.

மொத்தத்தில் இந்தத் தர்மக் காரியத்தில், நாடியா! ஐநூறு பேர்கள் ஈடுபட்டிருக்கிருர்கள். இவ்வளவு பெருஞ் செலவும் நான் பார்த்துக்கொள்ள வேண்டியிருக்கிறது,

சர்க்கார் உதவி, செல்வவான்களின் நன்கொடை, பக்தர் களின் காணிக்கை இவ்வளவும் திரண்டு கிடைத்தால்தான் இந்தக் காரியம் நடைபெறும். என் பெயர், என் குடும்பப் பெயர் மீது ஒரு துளியும் 'மாசு' விழாதிருந்தால்தான், மதிப்பு குறையாது

இருந்தால்தான், இந்தப் புண்ய காரியம் பூர்த்தியாகும். ஒரு சிறு கறை விழுந்தாலும் போதும், சிங்காரவேலர் இப்படிப் பட்டவர்தானு, அவர் மகன் கெட்ட நடத்தைக்காரன்தானு என்ற பெயர் கிளம்பினுல் போதும், நாடியா! இவ்வளவும் பாழாகும். மனிதர்களின் காரியம் மட்டுமல்ல, மகேசன் காரியம் கூட நாச மாகிவிடும். குடும்ப கௌரவம் கெடக்கூடாது என்பதிலே எனக்கு ஏன் அவ்வளவு அக்கறை என்பது புரிகிறதா! மதிப்பு மங்காதிருக்கவேண்டும்; அந்த மதிப்பின் மீதுதான் நம்பிக்கை எழுகிறது; அந்த நம்பிக்கை நொறுங்கினுல், இந்தத் தேவாலயமே நொறுங்கிப் போகும். உன் ஒரு வார்த்தையில் இருக்கிறது இந்தப் புண்ய ஸ்தலத்தின் எதிர்காலம்.

நாடியாவின் மனம் ஓரளவு உருகிடத் தொடங்கிற்று; ஆனுல் மறுகணம் மனதைத் திடப்படுத்திக் கொண்டாள்.

ஆலயம் இங்கு! அலங்கோலம் அங்கு—வழியில் பார்த் தோமே; பெயர் என்ன, சிங்காரபுரி! அந்த மக்கள் சேற்றிலே புரளவேண்டியது; இங்கு சந்தண அபிஷேகம் நடத்த ஏற்பாடா கிறது. அதற்கு நான் 'பொய்ச் சாட்சி' சொல்லவேண்டும், நியாயம் வெகு நேர்த்தி, ஐயா! வெகுநேர்த்தி!—என்று வேதனையை அடக்கிக்கொண்டு நாடியா கூறினுள்.

சிங்காரவேலர் திடுக்கிடவில்லை.

"உண்மையான பேச்சு. நாடியா! குப்பம் அங்கே, கோலா கலம் இங்கே! இது என்ன நியாயம்? என்று கேட்கிருய், நாடியா!

நான் சொல்ல வந்ததில் ஒரு பாதி மட்டுமே சொல்லி முடித்தேன். இந்தத் தேவாலயத் திருப்பணியுடன் இணைந்தது குப்பத்தைத் திருத்தி அமைப்பதும், பார்த்திருப்பாயே, 'சிங்கார புரி' என்ற பெயர்ப் பலகையை...என் பெயரைச் சூட்டிவிட்டார் கள் ஊர்ப் பெரியவர்கள். அந்தக் குப்பத்தை உண்மையிலேயே சிங்காரபுரி ஆக்கத் திட்டமிட்டிருக்கிறேன். அந்த சிங்கார புரிக்குத்தான் இந்தக் கோயில் வருமானம் அவ்வளவும், புரிகிறதா! தேவாலயப் பணி முடிந்தால்தான், குப்பம் சீருராகும் பெயர் சிங்காரபுரி என்கிருர்கள்...ஊர்ப் பெரியவர்கள் ஒத்துக் கொண்டால் நாடியாபுரி என்றே நான் பெயரிடுவேன்—உன் கையில்தான் இருக்கிறது அதன் எதிர்காலமும். அந்தக் குப்பத் தார்தான் இந்தக் கோயிலுக்குச் சொந்தமான நிலத்தை உழப் போகிருர்கள்...கூலிக்கு அல்ல...குத்தகைக்கும் அல்ல...குடும்பம் ஒன்றுக்கு ஐந்து ஏக்கர், இந்தக் கோயில் நிலத்திலிருந்து"... என்ருர் சிங்காரவேலர்.

நாடியாவின் மனக் கண்முன், குப்பம் புது சீருராகத் தெரியலா யிற்று; குப்பை மேட்டில் புரண்டுகொண்டிருந்த சிறுவர்கள் பள்ளிகளில் படிக்கும் காட்சி தெரிந்தது. பள்ளம், சேறு, எல்லாம் மறைந்து வரிசை வரிசையாக வீடுகள், வீடுகளில் விளக்கொளி, மக்கள் முகத்தில் மகிழ்ச்சி ஒளி தென்பட்டது.

நாடியா, சில ஆண்டுகள் நாடகத்தில் இருந்தவள்; ஏழையர் வாழ்வு சீர்படவேண்டும் என்பது பற்றிய 'வசனம்' பல, பாடம் அவளுக்கு.

"உண்மையாகவா..." என்று தழதழத்த குரலில் கேட்டாள்.

சிங்காரவேலர் ஒரு வசீகரமான புன்னகையை காட்டியபடி தலை அசைத்தார்; நாடியா தலை கவிழ்ந்துக் கொண்டாள்.

"நாடியா! எனக்குத் தெரியும். நீ, படபடவென்று பேசு பவளே தவிர நல்ல மனம், இளகிய மனம் உனக்கு என்று. கருப்பனைப் பற்றிக் கவலைப்படாதே ..மேல் கோர்ட்டில் அவனுக் காக வாதாட வேறு ஏற்பாடு செய்து விடுதலை வாங்கித் தர முடியும். இப்போது என் குடும்பப் பெயர் காப்பாற்றப்பட வேண்டும்...இத்தனை ஏழைக் குடும்பங்களின் நல்வாழ்வுக்காக, என்ன சொல்கிருய்?" என்று கேட்டார். "ஆகட்டும் உங்கள் இஷ்டம்போல" என்ருள் நாடியா.

## காட்சி 10

**இடம்:** வழக்கு மன்றம்.

**இருப்போர்:** சிங்காரவேலர், கண்ணுயிரம், நாடியா, கருப்பன், வீராயி, வழக்கறிஞர்கள்.

**நிலைமை:** [கருப்பன் கூண்டில் நிறுத்தப்பட்டிருக்கிருன் சாட்சிக் கூண்டில் கண்ணுயிரம் நிற்கிருன்.]

கண்ணுயிரம் சார்பில் வந்துள்ள வழக்கறிஞர்: (நாடியாவின் அலங்காரப் பையைக் காட்டி) இது யாருடையது என்று தெரியுமா?

கண்: (சிங்காரவேலரைப் பார்த்து விட்டு) தெரியாது...

வ: இது நாடியா என்கிற நாட்டியக்காரியுடையாது. அவளிடமிருந்து இதைப் பறித்துக்கொண்டீர். கருப்பனுக்கு இதையும் கைகடியாரத்தையும் இனும் கொடுத்தீர் என்று கருப்பன் கூறுகிறான். என்ன சொல்கிறீர்?

க: (தயக்கத்துடன் சிங்காரவேலரைப் பார்க்கிறான். அவர், வாயை அசைத்துக் காட்டுகிறார். வெறுப்புடன்)

கண்: அண்டப்புளுகு.

[சிங்காரவேலர் முகம் மலருகிறது. நாடியாவைச் சாட்சிக் கூண்டில் ஏற்றுகிறார்கள்.]

வ: (பையைக் காட்டி) இது உன்னுடையதா?

நா: இல்லை.

வ: கண்ணுயிரம் என்பவரை உனக்குத் தெரியுமா?

நா: தெரியாது.

[சிங்காரவேலர் மகிழ்ச்சிப் புன்னகை கொள்கிறார்.]

வ: கண்ணுயிரத்தைப் பார்த்திருக்கிறீர்களா?

நா: ஓ!

[சிங்காரவேலர் திகைக்கிறார்.]

வ: பார்த்திருக்கிறாயா? எப்போது? எங்கே?

நா: இப்போது! இங்கே! கோர்ட்டில்.

[சிங்காரவேலர் முகம் மலருகிறது. இலேசாகக் கோர்ட்டில் சிரிப்பொலி கிளம்புகிறது. மேஜையைத்தட்டி ஒழுங்கை ஏற்படுத்திவிட்டு, வழக்கு மன்றத் தலைவர் தமது தீர்ப்பைப் படிக்கிறார்.]

வ: நேற்றும் இன்றும் நடைபெற்ற இந்த வழக்கு சம்பந்தமான சகல பிரச்சனைகளையும் சீர்தூக்கிப் பார்த்ததில், வீராயி, கருப்பன் இருவருமே குற்றவாளிகள் என்ற முடிவுக்கு வந்திருக்கிறேன். வீராயிக்கு மூன்றுமாத வெறுங் காவல் தண்டனையும், கருப்பனுக்கு ஆறுமாதக் கடுங்காவல் தண்டனையும் விதிக்கிறேன்

அண்டப் புளுகு பேசுவது, ஆளை அடிப்பது, அகப்பட்டதை திருடுவது போன்ற குற்றம் புரிவோர்கள், சமூக விரோதிகள். அவர்களால் நாட்டுக்கே ஆபத்து. ஆகவே, அப்படிப்பட்டவர்களுக்குக் கடுமையான தண்டனை தந்தால் மட்டும் போதாது. சமூகம் அப்படிப்பட்டவர்களைக் காரித்துப்ப வேண்டும்.

[கோர்ட் கலைகிறது.]

## காட்சி 11

இடம்: மாளிகைக் கூடம்.

இருப்போர்: சிங்காரவேலர், அன்னபூரணி, கண்ணுயிரம்.

நிலைமை: சிங்காரவேலரும், கண்ணுயிரமும் வந்தது கண்டு, அன்னபூரணி ஆவலாக வருகிருர்கள்.

அ: என்ன தம்பி! ஆச்சி...

சி: ஆகவேண்டியது ஆச்சி...ஆறு மாசம் அந்தப் பயலுக்கு மூன்று மாசம் அவளுக்கு...

அ: பாவம்! போருத வேளை என்ன செய்வது. அததன் விதிப்படி நடக்குது......இரு தம்பி! காப்பி கொண்டு வர்ரேன்......

[உள்ளே போகிருர்கள்]

க: (குத்தலாக) காரித்துப்ப வேண்டுமாம் அப்பா! கேட்டீர்களா தீர்ப்பை. அண்டப்புளுகு பேசுபவர்கள் சமூக விரோதிகள், நாட்டுக்கே ஆபத்து...காரித் துப்பவேண்டும் என்கிருர் நீதிபதி...

சி: (சலிப்புடன்) சரி, சரி சும்மா விடு......போய்ப்படு......

க: (பதறியபடி) கோழை! நான் ஓர் கோழை. அக்ரமத்துக்கு உடந்தையாக இருந்தேன்........சுயநலம், சுகபோகம் என்னைப் பிடித்தாட்டுகிறது......விடுபட முடியவில்லை......அந்த ஏழைக் குடும்பம் என்ஞல் அல்லவா இந்தக் கதியாயிற்று........ அந்த நாடியா! அவளுமா பச்சைப் புளுகு பேசுவது...எனக்குத் தான் கற்றுக்கொடுத்தீர்கள் வக்கீல் வைத்து......அவள்......

சி: (கேலிச் சிரிப்புடன்) அவளுக்கு நான் கற்றுக்கொடுத்தேன்......போடா மடப்பயலே! விவரம் தெரியாமல் போய் இப்படியெல்லாம் சிக்கிக்கொள்ளாதே......எத்தனை காலம் நான் இருக்கமுடியும், கல்லுப்பிள்ளையார் போல............புத்தியோடு நடந்துகொள்......உன் அந்தஸ்துக்கு ஏற்றபடியான நடவடிக்கை இருக்கவேண்டும்......

[கண்ணுயிரம் கண்களில் நீர் துளிர்த்திடும் நிலையினனுக மாடி செல்கிருன். அன்றிரவு பத்து மணிக்கு மேல் சிங்காரவேலர் ஏதோ குறிப்பு எழுதிக்கொண்டிருக்கிருர். வெளியே பெருமழை பெய்துகொண்டிருக்கிறது. பேய்க் காற்ருல் மரங்கள் சாய்கின்றன; குடிசைகள்

பிய்த்தெறியப்படுகின்றன, நடைபாதை வாசிகள் ஒண்ட இடமின்றித் திண்டாடுகிருர்கள். இடியும் மின்னலும் பயங்கரமாகிறது. ஏழை எளியவர்கள் கோணிகளைப் போர்த்துக்கொண்டு வீடு நோக்கி ஓடுகிருர்கள். ஊர்க் கோடியில் பரவலான பெரிய பள்ளத்தை நோக்கிப் பல பக்கமிருந்தும் மழைத் தண்ணீர் புரண்டோடி விழுகிறது. அந்தப் பள்ளத்துக்கு ஒருபுறம், சிங்காரபுரி; மற்ருேர் புறம் கரும்புத் தோட்டம். பள்ளம் நிரம்பி வழிய ஆரம் பிக்கிறது. தண்ணீர் கரும்புத் தோட்டத்துப் பக்கம் பாய்ந்துவிடுவது போலிருக்கிறது. மழையிலே நனைந்து கொண்டே, வெள்ளம் கரும்புத் தோட்டத்தின் பக்கம் பாயாதபடி, மண்ணுல் கரை அமைத்துப் பார்க்கிருர்கள் சிலர். கரையைக் கரைத்துக்கொண்டு செல்கிறது வெள்ளம். திகைக்கிருர்கள் என்ன நேரிடுமோ என்பதை எண்ணி. ஆடையில் தண்ணீர் சொட்டச் சொட்ட மாளிகையை நோக்கி ஓடிவருகிருன் ஒரு உழவன். அவன் கதவைத் தட்டுகிருன். வேலையாள் கதவைத் திறந்துவிடுகிருன். பதறியபடி கூடத்திற்கு வருகிருன், உழவன். கூடத்திலே விரிப்பு மீது, தண்ணீர் சொட்டச் சொட்ட நிற்கிருன். அவன் உடல் வெடவெடுக்கிறது. சிங்காரவேலரின் முகம் கடுகடுக்கிறது.]

சி: மடப்பயலே! துணியைப் பிழிந்துபோட்டுவிட்டு வரப் படாதோ......கூடத்தைச் சேருக்கிவிட்டயே! கடாமாடு! எதுக் காகத் தலைதெறிக்க ஓடிவந்தே......

உ: மழை நிற்கறதா காணேமுங்க...........ஒரே வெள்ளக் காடாயிருக்கு, ஊரு......

சி: (கேலியாக) வந்து 'குடை' பிடிக்கச் சொல்றயா, ஊராருக்கு.

உ: இல்லிங்க......நம்ம கரும்புத் தோட்டப் பக்கம் இருக்கு துங்களே பள்ளம்......காத்தான் குட்டை ரொம்பி வழியுதுங்க......

சி: கல்லை மண்ணைப் போட்டு அடைக்கறது......

உ: நிற்கலிங்க...........தண்ணி பொத்துக்கிட்டு வருதுங்க கரும்புத் தோட்டப் பக்கமா......

சி: (பதறி) கரும்புத் தோட்டப் பக்கமா?

உ: ஆமாங்க......வெள்ளக்காடு ஆயிடுங்க. கரும்புத் தோட்டம் அழிந்து விடும்ங்க...........உழைப்பு அவ்வளவும் வீணுயிடும்ங்க......

சி : இலட்ச ரூபா அல்லவா போயிடும்........கரும்பு தரமா வந்திருக்குது. ஆலைக்காரன் அட்வான்சு கூடக் கொடுத்து விட்டான்......

உ : என்ன செய்யறதுன்னு தெரியலிங்க......ஒரே திகிலா இருக்குது.....

சி : ஏலே......தண்ணியை வேறே பக்கம் திருப்பிவிட்டா என்ன......கரும்புத் தோட்டப் பக்கம் கரை போடுங்க......வேறே பக்கம் இருக்கிற கரையை வெட்டி விடுங்க......

உ : செய்யலாமுங்க......ஆனா......

சி : ஏன் அப்பவும் தண்ணி கரும்புத் தோட்டத்துப் பக்க மாகத்தான் பாயும் என்கிறயா......

உ : இல்லிங்க...... ஒரு மணி நேரத்திலே தண்ணி முச்சூடும் வேறே பக்கம் போயிடும்......ஆனா அந்தப் பக்கம்தான் 'குப்பம்' இருக்குதுங்க......நம்ம பேர்லே இருக்குதுங்களே அது......

சி : இந்தப் பக்கம் கரும்புத் தோட்டமல்ல இருக்குது...... டேய்! ஒரு பத்து ஆளைப் பிடிச்சி, கரையை வெட்டி, தண்ணியைத் திருப்பிவிடு......மளமளன்னு ஆகட்டும் வேலை......பெரிய மழை மறுபடியும் வர்ரதுக்குள்ளே...........சோம்பேறித்தனம் காட்டாதிங்க.........பயிர் அழிஞ்சுது, அவ்வளவுதான் நீங்க தொலைஞ்சிங்க கூண்டோட......தெரியுதா......ஓடு! ஓடு! கடா மாடு......குப்பத்து ஆட்களைக் கூப்பிடாதே இந்த வேலைக்கு...... தெரியுதா?

[உழவன் ஓடுகிறான்.]

காத்தான் குட்டை பக்கம் உழவன் பத்து ஆட்களுடன் சென்று, சிங்காரவேலர் சொன்னபடி செய்து விடுகிறான். சிங்காரபுரி என்ற குப்பம், வெள்ளக் காடாகி விடுகிறது. குப்பத்தில் ஒரே கூக்குரல்! குழந்தை குட்டிகளைத் தூக்கிக்கொண்டு ஓடுகிறார்கள். வெள்ளம் 'குபுகுபு' வெனப் புகுந்துவிடுகிறது; குடிசைகள் விழுகின்றன. முழங்கால் அளவு, இடுப்பளவு, கழுத்தளவு என்று வேகமாக ஏறுகிறது தண்ணீர். கால்நடைகள் தத்தளிக்கின்றன. நீந்தத் தெரிந்தவர்கள் மற்றவர்களைக் காப்பாற்ற முயற்சிக்கிறார்கள். குழந்தைகள் சில பிணமாகின்றன. கூக்குரல் அதிகமாகிறது. தொலைவிலுள்ள கரடு நோக்கி ஓடி வருகிறார்கள் குப்பத்து ஆட்கள். கரும்புத் தோட்டத்தில் வெள்ளம் இல்லை; அழிவு இல்லை. குப்பம் அழிந்துவிடுகிறது.

## காட்சி 12

**இடம் :** மாளிகைக் கூடம் (சில நாட்களுக்குப் பிறகு).

**இருப்போர் :** சிங்காரவேலர், அன்னபூரணி, கண்ணையிரம்.

**நிலைமை :** குப்பம் வெள்ளத்தால் சேதமானபோது உதவிசெய்து ஏழைகளுக்குக் கஞ்சி ஊற்றியதற்காக பெரிய அதிகாரி, நேரிலேயே வந்து சிங்காரவேலருக்கு நன்றி கூறிவிட்டுச் சென்றிருப்பதை எண்ணி எண்ணிப் பெருமிதம் கொண்ட நிலையில் இருக்கிறார் சிங்காரவேலர்.

அன் : தம்பி ! வந்து போனரே பெரிய அதிகாரி, அவரிடம் ஏன் கண்ணையிரத்தைப்பத்தி எதுவுமே சொல்லல்லே.......... உனக்குத் தெரிந்தவங்களை, கண்ணுக்குச் சிநேகிதம் செய்து வைத்தாத்தானே நல்லது......

சி : பெரிய அதிகாரியிடம் இவனைப்பத்திச் சொல்லணுமா... எதைக் குறித்துச் சொல்றேக்கா ! எதை ? (கோபமாக) வெளியே தலைகாட்ட முடியல்லே..... கண்ட பய கண்டபடி பேசுறான்...... கூடத் தகாதவனோடெல்லாம் கூடிக்கொண்டு ஆட்டம் போடறான்.........

அ : ஏண்டா தம்பி ! இல்லாதும் பொல்லாததும் சொல்றே. இப்பத்தான் கண்ணு, நாட்டியம் பாட்டுக்கச்சேரி இதுக்கெல்லாம் போறதுகூட இல்லியே......

சி : (வெறுப்புடன்) அந்த இழவுக்குப் போய்க்கொண்டிருந்தாக்கூடப் பரவாயில்லையே ........இப்ப 'ஐயா' உலகத்தைத் திருத்தக் கிளம்பிட்டாரே உனக்குத் தெரியாதா ? உழவனுக்கே நிலம்......கொடுக்கச் சொல்றாரே......இவங்க பாட்டன் சொத்து... பங்கு போட்டுக் கொடுக்கச் சொல்லி இவர் உத்திரவு போட்டு விட்டாரு .. தெரியாதா உனக்கு .....குடும்ப கௌரவமே நாசமாகுது......கேவலமாப் பேசுறானுங்க......

க : (கோபிக்காமல் மெல்லிய குரலில்) கேவலமாகப் பேசாமெ வாழ்த்துவாங்களா, நம்ம செய்யற காரியத்துக்கு......

சி : (கோபமாக) என்னடா சொல்றே.......என்ன சொல்றே ?

அ : சும்மா இருடா, தம்பி.

சி : ஏண்டா முணுமுணுக்கறே. நம்மாலேதானே குடும்ப மானமே போகுது என்கிற எண்ணம் இருந்தா இப்படியா நடந்துக்கொள்வே......

க: என்னுலே ஒண்ணும் குடும்ப மானம் போகவில்லே...... ஊரிலே கேவலமாப் பேசறவங்க.........என்னேப்பத்தி எதுவும் பேசல்லே......

சி: அப்படின்னு......

அ: (சலிப்புடன்) விட்டுத்தொலேடா தம்பி! கண்ணுயிரம், நீயும் ஏன் விதண்டாவாதம் பேசிக்கிட்டு இருக்கறே......

சி: பேசட்டும் அக்கா! பேசட்டும்னுதான் நானும் சொல்றேன்......மூடி மூடி ஏன் வைக்கவேணும்......

[வேகமாகச் சென்று கவிழ்த்துக் கொண்டிருக்கும் முகத்தைத் தூக்கி நிறுத்தியபடி.]

டேய்! என்னேப் பார்த்துப் பேசு! சொல்ல நினேக்கறதை தைரியமாச் சொல்லேண்டா...........ஊரிலே எவனுவது ஒரு வார்த்தைப் பேசியிருக்கிறு என்னேப் பத்தி, கேவலமா...... ஏண்டா! ஊமையா நிற்கறே...எந்தப் பயலாவது பேசுவானு......

க: (தன்னே விடுவித்துக்கொண்டு) எப்படிப் பேசுவான்...... பேசினு தொலேத்துவிடுவீர்களே என்ற பயம்... உடனே ஏவி விட மாட்டீர்களா அடி, உதை, குத்து, வெட்டுன்னு......... வியாபாரியா இருந்தா தீர்ந்தது, ‘திவாலா’வான்......விவசாயியா இருந்தா பயிரிலே மாடு மேயும், வைக்கப்போரிலே தீப்பிடிக்கும், களஞ்சியத்திலே கொள்ளே நடக்கும்......தெரியுமே எல்லோருக்கும்...தெரிஞ்சி எவன் உங்க எதிரிலே துணிஞ்சிப் பேசுவான்......

சி: அக்கா! கேட்டயா அவன் பேசறதை .....கேட்டயான்னேன்......ஒண்னே ஒண்ணு, கண்ணே கண்ணுன்னு சொல்றயே ...... பார்த்தயா அவன் பேசியதை. ஊரிலே ஒரு பயலும் சொல்லத் துணியாததைச் சொல்ருன். ஏண்டா! நான் காலிகளே ஏவி, கொல்லச் சொல்றேன், கொளுத்தச் சொல்றேன்....... ஏண்டா! அப்படித்தானே......

[கண்ணுயிரம் பேசாதிருக்கக் கண்டு சிங்காரவேலர் மேலும் ஆத்திரம்கொண்டு அவன் அருகே செல்கிருர். பயந்துவிட்ட அன்னபூரணி தடுத்து நிறுத்துகிருர்கள்.]

அ: எவனுவது உன்னே ஏதாவது ஏசி இருப்பான்......... காதிலே விழுந்திருக்கும், அதைச் சொல்லவேண்டிய முறை தெரியாததாலே, எப்படியோ சொல்லிவிட்டான்......

சி: ஓங்கி கன்னத்திலே அறையாமே அப்படிப்பட்ட கழுதையை, இங்கே வந்து என்னேக் கேவலமாப் பேசறதா...... ஒரே மகனல்லவா, ஒரே மகன்......உயிருக்கு உலேயா வந்திருக்கருன்... . கொஞ்சமான பணமா பாழாகுது இவனுலே......

க : அந்தப் பணம் அப்படித்தான் பாழாகும்...... –

[சிங்காரவேலர் முறைக்கிறார்.]

என்று ஊரிலே பேசுகிறார்கள். ஏழை வயிறு எறிய எறியச் சேர்த்த பணம்தானே, அது இப்படித்தான் பாழாகும் என்கிறார்கள்.. ......எனக்கே கேட்க வெட்கமாக இருக்கிறது... ... சொல்ல அதைவிட வெட்கமாக இருக்கிறது.

[ஆத்திரம் தாங்காமல், சிங்காரவேலர் கண்ணாயிரத்தின் கன்னத்தில் பளார், பளார் என்று அறைகிறார்.

சி : இருக்காதே என் எதிரில்......வெட்டிப் போட்டுவிடுவேன்......எனக்கு ஒரு மகன் பிறக்கவில்லை என்று எண்ணிக் கொள்வேன்......ஏழைக்காகப் பரிந்து பேசுகிறாயா, ஏழைக்காக! பெரிய மகான்! மடப்பயலே! என்னால் எத்தனை ஏழைக் குடும்பங்கள் பிழைக்கின்றன, தெரியுமா......எத்தனை வீடுகளில் நான் விளக்கு ஏற்றி வைத்திருக்கிறேன் தெரியுமா...உனக்கு என்னடா தெரியும்......உல்லாச உலகில் உலவிவருகிறாய், என் பணத்தைச் செலவழித்துக்கொண்டு. இதிலே உபதேசம் வேறு செய்கிறாயா உபதேசம்.........

[பாய்ந்து சென்று கண்ணாயிரத்தின் சட்டையைப் பிடித்திழுத்து அவனைக் குலுக்கியபடி. ஒரு ஏழையை வாழ வைத்ததுண்டா நீ? தொழில் கொடுத்ததுண்டா? கண்ணாயிரத்தை அலட்சியமாகத் தள்ளியபடி. அரிசி மில்லிலே நூறு பேர்...கட்டட வேலையிலே ஐநூறு பேர், கடைகளிலே இருநூறு என்னாலே பிழைக்கிறார்கள், என்னாலே! ஏழை பங்காளா! உன்னாலே அல்ல!! சொல்லேன்க்கா! உனக்குத் தெரியாதா. என்னாலே எத்தனைப் பேர் பிழைக்கிறார்கள் என்பதை விரலை மடக்கடா பார்க்கலாம், வியாக்யானம் பேசுபவனே! விரலை மடக்கு, உன்னாலே ஒரு ஆளுக்காவது வேலையோ தொழிலோ, கிடைத்ததா? உனக்கே, நான் பாடுபட்டுத் தேடிய பணத்தைப் பாழாக்குவது தவிர வேறு என்ன தெரியும்...]

அ : (செல்லமாக) அவனுக்கென்னடா தலை எழுத்து உழைக்கணும்னு.

சி : (கோபமாக) அக்கா! குறுக்கிட்டுப் பேசாதே...

க : (அமைதியாக) பேசுங்களப்பா, பேசுங்கள். இம்சைக்கு ஆளான எத்தனையோ பேர் சொல்லத் துணியாததை நான் சொல்லிவிட்டேன், கோபம் கொப்பளிக்கிறது...உங்களுக்கு... பேசுகிறீர்கள்......உங்களாலா முடியாது முடுக்காகப் பேச......

பேசுங்கள் உம்மிடம் கடன்பட்டு சொத்தை இழந்தவன் சபிக்கிருன் உம்மை...உம்மை மட்டுமல்ல...நம்மை! காதிலோ விழுகிறது. முதலிலே கடுங்கோபம்தான் பிறந்தது...எனக்கும்... உண்மை பிறகு தெரிந்தது...வெட்கமும் வேதனையும் பிய்த்துத் தின்கிறது இதயத்தை...

அ: (விளங்காமல்) கடனைத் திருப்பி வாங்குவதிலே கண்டிப்பாக இருப்பது பெரிய பாபமாடா அப்பா! அப்படியும் எத்தனையோ பேருக்கு வட்டி தள்ளிக் கொடுத்திருக்கிருனே, தம்பி.

க: உங்களுக்கென்னத் தெரியும். வெளுத்ததுப் பால் உங்களுக்கு...மற்ருெரு பயங்கர உண்மையைச் சொல்லட்டுமா... குப்பம் வெள்ளத்திலே மூழ்கி அழிந்ததே, மூன்று குழந்தைகள் பிணமாகி மிதந்தனவே, மக்கள் வீடிழந்து தவித்தார்களே, யாரால்...

அ: பைத்யக்காரப் பிள்ளையா இருக்கறியே ...அந்த மக்களுக்குக் கஞ்சி வார்க்கப் பணம் கொடுத்ததே உன் அப்பாதானே...

க: கஞ்சி வார்த்தார் கதறிய மக்களுக்கு, கதியற்ற மக்களுக்கு என் அப்பா! எப்படிப்பட்ட கருணை...கோயில் கட்டி அல்லவா கும்பிடவேண்டும்...என்னை நேருக்கு நேர் பார்த்துச் சொல்லச் சொல்லுங்கள்...குப்பம் அழிந்ததற்குக் காரணம் யார்? கொலை பாதகத்துக்குக் காரணம் யார்? அழிவுக்குக் காரணம் யார்? கஞ்சி வார்த்த கனவானைச் சொல்லச் சொல்லுங்கள் பார்ப்போம்..

[சிங்காரவேலர் திகைத்து உட்காருகிருர். அன்னபூரணி ஏதும் விளங்காத நிலையில் இருவரையும் மாறி மாறிப் பார்க்கிருர்கள், கண்களைத் துடைத்துக் கொள்கிருர்கள். கண்ணுயிரம் கோப மிகுதியால், சிங்காரவேலர் அருகே சென்று உரத்த குரலில்...]

க: என்ன பதில்? ஏன் வாயை மூடிக்கொண்டீர்...

[ஆவேசம் பிடித்தவர் போலாகி.]

சி: குப்பம் அழிந்தது யாரால் என்றுதானே கேட்கிருய்... (குரூரமான பார்வையுடன்) என்னுல்தானடா! என்னுல்தான்! கரும்புத் தோட்டம் அழியக்கூடாது என்பதற்காகத்தான் ... கரும்புத் தோட்டம் யாருக்காக? உனக்காக...நான் வேட்டையாடுகிறேன் நீ விருந்து சாப்பிடுகிருய்...நான் ஊரைக் கெடுக்கிறேன், என்கிருயே, ஆமடா! ஆம்! நான் ஊரைக் கெடுக்கிறேன், நீ உல்லாசத்தில் புரள்கிருய்...நியாயம் பேசுகிருயா, நியாயம்! எப்போது பேசுகிருய் உன் நியாயத்தை? வாழ்க்கையைப் பூந்தோட்டமாக்கிக்கொண்டு, வகை வகையான

இன்பத்தைச் சுவைத்துக்கொண்டு, சீமான் மகன் என்ற அந்தஸ்த்தில் புரண்டுகொண்டு, தெவிட்டும் அளவு இரத்தத்தைக் குடித்துவிட்டு, இப்போது எனக்கே உபதேசம் செய்கிருய்... போதனை செய்யும் துணிவு வருகிறது உனக்கு...

[மேலே பாய்ந்து தாக்குகிருர். அன்னபூரணி துடிக்கிருர்கள். அடிவாங்கிக் கொண்டு,]

க: (ஆத்திரமும் அழுகுரலும் கொண்ட நிலையில்) அப்பா!

சி: (பற்களைக் கடித்தபடி) அப்பா! ஆமடா! ஆம்! அந்த ஒரு சொல்தான் நீ எனக்குத் தந்தது...அதற்காக நான் உனக்கு இந்த மாளிகையைத் தருகிறேன், மாந்தோப்பு தருகிறேன், கடைகள், வீடுகள், நகைகள், மோட்டார்கள், என் உழைப்பு முழுவதும் தருகிறேன். சிறுவிரல் அசைத்ததில்லை நீ. பெருநிதி கிடைக்கிறது உனக்கு. சின்ன மீன்களைத் தின்றுத் தின்று பெரிய மீன் கொழுக்கிறது. அந்தப் பெரிய மீனைத் தின்பதற்கு நீ பிறந்திருக்கிருய். நியாயமா பேசுகிருய், நியாயம்—என்னிடம்—நீ—இப்போது! அப்பா! புதிய மாடல் மோட்டார் வேண்டும். இப்போது இருப்பதற்கு என்ன? அது அறுபது மைல் வேகத்துக்கு மேல் போகவில்லை அப்பா. ஆமைபோல நகருகிறது. வேறே ஸ்போர்ட்ஸ் மாடல் வேண்டும். ஆகட்டும் பார்க்கலாம். ஆர்டர் கொடுத்தாகி விட்டதப்பா! சரி, சரி......இப்படி அல்லவா உனக்கு வேண்டிய பொருளை எல்லாம் கேட்டுப் பெறுவாய். முட்டாளே! இது எப்படிக் கிடைத்தது என்று அப்போது யோசித்ததுண்டா? இவ்வளவு சுகபோகம் ஏன் என்ற எண்ணம் பிறந்ததா? இவ்வளவு நமக்குத் தருகிருரே நாம் அவருக்கு என்ன தருகிறோம் என்ற எண்ணம் பிறந்ததா? அதுதான் தருகிருயே ஒரு சொல்......அப்பா.....! அது ஒன்றுதானே நீ தருவது...... அவ்வளவுதானே உன்னுல் முடிந்தது.

[அவ்வளவுதான் அவரால் பேச முடிந்தது. மயக்கம் அவரைத் தாக்கிற்று. அன்னபூரணி அம்மாள் டாக்டர்! டாக்டர்! என்று அலறிஞர்கள். வேலையாட்கள் பதறிஞர்கள். கண்ணுயிரம் கண்களிலே நீர் கொப்பளித்துக் கொண்டு வந்தது.]

**அவ்வளவுதான் அவனுல் முடிந்தது......!**

B.S.S.